ஞானியாரவர்கள்

மெய்ஞ்ஞானத் திரட்டு

திரட்டு - 1878

T. T. K. [illegible]

R. R. No 19[illegible]

O.I.M.G.N.M.M
M98
119399

894.81108

3199/198

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - SEP 1898
MADRAS.

ஹா 'மீம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

கோட்டாறு

மெய்ஞ்ஞான சொரூபராகிய

காமில், முகம்மல், ஆஷிகு, ஆரிபுபில்லாஃ
ஷெய்குமுஹியித்தீன் மலுக்குமுதலியார்

என்னும்

ஞானியார்சாகிபொலியுல்லா

அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய
மெய்ஞ்ஞானத்

# திருப்பாடற்றிரட்டு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - SEP. 1898

இஃது

இந்நூலாசிரியரவர்கள் பரம்பரையில்வந்த
ஞானியார். செய்யிது தாஹிர் லெப்பை.

ஆலிம்சாகிபு அவர்களாலும்,

கொட்டாம்பட்டி
எம். கருப்பையாப்பாவலரவர்களாலும்

பலபிரதிருபங்களைக்கொண்டு பார்வையிட்டு

மேலைப்பாளையம்
வ. செ. ஷம்ஸுத்தாஸீன் தரகனாரவர்கள்

பொருளுதவியால்

சென்னை:
கலாரத்நாகரம் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜிரி ௧௩௧௬— முஹர்றம்மீ.

*Copy-right Registered.*

O-,1MGNA,M
M98

119891

ஹா மீம்.

பிஸ்மில்லாஹி.

# முகவுரை.

கண்ணகன்ஞாலத் தெண்ணில் பல்லுயிரும் நண்ணருமெய்ந்நெறி யுண்மையினெய்த வந்தவதரித்த செந்நெறிச்செல்வரும், திருக்கோட் டாற்றினைத் திறனுறக்காட்டித், திருக்கோட்டாற்றுறை திருவுடையாரும் ஆகிய ஞானியார்சாகிபு அவர்கள், பலருமிங்குய்யப் பரிந்தினி தளித்த இந் நூலின் அரும்பொருட் செறிவை யாராய்ந் துணரின் மறையென்றே வழுத்தற்பாலது. "நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரமென்ப" என்றா ராசிரியராதலான் அதுவே மந்திரமுமா மெனச்சொல்வதெற்றுக்கு? தானே போதரும். இன்னும் யோகஞானானு பவங்களைத் தெள்ளிதிற் புலப்படுத்தும். இத்தகையநூலை யினிது பாரா ட்டாதா ரெவருமின்று.

இதுநிற்க. நாள்பலசேறலின் எழுதுவோரானு மிசைப்போரானு மேற்பட்டு வந்த பிழைகட்கோ வரம்பில. அம்ம! அம்ம!! அதனையள விடற் காராலாம்? இவ்வாறுற்ற இந்நூலைப் பல பிரதிகளைக்கொண் டாராய்ந்து ஒருவாறு பரிசோதித் திருக்கினும் வழூஉமுற்றுங்களைந்த சுத்தமூலங் கண்டதின்று. ஏனெனில் சிலவிடத்து வெண்டளைபிழைத் தும், அத்துச்சாரியைப் பெறவேண்டிய விடத்துப் பெறாமலும், ஒருமை யிற் பன்மையும், பன்மையி னொருமையும், விரவிநிற்கின்றன. அவை களைக் களையப்புகின் சந்தவழூவும் பொருளமைதி யின்மையும் தோன்றிப் புதுமொழி புணர்த்தற்கு மிடனாவதையுணர்ந்து அவ்வாறு செய்திலம்.

"பெரியோர் கருத்தைப் பெயர்த்தறிய லாகா
உரியோ ரவைக்கு முரியோர்—பெரியோர்க்குச்
சொல்லும் பொருளும் தொடரா திரண்டாகும்
புல்லும் பொழுதிற் பொருள்" என்றதனாற்

பிரதிபேதங்களை ✻ நட்சத்திரக்குறியிட்டு அடியில் விளக்கியும், அடிகள் குறைந்தவிடத்து.........வரிசைப்புள்ளி நிறைவித்தும், மிக்கவிடத்து நீக்காது குறித்தும், பொருளமையாவிடத்து அமையத்திருத்திப் பேதப் படுத்தாதும் எம்சிற்றறிவிற்குத் தக்கபடி பார்த்தச் சிட்டனம்.

இந்நூலுள் உள்ள பிள்ளைத்தமிழிற் காப்பு, அம்புலிப் பருவங்கள் விடுபட்டும், மற்றப்பருவங்களிற் சில செய்யுட்கள் குறைந்தும், அந்தாதி முதலியன சில முற்றுப்பெறாமலு மிருக்கின்றன. நிறைவுபெற்ற பிரதிகள் கிடைக்குமாயின் மறுபதிப்பிற் பிரசுரிக்கப்படும்.

இதனுள் ஞானியார்சாகிபு அவர்களின் சகோதரரான இளைய ஞானியார்சாகிபு அவர்கள் அருளிய பாடல்களும் சிலகலந் திருக்கின்றன. அவைகளைப் பிரித்துணர்தற் கரியதாயிருத்தலின் இன்னசெய்யுளென்னக் குறிப்பிட்டிலம்.

இந்நூலின் அருமைபெருமையை யறியத்தக்க விவேகிகள் எம்மாலேதுந் தவறுற்றிருக்கினும் மன்னிப்பாராக.

இதனைப் பிரசுரிக்கும்படி மனோதயாளமாய்த் தனோபகாரஞ்செய்த மேலைப்பாளையம், வ. செ. ஷம்ஸுத்தாஸீன்தாகனு ரவர்கள் நீடூழிவாழ்க எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளைப் பிரார்த்திக்கின்றனம்.

கொட்டாம்பட்டி
எம். கருப்பையாப்பாவலன்.

---

## ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் யாவருக்கும் அறிவிப்பதாவது.

ஞானியார்சாகிபு அவர்கள் மெய்ஞ்ஞானத் திருப்பாடற்றிரட்டு என்னுமிந்நூலை அவர்கள் பாம்பரையில்வந்த சுதந்தரமுள்ள என்னால் அச்சிட்டு சென்னையிலும் புதுவையிலும் ரிஜிஸ்தர் செய்திருக்கின்றேன்.

இதனை யாரேனும் என் னநுமதியின்றி அச்சிடுவரேல் அந்தந்தவர்கள்மென்டு சட்டப்படி நேரிடும் நஷ்டத்திற்குங் கிரிமினல் குற்றத்திற்கும் உத்திரவாதிக ளாகவேண்டு மென்பதைக் கவனிக்க கோருகிறேன்.

இங்ஙனம்
ஞா. செ. செய்யிதுதாகாலெப்பை.

---



ஹாமீம்.
பிஸ்மில்லாஹி.

# ஞானியார்சாகிபு ஒலியுல்லா

## அவர்கள்

## சரித்திரச் சுருக்கம்.

உலகெலா முணர்ந்தோதற்கரிய சுத்த தத்துவ சைதன்ய பரம சச்சிதாநந்த சுயம்பிரகாசக் கடவுளான ஹக்கு ஸுபுஹானஹு வத்தஆலாவின் அருமைத்திருத்தூதரும், இரகசியநிதியுமான சற்குரு நபிமுஹம்மது முஸ்தபா றஸூல் சல்லல்லாஹு அலைகிவசல்லம், அவர்களுடைய தெளிவின தீனுல் இஸ்லாம் மார்க்கத்தாதீனத்தரும், சகலகலை வல்லவரும், திருக் கோடையம்பதியி லுற்றவருமாகிய, ஆலிது ஆரிபுபில்லா மவுலானு ஷெய்கு உதுமான் லெப்பை ஆலிம் சாகிபு, அவர்கள் குமாரர் காமிலொலி ஷெய்குமன்னன் சாகிபு, அவர்கள் குமாரர் ஷெய்கு அபூபக்கர் சாகிபு, அவர்கள் தம்முரின்கண்ணுள்ள மவுலானு ஷெய்கு முகியித்தீன்சாகிபு அவர்களின் புதல்வியும், கற்பொழுக்கீங்குன்று நற்குணங்கள் நிறைந்த கன்னிகையுமான செய்யிது மீறன் பீவி அவர்களை மணந்து அறமுறைவழுவாது இருவரும் மகிழ்வாய் மனமொன்றி வாழுகையில், சந்ததியின்றி நீண்டநாள் கழிந்ததால் மனம்வருந்தி அல்லாஹுத்தஆலா இடத்தில் இடைவிடாது மன்றாடிவர; அப்போது ஆண்டவன் கருணைத்திருவருளினாலே கருப்பமுற்றனர். அன்றிரவு நித்திரையில் பூரணசந்திரன் வானத்தினின்றிறங்கி தமது மடியிலிருந்து நிரம்பிய சோதியோடு விளையாட பீவி அவர்கள் கனவுகண்டெழுந்து தமது நாயகரிடஞ்சொல்ல; அவர்கள் சர்வபூதாதாரனை ஹக்குத்த ஆலாவைத் துதித்துப் பூமியெங்கும் புகழ்ந்து பரவத்தக்க பற்பல அற்புதகாரண ஞானச்செல்வமாய் ஒருகுழந்தை உமது கருப்போதரத்தினின் றுற்பத்தியாகுமென்றுரைத்தார்கள். அதுகேட்ட பீவி அவர்களும் நாயனைத்தோத்திரித்து உவகையுற்றிருக்கக், கருப்பம் நாட்குநாள் விருத்தியடைந்து பத்துமாதமுஞ்சென்று, முன்னோர்தவமோ! தவமுடையார் விரும்பும்பயனோ! உலகத்தவ ரதிஷ்டமோ! யோகஞானுபவநிலையோ! உருவெடுத்ததென் றோதத்தக்க தகைமையுடன் ஹிஜ்ரி ககசுஎ-ம் ஆண்டிலே ஷெய்கு ஞானியார்சாகிபு ஒலியுல்லா அவர்கள் திரு அவதாரமானார்கள்.

உடனே குழந்தைகட் கியற்றுஞ் சடங்குகள் முடித்து அன்னையார் திருக்கரத்தேந்தி யமுதளித்துவந்து ஏழாநாள் ஷெய்கு முகியித்தீன் மலுக்கு

முதலியார் என்னுந் திருநாமஞ்சூட்டிப் பெற்றோர்களால் கண்ணை யிமை காப்பதுபோற் பாதுகாத்து வளர்த்துவரவே; சாகிபு அவர்கள் வளர்பிறைச் சந்திரன்போல் வளர்ந்து, கல்வியிலும் பருவத்திற்பயிலாதும், உலகநடையிற் பற்றாதும், பரம சிந்தனையிலேயே மவுனமுற்றுப் பதினான்கு வயதுவரை காலங் கழித்துவந்தார்கள்.

அக்காலத்தில் வேதானுபூதியே மானிடத் திருவுருக்கொண்ட கிருபாமூர்த்தியான நமது நாயகம் குத்புறப்பானி, கவுதுசமதானி, செய்யிதுனா ஹல்லாஜுர் றஹ்மத்துல்லா அவர்களின் சீடர்களிலொருவரும், இந்நாள்வரை சீவித்திருக்கின்றவருமான குதுபுச்சமான் செய்யிதுஸ் ஸாத்தாது மவுலானா * செய்யிது தாஹீம் இபுனு செய்யிது ஜமாலுல் மிஹ்றபரிய்யி கத்தசல்லாஹு ஸிர்றஹு அவர்கள், கோடையம்பதி செய்யிது பாவாகாஸிம் சாகிபு ஒலியுல்லா அவர்கள் பள்ளிவாசலில், பகீர்கோலங்கொண்டு வந்திருந்து அங்கொருவருடைய உதவியும் விரும்பாது தாமே அரிசியின்றி நீர்மட்டும் நிரப்பியகலசத்தை அடுப்பிலேற்றி வாயானூதி யனலுண்டாக்கி மணமுள்ள அன்னஞ்சமைத் துண்பதையும், இரவிற் பள்ளியுட்புகுந்து கதவை மூடிக்கொண்டிருக்கையில் அக்கதவின் துவாரத்து வழியாய் சூரியப்பிரபைபோல ஒளியுண்டாதல் முதலிய அற்புதங்கள் நடப்பதையும், கண்டசிலர் ஞானியார்சாகிபு அவர்களின் தந்தையார்க் கறிவிக்க; அவர்கள் வியப்படைந்து வந்துகேட்டபடியே கண்டு ஷெய்கு அவர்கள்மீது அன்பும் ஆச்சரியமுங்கொண்டு அடுத்தநாள் அவர்கள்பால் வந்துவணங்கித் தம்முடைய வீட்டுக் கமுதருந்த அழைத்துச் செல்லுங்கால், அங்குநின்ற ஞானியார்சாகிபு அவர்களை முன்னறிந்தவர்களைப்போல பெயர்சொல்லி யழைத்துத் திருக்கரங்கொடுத்துக் கூட்டிக் கொண்டுபோய்த் தம்முடனிருக்கச்செய் திருவரு மொருகலத்திலுண்டு பசியாறியபின், ஷெய்கு அவர்கள் பள்ளிக்குச்செல்ல; சாகிபு அவர்களும் பின்றொடர்ந்து சென்று பள்ளியினருகில் மறைவாயிருந்தார்கள். ஷெய்கு அவர்கள் வழக்கம்போல பள்ளியுட்சென்று கதவைமூடி நிட்டையிலிருக்க; அங்குண்டான ஒளிமுதலிய பல அற்புதங்களை சாகிபு அவர்கள் கண்டு அதிசயித்து மெல்லக் கதவைத்திறந் துட்புகுந்து அங்குநடப்பவைகளைப் பார்த்துக்கொண்டு ஓர் கற்றூண் மறைவி லிருந்தார்கள். பின்பு ஷெய்கு அவர்கள் நிட்டைதெளிந்து எழுந்துபார்க்குங்கால், சாகிபவர்க ளிருப்பதைக்கண்டு சினமுற்றவர்களைப்போல் நடித்து வற்புறுத்தி "வெளியிற்போம்" என்ன; அப்போது சாகிபு அவர்கள் மிகவணங்கி "நாயகமே! தங்கள் கிருபாநோக்கப் பரிசத்திற்காகக் காத்துக்கொண்டிருந்த அடியேனைத் தள்ளாது கொள்ளக் கருணைசெய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தும், இரங்காதவர்களைப்போல் பலமுறை வெளியிற் போ

* இவர்களை ஹல்லாஜுர் றஹ்மத்துல்லாவின் சீடர்களி லொருவரின் சீடரெனச் சிலர்கூறுவர், பின் வருவனகண் டஃதன்றென மறுக்க.



கச்சொல்லிக் கழுத்தைப்பிடித்து வெளியில்தள்ள; சாகிபுஅவர்கள் போகாமல் அக்கற்றூணைக் கட்டிப் பிடித்துக்கொண்டு நின்று அழுது, "என்னைக் காக்குங்கடன் தங்கள் கடமையன்றி வேறில்லை, நானொருக்காலுந் தங்களைவிடேன், வெளியிற்போகேன்" என்றிரத்தலும், ஷெய்கு அவர்கள் மனமிரங்கிப் பக்கத்திருத்தித் தெள்ளியஞானங்களடங்கிய சுரியானி பாஷைக் கிதாப்பு ஒன்றைத் தமது பையிலிருந் தெடுத்துக் கொடுத்துப் படிக்கும்படி பலதடவை கூறியும், சாகிபு அவர்கள் ஒருபாஷை எழுத்தும் கற்றுக்கொள்ளாதவர்களாதலால் திகைத்து மவுனமுற்றிருக்க; ஷெய்கு அவர்கள் சினமுற்றுப் பிடரியைப்பிடித்து முகம் பூமியிற்றுவ அழுத்தி நிமிர்த்தி மார்பில் ஓர் அடி அடித்து வாசிக்கச்சொல்ல, உடனே அக்கிதாப்பை முன்கற்றுத் தேர்ந்தவர்களைப்போல வாசித்தார்கள். பின்பு ஷெய்கு அவர்கள் சாகிபு அவர்களைநோக்கி "எமது உஸ்தாது செய்யிதுனா ஹல்லாஜுர்றஹ்மத்துல்லா அவர்களுத்திரவின்படி பதினொரு மாதப் பிரயாணத்தூரத்துக் கப்பாலிருந்துவந்து உமக்குப் போதிக்கலானேன். ஆதலால் இன்றுமுதல் அல்லாஹு ஸுப்ஹானஹு வத்த ஆலா உமக்கு சகலவல்லமைகளையுந் தருவானாக" என் றாசீர்வதித்தும், நன்முறைபோதித்தும், முரீது என்னுந் தீட்சை உபதேசஞ்செய்தும், இன்னகாலத்தில் இராமநாதபுரம் சமஸ்தானத்தைச்சார்ந்த மணன்மேற்குடிசத்திரத்தில் வந்து நம்மைக் கண்டுகொள்ளுமென்று கட்டளையிட்டும், அன்றிரவு அவ்விடம்விட்டுப் போய்விட்டார்கள்.

பின்னர் சாகிபு அவர்கள் குரு உபதேசக்கிரமப்படி நடந்து, முன்னர்க் கற்றுக்கொள்ளாத குர்ஆன் முதலிய வேதசாத்திரங்களின் இரகசியார்த்தங்களை யாவருக்கும் போதிப்பதும், சிலசமையங்களில் ஜதுபு என்னும் தன்னைமறந்த ஆநந்தபரவசமுண்டாகிப் புகுதற்கரிய வனமலைகளிற் புகுந்து கந்தமூலபலாதிகளை யுண்பதும், யோகஞானானுபவ நிட்டையிலிருப்பதும், ஒவ்வொரு காலத்தில் வீட்டுக்கு வருவதுமாகப் பதினாறுவயதுவரை காலத்தை வகித்துவந்தார்கள்.

பின்பு தமதுகுருவினாஞ்ஞைப்படி குறித்தநாளடுக்கத் தன்னகர்விட்டு பன்னெறிகளுங்கடந்து சூரியாஸ்தமன சமயத்திற்கு மணன்மேற்குடிசத்திரம்போய்ச்சேர்ந்து ஒருசாமம்வரை குருதரிசனங்காணாது மனம்வருந்தியிருக்கையில், நிர்நிமித்தமாய் ஷெய்கு அவர்கள்தோன்றி சாகிபு அவர்களின் முழுமதிமுகத்தைத் தங்களின் திருக்கரங்களாற் றடவி, "இந்நேரம்வரை யும்மைச்சோதிக்க மறைந்திருந்ததன்றி வேறில்லை" என்றுரைத்தன்புகூர்ந்து சாகிபு அவர்களைக் கண்மூடிக்கொள்ளும்படிக்கும், மத்தியில் தம்முத்திரவின்றித் திறக்கக்கூடாதென்றும், ஆக்ஞாபித்துத் தமது வலதுவிலாவிற் சேர்த்தணைத் தெடுத்துக்கொண்டு தெய்வீகமாய்நடந்து, சற்றுநேரத்தில் விழியுமென்ன; அங்ஙனம் விழித்துநோக்குகையில், பாலினும் வெண்மையான ஒரு வெளியையும், அதில் அன்பியாக்கள்,

அசுஹாப்புகள், அகுதாப்புகள், அவுலியாக்கள் முதலியமகான்கள் சூழ்ந்திருக்க நடுவில் நவமணிகளிழைத்த பொற்சிம்மாசனத்தின்மீது நமது நாயகம் சற்குரு சர்வலோக ரட்சகரான நபிமுஹம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாஹு அலைகிவசல்லம் அவர்களிருப்பதையும், அங்கு நிகழும் பற்பல அற்புதங்களையுங்கண்டார்கள். பின்பு இவர்களின்கரத்தை ஷெய்குஅவர்கள் பிடித்தழைத்து அம்மஜ்லிஸின் நடுவில் நபிகணாயகம் அவர்கள் சமுகத்தில் விட, அவர்கள் அன்புபாராட்டி மிக்க இரகசிய வேதார்த்தபோதங்களைப் போதித்தும், தங்கள் தெய்வீகத் திருவாயமுதை யுண்ணக்கொடுத்தும், விலாயத்தெனும் இலாஞ்சனையைத் தங்கள் மலர்க்கரத்தால் * சிரத்திற்பதித்தும், பியாலாவெனுந் தெய்வத் திருப்பானத்தைப் புகட்டியும், செய்யிது அலியின்கர்றமல்லாஹு வஜ்ஹஹு அவர்களைக்கொண்டு ஹக்காயிக்குகளின் இல்முகளைப் பொதிந்த † யூறுனிபாஷைகிதாப்பு ஒன்றைக் கொடுப்பித்தும் அதனுண்மைகளைப் போதிக்கச்செய்தும், செய்யிதுஅப்துல்லாஹ் றழியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி, "உம்முடைய தரீக்கை புகழுண்டாக வுலகிற் பரவச்செய்யத்தக்க இவர் உமது பிள்ளையாதலால், தவுஹீதின் அரிய இல்முகளடங்கிய † அபுறனி பாஷை கிதாப்பைக்கொடுத்து அதினுட்பொருளை யுணர்த்தும்" என்று கட்டளையிட்டும், நசீஹத்துச் செய்வித்தும், விடைகொடுத்து அனுப்பப், பெற்றுக்கொண்டு, சாகிபு அவர்களும் ஷெய்குஅவர்களும் தெய்வீகமாய்நடந்து மணன்மேற்குடி சத்திரம்வந்து சேர்ந்தார்கள்.

அதன்பின் ஷெய்கு அவர்கள் "கருத்தியிற்றத்தம்பலத்தாலும், மாந்திரீகத்தாலும், பல மாயாவினோத ஜாலங்களாலும், எவரையும் மயக்கி வருத்துகிற விஸ்தாரத் செய்யிது முஹியித்தீனையும், யூசுபையும், நல்வழியிலாக்கி முதன்மையாய் முரீதுகொடுத்து நம்முடைய தரீக்கை எங்கும் பரவச்செய்யும்" என்று கட்டளையிட்டு, கிலாபத்து எனும் தநத்துவ சாசனமீந்து, அவ்விடத்தைவிட்டு மறைந்தருளினார்கள்.

பின்னர் அந்தப்படியே சாகிபு அவர்கள் குருவினுஞ்ஞையை மேற்கொண்டு கழுதிசென்று தங்கள் மகிமையை வெளிவிடாது காலம்நோக்கி கூலிவேலைசெய்து போதுகழித்து வந்தார்கள். அக்காலத்தில் மேற்குறித்த யூசுபும், அவ்வூர் செய்யிது முஹியித்தீன்பிள்ளையும், சாகிபு அவர்களைக் கூலியாளாகக் கூட்டிக்கொண்டு அவ்வூர்க்கடுத்த அபிராமம் சந்தைக்குப்போய்த் தங்களுக்கு வேண்டியநூல் முதலிய சரக்குகளைவாங்கிக் குவியலிட்டு "நீர் எவ்வளவு சுமை யெடுப்பீர்" என்றுகேட்க; "நீங்கள் வைப்பது எவ்வளவானாலுஞ் சுமப்பேன்" என்று சாகிபு அவர்கள்சொல்ல; மிக ஆச்சரியமுற்று அதைப்பரிட்சிக்க வெண்ணி வாங்கியயாவையும் ஒரே மூட்டையாகக் கட்டித்தூக்கித் தலையில்வைத்தார்கள். அச்சுமையை சாகிபு அவர்கள் பெரிதாய் நினைக்காது அற்பமாய்க்கொண்டு, அவர்கள்

* செந்தியிலெனவுஞ் சொல்லுவர். † இவைகள் இப்போது மிருக்கின்றன.



பின்புறமாக எடுத்துவருவதைக்கண்டு, இவர் சிறுபிராயத்தவராயிருந்தும்; இவ்வளவு பெரியசுமையைச் சுமந்துவருவது பேராச்சரியமே என நினைந்து சென்றார்கள். அப்போது ஆகாயமெங்குங் கருமுகில்சூழ்ந்து மின்னி இடித்து பெருமழை பொழிந்தன. அதனால் அவ்விருவரும் ஓரிடத்தில் நின்றார்கள். சாகிபு அவர்கள் சற்றும் நில்லாமலும், நனைந்துபோகாமல் சரக்கையிறக்குமென்று கூக்குரலிட்டழைத்த அவர்களுக்கொன்றுஞ் சொல்லாமலும் விரைவாய் நடந்தார்கள். பின்னர் இவர்கள் மழையில் நனைந்துகொண்டே பின்றுடர்ந்துவருகையில், ஊருக்கடுத்திருக்கும் கழுதியாற்றில் பூரணப் பிரவாகம்வந்து இறங்கக்கூடாமல் தடுத்துக்கொள்ள; அவ்விருவரும் நின்றுவிட்டார்கள். சாகிபு அவர்கள் நில்லாமல் அந்தவெள்ளத்தில் பூமியில் நடப்பதுபோல நடக்கவும், தலைச்சுமை ஒருமுழத்துக்குமேல் அந்தரமாய்ப் போகவுங்கண்டு மதிமயங்கி, "என்னமதிபோனேம், இவர்யாரோ பெரிய மகான்போலன்றோ தோற்றுகிறது" என்று வருத்தமும் வியப்புமடைந்து, "நாயகமே! நாங்கள்செய்தபிழைகளைப் பொறுத்து எங்களை அக்கரைசேர்க்கும் அக்கரை தங்களுக்கு உண்டாகி யாண்டருள வேண்டும்" என்று மன்றாடினார்கள். அதுகேட்டுத் தம் தலைச்சுமையையே தெப்பமாக அவர்கள்பாற் செல்லச்செய்து திலேறிக் கொள்ளச்சொல்லி இக்கரைப்படுத்தினார்கள். வந்துசேர்ந்த இருவரும், தங்கள் சரக்குகளையும் சாகிபு அவர்களையும் பார்க்கையில் நனையாதிருக்கக்கண்டு மிகவியப்பு முவகையுமுற்று, சாகிபு அவர்கள் பாதத்தில் வணங்கி குற்றங்களை மன்னிக்கப் பிரார்த்தித்து சுமையை இரண்டாக்கி தாங்கள் சுமந்துகொண்டு வணக்கமாய்ப் பின்பற்றி நடந்து கழுதிவந்து சேர்ந்தார்கள்.

பின்பு, சாகிபு அவர்கள் மேற்படி முஹியித்தீன்பிள்ளை வேண்டுகைக்கிரங்கி அவர் வீட்டில் சிலகாலம் வதிந்திருக்கையில், ஹக்குத்தஆலாவின் திருவருளினால் திருவாய்மலர்ந்தருளப்பட்ட மெய்ஞ்ஞானத்திருப்பாடல்களையும், பிரதி தினமும் நடக்கப்பட்ட பற்பல அற்புதாதிகளையும், கண்டோர் பலரும் முரீது பெற அவாக்கொண்டு தங்கள் கருத்தை சாகிபு அவர்களிடம் வணக்கமாய்த் தெரிவிக்க, அதற்குசாகிபு அவர்கள் "விஸ்தாரத்செய்யிதுமுஹியித்தீனுக்கும் யூசுபுக்கும் முதலில் முரீது கொடுக்க எமது உஸ்தாது கட்டளையிட்டிருப்பதால் அது நிறைவேறிய பின் உங்கள்கருத்து முற்றுப்பெறும்" என்றார்கள். அதைக்கேட்டவர்கள் மேற்குறித்த விருவர்களுக்குந் தெரிவிக்க, விஸ்தாரத்செய்யிது முஹியித்தீன் அவ்வார்த்தையைச் சிரமேற்கொண்டு சாகிபவர்களிடம் வந்து வணங்கி மிகுமரியாதையோடு முரீது பெற்றார். யூசுபுவோ! அதை நம்பாமல் "அப்படி அவர்கள் உஸ்தாதுசொல்லியது உண்மையாயின் எனக்கும் அறிவிப்பார்கள். அவ்விதமின்றி யான் முரீது பெறேன்" என்று சொல்லிக்கொண்டிருக்குங் காலத்தில், ஒருநாள் இரவில் இவர்வீட்டு

வாசலில் ஒருவர்வந்து உள்ளேயிருந்த இவரை முன்தெரிந்தவர்களைப் போல "புகப்பே இங்கேவா" என்றழைத்து, "என்னே அத்யாயோர் காலிபரானபிர் செய்த உதைவிபுறயன்தூல் ஷல்லாஹி வஸல்லம் அவர்களின் தொண்டர். என்பெயர் சேய்யிது தாஹிர் பெருவேய்யிது ஹமாலல் மிஷாயியி. இங்குவந்திருக்கிற செய்யது முகியித்தீன் மறைந்த முதலியார் எனது உத்தமசீடர். முத்தியிலே (அ)ண்டவர். அவர்பால் புரீது பெற்று மோட்சசாதனத்தை அடைந்து(வீர்)கள்" என்று கட்டளையிட்டு உடனே மறைந்தருள, புதுபு அவர்கள் (சீ)டர்கள் போலக்கொண்ட பேரொளியதையும், சொல்லிய வசனமிர்தத்தையும், காட்சிகாட்டி மறைந்தருளியதையும், கண்டு ஆச்சரியமும் ஆனந்தமும் கொண்டு உடனே முகியித்தீன்பிள்ளை வீட்டிற்கு வந்து அங்கிருந்த சாகிபு அவர்கள் பாதத்தில் வணங்கி உற்பவுரைத்து, "எனது குற்றம்பொறுத்து புரீதுகொடுத்தாட்கொள்ள வேண்டும்" என்று பிரார்த்திக்க; அப்படியே புரீது வழங்கி திட்சையருள்புரிந்தார்கள். பின்னர், முன்னர் புரீது பெறவிரும்பிய முகியித்தீன் பிள்ளை மதநாப்பிள்ளை, முதலியயாவருக்கும் உபதேசித்தாட்கொண்டார்கள்.

அப்பால், சாகிபு அவர்கள் சிலகாலம் கழித்துக் கதோமலை போட்டாற்குப்போக நினைத்து, தங்கள் சீடரான விஸ்தாரம் செய்யிது முகியித்தீன் என்பவரையுங் கூட்டிக்கொண்டு, தாங்கள் ஓர் குதிரையின்மேலேறிப் பிரயாணமாகி பலவிடங்களையுங் கடந்து(வருகை)யில், வழியிற் கூடாரமடித் திறங்கியிருந்த பேல்மர்யாத (ராஜ)னும் அவனது முன்னால் வந்த வீரர்களும் சாகிபுஅவர்களையும் சீடரையும் எதிரில் வேலாட்டுகளை நினைத்து "அங்குபோகிறவர்கள் (யா)வர்" எனப் பலதடவைகேட்க, பிரதியுத்தரம் ஒன்றுஞ் சொல்லாமல் (நட)ப்பதை நோக்கிச் சினந்த அரசன், "குதிரையைப் பிடிங்குங்கள்" என்ச் (சொல்லிக் கு)திரையேயிவிட; அவர்கள் நெருங்கிவரும், சாகிபு அவர்கள் "பிடிங்(கு)ங்கள்" என்றார்கள். உடனே அவர்கள் மதிமயங்கித் தலைகுனிந்து (அசை)யாமல் பூமியிற் புதையுண்டிருந்தார்கள். (இ)தைக்கண்ட அரசன் அச்சமுற்று ஓடிவந்து சாகிபு அவர்களின் முன்பு விழுந்து வணங்கி குற்றங்களை மன்னித்திரட்சிக்க(வேண்டுமெ)ன்று பிரார்த்திக்க, அவ்வரசனைக் கொண்டே 'பிடுங்காதீர்' என்று சொல்லச்சொல்லி அவர்கள் செய்கையை நீக்கச்செய்தார்கள். உடனே அவர்களும் அரசனும் மிக ஆச்சரியமுற்று சாகிபு அவர்களைத் தம் நகரத்துக் கழைத்துக்கொண்டுபோய் மூன்று நாள் வரையில் உபசார மரியாதையுடன் வைத்திருந்து பாதகாணிக்கையாதிகள் கொடுத்து அதிகச்சிறப்பாய் அனுப்பிவைத்தார்கள்.

அங்கிருந்து புறப்பட்டுவந்து திருநெல்வேலியை யடுத்த மேலப்பாளையத்தின் தென்புறமிருக்குங் கலிமாதுனக்கரையில் ஒரு குளிர்ந்த தரு நிழலில் தங்கியிருந்தார்கள். இதுநிற்க;



அந்த மேலப்பாளையத்திலிருந்த மகான் * ஸெய்யிது அஹ்மது கபீர்சாகிபு ஒலியுல்லா அவர்களிடம் புரீது பெற அவாக்கொண்டு தொண்டு பூண்டுவந்த, அவ்வூர் சடைஅப்துல்காதிறு கருத்தை மஸ்தான் அவர்கள் அறிந்து, "உமக்கு புரீது கொடுக்கத்தக்கவர் இன்னுஞ்சிலநாளில் இங்குவருவார், அவர்பாற் பெற்றுய்வீர்" எனவும், இவர் மனம்வருந்தி அவரை யான் எவ்வாறறிவேன் என்றுநினைக்க; மஸ்தான் அவர்கள் ஒருவினைவையும் அதற்குவிடையையுஞ் சொல்லி "அவ்வினைப்பயனை அறிவிப்பவர் எவரோ? அவரே புரீது கொடுக்கத் தகுதியவர் அவர் அறிவீராக" என்றார்கள். அன்றுமுதலவர் அங்குவரும் பெரியோர்களிடத்திலெல்லாம் தம்வினைவை வினவிப்பயன் பெறாது பலநாள்கழிந்து வருந்திநின்ற சடை அப்துல்காதிறு ஓர்காரணமாய் மேற்குறித்த கலிமாதுனத்துக்கு வந்து அங்கிருந்த சாகிபு அவர்களையும், சீடரையுங், கண்டு யாரோ அறிவோம் என்று நெருங்கிவரவும், சாகிபு அவர்கள் இவரை முன்னறிந்தவர்களைப்போல் அப்துல்காதிறே வாரும் என்றழைக்க; திகிலும் வியப்பும் அடைந்து பத்தியோடு சென்று வணங்கித் தம்வினைவுக்கு விடைபெற்று முன் நடந்தவைகளனைத்தையுமுரைத்து தமது தாயிலாவசெய்த இவர்களே என்றுறுதிகொண்டு தம் வீட்டுக் கழைத்து வந்து உபசாரத்துடன் விருந்திட்டு சிலநாள் அங்குவைத்திருந்து தாமும் தம்மைச்சேர்ந்தவர்களும் புரீதுபெற்று முத்திக்குரியரானார்கள்.

பின்பு சாகிபவர்கள் கோட்டாறு வந்து குருபிரான் கட்டளைப்படி கேழ்வீடுகளைத் தவறாது நடத்தி வந்ததுமல்லாமல் சகுமுதல் நாள்தோறும் தங்களின் சீடர்களாகிய பரிவாரத்தோடு கூடி மவுலூது, பாத்திஹா, திக்று, கலவாத்து, அவுறாது, முதலிய வணக்கங்கள் செய்து கடைசியில் தப்றூக் கொடுத்து வந்தார்கள். இதைக்கண்ட, அவ்வூரிற் சிலர்பொறாமைகொண்டு புறங்கூறித்திரிந்து; அக்காலில் அங்குவந்திருந்த மவுலானா குறுபுல் ஸமான் ஸெய்யிது முஹம்மது புகாரி தங்கள் அவர்களிடம் சாகிபவர்களைப்பற்றி பலவிதமான கோள்கள்சொல்ல, அதைக்கேட்ட தங்களவர்கள் சாகிபவர்களை அழைப்பித்தார்கள். அப்படியே சாகிபவர்கள் வருகையில் தங்களவர்கள் எதிர்சென்று முன்னின்று கட்டித்தழுவி முத்தமிட்டு தம்முடன் இருக்கச்செய்து சில நாழிகைகளைப்பின் சாகிபவர்களின் மெய்ஞ்ஞான நிலையை கண்டுணர்ந்து ஆனந்தங்கொண்டு பொறாமையினாற் கோள்சொன்ன, விரோதிகட்கும், மற்றவர்கட்கும், சாகிபவர்களின் மகிமைகளைப் போதித்து சற்புத்தி கற்பித்தார்கள்.

திருவாங்கூர் சமஸ்தானம் ராஜ்ஜியபரிபாலன லோகுகாலத்தில் மழையின்றி கஞ்செய் புஞ்செய்ப்பயிர்கள் கரிந்து பஞ்சமுண்டானதால் குடிசனங்கள்வருந்தி மகாராஜா அவர்களிடம் முறையிட; அவர்கள் மந்திரியைநோக்கி எவ்விதத்தாலேனும் தண்ணீருண்டாக்கி விளைவேற்றிப்

* குன்னத்தூர் அகும்பாவாசாகிபு அவர்கள் என்பாருமுளர்.

பஞ்சம் நீங்குவழிதேடி வரவேண்டுமென்று கட்டளையிட்டனுப்ப; அவர் வந்து மலையருவி, ஆற்றாறுகள், முதலியவிடங்களி லுண்டாகும் நீரைக் கொண்டுவர எவ்வளவோ முயற்சிசெய்தும் பயன்படாமல், அதிகமனக் கவலை யுடையவராய்த் திரும்பிக் கோட்டாற்றில் தற்காலம் புகையிலைப் பண்டகசாலை எனவழங்குங் கச்சேரியில் வந்திருந்தார். அந்நாளில் அந்தக் கச்சேரித்தெருவழியாய்ச்சென்ற சாகிபு அவர்களைத் தெரிந்த சிலர் கண்டு அவர்களின் மகிமைகளை மந்திரிக்கறிவித்து, அவர்கள்பால் முறையிட்டால் நம் மனக்குறைவும் மழைக்குறைவும் தீருமென் றுரைத்தார்கள். உடனே மந்திரியெழுந்து வெளியில்வந்து சாகிபுஅவர்களை வணங்கி அழைத்துட்புகுந்து ஓர் ஆசனத் திருக்கச்செய்து, தனக்குள்ள கவலையையும் தற்காலம் வேண்டிய மழையையும் தாழ்மையாய் முறையிட்டுச் சொல்லிக்கொள்ளக்; கேட்டசாகிபு அவர்கள் மனமிரங்கி தலையிறங்கி நிமிர்ந்து நோக்கின அளவில் இருவிழிகளுஞ் சிவக்க வானிற் கருமுகில்கள் கர்ச்சித்து மின்னியெங்கும் பாவின. பின்னர் சாகிபு அவர்கள் தேகத்திலுள்ள உரோமங்கள்சிலிர்த்து வேர்வையாகி சலமயமாய் ஒழுகலும் கோடைகால மழையென அளவின்றி அபரிமிதமாய் மழைபொழியக்கண்டு, இன்னும் இவ்விதம் பெய்யுமாகில் அதனாலேதுந் தீங்கு விளையுமென்று பயந்து, மழைபொழிவதை நிறுத்தவேண்டுமென்று பிரார்த்திக்க; அந்தப்படியே நிறுத்தி நாடுகளெங்கும் பஞ்சம்நீங்கிச் செழிப்படையச் செய்தார்கள்.

பின்னர் ஓர்காலத்தில் நாகர்கோவிலிற் பட்டாளம் கர்னலாகவிருந்த முகியித்தீன்கான் மனைவி தானணிந்திருந்த நகைகளைக்கழற்றி ஓரிடத்தில் வைத்துக் குளித்துவிட்டுவந்து பார்க்குங்கால், விலையுயர்ந்த புலாக்கு நகைமட்டும் காணாதிருக்க; அதை அந்தவீட்டில் குழந்தைகளுக்கு ஓதிக் கொடுத்துக்கொண் டிருந்த சகீதுலெப்பை மகனெடுத்து தன் தகப்பன் வசம் கொடுத்துவிட்டதுபோல் குற்றமேற்படுத்தி அரசனுக் கறிவித்து நடந்த விசாரணையிலும் அப்படியே ஸ்திரமாக்கி லெப்பையை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தது. அதுகண்ட லெப்பையின்மனைவி, புத்திராதியர், சாகிபு அவர்களிடம் வந்து மேற்குறித்த சங்கதிகளை முறையிட்டு ரட்சித்தாள வேண்டுமென்றழுது மன்றாட; அதைக்கேட்டு சாகிபவர்கள் மனமிரங்கி மகாராஜா அவர்களிடம் சென்றபோது அங்கு அநேக நம்பூரிகள் முதலியோர் கூட்டத்துடன் இதிகாச பாராயணம் நடந்துகொண்டிருப்பதைக்கண்டு, "பாராயணம் பிழைபட்டது" என்று இரண்டுதடவை கூவிச்சொல்லியும் யாருங் கவனிக்காததால், கோபங்கொண்டு உரத்தசத்தமாய் முற்கூறியபடிகூவிச் சொல்லவே; இடிமுழக்கம்போல் அக்கூட்டத்தவர்கள் கேட்டுத் திடுக்கிட்டுத் திகிலடைந்து கைகளிலிருந்த இதிகாசச் சுவடிகளையுங் கீழேநழுவவிட்டு பயந்து நோக்குகையில், முன்னர் மழைபெய்யச் செய்துகொண்டமந்திரி, சாகிபு



அவர்கள் நிற்பதைக்கண்ணுற்று, அவர்கள் அற்புதச்செயல்களையும், மகிமைகளையும் அரசனுக்கறிவித்து, அரசன் உத்திரவுபெற்று எதிர்சென்று வணங்கி யழைத்துவந்து ஓராசனத் திருக்கச்செய்து, அரசன் மந்திரி முதலியோர்கள் எங்கள்பாற் குற்றம் யாது? கோபங்கொள்ளக் காரணமென்ன? அறிவிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க; "உங்கள் பாராயணம் பிழைபட்டதுகண்டு அதுவாகாதென் றுரைத்தோமன்றி வேறில்லை" என்றார்கள். பிழைபட்டதெங்ஙனங் காட்டுதல் வேண்டுமென்று விரும்ப, மறுபடியும் வாசிக்கச்செய்து குறித்த பிழையைச்சொல்லி அப்படியே அவர்கள் கையிலிருந்த சுவடிகளிலுங்காட்டி அதற்குரிய பயன்களையும் விளக்கினார்கள். உடனே அங்கிருந்து பாராயணஞ்செய்த நம்பூரி முதலியோரெல்லாம் மிக ஆச்சரியமுற்று சென்ற நிமிடம்வரை நாம் வாசித்தபடியிருந்த சுவடி, இந்தநிமிடம் அவர்கள் சொல்லியதுபோ லிருப்பது என்ன அற்புதமோ, அறிகிலேம் என்று பயபக்திமேலிட்டு நின்றார்கள். பின்னர் அரசன் தாங்கள் இங்குவரக் காரணமென்ன? என்று வினவியபோது சாகிபவர்கள் குற்றவாளியல்லாத சகீதுலெப்பை தண்டனைபெற்று சிறையிலிருப்பதையும் அந்நகை ஓர்மாட்டின் காற்குளம்பிற் குத்துண்டு இருப்பதையும் சொல்லி அம்மாட்டைக் குறிப்புணர்த்திக் கொண்டுவரச் செய்து நகையை எடுத்துக்காட்டி லெப்பையை மீட்டி அரசனது உபசார விடைகள்பெற்று மீண்டுவந்தார்கள்.

அப்பால் கோட்டாற்றில் சாகிபு அவர்களின் மைத்துனரான கதீபு வலியமன்றுன் அகமதுலெப்பை அவர்கள் நெடுநாள் சந்ததியின்றி வருந்திப் பெற்ற புத்திரிக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்து அருமையாய் வளர்த்து வருங் காலத்தில் அது ஒருவிதநோயுற் றிறந்துவிடவே; லெப்பையவர்கள் மிகமனம்வருந்தி சாகிபு அவர்களிடத்தில் ஓடிவந்து, "ஆண்சந்ததியில்லாத எனக்கு என்புத்திரியிடத்து தங்கள் அனுக்கிரகத்தாற் பிறந்த குழந்தை யிறந்ததே! ஏதுசெய்வேன்" என்றழுது முறையிட்டு வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்க் குழந்தையை எடுத்துக்காட்டிப் பிரலாபிக்கவும், சாகிபுஅவர்கள் இரக்கங்கொண்டு முன்பெயர்பெறாத அக்குழந்தையைநோக்கி ஷெய்குமன்சூர் என்றபெயரைச் சொல்லிக் கூப்பிட; ஹக்குத்தஆலாவின் திருவருள்கொண்டு உயிர்பெற்றெழுந்தது. உடனே முன்னர் துன்பமடைந்திருந்த யாவர்களும் இன்பமடைந்து சாகிபு அவர்களைப் புகழ்ந்து பாவினார்கள்.

நாகர் கோவிலைச்சேர்ந்த தோவாளைத் தாலூகாவில் அக்காலத்திலிருந்த தாசில்தார் மகளுக்குக் குட்டநோயுண்டாகிக் கைகால் முடங்கி அதிகக் கட்டப்பட்டுவருந்தி, பலவைத்தியர், மாந்திரீகர் முதலியோரால் பார்ப்பித்தும் சௌக்கியமடையா திருந்தபோது சாகிபு அவர்களின் மகிமைகளைக் கேள்வியுற்று அவர்களிடம்வந்து தன் குறைகளைக்கூறி

அழைத்துக்கொண்டுபோய் மகளைக்காட்டி நோயைத்தீர்த் திரட்சிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க; சாகிபுஅவர்கள் அந்நோயை யுற்றுநோக்கி, "இது ஓர் மலையரச (மலைப்பளிஞ) ஞற் செய்யப்பட்ட சூனிய விரோதம். அது இன்னஇடத்திற் புதைக்கப்பட் டிருக்கிறது" என்று சொல்லி யெடுத்துக்காட்டியும் அப்பெண்ணை உச்சிமுதல் உள்ளங்கால் வரை தங்கள் திருக்கரத்தாற் பரிசித்துத் தடவிக்கொடுத்தும் அவ்வினை நீங்கிச் சுகமடையச் செய்தார்கள்.

கோட்டாற்றுப் பெருமாள் குளத்தெருவில்உள்ள ஒருவர்வீட்டுக்கு சாகிபு அவர்கள் ஒருநாள் இராத்திரி சென்றிருந்தபோது அவர்களுக்குக் கொடுக்க அவ்வீட்டார் தங்கள் வேலைக்காரன் ஒருவனைக் கடையில் வெற்றிலைபாக்கு வாங்கிவரும்படி யனுப்பினார்கள். போனவன் திரும்பி நெடுநேரம்வரை வாராததால் அவ்வீட்டுக்குரியவர் தேடிப் போகும்பொழுது வழியில் இடலாக்குடி சிவதாணுபிள்ளைகளத்துக் கருகே அவன் இரத்தம் கக்கி மூர்ச்சையுற்றுக் கிடக்கக்கண்டு வருந்தித் தூக்கிக்கொண்டுவந்து தன்வீட்டிலிருந்த சாகிபு அவர்கள் திருச்சமுகங்கிடத்தவே மூர்ச்சை தெளிந்து எழுந்து உட்கார்ந்து, அவன் தனியே வெற்றிலை வாங்கிக்கொண்டு வரும்போது, அக்களத்தில் ஒருபனையுயரம் நெருப் பெழுந்து குறுகி ஓராசனமாகி அதில் அக்கினி மயமாய் ஒருவ னிருக்கக் கண்டு பயந்தோடி வந்ததாயும், அப்போது முதுகில் ஓரடி விழுந்ததாயும், பின்பு தனக்கு ஒன்றுந்தெரியாது விழுந்துவிட்டதாயும் சொன்னான். உடனே சாகிபு அவர்களுக்கு கோபமுண்டாகி யெழுந்து அவ்வீட்டுக் குரியவரோடுவந்து அக்களத்தைப் பார்க்கையில், அவன் சொல்லியபடி இருக்கக்கண்டு அதற்கு சமீபத்திற்செல்ல; அது அந்த ஆசனத்தை விட்டிறங்கிவந்துபணிந்து தான் ஒருபூதமென்றும் நெடுநாளா யங்கிருப்பதாயும் சொல்ல; அதைத் தம் இருப்பிடத்திற்கு வரும்படிசெய்து பாம்பாக்கி தங்களுடைய காலிற் சுற்றச்செய்து கத்தியால் நறுக்கித் துண்டாக்கி ஊருக்குவெளியிற் புதைக்கச் செய்தார்கள். அதுமுதல் அக்களத்தில் இவ்விதத் தொந்தரைகளில்லாமல் நீங்கின.

கமுதியிலுள்ள சீடர்களுள் ஒருவரான மத்தூம்பிள்ளை என்பவருக்குப் பேரழகும் நற்குணமுஞ் சிறப்புற்றுருக் கொண்டுவந்ததெனத் தவத்தின்வழியாற் பிறந்த புதல்வியார் செய்யிதுஹலிமாஅம்மாள் அவர்களை சாகிபு அவர்கள் திருமணமுடித்து வாழ்ந்து வருகையில் அவ்வூர் முகியித்தீன்பிள்ளை தனக்கு நெடுநாள் சந்ததியில்லாமையை நினைந்து வருந்தி சாகிபு அவர்களிடம் ஒருநாள் வந்து பணிந்து முறையிட்டுக்கொள்ள; அதைக்கேட்டு சாகிபு அவர்கள் அவரைநோக்கி, "நீர்பயப்படவேண்டாம், உம்மிடம் எமக்கும் எமது தம்பிக்கும் சந்ததிகள் உற்பவிக்கக் கூடிய இரண்டுபெண்கள் உண்டாகும். அப்பெண்களை முறையே குறித்தபடி விவாகஞ்செய்து கொடுக்கச் சம்மதிப்பீராகில் பின்னர் ஒன்றுக்கிரண்டாய் நான்கு ஆண்கள் உமதுசந்ததி விர்த்திக் குற்பத்தியாகும்" என்று வாக்களித்தார்கள். அந்தப்படியே குழந்தைகள் பிறந்தன. பெண்களில் முன் பிறந்த மைமூனாஅம்மாளை ஹலறத்து ஞானியார்சாகிபு அவர்களும் பின்பிறந்த அமீனாஅம்மாளை செய்துஉதுமான் என்னும் இளையஞானியார் சாகிபு அவர்களுமாகச் சிறப்பாய்த் திருமணம் முடித்து அவர்கள் வழியாகவே சந்ததிகளுண்டாகும்படி செய்துகொண்டார்கள்.



இராமநாதபுரம் சமஸ்தானம் சேதுபதி தம்முடைய பரிவாரங்களுடன் கமுதிக்கு வந்திருக்கையில் ஒருநாள் அவரின் வேலைக்காரர்களிலிருவர் அவ்வூர் ஊருணியில் பற்றேய்த்துக்கொண் டிருந்தபோது சாகிபு அவர்களின் அற்புதத்திருவருள் மகிமைகளைச் சிலர்சொல்ல, நம்பாதிகழ்ந்து பலதூஷணை வார்த்தையாடினதை அங்குநின்ற சாகிபு அவர்கள் திருத்தொண்டர்களிலொருவர் கேட்டுச்சினமுற்று அக்காபிர்களைத்தூஷிக்கவே; அவர்கள் மிகக்கோபங்கொண்டு தங்கள் அரசனின் வலிமையை எண்ணி அடிக்கவும், உடனே திருத்தொண்டர் இடையிலிருந்த மலையாளம் கத்தியைக்கொண்டு அடித்தகையைத் தறித்துவிட்டார். அது அரசனுக்குத்தெரிந்து சாகிபு அவர்கள் முன்னிலையில் விசாரித்துக் கையறுபட்டவனுக்காக அரசன் வருந்துதலைக்கண்டு சாகிபுஅவர்கள் மனமிரங்கி அறுபட்டதுண்டை அற்றகையோடு வைத்துப்பொருத்தித் தங்கள்திருக்கரத்தினால் பிஸ்மிசொல்லித் தடவ, முன்போல் பொருந்திவிட்டது. அதைக்கண்ட சேதுபதி முதலியோர் ஆச்சரியமும் அன்புங்கொண்டு சாகிபு அவர்களைப் பணிந்து பலசிறப்புடன் அனுப்பிவைத்தார்கள்.

கமுதி விஸ்தாரம் செய்யிது முகியித்தீன் என்பவர் அங்குசாகிபு அவர்களுக்குப் பாதகாணிக்கையாகச்சேர்ந்த நூறுவராகனை எடுத்துக்கொண்டு கோட்டாற்றுக்குப் பிரயாணமாகிக் களக்காட்டு ஏறுவாடிக்கடுத்த இடைமலைவழியில் வரும்போது (கரு) திருடர்கள் நெருங்கிவந்து இவரைப்பயப்படுத்த, அதற்கிவர் சற்றுமஞ்சாது "எமது குருமூர்த்தி ஞானியார்சாகிபவர்கள் காணிக்கை என்னிடமிருப்பது, இது உங்களுக்குச் சித்திக்காது, நீங்கள் செல்லுங்கள்" என்று பலவாறுஞ்சொல்லியுங்கேளாமற் பின்தொடர்ந்து அடித்துப் பிடுங்க அடுக்கவே, அத்திருடர்களுக்குக் கண்தெரியாமற் கையால் வழிதடவும்படிநேரிட்டது. உடனே திருடர்களுக் கறிவுண்டாகி ஐயா! நாங்கள் செய்தது குற்றம், அதைமன்னித்துக் கண்கொடுக்க வேண்டுமென்று கூவிச்சொன்னார்கள். அதைக்கேட்டு நீங்கள் என் குருநாயகருக்கு ஆளொன்றுக் கொருகோட்டை அரிசியும் ஒருகிடாயுஞ் செலுத்துவதாய்ப் பிரார்த்தனை செய்துக்கொள்ளுவீர்களாகில் கண் தெரியுமென்ன; அப்படியே திருடர்களும் பிரார்த்தனைசெய்யக் கண்கள்தெரிந்து இவருக்கு வழித்துணையாய் ஏறுவாடி வரைவந்தார்கள். இந்தச்சங்

கதிகள் முற்றும் அத்தருணமே சிறிதேனும் தவறாமற் கோட்டாற்றி
லிருந்த சாகிபு அவர்கள் தங்களைச்சார்ந்த தொண்டர் முதலியோர்கள்
யாவருக்கும் தெரிவித்தார்கள். அந்தப்படியே மறுநாள்வந்த அவர்
நடந்தவைகளைச்சொல்ல, எல்லாருமிகுந்த வியப்படைந்தார்கள். இரு
டர்களும் குறித்த பிரார்த்தனைப் பொருள்களைக் கொண்டுவந்து சேர்த்து
சாகிபு அவர்களைப்பணிந்து திருட்டை யொழித்துவிடத்தக்க நற்போ
தங்களைப் பெற்று மிக்க பேரன்புகொண்டு துதித்துச் சென்றார்கள்.

கோட்டாற்றுச் செட்டிகள் தெருவிற் பெரியசெட்டியாரான சங்கர
நயினார் செட்டியார் சுசீந்திரம் தாணுமூர்த்தி நடனதரிசனஞ் செய்தற்பொ
ருட்டு உத்தேசித்து வரும்போது சாகிபு அவர்களைக்கண்டு அவர்களின்
திருவாக்கிலுதிக்கும் அமுதமயமொழிகளைக் கேட்டானந்தமுற்று குறித்த
விஷயத்தைவிட்டு மெய்ம்மறந்து இருந்து நெடுநேரஞ் சென்றபின் நட
னதரிசனந் தவறியதைநினைத்து வருந்துவதை சாகிபு அவர்கள் அறிந்து
புன்சிரிப்புக்கொண்டு தங்களிடமிருந்த கவுக்கத்துண்டை எடுத்துத்தூக்
கித் திரைபோல் விரித்து, இதனுள் நீர்நினைத்து வருந்துந் தெரிசனத்
தைக் கண்டுகொள்ளுமென்று காட்டினார்கள். அதைச் செட்டியார்கண்டு
சாகிபுஅவர்களைப் பலவாறாய்த் துதித்துப் பேரானந்தமடைந்துசென்றார்.

மலையாளம் மவுலானா செயியிதுமுகம்மது புகாரி தங்கள் அவர்களிடம்
காயற்பட்டினம் தைக்கா மவுலானா ஹாஜி உமறுஒலியுல்லாசாகிபு அவர்கள்
முரீது பெற்றுத் திரும்புகையில், "உமது நாட்டுக்கடுத்த கோட்டாற்று
ளிருக்கும் ஞானோததிமூழ்கி அருண்முத்தெடுத்த வல்லவரான ஞானியார்
சாகிபுஅவர்களின் பழக்கமும் பத்தியும்விடாது நடந்துவருவீராக" என்று
ஆக்ஞாபித்தனுப்பினார்கள். அவ்விதமாகவே அவர்கள் நடந்துவருங்கால்
ஒருபோது தன்னை மறந்துநிற்கத்தக்க ஜநுபுஎனும் பரவசானந்த சாகரத்
தில்மூழ்கி ஒன்றுந்தெரியாது கோட்டாற்றிலுள்ள திருவாங்கூர் சமஸ்தா
னம் பட்டாளத்து சுபைதாராகிய இஸ்மாயில்சாகிபு வீட்டின்படுக்கைக்கட்
டிலிற்போய்ப் படுத்துக்கொண்டார்கள். அதைக்கண்ணுற்ற அவர்மனைவி
அதிகக் கோபங்கொண்டு இருகைகளையுங் கட்டிப் புளியமரத்திற் றூக்கி
விடுங்கள் என்று கட்டளையிட்டு வேலைக்காரர்களால் அவ்வாறே செய்ய,
அது சாகிபுஅவர்களுக்குத் தெரிந்து விரைவில்வந்து கட்டையுந்தூக்கை
யும் அவிழ்த்துவிட்டு, இது யாரால் நடந்ததென அறிந்து மிக்கசினமு
முற்று அப்படிச்சொல்லியவள் நாவு அடியோடற்றுவிழுமென உரை
க்க, அப்படியே அற்றுவிழுந்தது. அக்காலத்தில் அதை அறிந்தவர்கள்
யாவரும் சாகிபு அவர்கண்மீது அச்சமும் ஆச்சரியமும் பேரன்புமுட்
கொண்டிருந்தார்கள்.

கமுதி முகியித்தீன்பிள்ளை சாகிபுஅவர்களின் பிரகிய மவுலானாசெயியிது
தாமீம் றஹ்மதுல்லாவைப்பார்க்க விருப்பங்கொண்டதை சாகிபு அவர்



கள் அறிந்து, அவர்கண்களையும், கைகளில் இரண்டு அட்சரத்தையெழுதி
அவைகளையும் மூடிக்கொள்ளச்செய்து நீர் ஆகாயமார்க்கமாய்ச் செல்
லும்; எவ்விடத்தில் உமது கால்கள் பூமியில் தங்குகின்றதோ; அந்த
விடத்தில் விழிப்பீராகில் எமது குருமூர்த்தி தரிசனங்கிடைக்குமென்று
சொல்லி யனுப்பினார்கள். அந்தப்படி அவர் செல்லுங்கால் நாம் எவ்வித
மாய் அந்தரத்தில் வருகிறோம் பார்ப்போமென்று விழித்தார். கைகளும்
திறந்துகொண்டது. உடனே தென்காசியையடுத்த மலையிற் கீழேவிழுந்
தார். ஆனால் உடலுயிர்ச்சேதமின்றி நின்று தாம் மத்தியிற் செய்து
கொண்ட பெருந்தவறுக்கு மிகவருத்தப்பட்டுத் திரும்பினார். அந்தச்சங்
கதிகளை சாகிபுஅவர்கள் தங்களிடமிருந்த சீடர்களிடம் அறிவித்திருந்
தார்கள். அதுபோலவே அவரும் தமது ஆசிரியரான சாகிபு அவர்க
ளிடம்வந்து நேரிட்டவைகளைத் தெரிவித்துவருந்த அதற்கிரங்கிப் பின்
னரும் முன்விதித்தபடியே செல்லச்செய்து தமது குருதரிசனத்தைக்
கண்டுமகிழ்ந் தானந்திக்கும்படி காட்டி யருளினார்கள்.

ஒருநாள் சாகிபு அவர்கள் கோட்டாற்று சுலைமான் அப்பாபள்ளியில்
சிலருக்கு யோகஞான முறைகளைப் போதித்துக்கொண் டிருக்கையில்,
அழுக்காறுள்ளசிலர்வந்து, நீவிர் ஞானியான தன்மையாயின் இப்பள்ளி
முன்னிருக்கிற பெருமாள்குளத்து நீரை வற்றச்செய்யும் பார்ப்போமெ
ன்ன, உடனே எழுந்துபோய் அக்குளக்கரைக் கற்படியி லிருந்துகொ
ண்டு வற்றும்படி ஆக்ஞாபிக்கவே வற்றி மீன்களெல்லா வெளியிற் றுள்
ளியது. அதைக்கண் டவர்கள் மகிழ்ந்து வணங்கி பின்னரும் நீரை வெ
ளிவரக் கிருபைசெய்ய வேண்டுமென்றும் தாங்கள் கேட்ட குற்றத்தை
மன்னிக்கவேண்டுமென்றும் இரக்க; அவ்வாறே கிருபைபுரிந்தார்கள்.

கோட்டாற்றில் சாகிபு அவர்களுக்குக் கடன் கொடுத்திருந்த செட்டி
ஒருவன்வந்து, சாகிபு அவர்களிடம் பணம் இல்லாத சமயத்தில் கடன்
தொகையைக் கட்டாயமாய்க் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக்
கேட்க, உடனே சாகிபுஅவர்கள் வீட்டிலிருந்த ஓர் இரும்புத்துண்டைப்
பூவரசிலையில் மடித்துக்கொடுத்து இதை உன்னிருப்பிடம் போய்த் திறந்
துபார்க்கில் கடன்தொகைக்குத்தக்க தங்கமிருக்குமென்று சொல்லி
யனுப்ப அப்படியே அவன் கொண்டுபோய்ப்பார்த்து குறித்தபடி யிருக்
கக்கண்டு மிகுந்த சந்தோஷமாகி யன்றுமுதல் சாகிபு அவர்களிடம்
மிக்க பேரன்பும் பயமும் உள்ளவனானான்.

சாகிபு அவர்கள் ஒருகாலத்தில் கழுகிலிருந்து பிரயாணமாகி வரு
கையில் அநேக ஜனங்கள் தொடர்ந்துவந்து வழியனுப்பிவிட்டு விடை
பெற்றுச் சென்றார்கள். அவர்களில் சாகிபு அவர்களின் சீடர் ஒருவர்
மட்டும்; திரும்பும்படி பலதடவை கூறியும், கேளாது நெடுந்தூரம் பின்
தொடர்ந்து வருவதைக்கண்டு "உமக்கு யாதுதேவை?" என்ன, அவர்

தம் கையிலிருந்த ஒருகண்டி நூலைக்காட்டி "இதுவன்றி எனக்கு வேறுபுகலில்லை, இது கொண்டு எவ்வாறு சீவிப்பேன்? எனக்கொருமார்க்கம் கற்பிக்கவேண்டும்" என்றிரத்தலும், சாகிபு அவர்கள் அந்நூற்கண்டியைத் திருக்கரத்தாற் பரிசித்து "இதை நீ எவ்வளவு அளவு இழைக்கினும் நீட்சிபெறும் அதனால் பெரிய சீமானாவாய், கொண்டுபோ" என்றாக்ஞாபித்தனுப்பினார்கள். அப்படியே செய்து அவர் பெரிய பாக்கியமுடையவராய்ச் சிறப்புற்றுவாழ்ந்தனர்.

ஒருநாளிரவு பூரண நிலவு பிரகாசிக்கையில் களக்காட்டு ஏறுவாடி ஆற்றின்கரையில் சாகிபு அவர்களும், அவர்கள் சீடரிலொருவரான கமுதி விஸ்தீரம் செய்யிது முகியித்தீன் என்பவரும், தனித்திருந்த பொழுது செய்யிதுமுகியித்தீன் என்பவர் "எமது தந்தைதாய்வழிகளில் அவர்கள் முதல் ஏழுதலைமுறைப் பிதாக்களைப்பார்க்கமிக்க ஆவலுடையேனா யிருக்கின்றேன் காட்டியருளவேண்டுமென்று சாகிபு அவர்களைக்கேட்க, அவர்கள் இவர் செவியைப்பிடித்துத் திருகிக்கொண்டு ஆகாயத்தைப் பார்க்கச் சொன்னார்கள். பார்க்குங்கால் தந்தைவழிப் பிதாக்கள் மூவர், தாய்வழிப் பிதாக்கள் ஐவர் சுவர்க்கத் திருக்கக்கண்டு மற்றையரைக் காணவில்லை என்றார். பின்னர் தலையைப்பிடித்து பூமி முகமாய்க் கவிழ்த்திப்பார்க்கச் செய்தார்கள். அப்போது மற்றையர் நரகத்தில் கிடந்து வருந்தக்கண்டேன் என்றார். பின்பு செவியையும் தலையையும் சாகிபு அவர்கள் விட்டுவிட்டார்கள். உடனே செய்யிதுமுகியித்தீன் மிகக்கவலையோடு அழுது, "குருநாயகமே! நரகத்திற் கிடப்பவர்களை நான் தங்கள்பால் தொண்டுசெய்த நிமித்தமாகவாவது அவர்கள் பாவத்தைத் தீர்த்துச் சுவர்க்கத்திற் சேர்த்தாலொழிய என் மனக்கவலையு மழுகையு மொழியா"தென்று வருந்தியதைக் கண்ணுற்று சாகிபு அவர்கள் மனமிரங்கி ஹக்குத்தஆலாவின் திருவருளைக்கொண்டு சற்றுத் தலைகவிழ்ந் திருந்து நிமிர்ந்து முன்போலவே அவர் செவியைப்பிடித்துத் திருகிமேலே பார்க்கச் செய்தார்கள். அப்போது அவர்கள் எல்லோரும் சுவர்க்கத் திருக்கக்கண்டு அதிக மகிழ்வடைந்து சாகிபு அவர்களின் மகிமையையுஞ் செயலையும் வியந்து பணிந்து ஆநந்தமாய்த் துதித்துக்கொண்டனர்.

முன்னர் சேதுபதியோடு கமுதிக்கு வந்திருந்து வெட்டுப்பட்டகையொட்டப்பட்டதைக்கண்ட அவர்மந்திரி, சாகிபு அவர்கள்மீது பேரன்புகொண்டிருந்தவ ராதலால், சாகிபுஅவர்களைத் தரிசிக்கவேண்டுமென்னும் அவாவுற்றுக் கோட்டாற்றுக்கு வந்திருந்தார். அப்போது ஒவ்வொரு அடியார்களும் நினைத்தபடியே சாகிபு அவர்கள் அற்புதம் விளைவிப்பதைக்கண்டு அவர் வான்மீதுலவுஞ் சந்திரனைப்பூமீது பார்க்கவேண்டுமென நினைத்துக்கொண்டதை, சாகிபு அவர்கள் அறிந்து பூமியிலோர் சிற்றைக்கீறி அதனுட் பார்க்கச் செய்தார்கள். அதுகண்ட மந்திரி யள



வில்லாப் பேருவகைக்கடல்மூழ்கிப் பணிந்து பரவி வேண்டுவன பெற்றுத் தம்மூருக்குத் திரும்பிச் சென்றனர்.

இவ்வாறு பல அற்புதாதிகளை நடத்திவந்த நாயகம் ஹஸறத்து மவுலானா ஞானியார்சாகிபு ஒலியுல்லா அவர்கள் ஹக்குத்தஆலாவின் கட்டளைப்படி தங்களுக்கு மவுத்து நாள்நேர்ந்ததை யறிந்து தமது சகோதர சிகாமணியான ஹஸறத்து மவுலானா இளைய ஞானியார்சாகிபு ஒலியுல்லா அவர்களுக் கறிவிக்க; அவர்கள் மனங்கலங்கி துன்பசாகரத்தில் மூழ்கினராக இருக்கக்கண்டு சாகிபு அவர்கள் "நான் உன்னைவிட்டு நீங்கினதாக வெண்ணாதே, நீ நினைத்த வெந்தக் கருமங்களுக்கும் நான் துணையாயிருப்பேன், அணுத்துணையும் பயப்படவேண்டாம்" எனத் தேற்றுதலென்னுந் தெப்பத்திலேற்றி ஒருவாறு தேறுதலென்னுங் கரையைக் காணச்செய்தும், தங்கள் சீடர்கள் அனைவரையும் அழைப்பித்து மேற்குறித்த விஷயத்தைக் கூறலும்; அவர்கள் எல்லாருங் கலங்கி யொன்றுந் தோன்றாது திப்பிரமைகொண்டு "நாயகமே! இவ்வளவுகாலம் அன்னைதந்தையொப்ப அரிய நற்கரும ஞானங்களைப் போதித்து அன்பு பாராட்டி ஆண்டுவந்ததற் கிணங்க, இனி யெங்களைப் பாதுகாப்பவர் யாவர்?" என்று கூவியழுதுநிற்க; சாகிபு அவர்கள் உங்களுக்கு நம்மைப்போலவே சற்குருவாக நமது அநுசரரை நியமித்திருக்கின்றோம் அவர் கற்பிக்குங் கற்பனைகளை மனம் வாக்குக் காயம் மூன்றும் ஒன்றுபட வனுசரித்துத் தவறாது நடந்து வருவீர்களாகில், உங்களுக்கொரு குறைவும் நேரிடாது" என்று பலவித அறிவுறுத்தி தமது திருமுகத்தோடுதம் அநுசரரது திருமுகத்தைச்சேர்த்து ஒருவஸ்திரத்தால் மூடச்செய்து சற்றுநேரம் பொறுத்து இறந்து மூர்ச்சையுற்றிருந்த தம்பியைச் சீடர்களால் தூக்கித்தங்களின் கல்வத்துக்காணவான பாத்திஹாவறையிற் படுக்கச்செய்தார்கள். பின்னர் கொஞ்ச நேரத்தில் தெளிவுற் றெழுந்துவந்த தம்பியைநோக்கி "இன்றுமுதல் யாவருக்கும் நம்முடைய தரீக்கை விளக்கிக்காட்டி தீன்மார்க்க நிலைநெறி வழுவாது ழாஹிறையும் பாத்தினையுமுடைய மெய்ஞ்ஞான தவுஹீத்துகளைப் போதித்து நாம் நடத்திவந்ததுபோல அணுத்துணையுங் குறையாது எங்கும் பரவும்படி நடத்திவருவாயாக" என்று கற்பித்து கிலாபத்து எனுங் குருத்துவசாசன மீந்தருளினதுமன்றி; "யோக ஞானனுட்டானங்களி னிலைகண்ட வல்லவரும் நமது நெறிநிலையாதிகளை யுணர்ந்த நண்பருமான காயற்பட்டினம் ஹாஜி உமறுலெப்பை ஆலிம் சாகிபு அவர்கள் இன்னும் சிலநாளிலிங்கு வருவார்கள். அவர்கள் நட்பைவிடாது கைக்கொண்டு எந்தக்காரியங்களையும் அவர்கள்பாற் யோசித்து நடத்திக்கொள்" என்றும், "நான் வருகிற வெள்ளிக்கிழமை இரவு உபாத்தாகுவேன், அன்றிரவு நீவெளியிற் செல்; அப்போது ஓர் ஒளியுண்டாகி உனக்கு முன்செல்லும்; அதுசென்று அமையுமிடம் எதுவோ? அதை விலைகொடுத்து வாங்கி அதில் நம்மை

அடக்கம்செய்" யென்றும் கட்டளையிட்டுப் பின் நடந்தற் குரியவைக ளைப் போதித்தும், வருவனவற்றை அறிவித்தும் ஹிஜ்ரி கஉ0சுக-ம் வருடம் ஜமாதுல் அவ்வல்மூ கசஉ வெள்ளிக்கிழமை இரவு ஹக்குத்த ஆலாவின் கற்பனைக்குத் தலைசாய்த்து அவனது பரிசுத்த திருச்சமுக சந்நிதானத் தைச் சேர்ந்தார்கள்.

அக்காலத்தி லங்குற்ற உறவினர் சீடர் முதலியோர் யாவரும் வாய் விட்டலறியழுத இளைய ஞானியார் சாகிபவர்கள் "ஆண்டவன் கட்டளை யைத் தடுப்பார் யாவர்? யாரும் உடன்படல் வேண்டியதே, விசனிப்ப தில் பயன்யாது? எனத்தேற்று மொழிகளைச்சொல்லித் தேற்றியபின் னர் முற்குறித்தபடி சென்று ஒளிபோய் அமைந்தவிடத்தை யறிந்து விலைகொடுத்து வாங்கி சாகிபு அவர்களை வேதநெறிப்படி செய்யத்தக்க கிரியைகளைச் செய்துமுடித்து, தாங்கள் "இமாம்" ஆகவும் மற்றையோர் "மஃமூமாகவும்" நின்று தொழுவித்து அத்தலத்தி லடக்கி பாத்திஹா ஓதி முடித்தபின் யாவரும் மனைக்குத் திரும்பிவந்து தஃசியந்து செய்து தத்த மிருப்பிடங்களுக்குச் சென்றார்கள்.

பின்பு இளைய ஞானியார்சாகிபு அவர்கள் தங்கள் சீடர்களுடன் நாற் பதுநாள்வரை செய்யவேண்டிய கத்தம், பாத்திஹா முதலிய கிரிகைகளை நடத்தியபின்னர் சாகிபு அவர்களை அடக்கிய ஸ்தலத்தில் அழகிய தறுகா முதலிய கட்டிடங்கள்கட்டி அவர்கள் சொல்லிய கற்பனையினும் நடத் திய செய்கைகளினும் அணுவளவுந் தவராது பலவித அற்புதங்களோடு தங்கள் நிலை யாவருக்கும் விளக்கிகாட்டி எங்கும் புகழ்ந்து பரவும்படி நடத்தி வந்தார்கள்.

அதுபோலவே அவர்கள் சந்ததியார்களும் இதுபரியந்தம் நடத்தி இகபரசௌக்கிய பரமஞானநித வாழ்வுக்குரியவர்களாக வாழ்ந்து வரு கின்றார்கள்.

* சரித்திரச்சுருக்கம் முற்றுப்பெற்றது.

* ஞானியார் சாகிபு அவர்களின் அற்புதாதி சரித்திரங்கள் இன்னும் பலவுள. விரிவஞ்சி வரைந்திலம். பின்னர் வெளிப்படுத்தப்படும் காரணப்புராண மூலமா யறியலாம்.

ஞானியார்சாகிபு அவர்கள்

மெய்ஞ்ஞானத் திருப்பாடற்றிரட்டு.

# நூற்பிரிவகராதி.


| பக்கம். | பதிகங்கள். | பாடற் றொகை. | பக்கம். | பதிகங்கள். | பாடற் றொகை. |
|---|---|---|---|---|---|
| க | க. ஞானகாரணம் | கூ0க | கசஉ | சகப்பதிகம் | க0 |
| ருக | உ. ஞானநேத்திரம் | | கசங | நகுல்பதிகம் | க0 |
| | பாயிரம் | உச | கசரு | சோதிப்பதிகம் | க0 |
| ருரு | கனியிதழமுதம் அருள்பதிக | க0 | கசஅ | நித்தியசுத்தப்பதிகம் | க0 |
| ருசா | ஞானசாதனம் | க | கரு0 | அஹதில்லாப்பதிகம் | க0 |
| ருகூ | மவுத்தாகாட் பிரார்த்தனைப் | க0 | கருஉ | சமதானவா என்றபதிகம் | க0 |
| சாஉ | ஞானசாகரம் | க0 | கருச | ஹக்குபதிகம் | க0 |
| சாரு | முப்பொருட்பதிகம் | க0 | கருசா | சொருபப்பதிகம் | க0 |
| சாகூ | ஞானசேகரம் | கஉ | கருஎ | நப்பில்அலமீன்பதிகம் | க0 |
| சாஅ | மாயமாற்றுபதிகம் | சா | கருஅ | பூரணசின்மயப்பதிகம் | க0 |
| சாசா | வாலைப்பதிகம் | சா | கசாச | நஹ்மான்பதிகம் | க0 |
| எச | அருள்வாய்பதிகம் | க0 | கசாஉ | மயில்ஹாமீம்பதிகம் | க0 |
| எரு | இருக்கேனென்றபதிகம் | க0 | கசாரு | முஹம்மதுபதிகம் | க0 |
| எஎ | அருள்வாய்நீயேஎன்றபதிக | க0 | கசாசா | நபிநாயகப்பதிகம் | க0 |
| எஅ | மக்காறுறைபதிகம் | க0 | கஎச | சொருபானந்தப்பதிகம் | க0 |
| அக | அணைவாயே என்றபதிகம் | க0 | கஎஉ | அஹதில்ல ஹ்மூதுபதிகம் | க0 |
| அஉ | எழுந்தருள்புரிவாய் என்றப | க0 | கஎச | மஹ்மூதுபதிகம் | க0 |
| அச | ஞானபூரணம் | ரு0 | கஎரு | பலசுத்தப்பதிகம் | க0 |
| கூச | அழுந்துவைநீயே என்றபதி | க0 | கஎஎ | வில்லாஹிபதிகம் | க0 |
| கூகூ | ஞானதாரகம் | ருச | கஎகூ | ந. ஞானப்பஃறொடை | |
| க00 | அருளெனக்கோவே என்றப | க0 | உ0கூ | ச. ஞானஅம்மானை | அகூ |
| க0உ | அழைத்திடென்கோவே | க0 | உகஎ | ரு. ஞானந்நவடி விளக்க | சஉ |
| க0ரு | மவுஜூஆதீ என்றபதிகம் | க0 | உகூஎ | சா. ஞானத்திருநிதானம் | க0ச |
| க0எ | அல்ஹம்து லில்லாஹி என்ற | க0 | உருஉ | எ. ஞானத்திருப்புகழ் | க0 |
| க0அ | ஹக்கானவனே என்றபதிக | க0 | உருக | அ. ஞானவேதாட்சரவநக் | கூச |
| க0கூ | வந்தாள்வாயே என்றபதிக | க0 | உககூ | கூ. ஞானப்பிள்ளைத்தமிழ் | |
| கக | வெளிபாக்குமென் சோதிப | க0 | ,, | செங்கீரைப்பருவம் | சா |
| ககூ | அமரர்மாமணிப்பதிகம் | சா | உசாரு | தாலப்பருவம் | சா |
| கசா | வந்தருளுமென்சோதி என் | சா | உசாசா | சப்பாணிப்பருவம் | க0 |
| ககஅ | காரணப்பதிகம் | க0 | உஎச | முத்தப்பருவம் | க0 |
| கககூ | பூரணப்பதிகம் | க0 | உஎகூ | வருகைப்பருவம் | ரு |
| கஉஉ | வாரும் நாயனேஎன்ற | க0 | உஎஅ | சிற்றிற்பருவம் | சா |
| கஉச | ஹாமீமுஹம்மதுபதிகம் | க0 | உஅகூ | சிறுபறைப்பருவம் | க0 |
| கஉரு | அருள்ஹாமீம்பதிகம் | க0 | உஅஎ | சிறுதேர்ப்பருவம் | கூ |
| கஉஎ | ஹாமீம்பதிகம் | கஉ | உஅகூ | க0. ஞானத்தும்மீ | உகூ |
| கஉகூ | நாமீமென்நாசீன்பதிகம் | க0 | உகூச | கக. ஞான அந்தாதி | கசா |
| கஙக | நாசீனருள்நாமீம்பதிகம் | க0 | உகூஎ | கஉ. ஞானஅநுபவவிளக் | சஅ |
| கஙஉ | தேனமுதருளும் என்றபதி | சா | உகூகூ | கங. ஞானஅனந்தம் | கச |
| கஙரு | ஹல்லாஜென்பீரோஎன்றபதி | அ | ஙூ0க | கச. ஞான ஏகாதசம் | கச |
| கஙசா | யாசீன்ஹாமீமென்ற ஒருபா | கஎ | ஙூ0ங | கரு. ஞானந்தேவாரம் | உஉ |
| கஙகூ | ஹூவிலில்லாவென்ற ஒருபா | கஎ | ஙூ0சா | கசா. ஞானவிண்ணப்பம் | |
| கசக | உறங்கியுறங்கா திரு என்றப | க0 | ஙூக0 | கஎ. ஞான ஆனந்தத்துதி | |

| பக்கம். | கீர்த்தனைகள். | பாடற்றொகை. | பக்கம். | கீர்த்தனைகள். | பாடற்றொகை. |
|---|---|---|---|---|---|
| ௩௧௯ | ௧௮. ஞானவாழ்த்து | | ௩௪௬ | தாறுரோதர்தை | ௩௪ |
| ௩௨௦ | ஞானத்தாமிர்தம். | | ௩௪௭ | ஆரைகம்பினுனும் | ௩௫ |
| ,, | ஏழைக்கிரங்கியருள் | ௧ | ௩௪௮ | கண்ணின்மணிபோல் | ௩௬ |
| ௩௨௧ | ஏழைதனக்கிரங்கிமுகம் | ௨ | ௩௪௯ | உன்றூற்படுந்துயரா | ௩௭ |
| ,, | என்னைரட்சித்தாட் | ௩ | ௩௫௦ | என்னுகமிகாடி | ௩௮ |
| ௩௨௨ | ஏழையேனென்னையாட் | ௪ | ௩௫௧ | என்னமோவருகுதுயிர் | ௩௯ |
| ௩௨௩ | ஏழையென்மலக்கர் | ௫ | ௩௫௨ | அன்னமேயென்றுயரந் | ௪௦ |
| ௩௨௪ | ஏழைதனைரட்சித்தாளு | ௬ | ,, | மனந்தினந்தினந்து | ௪௧ |
| ,, | ஏழையான்செய்தகுற்றம் | ௭ | ௩௫௩ | சொல்லடிபெண்ணே | ௪௨ |
| ௩௨௫ | பாலன்செய்தபிழையை | ௮ | ௩௫௪ | மருவிக்கலந்திருந்த | ௪௩ |
| ௩௨௬ | பாதந்தந்தெனை | ௯ | ௩௫௫ | அஞ்சிதாஞ்சித | ௪௪ |
| ,, | அடிமைதனைரட்சித்தாட் | ௧௦ | ௩௫௬ | ஆனந்தமாம்பெண்ணே | ௪௫ |
| ௩௨௭ | மனத்துயரம்மாற்றி | ௧௧ | ௩௫௭ | கருதியென்னுள்ள | ௪௬ |
| ௩௨௮ | பகையறுத்தாட் | ௧௨ | ௩௫௮ | அன்னமேயெனக்கன்புக் | ௪௭ |
| ௩௨௯ | ஒருபோதாகிலும் | ௧௩ | ௩௫௯ | உன்னைக்கண்டென்றுவி | ௪௮ |
| ௩௩௦ | இத்தவறுமை | ௧௪ | ௩௬௦ | பாலனைப்போல் வர்தடிமை | ௪௯ |
| ௩௩௧ | குணைக்கறுத்தென் | ௧௫ | ,, | அம்மாநான்பட்டதுயரம் | ௫௦ |
| ,, | முகக்கிருபையருள் | ௧௬ | ௩௬௧ | ஆஞ்சதாலெழு | ௫௧ |
| ௩௩௨ | என்றைக்குக்காண்பேனே | ௧௭ | ௩௬௨ | மருவினவாசை | ௫௨ |
| ௩௩௩ | வரவரவேணும் | ௧௮ | ,, | ஆசைக்கடற் | ௫௩ |
| ௩௩௪ | வருவீர்வருவீர் | ௧௯ | ௩௬௩ | ஆசைபெருகுதென் | ௫௪ |
| ௩௩௫ | அசத்தாவுங்கொண்டு | ௨௦ | ௩௬௪ | அணைத்தெடுத்தது | ௫௫ |
| ௩௩௬ | திருட்டைவெளியி | ௨௧ | ௩௬௫ | மையல்பெருகுதென்னையா | ௫௬ |
| ௩௩௭ | தனிவழிபோகிற | ௨௨ | ௩௬௬ | மையலாசைவெள்ளம் | ௫௭ |
| ௩௩௮ | கண்ணடிவெளி | ௨௩ | ௩௬௭ | வாசிவலம்புரியி | ௫௮ |
| ௩௩௯ | என்றன்குருவே | ௨௪ | ௩௬௮ | ஆரிஞ்சரத்தில்நட | ௫௯ |
| ௩௪௦ | எத்தவிதம்வருமோ | ௨௫ | ,, | அசிபதப்பொருள | ௬௦ |
| ,, | ஒருச்சாமவேளை | ௨௬ | ௩௬௯ | செப்படிசங்கா | ௬௧ |
| ௩௪௧ | உள்ளமுருகுதென்பீர் | ௨௭ | ௩௭௧ | ஏதுக்குமயங்குறாய் | ௬௨ |
| ,, | மனதுருகுதென்பீர் | ௨௮ | ௩௭௩ | மயங்காதேமனமே | ௬௩ |
| ௩௪௨ | இன்றைக்குகாண்பேனே | ௨௯ | ,, | மனமேமயங்காதே | ௬௪ |
| ௩௪௩ | இருமுக்கண்டபோதென் | ௩௦ | ௩௭௪ | ஒருநாழிகைநேரம் | ௬௫ |
| ௩௪௪ | கண்டேனென்பீர் | ௩௧ | ௩௭௫ | இருந்ததுமதிவிதமோ | ௬௬ |
| ,, | அதுவல்லோமருந்து | ௩௨ | ௩௮௦ | என்னையுங்கின்பதந் | ௬௭ |
| ௩௪௫ | வாதசித்திதாரும் | ௩௩ | ௩௮௩ | ஞானமன்றாட்டம். | ,, |


ஞானியார் சாகிபு அவர்கள்பேரில் ஏற்பட்ட பிரபந்தங்கள்.


| | பக்கம். |
|---|---|
| திருக்கோட்டாற்றுக் கலம்பகம் ... ... ... ... | ௧ |
| தோத்திரப்பா ... ... ... ... ... | ௨௯ |
| பிரானமஞ்சரி ... ... ... ... ... | ௩௨ |


ஹு ா மீ ம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஞான காரணம்.

## கடவுள் துதி.

அறுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

பூரணம் நிறைந்து பொங்கிப் புகழொளி மணிய தாகிக்
காரணம் நிறைந்து நின்றங் கருத்துறு கிருபை பொங்கி
ஆரணம் மறைநூல் வேதத் தருமுறை தனக்கு மூலச்
சீரனத் திறசூல் தம்மைச் செவ்வென வமைத்தான் வல்லோன். (௧)

வல்லவன் கிருபை மூல வகையினுக் கெட்டா நாதன்
நல்லவன் வாச முத்தாய் நலத்துறு முயிர்கள் யாவும்
செல்லவன் நிறைந்து பொங்கித் திருமல ரலர்ந்த தேனில்
தில்லுறை யிறசூல் தாமுந் திருவுறை ஜெயங்கொள் முத்தாம். (௨)

முத்தெனுங் கிருபை மூன்றாய் முளைத்துமுச் சுடரு மாகிச்
சித்துறத் திரண்டே யேழாய்த் திருவடி ரூப மாகிக்
கொற்றகோ ணகத்தி னேழுங் கோலுந்தா ணகத்தினேழும்
வத்துவா ணகத்தி னேழும் வகைப்படி காண லாமே. (௩)

காணுறு மிறசூல் தோழர் கருத்துறு நால்வ ரோடு
வானுறு பாத்தி மாதம் மதலையா மிருவர் தாமும்
தேனுறு மிவர்கள் பாதஞ் சிந்தையிற் றெளிந்தே யெந்தம்
ஊனுறு முளத்தில் வைத்தே யுயர்பதஞ் சிரமேற் கொள்வாம். (௪)

## அவையடக்கம்.

கொள்ளுவார் மனதில் நீதி குறித்திடும் பொருளினாலே
விள்ளுவே னடியே னுன்றன் விதிதிரு வருளை நோக்கி
வள்ளலாம் பெரியோர் பாடல் வானுறு மண்ட மாநேர்
கொள்ளலாம் சிறியேன் பாடல் குக்குடத் தண்டம் போலாம். (௫)

போலவே சிறியேன் பாடற் பொருளினை யறிந்தோர் தாமும்
ஞாலம துள்ளோ ருக்குள் நான்மறை படித்தோர் தாமும்
சாலமற் றறிந்து ஞானத் தருமல ரமுதுண் போரும்
கோலமா மடியேன் சொல்லிற் குறைதவிர்த் தருள்செய் வாரே. (௬)

## நூற்காரணம்.

செவ்விய விறகு ஞல்லா திருவுரை சிறந்த ஞானம்
அவ்வினுக் கடங்கா தங்க ணமைத்துவைத் தாளுங் கோமான்
நவ்விடத் தெழுந்து நின்ற ஞானதோத் திரத்தை யுன்னிக்
கவ்விய மனத்தால் ஞான காரண முறைசெய் வாமே. (௭)

உரைத்திடுஞ் சார்வு மூலத் தொளிவுறு நாத விந்து
விரைத்திடும் வேத சால நபிஅலி தமக் குரைப்பார்
சிரத்தொடு புகுந்து மேலத் * திசையிரண் டெழுத்தின் சத்தம்
உரத்தொடு புக்குமென்றே யுரைத்தன ருண்மை யாலே. (௮)

உண்மையாம் யாற சூலே யுரையரு ளுருப்ப டும்பாற்
செம்மையாம் ஷரீஅத் தெங்கே திருவருள் செய்வீ ரென்ன
வெண்மையா மூல நாதம் விரையவே யோடல் தானும்
வண்மையா யிருத்தல் புக்கல் வளமது ஷரீஅத் தாமே. (௯)

ஆமென வுரைத்தி ரந்த அசைவுறு ஹறுபை விள்ளும்
ஓமினி யுரைக்கக் கேளும் ஒருவனை யறிய வென்றால்
வாவினி யறிவோ ருக்குள் வல்லவன் குத்து நீண்டு
பூவினில் நிறைந்து பொங்கும் பொருளது அலிப தாமே. (௧௦)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியச் சந்தவிருத்தம்.

அலிபெனு முற்பன மாகவு ரைத்தவ ருந்திரு வப்பொருளைப்
பொலிவெனு மன்னிற சூல்தெள ஹீதுபு கழ்ந்துரை செய்யுமதால்
அலியொலி யுல்லா வதனைம னத்துற வாய்ந்துரை யைப்பெற்றோ
ரொலியருள் ஞானத் தோத்திர மதனை யுரைத்திட வுன்பரமே. (௧௧)

## சிறப்புப்பாயிரம்.

அகத்தி லுறும்பொரு ளானதை யுள்ளி லறியபு பக்கர்மகிழ்
செகத்தில்வல் லோனரு ளானவுஸ் தாது தெளிவுரை பெற்றபைதல்
பகுத்தறி சாஸ்திர வேதமு றைப்பயன் பார்த்தறிந் தும்மறியேன்
முகியித்தீன் மனுக்கு முதலியா னிந்நூல் விரித்துரை செய்தனனே. (௧௨)

## நூல்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியச் சந்தவிருத்தம்.

வல்லவன் முத்திரை யாகும துக்குள்வ ரம்முறு மன்னிறசூல்
சொல்லுரை யானது கேட்டலி தாமுமே சொல்லுவ ரும்பனமாய்
நல்லவ னத்திடை மீதுறப் பாய்ந்தது நல்ஷரீ அத்தெனவும்
அல்ல லுறும்பொரு ளானது மேதினி யப்பதி மாய்கையிலே. (௧௩)

* திசையினின் றெழுந்தசத்தம் என்றுஉம் பாடம்.



மாய்கையு மூன்று வடிவென நின்று மலர்ந்து நிரம்பினதால்
சாய்கையு மோர்புறந் தன்னிலுறைந்து தரித்தும றைந்ததுவாம்
ஆகவு ளத்தி லிருந்தது மச்சுட ரவ்வன மீதினிலே
வாகுயி ரின்னள வாகநி றைந்தது வாழ்தரீக் கத்ததுவாம். (௧௪)

மூன்றினி லொன்றுமு றையுட லாகமு திர்ந்துருப் பட்டதுவாம்
ஆண்டவ னென்றைய தற்குளிற் பாவைய தாகவு மாட்டிடுவான்
நான்றது மிந்தந லத்துறு பாவையே நல்ஹகீ கத்தாகும்
பூண்டது பூரண முள்ளுற நின்று புதைந்தது பொற்பொருளே. (௧௫)

பொற்பொரு ளானது பூமலர்த் தேனிற் பொருந்தியு ருண்டுருவாய்
அப்பரி தானஜ லத்துறு கோர்வை யகத்து ளமர்ந்ததினால்
சொற்பெரி தாகவி ரண்டு ஹறுபுது னுக்கென நின்றதுகொண்
டுட்பரி வாகவே யொன்றதிற் கூடியு ரைத்திட வுற்றதுவே. (௧௬)

உற்றது மப்பொரு ளுற்பன மூன்றுமு ரைத்துரு வானதினால்
தத்தற ரண்டு ஹறுபஃ துள்ளில் தரித்துயி ரானதுவாம்
பத்துற வொன்றுப துங்கிய தற்குள் பழம்பொரு ளாகுமதைச்
சித்துறக் கண்டு தெளிந்திடு வோர்க்கிது செப்பிடி லுட்பொருளே. (௧௭)

பொருளது வென்ற துயிர்க்கிடை நின்று பொருந்திய தெப்படியோ
இருள்வெளி யோடு கலந்து மிருந்து மிசைந்திடும் வாறதுபோல்
மருளற வுச்சி மலர்ந்து குவிந்து வருந்திய தேனதுதான்
அருளுற வஞ்சிலங் கொப்பட வொன்றே யனைத்திலும் நின்றதுவே. (௧௮)

நின்றநி லஞ்சு நிறம்மென வுற்றுநன் னேரதுக் குள்ளுருவாய்க்
கண்டநி லஞ்சு கலந்துற விம்மிக் கருவுரு வானதினால்
அண்டமும் பிண்டமு மாக நிறைந்தே யாகிடு முள்ளறையின்
மண்டல மஞ்சிலு மஞ்சு சுழித்து வளர்ந்தது வாசியதே. (௧௯)

வாசியெ னுந்திரு வாசிதி யங்கிய வல்லப மொன்றதனில்
தேசிய தெங்குந் திருநடங் கொண்டு திரும்பும் வலம்புரிக்குள்
ஆசு மெழுந்திட ரண்டையு மொன்றினி லாக்கிய வல்லவர்கள்
பாசியெ னுந்திரை யற்றிட வந்தப் பதத்தையுங் காண்பவரே. (௨௦)

கலி விருத்தம்.

காண்பவ ரிறையருள் கலங்கி டாதுளில்
ஆண்பல நூல்களு மகற்றி யன்புறத்
தான்றிரு வாசியுட் டரித்து நின்றதைக்
கோனிது வாமெனக் குறித்துக் கொள்வராம். (௨௧)

கொள்வரா மனதினிற் குறித்து நின்றதைக்
கள்வராய்த் திருடியே கருத்தைத் தேற்றுவார்
நள்வரா நடுவினில் நாதந் தன்னிலே
விள்வரா மொன்றையும் விரைய நோக்குவார். (௨௨)

நோக்கியஞ் செழுத்தினை நுவலும் போதந்த
நாக்கிலோ ரெழுத்தினை நடுவென் றேயறி
வாக்கிலுற் றினித்திற சூல்அ ஷிக்குளா
யாக்கின பொருளைக்கண் டவர்மெய் யென்றதாம். (௨௩)

என்றவ ருரைத்ததி லேக போகமாய்க்
கொண்டவ ருள்ளறைக் கோண மாறென
விண்டன ராறையும் விளங்க வுள்ளினிற்
கண்டவ ருரைத்தனர் ஹக்கென் றுண்மையால். (௨௪)

உண்மையாம் பன்னிரண் டெழுத்தை யோங்கியே
தண்மையாம் மூன்றுமூன் றுறுந் தள்ளியே
வெண்மையாம் ரண்டுமுன் ரண்டு பின்னதாய்
நன்மையாம் நடுப்பட ரண்டை யோங்கிடே. (௨௫)

ஓங்கியே * நின்றவுள் ளறைக ளாறிலும்
வாங்கியே விழிதனை மலர்ந்து நோக்கிடு
தாங்கிய வோரறை தனித்த வாசலில்
தூங்கிய போதினிற் சொல்லக் கேளினி. (௨௬)

சொல்லுவ னுற்பன சூட்சி யாறிலும்
வல்லதி லோரறை வாசல் விட்டிடும்
நல்லதில் ஜலால்ஜமால் ரண்டுந் தோன்றிடுந்
தில்லினை மறித்துமுன் திருத்தி யேற்றிடே. (௨௭)

ஏற்றிட வேற்றிட வெவ்வையுங் கண்டிடும்
மாற்றிட மாற்றிரண் டாமறை வாசலுந்
தோற்றிடத் தோற்றிடுஞ் சொல்லொண் ணப்பொருள்
பார்த்திடப் பார்த்திடப் பார்வை மழுங்குமே. (௨௮)

மழுங்கிய வாறு வகைமா யிரங்கதிர்
தழங்கித் தளதளத் தாவுஞ் சொரூபமாம்
விளங்கிய பேரை விரித்து முரைத்திடில்
முழங்குமுச் சுடரினில் முன்சுட ராகுமே. (௨௯)

* நிறைந்த வுள்ளறை என்றூஉம் பாடம்.



வேறு.

முன்சுட ரொன்றுள் முறைச்சுட ராறும்
பின்மல ருண்ணும் பெருத்த வறைக்குள்
முன்னறை யுள்ளின் முறைஅலி பாகும்
பின்னறை தன்னிலே பேசிட லாமே. (௩௰)

வேறு.

ஆமெனு மூன்று மறையரு ளைக்கேள்
தாமெனு மாறிற் றரித்தசுட ரொன்று
போமெனு மந்தப் பொருளையும் பார்த்திடில்
ஆமெனு மிந்த வறையிலி தங்கேள். (௩௧)

கலிச்சந்தவிருத்தம்.

இதங்கேளுனா மொழியானதை யிருவாசியி னிடையில்
உரந்தான்வரும் ஹறுபானதை யுரையாமலு ளுணாக்கச்
சிரந்தான்பனி ரண்டானதில் திருவானது மூன்றும்
பதந்தான்வரு மறைவாசலிற் பரிவாம்அஹற மதுவே. (௩௨)

மதுமாமலர் திருவாசலில் வடிவானது தீபம்
அதுதானிரு கண்ணுல்வெளி யதையன்புற நோக்கில்
திருவாம்பொருள் சுடரானது தீபம்மது போலப்
பருவத்தினில் நிற்கும்பொருள் பரிவாமொரு ஹறுபே. (௩௩)

ஹறுபானது தன்னைமனக் கண்ணுடியி னாக்கி
மறுவானது மறவேகுரு மலர்த்தாள்திரும் பணிந்தே
சறுகாமலுள் ளறையானதில் தாவும்பத நாலாம்
உறுமாமல ரறைவாசலி லொளிபார்த்திட நோக்கே. (௩௪)

நோக்கும்படி யிருவாசியை நுனிநதாவியுள் மறித்தே
ஆக்கும்மிரு ஹறுபானதை யனையாமலுள் ளடைத்துத்
தாக்கும்படி தீபத்தொளி சதுர்நாடிய தாகும்
ஏய்க்குங்குரு வருளாற்குறித் திருமாளிகை பாரே. (௩௫)

பாரோயுயர் வான்ருமனா பரிவாமிருப் பிரன்மேற்
சேரோயிரு மலரானது திசைநாலுடும் பாய்ந்து
வாரோயொரு ஹறுபானது வலப்பாகமின் னுறைவாய்
நேரோயொரு ஹறுபானதை நெகிழாமலுள் மகிழே. (௩௬)

மகிழும்படி யதன்பேரிறை வடிவானது மன்னு
புகழும்ஹறு பதன்பேருரை புகழுற்றிட நீளும்
இகழும்மிக மூதேவரு மிதையன்புற வுளமில்
அகழுந்திரு வாசல்விடு மஞ்சாமறை யருளே. (௩௭)

அருளானது மஞ்சாமறை யவ்வாசலின் மீதே
இருளானது வெகுகோடிவந் திதமாகவே மறைக்கும்
பொருளானமெய்க் குருவாலுனிப் புனல்தாவிட விருள்போய்
உருளத்திரு வருளானது முயர்வாமிரு விரன்மேல். (௧௮)

மேலாமொரு வறைவாசலில் விளைவாமிரு விழியால்
மாலானதி லுறநோக்கிடில் வடிவாமொரு கோடிக்
கோலாகல வொளிவானது குறிமூமதி யொளிபோல்
ஏலாய்வரு மவ்வாசலி லியல்பாகுமோ ரெழுத்தே. (௧௯)

எழுத்தென்றது லாமென்றுய ரிடப்பாகமோர் ஹேயும்
அழுத்தாமலட் சரமாறையு மறிந்தாலது வேது
சுழித்தாலுளை கௌஸைனெனச் சொல்வாமதன் சூட்சி
பழுத்தேவரு நினைத்தாலது பசிக்காமென விண்டார். (௨௦)

அறுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

விண்டிடுங் குருமெய்ஞ் ஞானம் விளம்புவ தேதோ வையா
அண்டிடு மாட்ட மெல்லாம் ஆறறை வகையுஞ் சொன்னீர்
கன்றிகொள் பதமு மென்னுள் நடம்புரி நாதன் தானுங்
கொண்டிடுங் குருவே யையா குறித்தருள் செய்கு வீரோ. (௨௧)

செய்குவீர் பஞ்ச பூதத் திருத்தமுந் தலங்கள் தாமும்
வைகுரு பதமு முள்ள வகைகளும் விளம்பு மையா
கைகமழ் மலரி னுள்ளே நடம்புரி வகையுஞ் சொல்வீர்
கைகரத் தெழுந்த ஞான கருமமு முரைசெய் வீரோ. (௨௨)

உரையென வுரைத்து நின்ற வுறுதியில் மகனே கேளு
திரையெழுந் தலையாய்ச் சுற்றுந் திருப்பத முறையே தென்றல்
கலமலர்த் திடம்புரிந்து நடுவணை தன்னில் நாதம்
அலைகடல் விளைந்தாற் போல வதிரொலி யழுந்துந் தானே. (௨௩)

அழுந்துமத் தலத்தின் மீதி லாடியே லிங்க வென்ன
எழுந்தது மனைக்குள் நின்றே யில்லமுஞ் சத்த மென்னே
குளிர்ந்தவத் தலத்திலுள்ள குறியெனும் பிறிதி யென்றே
களர்ந்தகா ரணங்கள் நான்குங் காண்பவர்க் குரைத்த வாறே. (௨௪)

வாறெனுஞ் சுழித்து நின்ற மறுவொரு தலத்திற் கேளு
கூறெனுஞ் சத்த மிட்ட குருபர னெழுத்தி ரண்டாம்
விறெனு முச்சு டர்க்குள் விளைவொரு சுடர்தா னிற்குந்
தேறுமத் தலத்தின் பேரைச் செப்பிடின் முகைய தாமே. (௨௫)



ஆமெனு மூன்று பாழி லதுவொரு பாழே யாகும்
ஓமெனு மத்த லத்தை யுரைத்திடிற் பேய ராகும்
நாமெனு மெழுந்த சோதி நாதனைக் கண்டோர்க் கெல்லாம்
வேமெனு மண்டத் துள்ளே மெய்யுரை கண்ட மாமே. (௨௬)

கண்டங்கண் ணடி யாகுங் கருத்தினுந் தெளிந்த பேர்க்கு
மண்டலம் மூன்றுங் கேளே மாருதி யணையின் மேலே
எண்டல மெங்குஞ் சுற்றி யேகமாய்த் திரும்பிப் போந்து
குண்டது போல் விளைந்து குறியினி லிருக்கு மென்றே. (௨௭)

குறியினி லிருந்து ஞானக் குருபரன் தீப மாகி
யறிவினுற் றெழுந்து வந்த மாருதி யணையின் மேலே
மறுகியுள் ளடைந்து பொங்கி வருங்கதி ரெட்டு மந்தச்
சிறுமலர் நிமிர்ந்த தற்குட் செயப்படத் தெரியு மென்றார். (௨௮)

செயப்படத் தெரியு மன்று செப்புமத் தலத்தின் மீதில்
வயப்படு முறையி னாலே மருவிரண் டெழுத்தை நோக்கில்
நியப்படுங் கிருபை யுண்டாம் நிமைக்குமுன் பொருளுங் காணுந்
தயப்படும் பஞ்ச பூதந் தன்னையுங் காண லாமே. (௨௯)

காணலாம் விந்து நாதங் கருதிய நினைவு தானுந்
தோணவே பதங்கள் தானுஞ் சூட்சமா மண்டங் காணும்
பாணெலாம் பிராண வன்தான் பருகியோ ரெழுத்தைப் பார்த்தால்
பூணலாம் பூர ணத்திற் பொருந்தலாம் பொருந்த லாமே. (௩௰)

எழுசீர்க்கழில்நெடிலடி யாசிரியச் சந்தவிருத்தம்.

பொருந்த லாமுனது பூர ணத்துறை பொருள் மனத்துற வறிந்திடில்
திருந்த லாமரிய ஞான குருபரன் செப்பு மப்பொருளி னுட்படில்
வருந்த லாந்திருவின் வாறு நாவினிடை மந்தி பத்திலருள் முத்தியை
அறிந்தி டாதறகு மானை நின்னுமொழி லாறுநாவி லொன் றறிந்திடே. (௩௧)

அறிந்தி டென்ற பொரு ளானவத்தப் பரம தாயுறைந் துவரு மங்கனே
செறிந்து நின்றதிரு நாம மேதென்றே செப்பி லஞ்சிலொன் றுகுமாம்
அறிந்த நாதபெரி யோர்கள் கண்டதை யகத்தி லன்புற நினைத்துமுள்
மறிந்து நின்றதிரு வானிடைக்கு ளிதை வைத்து வன்புற வருத்துவார். ()

வருத்து வாரிதனை வல்ல பத்தியொடு மாறிடா மனது கூறிடத்
திருத்து வாரதிக செயலி தாமெனவே சேர்ந்து முள்ளுற மகிழ்ந்துதான்
கருத்தி னோடு கரு மத்தை வைத்திடக்கனத்தை நாவிலுற வாக்கியே
பொருத்து பூரணநி லைத்த வட்சரப் பொருட்டி னுளில் மருட்டுவார்.

மருட்டு வாரதிக ஞான மெய்ப்பொருளை மாசிலா மனம தானதுள்
உருட்டு வாரறிவு வுச்சி மீதினிடை யோடிவார வமு துண்டுதான் [தை
திரட்டு வார்கடைவு வெண்ணெய் போலவருள் செய்த ஞானசெய லான
யருட்டு வார்கள்வரு கால னைக்கடந் தப்புறத்து நிலை யாகுவார். (௫௪)

ஆகு வாரதிக ஞானவாசி யிடை யந்த ரத்தில்வரு ரண்டையும்
பாக மாமதிக மான நின்பொருள் பரத்திலே யதிக பாசமாய்
ஏக ஞானவொளி வான வாசியிடை யேறிரண்டி னிடை யொன்றினில்
தாக மோகமது வாகும் ஹக்கனைத் தானறிந் துளில் தரித்ததாம். (௫௫)

அறுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

தரித்திடு மனத்தி னுலே தாவிய சொரூப மாறில்
விரைத்திடுங் கமல நாதம் விளங்கியுள் ளடைந்த தேதோ
வரைத்தடங் கடந்து நின்றன் மாருதி மலர்த்தா ளுன்னி
நிரைத்ததோர் பரண மேல்பால் நிற்குமே சிரமேற் கீழ்பால். (௫௬)

நேரிசைவெண்பா.

சித்தாந் துணையைத் தெளிந்துவர வங்கென்று
வைத்தாரோ மேல்பால் வடக்காக - அத்தனிலை
கண்டவரும் ஹக்காவார் காணுதோர் காரணத்தைக்
கொண்டவரும் ஹக்காவார் கூறு. (௫௭)

கூறிவரும் ஞானக் குருபரனே நின்னுளமில்
மாறிடா தந்த வகைகண்டால் - தேறிவருஞ்
சத்தத்தைக் கண்டவர்கள் தானவனு கும்மெனவே
உற்றநபி சொன்னு ருகந்து. (௫௮)

எழுசீர்க்கழில்நெடிலடி யாசிரியச் சந்தவிருத்தம்.

உகந்து நின்றதிருச் சொருப மூன்றினிலை யுற்ற தொன்றுநம துடலினிற்
புகழ்ந்து நின்றததி லொன்று கேளுமது பொங்கு சிவனள வாகுமாம்
மகிழ்ந்த வாயுவுன துள்ள மாமலரின் மகிழ்ந்து நின்றதொரு வண்ணமாம்
இகழ்ந்தி டாததையு கந்து கொண்டிடுதி லேக னம்முளி லிருப்பனே. ()

இருப்ப னென்றுரையு ரைத்த ஞானகுரு வேயெனக் கினம் விளம்புவீர்
மருப்ப மாகுமன மான ஞானவொளி வாறுகே ளினமும் விள்ளுவேன்
இருப்ப மேவிய வெழுத்த தானதிற லேக ஞனதிரு மந்திரம்
உருப்ப மாகவெழு தலம தஞ்சகடங் தோடு மவ்வெழுத் தறிந்திடே. ()

அறிந்தி டென்றகுரு வேயெனக் கினமு மருள்செய்தீ ரதுவு முன்மைகா
செறிந்த ஞானகுரு வேபல வகையுஞ் செப்ப மானவகை செப்புவீர்[ண்
மறிந்தி டாதுளமில் வன்னி கால்களற வைத்த வல்லதொழில் வாறுகேள்
முறிந்தி டாதது முறிந்த தாலிறைவன் முன்னி லும்பலவு மமைசெய்தான்.



செய்த வாறுவகை செப்பி னீரினமுஞ் செப்புவீருள மகிழ்ந்து தான்
நய்த வாறுபல வகையும் யோனிகளும் நண்பர் தோற்றமுயி ரானதும்
பொய்த லாததுவு மெய்த லாகிடவே புகழும் வல்லவனுந் தாக்கமில்
உய்த காலமதி லுயிர்கள் யோனிவகை யுத்த ரத்தினிலுண் டானதே. ()

எண்சீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

உண்டாகு மென்றுரைத்த குருவே யின்னம்
உரைத்திடுவீர் யோனியுடை யிலக்க மேது
நன்றாக வுயிர்தோற்ற மிலக்க மேது
நாதகுரு வேயுரையை நவில்வீ ரையா
அன்றாகி யமைத்தவகை யோனி நாலும்
அதற்குள்ளே தோற்றமுயிர் வகையா மேழுங்
கண்டதனு லுரைத்துவைத்தோ மறிவோ ருக்கே
ஹக்கனருள் கால்வன்னி கமலந் தானே. (௬௩)

கமலமென வுரைத்துவைத்த குருவே யையா
கட்டுரைத்த யோனிவகைப் பிரிவைக் காட்டும்
விமலமென வுறைந்திருந்த பூவின் வாசம்
விரையெனவுள் ளுயிர்வகையேழ் பிரித்துக் காட்டும்
அமலமென விருந்ததுயிர் வோவை யண்டம்
அதிகவிரை விந்துவகை யோனி நாலாம்
பமலமதிற் பறவையொடு நாற்கா லூர்வப்
பால்வாழ்தா பரந்தேவர் மனுட ராமே. (௬௪)

ஆமெனவே யுரைத்தவகை யறிந்து கொண்டேன்
அதிகமென நம்முள்ளேழ் வகையும் விள்ளும்
காமெனவே காபுடன்சீன் ஹேயும் லாமும்
கட்டுரைத்த ஹேயுடனே அலிபும் சாதும்
வாமெனவே யேழுவகை நம்முள் ளாக
வகையுரைத்த மெய்க்குருவின் வண்மை யுண்மை
தாமெனுமச் சரப்பொருளை யறிந்தோ ராகிற்
றலமினிது கூறலென்னச் சாற்று வாரே. (௬௫)

சாற்றுவா ரப்பொருளை யறிந்தோ ராகிற்
றனித்தனியே நின்றதனைத் தரித்துக் கொள்வார்
வாழ்த்துவார் மேலாறுங் கடந்து நிற்பார்
வரிரண்டு மொன்றாக மனமே வைப்பார்
ஆற்றுவா ரிருபுறமும் நிலைத்த சோதி
யந்தரத்தை வாய்வுவன்னி யழலி லாக்கிப்
போற்றுவார் பூரணத்தைக் கருத்தில் வைத்துப்
போக்கோடே யிருந்ததனைப் புகட்டு வாரே. (௬௬)

புகட்டுவார் மனம் நிறுத்த வகையைப் பார்ப்பார்
 புரியட்ட மெட்டையுமோர் பொருட்டிற் சேர்ப்பார்
திகட்டுவா ரதில்வார வமுத முண்டு
 தினந்தினமுங் கமலமதி லொளிவைத் தேக்கி
இகட்டுவா ரீராறுங் கடந்து நின்றே
 இருவிழிக்கண் நடுவணையை யிசையில் நோக்கி
உகட்டுவா ருந்தியெனுஞ் சுழினைக் குள்ளே
 உற்றமகு மூதைக்கண் டுட்கொள் வாரே. (௬௭)

உட்கொள்வார் தினந்தினமும் வாசி மீதி
 லொடுக்கிடுவார் திருப்பிடுவா ருருகுங் காலை
விட்கொள்வார் விதங்கொள்வார் கமல மீதில்
 விடிவதெப்போ வெனவிருப்பார் விழிக்கண் மீதில்
நட்கொள்வார் கலங் கொள்வார் நாட்ட மீதில்
 நடுவணையு முரையாமல் நாடிக் கொள்வார்
கட்கொள்வர் வெறிபோல வறியா மாந்தர்
 காரணத்திற் கருதிநின்ற கருக்கா ணாரே. (௬௮)

காணும விறைவனையும் மறந்து விட்டால்
 காசினியிற் பிறந்திறைக் கணக்கி லாமோ
தோணாத தவனேமா டவனே சூமன்
 சூட்சமதை யறியாமற் றேடி யானுன்
பூணமற் பூண்டுகொண் டிருந்து ஞானப்
 பொருளையுள்ளிற் றரித்ததனைப் பொருத்தி யங்ஙன்
காணாது கண்டவனைத் தானே யென்று
 கருமமுற நான்மறையுங் கவலுந் தானே. (௬௯)

கவலுகின்ற நான் மறையின் கருவைக் கேளு
 கடினமெத்த மறையோர்கள் சேர்ந்து கொண்டார்
இவலைமுற்ற மெய்ஞ்ஞானப் பொருளை யார்க்குந்
 தெரியாமல் மறைத்து வைத்தார் புவியின் மீது
கவலைமெத்த வானதினைப் பெரியோர் கூடி
 ஹக்கைமறைத் தேகல்க்கை வெளிய தாக்கி
அவலையுற விறைமொழியுத் தாவி னேடும்
 அடங்காத பொருளை யெல்லா மமைத்திட்டாரே. (௭௦)

அமைத்திட்டா ரதினாலே லோகந் தானும்
 அமர்ந்துநின் றிருந்ததுகா ணல்லா விட்டால்
நிமைத்திட்ட நிலையமெல்லாம் மாறி மாறி
 நிறுவினங்கள் வெவ்வேற தாகு மென்றே



நமைத்திட்டங் கொள்ளான்கா ணென்றே யுள்ளில்
 நடம்புரிந்த திருவாட்டம் நாட மாட்டான்
உமைத்திட்ட மென்றுசொல்லி யுள்ளத் தோடே
 யுறைத் திருந்த மெய்க்குருவி னுபயங்கேளே. (௭௧)

கலித்துறை.

உபயமென் றேவரு மெய்க்குரு பாதத்தை யுண்மைகொண்டே
அபயமென் றேவிளித் தேயுவந் தால்நின் னடவுகண்டு
சூபயமென் றேயொரு சொற்சொலி ஞானச் சுளுகதனை
நியமென் றேசொல் நிமைக்குமுன் காட்டி நிலைசெய்வனே. (௭௨)

நிலைசெய்த ஞானத் தொழின்முறை தன்னை நினைவதுகொண்
டலையடித் தோடும் வங்கபோல வுன்னுள் ளடித்ததனைக்
கலையெடுத் தாகங் கொடுத்தவுன் றாது கருமமதை
நிலையெடுத் தேவரின் மூன்று மொன்றாக நிலைத்திடுமே. (௭௩)

கலிச்சந்தவிருத்தம்.

நிலைத்தஞானப் பொருளையுற்று நிறுவினத்தி லுண்மையால்
அலைத்திடா தகத்துளாக வானவாய்வை யுன்னிடில்
மலைத்திடாத மூன்றெழுத்து வடிவும்வாசி மீதினில்
உலைத்திடாத வுத்தமம் ஒன்றைமாறி யஞ்சிடே. (௭௪)

மாறியஞ்சி ரண்டினில் மறித்துமாறி நாவிடைத்
தேறியந்த ரண்டினிற் றெளிந்ததொன்று மஞ்சுமாய்க்
கூறுமூல விந்துநாதங் கொள்கையுள் தரித்ததை
ஊறியுள் ளடக்கிடில் ஒருவன்வந் துலாவுவான். (௭௫)

ஒருவன்வந் துலாவிநின்ற வுச்சிமீதி னற்செயல்
திருவனந்த வெண்பணியுஞ் சேர்வைகாலு மாறுமாய்ப்
பருவம்வந்த தென்றுதானே பராபரங்கண் மீறியே
குருவுநந்தி திருவனந்த கோடிமீதி லாகுமே. (௭௬)

கோடிமீதி லாகும்ஞானக் குவளைசுற்றி வெளியுளே
ஆடியே திரும்புபம் பரங்கள்போ லசைந்துதான்
தேடியே திருந்துஞானச் சிந்தையுள் ளடைந்ததென்
றோடிவாடி டாமலேதா னுன்னியுள் ளுறைந்ததே. (௭௭)

உள்ளுறைந்து நின்றஞான வுண்மைகேளு தந்தைதான்
கள்ளுறைந்து விழிபரந்த கருமமென்ன தாயர்காண்
நள்ளுறைந்து மேகமாய் நடங்கள்கண்ட தென்னுளே
விள்ளுறைந்து நின்றதென்ன மேவுஞ்சோதி மீதிலே. (௭௮)

சோதிமீதி லேயெழுந்த தூய்யஞான குருபரன்
நீதிமீதி லேயெழுந்த நேசவாறு பிஞ்ஞுகன்
ஓதிமீதி லேயெழுந்த வுண்மையை யறிந்திடில்
சாதிபேதம் நம்முள்ளே தானல்லாம லில்லையே. (௭௯)

இல்லையென் றுரைத்தஞான மேகபோக வீதியில்
தில்லையென்ற தேதுகாண் தேறுமவ் விடத்துளே
வல்லையங்க ளன்றுநின்ற வாறுமா மனத்துளே
சொல்லையன்றிச் சொல்லுவந்து தோற்றமாறித் தோற்றிடே. (௮௦)

தோற்றுங்காம வினைகளுந் துன்பவின்ப யோகமும்
மாற்றியே நிலைத்துநின் மனத்தையுண்மை யாக்கியே
பார்த்துமுள் ளகத்துளே பார்க்கில்லுறக்கு வடிவுதான்
சேர்த்தியாக நிற்கும்ரண்டு பத்துநாலி லொன்றிலே. (௮௧)

ரண்டுபத்து நாலிலொன்றை நாட்டமா யுவந்திடில்
மண்டலஞ் சுழித்தநாதம் வந்துவந்து விம்மிடும்
எண்டலங் கடந்தகலி மாவிலீந்த வாறதாய்ச்
செண்டலங் குறித்திடிற் றெளிந்தவேக னவனே. (௮௨)

வெண்பா.

ஏக னுரைகலிமா வீர்பத்து நாலெழுத்தும்
வாகுபெறப் பார்த்து வகையறிந்தால்—ஏகனுஞ்
சொல்லுக்கு மஞ்சான் றொழில்கடப்பான் சூட்சமதின்
வல்லபத்தைக் காண்பாய் மகிழ்ந்து. (௮௩)

மகிழ்ந்துடலிற் கண்டுவரும் வல்லபத்தி னூடே
தெளிந்ததையுட் கொண்டுசெப் புங்கால்—ஒளிந்தவனைக்
கண்டுகொள்ள லாமெனவே காரணத்தி னம்பியும்
விண்டலிக்குச் சொன்னார் விரைந்து. (௮௪)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியச் சந்தவிருத்தம்.

விரைந்த காலமில் மிகுந்த ஞானவொளி விள்ள வேணுமென விம்மியே
நிறைந்த வாறுதை யுறைந்த வெம்பனிமி வீடு டாடியது முள்ளினில்
வரைந்த தேதென மனக்கண் ணடியினில் வாறு கண்டுள மகிழ்ந்தபோ
தறைந்த நாதம தெழுந்து நின்றபொரு ளாவி மீதிடை யடர்ந்ததே. ()

அடர்ந்த வச்சர முகந்த காலமி லறிந்த வாறுகலி மாவினிற்
கடந்து நின்றதிரு நாதன் ஹக்கவனுங் காவல் நன்னபிக் குரைசெய்தான்
திடந்த ரும்பொரு ளெழுந்து நின்னுடன் சேர்வை யானகலி மாவினில்
உடக்கை யாதிரு பத்தினு லதனை யோங்கு மூன்றென வுரைத்தனன். ()



உரைத்த தேதென மனத்துளே நபி யுவந்து நோக்கவென வுன்னியே
மரைத்த டங்கொள வெழுந்து நின்றதிரு மாதுலர்க்கு நபி யுரைசெய்தார்
திரைத்த டங்கொள வெழுந்து நின்றவருள்சேர்ந்துநின் றுறமகிழ்ந்துதாம்
பரைத்த டங்கொளப் பருவ முத்திரையை பாகமா யுளமில் பாவுவார். ()

பாவுவா ருனது பார ஞானவருள் பச்சை மண்ணிலுற மெய்ப்புழு
மேவியே குழவி தான் பறந்தது விரைந்து மாடிட விளங்கியே
ஆவிதா னுமது வாகுமெய் யதனை யன்பு கொண்டுற வுரைத்ததால்
மேவுசித் திரம தாகுநின் னுளமில் விண்டி டாமலுற விண்டிடே. (௮௮)

விண்டிடா மலுற விண்ட ஞானமதை மேவு நம்முளமில் மேவிடக்
கண்டிடா மலதைக் கண்டு கொண்டுநீ கமல மீதிலுற வாக்கியே
பண்டுநின் றதனை யின்று கண்டதெனப் பண்புற நினைவி னன்பினால்
நன்றுநன் றெனவே கொண்டு கொண்டிடுவர் நாத ஞானபெரி யோர்களே.

வேறு.

பெரியோர்கள் தானுமதைப் பேணியுள்ளுறப் பிரித்திடாமலுட்பிரித்திட
அரியோர்கள் பின்னுமதிற் காலைவன்னியழ லாக்கியுள்ளுற வசைத்திட
முதியோர்கள் நாலினிடை மத்திபத்திலடு முச்சுழிக்குளுறை யேற்றிடில்
நரியான தஞ்சுமே யிறந்தபின்பினில் நாதனென்றில்நட னங்கொள்வான்.

வேறு.

நடங்கள் கண்டதிரு நாசி மீதில்நடு வாக நின்றதிரு நலமதாய்
அடங்கி யந்தவொளி நின்ற வாறுமது கண்டு நம்முளி லறிந்துகொண்
டடங்கை யாகுமென வுற்று மப்படியு வந்து தாமெனவு வந்துபின்
மடங்கை வாசியிரு நாலு மேற்சுழியில் வைக்கு மொன்றுநடு வாகுமாம்.

வண்ணச்சந்தவிருத்தம்.

நடுவாகி நின்ற திருநாத மொன்றி னையுநாலு வேத மறுசாஸ்திரம்
அடவான தேவ ரொடுமந்த ரத்தி லுறைவான ஜின்முனிவர் யாவரும்
உடல்கொண்டு நின்ற வகைகண்டு கண்ட தனைவின் டிடாமலிவர்தேடியே
இடமாகிநின்றபொருளொன்றுமெந்தவகையென்றுதான்புகையெழுந்ததே.

கலித்துறை.

எழுந்தாலுங் கர்மத் திசைந்தாலும் நின்னை யிழந்துலகில்
விழுந்தாலு மங்கம் வெளுப்பில் வராது மெய்பன்னிரண்டில்
தடந்தா னுறவெட்டில் நாலையும் உள்ளிற் றரித்ததுகண்
டடந்தா னிறுவிய தல்லாது மில்லையவ் வச்சரமே. (௯௩)

அச்சர மானது மீராறு பங்கி லமர்ந்ததுகண்
டுச்சிவம் ரண்டுபத் தே டெட்ட தாக வுறைந்திருந்து
வச்சிர மாமெழு மங்கத்தி லொன்று வடிவுகொண்டு
நிற்சிவ வாசி பதினெட்டி லொன்று நிலைத்ததுவே. (௯௪)

கலிவிருத்தம்.

இலைந்த வாசி கினைவையுள் ளாக்கிடில்
மலைத்த போதற வாசி குறைக்திடும்
உலைந்தி டாதுளி லுத்தம மாகிடும்
அலைந்தி டாமலி ருக்கின்மூ வாசியே. (கூரு)

வாசி வாசி வலம்புரி கண்டிடில்
தேசி வாசி சிவத்தையுள் ளாக்கிடில்
ஆசி வாசி அறிந்தவர் கண்டிடில்
காசி வாசி கலந்துற ஊக்கனே. (கூசா)

ஊக்க மென்று கருந்தி லறிந்தவர்
நோக்கும் இல்லை யுறக்கி மறந்திடத்
திக்கு மெவருஞ் சேர்திசை நாலினும்
பக்க மெட்டிலும் பையவு லாவுமே. (கூஎ)

உலாவு கின்ற *கல் லூமைய தானதை
விலாவில் நாடி விளைந்தற நோக்கிடிற்
கலாப மில்லைநல் ஊக்கும் வெளியதாம்
நிலாவி னுடே நீர்புனல் போன்றதே. (கூஅ)

நீர் புனலே சிறந்தி மதியில்லை
பார வன்னியைப் பைய ரவியில்லை
சேரக் காலைத் திருந்தி கினைவினுட்
பார †வெள்ளத்தைப் பங்கயத் தாக்கிடே. (கூகூ)

ஆக்கி மேல்வெளி யாகாசந் தன்னையே
தாக்கி யுள்ளுறத் தாமோதி ரம்பிடும்
வாக்கி லந்த வடிவையும் பேசிடும்
நோக்கி லந்த கொடிக்கு ளமருமே. (கoo)

அமரு மென்றே அநேகோடி காலந்தான்
நிமிரு மென்றுமே நிற்கிலுங் காண்கிலேன்
சமது சுத்தியும் நாட்டமுங் கூடிடில்
அமரி லாத வதிதிய மாகுமே. (கoக)

ஆகு நாங்குரு வைபதி யாதகோன்
பாக வேசிற பாவனை தாகுநாள்
ஆக மொன்று மதியாம லாகுநாள்
போகம் வந்திட வுங்குரு கண்டதே. (கoஉ)

* ...யை தானத்தை என்றும் பாடம். † வேழத்தை என்றும் பாடம்.



வெண்பா.

கண்டபோ தெந்தன் கவலைகளெல் லாமாற்றிக்
கொண்ட குருபாதக் கொள்கையால்—நன்றி
தரும்பாமு மேயிவர்தான் பாதமென்சி ரம்மீ
தாருமிவர் தாமெனவுட் கொண்டு. (கoங)

கொண்டகுரு பாதங் கொள்கையென வேநெஞ்சில்
நன்றெனவுள் நாடி நயந்துகொண் டேன்—அன்றவர்தான்
காட்டினர் கைப்பிடித்துக் கால்தலை யின்னதென்று
பூட்டினேன் கண்டேன் பொருள். (கoச)

கலிச்சந்தவிருத்தம்.

பொருளுகந்த மனமோ வருள் புனலுகந்த மனமோ
அருளுகந்த மனமோ நின தடியுகந்த மனமோ
இருள்வெருட்டு மனமோ குரு பதமிருத்து மனமோ
பொருள்பொருத்து மனமோ வுளிற் புகழிருத்து மனமே. (கoரு)

மனநிலையம் வைத்தகுருவோ அருள் மருளற வுரைத்தகுருவோ
கனமனதில் வைத்தகுருவோ வுளிற் கனவடிவு கந்தகுருவோ
அனையவர்க ளுன்னிவரவே குரு வருள்புரிய வெந்தனுளமில்
உனதுதவி தந்தகுருவே யென் றுள்ளம் புலம்புமதுவே. (கoசா)

புலம்பிநின்ற தடியே னருள் புலன்களைந்து மடிய
கலம்பலெந்த னுளமில் மனங் கலங்கிவந்த தடியேன்
நலங்கொள்ஞான குருவின் பதம் நாடிநின்ற படியால்
மலங்கண்மூன்று மறவே யிறை யோனைவாடி மனமே. (கoஎ)

வாடியே சிறியனு னருள் வானிடைக்குள் வரவே
தேடியே திரிவதோ வுளில் திகைத்திருந்த வகையால்
ஆடிநின்ற பொருளே யினி யறிவதெந்த வகையோ
கூடியே வருவதோ குரு வருளையுள்ள மதிலே. (கoஅ)

உள்ளமீதி லுறைவா யருளுறைந்தெடுத்த பொருளே
மெள்ளவேயு றைவினில் மிக விரைந்துநோக்கு மதனால்
வள்ளல்மெய்ப் பொருளிபொற் பாத மனதில்வந்த வகையால்
கள்ளமென்ற தறவே யென் கமலமீதில் விழியே. (கoகூ)

கமலமீதில் விழிதா னருள் கமலமீதில் வரவே
கமலமீதி லருள்தா னுரை ககனிலோடி வரவே
கமலமீதி லுனையா னிரு கண்ணினுற்ப ரவவே
கமலமான குருவும் அருட் கடலைக்காட்டி யுரைத்தார். (ககo)

கலிநிலைத்துறை.

உரைத்த தத்தனை யுளம துவந்து நிறைவாய்
விரைத்த பயிர்தா னடுவெனை மிகுந்த நடவாய்க்
களைத்த லதினுற் குருமனங் கருத்து மகிழ்ந்தே
நிரைத்த பொருளாய் மனதினில் நிலைத்து வருமே. (கககூ)

சந்தவிருத்தம்.

நிலைத்த தறியா தடியவர் நிலைக்கு ளுருக மனதொளி
கலைக்கு மானு முருகிய கணக்கு வாறே வருளுமக்
கலைக்கு ளுருகி யேயிரு காலுடற் கருகி யேமலர்
மலைக்கக் கனமால் நிறுவியென் மனத்துள் ளுருகி யுறைவதே. ()

கலிவிருத்தம்.

மனத்துறை பகருங்காலை வடிவெனக் கருவுங் காட்ட
இனத்துற் வருவதென்னே குருமொழி யிசைத்த துள்ளில்
கனத்தடம் பகர்ந்தே யென்றன் கருத்திலுற் றறிந்த போதே
மனத்தடம் புகுந்தே யுள்ளின் மருவியொன் றுன வாறே. (கககூ)

வெண்பா.

வாறுன தந்த வகைகண் டடியவனுந்
தேறுமற் றேறித் திகைத்தக்காற்—கூறுகும்
பன்னிரண்டி லெட்டோ பதிந்திரண்டு நாலாகி
எண்ணிரண்டி லொன்று மிசைந்து. (ககச)

இசைவு தருஞான மெவருமறி யாமல்
அசைவினுளம் ஹக்கென் றறிந்தால்—நிசமனமே
வாராது வந்து வளங்கொண்டால் நின்னுளமிற்
சேராது சேருந் திரு. (ககரு)

அறுசீர்க்கழில்கெடிலடி யாசிரியவிருத்தம்.

திருவுற வெழுந்து ஞானத் திருவடி சென்னி மீதில்
ஒருபுறத் திலங்கி யங்க ணுட்சுழித் தெழுந்து விம்மிப்
பருவமுற் றுயர்ந்து வந்தப் பதிவினி லிருக்குங் காலம்
வருவதென் றமர்ந்து நின்ற வடிவுவந் துயர்ந்த வாறே. (ககசா)

உயர்ந்துமூன் றெழுத்தை நாடி யுருகியங் கப்பா லோடிப்
பயந்துமட் டெழுத்தி னோடு பருகியுள் மலரில் நின்று
வியந்துமா றெழுத்து நாலில் விரவிமூன் றுணிக்க வல்லார்
அயர்ந்துட லழியா தென்னு மரியவ னுரைக்க லுற்றான். (ககஎ)

உரைத்திடும் வகையைக் கேளும் உண்மையா மொருவ னைமம்
நிரைத்தது கவிமாத் தன்னில் நின்றது பன்னி ரண்டில்
களைத்துநால் வலப்பால் நாலு கனத்திடப் பாலி லாக்கி
நிரைத்துடல் நினைவு கொண்டு நிலைத்தநா லதனிற் பாரே. (கக௮)



பார்த்தவ ரறிவ தல்லாற் பார்க்கிலா ரறிய மாட்டார்
சேர்த்துற நிலைத்த நாலிற் றிருந்தவே யொன்ற துச்சி
போற்றுவர்க் கொன்று தேனும் பொருந்திட வொன்று நம்முள்
ஆற்றுவர்க் கெழுந்த நாசி யதினிடை யொன்று தானே. (ககசு)

நாசியி னிடையே யொன்று நலத்துற சார்வு நாலு
பாசியுந் திரையும் நீக்கிப் பண்புற நோக்கி னுக்கால்
ஊசியின் முனையா மந்த வுள்துளைக் குள்ளே நின்று
தேசிதா னேடிச் சாடித் திரும்பிடுந் தெளிந்து பாரே. (கஉ0)

தெளிந்திட விறைவ னென்று செயப்பட விருந்த வாறும்
கழிந்தொன்றும் போகா மற்றுன் கனவுரு வமைத்த வாறும்
ஒளிந்தங்க னிருந்த வேளை யுயரும்வெண் பனியுந் தோன்றும்
அழிந்தவர்க் கருளா வண்ணம் அறிந்தவர்க் கருள்செய் வாமே. (கஉக)

செய்வதோ வறிவி லார்க்குத் தெளிந்திட வறிவுள் ளோர்க்கும்
வையக மீதி லிந்த வகையினை யறிந்தோ ருக்குந்
தையலாம் பெண்ணுங் கண்ணும் * தவத்தினை யறிந்தோ ருக்கும்
மையலாய் நாலு நின்ற வகையவர்க் கிசைத்த வாறே. (கஉஉ)

வெண்பா.

இசைத்தால் நிலைக்குவரு மேகாந்த மானபொரு
ளசைத்தா லுனக்கு ளடங்கா—விசைத்தாவிக்
கண்ணையுளத் தாலேற்றிக் காலவன்னிக் குட்சேர்த்து
விண்ணையுளத் தால்மேவ வே. (கஉ௩)

எழுசீர்க்கழில்கெடிலடி யாசிரியவிருத்தம்.

மேவிய பொருளைக் ககனிடை விடுத்து
வெண்ணிலக் கதிருற விளம்பித்
தாவியுள் ளெழுத்தி ரண்டையும் வாசி
தரித்திடுங் கமலமில் இறையோன்
ஆவியோ டுறுபத் தாறுடு மிரண்டி
லழகியோ ரட்சர மழகாய்
வாவியைக் கடந்து நடுவணை புகுந்து
மருவிஅல் ஹம்தென நிற்கும். (கஉச)

நின்றது பதத்தைக் கடந்துமஞ் செழுத்தை
நிறுவினத் துள்ளுறப் புகுந்து

* சமத்தினை யென்றுமொம் பாடம்.

கண்டது கமலத் திருவிழி திரண்டு
    * ஹக்கென விருந்துமுட் கருதி
அன்றென அலிபிற் றெடுத்தென லாமும்
    அறிந்தவர்க் குரைத்தென ஹேயும்
வென்றிகொண் டறியப் பொருளுரைத் திடிலோர்
    விளம்பிய வெழுத்தினை விள்வார். (கஉரு)

விளம்பிய வெழுத்தும் அலிபொடு நூனும்
    விரிதலத் தினிலிறை விடுத்து
வளம்புவ னெனவே யுரைத்திடும் அலிபும்
    வளம்பெற லாமுமன் ஹேயும்
நளம்பெற வுரைக்கிற் றெடுத்தது காபும்
    நன்றென வுரைத்தநல் வாவும்
உளம்புகழ்ந் திடவே நிலைத்தது வீனும்
    உகந்திட வெழுத்தினை யுரைத்தேன். (கஉசா)

உரைத்தவட் சரத்தை யொடுக்கியே கூட்டி
    லொருமொழி அன்னென வுரைப்பாம்
திருத்துமட் சரந்தான் இலாகியென் றெழுந்து
    திருவடி தன்னையுஞ் சுற்றி
வருத்தமொன் றனுகாக் கௌவினைக் கடந்து
    வருவது ஐனுடன் வீனும்
பொருத்துவ தறிந்தால் விழிக்கிடை மலரிற்
    புகழ்ந்துவந் தெழுந்துசுற் றிடுமே. (கஉஎ)

சுற்றிடு மெழுத்துத் தனையுறப் பிடித்துத்
    தோய்ந்திடக் குருவருள் பாவித்
தைத்திடா வயும் அலிபுட னூனுந்
    தரித்திட மூன்றையுந் தரித்தே
உற்றிடு மகுமூ தெனும்பதி தனிலே
    யுறைந்திருந் துரைத்திடி லுண்மை
சிற்றலும் வருமென் றவர்தினை யாகும்
    † நீயுள மறிந்திடில் நிசமே. (கஉஅ)

நிசமென வுரைத்த பொருளுறை வாசம்
    நிகழ்ந்ததோ ருச்சியி னிறைந்து
அசல்மனை புகுந்து தெருக்கடந் துலவி
    யாறுகாற் றம்பியி னடுத்து

* ககவென யென்றாஉம் பாடம். † நிறுவி யுள்ளறிந்திடில் என்றாஉம் பாடம்.



வசம்படத் திரும்பி யொருவனே மூன்று
    வகைசுழித் திருபுறம் பாய்ந்து
கசந்தனில் வீழ்ந்து வலக்கரத் தோடுங்
    கதியென வாசிவந் தனவே. (கஉகூ)

வந்தன வாசி பத்தொடு மிரண்டும்
    வாரியி னெடுப்பட வந்து
சிந்திதழ் நிமிர்ந்து அமுதமென் கலசந்
    திருடவே நிரைக்குள்ளின் றொளித்து
பந்துபம் பரம்போ லீரொழு லோகம்
    பருவம்வந் தெங்கணுந் திரிந்து
நொந்துளங் குளிர்ந்து நால்விரல் கழிந்து
    நொடிக்குமுன் னெண்விரல் புகுதும். (கஙo)

புகுந்ததி னாலே நாற்றலந் தன்னிற்
    புகுந்துபின் னப்படிக் கூடி
யுகந்திட முன்போ லுருப்படி கூடி
    யோய்விலா தோடுநம் மூச்சு
திகழ்ந்துவந் துறைந்து நிலையம தாகித்
    தினந்திரு மந்திர மொழிந்து
இகழ்ந்திடா துளமில் அறைந்திடா தறைந்தே
    இசைந்திடா திசைந்திடுந் தானே. (கஙக)

தானமாந் தவத்தை யறிந்தவர்க் குரைத்தோம்
    தானவன் றன்னினை வாக
ஏனமாம் பொருளை யறிந்தவ னுரைத்த
    வியல்பினை யியம்பிடி லேதோ
ஈனமாம் பாவ வினையெலா மெரிந்தே
    இறையொளி தனையுமே காண்பார்
கோனமாம் பதத்திற் பத்தொடு நாலிற்
    குறித்திரண் டொன்றினைக் குறியே. (கஙஉ)

வெண்பா.

கூறியே நின்றன் குருபதத்தைக் கண்டுளமில்
மாறிடா துன்ன வகையறிந்தால்—தேறிவரும்
அவ்வென்றும் நவ்வென் றமர்ந்தபொரு ளையறிகில்
வவ்வென்றும் உவ்வென்றும் வாழ். (கஙங)

வாழ்வு தருமந்த வகையை யறிந்திடிலோ
ராளுவது மூன்றல்லா தில்லைக்காண்—தாழுவது
நீயு மொருக்கால் நினைத்தக்கால் நின்னுளமி
லாயுமது தானே யறிந்து. (கஙச)

எழுசீர்க்கழில்நெடிலடி யாசிரியச் சந்தவிருத்தம்.

அறிந்து நின்றபெரி யோரு ரைத்தபடி
யருள்வ தாகுமல் லாமலே
பிறிந்து பின்னொருவர் பேசி டாதவன்
பெலத்த காரண மறிந்திடில்
முறிந்து நின்றவனை யேமொ ழிந்திடுகின்
முச்சு டர்க்குள்வரு மங்கியால்
செறிந்து நின்றதிரு நாம மூன்றினிலுஞ்
செப்பு வாரதை யறிந்துதான். (௧௩௫)

அறிந்து காலதி லுணர்ந்து மாதியோ
டனுதி சோதியிவை யாகவே
பிறிந்து நின்றதை யறிந்தி டாமல்மனம்
பேத லித்துருகி வாடியே
மறிந்து வுண்மை தறிந்து கொண்டிடில்
வல்ல நீதியுட னேயதாம்
உறிந்த வுண்மையென வொன்றி லொன்றெனவு
முள்ளு னேமன மகிழ்ந்ததே. (௧௩௬)

மகிழ்ந்த வாறுகலி மாலி லேயதிகம்
வந்த நின்பொருளு கந்திடில்
இகழ்ந்தி டாததில் நினைந்த காலமி
லிருந்த வாசியுற வாகவே
புகழ்ந்து கண்டிடில் மன்ன னுமெனவும்
புத்தி யுற்றிடை வருத்தவே
ஜெகந் தனக்குள்வரு காலின் வன்னியிடை
சேர்ந்து மொன்றினில் மருட்டுமே. (௧௩௭)

மருட்டு வாறது வுரைக்கி லாறுவகை
வைச்சி ரங்குளிர் நிமிர்ந்ததோ
உருட்டு மொன்றினி லுயர்ந்து மாறியிது
மோங்கி வாங்கியருள் தாங்கியே
பிரட்டு கின்றதொழி லார றிந்திடுவர்
பின்முன் னுயிறைவன் நின்றதை
நருட்டு நான்மறை சொரிந்த தேனமுது
நல்ல மாமல ரெழுந்ததே. (௧௩௮)

எழுந்த தாமரை கவிழ்ந்த துங்கமல
மேறி யாறித ழிறங்கியே



கழர்ந்து நின்றது கருத்தின் மூன்றது
கலைக்கி டாதெனை மலைக்கிடார்
விழுந்த *தால்தலை குழைந்தி டாதது
மிகுந்த தொன்றதில் விளைந்தபோ
தழுந்தி டாமலே யழுந்து மச்சரமி
லப்பு முப்புறை யகத்துளே. (௧௩௯)

அகத்துளே யொளி தெளிந்த பேர்களிது
கண்டு கொண்டிடுகி லன்பதாம்
செகத்துள் வந்ததனில் சேர்ந்து ஞானவழி
தேடுவார்க ளவர் தேடியே
மகத்து வத்திலுற வேயிருந்த இது
வல்லபத்தி னடு வுற்றுளே
முகத்தை யப்புறமி ருக்கி யப்பொருளின்
முங்கி வெண்பனி முறைக்குளே. (௧௪0)

முறைக்குள் வெண்பனி யிருக்கு நாளதனில்
மூன்று மொன்றென விருந்ததாய்
விறைக்கு மூதையதி லாதநா ளதனில்
மேவு மண்ணும்நீ ரிருந்ததாம்
அறைக்கு எட்சர மிலாத நாளதனி
லான வாய்வுமழ லாகுமாம்
நிறைக்கு முன்னிறையி லாத நாளதனில்
நேச மென்னவெளி யாகுமே. (௧௪௧)

அறுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

ஆகுமே வெளியாய் முன்னி லறிவிலா திருக்கு மந்தப்
பாகமே தறிந்து கொண்டு பகருவ தேதோ யேதோ
தேகமாம் விரிந்த பூவைத் திகிர்த்துரைத் திடுங்கா லப்பூ
பாகவே நிமிர்ந்த வந்தப் பரமனை யறிந்தி டாயே. (௧௪௨)

வெண்பா.

அறிந்துலவு ஞானத் தருமையறி வாரார்
பிரிந்ததனை யுள்ளில்வைக்கப் பேணிச்—செறிந்தக்கால்
ஐம்புலனை யும்மறுத்து மச்சாத்தை யுட்கொண்டு
நம்பரம்போ லாவார் நயந்து. (௧௪௩)

எழுசீர்க்கழில்நெடிலடி யாசிரியச் சந்தவிருத்தம்.

நயந்துட் பொருட்கருகி நாதத்தி லேநிறையு
நாதத்தை யுன்னி வரவே

* கால்தலை என்றாவும் பாடம்.

செயந்தங் கெழுந்ததிரு வாசிக் கிடைக்குளொரு
    தீபத்தை வைத்த விறையோன்
பயந்தங் குளத்தில்வரு காரணத்திற்கு ளவன்
    பாரமதி லாகு மதுவோ
குயந்தைக் கடத்தில்வரு கும்பமது போலவுங்
    * கொக்கரையுள் ளாடி வருமே. (கசச)

ஆடித் துதிக்குமது வப்புடன் பிரிதிவி
    யானவகை கேளு மினியே
நாடிக்குள் வல்லவ னிருந்தனன் ஷுஹூத்தினில்
    நம்புஞ் சொரூப மதிலே
தேடிக்கொள் வார்களிலை யேயவ் வனத்தினிடை
    தேறிக்கொள் வார்க ளிலையே
வாடிக் கலந்தமது பானத்தை யுண்டுவரு
    மன்னன்ஆ வென்ற வகையே. (கசரு)

ஆவென் றிருந்தன னிருந்தன னவ்வேளையில்
    அப்புமுத லுப் புறைவதாய்
ஹூவென் றிருந்தன னிருந்தனனவ் வேளையிற்
    கோபமதி லாப் பிரிதிவி
ஊவென் றிருந்தன னிருந்தனனவ் வேளையில்
    ஒத்துவரும் வாய்வு தயமாய்த்
தாவென் றிருந்தன னிருந்தனனவ் வேளையிற்
    றக்கவக் கினி யானதே. (கசசா)

வேறு.

அக்கினிய தாவதும் அப்புனல தாவதும்
    அவ்வூதை யான வகையும்
மிக்கபிரி திவியுடன் மேவிவரும் யாவென
    விண்டவெளி யான வகையுஞ்
சற்கித் திடாமலே யஞ்சுமது கூடியே
    தானெதிர்த் தே பற்றிட
உக்கிரம தாகவே மோகமது விந்துவாய்
    உள்திரட் டான ரூபம். (கசஎ)

உள்திரட் டாகவேநின்றபடி ரூபமும்
    ஒருவரறி யாத வகைகாண்
நல்திரட் டாகவே நாதவொலி கீதமாய்
    நம்பிவர வுள்ளமி லெழும்

* கொக்குராஜன் என்றுமும் பாடம்.



வல்திரட் டக்கினி வாய்வுடன் விந்துவும்
    மாறியிட மாறி வலமாய்
உள்திரண மாகவே யுற்றதிது மஞ்சினில்
    உள்மூன்று புறம் ரண்டதே. (கசஅ)

ரண்டுமென் தண்ணீர தாகுமது கேளுநீ
    நாதனுட கூற தேது
அன்றவ னிருந்ததும் அக்கினிய தானதும்
    அச்சுடர தான ததுவும்
நின்றவ னிறைந்ததும் நிச்சயம தானதும்
    நீடூழி பர மானதும்
வென்றியிது காணவே வாய்வுடன் அக்கினி
    மிக்கவுயி ரான வகையாம். (கசகூ)

உயிரான மெய்வகையி லொளிபரவு மக்கினி
    யோகபர மான வகையால்
வெயில்பரவு மக்கினி யெந்தவகை யந்தமாய்
    மிக்கபொரு ளுக் கிரமதாய்
மயிர்க்காற் பறிந்ததோர் வாய்வினுட னக்கினி
    வந்தேக மான ததுவா
லுயிர்க்கார் நிறத்துளே யொன்றுபட நின்றது
    முட்கமல வீதி னிடையே. (கரு0)

மீதிற் றெளிந்துவரு காமத்தி னேய்களவு
    மிக்கமுன் மத யோகமுஞ்
சாதித் தறிந்தவர்கள் வேறுற்று நின்றதவர்
    தானும் றறிந்தில ரென
நீதிக் குருக்களுப தேசித்த மெய்ப்பொருளை
    நேசத்து ளே யறியவே
சோதித் து*கந்தவர்கள் கோடிப்பொன் னீந்திடினும்
    சொல்லார்க ளுண்மை யிதுவே. (கருக)

வெண்பா.

உண்மை தனைக்கண் டொளிந்தோர்கள் நின்னளவிற்
செம்மையென வொன்றுபடச் சேருவார்—வண்மையிலா
வஞ்சகர்பொய் யர்குருவை மாறிமொழிந் தோர்களுக்கு
நெஞ்சகத்தில் வாரார் நிலைத்து. (கருஉ)

* கண்டவர்கள் என்றுமும் பாடம்.

நிலைத்த பொருளதனை நிச்சயத்துட் பார்க்கில்
மலைக்கு மலைத்துவிட லாகா—தலைமகனே
மெய்யென் றறிந்தவனே மெய்க்குருவின் பாதமலர்
செய்யென்றாற் செய்யுந் திறம். (௧௫௩)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியச்சந்தவிருத்தம்.

இறத்தி லேவரு முரைத்த காலருள்
செலுத்த வேணுமென வெண்ணியே
மறத்தி லாதருள் வடித்த மெய்ப்பொருள்
மனத்தி லேயறி வுதித்திட
நிறைத்த ஞானமி லுயர்ந்த மெய்ப்பத
நினைத்த காலையி லுணர்த்திட
அறைத்த நற்பொருள்*மறைக்குள் நின்றதை
யயர்வி லாமலுள் ளழுத்துவார். (௧௫௪)

அழுத்தி யட்சரம் நினைத்த நாளையி
லவிழ்த்து நின்றதை யகத்துளே
எழுத்தி னத்தொடு பகர்ந்த நாளையி
லிருத்தி நின்றன முறைக்குளே
சுழித்த வட்சர மலர்க்குள் நின்றது
சுணைத்து நின்றன மனத்துளே
வெளுத்து நின்றது வெளிக்குள் வந்திடு
மிகுத்த காலதை யறிந்திடில். (௧௫௫)

மிகுத்த காலருள் தொகுத்து நின்றதின்
மிடுக்கி டப்பிடித் திருத்திட
வகுத்த நாயகன் மணிக்குள் வைத்ததை
வருத்தி விப்பன மகத்துளே
தொகுத்த ரண்டுடன் பேயும் வீணுடன்
தொடுத்து முளமதை-அடுத்திடில்
ஒகுத்தில் மருவியே திருத்த மெய்ப்பொரு
ளுரைத்த கௌஸுளம் வருத்துமே. (௧௫௬)

வருத்தி யிருவிழி திருத்து பார்வையில்
மனத்து ளாமது மகிழ்ந்திடில்
கருத்தில் வைத்தவ னிருத்து மெய்ப்பொருள்
கசித்த காலைநம் முள்ளமில்

* அறைக்குள் என்றாலும் பாடம்.



பொருத்து பூரண நிலைத்த தொன்றினில்
பொருட்ட வுளமது முருட்டிடில்
திருத்த வருமென வுரைத்து நின்றருள்
செலுத்த நம்முளந் திரட்டுமே. (௧௫௭)

திரட்டு மொருமொழி மருட்டு குருவருள்
திறத்தி லவர்பத முரைத்திட
மருட்டு புந்தியுள் மலர்ந்த தாலமில்
மனத்தி லேயிருள் மறைத்திட
வெருட்ட வேகுரு வுரைத்த தாலருள்
விரைத்த காலவர் வருட்டவே
நருட்டு லாமென நகட்டுள் விம்மியே
நரைத்து வருமரு ளிறைக்குமால். (௧௫௮)

இறைக்கு மாலரு ளவர்க்கு மேதர
விருக்கு மேயருள் திருக்கதாய்
நறைக்க மலமதி லுருக்கு காரண
நடுவி லருளிருள் நலத்திடா
முறைக்க வருமுயி ரிருக்கு மேயது
வுளத்தில் வருமலி புரைத்ததால்
அறைக்கு ளொருபுற மறைக்கு மதினிடம்
அவிழ்த்த குமிழ்வெளி யிருத்துமே. (௧௫௯)

அருத்து நான்மறை சாஸ்திர மாதிவை
யடுத்த பேர்களு மறிந்திடார்
பருத்த வுடலினர் விருத்தர் போலவே
பரிந்து வருமவர் தனைக்கண்டே
திருத்து வாரிலை பயந்து தானவர்
திருட்டு மொழிகளை மனத்துளே
பொருத்தி வைத்தவர் புலம்பு வாரது
பொருட்ட தொன்றினில் மருட்டதே. (௧௬௦)

மருட்டி லாமலே யிருக்கு மெய்ப்பொருள்
மருவவதின்வகை யறிந்திடார்
குருட்டு விழிகளா யிருந்து மவர்மிகக்
குறத்து வித்தைகள் வருத்துவார்
திரட்டு நால்மறை வேத சாஸ்திரந்
திருட்ட வேவயிறு வளர்த்ததால்
உருட்டு மணியினு ளிருந்த தொன்றையும்
உளத்தி லறிகில ருண்மையே. (௧௬௧)

### வெண்பா.

உண்மையாம் ஞானத் தொளிவுதரு மெய்ப்பொருளை
நன்மையா முள்ளில் நலங்கொள்ளார்—தண்மை
வருத்தார் கசட்டையருர் வன்னெஞ்சின் பாவந்
திருத்தார் நிலையமுருர் செப்பு. (௧௬௨)

செப்புங் கமலமதிற் சேர்ந்திருந்த மெய்ப்பொருளை
யொப்புரவோ டஞ்சி யுறவாகத்—தப்பறவாய்
விட்டிடுவார் மெய்யில் விளங்கும் பொருளதனைக்
கட்டறியார் பாரார் கருதி. (௧௬௩)

### சிந்து.

கருதிய வுள்ளகத்துள் - இறை - காரணந் தன்னையுருர்
பருதியுஞ் சோமனுமே - வந்து - பாய்ந்ததையும் அறியார்
குருகியுள் ளாகிடவே - வரு - கொக்கையுங் கண்டறியார்
திருகிய நெஞ்சர்கள்தன் - பொருள் - சேர்ந்துற வாதெனவே. (௧௬௪)

சேர்ந்துற வாதிறையோன் - அவன் - செப்புவ தெப்படியோ
ஆய்ந்து வரும்பொருளை - யுள்ளி - லறிய வகையுரைப்பார்
பாய்ந்திடும் வெள்ளையது - தன்னில் - பாதி செவப்பாகித்
தோய்ந்திடும் மஞ்சளதாய்ப் - பச்சை - சொல்லுங் கறுப்பாமே. (௧௬௫)

கறுப்பென நின்றதிலே - யுள் - காரணை மைந்தாகும்
உறுப்பது முப்பதுடன் - ரண்டும் - உன்ன வுருவாகும்
அறுப்பது கண்டாக்கால் - சொல் - லவனையுங் காண்பதென்றே
வறுத்த விரையதுபோ - லருள் - வல்ல வகையாமே. (௧௬௬)

வல்ல வகைபோலே - யிறை - வைத்தது மேதெனவே
சொல்லவுஞ் சொன்னக்கா - லதன் - சூட்சமறிந்தவர்க்கு
வல்லது மூன்றுமுள்ளில் - அவை - வந்தொன்ற தாகிடுமாம்
கல்லுடைந் தாற்போல - வருள் - கல்லுளி வைத்திடுமே. (௧௬௭)

கல்லுளி வைத்திருந்தா - மனக் - கல்பு பிளந்துவிடும்
நல்லுளி யவ்வுளியாம் - அதை - நாடி யறிந்திடுகில்
இல்லுளி யொன்றதனுல் - செயுஞ் - செய்லுளி வந்ததுகொண்
டல்லுளி யுட்கருத்தில் - சிதம் - அறிவுளி யுள்ளாமே. (௧௬௮)

உள்ளுளந் தன்னிலந்தப் - பொரு - ளுட்சுடர் மூன்ருகும்
கள்ள மனத்தோர்கள் - அங்கு - கண்டதை யுட்கொளுவார்
வெள்ளை மனத்தோர்கள் - அதை - மேவ வறியார்கள்
வள்ள லுரைத்தபடி - கண்ட - வல்லவர் சொன்னரே. (௧௬௯)



வல்லவர் சொன்னதனு - லுரை - வந்திடும் வானகத்துட்
கல்வனமுஞ் செடியுங் - கடந் - தப்புறத்தே யேகி
நல்வன மீதிடையே - யொரு - நன்கிளி நின்றதுவாம்
சொல்லவர் சொன்னதற்பின் - கண்டு - தான்சுகங் கொண்டதுவே. ()

கொண்டவர் கண்டவர்காண் - மெய்க் - குருமொழி தப்பாமல்
நன்றென முச்சுடரைத் - தினம் - நாடி யொருசுடராய்
பண்டும் பழம்பொருளாம் - அறி - வோரும் பழையோராம்
நின்றுரை கண்டாக்கா - லதின் - நிச்சயங் கொள்வாரோ. (௧௭௧)

### கலிவிருத்தம்.

கொள்வராங் கமலமீதிற் குறித்தவ றறிந்து நாடி
விள்வராஞ் சுழிகளெட்டும் விரைந்துளம் வருந்துங் காலம்
நள்வராங் காலின்கீழ்மேல் நாடிய தலைவதல்லால்
நள்வரா மறியாவண்ணம் நலஞ்சொல்வார் நயந்துதானே. (௧௭௨)

நயனமாம் பொருளைநாடி நடுவெழுந் தலையாய் விம்மிக்
கயனமுத் திரைகழித்த கருவறிந் தாறி லுன்னி
அயனமுட் செவந்து நேசத் தரியதோர் பொருளிலாதார்
பயணமென் றுரைத்திருந்து பதிவது சாவுதானே. (௧௭௩)

சாவுற்ருன் நிலைமறந்தான் தனியனை யறியாதாலே
நாவுற்ருன் சொல்லிலாத நலங்களை நாடிக்கொண்டு
காவுற்ருன் மதத்தையுற்ருன் கழனியிற் புகுந்தவாறு
தாவுற்ருன் அறியாதிந்தச் சளமுற்ருன் சளமுற்ருனே. (௧௭௪)

சளமுற்ரு னேதினுலே தானவன் றன்னைக்காணுன்
உளமுற்ருன் மனத்தினுலே யோடிய மானைப்போலே
விளமுற்ருன் நிலையைமாறி மெய்யினை யறியா வண்ணம்
வளமற்ருன் வளமற்ருனே வரும்பொரு ளறிகிலானே. (௧௭௫)

அறிகிலாஞ் சகலந்தன்னை யவன்மனத் தெண்ணமாட்டான்
மறிவுறு நாலுவேத வகைகளை மெய்யென் றெண்ணுன்
பொறியுறு ஞானந்தன்னிற் பொருட்டினைப் பற்றிப்பாரான்
வெறியுறு மூடர்போலே விளக்கினைச் சுற்றும் வண்டே. (௧௭௬)

வண்டெனச் சுற்றிமாண்டு மாளுவார் சுடரின் மீதிற்
கண்டவர் சொன்னஞானக் கருவதை யறியமாட்டார்
விண்டுரை யுரைத்தநூலின் விதிகளை யறிந்திடாமல்
இண்டினிற் சயத்தில்வீழ்ந்த வீயெனத் தயங்குவாரே. (௧௭௭)

தயங்குவார் தயங்குவார்கள் தன்னுளே பொருளிருக்க
மயங்குவார் மயங்குவார்கள் வடிவினை யறியாதாலே
பயங்கொள்வார் பயங்கொள்வார்கள் பரிசினை யறியாமாண்பர்
நியங்கொள்வ தறியாதன்று நிலைகொள்வ தில்லையென்றே. (கஎஅ)

என்றுதா னிருந்துவீணி லிசைகெட்டார் கோடாகோடி
மன்றுளே பொருளிருக்க வகையினை யறியார் கோடி
நன்றதாங் கமலமீதில் நயனம தறியார் கோடி
வென்றிய குருவைத்தள்ளும் வீணர்கள் கோடியாமே. (கஎகூ)

கோடியாம் பரத்தைக்காணுக் குருடர்கள் கோடாகோடி
நாடியுஞ் சரத்தைக்காணு நலங்கெட்டார் கோடாகோடி
தேடியுங் குருவைக்காணுச் செல்வர்கள் கோடாகோடி
வாடியுங் கண்டிம்விட்ட மாண்பர்கள் கோடியாமே. (கஅ0)

கோடியாம் நிலையம்விட்ட குருடரா யிராமலுந்தான்
வாடிய பொருளைக்கண்டு மனத்தினி லறிவதென்றன்
கூடியே நிறைந்துஞானக் குருபர னிலையமாக
நாடியு ளறிவதென்னே நாதனை யறிகிலானே. (கஅக)

அறிவிலா துனதுஞானத் தருமையை யறியாவண்ணம்
மறிவதாய்த் திரிந்துநின்று மயங்கினன் மனத்தினாலே
செறிவதோ நின்றன் பாதத் திருவுளந் தன்னைக் கண்டு
அறிவினா லுனதுபாதத் தடுப்பதற் கருள்செய் வாயே. (கஅஉ)

வெ ண் பா.

அடுத்திலே னென்றவகை யாரறிவா ருன்னைத்
தொடுத்திலே னென்றுமென்னைச் சொல்லேல்—கடுத்தக்கால்
நம்முள் ளிறையை நாமறிய மாட்டாற்பின்
னெம்முளறி வஃதோ வியம்பு. (கஅங)

இயம்புந் திருவருளி னிற்சொருபங் கண்டு
நயங்கண் டறிந்து நலங்கொண்டு—ஜெயங்கொண்டு
வல்லோனை யுன்னுளமில் மாறு தறிந்தக்கால்
நல்லாப மென்றே நவில். (கஅச)

நவிலாதே சாத்திரம்நா டாதேபா ராதே
புவிமீதி லேகருத்தைப் போடாய்—செவிமீதில்
கட்டுரைத்த மெய்க்குருவின் காரணமே காரணமென்
றிட்ட மனமகிழ்வே வேண்டு. (கஅரு)



வேண்டாதே பொய்யை விரையாதே மெய்ப்பொருளைப்
பூண்டிருந்து முள்ளம் புகழ்ச்சியால்—நான்றிருந்து
காலுந் தலையுங் கடந்துவப் பாற்சமனாய்
மாலுமவர் தானெனவே வந்து. (கஅசு)

வந்துக்கோ ஞானம் வருந்திக்கோ வல்லபத்தில்
சென்றுக்கோ வுண்மை திருத்திக்கோ—வந்தமதைக்
கண்டுக்கோ வுண்மை கருதிக்கோ மெய்க்குருவைக்
கொண்டுக்கோ வன்பாற் குறி. (கஅஎ)

குறியறிந்து ஞானக் குருபதத்தைத் தேடி
யறிவறிந் துள்ளிலமர்ந் தக்கால்—நெறிபழமே
மாறு திருந்து வருந்திவரு மெய்யெழுத்தைத்
தேறுது தேறுய் தெளிந்து. (கஅஅ)

தெளிந்துவரு மெய்யெழுத்திற் செப்புவதை யஞ்சில்
குளிர்ந்துதான் மூன்றைக் குறித்தால்—பளிங்கியென
மின்னும் பிரகாச மெய்யுளத்திற் கண்டறிந்து
முன்னுமுளங் கண்டே யுணர். (கஅகூ)

உணரும் பொருளைமனத் துள்ளிலறிந் தாக்கால்
கணருந் திருவருளைக் காண்பார்—நினைவறிய
உள்ளத் துணரு முதிப்பை யறிந்தக்கால்
கள்ளனையுங் கண்பார் களித்து. (ககூ0)

களித்தாலு மெய்யெழுத்தைக் காட்டியொரு மெய்யிற்
சுளித்தாலு மத்துணைகண் டேதான்—குளித்தெழுந்த
குச்சியாந் தானைக் குருவாற் றிறந்தறிந்து
மெச்சுவா ருண்மை விதி. (ககூக)

விதித்தெழுந்த நாலெழுத்தும் வெவ்வேறாய் மூன்றெழுத்தும்
பதித்தெழுந்த அஞ்செழுத்தும் பார்த்தால்—செதித்துவரு
மொன்று யுறநோக்கி யுள்ளுறைந்து வந்ததனைக்
கண்டா லவனெனவே காண். (ககூஉ)

கலிவிருத்தம்.

காணநின் பொருளை ஞானக் கருத்துறப் புகுந்து மேலாய்
வானுறச் சுழித்த வாசி வல்லநா ம்ரைக்கு மேல்பால்
கோனுறச் சுழித்து வந்தக் குவளையைக் கடந்து நீந்தி
வானுறும் வெளியில் வந்து வட்டமிட் டிலவுந் தானே. (ககூங)

வட்டமிட் டுலவுங் கால்தான் வருமிரு புறத்தி னூடு
கட்டமிலா மற் றேன்றி காணவுட் சிரத்தி லேறி
பட்டமாங் கயிறு பூட்டி பறக்கின்ற வாறு போலத்
திட்டமா யெழுந்தே அந்தத் திருவினுற் றுடுங் தானே. (கசுச)

திருவினுற் றுடும் வாசி தெளிந்துலா ஹூஹூ வென்று
மருவியத் தலத்தி னேடு வருகுமே காபு நூனும்
பருகியத் தலத்தைக் கண்டு புண்புறச் சுழித்து மூன்றாய்த்
திருகியத் தலத்தின் பேளாச் செப்பிடின் முகைய்ய தாமே. (கசுரு)

கைய்யதாம் பின்னுங் கேளு கருதியோர் சுழி சுழித்தே
ஐயமொன் றணுகா வைறயென் றழுந்துமத் தலத்தைச் சுற்றி
வையக மலர்ந்த பூவின் வடிவருட் புரித்தாள் மேலே
செய்யவத் தலத்தைச் சுற்றித் திரும்புமுன் னெழுந்து பாயும். (கசுசு)

பாய்ந்திடும் வெளியி லப்பா பத்தொடு ரண்டு மாகிச்
சாய்ந்திடக் கண்டா லப்போ தனித்தது நாலு மோடி
ஆய்ந்திடும் பொருளைக் கண்டே அதினிடை கைகொ டுத்துத்
தோய்ந்திட வறிந்து மற்ற வுயிர்களைத் தொகுத்துப் பார்க்கும். (கசுஎ)

பார்க்குமே நாலும் போகப் பதிவுறு மெட்டு முள்ளிற்
சேர்க்குமே பகலும் ராவுந் திடந்தனிற் சென்று பின்னும்
நோக்குமே யத்த லத்துள் நொடிக்குமுன் குசவ னங்கே
ஆக்கவுஞ் செய்வா னப்பா வறிந்தவர்க் கருளும் வாறே. (கசுஅ)

ஆக்கிய வாறு தன்னை யறிந்தவன் தானே தானென்
நோக்கிய வாறு மந்த நொடியினைக் கண்டோன் வல்லோன்
ஏற்குமட் சரமுங் காலு மெடுத்தறிந் தவனே யோகி
வாக்கிய நாலுங் கண்ட வல்லவன் சூபி யாமே. (கசுகூ)

சூபியா மவர்க ளப்பா தொழின்முறை யறிந்த பேர்கள்
வாகிய பெரியோ ரப்பா தொழிலுடை வடிவைக் கண்டோர்
ஆகிய வல்லோ ரப்பா அதினிடை சூட்சி கண்டோர்
யோகியா யிருப்பா ரப்பா வொருவனே டுறவு மாமே. (உ00)

வெ ண் பா.

உறவா யிருந்துன துற்பனத்தைக் கண்டால்
மறவார் மனத்தில்மற வார்கள்—சிறியேனுன்
உன்னைமறந் திப்புவியு ழன்றேனு ழன்றேனே
என்னைமற வாம லிருந்து. (உ0க)



இருந்தபடி யென்னை யியம்பவறி யாமற்
றிருந்து முறை யில்லாமற் செப்பில்—அருந்தவமே
அன்றையி னுயிருந்த வப்பொருளை யேயெனதுட்
கொண்டிருந்து வந்தாய் குறித்து. (உ0உ)

கலிநிலைத்துறை.

தான வாவுனை யடியவன் நம்பினேன் றனித்தே
ஆன தாலெனக் கருளொடு கிருபைநீ யருள்வாய்
ஈன மென்றதி யாவுமே யென்னைவிட் டகழ
ஞான பொற்பத நலமருள் வானுறு நலமே. (உ0ங)

வானு றும்புவி மலைகட லெவையுநின் னருளால்
தேனு றுந்திரு வொளியினில் ஜெயமுறு மிறசூல்
ஆனு றும்பதி லருளினு லமைத்திடு மரசே
வானு றும்பொரு ளுரைத்திட மனதினில் வருவாய். (உ0ச)

வருகும் வல்லவ னேபல படைப்பினும் நீதான்
உருவி லாமலே யிருந்தது நீயுனை யறியாய்
பருவம் வந்திடக் காரிருள் தனிலொரு நுகத்தாய்
அருவு ருப்பல வகையிலா தப்படி யிருந்தாய். (உ0ரு)

இருந்த காலமி லப்படி யென்னுள்ளி லிருந்தாய்
அருந்து மவ்விருள் தன்னிலே யிருந்தது போலே
முருந்து மென்னுள முறைப்படி நின்றவ னியே
திருந்த வந்தினந் தெளிந்திட வந்தசீ மானே. (உ0சு)

கலிவிருத்தம்.

சீமானெனத் திரண்டிரு மூன்றினிற் செலுத்தி
பூமானெனப் பொருந்தியங் கிருந்துநின் றுயே
நானுனென விருந்துவுற் றுரைக்குமவ் வேளை
தேனேயுனை யறிவிலா தொருவன்வந் தனனே. (உ0எ)

வே று.

வந்த வன்னொரு சொரூபமாய் வந்தனன் முன்னே
சிந்தி டாதவன் றெளிந்ததை நோக்கினன் ※ தெளித்தே
அந்த மொன்றிலா சொரூபமு மவன்றனை நோக்கி
முந்த வந்தவன் மொழிந்தன னொருவகை முன்னே. (உ0அ)

முன்னே தானவன் மொழிந்திடச் சொரூபமு மொழியுங்
கண்ண லாதொரு கண்ணினு லிறைவனைக் கருதித்
திண்ண மாயுறைந் திருந்தன னுயர்ந்தனன் திகைத்து
மன்ன னுமென மனத்திலுற் றிருந்தவன் மலைத்தான். (உ0கூ)

※ திகைத்தே என்றுமபாடம்.

மலைத்த காலையிற் சொருபமு மெதிருற மகிழ்ந்தே
அலைத்து நின்றதைக் கண்டது சுருபமு மலைக்கும்
நிலைத்து நன்றவ னுரைத்தன னொருமொழி நினைவில்
உலைத்தி டாதிரு சொருபமு மொன்றென வாமால். (உக0)

வெ ண் பா.

ஒன்றெனவே யாகி யுரைத்திருந்து முட்சொருபங்
கொண்டதுவே ரண்டுமொன் றுய்க்கூடி—நின்றதுபின்
கூடுமதுபிரியக் கொள்கையுடன் மூன்றாகித்
தேடிவரு மொன்றாய்த் திகைத்து. (உகக)

திகைத்துவரு மூன்றுந் திசைதிசைவெவ் வேறாய்ப்
புகைத்த விருளைவையும் போகத்—திகைத்ததிலே
வந்திருந்து கொண்ட வகையையினி மேலுரைக்க
நொந்திருந்த நோம் நுனி. (உகஉ)

வண்ணச்சந்தவிருத்தம்.

நுனியே மனத்தி லுறைவா யறிவாய் நொடியாகித்
தனிமுச் சுடரும் மூன்றா யதுக்குள் தனியாகி
இனிமை மலர்த்தா ளலரத் தேன்வந் திதமாகு
மணிகண் டறிவோர் தமக்கோர் பழுதும் வாராதே. (உகங)

வாரா தெனவே பெரியோ ரருளும் வகைகண்டு
நேரா யடியே னுரைத்தே னிறையை யறிவோர்க்குக்
காரார் குடைதா னிழற்றும் பரிசு கண்டாக்கால்
மாறார் பரனே யவருள் மனதில் வருவானே. (உகச)

வருவா னொருகாற் சுடர்தான் மூன்றில் மலர்ந்தக்கால்
தருவான் பலதுந் தவறா துனக்குள் தவறாதே
அருவா யொருபோ தறிய நிறுவி யகத்தாகும்
திருவா மலரின் தாளைக் கையால் திறப்போர்க்கே. (உகரு)

துறப்பார் குருவின் மலர்த்தா ளடியின் துணையாலே
கறப்பார் பசுவின் பாசம் பதிமூன் றருளாலே
உறைப்பார் வருமுச் சுடர்தான் மூன்றி லுறவானால்
நிறைப்பா ரவர்நற் சரணந் தொகுதி நிலையாமே. (உகசா)

ஆமே சுடர்மூன் றருள்மூன் றவன்முன் டகமீதில்
தாமே யுறவாய் வருவா னவனுந் தள்ளாதே
கோமான் மனதிற் குறியா லருளைக் குறித்தக்கால்
வாமா மனது வகைமூன் றெனவந் துறைவாமே. (உகஎ)



உறையும் பொருள்தா னொருமன் னொருதண் ணீராகும்
மறையுங் கமல வடிவும் வன்னிக் காலாகும்
நிறையும் பொருளோ டருள்தான் வெளியில் நிலையாகும்
அறையுங் கமல மதின்மூன் றருள்தா னசையாதே. (உகஅ)

அசையா மதமும் மதுமூன் றணுகும் பர்மூன்றுங்
குசையாங் குதிரை யேறும் பரிசு தான்மூன்றும்
வசமா மனதுள் மனமு முளமும் வகைமூன்றுந்
திசைமந் திரமும் நினைவுங் குருவுந் திறமூன்றே. (உககூ)

திறமா மாதிய ஞதி சோதி திருமூன்றும்
மறைமா வேதம் அறிவோர்க் கிங்கும் வகைமூன்று
மறையா துடலொன் றுயிரொன் றதனுட் பொருள்மூன்றும்
குறையா துருவம் அருவஞ் சொருபங் குறிமூன்றே. (உஉ0)

வெ ண் பா.

மூன்றும் வகையினமு மும்மதமு முப்பாழுங்
கூன்றாத மும்மலமுங் கூறக்கே—ளாண்டோன்றா
ஞசைவைத்த காமத் தருந்துயரந் கொண்டானே
வாசமுற்றான் மூன்றெனவு மாம். (உஉக)

எழுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

மூன்றில்வந் திருந்தும் இறையவன் மொழிந்த
மொழிதனை யறிந்தவ ரெவரோ
நான்றது கமல நடுவுற விருந்த
நடுவினை யறிந்தவ ரெவரோ
ஊன்றிய பொருளை வானிடை தரித்தே
யுகந்துறைந் திருந்தவ ரெவரோ
நீண்டது நின்ற நிலையம தறிந்து
நிலைத்திருந் துயர்ந்தவ ரெவரோ. (உஉஉ)

எவரெனச் சார்வி லிசைந்திடி லறியா
ரிருவிழிக் கருமையின் கூர்மை
வருவது கண்டால் மூன்றினி லிருந்த
வல்லவன் அஹறுமதாய்க் கவ்விலி
தருமல ரலர்ந்த தேனினி லிருந்த
* தையலா மன்மஹறு மூதைக்
கருதிய பொருளாய் நிலைத்தது நடுவிற்
கண்டதி ரண்டெனக் கவலே. (உஉங)

* சையலாம் என்றாஉம் பாடம்.

கவன்றிடும் படியே யுரைக்கில்நின் னங்தக்
கமலமேற் றோன்றிய காட்சி
நவின்றிடும் போது மூன்றுமுச் சுடரும்
நலங்கிடத் திருவருள் தோன்றுந்
செவந்திடும் பச்சை வெள்ளைய தாகித்
திறம்வருஞ் சொரூபமூன் றாகி
நிமின்றுளம் புரிந்தே யருளதை யுவந்து
நிலையமுற் றிருந்தநற் சுடரோ. (௨௨௪)

சுடரது மூன்றுங் துளிர்பட நிறைந்து
துணுக்கென வெழுந்துமுன் * துணிந்து
மடக்கொடி மலரி லொன்றெனச் சிறந்து
வருமவன் மலரிலொன் றிருந்து
கடத்தலை குளிர்ந்தே யொருதலத் துறைந்து
களிம்பற நிமிர்ந்துளங் களித்து
மடத்தலை யெனவுற் றிருந்தது போன்றும்
வல்லவ னிருந்தனன் மாதே. (௨௨௫)

மாதெனு நிறைந்த தையலுள் ளிருந்து
வகையெலாம் நிலைத்துற வகுத்து
நீதிகள் தொகுதி பலதென நம்முள்
நிறைதருந் திடத்தினில் நிரம்பிப்
பூதல மெவையு மமைத்திடுங் கோமான்
புகழ்ந்தொன்ற தாகினன் பொருந்தி
மாதவம் பெருக மூன்றுமுச் சுடரும்
வல்லபத் திடையில்வந் தனதாம். (௨௨௬)

இடையில்வந் திருந்த தெழுமுறைச் சுடரும்
இருந்திடும் பரிசியம் பிடிலோர்
அடையொரு தலத்தி லாவெனும் ஹூயென்
றசைந்தொன்ற தானவட் சரத்தைக்
கடைந்துள நிமிர்ந்து பரிந்திட நோக்கில்
கமலமென் றகமுகக் கருத்தின்
விடைத்தருள் பூண்டு மிருந்தமுச் சுடரும்
வெளியில் வீந்தருள் தெரிசிக்கும். (௨௨௭)

தெரிசிக்கு நிலைமை யுயிரிலோர் பங்காய்த்
திரண்டிடும் ஹக்கிலோர் பங்காய்க்

* தொனித்து என்றூஉம் பாடம்.



கரிசமுற் றெழுந்து கல்கிலோர் பங்காய்க்
கல்கலா தெழுந்ததோர் பங்காய்
வரிசையாய்த் தோன்றிப் பொருளுரு வத்தில்
மருமலர் வாசமூன் றாகி
அருள்தரு மாதி யனுதியோ டெழுந்த
வட்சரச் சோதியி லருளாம். (௨௨௮)

அட்சரச் சோதி யருளென * விருந்தே
அமர்ந்துநம் முள்ளமி லிசைந்து
நிற்சிவ விளக்கை யறிவெனும் நெய்யைக்
குருவருள் நிலைத்தவோ ரெழுத்தின்
உட்சிவக் கனலைக் கொளுத்திடக் குருவி
னுண்மையைத் திரியென வுருட்டி
மெய்ச்சிவக் குருவி னெழுத்தருள் கனலைக்
கொளுத்திட விழிக்கிடை விரைந்தே. (௨௨௯)

விரைந்தனல் கொளுத்தி வெளிச்சமிற் பார்க்க
விரைவுருச் சகலமுந் தோன்றும்
நிரைந்திடுஞ் சுடரு மொன்பது நாலும்
நினைக்குமுன் † னச்சுடர் மூன்றும்
பரைத்திட மெவையும் படைத்திட வுரைத்த
பருவமுஞ் ‡ சத்தமுந் தோன்றும்
உரைத்திடுங் குருவின் கனலினு லெவையும்
நொடிக்குமுன் தெரிந்திடும் நோக்கே. (௨௩௰)

வெண்பா.

நோக்காகப் பார்த்தளவில் நுண்ணறிவைப் பார்த்துளத்தில்
தாக்கா யெனவுரைத்த சற்குருவின்—வாக்கதனை
யுட்கொண்டு முட்புகுந்து முத்தமத்தைக் கண்டக்கால்
நட்கொண்டு நின்றால் நலம். (௨௩௧)

சிந்து.

நலத்தோ டெழுந்தபிரான் - தன்னை - நாடிய தேடுதனவே
தலத்தில் வரும்பொருளை - யுள்ளிற் - றுனறிந் துன்னிடுங்கால்
மலத்தை யடக்கிடவே - திரு - வாசி வலம்புரியின்
குலத்தை யறிந்தவுட - னுயர் - கோவின் குலமாமே. (௨௩௨)

* எழுந்தே என்றூஉம் பாடம். † அச்சரமூன்றும் என்றூஉம் பாடம்.
‡ சத்தமும் என்றூஉம் பாடம்.

கோவின் குலமாகும் - இவன் - கோவினை மெத்தவுமாம்
ஆவி னடிமுடியின் - பர - வந்தமு மேயவனும்
தேவி யிவன்றனக்குள் - கூடிச் - செம்மை யுறவாகில்
கோவின் குடிதனக்கோ - வொரு - குற்றமு மில்லையென்றே. (௨௩௩)

எள்ளது முள்ளுறவே - பரம் - ஏற்றி யிறைஞ்சிடிலோர்
கள்ள மறப்பொருளை - யுள்ளில் - காண்பது திண்ணமென்றால்
வள்ளல் வடிவதுவும் - மறை - நான்குச்சி யுங்காணில்
விள்ளவு மொண்ணாது - கதி - மேவி யிருப்பாரே. (௨௩௪)

மேவி யிருப்பார்கள் - பரம் - வேறல்ல நாமெனவுந்
தாவி யிருப்பார்கள் - அருள் - தானே மனத்துள்வந்து
கூவிய சேவலது - குறி - கண்டிடும் வாறதுபோல்
நாவி லெழுந்ததனில் - நடு - நாதனைக் காண்பாரே. (௨௩௫)

காண்பவ ராரிறைவன் - தன்னைக் - கருதிய காரணங்கள்
தேன்பல துண்டவர்க - ளுள்ளங் - தெவிட்டி யிருப்பார்கள்
வேம்பல துங்கசப்பே - யது - மேவி லமிர்தமதாம்
வான்கம லத்திடையே - வரும் - வாவியி னீராமே. (௨௩௬)

நீராற் பெருகிடவே - யது - நித்தலு மோடிவரப்
பேராறு கண்டபின்பு - வந்து - பெலத்திடு மெய்ப்பொருளாம்
ஈராறி லொன்றதனால் - வரு - மின்பதுன் பம்மறுத்தே
யோராம லோதிடவே - மேலா - முண்மை யிருப்படுமே. (௨௩௭)

உருப்படும் வாறதனைக் - கண்டே - யுள்ளக மீதினிலே
கருப்படி யுள்வாசி - யதின் - காலீ ராறையுமே
திருப்பிடக் கண்டவரோ - செய - லுற்றறி வாரெனவே
பொருப்பிடஞ் சுற்றிவந்து - வந்து - புக்குமோ ரண்டமதில். (௨௩௮)

அண்டம தேழதினும் - வரும் - அம்பர மேழதினும்
பிண்டம தேழதினு - மின்னும் - பின்மல ரேழதினுங்
கண்டம தஞ்சதினு - மோங்கு - காலுமீ ராறேறிடிக்
கொண்ட குருபாதங் - கண்டு - கோலகத் துள்ளாமே. (௨௩௯)

கோலகத் துள்ளான - வாசிக் - குதிரை தனைப்பிடித்தே
காலகத் துட்பூட்டி - யுயர் - றைக்கனைக் கண்டாக்கால்
மாலகத் துற்றகுரு - தரும் - வல்லமை கேட்டவுடன்
ஞாலகத் துள்ளில்வரும் - பர - நாதனைக் காண்பாரே. (௨௪௦)



அறுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

ன் ஞானக் * கண்ணிடை வருகு மந்த
ஊனபரா முத்த மத்தி லொளிப்பரா முள்ள கத்தில்
நான்பல விற்போ லுன்னி நலத்தினை † யுற்றே யந்தத்
தேன்றிரு மலரைக் கண்டாற் றிருமல ரமுத மாமே. (௨௪௧)

வெண்பா.

அமிர்தந் தனையுண் டனுதினமு முன்னிற்
குமுர்தவொலி நாவாற் குறிகண்டே—யமிர்தம்
மலரி லலராது வாயுவல்லா லாடா
கலர மலராது காண் (௨௪௨)

சந்தவிருத்தம்.

கானகத்திடை மீறுமச்சுடர் கமலவாவியி னுள்ளமில்
தேனகத்திடை யனல் ‡ விளக்கிடத் திருவகத்திடை யூறிடும்
ஊனகத்திடை மருவுமப்பொரு ளுயிரகத்திடை யுறைதருங்
கோனகத்திடை வருகுமெய்ப்பொருள் குருவகத்திடை கொளுவுமே. ()

கொளுவுகின்றது வளருமந்தர குருமுறைக்குறு வாசியில்
களவுவந்தது போலநின்றுள கமலமீதிடை கருதுமாம்
வளருநற்செயல் மணியினுள்ளமில் வாறுகண்டிடி லேதெனக்
கழறுமந்தர காலுமந்திரு காமவன்னியு னந்தமே. (௨௪௪)

அந்தவாசியி னுதிசோதிய ரூபரூபசொ ரூபமாம்
இந்தவாறு நிலைத்தகாரண மேகனவ்வன மீதிலே
சிந்திடாம லிருந்ததன்று திருந்துமச்சர மொன்றினில்
வந்தவாறு தெளிந்துகண்டிடில் வறுமையொன்றிலை வாழ்வதே. (௨௪௫)

வாழ்விலாம லிருக்குமவ்வன மாகும்யாவையு மன்றுதான்
தாழ்விலாம லிருந்துவல்லவன் ஜாதிசத்தி தவத்துளே
ஆள்வதென்று மமைத்தியாவையு மவ்வனத்திடை யட்சரம்
வாழ்வுகண்டு தெளிந்தபேர்க்கொரு வறுமையொன்றிலை வாழ்வதே. ()

வாழ்வுமூன்றென வைத்துநின்றவன் வறுமைமூன்றுநம் மனத்துளே
காழ்வுமூன்று கனத்தயோக கருத்துமூன்று கனத்துளே
ஆழ்வுமூன்று மனுகரத்தொழி லாறிரண்டிடை யச்சரம்
வாழ்வுகண்டு தெளிந்தபேர்க்கொரு வறுமையொன்றிலை வாழ்வதே. ()

---

* கணிடை என்றாஉம் பாடம். † யுன்னி என்றாஉம் பாடம்.
‡ விழிக்கிடை என்றாஉம் பாடம்.

வாழ்வுதங்க மலர்க்குளேதிரு வாசனைக்குள் மலர்ந்திடில்
தாழ்வதன்றி யிருந்துநின்னுள மாகுநானென் றறிந்துநீ
பாழ்வெளிக்கு ளிருந்துகொண்டரு பரமவட்சர மானதில்
வாழ்வுகண்டு மறிந்தபேர்க்கொரு வறுமையொன்றிலை வாழ்வதே.

வெண்பா.

வாழ்வதென்று வந்த வடிவுதனைக் கண்டுணர்ந்தால்
தாழ்வதில்லை வாழ்வதல்லாற் றுனையா—ஆழ்வுதர
வுற்றகுரு பாத முரைத்திருந்தே யுட்கொள்ளப்
பெற்றதுவே மெய்ஞ்ஞானப் பேறு. (௨௪௯)

வஞ்சிவிருத்தம்.

பேறுன யெருங்கனல் மூட்டிடிற்
கூறுன குருமொழி கொண்டிடுந்
தேறுத சிவமுமே தேறிடும்
ஆறுறு மகற்றிடு மப்புறம். (௨௫௦)

அளவடிவிருத்தம்.

அப்பு றத்தி லதின்பொரு ளானதும்
துப்பு றத்தினில் தோன்றிய செஞ்சுடர்
வில் வளைந்தது போலவே மேருவின்
கல் வளைந்து ககனத்தை மூடுமே. (௨௫௧)

மூடு கின்ற முடிவை யறிந்திடிற்
கூடு கின்ற குருமல ருச்சிகாண்
வாடு கின்ற வகையால் நிறுவியுண்
ணுடு கின்ற நலம்பொருள் சேருமே. (௨௫௨)

சேரும் ஞானத் திருவருள் வாசியில்
பாரும் பாரும் பரத்துறு கண்ணினுல்
நீரும் நீரும் நிலைத்திடும் வன்னியால்
ஊரும் ஊரும் உறைந்திடும் உண்மையே. (௨௫௩)

உண்மை யானது வாயுவின் காலிலே
எண்மை யான வெழுத்தது மூன்றிலே
உண்மை மெய்க்குரு வின்னுப தேசத்தால்
வெண்மை யூத வெளிப்பட்டு நின்றதே. (௨௫௪)

நின்ற காலை நிறுவியுள் ளாக்கியே
கன்றுந் தாயுங் கணக்கொத்த வாறுபோல்
கொண்டல் வந்து குவிந்திடுங் குன்றினில்
மண்ட லஞ்சுழி வாய்விடும் வன்னியே. (௨௫௫)



வன்னி யால்திரை வான்புகை யானது
உன்னு தேவ *ரொழித்தது வாயுவின்
மன்னு சத்தம் வெளிமஹூ மூதராங்
கண்ணி ஞேடு கலந்த கவுஸதே. (௨௫௬)

கவுஸி லான குறிதிரை யறிவதாம்
நபுஸி லுள்ளநம் நாதமும் நந்தியாம்
அவச மில்லாத நாவொலி யந்தமாம்
கவுஸ தான கருவுரு குதுபதே. (௨௫௭)

குதுப தாகுங் குறியுரு வானது
மதுவ தாகும் வளர்ந்திடும் வல்லபம்
இதுவ தாகும் இணங்கியுட் கூடியே
பொதுவ தான பொருப்பிடை புக்குமே. (௨௫௮)

புக்கு முப்பாழ் பொருப்பு வெளிக்குளே
ஹக்கு லாவுங் † கனகத் திரைக்குளே
திக்கடர்ந்த திசைநாத மீறி யே
தொக்க தாகச் சுழித்துத் துறக்குமே. (௨௫௯)

துறக்கும் வாய்வுஞ் சுழிலையும் வீதியும்
நிறைக்கு லாவியே நிற்கும் நடுவனை
கறைக்குங் காமக் கருத்தையு மூட்டிடில்
மறைக்கு மாறு ஹறுபும் வருகுமே. (௨௬௦)

வெண்பா.

வருமாறு மெய்ஹூர்பின் வகைகேள் நப்ஸிலொன்று
தருமே ஷஹூதிலொன் றில்லிலொன்றுங்—கருமமுற
ஆய்ந்துவருஞ் சிர்றிலொன்று அந்த ஓதுபிலொன்றும்
வாய்ந்துலாமக் கானிலொன்றும் வாறு. (௨௬௧)

வண்ணச்சந்தவிருத்தம்.

வாறென்றொரு வகையுள மதுதனில்
மருவுந்திரு நாவிடை யுருவினில்
வாய்வுக்கன லேறிய திருவினில்
மருவுத்திர மோ‡அன வருவினில் - வனமாது

---

* உரைத்தது என்றாவும் பாடம். † ககனத்திரை என்றாவும் பாடம்.
‡ அனவுருவினில் என்றாவும் பாடம்.

கூறென்றிரு வாறிடை யப்பினில்
குருவென்றெதிர் கூறிய தப்புனல்
ஹூவென்ருெளிர் கூவிய சத்தமுள்
குறிகண்டு நிலைத்திடு கோர்வையில் - குறையாது

சீறென்றனல் சீறிய நாகமின்
தீயென்றிரு கண்கள் செவந்திட
திருவென்றிது மாறி மொழிந்தது
சீயென்றெவ ரும்நகை செய்தது - செயல்காணுர்

நாறென்றெழு நாறுத் லாகிய
நானென்றவ னும மிருந்தது
நால்வந்து முறைந்து முகந்தது
நாவென்றது கொண்டது பேசிட - நடுவாமே. (உசுஉ)

ஆமென்றது மட்சர மத்திற
மாவென்றது மாவியி னந்தமும்
ஐனென்றது சீனுடன் காபருள்
தாலென்றது வாவுட னுனும - தாருகும்

ஒமென்றது முச்சியின் மீதிடை
யுனாயென்றது முட்கம லத்திடை
யுகவென்றது வுட்சுழி யாறையு
முயிர்கொண்டது கண்டது நின்றது - முறைவாகி

நாமென்ருெரு நல்வன மீதிடை
நாடித்திரு வேஅலி பானது
நாவிற்கிடை யேயருள் மருவிட
நாவுற்றுயர் வெம்பனி கொண்டது - நலமாகும்

ஆமென்றரு ளச்சுரு வுக்கிடை
ஐனனென வேயொரு சத்தமி
லாரும்மறி யாதவ னத்தினி
லவனேடுற வாகிய போதினி
லதுகண்டறி வோர்களு மவனே - டவனுமே. (உசுங)

அவனேடவ னுமென வேயுய
ரகலாவிரு ளானதி லேமய
லறியாதவ வேளையி லேயுயி
ரருள்நாவிடை யேவர வேபயி - ரருளாகி



இவனேடிவ னுமென வேபதம்
இயல்பாய்வர வேதிரு நாவிதம்
இறகுல்மன மாகிய பொருளிதம்
இகலாமலே யறிபவர் குருவித - மிகழாதே

பவமேவியுள் ஞுறவொரு நாழிகை
பதிகாலிரு கால்வர வாழிகை
பர்சூதர வேவரு வாழுகை
பகர்தானென வேயிரு விழியதை - பரமீதில்

தவநாதரு ளாகிய சையலது
தகிமீதிடை யேவரு மமுதது
தரயாவையு மேயது தானது
தரமாறுவ கைக்குட லறிபவ ரிறை - தானுமே. (உசுச)

தானுமென வேயுய ரவ்வனந்
தனில்மீதிடை யேதனி யேயவன்
சறுகாம லிருந்துற வாகினன்
தருமாமல ராகிய ஹுறுபினில் - தானுகி

வானனது வானல வேயுற
வகையானது கண்டிறை யோனருள்
மருவும்படி யேயிரு சொருபமும்
மறையும்மது கண்டு முகந்தது - வரமீதில்

தேனனது மூறிய தொருகலை
சிவனனது வந்தருள் கொண்டதின்
தெளிவாலருள் பொங்கி வடிந்துநல்
செயல்கண்டவ ருன்று தெவிட்டுவர் - செயலாலே

பானுறமு தாக விருந்தது
பகர்காலமி லேயுறை வானதின்
பரிசானது கண்டு மறிந்தவர்
பரமீதுற வாருவர் தாமெனப் - பகர்வீரோ. (உசுரு)

பகர்வீரு ளட்சர மாகிய
பஞவற்றிற மேவி யிருந்திடும்
பதிகண்டுற வாக நெகிழ்ந்திடும்
பாசத்துட னேயதி லேறிடில் - பரமாகும்

வகாரத வெழுத்தி லுறைந்தபின்
வரும்வாறது நாலையுங் கண்டுமுன்
மனமீதிடை யேதரிப் பாகுமின்
வடிவானது கண்டு தெளிந்திடில் - வருவானே

சிகரானது தானே யுறைந்திடுஞ்
சிவமானது முள்ளுற வந்திடுந்
திசை நான்கிலும் நின்பொருள் கண்டிடுந்
திருநாம மறிந்தவ ருக்கிது - திறமாமே

யகரட்சர முட்பொருள் நின்றிரு
வறையுங்கம லத்திடை மேருவி
லமருந்திரு வாசிய கத்துள
மலைவந்திடக் கண்டறி வோரிறை - யருளாமே. (உசசு)

அருளாய்வரு மேதிரு வாசியின்
அதுதான்வல மேயிரு பாகமி
* அதுமேவிட வப்புடன் பிரிதிவி
யகலாதெழு வன்னியின் வாய்வுட
னசையாவெளி யஞ்சுமே யொன்றதி - னருளாகி

இ .ரபோய்விட வேதிரை யற்றிட
இருதாமரை யின்மல ரலாரு
ளிசைவாகும் வலம்புரி சங்கிட
மீராறுகா லாகிய வாசியின்
† இவுளிக் கனல் மூடிட் வருமது - மிதமாகிப்

பொருளுக்கிர மாகவு கந்தது
புவியோடு வலத்திடை நாவசை
புருவத்திடை யேவரு மச்சுழி
பொருமித்திரு வாகிய விருபுறம் - புனல்சூடி

மருவுங்குரு வல்ல பதத்தினில்
மதமீறி யெழுந்து முலாவிய
மதுவுண்டு களித்தது விம்மிய
வகைகண்டிடில் வல்லவன் முத்திரை - மறவாமே. (உசஎ)

மறவாதெழு வாசி யினத்தினில்
மருவாதொரு கால முகந்தது
வரியாயிரு புறமு நிறைந்தது
வகையாறித முள்ளுற நின்றது - வருகால்தான்

---

* அருள்மேவிட என்றூஉம் பாடம். † இருமோக்கனல் என்றூஉம் பாடம்.



உறவாயது மோடி மறைந்தது
ஒருகாலது சந்திர னையது
ஒருகாலது சூரிய னையெழுந்
தோடும்மது சற்குரு வருள்சுழி - முனைமீதில்

திறமாயெழு திரையெழு கடலுடன்
சேருங்கரு மாமலை யேழுடன்
செயலாகிய காவலு மேழுடன்
தினமேதா னகிய வறவொடு - சிறுவாசல்

பறையாதொரு படியதின் மீதிலே
பருவத்துட னேவரு கயலது
பருகிப்பரு கித்திற மாகவே
பனியின்னுற வாக வெழுந்ததின்
பதிகண்டறி வோர்களும் பரமவர் - பரிவாமே. (உசஅ)

பரியும் மிரு காலல வோவருள்
பகரும் மிரு காலல வோவருள்
பருவம் மிரு காலல வோவருள்
பரமும் மிரு காலல வோவருள் - பூமீதில்

எரியுந் தண லக்கினி யாமல
மிடுகும் புகை யவ்விரு ளாமது
இதுகண் டுற வாய்வரு மப்பது
இயல்கொண் டதி லேவரு பிரிதிவி - யிதமாகி

வரிகொண் டது ரண்டுடன் மூன்றது
வளைகின் றது வைந்துட னலது
மறைகின் றது வெட்டுட னலது
மருவுற் றெழு மப்புன லந்தினில் - வடிவாகி

இனைகின் றது ரண்டுட னலுமே
இனமென் றது வொன்றுட னென்றுமே
இருகால் கர மெழுமுக மாகியே
இருளட் சர முச்சியின் மீதிலே
இதுகண் டறி வோர்களும் ஊறக்கென - இதமாமே. (உசகூ)

ஊறக்கா னது ஊறக்கிடை கல்க்கிடை
கருநான் மறை யின்படி யாகிய
கனகா ரிரு ளாகிய காரிகை
கனமன் மத மாக வெழுந்தவள்
கயல்விம் மியு லாவிட நின்றவள் - கருவாறில்

தொக்கா கிய சுடரது மூன்றினில்
　　துணிப் பாக வெழுந்தது ரண்டினில்
துயரா கம் விளைந்தது மொன்றினில்
　　சுகமோ கம தானது மந்தர - சுரமீதில்

திக்கெங் கணு மேயுற வாகியே
　　திசையெங் கணு மேநிறை வாகியே
செயலா ருமு கந்திரு வாகியே
செயலப் பொரு ளானதை நான்மறை
　　திருவுக் கிர சாத்திர மானது - தினந்தேட

வைக்குங் குரு பாதம கத்துள
　　மனமும் மிரு நாவு மனத்துள
வகையும் விழி கமலமி னுறவிட
மருவுந் திரு நான்மறை மருவிடும்
　　வகைகண் டறி வோர்களும் வல்லவ - னவனுமே. (உஎ0)

வெண்பா.

வல்லவனென் றுலோ வருங்கிருபை தானறிவான்
அல்லால் கிருபை யறியாதா—னெல்லைக்
குருவையறி யாதகொடும் பாவிகட்கி றையோன்
வருவதில்லை யென்றான் மகிழ்ந்து. (உஎக)

கட்டளைக்கலிப்பா.

மகிழுங் காலை மருவி யிருந்திட
　　வன்னி யோடு வருங்கலை யுள்ளுற
நிகழ்த வில்லா நெடியவன் றன்னையே
　　நீரு லாவி நடுவே நிறுத்திட
மகிழு நந்தியும் வாயுவுங் கூடிடில்
　　வாயு பனிரண்டில் நாலு மறித்திடத்
திகழு நின்றன் திருவு முருவுமே
　　செல்வன் வந்து தினமு முலாவுவான். (உஎஉ)

உலாவு கின்றது மூமையு மாண்மையும்
　　ஒத்து நின்றது முன்னினை வுள்ளுறக்
கலாப மில்லைக் கடுஞ்சலிப் போடிடுங்
　　கள்ள வேடனை வோரு மிறப்பர்காண்
* ... ... ... ...
... ... ... ... ...

* இந்த அடியெமக்குக்கிடைத்த பிரதிகளிலில்லை.



மலம தானது மெல்லா மகன்றிடும்
　　வல்ல பங்களும் வாசிக்குள் ளாடுமே. (உஎங)

ஆடு கின்ற வதன்பொருட் குட்சியை
　　யாரறிந் திடு வார்க ளறிந்திலேன்
வாடு கின்றது மவ்வன மீதிடை
　　வல்ல பத்தொழில் மாயம தானது
தேடு கின்ற திருவின் பொருள்தனைச்
　　செப்பு மெய்க்குரு வின்பதஞ் சேர்ந்திடில்
நாடு கின்றநன் னாட்ட முநம்முளில்
　　நாதன் வந்து நடங்கொள்வ தாகுமே. (உஎச)

ஆகு மென்று மறிந்தவர் கூறிடில்
　　அஞ்சி லொன்றை யறிந்து பிடிக்கவே
தேகஞ் சுற்றுந் திரும்பும் வலம்புரி
　　செல்வ னை திருக்கை யுகந்துதான்
வாக தான குருவி னுபதேச
　　வல்ல பத்தை மனத்து ளிருத்துங்கால்
பாக மான பரமன் பதப்பொருள்
　　பாரு முன்னுட் பரம்பச்சை யாகுமே. (உஎரு)

பச்சை யான பரம்பொரு ளானதைப்
　　பாரும் பார்வை பார்த்தை வெளிக்குளே
அச்ச மற்றது மப்பொரு ளாகிடும்
　　ஆறு மாறி லருணனே டக்கலை
நிச்சி வத்தை நினைத்திடுங் காலையில்
　　நீதி சோதி நிலைப்படு மாமென
உட்சி வத்தை யுகந்தறிந் தோர்களும்
　　ஊமையோ டுற வாகுவர் திண்ணமே. (உஎசா)

திண்ண மென்ற செவப்புக் கறுப்பையுஞ்
　　சேர்ந்த மஞ்சள் வெளுப்பொடு பச்சையும்
வண்ண மான வகையிவை யஞ்சினுள்
　　வந்து தோன்றிய வாறது கூறிடில்
அண்ணல் நந்தியு மாதி யனுதியும்
　　அம்பரத்திடை மீறிய சோதியும்
திண்ண யத்துள் நினைவு முருப்படில்
　　நீதி வண்டின் நினைவென வாகுமாம். (உஎஎ)

நினைவ தான நிறைக்குரு வண்டினம்
　　நிச்சயங் கொள வேயுரு வாயின
மனம தானது மாய்கையு முன்மத
　　வாறு மும்மல மும்மோடி மாண்டிடுங்
கனக மான கதிரின் வெளிக்குளே
　　காலீ ராறுங் கடிந்தே யடக்கிடில்
இனம தானது மேகமு முன்னுளே
　　யேறி மின்போ லிருந்தது வெட்டுமே. (௨௭௮)

வெட்டுஞ் சூதத்தின் மேற்கொண்டு கூர்மைவாள்
　　மீறுகையிற் பிடித்து வெருக்கிடக்
கட்டு நாலையுங் கள்ளக் கயிறுடு
　　காந்த சூதத்தி லேறி யிருத்தியே
திட்டமாகத் திரிகின்ற சட்டுவம்
　　சென்று காலிரு சங்கிலி பூட்டியே
வட்ட மிட்டு வரும்பரி யின்குசை
　　மாறி யொன்றையு மாறு திருத்திடே. (௨௭௯)

இருத்துஞ் சோதி யினத்தி னிடைக்குளே
　　ஏகமா யொரு பாதத்தைத் தூக்கியே
வருத்த மற்று வருகின்ற பம்பரம்
　　மாறி யோடி மருவித் திகைத்ததே
திருத்து மட்சரச் செம்மையுள் ளாடியே
　　சென்றும் அண்டந் திருட்டி மருட்டியே
பொருத்து மங்கப் புனலினில் மூழ்கியே
　　பொன்னிறக் கொடி பொக்கிஷம் புக்கினள். (௨௮௦)

வெண்பா.

புக்கினதும் பொக்கிஷத்திற் பொன்னினையும் பூட்டியே
யுக்ரமதக் கிர்தகுசை யுள்ளுளே—திக்குருகிப்
பந்தந் திருத்திப் பராபந்தம் பந்தத்துள்
வந்துருகிக் காணும் மகிழ்ந்து. (௨௮௧)

கலிச்சந்தவிருத்தம்.

　　மகிழ்ந் திடுங்க மலத்து நினைவினில்
　　உகந் திடுந்திரு வள்ளத்தி லூறிடும்
　　புகழ்ந் திடும்புன லங்கது பூண்டிடும்
　　அகந் தெரிந்தவர்க் காறு மருவியே. (௨௮௨)



அருவி யப்புன லச்சுனை யங்கனே
மருவி யூறி வளர்ந்த வமுதமாய்க்
குருவி னுதங் கொடுக்கத் திரண்டது
பருகி வெண்ணெய தாகும் பராபரம். (௨௮௩)

வெண்ணெய் தன்னை மிடுகக் கனலிலே
கண்ணை வாட்டியுட் கண்ணையும் பார்த்திடில்
பின்னை யுச்சிப் பெருத்திடு மந்தரம்
முன்னே நின்று முடுகி யுலாவுமே. (௨௮௪)

முன்னே நின்று முலாவிய ※ முத்தியை
எண்ண மான வினத்தி லிருத்தியே
சொன்ன மூன்றெழுத் துள்ளில் திருத்திடில்
பின்னை யென்ன பிறப்பது மில்லையே. (௨௮௫)

இல்லை யில்லை இவர்க்கொரு கேடுங்கா
ணில்லை யில்லை யிவர்க்கு வருத்தமும்
இல்லை யில்லை யிவர்தான் பிறப்பது
மில்லை யில்லை யிறப்பது மில்லையே. (௨௮௬)

இல்லெனும் புகழ்ந் தேற்றிய சூட்சியை
இல்லெ னும்பிற சூல்கலி மாவினில்
இல்லெ னும்பிறை யோனுரை யானதை
இல்லெ னும்பொருள் தன்னை யெடுத்திடே. (௨௮௭)

எடுக்க வென்று விதமாங் குருமொழி
தொடுத்துக் கொண்டுமெச் சொல்லைத் துணித்திடில்
விடுத்த மெய்ச்சிவ னுந்தேக மாகிடும்
அடுத்த நந்தி யருளுப தேசமே. (௨௮௮)

தேச மான சிவகுரு பாதத்தை
வாச மாக மனத்து ளுகந்திடில்
ஆசி வாயமு மந்தரப் பட்டம்போல்
நேசி வாசி நிலையோ ரெழுத்துளே. (௨௮௯)

ஓரெ ழுத்தை யுறவாக நோக்கிடு
ஓரெ ழுத்தை யுறவா யிருத்திடு
ஓரெ ழுத்தின் குருவை யுகந்திடு
ஓரெ ழுத்துப தேசத்தை யுன்னிடே. (௨௯௦)

---

※ முத்திரை என்றாவும் பாடம்.

உன்னுங் காலினை யுள்ளுறக் கொண்டதா
னின்னுள் வந்து நிறுவி யறிந்தபின்
தன்னுள் வந்தது சற்குரு வாகிடும்
மண்ணும் நீரும் மருவிடு முண்மையே. (௨௯௧)

வெண்பா.

மண்ணுடனே நீரும் மருவியிதி ரண்டுமொன்றாய்
எண்ணமுடன் ரூப மிதுவாகுந்—திண்ணமது
வாய்வுடனே வன்னியுயிர் வாழ்வுவெளி யாகாசம்
யாவருக்கு மாகு மறிந்து. (௨௯௨)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அறிந்துவரு மப்புனலு மங்கியது மக்கமல
மத்திிற வாய்வு வெளியும்
மறிந்துவரும் வன்னியுடன் வல்லமைக ளஞ்சது
மலர்ந்துருவ தான குணமும்
செறிந்துவரு நெற்றியிடை செம்பவள மொத்தவிதழ்
சேர்ந்துவரு மச் சொருபமும்
உறைந்துவரு முன்னுகம லத்திடை யொளித்ததும்
உகந்துவரி லுட் சொருபமே. (௨௯௩)

உட்சொருப முள்ளுற வுகந்துவரு மப்புனலை
யுட்கமல மீதி னிடையே
நற்சொருப நன்றென நலத்தொடு திறத்தில்வரு
நந்தியுறை யும் பதியிலே
அச்சொருப மவ்விரு ளகத்திடை தொடுத்ததும்
அசலமனை புகுந்து திரமாய்
வைச்சொருப மன்னொளி மலர்க்குயி லெனத்திறம்
வருந்திவரு மச் சொருபமே. (௨௯௪)

மச்சொருப மானதுவ ருந்தியிரு நாசியிடை
வல்ல வெலும் பேழிடையிலே
நிற்சொருப நின்மல நெருக்கியறி வுக்குமுறை
நிற்சிவ மனக் கமலமே
நற்சொருப மானதுநன் னுவில்வரு நந்திதிரு
நாதமுள் ளெழுந்த வகையால்
பொற்சொருப பொன்னணி புரண்டலைய வந்தது
புகுந்தது புனற் கிடையிலே. (௨௯௫)



சந்தவிருத்தம்.

புனற்கிடை புகுந்தது பொருப்பிடை நிமிர்ந்தது
புவிக்கிடை யமர்ந்தது பொருட்கிடை வருந்துமதனுல்
அனற்றிரு வறைக்குள்வரு மங்கியருள் மேல்வெளியி
லக்குரு வகத்திருவி லப்படி யிருந்தபரமே
தனற்கிடை தரித்தது தனத்திடை யிருந்தது
தலைக்குற நிமிர்ந்தது தரித்துவரு மச்சுகமிலே
மனக்கிடை புகுந்தது மனத்திடையில் வந்தென
வன்னியுயி ருடலெவு வன்னருள் மனக்கண்வெளியாம். (௨௯௬)

மனக்கண் விழியச்சர மருட்டொடு புகுந்தது
வருந்துவது மூச்சி யிடையில்
இனக்கனை தொடுத்துவில் லெடுத்துயர் பதத்தளவு
மின்பசுக மற்ற வெளியில்
நினைத்திட மருட்டுவது நிச்சய மெனக்கருதி
நீரழகி வன்ன முலையாள்
கனைத்திட விடுத்தது * கமண்டலம தாடியே
காவியுற வாவியில் வரும். (௨௯௭)

வாவிதனில் வந்ததை மனத்தொடு மனத்துற
† மறிப்புற வலக் கரமிலே
பாவிவர வேபொருளை யாவியதி னுகமுற
வசைந்திட வனற்கண் வெளியாங்
தேவியிவ ளாமெனவே செவ்விழி செவப்பினிற்
செயவருணன் மன்ன னுறைவாய்
நாவிகுறை யாமல்நல மாகவரு நாதமும்
நன்னிலங் கடந்து புகுதும். (௨௯௮)

கடந்தது புகுந்ததுவும் ஊக்கனையு கந்ததுவுங்
கண்ணின்மிசை கண்ட வகையும்
இடந்தனி லிருந்தவ னெழுந்தது மிசைந்ததும்
இனத்தொடுற வானவகையுங்
கிடந்தர வெழுந்ததுஞ் செயற்குறுதி குருவருள்
தெளிந்தவர்கள் கண்ட வகையும்
படந்தனை யுகந்துவரு பார்த்திபர்க ளுக்கிது
பணித்திடப் பகர்ந்த வுரையே. (௨௯௯)

* கவண்டலம் என்றாஉம் பாடம். † மறிப்புகை என்றாஉம் பாடம்.

பணித்திடப் பகர்ந்தவுரை பார்பணி விடைக்கெதிர்
படைத்தமைத் திருத்து ஹக்கனே
யுனித்திட முளத்துளே யுகந்தவர்க ளுக்கிது
வுயர்ந்துவரு ஞான மதிகம்
துணித்திடருள் தோத்திரஞ் சூட்சமது வாயுறை
தொகுத்தன னுயிர்க ளெவைக்கும்
நணித்தருளும் ஹக்கனே நலத்துறவே காணவென
நாதன்மொழி நாடி யிசைத்தாம். (௩௦௦)

இசைத்தன னெவர்க்குமிறை தன்னையிரு கண்ணுற
வெழுந்துதெரி சிக்க வெனவே
யசைத்தவிறை முத்தியரு ளானபிதா வானகுரு
வன்புதனைக் கண்ட பயல்தான்
வசத்தொடு மெழுந்தமலர் வாசமுடன் தேன்து
வருந்தியினிப் பான வமிர்தம்
ருசிப்பொடு குடிப்பது மிதற்குநிக ரில்லையென
நொடிக்குளுரை செய்த வகையே. (௩௦௧)

ஞானகாரணம்

முற்றுப்பெற்றது.

ஹாமீம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஞானதோத்திரம்.

## பாயிரம்.

### வெண்பா.

வகையாம் பரத்தின் வடிவுதனைக் கண்டு
துகைஞானத் தோத்திரச் சொற்பாத்—திகையாமற்
கண்டறிப வர்க்கிதுவே ஹக்காகு மென்றருண்மை
கொண்டவர்க்கே சொன்னேங் குறித்து. (௧)

### தோங்கல்.

ஆலந் தனையெல்லாம் படைத்தகோமான்
ஆவி தனக்குள்ளே அமர்ந்தவன்றன்
கோலந் தானொரு வகைக்கடங்கான்
குறிமறை சாஸ்திரந் தனக்கடங்கான்
சில முடன்றேவர் முனிவர்களுஞ்
செயற்பே யரக்கர் மனுடர்களும்
ஞாலந் தனிலுள்ள பறவைகளும்
நாற்கா லூர்வன குலந்தேடவே. (௨)

தேடித் திரிவார்க ளதுவதுக்குள்
சிக்கி யிருந்தவ னவனாகியே
கூடிக் கலந்தொன்று யிருந்தவன்றன்
குறியின் பெருமையின் குறிப்பதனை
வாடி யிருந்துயான் கண்டதென்ன
வடிவான் கடற்றிரைத் திவலைபோலுங்
கூடி யறிந்துயா னுரைத்தேன்ஞானக்
குருவி னுபதேசப் பொருளினாலே. (௩)

குருவி னுபதேசப் பொருளினாலே
கொக்கி யிருகாலைக் குறித்திழுத்துப்
பருகி,யிருகாலும் அருணனொடு
பாய்ந்தம் புலிவந்து பருகியேற்றும்

கருகுங் கலைபுலி தனைவெருட்டிக்
காரிமட மானுங் கலையூறியே
உருகி யிறையவ னுட்கலந்தே
யொன்றாய் மருவிய வுண்மையாமே. (ச)

உண்மை தனைக்கண்டு குருவுரைக்க
வுரைத்த படிகண்டே உலகுக்கெல்லாம்
செம்மை யுடனறி வதற்குரைத்தேன்
திருவுற் பணங்கொண்டோர் தெளிவாரென
வெண்மை யுடன்ஞான முந்நூறுமாய்
விளங்கவருள் தோத்திர மெழுநூறுமாய்
நன்மையுடன் ஞானமுந் நூறுஞ்சொலி
நலமான தோத்திர முரைக்கலாமே. (ரு)

உரைக்கும் பரிசென்ன வெழுநூறுக்குள்
ளொருபாதி தோத்திரம் பாதிஞானம்
விரைக்கும் விரவியே யுரைக்கவிந்த
வேதரி றசூல்தன் கிருபையாலால்
பரைக்கு மபூபக்கர் உமறுதுமான்
பாய்மலீ ஹஸன் ஹுஸைநிஞெடு
நிரைக்கு மவர்பாத முளமேற்கொண்டு
நெடியோன் கிருபையால் நிகழ்த்துவமே. (சு)

நிகழ்த்தும் பரிசுதென் கோடையில்வாழ்
நிறைக்குங் கனிவர்க்கம் நிகரிலாது
உகழ்த்துமே பூங்கா வனச்சோலையில்
வொளிர்கார் முகில்வந் துலாவிவரும்
புகழ்த்தும் புலிமானும் ஒருதுறையிற்
போகப் புனலுண்ணும் புதுமைவளம்
திகழ்த்தும் பரிவீரஸ் சேரன்சர்
திசைக்குட் கோட்டாறுவாழ் சிறியனென்றே. (எ)

உன்னும்புகழ் ஆதம் தலைமுறைக்குள்
உதித்த புகழ்நபி யுயர்த்தியினால்
வன்னமுடன் முகியித் தீனுடைய
வரிசைத் தலைமுறை வண்ணத்தாலே
திண்ணமுடன் பெரி யோர்களுமே
சேருமொலி மார்கள் மூமீன்களும்
எண்ணமுடன் அபு தாலுகளும்
மிஞ்சையுங் குதுபுக ளெல்லோருமே. (அ)



எல்லோ ரும்வந்த வகைபோலவும்
இவர்கள் தலைமுறை வகைபோலவும்
வல்லோன் கிருபையால் நாலுவேதம்
வகுத்த வருள்நிறை கித்தாபுகளும்
நல்ல பாரிசு யூநானியும்
நவிலும் சுரியானி அபுருனியும்
வெல்லு மருள்கொண்ட அறபானியும்
மேவிப் புகழ்ந்துதா னுய்ந்தோர்களே. (கூ)

ஆய்ந்த வகைவேத சாஸ்திரங்கள்
அறியும் உதுமான்லெப்பை ஆலிமருள்
பாய்ந்து வரும்ஷெய்கு மன்னனருள்
பரத்தில் வரும்அபூ பக்கர்பாலன்
ஏய்ந்த மறைவேத சாஸ்திரங்கள்
இன்சொல் கலைக்கியானந் தேர்ந்தறிந்தோன்
வாய்ந்த புகழ்ஷெய்கு முகியித்தீன்
மலுக்கு முதலியான் வழுத்தினனே. (க0)

வழுத்து மிறையவன் கிருபையாலும்
வல்ல மஹ்மூது கிருபையாலும்
உளத்தில் வரும்நால்வர் கிருபையாலும்
உவைசுல்கர் னியின்அருள் கிருபையாலும்
களிக்க வருள்தருங் குருவினுட
கனக பதமதின் கிருபையாலும்
செழிக்கு முகியித்தீன் கிருபையாலும்
ஷெய்குமன் சூர்ஹல்லா ஜருளினாலும். (கக)

வெண்பா.

அருளினு லிந்தவருள் ஞானத்தோத் ரத்தைப்
பொருளினு லின்சொற் புகல—வரமகிழப்
பொங்கும் கிருபை புகழ்பீர்ஹல் லாஜருளால்
அங்கர் தெளிந்தருள்செய் வாம். (கஉ)

அருளா யுரைத்த அரியமுறைப் பாடற்
பொருளாய்ந்து கொண்டவர்கள் புத்தி—யிருளர்
பிழைவந் திடினும் பொறுத்தருள்செய் வீரொன்
களைதீர்த்துக் கொள்வார் களித்து. (கங)

அறுசீர்க்கழில்நெடிலடி யாசிரியச் சந்தவிருத்தம்.

களித்து மகிழ்ந்து கருத்துத் தெளிந்துயர் காரண மானவரும்
பழுத்துக் கனிந்த பழத்தின் ருசிதனைப் பார்த்தமு துண்டவரும்
ஒளித்துத் திரிந்த பொருளை மனத்தினி லுள்ளுறக் கண்டவருந்
தெளித்து வடித்துச் சிறியே னுரைத்ததிற் சேர்பிழை தீர்ப்பவரே. (கச)

தீர்த்திந்தப் பாடல் திருத்திப் பிழைதீர்த்துச் சேர்த்துக்கை கொள்ளுவ
பார்த்திந்தப் பாட லுரைத்தது முன்பெரி யோர்கள்ப கர்ந்ததுவும் [ரோ
ஆர்த்திட முன்பெரி யோர்களு ரைத்ததே ஆவின்பா லாகுமது
பார்த்திட விம்முறைப் பகட லெருக்கிலைப் பாலெனச் சாற்றுவரோ. (கரு)

சாற்றிய வாறது ரைத்திடின் முன்பெரி யோர்களின் பாடலெல்லாம்
மாற்றிடும் பொன்னது வாணிக்கி சைந்திடும் வாறது போலாகும்
பூத்த பசும்பொன் றனக்கு நிகர்காக்கைப் பொன்னினை வைப்பதுபோல்
நேத்தியுள் யாவருந் தான்நயக்க நெடி யோனைப்பு கழுவனே. (கசு)

புகழும் படிசிறி யேன்பதி னுறுவ யதுப்பி ராயமதில்
மகிழுநல் நந்தியைக் கண்டு தெளிந்து வடித்துரை செய்தனனல்
திகழுங் குருவரு ளாலுமிப் பாடல் தெளிந்துரை செய்ததனை
புகழும் படிபெரி யோர்க ளறிந்துபு கழ்ந்துபொ ருந்திடுவார். (கஎ)

பொருந்திடு மவ்விருள் தன்னிலிருந்து புகழ்ந்திடும் வல்லவனே
திருந்திடு வோர்க ளுளத்தி லிருந்து செயப்படும் நாயகனே
அறிந்திடுங் கால்தலை தான்கடந் தேநடு வாகிய காரணனே
முருந்தடி யேனுளந் தன்னி லிருந்துமொ ழிந்துரை செய்குவையே. ()

செய்குவை யாரு மறியாம லென்னுள் திருந்தி யிருந்தவனே
ஐய வுனையடி யேன்தெரி சிக்கப் பாகுரு வானவனே
மெய்யி லிருந்துபொய் தன்னை வெறுத்துமி குந்திடு மேலவனே
ஐயமென் றுன்து யாவையும் போக்கி யருள்தரும் ஆண்டவனே. (கசூ)

ஆண்டவ னேயுனை யாரு மறிந்தில ரன்பர்க் குகந்தகனி
நீண்டவ னேநிலை யாதொரு பேருக்கு நிச்சய மானவனே
பூண்டவ னேபரி பூரண மாகப்பு கழ்ந்துநி றைந்தவனே
நான்றது வாறெழுத் தொன்றி லிருந்து நயந்தரு நற்பொருளே. (உ0)

நற்பொரு ளுச்சி குளிர்ந்திரு பேரும் நடுவணை தன்னில்வர
விற்பொறி தன்னி லிருந்தசை யாத வெளிக்கு ளுருண்டுவரும்
மற்பொறி போல மருவிடி லாறும் வசந்தரும் வண்ணமென
வுட்பொறி யுற்றிடி லூன்றிய காலு மொளிக்கதிர் மேல்வருமே. (உக)

பாயிரம் முற்றிற்று.



# கனியிதழமுதம் அருள்பதிகம்.

வெண்பா.

மேல்வருதல் கண்டு வெளியைவெளி யோடாக்கிக்
காலதற்கு ளக்கினியைக் காட்டியே—வேல்தொடுத்துக்
குத்திக் குலைசரித்த கொவ்வை யிளங்கனியை
யத்தி யுணரவரு ளாம். (க)

அறுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

அலைகடலோ டெழுபுவியு மமாருறை வானகரு மருளி னாலே
உலைவினுடற் பலமனித ருயிர்கள்பல வகைகருவி னுருவா முன்னம்
குலைவகிலை யெனுமுறவு கூரிருளி னகத்திலருள் கொள்ளுங் கோவே
கலைமனதிற் பழுத்துறைவு கனிந்தகனி யிதழமுத மருளுவாயே. (உ)

உனைமனதில் நினைவுதர வுயிர்கள்பல வகையினமு முள்ளி லாடும்
அனவரத நேரமுமென் னகத்தினடம் புரிந்துவரு மமுத கோவே
மனதில்வரு நுக்தாவோ ரலிபாக விருந்துறவும் வகைசெய் தோனே
கனமுனது திருவுறைவு கனிந்தகனி யிதழமுத மருளு வாயே. (ஙு)

அருவுருசொ ரூபவகை யணுவளவு மில்லாதவ் வனத்தின் மீதிற்
பருவமுறுங் கூரிருளி லுண்டிலையென் றுன்னுமந்தப் பருவ மேதோ
தெரியவரு நுக்தாவோ ரலிபாக விருந்து சுஜூத் திட்டருபா
கரியமென விருந்தமலர்க் கனிந்தகனி யிதழமுத மருளு வாயே. (ச)

அனலெழுந்து புகைவாய்வு மங்கியது மிருவாச லறையின் மீதிற்
றினம்வருநின் பதமெனவே செப்புமது கேட்டெழுந்து திசைக்குள் விம்மி
இனமதுதா னினைத்தோடே யிசைந்துவரு மதினிடைக்கு ளின்பமானேன்
கனல்வரநின் பொருள் வெளியிற் கனிந்தகனி யிதழமுத மருளு வாயே()

ஒருசொருபவாமறைவுமொருசொருபவெளிமறைவு மொருசொருபநடுவு
வருசொருபமிருபதியின்வகையதனைத்திருசொருபவாவிமீதிற் [றைவதாய்
பொருள்சொருபவாசிநடுப்புரந்தானேவெனவிருந்துபுரிந்தமானே
கருசொருபமறையெனக்குட்கனிந்தகனியிதழமுதமருளுவாயே. (ரு)

ஒருகாலம் பரமாடி யொருகாற்பம் பரமாகி யுடலிற் சேர்க்கும்
இருகாலுஞ் சுழிமுனைக்கு ளேகமா யாடிநின்று நிறுவி யெங்கும் [மானே
பொருள்கால்நின் னருளதல்லால் வேறிலையே * யென்றெவரும் புகழ்ந்த
கருகாலும் நினைத்தகத்துட் கனிந்தகனி யிதழமுத மருளு வாயே. (எ)

* என்றுவாம்புரிந்த என்றுஉம் பாடம்.

இல்லெனுநின்பொருளேத்தி யிறைஞ்சிடுவோர்க்காரிருளி லிருந்தவாறும்
தில்லெனவே மறைத்திடவு மிருவருணை வெளியில்வந்து திகைத்தவாறும்
வல்லபத்தி னடுவாக விருள்கிறநா மென்றுரைத்து வருகு மானே
கல்லெனவந் திருந்தகத்துட் கனிந்தகனி யிதழமுத மருளு வாயே. (௮)

வாசமுற வொருகரமே திருவொளிவு வொருகரமே வாடு வோர்க்கு
நேசமுற விருந்தவர்க்குக் கொடுத்துவரும் நிலைத்தகர மொன்றே யாகும்
பாசமல ரெனவிருந்து பரிந்துவரு மஹாஜமே பரம மானே
காசமற வுனதுதிருக் கனிந்தகனி யிதழமுத மருளு வாயே. (௯)

ஓரெழுத்தி லுறைவான வோரெழுத்தை *யிகழ்ந்துமோ ரெழுத்த தான
பேரெழுத்தை யறியாமற் றிரிவதல்லா லுனதெழுத்துப் பிறக்குந் தானே
வாரெழுத்து நேரெழுத்தாய் வந்திருந்து தொழில்புரியும் வரிசை மானே
காரெழுத்து வுனதுதிருக் கனிந்தகனி யிதழமுத மருளு வாயே. (௧௦)

கனியிதழமுதம் அருள்பதிகம்
முற்றிற்று.

ஆ திருப்பாடல் - ௩௧.

# ஞானசாதனம்.

### வெண்பா.

ஆடினவா யென்னு ளமர்ந்தவா அட்சரத்தைத்
தேடினவா அங்கி திறந்தவா—கூடினது
மின்னெனவந் தேமான் கலையை வெருட்டிவருங்
கண்ணிணைக்குத் தாராய் களித்து. (௧)

### எண்சீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

களித்திருந்த பொருளறிவ தென்னே ஞானக்
கருத்தென்னே கமலமென்னே கருத்தா னென்னே
விழித்திருந்த விழியென்னே சுடர்தா னென்னே
மெய்நிறைந்த மலமென்னே விளம்பிப் பார்க்கில்
சுழித்திருந்த † வெழுத்தென்னே சூட்ச மென்னே
சொல்திருத்தி முகமென்னே துணைதா னென்னே
நெளித்தவர்க்குத் தெரியாத வகைதா னென்னே
நீயென்னே நானென்னே நிறுத்துப் பாரே. (௨)

* யுகந்து என்றாஉம் பாடம்.
† சுழியென்னேஎன்றாஉம் பாடம்.



பார்த்திடவே தெரியுமந்தப் பரங்கள் தானும்
பரிதெரியும் பரியினடை யாளந் தோன்றும்
காத்திருந்த ஞானவெளி கருத்திற் பூணும்
கருத்தறியா மானிடர்க்குக் காணு தென்னும்
எத்தியிருந் தேத்திடவே யெல்லாங் காணும்
இணையற்று நின்றபொரு ளெல்லாங் காணும்
சேர்த்திடவே திருநிறுவி யருளுங் காணும்
ஜெகஜால மின்னதெனத் தெளியுந் தானே. (௩)

தெளிந்ததொரு மூன்றெழுத்தைச் சிரத்திற் சேர்த்துத்
திருத்தியொரு புறத்திருந்து செயலைக் காட்டி
ஒளிந்துநின்ற பரத்தளவு முன்னி யேத்தி
ஒவ்வாத காமியத்தை யறுத்தே *யோட்டி
மொழிந்துநின்ற மூன்றையுமோர் முகம தாக்கி
முத்திபெறக் குருவினருள் முடுகிப் பார்த்துத்
தெளிந்ததுக்கு ளெல்லாம்நின் னுள்ளே யாகும்
செயலறியக் குருவினருள் தேடிப் பாரே. (௪)

தேடியதோ ரருட்காண நிலையங் காணத்
திருக்காணச் செயல்காணச் செல்வங் காண
வாடியதோர் வாட்டமென்ன வெல்லாங் காண
மலர்ந்ததுவுங் குவிந்ததுவும் மருவிப் பூணக்
கூடியதோர் கூட்டமெல்லாம் நிலைத்துக் கொள்ளக்
குருபதத்தை மனதுள்ளே குறித்துக் கொள்ள
நாடுகின்ற தேவர்களுங் காண்கி லாத
நலமான பொருளதனை யறியத் தானே. (௫)

அறிவதற்கு வகையேதோ விளம்பக் கேளாய்
ஆதியென்னே அனாதியென்னே சோதி யென்னே
நிறைவற்று நிறைவ தென்னே யிறைவ னாரோ
நிலைத்தறிவ தாதியையோ அனாதி தானே
குறையாத சோதி யையோ நிலைப்ப தென்று
குறித்தமறை யறிந்தோர்கள் குறிக்க வேணும்
மறைவான பொருளதனி லெதுதா னென்று
மகத்துவமாய் நின்றதென்ன வழுத்து வீரோ. (௬)

வழுத்தவென்று வீராறுங் கற்றோர் சொல்லார்
மறைநாலு சாஸ்திரம தறிந்தோர் சொல்லார்

* யூட்டி என்றாஉம் பாடம்.

சுழித்ததென்ன சுழித்ததுக்கு ளிருந்த தென்னே
சொல்முகத்தை யறியாதோர் சொல்லார் சொல்லார்
விழித்ததென்ன யிருவளையங் கலிமா வாசி
மேற்கொண்டு குருவருளை யறிந்தோர் சொல்வார்
அழுத்தமுறக் குருவைமனத் துகந்து கொண்டே
அருளதனைக் கண்டிருந்தோர் சொல்லு வாரே. (எ)

சொல்வதுதா னார்க்கென்றால் நிலையில் நின்று
சூட்சமுற்று முணர்ந்தோர்க்குச் சொல்ல வேண்டும்
அல்லாட்டால் மற்றோர்க்குச் சொன்னையானல்
அருமையுள்ள பொருளதெல்லா மபத்த மாகும்
வெல்லமுடன் வேற்பட்டை நீரை யுண்ட
வெறியனைப்போல் நிலைமாறி வீண ராவார்
நல்லதுணை நிலையமதி லிருந்தோ ருக்கு
*நாதாந்தஞ் சொல்லிவிடில் நலங்கொள் வாரே. (அ)

நலங்கொள்ளுந் திருவருளை நாக்கு மூக்கு
நயனமுக முடனுசிக் கிடையி லேதான்
தலங்களிது தனைப்பார்த்துத் தாக்கி நோக்கத்
* தனித்திருந்த பிரகாசந் தானே தோன்றும்
மலைத்திருந்து விட்டக்கா லெல்லாம் வீணும்
மலையாதே நிலைத்திருந்தால் மருவிக் காணும்
உலைத்ததென்று முலையாமற் குருவருளை யுள்ளி
யுரத்திருந்தால் ஞானவெளி யுண்மை யாமே. (கூ)

உண்மையாம் பொருளறிந்து நினைவொன் றாகி
யுத்தமத்திற் றெளிந்திருந்து முண்மை யோடும்
செம்மையாங் குருவருளை யறிந்து ஞானச்
செயலறிந்து மலமகற்றிச் சேர்வை யாக்கி
வண்மையென்ன மகுடகுட வாச லானை
மறிக்கநந்தி திருவருளை மனத்திற் பூண்டு
கண்மயமில் லாதபொரு ளதனைக் காணிற்
கருத்தென்ன நிறையவிபு கமலந் தானே. (க0)

வெண்பா.

கமல மலிபார்க்கிக் கண்ணையயி னுக்கி
விமலநந்தி பாதவிசை நோக்கி—லமலம்
நிலைக்குங் குருபதமே சித்துக்கொண் டோர்க்கு
மலைக்கு நிகரலிபாம் வந்து. (கக)

ஞானசாதனம் முற்றிற்று.

ஆ. திருப்பாடல் - சஉ.





# மவுத்துநாட் பிரார்த்தனைப்பதிகம்.

தாழிசை.

வந்திருந்தவுனை யானுமென்மனது
வந்துகொண்டுறவ ணங்கிலேன்
வாறுநாலினிடை நீயிருந்ததனை
வாசிமீதிலுற வைத்திலேன்
எந்தவாறுநீ யெனக்குநின்பத
மிசைப்பதோயினமு மறிகிலேன்
ஏகனானவ னெவர்க்குநாதமதி
லிச்சைமுத்தென யிருந்தவா
சிந்தைமீறுதொழி லந்தமானபொருள்
செயலினுளுற வறிந்திலேன்
செல்வனேமவுத் தாகுநாளினிற்
செய்வதேதென வறிந்திலேன்
தொந்தநேர்மையது கண்டுநின்றபெரி
யோர்க்குத்தொண்டுசெய் துகந்திலேன்
துய்யநாதபெரி யோனேயென்னுடைய
துயரைமாற்றியருள் செய்குவாய். (க)

செய்யிருண்டஅலி பானதாமுனது
செம்மலானதொழி லினமதாம்
சேர்ந்தகாலிருவ ளைத்துமூட்டிவரு
செய்தியென்னவர லாகுமாம்
மையிருண்டவன மீதிலேயுறைவு
வல்லஹேயுடனே மீமதாம்
வைத்துரைத்துருவ தானமெய்த்தொழிலின்
வாறுதானுறைவு தாலதாம்
கையிருண்டகன மானநின்தொழிலை
கண்டிருந்தவகை யாறினிற்
காவலாமுனது காரணப்பெருமை
ககனிடைக்குள்வரும் ஹக்கனே
துய்யிருண்டுமலர் வானிருண்டுகன
துளிரிருண்டுமவுத் தாகுநாள்
சூட்சமானபொருள் தந்துமென்னுடைய
துயரமாற்றியருள் துய்யவா. (உ)

துய்ப்பாவுனை யறிந்திடாமல்வெகு
துக்கமாகியடி யேனுமே
துன்பவின்பமல மும்மதக்கசடு
தேசமானதை யறுத்திலேன்
வையமீதிலுனை யாருமேயுனது
வல்லபந்தனை யறிந்திலார்
மாறுகின்றவெகு பாவிக்ள்தனிலே
வந்தேன்யானுமொரு பைதல்தான்
பையவுன்னையும் வணங்கிடாதபிழை
பாவியானுனது பாதத்துள்
பாசம்வைத்தினிப் பகர்வதானதைப்
பரமனேயதை யறிந்துதான்
துய்யவாசியிடை நின்றதானவா
தோஷியானமவுத் தாகுநாள்
துயரறிந்தருளின் முறையுகந்தபடி
துயரகற்றியருள் செய்குவாய். (௩)

அருளினால்வருமென் னன்பனுனவநீ
யகத்துளாறிடை யமர்ந்ததைப்
பொருளினுனுறையு முச்சிமீதினிடை
புனலேயேபருக வருள்செய்வாய்
வெருளகற்றியுனை யேநினைத்தபடி
மேல்வாசலில் விரைந்துநீ
மேவுஞானவொளி சூட்சகாயமதில்
மின்னுகின்றபர வேந்தனே
மருளுபுத்தியின ருன்னைவந்தனுகி
டாதபேதன்னுரை மனத்துளே
வாசிமீதினிடை புகுந்துநீதின
மகிழ்ந்துலாவிவரும் வல்லவா
இருளகற்றியுனை யேதினந்தினமு
மேத்தியேவணங் காமல்யான்
இருந்துகான்மவுத் தாகுநாளெனக்
கியல்புதந்தருளு மேகனே. (௪)

ஏகனுனவநீ யிசைந்துஹாமீம்ஜன்
சின்காபெனவுனா மியம்பினுய்
இந்தவாறுதெரி யாமலேத்தி
வசந்துயானுனைப் புகழ்ந்திலேன்



தாகமோகமத காமமானவினை
தன்னையேயடியே னுன்னிச
தகோடிவன்பிழைசெய் தாலுநீபொறுவென்
தக்கவாவுயிரின் தற்பரா
பாகமாயுனை யறிந்திடாதபிழை
பலதுநீபொறுநற் பரமனே
பத்திவிட்டமனு வானபேர்களது
பகையைமாற்றியருள் பரமனே
வாகமானபொரு ளறிவிலாதேன்மவுத்
தாகுநாளுனது கிருபையால்
வானோர்தேடுபொரு ளேயெனக்குனருள்
வரிசைதந்தருளென் வல்லவா. (௫)

வல்லவாயெனை யுருப்படுத்தியே
வளர்த்துவைத்தறஹுமானும்நீ
வானோர்தேவர்முனி பேயரக்கர்புகழ்
மனுடருக்குதவும் வல்லனீ
வல்லவாயுபுகல் மண்தண்ணீர்வெளியும்
வன்னிவைத்தறஹுமானுநீ
மருவுவாரிகட் லேழொடெண்மலையின்
வகையுமேபுகழ நின்றவா
வல்லமாமனுடர் வஞ்சமானகண்
ணேறு*காவசை வ்ராமலே
மனதில்நின்பொரு ளுகந்ததாலெனது
வறுமைதீர்த்தருள்நின் கிருபையால்
வல்லவாவடி யேனுமேமவுத்
தாகுகாளெனை யடக்கிடில்
வந்துதானிருவர் கேட்கும்வேளையில்
வந்துரைத்திடுமென் வல்லவா. (௬)

ஆருமன்றியே நின்றகாலமதி
லாதிசோதிய ளுதியாய்
அருபரூபசொ ரூபமாகநீ
யமர்ந்ததாரறிவ ரன்பனே
பாரில்வந்தொருவர் கண்டதோபர
வானில்வந்தொருவர் கண்டதோ
பாகமாகநீ யிருந்தேயாடின
பரமசூட்சியறி வார்களோ

*காவுளாற்றி என்றூஉம் பாடம்.

நேரதென்றுமன மாய்கைதானற
நிச்சயத்துனை வணங்கிடார்
நிலையிலாதவர்கள் செய்தவஞ்சனைகண்
ணேறுதீர்த்தருளென் னெடியவா
ஊருளொன்றுமவை தான்மறைந்துமுயிர்
தானொடுங்கிமவுத் தாகுநாள்
உன்னியெந்தன்மனந் தன்னின்வந்துனை
யுணர்த்துநீயருள்செய் தொருவனே. (௭)

தந்தைதாயுட னிருவர்கூடியே
தானுகந்துவரு நேரமில்
தனியவாவதி னோடுசென்றுநீ
தனித்திருந்துருவ தாக்கினாய்
அந்தமேதுமி லாமலேயதின
கத்திருந்தவனும் நீயலோ
அருபமானது சொருபமாய்வர
வனுகினின்றவனும் நீயலோ
சிந்தைமீதிலுறை வாயெழுந்துவரு
செயலுகந்தவனும் நீயலோ
சின்மயங்களுறு பூதமஞ்சிலுரு
வாகவந்தவனும் நீயலோ
வந்துன்பேரினை மறந்தமானிடர்
வஞ்சமாற்றுமவுத் தாகுநாள்
வல்லபேர்கள்வரும் வேளையில்யென்னுள்
வந்துரைக்குமறஹ்மானுநீ. (௮)

வெண்பா.

றஹ்மானே நின்றன் நிருவினைக்குள் ளான
பகுமறியாப் பாவிமவுத் தாம்நாள்—ஒகுத்தில்வந்து
கேட்பவர்க் கிரங்கிக் கிருபையுட னேமொழிவா
யார்ப்பனத்துக் குள்ளுறையல் லாவே. (௯)

அல்லாவே யுன்னை யறியாத பாவியினன்
பொல்லாத வன்கபுறிற் போந்திருபேர்—வல்லமையால்
வென்றியுடன் கேட்பவர்க்கு வேந்தனே நீமொழிவாய்
அன்றுரைப்ப தின்றுரைத்தே னய். (௧௦)

மவுத்துநாட்பிரார்த்தனைப்பதிகம் முற்றிற்று.

ஆக திருப்பாடல் - ருஉ.



# ஞானசாகரம்.

எழுசீர்க்கழில்நெடிலடியாசிரியச்சந்த விருத்தம்.

அறிந்திடும் பொருளினை யகத்துள்வரு மச்சுடரை
யானவனல் மூட்டி வெளியிற்
செறிந்திட நிலைத்ததல் முட்பொருளு நம்முடைய
செங்கமல மீதி னிடையே
வறிந்ததை யிருத்தியருள் இல்லினை மருக்கியுள்
வசப்படுதல் கண்ட வுடனே
முறிந்தது பொருந்திடு மொழிந்தது நிசப்படு
முகத்திடை திருத்து முதலே. (௧)

முதற்கிடை யெழுந்திறைவ னுகமது தன்னிலெழு
முச்சுடரு முச்சு டராய்க்
கதிக்கொடு தனத்திடை கருத்தில்வரு காரணங்
கண்டறிவ தார நிகிலேன்
குதர்க்கொடு வருத்துமக் குறியினை யறிந்தவர்கள் *
கோலமதி லான வகையை
*நதத்தின நடத்தைகள் நயக்கொடு நிறைந்தனை
நாபியிடை யுள் ளறிவதே. (௨)

உள்ளறிவ தொத்திருவ ரொன்றுபட நின்றதை
யுகந்தருணன் மேல ருவியே
கள்ளென விருந்தது கனிந்துறவே யுண்டுகம
லத்திடை யிருந்த கனக
வள்ளல்தனை கண்டுமெனி யோடுமெனி யாகிவரு
வாசனை மருண்ட வுடனே
துள்ளியே தெறித்ததைத் துணுக்கென வெடுத்தவர்கள்
துண்டகண் டித மாக்குவார். (௩)

கண்டித படுத்துமவர் கண்டமதி லஞ்சுடர்
கலந்துருவ தாக விபியே
விண்டலமு மண்டலமு மெண்டலமு மேவியது
வெண்சுனையின் மூழ்கி வருமாம்
அன்றேயது பல்வகையு மாக்கியமை செய்ததுவு
மஞ்சதனி லொன்ற தெனவே
நின்றது புரந்திட நிலைத்தறிந்த பேர்களிது
நிச்சய மெனப் புகலுவார். (௪)

* நலத்தின என்றாவும் பாடம்.

நிச்சய மெனப்புகலு நெற்றியிநே ரிட்டவெளி
    நீலேவும் வாரி யதிலே
அச்சமற வவ்விருளி லக்கடலி லச்சுனையி
    லப்பினிடை யுப்பி னுறையிற்
கச்சவ ணிருந்ததைக் கண்டமிர்த மாயுண்ட
    காரணமும் ஹக்கெ னவுமே
வச்சிரம தானகட லாமையது போலறிவர்
    வல்லகுரு வின் றிறமதால். (௫)

வல்லகுரு வின்றிறம் வருத்தும்வகை யேதெனவே
    வானிடை புகுந்த தறியக்
கல்லதனில் தாமரைக் கயத்திடைநற் பங்கயங்
    கண்டவர்கள் விண் டறிவர்காண்
அல்லலற வக்கயமி லாறுநிறப் பொற்கொடி
    யசைந்தவள் களித்து வருவாள்
மல்லுற மனக்கொடியை வாகுடனே கைக்கொளவும்
    வாசமல ராசை யுறவே. (௬)

ஆசையுற வேவதிக ஞானகுரு நந்நிபர
    மாச்சரிய மாச்சரிய மில்
வாசமுற வேயூமை யென்குழவி யந்தமண
    வாளனை வருத் திடுவதாம்
ஓசையுற வுட்சுழித் தொடங்கிய கடுஞ்சுரம்
    உகத்திடை வருந்தி வருமாம்
நேசமென மான்மொழியை நித்தலுந் துதித்தவர்க
    ளெட்கடை மறந் திலர்களே. (௭)

மறந்திலர் மறந்திலர் மருவியே யுகந்தவர்கள்
    மன்னொளியை யுன்னி யுளமில்
உறைந்தில ருறைந்திலர்க ளுட்கமல மீதில்நடம்
    உச்சிதனை யுன்னி யுளமில்
மறந்தது மறந்தது வசந்தர மனத்தினுள்
    மகிழ்ந்ததை யறிந்து மருவிக்
குறைந்திடுவ தில்லையதின் கோலம தறிந்திடிற்
    கொக்கியுடன் குஞ்ச ரமுமே. (௮)

கொக்கியுடன் குஞ்சரமுங் கொண்டதிக மம்புலி
    குறித்துவரு மவ் வருணனும்
செக்கெனத் திரும்பியது செம்மலுற வேசுழி
    தெவிட்டிடுதல் செவ்வி யமதாய்ப்



பக்கமது மெய்ப்புறமு மன்னியது காந்தவொளி
    பத்தியள வாக வுலவி
ஹக்கனிடை தன்பதி கலந்துற மருண்டது
    காலினிடை போய்ப் புகுதுமால். (௯)

வெண்பா.

போய்ப்புகுது மென்றே புகழ்நந்தி சொற்படியே
காய்ப்படுதன் முத்திக் கனியாகும்—வாய்ப்பாகத்
தின்றருசி கண்டவர்கள் செவ்விளருள் மெய்க்குருவின்
கொண்டல்தனைக் காண்பார் குறித்து. (௧௦)

ஞானசாகரம் முற்றிற்று.

ஆ திருப்பாடல் - ௬௨.

# முப்பொருட்பதிகம்.

வெண்பா.

குறித்தவிறை யோனேநின் கோலமறி தற்கு
மறித்துத் திரும்புவகை காணேன்—முறித்திருந்த
கன்னிதனைக் கண்டால்நின் காரணத்தைக் காணுமென்
வுன்னியுளைத் தாயே யுகந்து. (௧)

கட்டளைக்கலித்துறை.

உகந்துனைக் கண்டு முகப்பதற் கென்றுமுள் ளுன்னிவர
அகங்கண் டமிர்த கலசந்திறந்த வரும் பொருளைப்
பகங்கொண்டுள் ளூற்றிற் பருகவென் றன்னைப் பணிந்துவந்தேன்
முகங்கொண் டெனைத்திருக் கண்கொண்டு பாருமென் முப்பொருளே. ()

பேச்சற்று மூச்சற்றுப் பின்னற்ற ஞானப் பெரும்பொருளைப்
பாய்ச்சற்று பாசப் பதந்தேடி யுன்னைப் பணிந்துவந்தேன்
நீச்சற்று நித்தம் நினைவா லெழுந்து நினைவுதர
மூச்சற்று நின்ற முகநோக்கிப் பார்த்திடென் முப்பொருளே. (௨)

அலையா தெழுந்த கடல்மீ திருத்திடு மம்பரனே
துலையா வுறக்கத்துக் காளான தோசிநின் சோதியினை
மலையாமல் நாடி வரவேநின் பாதம் * பணிந்துவந்தேன்
மூலரா முகங்கொண் டெனைநோக்கிப் பார்த்திடென் முப்பொருளே. ()

* பணிந்ததற்குன் என்றாலும் பாடம்.

செந்தா மரையி லுறைந்தா யமுதத் திருவுறைந்தாய்
வந்தாய் மலரை மருவிநின் றுயென்றன் வல்லவனே
பந்தா னதுக்குள் ளனுதின முன்னைப் பணிந்துவந்தேன்
முந்தா முகங்கொண் டெனைநோக்கிப் பார்த்திடென் முப்பொருளே. ()

அய்ய மறநின் பொருளே மனத்தினு ளாய்ந்தடியேன்
மெய்யை யுகந்து விழிகொண்டு நோக்கி வினையறுத்துப்
பையநின் பாதம் பரமென்றி யானும் பணிந்துவந்தேன்
மொய்யென்ற ஞான முகநோக்கிப் பார்த்திடென் முப்பொருளே. (௬)

இருளுக்குள் நின்றன் றிருவுறைந் தேயன் றிருந்ததனை
பொருளுக்கு ளேகண் டறிந்தில னேயப் பிழைபொறுத்து
வெருளுக்குள் முன்னி லிருந்ததைக் காண விரைந்துவந்தேன்
உருளத் திருநின் முகத்தாலே நோக்கிடென் னுட்பொருளே. (௭)

ஆசைக் கடல்வெள்ள மாறெடுத் தோட வனுதினமும்
நேச நினைவுநின் பாதத்தைநாடி நினைந் தடியேன்
பாசம தாய்நின்றன் பாதத்தைத் தேடிப் பணிந்து வந்தேன்
ஓசைத் திருமுகக் கண்ணாலு நோக்கிடென் னுட்பொருளே. (௮)

பாலைப் பருவச் சிறுபய லென்று பகருவர்கள்
ஆளுவ தற்குணக் கெல்லாஞ் சரியென் றறைந்தவனே
காலைப் பருவச் சிறியேனின் பாதத்திற் காட்சி கொண்டேன்
ஆளும்படிநின் முகம்நோக்கிப் பாரென் னகப்பொருளே. (௯)

பொருளே கமல விளக்கொளிப் பாதம் புகழ்ந்ததுகண்
டருளே கிருபை யெனக்கருள் வாய்ந்த வம்புவியில்
வெருளான மாந்தர் பகைசெய்தி டாமல் விழிக்கண்கொடுத்
தருளான நந்தி துணையெனக் கீந்தரு ளாண்டவனே. (௰)

**முப்பொருட்பதிகம் முற்றிற்று.**

ஆ௨ திருப்பாடல் - ௭௨.

## ஞா ன சே க ர ம்.

கலிவிருத்தம்.

ஆண்டவனே நீயிருந்த தவ்விருட் கடந்தே
பூண்டபரி பூரணப் பொருட்கிடை நிறைந்து
நான்றதிரு நந்தியருள் நற்கழி கழித்தே
யூன்றியுரைத் திட்டவ னுகந்திருந்த மத்தே. (௧)



மத்தினி லுறைந்தினி வரிக்கிடை புரிந்தே
சித்துற வெழுந்ததனிற் சேர்ந்தருள வொன்றாய்
முத்திரை புரந்துபின் முகக்கருவி யூடே
பத்தியுற வேயருளைப் பண்புற வுரைத்தார். (௨)

உரைத்தவை மீதிடை யொளித்தது வுறைந்து
விரைத்தகம லத்திடை விழித்தது விரைந்து
பரைத்தடங் கொடுத்தெவையும் வைத்தது பரத்திற்
சிரத்தொடு புகுந்தது தெளிந்தகல மாமே. (௩)

கற்பொருள் கலந்தரவே நன்றிதரு தந்தை
கற்பொலுறைப் பாயுரை கலந்ததுவு மத்தாய்
விற்பரக கத்தொடு மிடுக்கிட வுரைத்தே
அற்பரவு மத்தினி லகந்தெரிவ தானார். (௪)

அகந்தெரித லன்றிருளில் அவ்வுருபந் தானும்
ஜெகந்தரு சொருபமுடன் சேர்ந்தலைந்த வாறும்
உகந்ததின்று தானிருவ ருய்த்தலைந்த வாறும்
பகர்ந்திட வுரைத்திடுகிற் பார்க்கிலது தானே. (௫)

தானெனவே யிவ்விருளிற் றுனிருவர் கூடி
யூனது பொருந்திட வுரைத்துருவு செய்து
வானக மலத்திடை மருவுசுக நாதம்
ஏனமுற மத்தினி லிருந்துறவு செய்யும். (௬)

செய்தகம லத்தினிற் றெளிந்துறவு செய்து
வெய்யக மலர்ந்தகுகை மீதிடை தரித்து
செய்கையிது காலது செலுத்திட வுரைத்த
கைமலர்பு குந்துமத்திற் கண்டுறைவு காலே. (௭)

கண்டுறைவு நின்னுளங் கலந்துருவ தாகி
யண்டுறைவு நின்சொருப மச்சரமி லாகி
குன்றது வளைந்துரைத்த கொள்கையது போல
சென்றது முறைந்தமத்திற் செம்மையது போலாம். (௮)

செம்மையது போலவே தெளிந்த பொருள்தானும்
வெண்மையது முத்தென விளங்கிட நிறைந்து
உண்மையிது வாகுமென வுற்றுரை வனத்திற்
கண்மயமி லாமல்வருங் காரணமி தாமே. (௯)

காரணமி தானதந்தை காயமி லுள்ளான
ஆரணம தானநில டங்கிலந் சைந்தான்
மாரணம றிந்தவர்கள் வன்னிமதி போலாம்
நேரணமு கந்திட நிலைந்ததரு ளாமே. (௧௦)

நிலைத்தருள் நிலைக்கருகி நின்றகம லந்தான்
குலைத்தது குவிந்திருந்த கொள்கையது போல
கலைத்தகலை தங்கிடுங்க ணக்கையறிந் தக்கால்
நிலைத்தது நிசப்படும் நினைவிலுரைப் பாமால். (௧௧)

கட்டளைக்கலித்துறை.

உரைத்தான் கருத்தி லுறைந்தானல் மத்தினி லூன்றியவன்
மறைத்தான் பொருளை மதிகாலிற் கூட்டி மகிழ்ந்தவன்றான்
நிறைத்தான் சரணத்தை நிச்சயமான நினைவி லுன்னி
மறைத்தா னதுகண் டறிவோர்க்கு ஞானம் வசப்படுமே. (௧௨)

நேரிசைவெண்பா.

வசப்படுத்து மெய்ஞ்ஞான மாதவத்தி னூடே
நிசப்படுத்தும் ஞான நிலைக்கும்—உசிப்படுத்த
ஹக்கனையுங் கண்டுவரக் கர்மமது தான்றொலையும்
மிக்கமிடை தீரும் விரைந்து. (௧௩)

ஞானசேகரம் முற்றிற்று.

ஆக திருப்பாடல் - ௮௫.

## மாயமாற்றுபதிகம்.

எண்சீர்த் தாழிசை.

விளங்கமென்ன வறிவறியா விளங்க லாகும்
மிடைகளெல்லா மறியாத மிடைக ளாகும்
களங்கமென்ன பொருளறியாக் களங்க மாகும்
காரணத்தை யறியாட்டாற் கைத்துப் போகும்
பழங்களென்ன காயில்லாப் பழங்க ளாகும்
பாங்குடனே கமலமதிற் பருகு தற்கு
வளங்கள்கொடு நெடியவனே யென்னுள் வந்து
மாயமென்ற மாயமெல்லாம் மாற்று வாயே. (௧)

அம்பரனே வுனைவணங்கா மனுட ருண்டோ
அறிந்தறிந்து நிலைத்திருந்த பெரியோ ருண்டோ
நம்பரனே வுனைவணங்காப் படைப்பு மில்லை
நலமாக வுனையறியாப் பெரியோ ரில்லை



நின்பரனே நிலைந்ததுக்கும் நிலையா துக்கும்
நீயல்லால் வேறுமுண்டோ நிறுத்திப் பார்க்கில்
வன்பரனே யென்னுளத்தி லிருந்து கொண்டு
மாயமென்ற மாயமெல்லாம் மாற்று வாயே. (௨)

ஆவியினுள் நடம்புரியும் பொருளா குருய்
அகத்தில்மத்தா யிருந்துமுருப் பட்ட கோனே
பாவியெனை யதுக்குள்வைத்தே யுரைத்திருக்கப்
பரிவாயுச் சாடனமுட் பரித்த கோனே
தாவியுனை யறியாத பாவி யென்னைத்
தானேநீ கலிதீர்த்துத் தவத்து ளாக்கி
வாவியுறுங் கமலமலர்த் தேனை யுண்ண
மாயமென்ற மாயமெல்லாம் மாற்று வாயே. (௩)

ஹாமீமென் றுளத்திருந்த கமல மானே
காரணத்தில் ஐன்சீன்கா பான கோவே
மூமீனோர் தமக்குதவும் பொருளே யுன்னை
முடுகாதோர் தம்மைவிட்டப் பாலா னோனே
பூமிதனி லுனைமறந்த துற்சனர்க ளான
பொல்லாதோர் செய்பகைக ளனைத்து மாற்றும்
ஆமீனென் றருள்புரியுங் கருணை யோனே
யடருகின்ற மாயமதை யகற்று வாயே. (௪)

மாயமாற்றுபதிகம் முற்றிற்று.

ஆக திருப்பாடல் - ௮௯.

## வாலப்பதிகம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அகத்தைத் திருத்தும் நினதுகா மகத்தைப் பொருத்தி யறிவாக்குந்
தகர்த்துட் பவத்தை வெருட்டிவிடத் தனியே நினைந்து மேங்குவனோ
செகத்திற் பிறந்துங் கொடும்பாவித் திறத்தை யறியா தடியேனை
வகுத்து முனது முகத்தையுளில் வைத்துப் பொருத்து வளர்வாலே. (௧)

ஊத்தை மண்ணிற் படுத்தடியே னுழன்று மதனு ளுள்ளிருந்து
சேர்த்துப் புவனி பிறக்க வென்றே திருட்டாலேவர் விழிப்பார்வை
பார்த்து முருப்பட் டுடலோங்கிப் பணிந்து முனைக்கண் டறியாத
வார்த்தை புரியுஞ் சிறியேனுள் வருவாய் வளர்ந்து வரும்வாலே. (௨)

அடியுமுடியு நடுவின் மறைந் தண்ட ரண்டங் கடந்தப்பால்
படியும் பரமும் நின்கரமும் பழகு மடியார் தன்னருகில்
முடிகி வணங்கிப் பதம்பணிந்து முறையிட் டடியே னுருகாத
படிகண் டெனையு மிகழாதே பழமூ துறையும் பழவாலே. (௩)

நின்கண் கருணை யுருவிளைத்து நின்னு தரவை யுளில்விளைத்துங்
கண்கால் கரம்நீ யாயிருந்துங் கருத்துள் ளருளைத் தேற்றுவித்தும்
என்கா தலைவைத் துனையுருகா தினன் கொடிய பவத்தேனை
யுன்கா தலையுள் ளூறப்பூட்டி யுருகும் படியா ளுறைவாலே (௪)

தூக்கத் திருந்து முனைநாடித் துடர்ந்து கவர்ந்து நின்னருளைப்
பார்க்கும் பழைய வடியவர்தம் பதங்கண் டுகந்தும் பணியாமற்
போக்கும் புலன்வ ழுழவாடிப் பொய்யென் றறியாப் புல்லேனை
எற்கு முனது கழல்தரவந் திரங்கி யருள்வா யிறைவாலே. (௫)

ஆரா ரமுதே மணிவிளக்கே யருளே பொருளே யகவிழியே
சேர்ந்துருகா தமக்குமெட்டாத் திருவே யுருவே திருமணியே
காரார் குழலியிட் டருள்புரியுங் கருணை யிறசூல் கழலெனக்கு
நேரா யடிப்பேற் கருள்புரிவாய் நிறைவே மவுன நிறைவாலே. (௬)

எட்டெட் டெனக்கண் ணடம்புரிந்த வின்பமதைக்கண் டிருப்பவர்சொற்
கட்டெட் டென்று வணங்காமற் கருத்தை யவத்தில் விட்டேனை
ஒட்டெட் டென்றே யுருகாம லுளத்திற் பவத்தா லுறைவோனை
முட்டெட் டென்ற சுழியினடு முனைவந் தருள்வாய் முனைவாலே. (௭)

ஆடா தாடு மவுனமதுள் ளாடி விளையு மன்போர்கண்
மூடா தூன்றி முனைத் தெவையும் மூடிவி லிருந்து முனையேவுள்
தேடாதவர்கள் தனக்கெட்டாத் தேவே தேவர் திருவருளே
ஓடா தடியே னுளத்திலிருந் துகந்தே வருவா யுறைவாலே. (௮)

வே று.

வாலே பரம மணிவிளக்கே மவுன மணிமந் திரப்பொருளே
மனதுள் வடிவ தாயிருந்து மகிழ்ந்து நிறைந்த மறையோனே
காலே கமல நாயகமே கருணை யருளே கண்டவருட்
கருத்தே யுருத்தே கதிர்மதியே ககனிற் றேவர் தனக்கடங்கா
மாலே யுண்மை வளர்பொருளே வடிவே மாண்டோர் தவக்கருத்தே
மாசொன் றணுகா திறையோனே வளமே பழமே வடிவெனதுள்
நாலே நடுவே நடம்புரியும் நாதா ஞான நடுவெழுத்தே
நம்பு மடியார் தனையாட் கொள் நயனவிளக்கே றஹுமானே
நலமுற் றடியேன் றனையாட் கொள் நாதாசோதி றஹுமானே. (௯)

வாலைப்பதிகம் முற்றிற்று.

ஆ திருப்பாடல் - ௬௮.

---



# அருள்வாய்பதிகம்.

சந்தத்தாழிசை.

றஹுமானே யென்னுள் மணியா யுருண்டு
நினைவாகி யெங்கும் நிறைவாய்
நிலையாத காய மதிலே நிறைந்து
நிலைகொண்டு நின்ற பொருளே
பகுமான மென்ற திகழாத புந்தி
பலபேத மாயுன் னடியேன்
பாஞான சோதி யருளான வின்பம்
பரவாத பாவி யானுஞ்
செகமீதிலிந்த முறையா யிருந்து
திருடான பாவ வலையுள்
தினமூழ்கி வந்து மதினா டுழைந்து
சிறைபட் டிருந்த வடியேன்
அகமீதி லூன்ற னருள்ஞான போதம்
அடியார்க்கு ளீந்து னருளால்
அழியாத வெற்றி தரவேணு மென்னுள்
அருள்வா யெழுந் தருளுவாய். (க)

அருளான தென்ற னுளமீதில் வைத்தும்
அடியோடு வீந்து தரினும்
அருள்மீறு ஞானக் கடலான தென்னுள்
அலையே யடித்து வரினும்
வெருளான தென்ற தறவேநின் னன்பு
விழிமீதில் வைத்து முருகா
வெகுபாத கன்றன் மனமே திருந்த
விருதிட்ட பாத மருள்வாய்
திரளான சோதி மணியான வுண்மை
சிவஞான நாத மருளே
திருவாயி லூறும் பனிநீ ரொடுத்துத்
தினமுண்டு கொண்ட சிறியேற்
கிருளான பாவக் கடலான தற்று
மிறையேயு னன்பு தருவாய்
இதமுண்டு கொண்ட சிறியேனுளத்தில்
எழுந்தேயுன் னன்பை யருள்வாய். (உ)

உன்னன்பு மென்றன் மனமீதிருந்தும்
உறையன்பு கொண்டு தினமே
உளமீதி லேழு கடலாக நின்றும்
உயர்வா யெழுந்த வலைதான்
குன்னென் றிரைந்து வருமந்த வோசை
குன்று துறைந்த மணியே
குருநாதமீறி யலையாத சங்குள்
குறியாத முத்தி நெறியே
என்னென்று கண்ட நிலையிந்த வேதம்
இசைநூல்க ளுன்னை யறியா
நிதமென் றௌித்த பொருளைக் கவர்ந்தும்
எடுப்போர்க ளென்று நிறைவாய்
உன்ன[illegible]பு கொண்ட வடியார்கள் பாதம்
உறைவா யெனக்குள் ளருளால்
உ[illegible]றகின்ற முத்தை யடியார்க்கு லீந்தும்
உறைவா யெழுந்தே யருள்வாய். (ங)

வ[illegible]ய்கொண் டறைந்து கண்கொண்ட பார்வை
மனமீ துறைந்த காலால்
*வலமாய் நடந்து கரமா லெடுத்து
வளர்நாசி நெற்றி நடுவே
ஓய்வொன் றில்லாமல் தினமூடு பாயும்
உள்ளன்பு கொண்ட திலனே
ஒருகோடி பாவ வினையே சுமந்த
உடலோ டெடுத்த சிறியேன்
[illegible]யென்ற பாவ வினையேனை யுன்றன்
நடமே புரிந்த பதமால்
நலனென் றிடுக்கி கழல்கொண்டு கவ்வி
நடமாடும் வேளை தனிலே
தாயென் றெனக்கு ளருள்பாலை யூட்டித்
தவறு தெடுத்த பொருளே
சதகோடி பாவ வினையே யுளத்திற்
றருவா யெழுந் தருளுவாய். (ச)

தரவென் றெனிக்கு ளருளான வுண்மை
சரமீதில் வைத்து நினைவாய்த்
தலைகீ ழிரண்டு பதமேலு மாகத்
தானே நடங்கள் புரியும்

* வளமாய் என்றுவும் பாடம்.



வரமான தென்றன் வடிவென்று கண்டு
மனமீது கொண்ட திலனே
மதமீறு வன்பு கரணாதி கட்குள்
வளமாய் நடந்த வடியேன்
உரமீறு மஞ்சு புலனான மாயம்
உடலோ டெடுத்த சிறியேற்
குன்னன்பு மீறு நினைவென்ற வாளி
யுளமென்ற கூர்மை யதனாற்
பொரவே யெதிர்த்து மிருகண்ட மாகப்
பொடியே படுத்தி யடியார்
புரையற்று மாயத் திரையற்று மஞ்சு
புலனற் றெழுந்தே யருள்வாய். (ரு)

புலனற் றிரண்டு பரியற்று மஞ்சு
பொறியற்று காய மதனிற்
பொருளென்ற வித்தை யதினூன்றி ஞான
புனல்கொண் டிறைத்து நினைவாய்
மலமென்ற மாயை யதுவே யகற்றி
மனமென்ற போத மதனால்
வளைவான வேலி திறமா யிருத்தி
வளர்நத்தி காவல் துணையாய்
நலனென்ற பார்வை நினைவூடு தாக்கி
நடுவே விளைந்த மணியை
நல்கின்ற நாத சிவயோகி பாத
நலமா யடுத்து மறியேன்
உலவென்ற சோதி மணியென் னுளத்தில்
உறைவா யெழுந்து நிறைவாய்
உயர் முத்திநாலு கெதிபெற்று வந்தென்
உளமீ தெழுந்தே யருள்வாய்.

வந்தே நிறைந்த இருவாசி யுண்மை
மருடாதி யாதி சுழியில்
வலமாய் நடந்து மிடமே புரிந்து
வருகின்ற வாயு தனையே
கொண்டே பிடித்து மனமீ தொடுக்கி
நுனிகண் டறிந்த பெரியோர்
நூல்கண்டு மந்த முறைகண்டு முன்னில்
நுனிகண் டறிந்த திலனே

எந்தா யெனக்கு ளருளொன்று வைத்த
 தினமென்று கண்டு மறியேன்
எருதபாவம் வெகுகோடி செய்தும்
 இடைகின்ற நாயி னெற்குச்
சிந்தாத நாத மணியே யுளத்தில்
 திருடான பாவ வினையைத்
திருவா லறுத்து முளமீ துகந்து
 தினமே யெழுந்தே யருள்வாய். (எ)

தினமே யுன்றந்து வருகின்ற நாது
 சிவஞான சோதி யருளே
திருடான பேர்க்குன் னருளான வுண்மை
 தினமே கொடுக்கு மருளே
உனமான மென்றோர் மணியான தென்றும்
 உயிரோ டுறைந்து நினைவாய்
அளமீது பொங்கி யுலகெங்கும் விம்மி
 யொருசங்கில் நின்ற மணியே
மதிமான வுண்மை நினைவான துங்கி
 வளமான சிந்தை யதனுள்
வானதி பூத காரணதி யற்று
 மலமாய்கை யற்ற வறிவோர்
கனமானபாத மலரான தென்றன்
 கல்போ லுறைந்து வரவே
கருணை கரப்பொற் கழல்தந்து முள்ளில்
 லறக்கே யெழுந்தே யருள்வாய். (அ)

அறக்கே யுன்னுமங் ககன்மீது தேவர்
 காணா தவர்க்குள் வருவாய்
காரணதி பூத முனிவோர்கள் தேடக்
 காணாத சோதி யருளே
சிங்கா திசைந்து பனிரண்டு மோடித்
 திறமாக வெட்டு முளமில்
திருவான நாலு முளமீதில் வந்து
 தினமோடு மிந்த முறையாய்த்
தொக்காக நாலு நினைவாய்ப் பிடிக்கத்
 துறைகண்ட நாத பெரியோர்
துணையென்ற னுள்ளி லவரோடு கூட
 சூட்சாதி சூட்ச மருள்வாய்



தக்கா ரிருட்குள் மணியாகி யுன்று
 தனியே புகழ்ந்த கனியே
தவறாத பாவ வினையே னுளத்திற்
 சரமு டெழுந்தே யருள்வாய். (கூ)

சரமான தஞ்சு நிறமாக வுன்றன்
 தரளாதி யின்ப மணியே
தானே மொழிந்து நானல்ல வென்று
 தானேடி மீளு மருளே
பரமாதி வேத மறைநாலு சாஸ்த்ரம்
 பகராத தின்ன தெனவின்
பழமூ துரைக்குள் ளுறவா யெழுந்து
 பழகின்ற பேர்க்குன் னருளே
சிரமென் றெழுந்து தினமே மொழிந்த
 திருவெற்றி பெற்ற விறகுல்
திருவன்பு மெந்த னுளமீ துகந்து
 தினமுண்மை கொண்டு மருள்வாய்
வரமாகும் ஞான மயில்வேஷ மான
 மஹாமூ தர்பாத மெற்கு
வழுவா தெழுந்து தரவேணு மென்று
 வருவா யெழுந்தே யருள்வாய் (கO)

அருள்வாய்பதிகம் முற்றிற்று.

---

ஆ திருப்பாடல் - கOஅ.

---

# இருந்தேனென்றபதிகம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கள்ளப் புலனை யறுத்தொடுக்கிக் காரணதிகளைத் துணிவு செய்து
வள்ளற் பதங்கண் டறியாமல் மனம் வேறாகி யலைவேனை
எள்ளுள் ளுறைவு போல் நிறைந்து மிருந்தென் னுளத்தில் நிறைந்திடவந்
துள்ளக்கமல மலரிலுறைந் திருந்தா யானு மிருந் தேனே. (க)

அடியார்க் குனது சேவடியை யழுத்தி யுளத்திலே பூட்டி
முடியா முடிச்சிற் றுக்கிவைத்த முறைகண் டறிந்து வணங்காத [நல்ல
கொடியேன் பிழைகள் தனைப்பொறுத்துக் குறித்தே யுனக்கண் டறிந்த
அடியா ருடனே கூடவந்திங் கிருந்தா யானு மிருந்தேனே. (உ)

வந்தா யடியா ருளந்தேடி வந்தங் கிருந்த வடியாருட்
சிந்தா மணிமுத் தினைவருந்தித் திருத்தி யருத்தி வைத்துனது
நந்தா தருளைக் கொடுத்துவரும் நல்ல அடியா ருடன்கூட
எந்தா யகமே நீபுறப்பட் டிருந்தா யானு மிருந்தேனே. (௩)

எங்க ணிருந்தே யுனதுதிரு வின்ப மணிமுத் தினைவருத்தி
எங்க ணிருந்து மறைந்தாயென் றெளியே னறிந்து வணங்கிலனே
அங்க முறப்பொன் றில்லானே அடியார்க் குனது சேவடியை
இங்க ணிருந்து தாள்புறப்பட் டிருந்தா யானு மிருந்தேனே. (௪)

கண்ணின் மணியே யருட்கருணை கரனே காணி லடியன்மனத்
தெண்ணி லிருக்கும் நற்பொருளே எளியேன் படும்பா டறிந்துனது
பொன்னின் முகமென் னளவிரங்கிப் புரியும் பொருள்தந் துளங்கனிய
என்னுள் மனங்கொண் டேபுறப்பட் டிருந்தா யானு மிருந்தேனே. (௫)

யாவு மனைமக்கு முன்னுகத்தா யொன்று மிரண்டாய் மூன்றாகி
பாவு மதனி லிருந்துபல பாங்கா யிருந்த பரமானே
பூவும்வாசம் போ லெனக்குட் பொருந்து மருள்கண் டடியார்க்குள்
யாவும் பொருந்த நீபுறப்பட் டிருந்தா யானு மிருந்தேனே. (௬)

கல்லேன் புல்லேன் கடும்பவத்தேன் கருத்தை யறிந்து நின்னருளைச்
சொல்லேன் துதியேன் வெறும்புலையேன் தோசியடியேன் பிழைபொறுத்[து]
எல்லாப் பொழுதும் நினைவுமறு திருக்கு மடியா ருடன்கூட
எல்லை தனிலே நீபுறப்பட் டிருந்தா யானு மிருந்தேனே. (௭)

தேறு மெழுத்தே மெய்ஞ்ஞானச் சென்னிப் பழமே தேன்கனியே
வேறுப்புவா ருளத்திலிரா விழிக்கண் மலரி லுறைவோனே
நாறுங் குரம்பை தனிற்கிடந்த நாயேன் றனக்குன் னருளையுள்ளில்
ஏறும் படியாய் நீபுறப்பட் டிருந்தா யானு மிருந்தேனே. (௮)

பச்சைப் பவள முத்தினொளிப் பரமே சிரமே பழம்பொருளே
ஒச்சைப் படுவோர் தனக்குளிருந் தொளித்தே காணு துயர்பொருளே
மெச்சும் பொருளே யுளத்தில்கல மேவு மடியா ருடன்கூட
அச்ச மறுத்து நீபுறப்பட் டிருந்தா யானு மிருந்தேனே. (௯)

அண்டர்பரவு மெய்ப் பொருளே அடியார்க் குதவு மருந்துணையே
தொண்டர்க் கமுதே நடுவெழுந்த சுழியே துதிக்கு மடியவருள்
நின்ற மணியே முண்டகத்தில் நிறைந்த வருளே நீயெனக்குள்
என்றுந் தவறு தேபுறப்பட் டிருந்தா யானு மிருந்தேனே. (க௦)

இருந்தேனென்ற பதிகம் முற்றிற்று.

---

ஆ. திருப்பாடல் - கசஅ.

ஞானதோத்திரம்.

# அருள்வாய்நீயே என்றபதிகம்.

---

அறுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

ஒருவர்கண் டறியா முத்தை யொளித்துவைத் திசைக்குங் கோவே
மருவலந் துறைந்த ஞான வழிசுழி முனையின் வேந்தே
திருவுரு வருவாய் நின்ற செல்வமே சிறப்பா யென்னுள்
மருவுந் றுணையே யுள்ளில் வளர்ந்தெழுந் தருள்வாய் நீயே. (க)

கண்ணினுக் கடங்கா னந்தக் கருத்தினு ளொளித்த கோவே
விண்ணினுக் கடங்கா னந்த வெளிக்குள்ளே விளங்குந் தேனே
பெண்ணினுள் ளிருந்து மாயப் பிரளயம் பிரித்த மானே
எண்ணினுட் கருத்தே யுள்ளத் தெழுந்தருள் புரிவாய் நீயே. (உ)

கடுகள வலையா நெஞ்சைக் கருத்துவே றணுகா தஞ்சைப்
படுகுழி மடவா ராலே பலவடி வாக்குங் கோவே
இடமருள் புரியு முன்றன் திருவடிக் காள தாக
இடுகினத் தமுதே யுள்ளி லெழுந்தருள் புரிவாய் நீயே. (௩)

எழுத்தினை யொருவம் கிந்து மிடுபவர்க் கொருநா ளுண்டோ
பழுத்திடும் பழத்தைத் தின்று பார்ப்பவர்க் கருமை யுண்டோ
களித்துள மகிழ்ந்து முண்மை கருத்துவே றுவ துண்டோ
எழுத்தினுள் ளெழுத்தே யுள்ளத் தெழுந்தருள் புரிவாய் நீயே. (௪)

வஞ்சகன் கொடியேன் பொய்யேன் மாறினப் புலையேன் நெஞ்சுள்
அஞ்சினை யறுக்க மாட்டா வரும்பெரும் பிழையேன் பாவி
கொஞ்சிய விழியாள் மாயக் குறியெல்லா மகல நீந்தி
எஞ்சியல் பதத்தாட் கொண்டென் னுளத்தெழுந் தருள்வாய் நீயே. (௫)

அடிமுடி தனக்கு மெட்டா தருபமே நடுவ தான
வடிவுறுங் குழலாள் மாய மனுடர்தன் னுளத்தி லாக்கிக்
கடிமலர் புனைந்த வேந்தே கருத்துநின் பதத்துக் காளாய்
இடமனத் திருந்து மென்னு ளெழுந்தருள் புரிவாய் நீயே. (௬)

தாமரை யருமை கூடப் பிறந்ததப் பனைக்கு மாமோ
தேமரை யெழுந்த முத்தின் றிறமந்தச் சிப்பிக் காமோ
வான்மறைக் குழலா ளீன்ற மணிக்கருள் வருத்துங் கோனே
ஏன்மனைக் கிசைந்தே யென்னு ளெழுந்தருள் புரிவாய் நீயே. (௭)

அன்பினுன் மணியே யுன்னை யறிவிலா ரறிவ துண்டோ
என்பினுக் குயிரே மாய வெறில்வடி வான கோவே
வன்பிழை வருத்து மங்கை மாயமே யகல வுன்றன்
என்பிரா னெழுத்தைக் காட்டி யுளத்தெழுந் தருள்வாய் நீயே. (௮)

மயிலொளித் திருந்த வேஷம் வருத்திவைத் தாளும் வாழ்வே
துயிலொழித் திருந்த தங்கச் சுடரொளி புதையா வாழ்வே
கயல்விழி மடவார் மாயக் கருத்தைவே ருக்கா வண்ணம்
இயல்புதந் தடியே னுள்ளத் தெழுந்தருள் புரிவாய் நீயே. (௯)

பொன்னினை வுருக்குந் தேய்வும் புகழ்தர நினைக்கும் வாய்வும்
எண்ணிய நினைவை மாற்று மியல்பிலா மங்கை மாயம்
முன்னிலைக் கருவி நீக்கி முறையுநின் பதத்துக் காளாய்
எண்ணிய மணியே யென்று ளெழுந்தருள் புரிவாய் நீயே. (௧௦)

அருள்வாய்நீயேயென்றபதிகம் முற்றிற்று.

---

ஆ திருப்பாடல் - ௧௨௮.

---

# மக்கானுறைபதிகம்.

எழுசீர்க்கழில்நெடிலடியாசிரிய விருத்தம்.

எழுந்தருள் புரிவா யெவர்க்குநா யகனே
யென்னுளத் திருந்தமா மணியே
அழுந்துமட் சர்மே யன்பர்க ளுளத்தி
லறிந்துநின் றுடிடு மரசே
கொழுந்துயர் துனியே திரையினுள் ளிருந்துன்
கொடுங்கனல் மூட்டிடு மரசே
வளந்திரை யறுத்த வர்களுக் களித்த
வடிவருள் மக்கானுறை மானே. (௧)

மானுடன் கலையு மெதிர்த்திருந் ததிக
மவுனமாய் வன்மிசை மருவித்
தேனுறைந் ததனி லோடிவந் தினித்த
தெளிவினி லுருவன்றொரு மணியாய்த்
தானொரு கடலிற் சங்கிட வருத்தித்
தனித்திட நோக்கிடுஞ் சாத்துள்
வானுறப் பிடித்துக் கலையுள் ளாக்கி
வளர்த்திடு மக்கானுறை வாழ்வே. (௨)



வாழ்வது மூன்று மெவ்வையும் பார்த்து
மணியினுள் ளிருந்தருட் கலந்து
தாழ்வது மூன்றி லெவ்வையு மமைத்துத்
தனித்துநின் றுடிடுந் தவமே
ஆள்வது மூன்றல் லாதிலை யென்றன்
னகக்கருத் துறவருள் புரிந்து
வாழ்வதற் குன்றன் னருள்புரிந் தெனக்குள்
வைத்திடு மக்கானுறை வளமே. (௩)

வளமடி யவருள் நிறைந்தினித் திருந்து
மதியமு தருந்திடு மவுனப்
பழமதின் ருசியை யிருதய மதனிற்
பருகுவார் குருவருள் பரமே
களமறுத் தடியா ருளத்தினி லிருந்துங்
கருதிடுங் கமலநா யகமே
வளமுனை யறிய வுளத்தினி லிருந்து
வளர்ந்திடு மக்கானுறை வரமே. (௪)

வாமுனை யறிய வேதநூல் சாஸ்த்ர
வகையினுக் கடங்கிடா வல்ல
சாமுறும் பொருளே சுழிமுனை வாழ்வே
தவமதி லிருந்ததற் பரனே
சிரமுறும் ஹறுவில் நடமிடும் பொருளே
செல்வமே சீர்கலை யறிவே
வரமுறு மடியார் மனத்தினி லிருந்து
வளர்ந்திடு மக்கானுறை மணியே. (௫)

மணியடி யவருள் நிறைந்திடுஞ் சானில்
வலந்திரு வர்கும்வல் லபத்தை
தனியுறப் பிடித்துக் காலினை மாறித்
தரித்தெழுந் தறிந்திடு மவருள்
அணியிடை பாவி விழிக்கிடை மருவி
யன்புற நடத்துமா ரமுதே
மணியருள் பொருந்த அடியனுள் ளிருந்து
வளர்ந்திடு மக்கானுறை மயிலே. (௬)

மயிலெனு மழகாயெக் கீன்மரத் திருந்து
மகுஸஹுக்கு ஆஷிகாய் வளர்ந்து
துயிலொளித் திருந்த சுடரொளிப் பிரபை
தோற்றிடு முவனிடை முதலே

குயில்குரல் முழங்கும் மயில்வடி வழகைக்
[illegible]த்துநின் திருக்கண்ணின் நடுவே
மயல்கொடு மயங்கும் அடியவ ருளத்தில்
வளர்த்திடு மக்கானுறை வடிவே. (எ)

வடிவின்முச் சுடராய்க் காண்பவர்க் கெளிய
மதிகலந் திருக்குமா முதலாய்
நடுவிலச் சுருவாய் அருவமுன் னுருவாய்
நலனுறக் கனிந்தநற் சுவையாய்
அடிமுடிக் கடங்காக் கண்ணின்மா மணியே
அறிந்தவர்க் கருந்துமா ரமுதே
வடித்தெளித் தரசாய் அடியவ ருளத்தே
வளர்த்திடு மக்கானுறை மன்னே. (அ)

மன்னெனும் விளைந்த கடலினில் விழுந்து
வருந்திரை யலறிடு மொலிதான்
குன்னென முழங்கி விழுந்திரை யதிரக்
குவலய முயிர்வகை யாவும்
உன்னுமட் சாத்தா லாக்கிவைத் துருண்ட
வொளிர்தரு சங்கினுட் புகுந்து
மன்னுநா னெனவுந் திருந்திடும் பொருளை
வழுத்திடு மக்கானுறை மதியே. (கூ)

மதிதிரண் டொளிர வெள்ளுளத் திருந்து
வடிவுற வெவ்வையும் பரந்து
பதிதிரண் டலறும் மனுஉறவொன் றுளத்திற்
பாய்ந்திடு மிடமறி யேனே
விதிதிரண் டடியார்க் கருள்குரு பதமே
விளைந்தென துளத்தினிற் கனிந்து
மதிதர வுளத்தி லெழுந்தருள் புரிந்து
வழுத்திடு மக்கானுறை மானே. (௧௦)

மக்கானுறைபதிகம் முற்றிற்று.

---

ஆ. திருப்பாடல் - கூடஅ.



# அணைவாயே என்ற பதிகம்.

---

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உன்னை நினைத்தே யானுமென்னு ளுகந்தே னின்றன் றிருநாமம்
என்னை நினைத்தே மறவாமல் இருந்தே னுன்னை யறியாநாள்
பொன்னே யந்த மதிகடந்தேன் பூண்டே னதிக பூரணத்தில்
அன்னோர் கொண்டு முருவானே னணைவாய் எனைவந் தணைவாயே. (க)

கண்ணின் மணியே பொன்மானே கருணை யருளே கதிர்மதியே
பண்ணுந் தவமே யாரணங்கே பழமே யுனையான் பசியால் மெய்
உண்ணிச் சுவைத்தே னின்கனிவா யுண்டே னென்றன் பசிதீர
அன்னி ரமுதே நின்கரத்தா லணைவாய் கட்டி யணைவாயே. (உ)

கட்டிக் கரத்தா லெனைமருவிக் கையா லிறுக்கிக் களபதனந்
தொட்டுப் புயத்தோ டெடுத் தணைத்தே துயரமகற்றிச் சுடரீந்து
வட்ட மதிநா வாலெனக்கு வாக்கு மொழியும் வழுவாமல்
அட்டி வருத்தா தருள்தந்த வழகே யெனைவந் தணைவாயே. (ங)

அழகே யன்பர் துயர்மாற்று மடியார் துணிக்கண் ணதிலிருக்கும்
பழகேன் புல்லேன் கொடும்புலையேன் பாவி யடியேன் பவத்தால்மெய்
இளகே னிளகிற் கருவின்வினை யிழுக்கு வருத்த மதையறுத்தும்
அழகே யுள்ளின் மருவவந்தே யணைவாய் முகம்வைத் தணைவாயே. (ச)

முகம்வைத் திதழுண் டெனைமருவி முன்னுன் னெழுத்தி லொன்றதனை
விகங்கொண் டடைத்துக் கனல்மூட்டி விழிக்கண்மருளத்*துணிகவர்ந்து
சிகங்கொண் டலறிப் பனிவிளைந்த செயல்கொண் டிருண்ட திருவுளக்கண்
அகங்கொண் டடியா ருயிர்பொருந்த அணைவா யருளுற் றணைவாயே. ()

அருளுற் றடியா ரகக்கண்ணில் அருளக் கினியூற் றினையறுத்துப்
பொருளுற் றுளத்தே நிறைவாகிப் பொழிந்த வமுத முண்டுருகி
மருளற் றெழுந்த சுழிமுனையுள் வளரு மவுன விழியாலுன்
அருளைக் கவர்ந்தே யெடுக்கவென்னு ளணைவாய் மருவி யணைவாயே. (சு)

மருவி யிருகா லுறப்பூட்டி வண்டே திரும்பி மலர்புகுந்து
பருகி யிளைந்து முருவான படிகண் டெனையும் வணங்காமற்
கருவின் விளைவா லுளமெலிந்து கலங்கு மலக்கந் தான்றவிர்த்து
அருவி நீருண் டுளமகிழ வணைவாய் மனம்வைத் தணைவாயே. (எ)

---

* தொழில் கவன்று என்றாலும் பாடம்.

மனம்வைத் துனையான் பணியாமல் மதிகெட் டுழன்றேன் வணங்காமற்
கனமுற் றெழுந்த பவமறவுட் கண்டேன் குருவின் கமலபதம்
இனமுற் றினத்தோ டுறவாகி யெடுத்த சிறியேற் கின்பம்விளைத்
தனங்கொண் டடியே னுறவாட யணைவா யன்புற் றணைவாயே. (அ)

அன்புற் றடியா ருட்கனிந்த அருளா னந்தத் தேனமுதம்
இன்புற் றுளத்தில் நடம்புரிந்த யிசைமாம் பழமே யென்கோனே
பண்புற் றுனையான் பணியாமற் பவத்தா லுழன்றேன் பவமறநின்
அன்புற் றுளத்தின் மருவவந்தே னணைவா யுறவுற் றணைவாயே. (கூ)

உறவுற் றெழுத்திற் சுழித்துவிம்மி யோங்கு மசைவை யூடுருவி
திறமுற் றெழுந்து முருவாகிச் சேர்ந்து மருவி யொன்றாகி
முறிபட் டொன்றே யெனக்கடர்ந்த மோசம் வருத்தா தென்னே நிம்
அறிவுற் றுளத்திற் பொருந்தவந்தே யணைவா யினமுற் றணைவாயே. (கO)

அணைவாயேஎன்றபதிகம் முற்றிற்று.

ஆ. திருப்பாடல் - கசஅ.

## எழுந்தருள்புரிவாய் என்றபதிகம்.

கலிவிருத்தம்.

இனமுற் றண்டமும் பிண்டமு மெங்குமா யெழுந்து
கனமுற் றுன்பதங் ககனிடை புரிந்துகண் டொளிப்ப
மனமுற் றென்னுளே வளர்ந்தெழுந் தருளுமென் சோதி
இனமுற் றின்றிருப் பள்ளிமீ தெழுந்தருள் புரிவாய். (க)

எழுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

எழுந்தருள் நின்றாட் கமலமென் கண்ணில்
இன்பமாய்ப் பருகுமென் கடவுள்
அழுந்துமட் சரமோ டுருவெனக் கலந்தும்
அகிலரண் டத்தையு மாண்டு
தெளிந்துமென் னுளத்தில் நிறைந்தருள் பொங்கித்
திருவுள மருளுமென் சோதி
இழிந்திடா தென்கோ னருளுறை பூண்டும்
இன்புசேர் பள்ளிமீ தெழுவாய். (உ)

சீருடைக் கடவு ளானந்த வெள்ளஞ்
சிறந்தருந் தும்படி யடியேன்
பாரிடை பவத்தா லுழன்றுழன் றுள்ளம்
படுவனே படுந்துயர் மாற்றுன்



பேரிடை தரித்த நந்தியின் வடிவாய்ப்
பெருகவந் தருளுமென் சோதி
சாரிடை யென்கோ னின்றிருப் பள்ளித்
தடத்துமீ தெழுந்தருள் புரிவாய் (௩)

தடத்தருள் தவள வலம்புரிச் சங்கிற்
றாளமோன் திருந்திரைந் தெழுந்த
*இடத்துனைக்கண்டு பணிந்திலே னென்றும்
இகழ்ந்திடி லிங்கெனக் காருள்
நடத்திடும் படிவந் தாட்கொளும் பரிசாய்
நடம்புரி நடனமென் சோதி
[illegible]டர்த்திடு மென்கோன் படரொளி பரப்பே
பள்ளிமீ தெழுந்தருள் புரிவாய். (ச)

நாதவிந் துவினைக் கடந்தருட் கொண்ட
நலமுறு மதியவ ருளத்தே
பாதம்வந் துனைந்து வருந்திரு நடனம்
பாய்ந்துமுள் ளாடிடும் பரமே
வேதமுங் கடந்து மறுசம யங்கள்
விதத்தையுங் கடக்குமென் சோதி
பாதம்வைத் தென்னுள் வழுத்திடு மடியார்
பள்ளிமீ தெழுந்தருள் புரிவாய். (ரு)

கண்ணினுக் கடங்கா வெளிச்சுடர் மணியே
கருவியும் நிறவியுள் ளடங்கி
எண்ணிய பொருளே வலம்புரிச் சங்கி
லிருந்திரைந் துருண்டவென் கோனே
நண்ணிய தவமே யெவ்வையு மாண்டு
நடத்திடு நடனமென் சோதி
உன்னிய கருத்தோ டுறைந்திடும் பள்ளி
யுயரவந் தெழுந்தருள் புரிவாய். (சா)

அயர்ந்திடாப் பொருளே யெவ்வையு மாண்டே
ஆட்கொளு மருமணிக் கொழுந்தே
சயந்தனில் விழுந்த வீயெனப் பவத்தாற்
றயங்கியுள் ளுழல்வனே தனியே
பயந்துநின் னுமம் பருகிடு முளத்திற்
பரமருட் புரியுமென் சோதி
நயந்தரு மருளே நின்றிருப் பதத்தால்
நலனுறு பள்ளிமீ தெழுவாய். (எ)

* இடைத்துணைகண்டு என்றுஉம் பாடம்.

உள்ளமே யுருகக் கனலையு மூட்டி
*யொன்றிய வாய்விரு ளூன்றி
மெள்ளவே காலா லிருத்திடும் போது
விரைந்தெழு மக்கினி யதனாற்
கள்ளமாம் புலன்க ளெரிந்தெழுந் திழிந்து
கருவிவெந் துழலுமென் சோதி
துள்ளிய பதத்தைத் தரவுன தருளாற்
சுடரொளிப் பள்ளியீ தெழுவாய். (அ)

உந்தியிற் சுழித்து நடுவணை மீதி
லுருவியோன் ருகியூ டெழுந்து
அந்தமு முடிவும் வடிவுநின் னடியும்
அறியொணு வண்ணம தாணுய்
எந்தனுட் கமலக் கண்ணினி லிருந்தும்
எவ்வையு மாளுமென் சோதி
சிந்தையுட் குளிர்ந்து வரவுன தருளாற்
சிறந்திடும் பள்ளியீ தெழுவாய். (கூ)

பவக்கடல் தனிலே யழுந்திடு மடியேன்
பதமல ரதிந்திலே னென்றே
தவக்கடல் தனிலே மூழ்கிடா தென்றுந்
தரித்தனித் தெவ்வையு மாண்டாய்
பவக்கடல் முற்றுந் தவக்கடல் மூழ்கிப்
பரிந்தெனை யாண்டிடுஞ் சோதி
நவக்கட லடியா ருளத்தினில் நல்கும்
நாதமாம் பள்ளியீ தெழுவாய். (கo)

எழுந்தருள்புரிவாய் என்றபதிகம் முற்றிற்று.

ஆக திருப்பாடல் - கருஅ.

---

## ஞா ன பூ ர ண ம்.

கலிவிருத்தம்.

சுழித்த வட்சரந் தன்னைத் தொடுத்திடில்
அழுத்த மாகவே யங்கனல் தோன்றிடும்
வெளுத்த பின்னதி வாக மிகுத்திடும்
களித்த வட்சரந் தன்னைக் கருதிடே. (க)

* ஊன்றியவாய்வி ருளூறி என்றுமொரு பாடம்.



மூன்றி லொன்று முடிவுறத் தோன்றிடும்
ஈன்ற அன்னையு மெப்போதுங் கண்டிடுந்
தோன்று மட்சரந் தன்னைத் தொடுத்திடில்
ஆன்ற நாயக னவ்வழி யாவனே. (உ)

இந்து வுங்கதி ரும்மதி லெய்திடும்
விந்தை மாமல ரஞ்சும் விளங்கிடும்
நந்தி யாகிய ரூபமும் நம்முளே
அந்த மாகிய அட்சர மங்கியே. (ங)

இருத்தி வாசியை யேங்கிடும் போதிலே
யுரித்த வஞ்சினி லொன்றைத் தரித்திடில்
விரித்த முச்சுடர் தானும் விளங்கிடும்
இருத்து மஞ்சிற் செயப்படு முண்மையே. (ச)

அந்த மாகிய வஞ்செழுத் தொன்றினை
நந்தி யாகிய ரூபமும் நம்முளாம்
தந்தை யாமென வேதரித் துன்னிடில்
எந்த வாறினு மீசன் வெளியதாம். (ரு)

மூல மானதிற் றோன்றிடு முச்சுடர்
காலு மேயதிற் குள்ளாய்க் கலந்திடும்
மேலு மந்த வெளியும் விளங்கிடும்
நாலும் வந்து நலந்தரு முண்மையே. (சா)

கண்டி டாதசுற் காரணந் தோன்றிடில்
அண்டர் தேவர்கா ணுத வரும்பொருள்
நன்ற தாகவே நம்முளத் தாகிடும்
ஒன்று மொன்றென் றுரைத்தனர் நந்தியே. (எ)

மூல மந்திர மைந்தினி லொன்றையும்
மேலு மந்த வெளிக்குள் ளிருத்திடிற்
காலை யூன்றிக் கனக்கப் பிடித்திடில்
நாலும் நம்முள் நடஞ்செய்யு முண்மையே. (அ)

இந்த வாறிது வாகிடும் நற்பொருள்
நந்தி கூற நலந்தரு மெய்ப்பொருள்
அந்த நாயக னுனது மட்சரம்
சிந்தை கூறத் தெளிந்துநீர் பாருமே. (கூ)

கண்ணி ரண்டையும் மூடிக் கவிழ்ந்திடில்
அண்ணல் நந்தி வருந்திரு வட்சரந்
திண்ண மாக வுரைத்துத் தெளிந்திடில்
என்னும் நாத மிருப்பது திண்ணமே. (க0)

அஞ்சு மாறுமல் லாத வகப்பொருள்
நெஞ்சின் மீதிடை யேநிலை கொண்டது
வஞ்ச மற்றுநன் நந்தி யுரைத்தது
மிஞ்சு நாதம் விளங்கிடும் வாறிதே. (கக)

காணொ ணாத கட்வுட் பெருமையைத்
தோணொ ணாது சுரர்க்குந் தெரியொணா
ஆறு வங்க ளறுத்தே யடக்கிடிற்
றூறும் நாளும் தரித்தது வுண்மையே. (கஉ)

ஒன்றொன் றாகும் முள்ளி லுறைந்தது
அண்டர் தேவர்க ளாரு மறிந்திலார்
கண்டு கூறக் கணக்கிது வொப்பிலே
ஒன்ற தாகும் முள்ளி லுறைந்ததே. (கங)

நாத மீறிய நாதச் சுழிமுனை
வேத மானது தன்னிலும் விண்டிலர்
ஓது நாத னுகந்தே யுரைத்தது
சோதியா மிற சூலுரை சொன்னதே. (கச)

அந்த நாளி லகத்தில் வெளிப்பட
சிந்தை கொண்டு தெளிந்தது முன்வர
எந்த வாறிது வாகுமோ வெப்படி
அந்த நாய னகத்துள் நினைத்ததே. (கரு)

நினைக்கும் போதினில் நிற்குஞ் சொருபந்தான்
மனக்கண் ணுள வழிதிறந் தேவரக்
*கணக்கெலா மொரு கட்டளை யாமென
நினைக்கும் நாத நிமிஷத்தி லாகுமே. (கசு)

ஆகு மந்த வருந்திரு வட்சரம்
பாக மாயிறை யோன்முன்னே பார்த்திட
ஏக மாக விருந்திடு மன்றினில்
யோக மாமரு ளாகுவ துண்மையே. (கஎ)

* கணக்கலாதொரு என்றுமும் பாடம்.



உண்மை யாக வுரைத்த சொருபந்தான்
நன்மை யாகிய நாதன்முன் னேவரச்
செம்மை கொண்டு தெளிந்துரு வாய்வர
வண்மை கண்டு வணங்கிடு மச்சுரு. (கஅ)

சுருபந் தானுமுன் தோத்திரஞ் செய்கையால்
மருவும் வாறிது கண்டு வணங்கிடத்
திருவும் நந்தியு மேசெயற் கொண்டபின்
உருவதாகிடு மென்றது வுண்மையே. (ககூ)

உண்மையாக வுரைத்திறை முன்னமே
செம்மையாகித் தெளிந்த சொருபினைத்
தன்முன்னின்று தரித்திடும் பார்வையால்
* மன்னங் குண்மை வழுத்துவன் நன்றிதே. (உ0)

வழுத்துகின்ற சொருபம் மகிழ்ந்து தான்
அழுத்த மாயிறை யன்று பதங்கொடு
சுழித்து வந்துநற் றோத்திரஞ் செய்கையால்
எழுத்தொன் றாக விருந்தது நம்மிறை. (உக)

இறைவ னங்கே யிருக்குந்தி யானத்தில்
மறைவி டாது மகிழ்ந்து திருப்பொருள்
குறைவி லாத குணங்கள் புரிந்திட
நிறையும் நந்தி நிலைத்த சொருபமே. (உஉ)

சொருப மங்கொரு சூட்ச வலம்புரி
மருவி யுள்ளில் வளர்ந்த தாளமாய்
பருகியே யதற் குள்ளே பகர்பணி
கருதியே யிறை யோனைக் கவலுமே. (உங)

கவலு கின்றநற் காரணந் தன்னையே
கவலு நான்மறை தானுமே கண்டிலை
நவிலு கின்றநந் நாதனைக் கண்டிலை
சிவம தாகத் தெளிந்த மவுனமே. (உச)

மவுன மாகிய வன்னியும் வாயுமே
மவுன மாகிய வாறது வேவெளி
மவுன மாகிய வாறது நம்முளே
மவுன மாக வளர்ந்த வெழுத்ததே. (உரு)

* வண்மை யுண்மை என்றுமும்பாடம்.

எழுத்தை யுன்னி யிருத்திப் பிடித்திடிற்
சுழித்து நாலு சுடரறி வாகிடும்
வெளுத்து வந்து வெளியில் விளங்கிடும்
களித்து முள்ளங் களித்திடு முண்மையே. (௨௬)

உண்மை யங்கே யுதிர்ந்த பனியருள்
செம்மை யாக வுருண்டு திரண்டது
வெண்மை யாக விளங்கித் தானமாய்
நம்முள் நின்று நடஞ்செயும் நாதனே. (௨௭)

நாத னிங்கு நடஞ்செயுஞ் சூட்சந்தான்
போத மாகப் புகழ்ந்து புரிந்திடில்
வேதம் நாலினு மில்லை விரித்தருட்
சோதி யாகிய சூட்சசொ ரூபமே. (௨௮)

சூட்ச மாகத் தொடுத்தநல் லட்சரம்
பாய்ச்சிப் பாய்ச்சிப் பதிந்தது நம்முளே
ஏச்சி யொன்றிலை யொன்று வெளிப்படுங்
காய்ச்சி முற்றப்பால் காணுது போன்றுமே. (௨௯)

போன்றும் பாலிற் புரிந்திடும் வெண்ணெய்தான்
ஊன்றுமே கன லுள்ளுற வைத்தது
தோன்றும் வெண்ணெய்ச் சுடர்கண் டுருகிடும்
நான்று பார்க்க நலந்தருஞ் சோதியே. (௩0)

சோதி யான சொரூப வெளிக்குளே
ஆதி நாயக னங்கங் கமர்ந்திடும்
சாதி யில்லைத் தவமுமுள் ளாகிடும்
போத மங்கு புரிந்தனர் நந்தியே. (௩௧)

நந்தி கூறிய நற்றவங் கேளுநீ
சிந்தை மீது தெளிந்துனை செய்தது
அந்த மாகி யறிந்து விளம்பிடில்
நந்தி யாகநன் ஞதந் திரண்டதே. (௩௨)

திரண்ட சோதி தெளிந்தருள் காணுங்கால்
அருண்ட பாவம தெல்லா மகன்றிடும்
முரண்ட சந்தி லிருக்கு முயன்றிடில்
திரண்ட சோதி தெளிந்தருள் நோக்குமே. (௩௩)



நோக்கும் பார்வையை நுண்ணறி வாக்கியே
தாக்கி யொன்றைத் தவமென் றிருத்திடில்
ஆக்குஞ் சோதிய ரூபசொ ரூபமாய்
போக்கும் போதப் பொருள்வரு முண்மையே. (௩௪)

உண்மை கேளு முறுதித் தொழிலிது
செம்மை யாகத் தெளிந்தது நம்முளே
வெண்மை சூரிய னும்வெளி யாகுவான்
உண்மை யாகிய வுற்பன முற்றதே. (௩௫)

உற்ற மூச்சி லொடுங்குங் கனலிடு
சுத்த மாகி வெளியைத் தொடுத்திடு
பற்றி முச்சுடர் பார்த்து வெளிப்படும்
அற்றுப் போன தகத்துள் நடஞ்செயும். (௩௬)

நடனஞ் செய்யுநல் நாதத் திருவுளே
மடம டென்று வருந்திரு வாசிதான்
அடவு கண்டு மறிந்தும் பிடித்திடிற்
றிடம தாகத் தெளிந்திட வுற்றதே. (௩௭)

தெளிந்த சோதி சிவசிவ வென்றது
களிந்தி டாதநற் காரண வுண்மைகாண்
அளிந்தி டாதநல் லட்சர மங்கிகாண்
தெளிந்து கூறச் சிவன்வெளி யாகுமே. (௩௮)

ஆகுமே பொரு ளந்தர மாகவே
பாகமே திருப் பச்சை நிறமென
ஏக னம்மு ளிருந்தநல் வண்ணந்தான்
ஆகு நந்தி யருளுரை செய்ததே. (௩௯)

செய்த வாறு தெளிந்த வடியவர்
செய்து பார்க்கத் தெளிந்திடுஞ் சோதிதான்
செய்யிற் கன்மம தெல்லாந் தெறித்திடுஞ்
செய்யில் நந்தி திடந்தரு முண்மையே. (௪0)

தருமே யந்தத் தவத்துறு மட்சரம்
அருமை யல்ல வறிந்து பிடித்திடில்
ஒருமை யாகநம் மூச்சு மொடுங்கிடுந்
திருமை மூலந் தெளிந்திடுங் காலதே. (௪௧)

காலை வன்னியிற் கண்டுறச் சேர்த்திடும்
மேலு மந்த வெளிக்கு ளிருத்திடும்
நாலு முள்ளில் நடத்திப் பிடித்திடுங்
காலை நன்ருய்க் கழித்தும றித்திடே. (சஉ)

மறித்து நோக்க வனத்து ளிருந்தது
முறித்து வந்து முயங்கிடும் நம்முளே
வெறித்த முச்சுட ரொன்ருய் விளங்கிடும்
மறித்த போது வகைநடஞ் செய்யுமே. (சங)

வடிவை யுள்ளில் வகையென்றுங் காணுங்கால்
அடியு முடியு மதுவாம் பராபரம்
இடம தாகுந் தெளிந்த கனலுள்ளே
இடம தாகுமவ் வெல்லைய தாகுமே. (சச)

எல்லை தன்னி லிருக்குஞ் சுடரது
நல்ல சூட்சம் நடனப் பொருளது
மெல்ல மெய்யில் விளக்கொளி வாகிடும்
சொல்லுஞ் சோதி சுருபந் தெளிக்குமே. (சரு)

தெளிக்குங் காயத்திற் சித்தியு முத்தியாம்
ஒளிக்கும் வாசி யொழியா திருந்திடும்
அளிக்குமுன் வந்த ஆதியுந் தோன்றிடுஞ்
சுழிக்கு மந்தச் சுடர்கண்ட பின்னிலே. (சசா)

கண்ட போது கருவுரு வாகிடும்
முண்ட கத்துள்மு ளைத்திடு மட்சரம்
பண்டு நின்ற பழம்பொருள் மூன்றுமே
தொண்டு செய்யச் சுருதி வெளியதாம். (சஎ)

வெளிய தாகிய் மெய்யருள் தன்னையே
தெளிவ தாகத் தெளியக் கடைந்திடில்
கழிவி லாத கருணையி லானந்தம்
வழியி னூடு மகாபொரு ளாகுமே. (சஅ)

ஆகும் நம்மு ளமர்ந்த சுடர்தனை
ஏக வொன்றென் றிருந்த குருவருள்
ஆகமீதி லறிவைத் திடங் கொண்டால்
நாகம் வந்துநம் முள்விரிந் தாடுமே. (சகூ)



ஆடும் நாகத்தை யாட்டும் பரிசது
கூடும் நந்திக் குறிதனைச் சொல்லியே
மூடுகின்ற முறையை யறிந்திடில்
தேடுஞ் சோதி செயல்தரு மின்பமே. (ரு0)

ஞானபூரணம் முற்றிற்று.

---

ஆக திருப்பாடல் - உ0அ.

---

# அழுந்துவை நீயே என்றபதிகம்.

எழுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

இன்பநா யகனே யடியவ ருளத்தில்
இருந்துநின் ருடிடும் வேந்தே
துன்பமே யகல வென்னுளத் திருந்து
சுடரருள் புரிந்த தெள்ளமுதே
முன்பொரு புரியின் மணி வடிவாகி
மூதறி வாகிய முதலே
நின்பத மதனை யுருகியுட் கலந்து
நினைவினூ டழுந்துவை நீயே. (க)

நினைவினூ டழுந்து நீதிமா மணியே
நின்பத மடியவ ருளத்திற்
கனைகட லெனவே விரைந்துநின் றேங்கிக்
கருணையின் வெள்ள மாருேடத்
தினமுனை நினைந்து திருப்பதம் வருடித்
திருப்பதம் வருமென நினைவாய்
மனதினுட் கன்ணுல் நின்முகந் தேடி
வருந்தினே னழுந்துவை நீயே. (உ)

வருந்துவ துன்ற னடிமையென் றறிந்தே
வன்பிழை யனைத்தையும் போக்கித்
திருந்து மட்சரத்தை யுளத்தினில் நினைந்து
செயலுறு கிருபைகள் புரிந்து
பொருந்துநின் கரத்தா லென்னைநீ யணைத்துப்
புகழ்தர வடியவ ருடனே
அருந்திறல் வேந்தே யென்னையே சேர்த்தும்
ஆட்கொள வழுந்துவை நீயே. (ஙு

அழுந்துவா யெனது வுளத்தினிற் றலங்க
　　ளாறினு மப்புறச் சுழினை
எழுந்தரா கோடி கேதுட னமைந்து
　　விசைந்தசங் கோடிசக்கரமும்
பழந்தரு மதிக ரசனைபோ லென்றும்
　　பசிதனை யொடுக்கிநீ யென்னுள்
அழுந்திட நிறைந்த வாறது போலென்
　　அகத்தினி லழுந்துவை நீயே. (௪)

நீயெனு முனைநான் நினைவினுந் துதித்து
　　நிலைபெறக் குருவருள் நிறைந்து
நானெனு மிருந்த வுரையற்றுக் கருமம்
　　நாடிய கருவிக ளற்று
நீயென வடியேன் நினைவையொன் முக்தி
　　நிகழ்த்துவ தற்குளா ளாக
நானெனு மெழுந்த சோதியுள் நிறைவாய்
　　நலந்தர வழுந்துவை நீயே. (௫)

நலந்தருங் கிருபை யுனையல்லால் வேறு
　　நாயடி யேற்குப் பின்னுண்டோ
கலந்துநீ யென்னோ டிருந்துநீ யிசைந்த
　　கருணையா னந்தவெள் ளத்தில்
அலர்ந்துநான் மூழ்கித் துயர்வினை யறுத்து
　　மருள்பெறக் கனிந்ததே னதனை
மலர்ந்துளங் குளிர வுண்டு நான்தேற
　　வருந்தியுள் ளழுந்துவை நீயே. (௬)

உள்ளமீ தெழுந்த சுடரினில் விரைந்தும்
　　உலகுயி ரெவ்வையு மாண்டு
தெள்ளிதா யதிக சொரூபமு மெடுத்து
　　தேவர்க்குங் காணொணு வடிவாய்க்
கள்ளமற் றெனது சிந்தையி லிருந்து
　　கருணையாங் கடவு ளானந்த
வெள்ளமே யருந்தத் தரும்படி யாண்டு
　　விரையவந் தழுந்துவை நீயே. (௭)

விரையொடு மண்டம் விந்தொடு வேர்வை
　　விளங்கிய யோனிநா லாகித்
திரைகடல் வானும் மூவுல கதுவுந்
　　தெளிந்தவோ ரண்டமு மனந்தம்



பரையுயி ரெவையும் எழுவகைத் தோற்றம்
　　பகரிமிப் படியென வாண்டாய்
சிரந்தனி லிருந்த தொழிலொடு மென்னுள்
　　திடந்தர வழுந்துவை நீயே. (௮)

திடந்தரு கமலஞ் சகஸ்திரத் தெட்டிற்
　　றினந்தின மோய்விலா திருந்து
நடந்தரும் படியே கழலினில் வேர்வை
　　நனைந்துதே னறெடுத் ததற்குள்
இடமெலாம் நிறைந்து வெவ்வையும் பரந்தும்
　　இலக்கில்லா வானந்த வெள்ளத்
தடர்ந்து நானுண்டு முழுதுநீ யென்னுள்
　　அமர்ந்துவந் தழுந்துவை நீயே. (௯)

வந்துநீ யிருந்த வாசலைத் திறந்து
　　மதியொடு மிரவியுங் கண்டு
சிந்தையுட் பிடித்து வடித்து * நானிலத்தில்
　　தெளிந்துரு வாகவே பிறந்து
அந்தர வெளியே யுண்டுமென் பசிபோய்
　　அளவிடா வானந்த வெள்ளம்
உந்தியில் நிறைந்து நகைமுதற் சிரமட்
　　டுகந்துதா னழுந்துவை நீயே. (௧௦)

அழுந்துவை நீயே என்றபதிகம் முற்றிற்று.

ஆ திருப்பாடல் - உ௧௮.

# ஞா ன தா ர க ம்.

கலிவிருத்தம்.

தானமாகியே யெழுந்திடுஞ் சூரியன் றன்னை
ஊனமாகிய வுயிரிடை நடுவுற வுனியே
மோனமாகிய மூன்றையுங் கடந்துமேல் முடிவிற்
காணுலாவிய கதிரிடு வெளியினிற் கண்டே. (௧)

கண்டசூரியன் றன்னையே கருதிடுங் கண்ணுறல்
நன்றதாய்வரு மிடந்த[illegible]னில் நாதனும் விரைந்து
கொண்டுமேவிய குரு[illegible]ரன் றன்னுடன் குறுகி
ஒன்றதாயெழுந் தோ[illegible]னை துயிரிடை யம்மா. (௨)

* நால்[illegible]தாக்த என்றாஉம் பாடம்.

உயிருளேவிளைந் தோடிய வுயிரிடை நன்றாய்
பயிருளேபத மாகிய திருநடம் பணிந்து
துயிலகன்றிடச் சுடர்விழி கண்டிடத் துயின்றே
அயிலமாகிய மூலமும் நின்றிறை யணைந்தே. (ங)

அணைந்தசோதியை யங்குறக் கண்டது மார்த்தல்
இணைந்துகூடவே ரண்டுமொன் றாகவே யிருத்தல்
பிணைந்துமூலக்கண் பிரியமே நடம்புரி புணர்த்தல்
அணைந்தசோதியவ் விருளென விரைந்தன னன்றே. (ச)

* அன்றுதானிறை யிருந்திடம் பகரிலவ் விருளாம்
நன்றதாயிடு நடுவினி லட்சர மொன்றாய்
கண்டுகொண்டநற் கருத்துடன் றெளிந்தநற் கருத்தை
ஒன்றுபட்டுற வுகந்துகொள் வாரென வுளித்தே. (ரு)

உளித்தவட்சரம் மூலமேற் றோன்றியே யோடுங்
கனைத்தவக்கினி தன்னையே காலுறக் கனைத்துப்
பிணைத்தமானையுங் கலையையும் பிணைந்திட வுகந்தே
யணைத்தசோதியை மருவுமவ் விருளினி லன்னாள். (சா)

வேறு.

உற்ற மாமணி யேயொளி யேயுனை
நித்த நானுனை யேநினை வாகியே
பித்த னாகிய பைதலென் றெண்ணியே
அத்த நாயக னேயுள மீதருள். (எ)

உள்ள மீதினி லூன்றிய வட்சிவம்
கள்ள மானதை யற்றுக் கருணையால்
தெள்ளு சோதிச் சிவபதந் தந்தெனை
வள்ளலே வெளி மீதில் வருவையே. (அ)

வருவை யென்னுள் வடிவுரு வாகியே
பருகும் வாசியிற் பாசத் துடனேதான்
திருவு நாதத்திற் சேர்ந்து மருவியே
பொருவ தாகிய பூரணத் துள்ளிலாம். (கூ)

உள்ளிலே யுனைக் கண்டே யுகந்திடக்
கள்ள மானது காணுங் கருணையால்
தெள்ளு நீதித் திருவருள் தந்தெனை
வள்ளலே யுள மீதில் வருவையே. (க0)

* அன்றுதானுறை என்றும் பாடம்.



வந்து தோன்றிய மாமணி மூன்றையுஞ்
சிந்தை மீதிற் றிரட்டி யுருட்டியே
அந்தநாளி லகன்று மறைந் ததை
எந்த னுள்ளி லிருத்துவை திண்ணமாய். (கக)

திண்ண மாய்நின் றிருவருட் சோதியை
அண்ண லேயுள மீதி லருள்புரி
பண்ணு பாவ மறவுன்றன் பாதத்தைக்
கண்ணி னாற்கண்டு காட்சி களித்ததாம். (கஉ)

களித்து மூலக் கருவையென் னுள்ளமில்
அழுத்து நந்தியென் னுள்ளமி லானதும்
சுழித்த சூட்சச் சுடரின் விளக்கதை
எழுத்தி னோடு மிருத்துவை யுண்மையே. (கங)

உண்மை கூறிய வுத்தம நாதத்தின்
செம்மை யாகுந் திருவடி வானதை
வெண்மை கொண்டு விளங்குஞ் சரந்தனை
தண்மை யாறிற் றரித்திடு முத்தமம். (கச)

உற்றவாறி லொடுங்குஞ் சுடரொன்றை
சித்தி யாகத் தெளிந்து வழுத்தியே
உற்ற மூன்றையு மோங்கி யசைவையில்
வைத்த காரணம் மண்ணும் வெளியுமே. (கரு)

வெளியி னோடு விளைந்திடும் வாயுவைத்
தெளியு மக்கினி சேர்ந்து பிணைந்திட
ஒளியி னோடு முருகிய கால்தன்னை
வழியி னோடு மறித்து முறைத்திடே. (கசா)

உரைத்த சோதி யொளிதரு மானந்தம்
நிறைத்த கண்ணில் நிறுவினத் துட்பட
மறைத்து நின்ற வழியுரு மூன்றையும்
நினைத்த நந்தி நிலையுறு பாதமே. (கஎ)

வெண்பா.

பாதமே கண்டு பகரு மிருகரத்தாற்
போதமே யங்கி புரிந்ததற்பின்—வேதங்
கொடுமுடியுங் காணுக் கொடுங்காற்றிற் றோன்றும்
அடிமுடியு மொன்று யறிந்து. (கஅ)

அறிந்து மருவியணைந் தாலட்ச ரத்தைச்
செறிந்த * புன லூடுசெலுத் துங்கால்—அறிந்ததனை
யெட்டிடையே கூட்டி யிருநாலு மொன்றாக்கி
மட்டறிவாம் உள்ள வழி. (கசு)

கலிவிருத்தம்.

வழிகண்டு வணங்க வறிந்திலனே
சுழிகண்டுனைச் சொல்லிடங் கண்டறியேன்
வெளிகண்டு விளங்கிய வத்தலமில்
வழிகண்டு வழுத்திடேன் வல்லவனே. (உ0)

வல்லான்மறை நாலினும் வந்திலனே
சொல்லாலுனை யாவுந் துதித்திலனே
நல்லாதர வொன்று நவின்றிலனே
கல்லாதநிர் மூடர்க டந்திலனே. (உக)

கடவாநெறி கட்டளை முப்பொருளை
நடமாடிய நற்சுழி யுட்டிருவைத்
திடனுயருள் கண்டுசெல் லும்படியே
இட்மீதறி வோருனை யெப்பொழுதும். (உஉ)

பொழுதானதை வீணிலே போக்குவதாம்
உழுதேபயிர் செய்துற வொன்றறியேன்
அழுதேனுளி லாதியே நீயெனவே
எளிதாகிய கிருபை யெனக்கருள்வாய். (உங)

அறுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

அருளே அருளுறு சுடரே வெளிமிசை யதிலே நடமாடும்
பொருளே யுனைமிக மனமீ தறிவுகள் புரிவாய் திறமாகும்
இருளே யிருள்மிசை வருவா யருள்பெறு மிசையாய் வருகோவே
வெருளே வெருளற வருவாய் சுடரினில் விரிவாய் வளர்கோனே. (உச)

கோனே வரவருள் புரிவா யதன்மிசை குறிமா முதலறிவே
கோனே யுனைநினை வதிலே வரவருள் குருநா யகவேந்தே
கோனே யிருசுழி யதிலே பரவிடு குணமா மறிவாகும்
கோனே யடியவ ருளமீ தருள்வெளி கொளுமா முதலோனே. (உரு)

முதலோ னேமூ தறிவேயடியவர் முடுகும் படியுணர்வாய்
முதலோ னேமூ தறிவோர் சுழிமிசை முழுதும் வருகனலாய்
முதலோ னேமுச் சுழிவா சியினிடை முத்தங் கொண்டுறைவாய்
முதலோ னேயவ் வுளம்நீ வருசுக முறைநீ யருள்வாயே. (உசு)

* புனலூன்றி என்றாஉம் பாடம்.



கோச்சகம்.

அருள்வா யெனக்குமுய ராண்டவனே உன்னையுன்னித்
திருக்காதுக் கேறத் தெளித்தசத்தங் கேட்கிலையோ
வருவாய்நீ யென்றும் வழிமீதி லேவிழியாய்ப்
பொருகாத லாலென் புகழ்தருவாய் புண்ணியனே. (உஎ)

புண்ணியனே யுன்னையுன்னிப் புரிந்தடியேன் சத்தமிட்டுக்
கண்ணிரண்டும் பார்த்துக் கதறுவது கேளாயோ
அண்ணலே யென்னுடைய அருந்துயரந் தான்தீர்த்துத்
திண்ணமுடன் நின்பாதஞ் சேர்ப்பாய் திருவேந்தே. (உஅ)

வேந்தே சுடர்விளக்கே மெய்யே சுழினைமுற்றும்
ஊர்ந்தே யுடல்தோறும் உள்ளே பதுங்கினையே
சேர்ந்தே யுளமதனிற் றெளிந்துங்கு வாயிருந்தே
ஆர்ந்தெழுந்த சூட்சம் அருள்புரிவா யாண்டவனே. (உகூ)

கலிவிருத்தம்.

ஆண்ட வாயுனை யறிகிலே னவ்வன மதனிற்
பூண்ட வாபரி பூரணப் பொருள்தொறும் நிறைந்து
நீண்ட வாசுடர் நிறைவியுள் ளகத்திடில் நிசமாய்
ஆண்ட வாவுனை யறிவதற் கருளினி யரிதே. (ஙo)

அரிய தாயொரு கடல்மிசை வலம்புரி யகத்துள்
உரிய தாயொரு மணிதனை யுரிமைகொ டுகந்தே
துரிய மாயதில் நடனமாய்ச் சுடரிடும் வேந்தே
பிரிய மாயுள மீதினி லருள்புரி பெலத்தே. (ஙக)

வேறு.

பெலத்து நின்ற பிரணவந் தன்னுளே
பெலத்து நின்ற பிரணவம் மாறியே
பெலத்து நின்ற பிரணவ மூலத்திற்
பெலத்து நின்று பிரணவம் வாங்கிடே. (ஙஉ)

வாங்கி யேங்கி மறித்திரு வாசியை
ஓங்கி யோங்கி யுகந்திடுங் காலினில்
தாங்கித் தாங்கித் தரித்திடு மச்சுடர்
வாங்கி வாங்கி மலர்ந்திட நோக்கிடே. (ஙங)

நோக்கி யஞ்சு துனிக்குள் வெளிக்குளே
தாக்கி யந்தத் தலத்தி லிருத்தியே
ஆக்கி மூலத் தடர்ந்தவக் காலத்திற்
* பார்க்கி னூடு நடுவுறப் பார்த்திடே. (ஙச)

* நாக்கினூடு என்றாஉம் பாடம்.

கட

பார்க்கும் போது பரமும் வெளியதாம்
நோக்கும் போதருள் நுண்ணறி வாகிடுந்
தாக்கும் போது சகலமுங் கண்டிடும்
ஏற்கு மஞ்சி லிருந்தது வொன்றிலே. (௩௫)

ஒன்றொன் றென்றே யுரைத்தனர் வேதங்காண்
ஒன்றொன் றென்றே யுரைத்தனர் நந்தியும்
ஒன்றொன் றென்றே யுரைத்திடும் வாசியில்
ஒன்றொன் றென்றே யுகந்திடும் நந்தியே. (௩௬)

நந்தி யங்கு நடந்திரு வானதுள்
நந்தி யங்கு நடனம் புரிந்ததுள்
நந்தி யங்கு நடுவா யிருந்ததுள்
நந்தி யென்னுள் நடுவணை தன்னிலே. (௩௭)

தன்னில் நின்று தரித்த சுடரதைக்
கண்ணி லப்போ கருத்துரு வாக்கியே
பொன்னிற் பூரணப் பொற்கனை தன்னிலே
எண்ணும் நாத னிருக்குந் திறங்கண்டாய். (௩௮)

கண்ட சோதிக் கருணை வெளிக்குளே
மண்ட லங்கள் மறித்துரு வாக்கியே
அண்டர் தேவ ரறியா வரும்பொருள்
முண்ட கத்திடை மூன்றுமே அட்சரம். (௩௯)

அட்ச ரத்தை யருளுரு வாக்கியே
நிற் சிவத்தை நினைந்து வெளிக்குளே
உட்சி வத்தை யுகந்தறி வாக்கியே
பச்சைச் சோதி பகர்ந்திடக் காணுமே. (௪௦)

காணு மந்தக் கருத்தை யறிந்தக்கால்
தோணு மந்தச் சுருதி முடிந்தக்கால்
தானும் நானுந் தரித்திடங் கண்டக்கால்
ஊனும் நந்தி யுரைத்திடுஞ் சோதியே. (௪௧)

சோதி யங்கு சொரூப வெளிக்குளே
பாதி யங்கு பரமு முறைந்துளாம்
ஆதி விந்துவ ஞுதி யகத்துளே
சாதி யங்கு தவமுடி வாகுமே. (௪௨)



முடிவு மூன்று முடிந்தது முச்சியில்
அடிய தாகி யிருந்தது மக்கமாம்
வடிவ தாகி மறைந்தது நம்முளே
படிய தாம்பரி பூரண மாகுமே. (௪௩)

பூர ணத்துட் பொருளுரு வாக்கியே
கார ணத்தைக் கருதி யுருக்கியே
ஆர ணத்தை யுகந்துட் புகைத்தபின்
சீர ணத்திற் றிருவடி நாதமே. (௪௪)

நாத மூல நடுவணை தன்னிலே
நாத மூல நடுவுமுப் பாழினில்
நாத மங்கு நடுவுறத் தோன்றிடும்
நாதங் கண்டு நடக்குஞ் சுவாசமே. (௪௫)

வாசி யொன்று வருமிடஞ் சுற்றியே
ஆசி வாயம் தஞ்சு திருக்கதாய்
நாசி காது நடுவுற விம்மியே
மூசி யொன்றின் முடிந்தது முச்சுடர். (௪௬)

முச்சு டர்க்குள் முதலுரு வாகியே
அச்ச ரத்தி லருவுரு வாகிடும்
நிற்சி வத்துள் நிலைத்துப் பெருகிடும்
உட்சி வப்பொரு ளொன்றென வுண்மையே. (௪௭)

உண்மை கண்டு முரைத்த பெரியவர்
செம்மைப் பாதந் தெளிந்து சிரமிசை
வெண்மை யாக வெளிக்கு ளிருந்திடுந்
தண்மை யாகச் சகலமுந் தோன்றுமே. (௪௮)

தோன்று மந்தச் சுருதி முடிந்துள்
தோன்று மந்தச் சொரூபம் வெளிக்குளே
தோன்று மந்தச் சுருதி யருள்தனில்
தோன்றும் நாதச் சுழிமுனை திண்ணமே. (௪௯)

திண்ண மங்கு சிறந்த நடனத்துள்
திண்ணம் வாயுவுந் தேய்வுறு மூலத்துள்
திண்ணங் கண்டு தெளிந்திடு முச்சியில்
திண்ண மங்கு தெளிந்துரு வானதே. (௫௦)

உருவ மாகியே யோங்குங் கனல்தன்னை
மருவு மந்தகல் வாசியிற் பூட்டியே
உருவி யங்கு வுடன்றிரு வானதைப்
பருகு மூலப் பரப்பிர்ம நாதமே. (௫௧)

நாத மங்கு நடஞ்செயும் நாதத்தில்
வேத மங்கு விளங்குஞ் சுவாசத்திற்
பாத மங்கு பரிந்தது தூங்கியே
வேத மங்கு விளங்கினர் நந்தியே. (௫௨)

வெண்பா.

நந்திதனைக் கண்டு நடுவிலுறு மக்கினியைச்
சிந்தித்து வாய்வுதனிற் சேர்க்கையால்— நந்திதனைக்
கண்டவிடத் தேபொருளைக் காட்டும் பராபரத்தைக்
கொண்டவிடந் தானே குறி. (௫௩)

குறிகண்டு மேலைக் குகையிலுறத் தாக்கி
நெறிகண்டு முச்சுழிக்குள் நேரொத்—தறிமனமே
அப்பைவெளி யாக்கி யனல்வாய்வை யூடிருத்திச்
செப்புங் குருவின் திறம். (௫௪)

ஞானதாரகம் முற்றிற்று.

ஆ. திருப்பாடல் - ௨௭௨.

## அருளெங்கோவே என்றபதிகம்.

அறுசீர்க்கழில்நெடிலடி யாசிரியச்சந்தவிருத்தம்.

சுழிகொண்ட வெழுத்தி லுறைந்துளது
—சுடர்கண்டு பணிந்திடு தொண்டனையே
வழிகண்டு வணங்கிலே-னென்றனைநீ
மனமீதில் மறக்கிலிங் காரெனக்குள்
தெளிகொண்டயென் னுள்ளி லுறுந்துணையே
தெவிட்டா வமுதே தெளிவோருளமே
கழிவென்ற தறுத்தென துள்ளகமில்
கருணைக்கட லீந்தரு ளெங்கோவே. (௧)



விண்ணோடே யெழும்புகை யங்கியுமே
விரவிக்கன ரூபம தாயுயிராய்
மண்ணோடே யெழுந்திடு நீரிசைய
மருவிக் குழைகொண் டுடலாயுருவாய்
முன்னூறுற வாகிய சோதியைநீ
முழுதுமெனை யிகழிலிங் காரெனக்குள்
என்னுயக னேயுள மீதிலெழுந்
திரங்கும்படி யீந்தரு ளெங்கோவே. (௨)

அரவானதுக் காயிரத் தெண்சிரமாம்
அதிலோர்சிர மான துறுஞ்சுமைகேள்
உறவாகிய வண்டர பிண்டரமோ
டொளிஞாயிறு திங்க ளுடன் தேவர்
தருநேமியோ டெண்மலை யும்பலதுந்
தரிகொண்டு மிருத்திடு தற்பரனே
குருவந்த முடிக்குளுறுஞ்சுழியே
குருவேயெனை யிகழிலிங் காரெனக்குள்
மருவும்படி நின்றென துள்ளமதில்
வந்தேயெனை யாண்டரு ளெங்கோவே. (௩)

உள்ளாகி நிறைந்தொளி ரும்பொருளே
யுயிரெங்கும் நிறைந்து தெளிந்தருளே
விள்ளாத மலர்க்கு ளிருந் தொளிவாய்
விளைவாய் மறை-மூதை விளக்கினவா
எள்ளாகிலும் யானுனை யேநினையா
எளியேன்றனை யிகழிலிங் காரெனக்குள்
தள்ளாமலுன் னடிமைய னென்றனையே
தலைமேலே யாண்டருளுங் கோவே. (௪)

மூலக்குகை மீறி லெழுஞ் சுடரோ
முனிதேவர்க ளுதகன் முப்பொருளே
காலூற்றறி வாகவே தூங்கிடுநற்
கருத்தோடுற வாகிய கற்பகமே
மேலைத்திரு வாசலில் நின் றொளிரும்
வெண்மாமதியே வெளியே யெனைநீ
மாலூற்றறி வாகிய வுள்ளகமில்
வருவாயிக ழாதெனை யாள்கோவே. (௫)

ஆவென் றுமெழுந்திடு மாசையினால்
அங்கோரலை யாழிய தாயதனில்
ஊவென் றிறை யோனிறை வானதனைக்
கேட்டுச்சுடர் சியெனு முத்ததிலே
தாவென் றொருசங்கு வலம்புரியுள்
தாளமுனைத் தேடிய சத்தமதைத்
தாவென் றுனை நாடுமென் னுள்ளகமிற்
றங்கேதுயிக மாதெனை யாள்கோவே. (௬)

ஊனுள்ளமி லேகனி வாய்க்கடலாய்
உயர்வா யலையில் லெனுமப்படியே
குன்னென்றிரை வாகிய சத்தமது
குறிகண்டுணை ராமலிருந்தடியேன்
பன்னும்பல பாவம் தாய்மிடையாய்ப்
பணியாத பவங்கள் பொறுத்தெனை நீ
எண்ணும் மிக மாதெனை யாண்டுனதின்
இருபாதம தீந்தரு ளுங்கோவே. (௭)

வினைப் போகும தேயுறும் தேகமிது
வினைபோய் விடிலோ விழுங் காயமிதில்
வினை வாகி யமுந்தி யிருந்ததலால்
வினைவா மனுவானது மேயினையா
மனமாகிய வஞ்சக வெஞ்சினனின்
மதிகொண்டுனை யென்மன மீதிலுறும்
தினை நேரமு மேமற வாதுளமிற்
றிறமாயிக மாதெனை யாள்கோவே. (௮)

எக்கின்மர மீதி லிருந்தினவா
எளிதாய்மயில் வேஷம தாக்கினவா
தக்காரிருள் மீதி லிருத்தினவா
தனியேவிழி யாலெதிர் நோக்கினவா
சிக்காதகண் ணடியுள் வைத்ததிகத்
திறமா மறைமூது திருக்கழலைத்
தக்கும்படியேயுள மீதிலருள்
தருவாயிக மாதெமை யாள்கோவே. (௯)

சிரமீதி லெழுந்தொளி ரும்உடுவை
ஜிபுரில்தெரி சித்திட வைத்துனது
காமாமொளி யைப்பிர காசமதாய்க்
காட்டும்படி வைத்தது கண்டறியா



உரமீறிய மங்கைமின் னார்மயலை
யுறவென் றுனையே நினையாப் பிழையைப்
பரனேபொறுத் தேழையுள் நபிகழலைப்
பரிவாயிக மாதெனை யாள்கோவே. (௧௦)

அருளெங்கோவே என்றபதிகம் முற்றிற்று.

---

ஆ. திருப்பாடல் - உஅஉ

---

## அழைத்திடென்கோனேஎன்றபதிகம்.

எழுசீர்க்கழில் நெடிலடி யாசிரியவிருத்தம்.

எந்தையே யென்ற னுயிருறுங் கோனே
யெளியவர்க் கிரங்கும்பொன் மானே
தந்தையே தாயே யளவிடப் போகாத்
தருப்பமே யருபறற் சுடரோ
சிந்தைமீ தெழுந்து துயரினை மாற்றிச்
சிறப்பளித் தடிமையை யாண்டாய்
வந்திசெய் யாதே யென்னைநின் கழலில்
வருகவென் றழைத்திடென் கோனே. (௧)

அன்பினில் விளைந்த வாரமு தருகி
யாறெடுத் தோடிய ததனில்
முன்பொரு மணியாய் வலம்புரிச் சங்கின்
முழுமுத லானமா மணியே
நின்பத மதனை யுருகியுட் கலந்து
நினைவிலே டெழுந்துகொண் டெனையே
வன்புசெய் யாதே யென்னைநின் கழலில்
வருகவென் றழைத்திடென் கோனே. (௨)

பழவினை யேனை வறுமையான் மெலிந்து
பவக்கட லதில்விழுந் தழுந்திச்
சுழல்தரும் பதுபோல் மங்கைமின் னார்தந்
தடக்கினி லழுந்தும்வஞ் சகனைப்
பழகிய வடியா ருடனெனைச் சேர்த்துப்
பண்புசெய் தாண்டநா யகனே
வளமருள் புரிந்தே யென்னைநின் கழலில்
வருகவென் றழைத்திடென் கோனே. (௩)

அருந்திறல் வேந்தே யடியவர்க் கெளிய
வையனே மெய்யினை யாண்டு
பெருந்தவ மளித்தேன் பவக்கட லடைத்த
பெருமையே பேரின்ப வாழ்வே
திருந்தவர் தடிமை யுளத்தினி லிருந்து
திருவருள் புரிந்ததெள் ளமுதே
வருந்தினேன் றன்னை நின்கழ லதனில்
வருகவென் றழைத்திடென் கோனே. (௪)

மூதுரை யான பழமறை யதனின்
முழுமுத லானமா முடிவே
வேதம்நா லினுநின் றிருவுளப் பெருமை
விளங்கினும் விள்ளொணு வேந்தே
பாதமு முடிவும் இன்னதென் றறியாப்
பரமனே பழம்பொருட் பரனே
வாதுசெய் யாதே யென்னைநின் கழலில்
வருகவென் றழைத்திடென் கோனே. (௫)

அலிபுமுன் றுயவ் வனத்தினி லிருந்தே
யருவினி லுருவெளி யாகி
ஒலியிட்டே யுன்றன் அருந்துளும் பாகி
உன்னினை வதிலுறப் பூண்டு
கலியிட்டே யெழுந்த தொப்பினுக் கடங்காக்
கருணையில் அகம்தென் றேனே
வலிதிட்டே யடியேன் தன்னைநின் கழலில்
வருகவென் றழைத்திடென் கோனே. (௬)

அஞ்சினி லொன்றாய் நின்றேயெவ் வுயிரும்
ஆண்டமொண் டிறவருள் புரிந்து
பஞ்சபா தகர்க்குப் பவமளித் துன்னைப்
பணிபவர்க் கருந்தவ மளித்து
மிஞ்சிய ஞானக் கொடுமுடிக் கடலே
மெய்யிற சூல்பத மென்னுள்
வஞ்சியா தீந்து மென்னைநின் கழலில்
வருகவென் றழைத்திடென் கோனே. (௭)

அளவினுக் கடங்கா நாவதா மோர்நா
லதுதனக் களவிடாப் பாவை
களனுறு மதிக மாகவிப் படியே
நனியுனை வணங்கும்வா னவருக்

குளமிசை பரவ வடங்கிடா தென்கோன்
உறுதிதந் தென்றனை யாண்டாய்
வளமறைக் கரிய பொருளேநின் கழலில்
வருகவென் றழைத்திடென் கோனே. (௮)

பொய்யினேன் நின்னை வணங்கிடாக் கொடிய
புல்லன்மிஞ் சினசினப் புலையன்
நையினேன் பாவத் திடைப்படு மதனன்
நாறிடுங் குதம்பையைச் சுமந்த
பையினேன் றன்னை யாட்கொளும் படிநின்
பரிசளித் தாண்டநா யகனே
வையினேன் றன்னை நின்கழ லதனில்
வருகவென் றழைத்திடென் கோனே. (௯)

இருநய னக்கண் சுடரினுள் ளொளியே
வெளியவ ரகக்கண்ணின் மணியே
இருமணிப் பிரபை கொழுந்துவிட் டலர்ந்து
திசைகள்வான் புவியனைத் தினுமாய்
அருள்விளக் கேற்றிக் கொளுத்திட வுன்றன்
அடிமைகட் கருந்தவ மளித்த
வருமனத் துறையே யென்னைநின் கழலில்
வருகவென் றழைத்திடென் கோனே. (௧௦)

அழைத்திடேன் கோனேஎன்றபதிகம் முற்றிற்று.

---

ஆ திருப்பாடல் - ௨௯௨.

---

# மவுஜூது நீ என்ற பதிகம்.

---

கலிச்சந்தவிருத்தம்.

அடியாருளில நிறைவாகியே அறிவானதுள் ளுறைவாகியே
கடிதானமா மயல்பூணவே கருணாகர தருவாய்கழல்
நடமாடிய சுடரோவெளி நடுவான்பூ ரணசோதியின்
வடிவானதென் றுளமீதருள் மவுஜூதுயா மவுஜூதுநீ. (௧)

அறிவாருளி லறிவாகுநீ யடியாருட லுயிராகுநீ
குறியாகுநீ குருவாகுநீ குறியாதமர் மணியாகுநீ
நெறியாகுநீ நினைவாகுநீ நினைவோருளி லுருவாகுநீ
மறிவாகுநீ மனமாகுநீ மவுஜூதுயா மவுஜூதுநீ. (௨)

முப்பாழிலு மப்பாழிலும் முடிவாகிய சுழிமீதிலுஞ்
செப்பாதமுச் சுடர்மீதிலுந் தெளிவாகுமோ ருளமீதிலுந்
தப்பாதநற் சரமீதிலுந் தவமீதிலு மவமீதிலும்
வைப்பாகவந் துறவாகுநல் மவுஜூதுயா மவுஜூதுநீ. (௩)

மூலத்துளே நின்றாடிய முனையேகதி ரொளியேசுடர்
காலுக்குளே தொனியாகிய கருநாதவிந் தூடாகிநின்
றாலத்துநீ தானாகவந் தருவாகியே யுருவாகியென்
மாலுக்குள்நின் றருளாகுநல் மவுஜூதுயா மவுஜூதுநீ. (௪)

காலாகினாய் கையாகினாய் கண்ணாகினாய் முகமாகினாய்
நாலாகினாய் நடுவாகினாய் நானாகினாய் நீயாகினாய்
சூலாகினாய் பாலாகினாய் சுகமாகினாய் அகமாகினாய்
மாலாகியென் னுளமீதருள் மவுஜூதுயா மவுஜூதுநீ. (௫)

பேயோடுசே ரைய்நின்றவா வெளியோடுவா வாய்நின்றவா
காய்வாகிய யுளமீதினிற் கனிவாகிவந் துறைகின்றவா
நாய்கண்டுசே சியென்றதில் நடுநின்றுநின் றருள்கொண்டவா
மாயாதுளி லுறைகின்றநல் மவுஜூதுயா மவுஜூதுநீ. (௬)

இடைபிங்கலை சுழியாகியே யிதிலேநடு வளைவாகியே
நடைகொண்டதில் விரைவாகியே நாலாறிலோர் சுடராகியே
அடிகொண்டதின் முறையாய்நடு வசைவொன்றதில் நடமாடியே
வடிவென்றதில் லருள்தந்திடு மவுஜூதுயா மவுஜூதுநீ. (௭)

புரிமீதுற மணியாகிய பொருளேயுளில் வெளியாகிய
அரிதாகிடும் தொனியாகிய வருளேயுயிர் நினைவாகிய
பரிமீதினி லுறவாகிய பரனேயருட் பரனேதிரு
வரமானதென் னுளமீதருள் மவுஜூதுயா மவுஜூதுநீ. (௮)

முன்னான்கினில் நாலாய்வரு முறையோடுனை யறிவோர்களுள்
பன்னான்குறு தவமாகிய பழமூதுரை வளமேயுனை
என்னாதபேர் நரகானதி லிழிவாரது மறவேயெனை
மன்னாடுநற் குருவாழ்வருள் மவுஜூதுயா மவுஜூதுநீ. (௯)

முன்னங்கொரு வனமானதின் முதிர்வாகுகூ றிருள்மீதினில்
உன்னும்படி சொருபானதுள் ளுருவாகியுன் முனமேவர
கண்ணென்றிரு விழியாலுறுங் கருணாகரா மஹமூதுதன்
வண்ணந்தரு கழல்தந்திடு மவுஜூதுயா மவுஜூதுநீ. (௧௦)

மவுஜூதுநீ என்றபதிகம் முற்றிற்று.

ஆ திருப்பாடல் - ௩௦௨.



# அல்ஹம்துலில்லாகி என்றபதிகம்.

சிந்து.

குன்னெனு மெவ்வுயிருங் - கொண்டமை - செய்தபிரான்
என்னு மனிதருள்ளி - லின்பங் - கொடுத்தபிரான்
பன்னுந் தவத்தினுள்ளே - பந்தி - முடித்தபிரான்
அன்னந் தரும்பொருளே - அல்ஹம்து - லில்லாகி. (௧)

மூலச் சுழிவழியே - முக்கோண - சாத்தினுள்ளே
காலுக்கிடை நடுவே - ஊக்கெனு - முத்திரையுள்
கோலப் பெருந்தெருவிற் - கும்பம் - நிறைந்திடவும்
ஆலம் சமதருளும் - அல்ஹம்து - லில்லாகி. (௨)

பத்தொடு ரண்டுவெளி - பாய்ந்தோடி - வாரதனில்
உத்தமம் நாலுவெளி - யோடுமெட் - டெட்புகுதும்
நித்தலும் ஓடுமந்த - நீதிச் - சுரந்தனிலே
அற்றநா லுள்ளாக்கும் - அல்ஹம்து - லில்லாகி. (௩)

உந்தி சுழித்துவரு - முள்ளகக் - கண்ணடுவே
நந்தி யனல்மூட்டி - நற்சுழி - யுள்தரிக்கில்
சிந்தை கலக்கமறுஞ் - சித்தி - நடம்புரியும்
அந்த விதத்தையருள் - அல்ஹம்து - லில்லாகி. (௪)

முச்சுட ரச்சரத்தே - முத்தியு - மச்சரத்தே
நற்சிவ மச்சரத்தே - நந்தியு - மச்சரத்தே
நிற்சிவ மச்சரத்தே - நிஷ்கள - மச்சரத்தே
அச்சர சித்தியருள் - அல்ஹம்து - லில்லாகி. (௫)

எவ்வுயி ராக்குமுத - லெந்தை - யுளத்திலொரு
செவ்வி நினைத்தவுடன் - சிக்கறத் - துட்சொருபாய்
மூவ்வுல கும்புகழும் - முந்தி - முஹம்மதெனும்
அவ்வருள் தந்தருளும் - அல்ஹம்து - லில்லாகி. (௬)

ஆவெனும் ஆவிக்கினல் - அங்கூற - மாழியதில்
ஈயெனும் நின்றதொனி - இருபைச்சீ - யென்றசுடர்
தாவெனும் அங்குருவாய்த் - தங்கும் - வலம்புரிக்குள்
ஆவெனும் முத்தையருள் - அல்ஹம்து - லில்லாகி. (௭)

உச்சி திறந்துவெளி - யுள்ளேயு - லாவிவரும்
பச்சை சிவப்புமதிற் - பற்றிடும் - முத்துநிறம்
கச்ச மெடுத்திருகால் - கட்டி - நடம்புரியும்
அச்சரப் பாகமருள் - அல்ஹம்து - லில்லாகி. (அ)

முந்தி வனத்தனிலே - முண்டக - பீதிலொரு
நந்தி சொருபமதாய் - நற்றிருத் - தூக்கமதில்
வந்து திருமுனருள் - வல்லமை - யாமிறசூல்
அந்தக் கழலையருள் - அல்ஹம்து - லில்லாகி. (கூ)

எல்லை தனில்நடனம் - எவ்வுயி - ருள்ளுறைந்து
நல்ல வலம்புரிக்குள் - நற்றர - ளத்தொனியாய்
வல்லமை யாயுருவாய் - வந்த - நுகத்தையுளில்
அல்லும் பகலுமருள் - அல்ஹம்து - லில்லாகி. (க0)

அல்ஹம்து லில்லாகி என்றபதிகம் முற்றிற்று.

---

ஆ திருப்பாடல் - ௲௨௨.

---

## ஹக்கானவனே என்றபதிகம்.

கலித்துறை.

வெளியே வெளியுள் ளொளியே தெளிபவ ருள்வெளியே
சுழியே சுழியுள் ளுறவாகி நின்றிடுஞ் சூட்சமுத்தே
அளியே யளியுள் திருத்தூக்க மாய்நின்ற வாசைகொடு
கழிவாகி யோடிய நாளுமுள் ளாக்குஹக் கானவனே. (க)

ஓரெழுத் தானதும் பேரெழுத் தாயுல கெங்கும்விம்மி
நேரெழுத் தாய்நிறைந் தாயிறை யேயினை வுள்தரித்துச்
சீரெழுத் தெங்குநின் றானந்த மாய்நின் றிருவுளத்திற்
காரெழுத் துள்ளமில் லீந்தருள்வா யென்ஹக் கானவனே. (உ)

உள்ளே நினைந்து சுஜூதுசெய் யார்க ளுனைவணங்க
எள்ளள வாகிலுங் கொண்டிலே யேயென் றிசைத்தபிரான்
வள்ளல் முஹம்மதை யுள்ளே நினைந்து வணங்கவுனை
கள்ளமற் றென்னுள் ளெழுந்தருள் வாய்ஹக் கானவனே. (ந)

பரியோடு காலின் பரிசறியார் செய் தவம்பலமென்
றரிதான நான்மறை கூறுதென்றே யதை நீக்கியுனைப்
பிரியாமல் நாளு முளத்தே நினைந்து பிறப்பறுத்துக்
கருவாசல் நீக்கி யருள்வாச லாக்குஹக் கானவனே. (ச)



சரிகொண் டெழுந்து கிரியை வாகி யஞ்சுகற் றுயெழும்பும
புரிகண் டறிந்து வணங்கிலனே யப் பிழைபொறுத்தே
அரியஞ்சு மோடி யிறந்தே குருவினல் லக்கினியாற்
கரிகொண்ட சாம்பல தாக்கின்றே னிஹக் கானவனே. (ரு)

இடைபிங் கலைசுழி யூடே விரைந்து மிரைந்ததனில்
நடைகொண் டறிந்து வணங்காத பாவர் நரகமதில்
மிடைகொண் டெநாளு மழுந்துவ ராமதை விட்டுனது
கடைகொண்ட சோதி யருள்வா யெனக்குள்ஹக் கானவனே. (சு)

வருங்காத லாலுளம் வாடி மெலிந்து மனமுருகி
பொருங்காதல் தேடி யலைகுவனோ வருள் பூட்டிறையே
அருங்காத லாறெடுத் தோடித் துனிப்ப தறிந்துனது
கருங்காற் பதமரு ளீந்தருள் வாய்ஹக் கானவனே. (எ)

அக்கினி மூட்டி யழலா யெழுப்பி யறிந்தகுரு
நிற்கப் பொற்பாதம தீந்தருள்வாய் நின்னை வேண்டுதற்குச்
சிக்கறுத் தஞ்சு பொறியறுத் துள்நின் றிருக்கழலைத்
தக்கும் படியெனக் கீந்தருள் வாய்ஹக் கானவனே. (அ)

தனியே வனத்தி லிருந்தவன் நீயுனைத் தானினைந்து
மணியா யுருட்டி வளர்த்தவன் நீயந்த வலம்புரிக்குள்
தொனியா யிரைந்திட வைத்தவன் நீயென் றுயராறுத்துக்
கனியா யெனக்குண வானவன் நீஹக் கானவனே. (கூ)

[illegible]ழி வாக விருந்தவனே முழு மாமுதலாய்ச்
சோதி நபியை யமைத்தவ னேயச் சுடர்கொடுநீ
பாதி யிரவினி லெல்லா வகையும் படைத்தவனே
காதல்நு கத்தரு ளீந்திடு மென்னுள்ஹக் கானவனே. (க0)

ஹக்கானவனே என்றபதிகம் முற்றிற்று.

---

ஆ திருப்பாடல் - ௲௨௨.

---

## வந்தாள்வாயே என்றபதிகம்.

கலித்தாழிசை.

ஹய்யுல்கையூ மாய்வளர்ந்த ஹறுபே கருத்தி லுருவாகி
அய்யமறவீ ரேழுலகும் அருப ரூப வருளாகிச்
செய்யகமலத் தினிலுறைந்து திரண்ட வுயிர்கட் குணவாகி
துய்யசுழினை யுனில்வாழுந் துணையே யெனைவந் தாள்வாயே. (க)

ஹய்யுல்கையூ மாய்வளர்ந்த ஹறுபே கருத்தி லுருவாகித்
தையல்வடிவாம் ஷஹாதத்தெனும் தலைமை நிலைமைப் பெலமாகி
வெய்யகிரணத் தொளிவதுபோல் விளங்கி யெவைக்கு முட்கலந்து
துய்யசுழியி லுற்வான துணையே யெனைவந் தாள்வாயே. (௨)

ஹய்யுல்கையூ மாகவொரு காலுமழியா துயிராகிப்
பெய்யுமனுடர் முனியரக்கர் பெருகும் வானோர் காணாத
மையல்வினைத்துப் பலவகையுள் மறைந்து வெளிப்பட் டிருந்தவனைத்
துய்யசுழியி லறியமனத் துன்னே யெனைவந் தாள்வாயே. (௩)

ஹய்யுல்கையூ மெனவிருந்த கண்ணின் மணியே கருணைமுத்தே
மெய்யிலுனைக்கண் டறியாத வீணன் பிழைகள் தனைப்போக்கித்
துய்யசரண கிருபையருள் துதிக்கும் படிதந் தடியாருள்
ஐயமறுத்தென் னுளிற்பூண்ட வரசே யெனைவந் தாள்வாயே. (௪)

ஹய்யுல்கையூ மெனவடியார் கருத்துள் நிறைந்து கனகிருபை
பெய்யுமருளைத் தினமுணர்வாய் பெருகப் பருகுந் துயராலே
மையல்வினைத்துன் றிருச்சரணம் மனதுள் ளணிந்து கவிதீர
ஐயமறுத்தென் னுளிற்பூண்ட வரசே யெனைவந் தாள்வாயே. (௫)

ஹய்யுல்கையூ மென்றேயோர் கடன்மீ தெழுந்த வலம்புரியே
மெய்யாயதுக்குள் திரண்டுறைந்து விளங்கி யொளிரு மாமணியே
பொய்யாததற்கு விருந்திரைந்த பொருளே யடியா ருளத்திலருள்
அய்யாபரனே யென்கோனே அடியேன் றனைவந் தாள்வாயே. (௬)

ஹய்யுல்கையூ மென்றிருளிற் கலந்த துகத்தா யிருந்ததற்குட்
பையமவுன மாய்த்தூங்கிப் பார்க்கும் வேளை தன்னிலொரு
துய்யசொருபம் வருமதன்பேர் துலங்கு மஹமூ தென்றேனே
மையலறுத்தென் னுளிற்பூண்ட வாழ்வே யெனைவந் தாள்வாயே. (௭)

ஹய்யுல்கையூ மெனவளர்ந்த கருணை மலரிற் றேன்சொரிந்து
வையமூன்று முலகனைத்தும் வடிவாய் நிரம்பி பெள்ளெணெய்போல்
வெய்யகிரண செழுமதிபோல் விளங்கும் பொருளே யுளத்திலருள்
கையச்சுடர்மா மணிவேந்தே நாதா யெனைவந் தாள்வாயே. (௮)

ஹய்யுல்கையூ மென்றுமிரு காலோ டிணங்கி வரும்பொருளே
எய்யுங்கணைபோல் வினாந்துவிரைந் திரையு மசைவை நடுச்சுழினை
தொய்யுஞ்சிலையிற் கணையெடுத்துத் தொடுக்குஞ் சூட்ச மடியாருள்
எய்யும்படிவந் திருந்துளத்தி லிறையே யெனைவந் தாள்வாயே. (௯)



ஹய்யுல்கையூ மென்னவருங் கருணை வெளியே கதிரொளியே
ஹய்யுல்கையூ மென்னமுப்பாழ் கடந்தா ருருவுங் கதிருருவே
ஹய்யுல்கையூ மென்றுவொளிக் கருதி வெளியை யீடைக்கவருள்
ஹய்யுல்கையூ மெனநிறைந்த ஹக்கே யெனைவந் தாள்வாயே. (௧௦)

வந்தாள்வாயே என்றபதிகம் முற்றிற்று.

---

ஆ திருப்பாடல் - ௩௩௨.

---

# வெளியாக்குமென்சோதிஎன்றபதிகம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மனக்கறுப் பறுத்து புலன்களை மாய்த்து
வஞ்சகக் கொடும்பிழை தீர்த்தே
எனக்கிழி வகற்றிப் பலதுய ரொழித்தும்
என்னுளத் தெங்குமாய் நிறைந்து
நினைத்திட நினைந்த படியருள் முடித்து
நின்கரு ணைகரம் நிறைந்து
வனத்துறை யிருளை யறுத்தருள் வெளியின்
வடிவெளி யாக்குமென் சோதி. (௧)

செனப்பொழு தயர்வம் றுருகியொன் றுகித்
தெளிந்தபின் னறிவெனுந் தெளிவை
கணக்கற வுழுந்தி மவுனமாய்த் துணிந்து
காலமாய் முடிவிலாக் கடவுள்
எனக்குனக் கென்ற விழிவினை யொழித்தும்
ஏகமா யென்னுளத் திசைந்து
வனத்துறை யிருளை யறுத்தருள் வெளியின்
வடிவெளி யாக்குமென் சோதி. (௨)

புணர்கொடும் புலன்கள் காணமு மறுத்துப்
பொருந்தியோர் சொருபமாய்ப் போந்து
இணங்கிய வேத வாகம முடிவின்
இசையரு ளுட்பொரு ளோய்ந்து
பணர்கொளுந் தொளியின் ஹாமீமென் றெழுந்த
பரவெளி யென்னுளிற் பரிந்து
வனத்துறை யிருளை யறுத்தருள் வெளியின்
வடிவெளி யாக்குமென் சோதி. (௩)

உணர்வற வுணர்வற் றூன்றிய கருத்தின்
ஓமென வோங்கியங் குதித்தூக்
கணமிவை யாகி விவரமாய்த் தோன்றிக்
கால்சுழி நாதவிந் தாகி
இணையிலா தெழுந்து தோன்றுமக் கடலில்
எழுந்திரை விழுஞ்சலம் போன்று
வளமுறைப் பிறவி யிருளறு வெளியின்
வடிவெளி யாக்குமென் சோதி. (ச)

நினைவற நினைவி னின்னடி பரவ
நின்னருள் நின்னிரு தாளின்
மனமுற மகம தாயவே தத்தின்
மாசிலா தவ்வருண் முடிவின்
கனவுற களவற் றறிவெனுங் காலங்
காட்டொணு தப்படிக் காட்டும்
வளமுறை பிறவி யிருளறு வெளியின்
வடிவெளி யாக்கு மென் சோதி. (ரு)

குறியெனுங் குணங்கள் மலமெனும் மாய்கை
கொடிதெனும் பூதமஞ் சாகி
நெறியெனும் நேர்மை படிபடி வசனம்
நிறைநிரந் தரமய மாகி
வெறியின்ம யருளாய்த் தோன்றிய பிறவி
விழுகட லதிலமுந் தாதே
மறுவற வனமின் னிருளறு வெளியின்
வடிவெளி யாக்குமென் சோதி. (சு)

களிவற வன்னி பலமருந் தீந்து
களிவுருக் காட்டுதல் வேந்தே
ஒளிகுரு வருளின் மருந்தினை யூன்றி
யொளியழ கொளிர்பசும் பொன்னுய்த்
தெளிதர நிறைந்த பூரணக் குருவின்
தெளிகளிம்பறும்பசும் பொன்னய்
வழியருள் வனமின் னிருளறு வெளியின்
வடிவெளி யாக்குமென் சோதி. (எ)

விழிகொடு வெளியி னுடலுயி ரிடையின்
மேவிய தெவ்வையும் விளங்க
மொழிதரும் பனுவல் வேதமாய்ந் துரைத்தல்
முறைதெரி சனைபதி னறுங்



களிதருங் கடவுள் நெறியிவை மேலாய்
காட்டொணு துணர்த்துதல் காட்டும்
வழியருள் வனமின் னிருளறு வெளியின்
வடிவெளி யாக்குமென் சோதி. (அ)

பொய்யிடுந் துருத்தி குண்டணி கோவிற்
பூசலே விளைசமர் பொருதும்
மையலே விளைக்குஞ் சுடர்க்கரு வில்லம்
மதத்தினு லெடுத்திடும் வலிய
செய்யமும் மதத்தான் மதகரித் தாளின்
சிறுபுழுக் கிருமியாந் திமை
மைவனப் பொன்மை யிருளறு வெளியின்
வடிவெளி யாக்குமென் சோதி. (கூ)

கருணைமுத் தொளிவி லென்னுளத் துறைந்து
காட்டொணு வடிவருள் காட்டித்
தருணநற் சமைய தற்பத மெழுந்து
தாவிய தொம்பதத் திசைந்து
பூரணமுச் சுடரொன் றாகிய துரியப்
புகழ்தரும் அசிபத மாகி
மாரணமற் றுறைந்து மிருளறு வெளியின்
வடிவெளி யாக்குமென் சோதி. (க0)

வெளியாக்குமென்சோதி என்றபதிகம் முற்றிற்று.

ஆட திருப்பாடல் - ஙஉஉ.

## அமரர்மாமணிப்பதிகம்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

முத்தமிழ்க் குருத்தே மூதுரை யறிவே
முழுமுத லானமா மணியே
சித்தெழும் பொருளே உள்ளக விளக்கே
தேவனே தேவர்நா யகமே
நித்தலு முனையே நினைவுறு மடியார்
நினைவினு டெழுஞ்சுடர் வேந்தே
அத்தனே யடியார் சிரமதில் நடனம்
ஆடுவா யமரர்மா மணியே. (க)

பத்தொ டிரண்டு காலொடு பாய்ந்து
பாழ்வெளி மீறும வுருவி
உத்தம மாகக் கழிந்துநால் வெளியில்
உருவியெட் டுள்ளதி லாகிச்
சித்தத்தில் மனைந்து பின்னு மப்படியே
தெளிந்துரு வாக்குநா யகமே
அத்தனே அடியார் சிரமதில் நடனம்
ஆடுவா யமரர்மா மணியே. (௨)

ஊனினை யுருக்கிக் களங்கவே றறுத்தும்
உன்னையே முழுதுமுன் னடியார்
ஏனமே புரிந்து குன்றினிற் றீபம்
ஏற்றிய வாறுபோ லிருந்து
தானுறு தவத்தாற் கடலையுள் ளாக்கித்
தரித்திருப் பவருடன் சேர்க்கும்
ஆனதோர் பொருளே நடமருள் புரியும்
அன்பனே யமரர்மா மணியே. (௩)

வன்னியும் வாய்வும் வெளியினே டிசைந்து
வலம்புரி யிடம்புரி தேங்கிக்
கன்னுறு மணிபோல் நடுவினி லிருந்து
காலுமேல் தலையுங்கீ ழாக
உன்னிடும் பொருளே நினைத்திடு மடியார்
உளத்தினி லுறைந்தநா யகமே
அன்னமுச் சுடரோ யடியவர் சிரமில்
அருள்புரி யமரர்மா மணியே. (௪)

மனமறந் திடவே யறிவினைக் கற்று
வருந்திய வடியவ ருளத்தில்
தினமுன திருதாள் நடனமே யாடித்
திக்கியென் றெழுஞ்சுடர்த் தேவே
கனகமுற் றிருண்டு வலம்புரிச் சங்கிற்
கருணையாய்த் தொனியிடும் வேந்தே
அனகமுற் றடியார் சிரமதில் நடனம்
ஆடுவா யமரர்மா மணியே. (ரு)

கன்றினை யிழந்த மானது போலுங்
கயல்சல மதுதனை யிழந்து
நின்றது போலும் உன்னையா னிழந்து
நிற்புதை மாற்றிடுங் கோவே



பண்டொ ளிருகண் ணிழந்தவர் தனக்குப்
பருவமாய் விழிவரல் போல
அன்றுநீ மறைத்த பொருளினை வெளிய
தாக்கிடு மமரர்மா மணியே. (௬)

மானினை யிழந்த கன்றது தனக்கு
வருந்தியே மானினைக் கண்டே
ஊனுள்ளே யதிக புளகிதம் போலும்
உயர்சலந் தனையிழந் திருந்த
தேனுறுங் கயற்குச் சலம்வரும் போது
சிந்தைகள் குளிர்ந்தது போலும்
ஆனதோர் கிருபை யடியவர் சிரமில்
ஆடிடு மமரர்மா மணியே. (எ)

அகமதி புனைந்து மருணனை யணிந்தும்
அந்திமீ திருந்திடும் போது
செகமதை நினைந்து மவுனமு மாகித்
தெளியவோர் சொரூபமு மாகி
முஹம்மதின் வடிவாய் வெளிப்படும் பொருளே
வல்லிருள் மயக்கமு மறுத்தே
அஹ்மது ரசூல் நபிகழ லென்னுள்
அழுத்திடு மமரர்மா மணியே. (அ)

உடுவெனும் வடிவாய் வைத்த நாயகமே
ஒளிரழ குறுமயி லாகி
வடிவுறு மிரண்டு சிறகையும் விரித்து
வருந்திட வுன்றிரு முன்னே
முடிவிலாத் துவக்க முதலினு மாகி
முறைப்படி முடிவினு மாகி
அடிப்பொரு ளிறசூல் நபிகழ லென்னுள்
அழுத்திடு மமரர்மா மணியே. (௯)

அமரர்மாமணிப்பதிகம் முற்றிற்று.

---

ஆக திருப்பாடல் - நருகூ.

---

# வந்தருளுமென்சோதி என்றபதிகம்.

### எழுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

கருணையூ றருவி வெளிமிசை பரவுங்
　　கருணையைக் கண்டறி பவருள்
கருணையாப் நினைந்தி ரண்டற வொன்றாய்க்
　　கலந்தருள் மருவிடும் பொருளே
பிரணவ மெழுந்து அசைவையிற் கழித்து
　　பிணக்கற விரண்டுமொன் றாகிப்
பிரணவ மசைந்து நடமரு ளுளத்திற்
　　பெருகவந் தருளுமென் சோதி. (க)

கருணையி லிருந்தே யெவ்வையு மமைத்துக்
　　காணொணா ததில்வடி வாகிக்
கருணையாய்ப் புரியுட் டேளமு மாகிக்
　　கனவதி ரொலியிரை வாகிப்
பிரணவ மாகிச் சொருபமா றுடிப்
　　பெயரையும் வலம்புரித் தொனியாய்
பிரணவமூடு மறைந்ததை யெனக்குட்
　　பெருகவீந் தருளுமென் சோதி. (உ)

நாட்டியி னுனியில் நடுவொரு தீபம்
　　நவமணி யொளியது போல
ஊசியின் புரையி லிடுமிழை போல
　　உள்ளம்விட் டகன்றிடா தருகித்
தேசியி லிருக்கும் வீரனை யறிந்து
　　செவிப்பவ ருளமுறு தீபம்
மாசிவ வடிவை யென்னகக் கருத்தில்
　　வளரவந் தருளுமென் சோதி. (ங)

நாசியி னடுவே வாலையின் சொருபாய்
　　நடந்துமெய் வுயிரையு மாண்டு
நாசியி னூடே யேங்கிநின் றிருகால்
　　நடுவுற வளைந்தருள் பூண்டு
நாசியி னடுவே கண்டுனை யறிந்து
　　நாடுவோர் பதமருள் புரியும்
நாசியி னிடையில் வளர்பொரு ளெனக்குள்
　　நல்கவந் தருளுமென் சோதி. (ச)



சுழியினிற் சூட்சக் கதிரொளி பரவுந்
　　தொந்தமே யந்தமில் லானே
சுழியறிந் திருக்கு மடியவ ருளத்தில்
　　தூங்கிநின் றுடிய பரனே
விழியினு ளுன்னைத் திருடியே யமுதாய்
　　விழுங்குவோர்க் கரும்பசி தீர்த்து
விழியினுற் காணத் தீபமு மான
　　விளக்கையுள் ளருளுமென் சோதி. (ரு)

மூன்றுபாழ் வெளியி லிருக்குநற் கமல
　　முகிழ்விரிந் துள்ளொளி சிறந்து
மூன்றுபாழ் கடந்து நின்பதங் கண்டு
　　முடுகுவ ருளத்துறுங் கடலே
நான்றீதைப் பிடித்து வெளியையுள் ளடைதது
　　நடுவினி லிருந்திடுந் தொழிலாய்
நான்உனைக் கண்டு மென்துயர் தீர்த்து
　　நல்கவந் தருளுமென் சோதி. (சு)

பிண்டமுங் கடந்தவ் வண்டமுங் கடந்து
　　பெருகுசாஸ்திரத்தையுங் கடந்து
மண்டல மூன்றுங் கடந்தப்பா லிரவி
　　மதியையுங் கடந்துநின் றேங்கி
முண்டக விளக்கின் சுடரையுங் கண்டு
　　முடிந்துமேலகண்டமுங் கடந்து
நின்றவக் கினியின் சொருபமா யெனக்குள்
　　நிறைந்துவந் தருளுமென் சோதி. (எ)

வானவர் தேவ ரும்யொருச் சொருப
　　மனுடர்நான் மறைமுதற் காணு
ஊனுளே யிருந்து பலதொழில் விளைத்தும்
　　உனக்குள்நா னெனக்குள்நீ யென்றும்
தானதி லிருந்து பலவடி வாகித்
　　தரித்துநின் றுடுடு மிறையே
நானுனைத் துடர்ந்தே னென்னுள்நீ நிறைந்து
　　நல்கவந் தருளுமென் சோதி. (அ)

பலபலவடிவும் அஹமது வென்றே
　　பரிவினு லமைத்துவைத் தாண்டு
பலபல வடிவா யொருவரு மறியாப்
　　பதம்புரிந் தஹமதின் வடிவாய்

நலனுற விருந்தே யேழிர வொன்றாய்
நடந்துநின் னுற்பதங் காட்டும்
நலனுறு மிறசூல் நபிகழ லென்னுள்
நாட்டிவந் தருளுமென் சோதி. (௬)

வந்தருளுமென்சோதி என்றபதிகம் முற்றிற்று.

ஆ திருப்பாடல் - ௬௬0.

## காரணப்பதிகம்.

கலிவிருத்தம்.

அடியார்பவ மானத றுத்தபரா
கொடுமாவினை கோள்துயர் தீர்த்தபரா
உடுவான்சிர மீதிலொ ளித்தபரா
கடிதாம்வினை தீர்த்தருள் காரணனே. (க)

என்னெஞ்சக மீதிலி ருந்தெவையும்
உன்னன்பரு ளோர்சொரு பாய்நிறைவாய்
பன்னும்மறை நாலுப கர்ந்துரைசெய்
கண்ணின்மணி யேயருள் காரணனே. (உ)

விண்ணாய்வெளி யாய்வெளி மேலொளியாய்
மண்ணாய்ப்புன லாயன லாய்வளியாய்த்
தன்னாய்ப்புவன் யாவும் சரிசமனாய்
கண்ணாயொளி காட்டிடு காரணனே. (௩)

தையானென வோதுத போதனர்கள்
மெய்யாயுயி ராய்வெளி காட்டினவா
பொய்யாம்புலன் யாவும்பொ டிந்தபின்னே
கையாம்நின தருள்கொடு காரணனே. (௪)

குன்ஹூவுரை யாகிய கொடுதொனியில்
மன்ஹூவென வளரொளி யெழுந்திறமாய்
நன்ஹூவெனு மெழுநடு நாயகனே
கண்மீதருள் காட்டிடு காரணனே. (௫)

தத்தோமசி யானத யாபரனே
நித்யசொரு பாநிரந் தரனே
முத்திக்கொரு முழுமுதல் முச்சுடரே
சுத்தத்துறு சொருபருள் காரணனே. (௬)



நீதிநினை வோருள் நிறைபொருளே
சோதியென துளிர்நிறை சுடர்கதிரே
ஜோதிக்குரு வடிவொளிர் போதகமே
நாதியொளி நல்கிடு காரணனே. (௭)

பொங்குங்கட லலையி லிருந்துபுகழ்
தங்குமொரு சங்கி லிருந்துதவம்
எங்கும்பிர காச தொனிகரமாய்க்
கங்குல்வெளி கதிரொளி காரணனே. (௮)

வாசிதனில் வளரொளி வானருளே
நேசிநினை வோருளில் நிறைமதியே
தேசிவினை துயரறு தெள்ளமுதே
நாசிநுனி நடுவருள் காரணனே. (௯)

தாமீமொளிர் சரமுறு தற்பரமே
பூமீவினை பொடிபடு போதகமே
ஆமீனென அடிமையுள் ளாதரவே
ஹாமீமிரு கழலருள் காரணனே. (க0)

காரணப்பதிகம் முற்றிற்று.

ஆ திருப்பாடல் - ௬௭0.

## பூரணப்பதிகம்.

அறுசீர்ச் சந்தவிருத்தம்.

துரியந்தனி லுறைகரு ணாகரனே
தொண்டன்மன மீதுறை காரணனே
விரையும்படி வேளைகள் கண்டுதவும்
விண்ணேயொளி வாகிய மெய்ப்பொருளே
பறையும்பர மாகிய நின்னிருதாள்
பணியும்படி பந்த மறுத்தருள்வாய்
பரியும்படி பத்திரு காலதனில்
பாமாகு பழம்பொருள் பூரணனே. (க)

எளியேன்பகை நீக்கின துன்கருணை
யிருளான தறுத்தது நின்கருணை
வழிமீதில் வருத்தின துன்கருணை
வடிவாகி வளர்ந்தது நின்கருணை

ஒளியாகி யிருந்தது நின்கருணை
யுயிர்யாவு நிறைந்தது நின்கருணை
அழியாமல் நிறுத்தின துன்கருணை
யாண்டாய்பரி பூரண பூரணனே. (உ)

உயிர்யாவு மமைக்குமு தற்பரநீ
யொன்றாகி யிருந்த பராபரநீ
துயில்சாக்கிர சொற்பன மானதுநீ
சொல்லப்படு பொருளெவ்வை யானதுநீ
கயிர்சர்றுமி ரண்டிலு மானதுநீ
கதிர்திங்களு டிப்பிர காசமுநீ
பயில்ஞானம தாகிய் தீபமுநீ
பரிபூரண நீபரி பூரணனே. (ங)

என்னங்கம தெங்கணு மாகிடடம்
எல்லாமுனை யல்லது வேறிலையே
பொன்னும்பல பூஷண மானதனல்
போடும்பொழு தொன்றென வானதுபோல்
பன்னும்பல சமையுறு வேதமெலாம்
பரமாமனல் படும்பொழு தொன்றெனலால்
ன்னுமறை வேதமு ரைத்தபடி
பரமாமெனை யாள்பரி பூரணனே. (ச)

வேதத்துறு தீபவி ளக்கொளியே
வினையற்றிடு மெய்யடி யாருளமே
போதத்துறு வாகம நித்தியனே
புனிதப்பொரு ளேபொறை யேநிறையே
ாதப்பதி சமைமுத் லறுகுணமே
பழமாமறை யோதுப முப்பொருளே
பதத்துயர் தற்பத தொம்பதமே
பதமாமரு ளேபரி பூரணனே. (ரு)

வெளியோர்குண மாகநி ரஞ்சனனே
மேவும்வளி யிருகுண மெய்ப்பரனே
* சுழியாமன முக்குண நின்மலனே
தொடுகீர்குண நாலுமை சொற்பொருளே
பழியார்குண மஞ்சினி ரஞ்சனனே
பகராதப மும்பொரு ளப்பொருளே
பழிபார்வெளி யொன்றென நின்றெனையாள்
பழமூதுரை பகர்பரி பூரணனே. (சா)

---

* சுழியாமனல் என்றாஉம் பாடம்.



தூலத்துறு சாக்கிர மாகியதுஞ்
சூட்சத்துறு சொற்பன மாகியதும்
மேல்காரண மாகுசு ழுத்தியதும்
மேவுந்துரி யந்துரி யாதிதமும்
நால்சாதன மூன்றுப தத்தினுமே
நன்றாகநி றைந்தநி ராமயமே
பால்நீருயிர் யாவுநி ரந்தரமாய்
பரமாயெனை யாள்பரி பூரணனே. (எ)

கொடுவஞ்சகர் நெஞ்சம தஞ்சிடவுங்
கொடிதாகிய வாதனை பொன்றிடவும்
விடமாமிருள் யாவுமொ ழிந்திடவும்
வெருள்மாயையின் வஞ்சம் வெருண்டிடவும்
திடமாமுயிர் யாவுநி றைந்திடவும்
தெளிவாம்வழி மீதினு கந்திடவும்
படர்ஞான சொரூப நிறைந்திடவும்
பரமாய்வரு வாய்பரி பூரணனே. (அ)

அணுவாகியது மணுவுக் கணுவா
யழிவற்றனை யாகிய வேதமெலாம்
அணுவுக்கணு வாயணு யாவையுமாய்
அறிவாய்வெளி யாய்வெளி மீதொளிவாய்
அணுவுக்கணு வொளிவெளி யாயறிவாய்
யகண்டபரிபூ ரணசின் மயமாய்
அணுவுக்கணுவா யெனையாள் பரமே
அகண்டபரிபூ ரணபூ ரணனே. (கூ)

ஹாமீமென வேதெளி வாகியநீ
ஹாமீமென வேவடி வாகியநீ
தாமீமென வுரைபுரி வேதமுநீ
தாசீனென வுயிர்க்கிறை யானதுநீ
தாமீமென யாவுநி ரந்தரனீ
தாகாவெனு மாகிய மூர்ந்ததுநீ
ஆமீனிவை யாவுமெ ளக்கருள்நீ
ஆமீனெனை யாள்பரி பூரணனே. (க0)

**பூரணப் பதிகம் முற்றிற்று.**

---

ஆக திருப்பாடல் - நஅ0.

---

# வளரும் றஹ்மானே என்றபதிகம்.

தாழிசை.

ஆதியு மந்தமுமில் லாதபெ ருஞ்சோதி
அன்படி யாருளமில் அறிவாக வருஞ்சோதி
போதம தாயுனது பொற்கழ லைத்தேடி
புந்தியி னூடுறைவாய் புலம்புதல் கண்டிறையே
பாதமி ரண்டையுமென் னுள்ளம் பணிந்திடவே
பார்வையி னுவுருவாய் சிவபத்தி யெனக்கருள்வாய்
வாதம்வைத் தெந்தனுள்ளில் வந்துறை யுஞ்சோதி
பைத்துல் முகத்திசில் வளரும் றஹ்மானே. (க)

மூலக் குகையிலொரு முக்கைவ் ருத்தியதாள்
முச்சுட ரொன்றுன முத்திரை வைத்தபிரான்
மேலைப்படி வாசல் வெண்ணில வுந்தோன்ற
வெண்டர ளத்திறெளி மெல்ல வுலாவிவரக்
கோலச் சுடர்தீபங் கூடிமு டிந்திடத்தே
கோடி ரவிகாந்தி கூசும நேகவிழி
வாலைச் சொரூபமதாய் வந்துறை யுஞ்சோதி
பைத்துல் முகத்திசில் வளரும் றஹ்மானே. (உ)

என்னுள் ளுறைந்திருந்து மெய்வுயி ருநிறைவாய்
ஏழான தொந்தங்கடந் தெங்கும்ப ரந்தபிரான்
கண்ணி லிருந்தெனது கல்போ டுறைந்துவெளி
காணுத மெய்ஞ்ஞானக் காட்சிதந் தாளும்பிரான்
உன்னிடும் வாய்வுசர மோங்கும சைவைதனில்
ஒன்பது டன்மூன்று மோடியெட் டுள்ளாக
வன்னகல் காலென்னுள் வைத்தரு ளுஞ்சோதி
பைத்துல் முகத்திசில் வளரும் றஹ்மானே. (ங)

பூரண மாகவென்ற னுள்ளிலு நிறைந்துபொங்கிப்
பொற்கழல் மூவுலகும் பரிந்தருள் கொண்டபிரான்
ஆரண மாகுமறை வேதாந்த னக்கடங்கான்
அடியா ருளித்திலிருந் தன்புகொ டுத்தபிரான்
காரண மாகுதிரு வாசிகால் பன்னிரண்டில்
கழிந்தோடு நாவிலுறை காட்சிதந் தாளும்பிரான்
வாரண னுமென்னுள் வைத்தரு ளுஞ்சோதி
பைத்துல் முகத்திசில் வளரும் றஹ்மானே. (ச)



பூவுறை வாசமது போலுயி ரெங்கணுநின்
பொற்கழ லாற்பரவும் பொன்னே கண்மணியே
மாவடி தன்னிலிருந் தோடிவ ரும்பொருளே
மன்றுள் நடம்புரியும் மாசற்ற நின்மலனே
தேவர்க் கிறைக்கிறையே தெள்ளமு தேயடியேன்
சிந்தைத் துயரறுக்குந் தேன்கனி யுட்சுவையே
மாதவ முத்திதந்து வந்தரு ளுங்கோவே
பைத்துல் முகத்திசில் வளரும் றஹ்மானே. (ரு)

உச்சி திறந்துவெளி யோங்கும சைவைதனில்
உள்ளுற நின்றசையு முச்சித மெய்ப்பொருளே
பச்சை நிறத்திலொரு பாவையெ டுத்தசைக்கும்
பாழ்வெளி முக்கண்ணுறப் பார்க்கும்ப ழம்பொருளே
அச்ச மறுத்தெனுளி லானந்த மாயிருந்தே
அந்தியின் மீதுறையு மவ்வருள் தந்திறையே
வைச்சிர நாலுமென்னுள் வைத்தரு ளுஞ்சோதி
பைத்துல் முகத்திசில் வளரும் றஹ்மானே. (சு)

அந்தயா சினென்றன் னகத்திற் றெளிவாகி
அஹ்ம தெனுங்கிருபை யானந்த வெள்ளமதில்
உந்தன் திருவிழியா லுள்ளுற நோக்கியதில்
ஊட்டி வளர்த்துமுன் துள்ளங் களிகூர்ந்து
நந்திசொ ரூபம்வைத்த நாதனைக் கண்ணினுள்ளில்
நற்கரு ணைக்கடவுள் நாட்டந் தரும்பொருளே
வந்தருள் சிந்தையதில் வைத்தரு ளுஞ்சோதி
பைத்துல் முகத்திசில் வளரும் றஹ்மானே. (எ)

ஊன்று மெழுத்திலுறைந் தெங்குங் கலந்தபிரான்
உள்ளறி வோருளத்தி லுட்சிவ மானபிரான்
நான்றதின் சூட்சமதை நந்தி யுரைப்படியே
நாடித் திருவருளை நாட்டங்கொ டுத்தபிரான்
மூன்றுமொன் றாய்முடிந்து முச்சுழி யோர்சுழியாய்
முந்நான்கி லொன்றாகி மூடுங் கனலொளிவை
மான்றுமென் னுள்ளமிசை வைத்தரு ளுஞ்சோதி
பைத்துல் முகத்திசில் வளரும் றஹ்மானே. (அ)

அட்டதிக் கெங்குநிறைந் தானந்த மாகுதிரு
அச்சரத் தாடுறைவா யாளும் பராபரனே
எட்டெழுத் தாலுயிர்க ளெங்கும் நிறைந்தொளிரும்
நிர்மலச் சோதியென்னுள் நித்திய மெய்ப்பொருளே

இட்டம தாயெனக்குன் றீதாறு தந்தெனைநீ
திருவோங்கு நபிபதத்துட் சேர்த்தெனை யாண்டருள்வாய்
வட்டெழுத் தாயெனுளில் வந்துறை யுஞ்சோதி
பைத்துல் முகத்திசில் வளரும் றஹ்மானே. (கூ)

பாச வினைதவிர்க்கும் பஞ்சாட்ச ரத்தையுள்ளில்
பத்தி கொடுத்துனது முத்திரை வைத்தபிரான்
நேசமா யென்னுளேநின் றூடுந் திருவருளை
நித்தலும் யான்காண நின்பாத மீந்தருள்வாய்
ஓசை மனத்துறநின் றோங்குஞ் சுழிநடுவே
ஒன்றோ டிரண்டாயுல கெங்குங் கலந்தபிரான்
வாசல் திறந்தெனுளில் வந்துறை யுஞ்சோதி
பைத்துல் முகத்திசில் வளரும் றஹ்மானே. (க0)

வளரும் றஹ்மானே என்றபதிகம் முற்றிற்று.

---

ஆ திருப்பாடல் - ௩௬0.

---

## ஹாமீம் முஹம்மதுப் பதிகம்.

அறுசீர்த் தாழிசை.

இந்த வுலகம் வெறும்பொய்யே யிதனிற் சமைந்த வகைபொய்யே
உந்தன் கரணப் புலன்பொய்யே வுடலிற் சமைந்த வகைபொய்யே
நந்திக் குருவி னருள்மெய்யே நாட்டத் துடையோ ருளமெய்யே
அந்தக் கிருபை யருள்புரியு மரசே ஹாமீம் முஹம்மதுவே. (க)

துஷ்டர் பகையை யறுத்தொதுக்குந் தொந்த வினையைப் பொடிபடுத்தும்
கஷ்ட காலந் தனைநீக்குங் கருத்துள் நினைந்த படியாக்கும்
வட்ட மதிபோ லொளிவீசும் மறைவே தங்கள் மழைபொழியுந்
திட்ட மறிந்தே யுபகரும் தெளிவே ஹாமீம் முஹம்மதுவே. (உ)

கொண்ட லதனை மருட்டுகுழல் கொழுந ருயிரைப் பிடிக்கும்விழி
துண்ட மதனைப் பொருதுநுதல் தூம மதனை வெருட்டுமுகம்
கண்டு மயங்கி யுடலயர்ந்துங் கலைகள் சோர்ந்தும் அறிவழிந்தும்
என்று மலையா தருள்புரியு மென்கோன் ஹாமீம் முஹம்மதுவே. (ங)

முத்தை யொளிக்கும் நகையாளே முதிர்ந்த பவளத் திதழாளே
சித்தித் தொழிலு முடையாளே ஜெகத்தை மயக்குங் குணத்தாளே
ஒத்துப் புணர்ந்தே யுடலுயிரும் உளமுங் கலங்கா தினதருளை
நித்தம் பரவ வருள்புரியும் நிறைவே ஹாமீம் முஹம்மதுவே. (ச)



நிலையி லனுவும் வினையாளே நிறைந்த காம முடையாளே
கலையை நெகிழ்த்தி யருள்கொடுக்குங் காம வியாதி யுடையாளே
தலையு முடலும் புழுத்துமெத்தத் தாவும் பவத்தி லுறுமாந்தர்
வலையைக் கடக்க வருள்புரியும் வளமே ஹாமீம் முஹம்மதுவே. (ரு)

இரும்பா மனதைச் சலம்போல வெளியா ளவில் மிகவிரங்கிக்
கரும்பாம் ருசிபோ லடியவர்க்குட் கனிபோ லிருக்கக் கடவுளருள்
துரும்பாம் பகைபோ யுனதுபதச் சூட்சக் கிருபை யருள்புரியும்
தரும்பா லமுதே மெய்ஞ்ஞானத் தவமே ஹாமீம் முஹம்மதுவே. (சு)

சுருதி முடிவுந் துறைமுடிவுந் தொந்தக் கடவு ளருள்முடிவும்
பருதி முடிவு மடியவர்தன் பரமக் கிருபைத் தொழின்முடிவுஞ்
சுருதி முடிவின் படியெவையுந் தொந்தக் கிருபைப் பதகடனுஞ்
சுருதி முடிவின் படியாண்டாய் துணையே ஹாமீம் முஹம்மதுவே. (எ)

ஏழை யடியார் நினைவுதனை யெந்நா ளுந்தான் கலங்காமல்
ஆளும் பருவந் தனையறிந்தே யடியார் தனைவந் தாள்வாயே
சூழ விருண்ட வினையொழிக்கச் சோம னெனவுந் துதித்தகுரு
தாளை யடியார் சிரசிலுறுந் தாமீம் ஹாமீம் முஹம்மதுவே. (அ)

இருளை வெளியி லொளியாக்கு மென்கோ னருளைத் தினம்பரவ
அருளி லருள்வந் தருள்சிறக்கு மடியார் கமலத் தருளாக்கும்
பொருளை மிகவே கனியாக்கும் பொருந்தார் பகையைக் கருவறுக்கும்
தரள மணிமுத் தாயிருந்த தாமீம் ஹாமீம் முஹம்மதுவே. (கூ)

வெளியி லொளிபோ லொளித்தேயருள் மெள்ளத் திறந்து வெளியிலொ
ஒளியி லொளிபோல் விரவிநின்ற வுண்மை தவறு துளத்தாக்கி [ளி
யளியக் குருவி னருள்கிருபை யனலக் கினியா லடக்கிவெளி
தெளியத் தெளிய வொளிமருவத் திருத்தும் ஹாமீம் முஹம்மதுவே. ()

ஹாமீம்முஹம்மதுப்பதிகம் முற்றிற்று.

---

ஆ திருப்பாடல் - ௪00.

---

## அருள் ஹாமீம் பதிகம்.

கலிச்சந்த விருத்தம்.

திருவுறைந்திடும் வேதநா வினுமலர் தேனமு துணவாகிப்
பொருவுறைந்தவென் னுளமிசை மாக்கடல் பொங்கியு மிகவாகி
கருவுறைந்தவெவ் வுயிரினும் நின்னருள் கலந்துற வருள்மேவக்
குருவெழுந்தருள் சோதியென் றுயரறக் கொண்டருள் ஹாமீமே. (க)

பிணக்கறயாவையு மறுத்தருள் சூரியன் பிரபையி னருள்போல
குணக்கம்யாவையு மறுத்தருள் வெளியெனைக் கொண்டருள் தந்தாயே
நினைக்கும்வேளையி லதிசய மதிசய நினைவிலும் நினைவாமால்
மனத்தின்மீதுறு மடியவர் துயரற வடித்தருள் ஹாமீமே. (௨)

உள்ளமீதினிற் கலக்கமும் பயங்களு மொழிந்திட வுனதாகம்
மெள்ளவேவரு மனுவடி வாகவுள் விளைந்தருள் தந்தாயே
கள்ளமானதும் பொய்களும் புலைகளுங் கணக்கொடு நீறாக
வள்ளலேயுன தருள்சிறந் திடும்படி வந்தருள் ஹாமீமே. (௩)

நெஞ்சமீதினிற் றுயரறும் படியுன திருகழல் நினைவாக
வஞ்சமானதுங் கலிகளும் வறுமையும் வடித்தருள் தருஞ்சோதி
என்செய்வேனுன ததிசய மனமிசை யிருவினைத் துயர்யாவும்,
பஞ்சிலேயெரி யிடுவது போல்வரம் பதித்தருள் ஹாமீமே. (௪)

ஏழையாகிய யாங்கள்செய் திடுங்கணக் கெவ்வையும் புலனதிர
வேளைகண்டவை யாவையும் போலவே விரைந்தருள் தருஞ்சோதி
பாழிலேயுனா பகர்ந்தவ னெஞ்சமும் பணிவிடைக் காளாக
நாளும்நின்கரு ணைக்கட லீந்தருள் நம்பொருள் ஹாமீமே. (௫)

முத்தனாகினன் பவக்கடல் தீர்ந்தனன் முழுவினைத் துயர்போக்கிப்
பத்தனாகினன் நின்னருட் பணிவிடைப் பணியவு மாளானேன்
நித்தனாகின னுயிரெலாம் நிறைந்திடு நிரஞ்சன னருண்மேவி
யுற்றன்யானுமென் னுளத்தினி லிருந்திடு முயரருள் ஹாமீமே. (௬)

கணக்கிலாதுறு வினைகளுந் தீர்ந்திருங் கடன்மிசை துயர்தீர
எனக்குனக்கென மூழ்கியென் பவவினை யாவையு மிடுதீயில்
தனக்கலாற்றுயர் வேறிலை யென்றதில் தாமுமே யுறமேவிக்
கணக்கினால்வரும் வினைகளை யறுத்தருட் கண்ணொளி ஹாமீமே. (௭)

அறைந்தநாவினாற் புகழ்ந்திட வரிதரி துனதரு ளருண்மேவி
சிறந்திருந்தநின் கருணையைப் பணிவிடை செய்யினு முடியாமல்
மறந்திருந்தவன் மனதினி லோர்மையின் வடிவிரு கழன்மேவி
யுறைந்திருந்ததை யாவரா லுரைப்பதோ வுனதருள் ஹாமீமே. (௮)

வேதம்யாவுமே யுனதுரை யதுதனில் விளைந்தருள் வேதாந்தப்
போதமானதென் னுளமிசை வருவதாற் பொன்றிடும் புலன்யாவும்
காதல்மேவுநின் கருணையி லுணர்விசைக் கவினொடு முருவானேன்
ஆதலாலெனை யசிபத சொருபமி லாக்கிடென் ஹாமீமே. (௯)



வெளியைமேவியென் மனவெளி வெளியினின் மிகவெகு சொருபாகி
களிமகிழ்ந்துநற் கிருபையாற் குருவருட் கருணையின் விழிநோக்கத்
தெளிதெளிந்ததெவ் வுயிரினுஞ் சிற்றுற வானந்தத் திறமான
ஒளியையுண்டனன் மூழ்கின னெனதுரு வொளிவடி ஹாமீமே. (௧௦)

அருள்ஹாமீம்பதிகம் முற்றிற்று.

ஆக திருப்பாடல் - ௪௧௦.

## ஹாமீம்பதிகம்.

### கோச்சகம்.

நின்னையறி யாமலுனா நீயறிந்த தெவ்வையுந்தான்
பின்னலலை யென்றதல்லாற் பின்னலலை யென்றேனே
முன்னுரை யில்வேத முழுமுதலொன் றாய்முடிந்த
தன்னையறி வாருளத்திற் சார்வாக்கும் ஹாமீமே. (௧)

எவ்வுயிரு மெவ்வகையு மெவ்வையுமுண் டானதெல்லாஞ்
செவ்விலைபொய் யென்றதல்லாற் செவ்விலைபொய் யென்றேனே
பவ்வமறு மெய்ஞ்ஞானப் பரத்தையுள்ளாய் வைத்ததுனை
மவ்விலுறுஞ் செவ்வையருள் வைத்தருளும் ஹாமீமே. (௨)

நீயறியா தொன்றுமிலை நின்னையறி யாததென்ன
நீயறியாப் * பொய்மையுரை நீயறிபொய் யென்றேனே
நீயறியா நின்னையறி நீயறியா நின்னையறி
நீயறிய நின்னையருள் நின்மலமாம் ஹாமீமே. (௩)

பந்த முறுங்கரணப் பாவனைய தானபுலன்
சிந்தையழி யென்றதல்லாற் சிந்தையழி யென்றேனே
முந்தவுரை வேத முழுமுதலைத் தானெனவே
அந்தவுரை யென்றனுள மாகவருள் ஹாமீமே. (௪)

விழிமருள தாயெவையும் விழிதுயிலில் வேறுமிலை
ஒளிமருவ வென்றதலா லொளிமருவு மென்றேனே
அளியிலுறு பொருளதனை யருளுறுகண் ணுலதனை
தெளிமருவ வெனதுயிரிற் சேர்ந்துறையும் ஹாமீமே. (௫)

வேதவே தாந்தமெல்லாம் வேறிலைநீ தானெனவே
† போதமிலை யென்றதலாற் போதமிலை யென்றேனே
ஓதுமுறை யானதமை யுள்ளமெல்லாங் கள்ளமென
நீதியநீ தியையறிந்து நீயான ஹாமீமே. (௬)

* பொன்மை என்றாஉம் பாடம், † போதமிது என்றாஉம் பாடம்.

முப்பாழ் கடந்து முதல்மூன்றும் பாழான
அப்பாழ்பா ரென்றதலா லப்பாழ்பா ரொன்றேனே
செப்பாத வேதந் தெளிந்துரைத்த தேனதனை
மெய்ப்பாக மாயருந்த மேவிவரும் ஹாமீமே. (எ)

இவ்வுடலும் பொய்யா மிதிற்சூட்ச மானதும்பொய்
யவ்வுடல்மெய் யென்றதலா லவ்வுடல்மெய் யென்றேனே
செவ்விலுறு வேதந் தெளிந்துரைத்த தெள்ளமுதே
நவ்வியுற வாய்க்காட்டி நன்றுக்கும் ஹாமீமே. (அ)

முத்திதரும் வேத மொழிந்தவுரை யாவதெனில்
சத்தியமா மென்றதல்லாற் சத்தியமா மென்றேனே
பத்தியருள் மும்மூட்சின் பரிவதுபோ லேபரிந்தால்
நித்தியமாஞ் சோதியருள் நித்தியமாம் ஹாமீமே. (கூ)

சமைமுதலா மறுகுணமுந் தானறிந்து தற்பதத்தை
நமையறிவ தென்றதல்லால் நமையறிவ தென்றேனே
சிமைகனம தாமுலகஞ் செய்கைவிழல் தானெனவே
நமையறிய நமதுபரம் நாமாக்கும் ஹாமீமே. (க0)

பூவுலகும் மேலுலகும் பொன்னுலகு மெவ்வுலகும்
பாவுலக மெல்லாம்பொய் பார்த்திருமென் றோராயோ
நாவுலக வேதம் நடத்தவுரை நன்னெறியைத்
தாவியுள மேவவருள் தாசீனல் ஹாமீமே. (கக)

தோன்றும் வகையெல்லாந் தொழிலிதுகா ணென்றறிந்து
மூன்றுமொன்றாய் நின்ற முடிவறிய வோராயோ
தாண்டுமுனே நானென்று தானறிந்து தானகத்
தோன்றுபொருள் கண்டதுமெய்ச் சுருதிமுடி ஹாமீமே. (கஉ)

உண்டான தெல்லா முருவுனதா மென்றறிந்தாற்
கண்டதுபொய் யென்றதல்லாற் கண்டதுபொய் யென்றேனே
தொண்ட ருளமீதிற் சுத்தசத்ய மானதுனை
என்றுமன மேவுதற்கே யெனையாட்கொள் ஹாமீமே. (கங)

ஹாமீம்பதிகம் முற்றிற்று.

---

ஆக திருப்பாடல் - சஉங.

---



## தாமீமென்தாசீன் என்றபதிகம்.

எழுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

உன்னரு ளுன்னைத் துதிப்பதால் யானும்
உன்னரு ளுன்னடி யுன்னாய்
என்னையென் றுரைப்ப வேறில்லை யதனால்
என்னுளத் தெங்குமா யிறைஞ்சத்
தன்னடி தானாய்த் தன்னெறித் தவமாய்த்
தற்சொரு பத்துறு சொருபாய்த்
தன்னையா னீயுமாய்த் தரித்துளம் நிறைந்த
சத்துறு தாமீமென் தாசீன். (க)

உரைத்திடி லடங்கா தோதிடி லடங்கா
துள்ளகத் தெங்குமா யோர்ந்து
நிரைத்திடி லடங்கா தெவ்வையுங் கலந்து
நிரஞ்சன நிரந்தர னாய்
உரைத்திடி லுனையே யலதுவே றிலையால்
உண்மையை வேதநா லுணர்ந்து
தரைத்துறு முயிர்கள் யாவுமே கலந்த
சத்துறு தாமீமென் தாசீன். (உ)

கற்பனைப் படுவ தாறுபொருள் யாவுங்
கள்ளமா மநித்திய மென்றே
சொற்படி வேத நாலுமிப் படியே
தொகுத்துறி யறிவிலாத் துன்பம்
இப்பொறி யதனால் மயங்கியான் வீணில்
எடுபடா துன்னரு ளிறைஞ்சத்
தப்பிலாக் கருணை யானந்த மாய
சத்துறு தாமீமென் தாசீன். (ங)

துன்புறு முயிரைக் காலனாய் நுகர்வன்
தோற்றமுந் தின்புறு முயிரை
அன்பினுந் தேவ கணங்கள்பின் சிறப்பாய்
அருளுன தடியிணை யதனை
நம்பிவந் தடிசேர்ந் திடுமுயி ரகலா
தகன்றிடி லுடலகன் றிடுமாம்
தம்பமிப் படியே யென்னையாண் டருள்வாய்
சத்துறு தாமீமென் தாசீன். (ச)

அதுவெனு மதுநீ யாகினை யெனுமே
ஆகம வேதமப் படியே
பொதுவரப் பொதுவா யுரைத்ததின் படியே
போதமா யெனையருள் புரிந்தே
அதுவிது வெதுவோ வெனுமனங் கலங்கா
தாயினை யாயினை யெனுமால்
ததும்பிடும் படியென் னறிவெலாம் நிறைந்த
சத்துறு தாமீமென் தாசீன். (௫)

வாக்கிய மிரண்டாற் பிரமநிட் டாந்தம்
வகையுடன் கர்மநிட் டாந்தம்
ஆக்கிய விரண்டி லற்பமாம் சுருதி
அதுகர்ம வாக்கிய மகலப்
போக்கிய பின்பு பிரபல சுருதி
போதமாம் வாக்கிய போதம்
தாக்கினின் னறிவா லெவ்வையுங் கலந்த
சத்துறு தாமீமென் தாசீன். (௬)

அருபமாய்க் காணு தாயநின் சோதி
யாயது மப்படி யலது
உருபமாய் ரூப முட்புகுந் தொன்றாய்
ஒன்றேடொன் றேய்விலா தோங்கிச்
சொருபமா யாய சோதிநீ யென்றே
தொகுத்துரை சுருதியாம் போதந்
தருபத சொருப மாயெனைக் கலந்த
சத்துறு தாமீமென் தாசீன். (௭)

சத்துறு தவத்தின் பிரமமா மென்றுந்
தனையறி யாச்செயல் சத்தென்
றுற்றிடும் வேத நாலுமிப் படியே
யுரைத்ததென் றுரையருள் குருவே
சத்தெனு மறிவா யாவையுஞ் சித்தாய்த்
தான்கலந் திருந்ததா னந்தம்
சத்துறு சித்தா னந்தமாம் சொருப
சத்துறு தாமீமென் தாசீன். (௮)

சுத்தமா மலது வேறெல்லா மசுத்தந்
தோன்றிய வேதநா லுரைத்த
சுத்தமே கருணை யானந்த மாய
சொருபமே தோன்றியுந் தோன்றாச்



சுத்தமே யானென் றறிவுமே லான
சுத்தமாய் சுத்தமாம் சொருப
சத்ததா யான சொருபமாய் நிறைந்த
சத்துறு தாமீமென் தாசீன். (௯)

அந்தஹறா மீமென் னகத்துற நிறைந்து
அந்தயா சீனருள் யாவும்
அந்ததா ஹாவுன் னருட்செயல் சிறப்பாய்
அளவிடா மூமினுக் கரசாய்
அந்தமொன் றில்லா தானவா மவுலா
ஹறாவெனு யானுமப் படியே
தந்தவா கிருபை யானந்த மாய
சத்துறு தாமீமென் தாசீன். (௧௦)

தாமீமேன்தாசீன் என்றபதிகம் முற்றிற்று.

---

ஆ. திருப்பாடல் - ௬௩௩.

---

## தாசீனருள் தாமீம்பதிகம்.

---

கலிவிருத்தம்.

பூவினுறை கந்தமது போலுயிர்கள் யாவும்
மேவிய வகண்டபரி பூரணம் விளங்க
நாவினி லெழுந்தருளும் நம்கலிய கன்றே
தாவியுரை பேசநிறை தாசீனருள் தாமீம். (௧)

என்னுள மதிற்கருணை யெங்கணு நிறைந்தே
மன்னுளம தென்னுளமில் வந்தருள் சொரிந்தே
உன்னடிமை யுன்னருளி லுன்னடி துதித்தே
தன்னறிவு தன்னுள்நிறை தாசீனருள் தாமீம். (௨)

துன்பமுறு வன்புதுயர் துஞ்சிவிட வந்துள்
அன்புகொடு நின்னருளென் னங்கமதி லெங்கும்
பம்புறு பழம்பொருள் பரந்தெனுள் நிறைந்த
தம்பமருள் நின்கருணை தாசீனருள் தாமீம். (௩)

வேதமுறை தன்னையறி மெய்யருள் விளங்க
ஓதுபரி பூரணமு ளத்திலருள் தங்கி
நீதியருள் மேவியும நீதியை மறந்து
சாதியுள மீதில்நிறை தாசீனருள் தாமீம். (௪)

தன்னையறி யாதவர் தவங்கள்விழ லென்றே
உன்னுனா புரிந்தமறை வேதமுறை செய்யும்
என்னுளமி லப்படி யிருந்தருள் நிறைந்தே
தன்னறிவி லொன்றுபடுந் தாசினருள் தாமீம். (௫)

காரணமே யொன்றலது காரியம தொன்றே
சீர்பெருகும் வேதமுறை செய்ததிவை யென்பாம்
வீரிய மிகுந்தவிழற் காரியம்வெ றுண்டே
தாரிதய காரணமுள் தாசினருள் தாமீம். (௬)

இந்தவுல கங்களை தென்றுள மிழந்தே
அந்தவுல கம்பெறு மதின்செயல் மறந்தே
எந்தனுயி ருட்சொருப மெங்கணு முகந்து
தந்தவெளி யுள்ளியொளி தாசினருள் தாமீம். (௭)

வம்பர்பகை யென்றது மடிந்திடவும் வஞ்சி
வெம்புவினை யாவையும் வெருண்டிட விளாந்து
முன்பிறுறு வேதமுறை முத்திகுரு வைத்த
தம்பமென துள்ளிதய தாசினருள் தாமீம். (௮)

நூறுடனே நூறிருபத் தோடுபுவ னுளும்
வேறுமிலை யிக்கருணை மெய்யருள் நிறைந்த
கூறிலிவை யாவுமுயிர் யாவுமருள் கொள்கண்
தாரிதைய சோதிநிறை தாசினருள் தாமீம். (௯)

அந்தஹா மீமந்த யாசினருள் தாஹா
அந்தஒலி யுன்னுபுரில் மூமினத்தி யாக
அந்தமவு லாஹாயென் னகமதுள் ளாகத்
தந்திதைய மாகநிறை தாசினருள் தாமீம். (௧௦)

தாசீன்நுள் தாமீம்பதிகம் முற்றிற்று.

ஆ திருப்பாடல் - ௪௮௫.

# தேனமுதருளும் என்றபதிகம்.

சந்தத்தாழிசை.

முப்பாழ் கடந்து முடிவான
முனையி லிருகா லுமலுன்றி
முத்தி வருத்துங் குருவடியின்
முறைகண் டடியே னின்பாதம்



அப்பாழ் கடந்து மறுகுருதி
யருளைப் பரவி மனந்தெளிந்தே
அல்லும் பகலும் நினைத்துமனந்
தகத்துட் சுடரி னருள்மூட்டி
மெய்ப்பா யிருந்த வுள்ளறைக்கண்
வெளியி லொளியைத் தேக்கிவைத்துன்
மேவு மவுனக் கிருபையருள்
விளையும் படிதந் தடியாருள்
கைப்பா லெடுத்து மெனக்கீந்துன்
கனிவா யிதழ்த்தே னமுதருளும்.
ஹாமீம் முஹம்ம தென்பீர்நின்
கனிவா யிதழ்த்தே னமுதருளும். (௧)

எழுத்தைத் திறந்து நடுவணையில்
இருக்கு மவுன வட்சரத்தின்
இசைந்து வருமவ் வெளியொளியோ
டிருக்குங் கருணை யியலுரைக்கும்
சுழித்துத் திரண்ட குமிழ்மலரின்
தொடுக்குந் தீபக் கிருபையருள்
தொந்த மெனவெவ் வுயிர்நிறைந்து
சொல்ல வதிகப் பொருளாகி
பழுத்த பழம்போ லருந்தியுளிற்
பசியை யறுத்துப் பரம்நிறைந்து
பழகும் படியே யென்னுள்த்திற்
பருவ மெனவந் திருந்ததிறன்
களித்து மகிழ்ந்த பொருளேநின்
கனிவா யிதழ்த்தே னமுதருளும்
ஹாமீம் முஹம்ம தென்பீர்நின்
கனிவா யிதழ்த்தே னமுதருளும். (௨)

அன்றே யுருப்பட் டருள்நகத்தாய்
அடியு முடியு நடுவாகி
அயர்வற் றிருந்த பொருள்தனை
யருளும் படிகண் டடியேனும்
இன்றே யுருப்பட் டிமைக்குமுள்ளில்
இருந்தே ஞானத் திசைத்தமிழாய்
இரங்கிக் குருவின் கிருபையருள்
என்னுள் நிறைந்து மிகப்பெருகிப்

பண்டே யிருந்த பழம்பொருளைப்
பரவிக் கிருபைப் பனுவல்தனைப்
பழகும் படிநின் னிருதாளின்
பரம நடனப் பிரகாசங்
கண்டு மகிழு மென்குருவே
கனிவா யிதழ்த்தே னமுதருளும்
ஹாமீம் முஹம்ம தென்பீர்நின்
கனிவா யிதழ்த்தே னமுதருளும். (ங)

உருகிக் கனிந்து கனிந்துவெளி
யுருப்பட் டோங்கி மவுனமதாய்
ஒன்றே யொன்றி யிரண்டாகி
யுள்ளும் புறமு மொருவடிவாய்
பருகி யுயிருள் முடிவான
பகருஞ் சிரமீ திருந்ததிறன்
பார்வை யிருகண் ணுண்மலரிற்
பருவ மதனைப் பரிமீதிற்
பெருகிக் கமலச் சுழிமூன்றாய்
பிணங்க லறநின் றிருவொளிக்குட்
பேறென் றிருந்த சுழிகுட்சப்
பேறே யுளத்திற் றுயர்காதற்
கருகி யடியே னலையாதுன்
கனிவா யிதழ்த்தே னமுதருளும்
ஹாமீம் முஹம்ம தென்பீர்நின்
கனிவா யிதழ்த்தே னமுதருளும். (ச)

அஞ்சி லுருப்பட் டொன்றாகி
அகமும் புறமும் பதநடனம்
ஆயுங் கலைகண் டடியாருள்
அழிந்து மழியா தயர்வற்று
பிஞ்சு மறந்து பேர்இறந்து
பெருகுங் கடலுட் புரியாகிப்
பிணைபோன் றிருந்த வொளிவொலியின்
பெருமை யதனு லுயிர்யாவும்
நஞ்சங் கெழுந்த நுதிநடுவில்
நஞ்சாய் நஞ்சுள் நடுவாகி
நானு மிலைநீ தானுமிலை
இரண்டு மிலையொன் றுருவாகிக்



கஞ்ச மலரி னழகொளிர்நின்
கனிவா யிதழ்த்தே னமுதருளும்
ஹாமீம் முஹம்ம தென்பீர்நின்
கனிவா யிதழ்த்தே னமுதருளும். (ரு)

ககனத் திரையை யறுத்துவெளி
கண்டே யகண்ட வெளிமீதிற்
கருதிக் கருதி மயல்பெருகிக்
கமல முகங்கண் டுருவாகிக்
ககனைக் ககனுள் மறிவாகி
கட்டும் படிகண் டொருநாளுங்
கசடற் றுருகி யருணனொடு
கதிர்பொற் பதத்தாள் மகிமருவிக்
ககனைக் கருத்தின் விரைவான
கருணைக் களியுற் றுருவாகிக்
கண்டுங் காணு தழகுதிறன்
கண்டுங் காணும் படிகருதிக்
ககனைக் கதிர்முச் சுழியொடுநின்
கனிவா யிதழ்த்தே னமுதருளும்
ஹாமீம் முஹம்ம தென்பீர்நின்
கனிவா யிதழ்த்தே னமுதருளும். (சு)

தேனமுதருளும் என்றபதிகம் முற்றிற்று.

---

ஆ திருப்பாடல் - சசக.

---

# ஹல்லாஜென்பீரோ என்றபதிகம்.

---

### கொச்சகம்.

அந்திதனில் மலர்ந்த வட்சரத்தை யென்னுளத்திற்
சிந்திடா துள்ளிற் செலுத்தியரு ளுங்கோவே
நந்தி திருவருளை நாட்டியெந்த நாளுமுங்கள்
விந்தமலர்ப் பாதமருள் வேதர்ஹல்லா ஜென்பீரோ. (க)

முந்தக் கிருபை முளைத்தருள தாய்த்திரண்ட
அந்தக் கிருபை யடியா ருளத்திலருள்
எந்தப் பொழுது மெனையாண்டே யாளாக்கும்
நந்திவடி வாகவந்த நாதர்ஹல்லா ஜென்பீரோ. (உ)

மூன்று வடிவாக முடிந்தகிரு பைச்சுடரில்
தாண்டவம தாய்நடனஞ் சார்ந்தவொளி யோசைதனைப்
பூண்டு முளமீதிற் புரிந்துமறி யாதவனை
ஆண்டி ரட்சித்தாள வருளும்ஹல்லா ஜென்பீரே. (ங)

பன்னிரண்டு காலாற் பரந்தசையு மப்பரியை
எண்ணியுளத் தாக்காம லேழை மெலிவேனை
கண்ணி தனைமுடிந்து கால்நாலை யுள்ளாக்கி
யுன்னிப் பிடிக்கவரு ளுண்மைஹல்லா ஜென்பீரே. (ச)

மூல முடிவுசுழி மூன்றுவடி வானதிருக்
காலைப் பிடித்துக் கருதி யறியாமற்
சாலவுட லாயிருந்து தவத்தை யறியாதசிறு
பாலன் றனையாளப் பகரும்ஹல்லா ஜென்பீரே. (ரு)

ஆவென் றெழுங்கடலி லதிகவுரு வானசங்கில்
ஊவென் றெழுந்து முருண்டு வடிவாகி
மாவென் றொருதுளியால் வந்துறைந்து நின்றிரைந்த
நாவென் றெனக்கருளும் நாதர்ஹல்லா ஜென்பீரே. (சு)

உள்ளக் கடலி லுருவ சொருபமதாய்
மெள்ள வெளியில்வந்து வேண்டுங் குணம்விளைத்து
வள்ளல் பதத்தை மனதிலுருக் கெட்டாதான்
கள்ளப் புலனறுக்கும் ஹல்லாஜென் சாகிபுவே. (எ)

முப்பாழ் வெளிமுடிவு மூன்றுசுழி யுங்கடந்தே
அப்பாழுந் தாண்டிநடு வானந்தத் துள்ளாகிச்
செப்பாத வுண்மைத் திருவருளை யுண்டுமெது
மெய்ப்பான பாதமருள் வேதர்ஹல்லா ஜென்பீரே. (அ)

ஹல்லாஜென்பீரே என்றபதிகம் முற்றிற்று.

ஆ திருப்பாடல் - சுருஎ.

# யாசீன்ஹாமீமென்ற ஒருபா இருபஃது.

**அறுசீர்த்தாழிசை.**

வானோர் கரங்கள் குவிந்திடலும் மறைநால் வேதம் புரிந்திடலும்
தீனோர் மனங்கள் பணிந்திடலுந் தேவர் கணங்கள் புகழ்ந்திடலுந்
தானு மெவையு முகந்திடலுந் தாங்கு ஹறுபி லிருந்திடலும்
ஆனர் ஆமீ ஞருதாத் தடங்கும் யாஸீன் ஹாமீமே. (க)



எல்லா மமைக்கு முதலாகி யிருந்த வெளியில் னின்றுமஞ்
சொல்லால் மறைகள் சொல்லிமொங் துலங்கு முனது கிருபைதனை
இல்லா லுயிர்க ளெவ்வயு நிறைந் திறைஞ்சு முனது பிரபையொளி
அல்லோ ஆமீ ஞருதாத் தடங்கும் யாஸீன் ஹாமீமே. (உ)

உயிர்க ளமைக்கு முதலதுவே யுண்மைக் கடலுள் புரியதுவே
பயிர்முச் சுடரு மணியதுவே பகரும் வேத முடிவதுவே
கயிர்தா வெனுங்கை யிரப்பதுவே கருணை ஸஜ்தந் தொகுத்ததுவே
அயிர்சுராமீ ஞருதாத் தடங்கும் யாஸீன் ஹாமீமே. (ங)

உந்தன் பெருமை நாமமதை யுரைக்க நாவோ வொருகோடி
தொந்தக் கடவு ளாகிடினுந் துதித்து முடியா துன்கிருபை
அந்த வரூப சொரூபமும்நீ யல்லா தெழுந்த வகண்டமுதல்
அந்த வெளியி லொளிஆமீ னருள்சேர் யாஸீன் ஹாமீமே. (ச)

முக்கா ரிருளி லிருக்குமந்த முடிவி லுதித்த பொருளாமீன்
எக்கீன் மரத்திற் கண்ணுடி யெனுமட் சரத்தி லருளாமீன்
ஹக்கா முயிர்க ளுளத்திலுறுங் கருணைக் கடலி லருளாமீன்
அக்கா ராமீ ஞருதாத் தடங்கும் யாஸீன் ஹாமீமே. (ரு)

வலிதா யிருந்த ஹறுபதனுள் வலிதாம் பொருளட் சரமாகி
சலியா தடியார் துயரறுக்குந் தவமாம் ஞானப் பொருளாகி
ஒலிமா மறையுள் ளிறையாகி யுள்ளும் புறமு முணர்வாகி
ஹலிமா சூகை யமுதருந்து மருள்சேர் யாஸீன் ஹாமீமே. (சு)

அலிமா துலனென் றருள்கொண்டா யவனி நர்வான் மகிழ்நன்றாய்
புலிமான் றனக்குப் பிணைநின்றாய் பெருகும் ஜிபுரீல் வரவின்டாய்
கலிமா வெனுமட் சரமொன்றாய்க் கருணை மனத்தெந்த யாட்கொண்டாய்
ஹலிமா சூகைப் பாலுண்டா யருள்சேர் யாஸீன் ஹாமீமே. (எ)

வானி லதிகத் தெளிவிருக்க வண்மை யறுஷு குறுஸிலொளித்
தேனி லதிக ரசமிருக்கத் தெவிட்டா தினித்த கனியிருக்கப்
பானி லழகுச் சொர்க்ககள் பலதா மதிகப் பழமிருக்க
ஊனில் ஹலிமா சூகையமு துவக்கும் யாஸீன் ஹாமீமே. (அ)

வடிவாம் லௌஹு கலமிருக்கப் பைத்தில் மஃமூ றிடமிருக்கப்
படிமீ ததிக பைத்துல்மு கத்தி சென்னும் பதியிருக்க
நடுவா மக்கந் தனிலாகி நறைசூழ் ஜம்றத் தெனுநடுவில்
அடியாம் ஹலிமா சூகையமு தருந்தும் யாஸீன் ஹாமீமே. (கூ)

இங்க ளழகி னொளிசிறக்கத் தெளிவா மடியார் பகையறுக்க
எங்கள் கிளையின் றுயர்மறிக்க வெளியேன் நினைத்த படிநிறைக்க
அங்கும் ஜிபுரீல் மனதுறைக்க வரிய சிரசி லுடுச்சிறக்கத்
தங்கும் ஹலிமா ததிசுரக்கத் தூவும் யாஸீன் ஹாமீமே. (க0)

மேலாம் பாக்கின் மேல்சென்றாய் விளைவான் நால்வான் தனில்நின்றாய்
கோல வமரர் சேர்வென்றாய் கொடுக்கப் பாலென் றமுதுண்டாய்
நாலா மறையுட் பொருள் விண்டாய் ஞானக்கடலுண் டருள்கொண்டாய்
ஆலாம் ஹலிமா பாலுண்டா யருள்சேர் யாஸீன் ஹாமீமே. (கக)

மறையிற் பெரிய குலமிருக்க வானோர்க்கரசின் மாவிருக்க
நிறைமி விரவி மதியிருக்க சேமமலைமுத் தொளி விருக்கக்
குறைஷி குலத்தி லாமினென்னுங் கூர்மை யுதரத் தவதரிக்க
அறையில் ஹலிமா ருசையமு தருந்தும் யாஸீன் ஹாமீமே. (கஉ)

அப்துக் கரசாம் நாயகமே அப்தா னதுக்கு ளுறைதவமே
அப்தா முயிர்கள் வணங்குதலுக் கருளைக் கொடுக்கு மருமறையே
அப்தா மப்துல் லாதுதவி லழகு சிறந்த மாமணியே
அப்தாம் ஹலிமா பாலருந்து மருள்சேர் யாஸீன் ஹாமீமே. (கங)

அடியு முடியும் வெளியிலொளி யனந்த வனந்த ரூபமதாய்
வடிவி னழகு சுடர்தனில் வளரு மறைமா முடிவாகிப்
படியி லடிமை துயரறநின் பதும முனைப்பொற் பதமருள்சேர்
அடியின் ஹலிமா ருசையமு தருந்தும் யாஸீன் ஹாமீமே. (கச)

சித்தி வருத்தி யடிமைதுயர் சிதற வுனது பதமலரின்
முத்தி பொருத்தி யருட்கடலின் மூழ்கி வினையற் றுன்கிருபைப்
பத்தி வெளியி லொளியிலெனைப் பழகிக் கலந்து பருகவருள்
அத்தில் ஹலிமா வமுதமது வருந்தும் யாஸீன் ஹாமீமே. (கரு)

அடிமை நினைவைக் கபூலாக்கி யடியார்க் கதிக கயிர்ந்து
கொடுமை தவிர்த்து மெனையாண்டு கொண்ட குருவுக் கென்னுடலும்
படியி லடிமை வுயிர்பொருளும் பதத்துக் குரிய நன்கொடையாம்
அடிமுந் தலிமா வமுதமது வருந்தும் யாஸீன் ஹாமீமே. (கசு)

கொருவை யிளமை யாக்கிடவும் சூரன் காத்தைப் பொருத்திடவும்
கிருபை யறியா தவன்நினைவை கேள்வீப் படப்பெண் ணுக்கிடவும்
வறுமை யுளத்தி லுனதருளை வைத்துக் கடல்போற் பெருக்கிடவும்
அறிவுக் கலிமா வமுதமது வருந்தும் யாஸீன் ஹாமீமே. (கஎ)

யாஸீன்ஹாமீமென்ற ஒருபாஇருபஃது முற்றிற்று.

ஆ திருப்பாடல் - கஎச.



# * ஹூயில்லல்லாவென்ற ஒருபா இருபஃது.

அறுசீர்த்தாழிசை.

ஆகந் தனிலே யோர்சொருப மழிவற் றிருக்குங் கமலமதில்
பாகுந் திருவில் நடம்புரிந்து பழைய வடியா ருளத்திலிருந்
தாகங் கிருபை விளைத்துவினை யறுத்தே யவர்கட் கருள்கொடுக்கும்
ஏக நினைவொன் றாயிருந்த விறையே ஹூயில் லல்லாவே. (க)

எறும்பு கடையாம் யானைமுத லெல்லா வுயிர்க்கு முறுந்துணையே
சிறந்த பொருளே மாமணியே சிந்தைக் கலக்க மறுத்தெனக்குள்
அறந்தங் துளத்தை வெளியாக்கி யருள்நீ யென்றுந் தன்நினைவில்
இறைஞ்சத் திடந்தந் தருள்புரியு மிறையே ஹூயில் லல்லாவே. (உ)

அல்ஹம் தெனவே நீயெவைக்கு மடங்கா நிரப்ப முடையோனே
அல்ஹம் தெனவே யென்னுளத்தி லறிவைத் திடமா யாண்டோனே
இல்லந் தனிலே நீதவறா திருக்குஞ் சுடரே யென்கோனே
இல்ல மறிந்துன் றனைவணங்க விதந்தா ஹூயில் லல்லாவே. (ங)

வில்லா ஹியென் றுலகனைத்தும் நிறைந்த பொருளாய் நின்றடியார்
வில்லா ஹியென் றுனைவணங்கும் நினைவோர் தனையாட் கொண்டோனே
எல்லா வடிவு முனைப்போலே யிருக்கு மிலையென் றருள்வோனே
எல்லாம் வெளிப்பட் டிருக்குந்தொழி விதந்தா ஹூயில் லல்லாவே. (ச)

றப்பில் ஆல மீனெனவும் வினைவு கடலுள் ளொளிதிரண்டு
றப்பில் ஆல மீனெனவுள் நிறைந்து புரியுள் மணியாகி
எப்போ துங்கண் திறந்துதிறந் திமையா திருக்கும் பார்வையுரு
எப்போ துங்கண் டுனைவணங்க விதந்தா ஹூயில் லல்லாவே. (ரு)

அர் றஹ்மான் றூஹூதனில் ஆஷிக் காய்யா ஹூலுருகி
அர் றஹ்மான் இருநாசி யதனில் நிறைந்து விளைந்தோடும்
நிர் றஹீமென் றுட்புகுந்து நிலைக்கும் மஃஷூ கெனுநினைவாய்
நிர் றஹீமென் றிஷ்க்குவழி யீதந்தா ஹூயில் லல்லாவே. (சு)

மாலிக் கியௌ மித்தீனுய் வளரும் மக்கானில் தூடுவாகி
மாலிக்கி யௌ மித்தீனுய் வளருங் குத்தூ ஸருளாகி
யிய்யாக் கநஃபு தென்றுனை யிறைஞ்சு மடியா ருடன்கூட
யிய்யாக் கநஃபு தெனும்நிறைந்த விதந்தா ஹூயில் லல்லாவே. (எ)

* இதனுள் ஸூறத்துல் பாத்திஹா அமைந்திருக்கிறது.

ஓயிய்யாக் கஸ்த கினென்றுன் னறிவி லிருந்து நீதாங்கி
ஓயிய்யாக் கஸ்த கினென்றுன் னொளியை யுன்கண் ணாற்பார்த்து
ஓயிய்யாக் கஸ்த கினென்றே யிருத்தித் தெரிசித் திருவிழியால்
ஓயிய்யாக் கஸ்த கினென்று னிதந்தா ஹுயில் லல்லாவே (அ)

இஃறி யென்றுன் றன்கிருபை யெல்லா வுயிர்கட் களவாகி
இஃறி யென்றுன் றிருவுளத்தி லெல்லா வுயிரும் வளர்ந்துநிறை
இஃறி யெனுமுன் றனைத்தெரிசித் திருக்குஞ் சூட்ச மடியாருள்
இஃறி யெனுமுன் றுள்ளிருந்த விதந்தா ஹுயில் லல்லாவே. (கூ)

நஸ்வி ருத்தலென் றெழுஞ்சங்குள் நாடும் ஷுஹுதிர் றஹ்மானே
நஸ்வி ருத்தலென் றெழும்பூதம் நாலொன் றுருவாம் நற்பரனே
நஸ்வி ருத்தலென் றிருநாசி நடுவி லிருக்கும் நாயகனே
இஸ்லா மெனும்பேர் பெற்றகுண மிதந்தா ஹுயில் லல்லாவே. (க0)

முஸ்த கீமென் றுனதுதிரு முகமென் னளவு தானிரங்கி
முஸ்த கீமென் றுனதுதிரு முன்னே தோன்று மூதறிவை
முஸ்த கீமென் றுனதுதிரு முழியா லெனைப்பார்த் தருள்புரிந்து
முஸ்த கீமே யென்றதிரு முத்தருள் ஹுயில் லல்லாவே. (கக)

ஸிறுத் தல்லதீனு வெனவும தன்னைப் புகழ்ந்து தானுகி
ஸிறுத் தல்லதீனு வெனவும் தன்னுள் தஜல்லி வெளியாகி
ஸிறுத் தல்லதீனு வெனவும் சியாறத் தருளே மக்காளுய்
ஸிறுத் தல்லதீனு வெனுஞ்சொல் தந்தாள் ஹுயில் லல்லாவே. (கஉ)

அன்அம் தவென் றுன்கிருபை யளவாம் றூஹின் னளவாகி
அன்அம் தவென் றுன்புகழை யடக்கி யெகினில் முற்றானுய்
அன்அம் தவென் றெழுஞ்சோதி யருளும் றஹ்மான் நீயெனக்குள்
அன்அம் தவென் றுனதுகழ லருள்தா ஹுயில் லல்லாவே. (கங)

அலைஹிம் கயிரில் என்றுனதி னன்பா லணைத்து மருவுமதில்
அலைஹிம் கயிரில் என்றெழுந்த வழகைத் திரட்டி யுருவாக்கி
அலைஹிம் கயிரில் என்றுமுன தறிவு நிரம்பி யெடுத்துமுத்தும்
அலைஹிம் கயிரில் என்றகைறு அருள்தா ஹுயில் லல்லாவே. (கச)

மஃலூ பிஅலே ஹிமென்றுன் மவுன விழியால் தூங்குமப்போ
மஃலூ பிஅலே ஹிமென்றுன் மவுனந் தானே பிறந்துமெதிர்
மஃலூ பிஅலே ஹிமென்றுன் மலர்ப்பொற் கரத்தா லெடுத்தணைத்த
மஃலூ பிஅலே ஹிமென்றுன் வழிதா ஹுயில் லல்லாவே. (கரு)



ஓலல் லால்லீ னென்றபொரு ளுறுதி றூஹில் திடனுக்கி
ஓலல் லால்லீ னென்றுனதா முண்மை வழுவா துறைப்பாக்கி
ஓலல் லால்லீ னென்றதிரு வொளிமுச் சுடர்தந் துருவாக்கி
ஓலல் லால்லீ னென்றபுக ழுரிமை யருள்ஹுயில் லல்லாவே. (கசு)

ஆமீ னென்றே வுலகனைத்து மாண்ட பொருளே யக்கடலில்
ஆமீ னென்றோர் வலம்புரியாய் ஆமீ னென்றோர் முத்தாகி
ஆமீ னென்ற நாமமுறு மழகாம் முத்தை யடியார்க்குள்
ஆமீ னென்றென் னுளத்திலருள் ஆமீன் றப்பில் ஆலமீன். (கஎ)

ஹுயில்லல்லாவென்ற ஒருபா இருபஃது முற்றிற்று.

ஆ திருப்பாடல் - சகக.

## உறங்கியுறங்கா திருவென்ற பதிகம்.

வெண்பா.

அசையா மணிகட்டி யாயிரத்தி * னென்றை
விசையாட்டிக் கொம்புசுற்றி விம்மி—வரும்விசையாய்
விம்மு மனுபதியை வீரமணிக் குட்பார்த்
துறங்கி யுறங்கா திரு. (க)

நாலங் குலத்தூரம் நண்ணித்த வான்பொருளை
மூலமறு நான்கில் முயன்றோனே—மூலத்தின்
முன்வாடி வாசலிலே முன்கேட் டருள்பார்த்
துறங்கி யுறங்கா திரு. (உ)

வாடிமனை தோறும் வடிவுதிரு வாசலிலே
கூடிமனம் நின்ற குறிப்பறிந்து—கூடி
குணநெறிவ ருத்திக் குருவருளை நேர்பார்த்
துறங்கி யுறங்கா திரு. (ங)

சாமமுற நாலும் சமுக நடத்துறமும்
சூமமுற வொன்றும்வரத் தூக்கமொழி— † சூமனைத்
தூக்க மொழிந்து ஸுஹுது நிலைபார்த்
துறங்கி யுறங்கா திரு. (ச)

கார்வாய்ச் சருவதுக்குங் கண்துயின்றால் நித்திரையாம்
நேர்வாசி யாய்மனமே நீதூங்காய்—நேர்வாசி
நித்திரையிற் சத்துருவை நேர்ந்தருளை மெய்பார்த்
துறங்கி யுறங்கா திரு. (ரு)

* ஞேர்மணியை என்றுமொம் பாடம். † சூமன் என்றுமொம் பாடம்.

ஆவென்று ரும்பசித்தா லானந்த வூண்தருமே
ஊவென் றுறுதி யுறவாடி—ஊவென்றே
உட்பகரும் பேரொழுத்தி லுண்மை வழிபார்த்
துறங்கி யுறங்கா திரு. (௬)

ஆங்கார முள்ளெழுத்தி லாம்நாலு பேரொழுத்தைத்
தாங்கார மோரொழுத்தி லிருத்தித்—தாங்காரம்
தானே திகைத்துவரும் வாசி வழிபார்த்
துறங்கி யுறங்கா திரு. (௭)

தோணி விரைந்து துடுப்புவலிக் கையமர்ந்தால்
கானிற் கவிழ்ந்ததுபோற் கண்வாசி—காணுகவே
கண்டு கருத்தறிந் தக்கருணை யேபார்த்
துறங்கி யுறங்கா திரு. (௮)

மாவாசி மீதில்மறித் தேறி யுலாவிவரத்
தான்வாசி கொண்டிருத்தித் தான்மறித்தால்—தான்வாசி
தன்னுள்மதி நாவுநெற்றி தன்னகத்தே நேர்பார்த்
துறங்கி யுறங்கா திரு. (௯)

பத்தும் பசுபதியாய்ப் பாங்கும் பராபரமாய்ச்
சுத்த முடையோனே தூதருடன்—சுற்றமற்று
வாக்கு முடியானை மாசில்லா னைப்பார்த்
துறங்கி யுறங்கா திரு. (௰)

உறங்கியுறங்காதிருவென்றபதிகம் முற்றிற்று.

ஆக திருப்பாடல் - ௫௰௧.

## சுகப்பதிகம்.

வெண்பா.

உச்சி திறந்துமரு குள்ளம் வெளியாகி
யச்சரத்தி னூடுருவி யங்கியால்—வச்சிரஞ்சேர்
பாங்குடனே அந்தப் பரஞ்சோதி மேல்நடுவில்
* தூங்குவதப் போது சுகம். (௧)

அள்ளொன்று தேகி யனுகொன்று தப்பொருளை
விள்ளொன்று தெங்கணருள் மேவுங்கால்—தெள்ளியதோர்
நீங்கா தருளின் நிலையில் நடுவாகித்
தூங்குவதப் போது சுகம். (௨)

* தூங்குவது மெய்ப்போதசுகம் என்றுமும் பதிகமுற்றும்பாடம்.



எட்டெழுத்து மஞ்செழுத்து மிற்றவிடத் தேயிருந்
தொட்டி முறிந்தெழுத்தை யுள்ளாக்கி—வட்டமதில்
எங்கிருந்து வாகி யிருந்த திருவருளிற்
றூங்குவதப் போது சுகம். (௩)

மூடுந் திரையறுத்து முச்சுடரை நேர்பார்த்தே
ஆடும் மவுனத் தறைநோக்கித்—தேடியகால்
வாங்கி யொருசுழியை வாவென் றழைத்தினியான்
தூங்குவ தப்போது சுகம். (௪)

வந்த மணியொலியை மங்கா தருளாக்கி
அந்தவொலி நேர்விரைய வங்காகி—சிந்தைதனிற்
றூங்குஞ் சரத்திற் சரத்தை நினைவாக்கித்
தூங்குவ தப்போது சுகம். (௫)

மூலத்திற் றெட்ட முடிவி லிருகலையை
மேலக் கபாலு வெளிநேரே—சீலமற
ஓங்குங் குருவினடி யுள்ளமதில் நேர்விரையத்
தூங்குவ தப்போது சுகம். (௬)

வெண்கமலம் போன்ற விரிசுடரில் நின்கருணைக்
கண்கமல மென்றருளைக் காணுங்கால்—விண்கதிராய்த்
தீங்கறும் மெய்ஞ்ஞானத் தீபமெழு மூலமதிற்
றூங்குவ தப்போது சுகம். (௭)

நாசி நுனிநடுவில் நாதமெழு மச்சரத்தில்
வாசி திரும்பி வருமேகேள்—தூசியுளில்
தேங்கிவருங் காமத் தெளிவில் நினைவாகித்
தூங்குவ தப்போது சுகம். (௮)

ஐவரையும் வெட்டி யறுத்து வெளியாக்கிக்
கைவிரைய மெய்யருளைக் காணுங்கால்—துய்யசுழி
ஆங்கமல மீதி லடங்க நினைவாகித்
தூங்குவ தப்போது சுகம். (௯)

திங்க ளெழுந்த திருக்கூத்தைக் கண்டுமனப்
பங்கமற ஞானம் பழகியே—சங்கநதி
பொங்குங் கிருபைப் புனல்மூழ்கி நங்கலிபோய்த்
தூங்குவ தப்போது சுகம். (௰)

சுகப்பதிகம் முற்றிற்று.

ஆக திருப்பாடல் - ௬௰௧.

# நகுல்பதிகம்.

கலிவிருத்தம்.

எந்தையாகியென் னுள்ளுற விருந்துமென் னுயிரினுள் ளுயிராகித்
தந்தையாகிநற் றுய்தம ராகியுஞ் சகலமுந் தானுனாய்
உந்தன்பாதமே துதிசெயுந் தொண்டன்யா னுருப்பட வெனையீன்ற
தந்தையுந்தியின் துயரொலாம் நீக்கருள் தனிமுத லிறசூலே. (௧)

அடுக்கிலென்பெரி தாகிய துயரொலா மகற்றுநின் னருள்நாமம்
இடைவிடாமலே நினைவுறு தொண்டர்கட் கிடரறும் நின்னுமம்
படியிலெத்தனை பவக்கடல் வருகினும் * பறக்குநின் னருள்நாமம்
துடிகொளத்துதி செயுந்தொண்டன் துயரறு வொருமுத லிறசூலே. ()

என்னையுமெனை யீன்றிடு தந்தைதா யென்தமர் முதல்யாவும்
அன்னையாமதி லனாந்தமா முரிமைகொண் டடிமையென் றுட்கொண்டாய்
பின்னையே தெனக் குறுதுய ராவதென் பெரும்பிணித் துயர்தீர
முன்னைவந்தெழுந் தருள்புரி கடவுளே முழுமுத லிறசூலே. (௩)

அந்தமொன்றிலை யுருவமு மருவமுஞ் சொருபமு மருள்ஞானத்
தொந்தமாகியெவ் வுயிரொலாம் நிரந்தர சொரூபமாய் நிறைவானாய்
தந்தையுந்தியின் துயர்வினை பொடிபடத் தருகுவை யருள்சோதி
நின்றனற்புத போதமே யெனக்கருள் நிறைமுத லிறசூலே. (௪)

அடிமையெத்தனை பிழைசெயி னும்விலை † யாட்கொளு மருள்நாயன்
கொடுமைதானனு நினைத்திடில் வேறொரு கொள்கைக ளுண்டாமோ
முடிவிலாப்பொரு ளேமறை நாலினு மொழிவதற் கருளான
அடிமுடிநடுச் சோதியே துயரற வருள்முத லிறசூலே. (௫)

உன்னருட்கனி வாயமு திந்தா யுள்ளகத் தருளானாய்
பன்னுமாமறை முடிவருள் தந்தாய் பழம்பொரு ளுளத்தானாய்
என்னைவந்தடர் பவவினைத் துயரற வெரிகன லொளிவானாய்
அன்னையுந்தியின் துயர்வினை யறவரு ளனுமுத லிறசூலே. (௬)

முந்தநாள்விதிப் படியென்பர் நின்னருள் முடிகுவர்க் குண்டாமோ
பந்தமாய்கையைக் கொடிதென்பர் நின்பதம் பணிபவர்க் குறவாமோ
தொந்தமாம்பிணி பெரிதென்பர் நின்னருள் துதித்திடிற் றொடுமோவென்
தந்தையுந்தியின் துயரெலாம் நீக்கருள் தனிமுத லிறசூலே. (௭)

* பகலவன் ஒளிபோல்நின், னுடைய நாமமே துதிதொண்டன் என்றுமொருபாடம்.
† ஆண்டிடும் என்றுமொருபாடம்.



வேதநாலுமே மெய்யுரை யாகவே விளங்கிவந் தருள்சோதி
ஓதுகாரணம் யாவையு மாகவந் துறுநிலை புரிநீதி
போதமாகவே புரிந்துநின் னருளொளி பொங்கியந் தரமேவும்
ஆதலாலென்பிதா வுயிருறச் சைதன்ய மருளிற சூலநபியே. (௮)

மாய்கையின்வினைத் துயரற நின்னருள் வரமன துறவாக
ஆய்கையாலடியேன் பிதாவுயிர் சைதன்ய மருள்வெளி யொளியாகச்
சேய்கையானதை மனதறி யும்படி தெரியவும் வெளியாகக்
காய்கையாமருட் கனியென வரமருள் கதிரிற சூல்நபியே. (௯)

உலையிலிட்டிடு மெழுகுபோ லெனதுடை வுடலுயிர் மிகவாகி
யலையெழுங்கடற் போலென துளமெலா மனுவினி லன்பாகி
நிலையருள்தவ மென்தந்தைக் கருளென நின்னிரு தாள்மேவித்
தலையுணர்ந்தவென் தந்தைக்கு முத்திசெய் தலையறி வுறுநபியே. (௧௦)

நகுல்பதிகம் முற்றிற்று.

---

ஆக திருப்பாடல் - ௫௨௧.

---

# சோதிப்பதிகம்.

எண்சீர்க்கழில்நெடிலடி யாசிரிய விருத்தம்.

அருட்கடையின் கிருபைநிறைந் தொளிர்புவன மெல்லாம்
அனைத்தினுமா யாவுமதா யாவுந் தானாய்
இருட்கருணை வெளிமுதலா யகண்ட மேவி
எங்குமொன்று யகண்டவெளி யொளியின் மேலாய்
வெருளறக்கண் டருட்குருவி னருள்வே தாந்த
மெய்யுரையாஞ் சுத்தமுக விழிக்கண் தீபம்
அருட்பிரபை யொருகாலும் பொன்று தான்மெய்
யடிமைபிதா வைப்பிரபை யாக்குஞ் சோதி. (௧)

அடிமைபிதா செய்பவங்க ளனைத்தும் போக்கி
யருட்கருணை வேதவறி வமுதா யூட்டி
நடுநிலையும் நடுவருளும் நன்றாய்க் காட்டி
நானவனைத் தானவனாய் நாட்டமீ பூட்டிக்
கொடுமைதுயர் வெகுமாயைக் கோட்டி போக்கிக்
குற்றமற்று நித்தியமாய்க் குறைவில் லாத
வடிமுடியின் நடுவெளியாஞ் சொருப மெய்யென்
றடிமைபிதா வைச்சொருப மாக்குஞ் சோதி. (௨)

முந்தவொரு சுழிமீதிற் கருணை யாகி
முதலகில புவனமெல்லாம் முதிர்ந்துண் டாகி
அந்தமெனு மாதியெனு மில்லா தாய்நின்
றனந்த சொரூபசுத்த மாகி யெல்லாம்
முந்தவொரு சுழிமீதி லடங்கி டாதாய்
மூதறிவா மகண்டமெனு முனைமே லாகி
வந்துகலந் தெழுந்தறிவா மொளியே யென்னை
வருந்துபிதா வவ்வொளியின் வடிவாஞ் சோதி. (௩)

பூதலத்திற் பிறந்துவினை மாய்கை மேவிப்
பொன்றிவிடு மென்றறியாப் புல்லன் செய்த
பாதகத்தைப் பொறுத்துனது பதத்துக் காளாய்ப்
பரவறிவாஞ் சொரூபமதிற் பரிந்து தானாய்
நீதியருட் சுடர்பிரபை யொளியே ஞான
நினைவயரா தருளாக்கும் நிறைந்தோன் றனை
போதமதிற் கலந்தொளியாம் போதா வென்னைப்
புரிந்தபிதா வைப்போதம் பொருத்துஞ் சோதி. (௪)

தோன்றுவதெல் லாமுனது சுடராய்த் தோன்றித்
தோன்றும விருந்திடமின் சொரூப மாகிப்
பூண்டுயிர்கள் யாவுமொன்றாய்ப் பொருந்தும் போதப்
பொருட்டால்நல் விதயமதிற் புரிந்து மேலாய்த்
தாண்டவமா யனந்தநட னங்க ளாகித்
தானாகிச் சுத்தமுமாய்த் தானே தானாய்
ஆண்டபரப் பிரபைசுத்த வொளியே யென்னை
யருள்பிதா வவ்வொளிய தாக்குஞ் சோதி. (௫)

இலைநுதியிற் றுளியிருக்கும் போலான் மாவை
எண்ணியெண்ணி யனந்தவரை யிருக்கு மென்றே
நிலையாகி நிலையறியா நீசன் செய்த
நிட்டூரப் பவம்பொறுத்து * நின்றோண் டாக்கி
அலையாமல் நின்றுனதா னந்த மான
அத்துவித சீவன்முத்த ராக வாகத்
தலையறிவாம் பிரபைசுத்த வொளியே யெந்தன்
தந்தையந்தச் சீவன்முத்த ராக்குஞ் சோதி. (௬)

நித்தியநின் மலசுத்த நிரந்தரமா யெங்கும்
நிரஞ்சனனே யொளிஞான நீதி சோதி

* நினைவொன்றாக்கி என்றுமுள்ள பாடம்.



உத்தமனே யெவ்வுலகு மொன்றாய்த் தோன்றி
ஒப்புவமை யில்லாத வுண்மை தானாய்ப்
பெற்றபரி பூரணமெய்ச் சொரூபா னந்தப்
பேறான சைதன்யப் பிரம ஞான
முத்திபெற வடிமைபிதா வைச்சை தன்ய
முழுமுதலா மெவ்வுயிரின் முதலாஞ் சோதி. (௭)

சொருபமாய்ப் பிரபையா யொளியாய்ப் போதச்
சுத்தவெளிச் சைதன்ய சொரூபா னந்தம்
மருவியதில் நிரஞ்சனமாம் சீவன் முத்தர்
வடிவாகி யிருந்தசொரூ படியேன் காணத்
திருவொளியின் பூரணமாய்ச் சிறப்பா யெங்கும்
தெளிந்தொன்றாய் நிறைந்தொளிரும் தேவே நின்றன்
அருட்கிருபை யாலடியேன் பிதாவை யிந்த
அருட்போத ஜீவன்முத்த ராக்குஞ் சோதி. (௮)

தத்துவரூ பத்தினருள் விளக்காய்த் தோன்றித்
தற்சொருப முட்சொருபந் தானே தானாய்
தத்துவம துற்றபர தத்துவமே தானாய்த்
தனையொளிந்து தானாகித் தானே தானாய்
எத்திசையு மெவ்வுலகு முயிரெல்லாந் தானாய்
எங்கணுமா யென்னுளுமா யெனையாள் நாதா
அத்துவித முத்தியென்றன் தந்தைக் கிந்தே
அருட்போத ஜீவன்முத்த ராக்குஞ் சோதி. (௯)

ஒருகுதன் தானீமான் கொள்ள வென்றே
உறுதிகொளு மவன்தேவை யுண்மை யாகப்
பருவமுடன் தேவுசிலை நாவி னாலே
பகரொனநின் னருள்புரியப் பரம வேதம்
தருநபியே யெவ்வுயிர்க்கு மரசே நின்றன்
தாள்பணியார் நரகடைவ ரென்று சாற்றும
அருரூப சொரூபமுநீ யெந்தன் தந்தைக்
கருட்போத ஜீவன்முத்த ராக்குஞ் சோதி. (௧௦)

**சோதிப்பதிகம் முற்றிற்று.**

---

ஆ திருப்பாடல் - ௫௧௧.

---

# நித்தியசுத்தப்பதிகம்.

எழுசீர்ச் சந்தவிருத்தம்.

அனைத்துயி ருக்குமொரு குருந்தவ முத்தியென
அமைத்துயிர் நித்திய மதுவாய்
பனித்துளி யிற்சிறிய துளித்திவ லைக்குளுயிர்
பகுத்தரு ளுற்ற விறையே
கனித்தன வுக்கதிக பவக்கட லுக்குளுற
களபவத் துள் ளலேவரே
இனித்தவ முத்தியெனக் கசிபதந் துட்கருணை
யிதமருள் நித்திய சுத்தமே. (க)

பவவினை யிற்கொடிய பவத்தினை நத்தியுயிர்
படும்வலை மச்ச மெனவும்
அவமென வந்தலையில் சுழல்துரும் பென்றதுபோ
லலைமலைந் தற்றி டுமுனே
தவமெனக் கருள்முத்தி தந்திடுமென் தந்தையுயிர்
சாமீப சாரூப பதமாய்ச்
சிவசொரு பக்கடவு ளருளுசா யுட்சபத
தெளிவுற்ற நித்திய சுத்தமே. (உ)

அலைகடல் சுற்றுலக மெனைவபுவ னங்களொடு
வமைத்தருள் வைத்த பரனே
விலையுனக் கல்லதுவே நிலையெனக் குற்றவருள்
வெளிப்பிரபை முத்தி யருள்வாய்
சிலைக்குருத் துற்றயெந்தன் நலத்துறு தந்தையுயிர்
தெளித்தருள் முத்தி பெறவே
நிலைத்தருள் வைத்திடுமென் னகத்தொளி பொங்கியதில்
நிறைச்சுடர் நித்திய சுத்தமே. (ங)

திடந்தரு வாயெனது மனந்தனி லேகருணை
தெளிந்தருள் சிற்சொ ரூபமே
நடமபுரி வாய்கடுவி லிடந்தரு வாயதிக
நலந்தரு நற்சொரு பமே
கடந்தனி லுற்றவெளி கடங்கடந் தந்தரவெளி
கலந்துசத் தாக வருள்வாய்
தடந்தனி லெந்தன்தந்தைக் கருளருள் சீவன்முத்தி
தவந்தரு நித்திய சுத்தமே. (ச)



உனைத்தெரி சிக்கவெந்த னுளத்தினி லருட்பிரமிக்க
உடலுயி ரத்து விதமாய்த்
தனைத்தற் சொரூபமுத்தி நினைக்கவொண் ணுதபித்தி
தரவுற் றுளத்தி லொன்றதாய்
மனக்கண் ணதிற்பிரபை யெழுநற் கிரணவெள்ளி
மலர்ப்பொற் பதசொ ரூபமாய்
எனக்குற் றளித்தவமே யெனைப்பெற்ற தந்தையுயிர்க்
கெழில்முத்தி நித்திய சுத்தமே. (ரு)

ஒருநொடிக் குள்ளெவையு மமைத்தளிக் குங்கருணை
உயிருற வைத்த திறலோர்க்
கருவொளியின் நின்கமல முகவிழி யதின்கடையின்
அருள்புவ னங்க ளெவையும்
நிறையும் நிரஞ்சன நிரந்தர நிராமய
நிராகர சொரூப மதுவாய்
மருவவ ரந்தருமு றைத்தவமே தந்தையுயிர்
மாசறுநல் நித்திய சுத்தமே. (சு)

காலமொரு காலமழி யாததுபோற் சீவன்முத்தி
காரணமோர் கால மழியா
தாலமுத ஞானசுடர் மேவுவ ருளத்தில்நிறைந்
தாயமுத மாகு மருளே
ஞாலமதி லெந்தனை நலத்தருள் தவத்தினரை
நாளுமழி யாத சொருபா
மேலதிக காரணசா யுச்சியபத முத்தியருள்
மெய்ப்பிரபை நித்திய சுத்தமே. (எ)

எத்தனை பவங்களவை செய்திடினும் நின்கருணை
இச்சையுறு ஞான மகவைப்
பெற்றதி லதிக பூரண மகிழ்ந்தருள்
பெருங்கிருபை யிந்த குருவாய்
உத்தமம தாகவெனை யின்றிடபி தாவினுயி
ருட்சொருப காரணம தாய்
நித்தியம தாயழிவி லாதபர ஞானமுத்தி
நேர்மையருள் நித்திய சுத்தமே. (அ)

ஆங்கார மூன்றுவகை யாகுமென வேதமுறை
யாயதனி லாய வருள்தான்
நீங்கா நிரஞ்சனம தாயெனிலு மாங்கார
நேர்மையென வோது மறைதான்

பாங்காரு மூவகைய தானது மறந்துபரி
பூரணசொ ரூபசொ ரூபே
நீங்காத நின்மல நிரந்தரவென் றந்தையுயிர்
நின்சொருப நித்திய சுத்தமே. (கூ)

நந்தியேயெ னுட்கருணை நற்கமல மிக்கதுணை
நற்சொருப நற்சொ ருபமே
சிந்தையி லெழுந்தறிவு பொங்குகடல் சங்குதொனி
சிறப்பது சிறப்ப துவுமே
எந்தனையே யாண்டகுரு ஹாமீம்நின் பாதமருள்
என்னுளுறை வான தனையன்
தந்தையைநின் னன்புறுப தத்தினருள் முத்திகொடு
தற்சொருப நித்திய சுத்தமே. (கo)

நித்திய சுத்தப்பதிகம் முற்றிற்று.

ஆ திருப்பாடல் - ருஅக.

# அஹதுல்லாப்பதிகம்.

கொச்சகம்.

ஆதி யந்தமில்லா தருந்தவமே யானபுகழ்
ஓதும் மறைச்சோதி யுள்ளகத்தி னுள்ளருளே
போத மெழுஞானப் பொருட்டே யடிமைபிதா
நீதியரு ளாகவருள் நித்தனஹ துல்லாவே. (க)

கரும வுலகமதிற் [illegible]ம்பவத்தா லேபிறந்து
வருமைகொ[illegible] வஞ்சகமும் வாராமற் காத்தருள்வாய்
தருமதவ ஞானமுறு சச்சிதமாய்ப் பெற்றபிதா
கருமபல[illegible] போகவருள் காட்டுமஹ துல்லாவே. (உ)

உலையி[illegible] மெழுகதுபோ லுருகியே யுள்ளமெலா
மலையு[illegible]ன துட்கருணை வழிதிறந்து வந்தாள்வாய்
அலைசெ[illegible]க மெலா * மறந்து மானந்தப் பூரணமாய்
நிலையென் பிதாவான்மா நீதியஹ துல்லாவே. (ங)

அஞ்சிலொன் றுமின்ற வருள்ஞானத் தாரமுதே
பஞ்சபவம் போகவருள் பழம்பொருளே பார்த்திபனே
துஞ்சுமென்றன் தந்தையுயிர் சொற்கதிகச் சீவன்முத்தி
அந்தமுத்தி ஜெம்மிலுற வாக்குமஹ துல்லாவே. (ச)

* நிறைந்து என்றாகும் பாடம்.



என்னுயிரோ யென்னுயிருள் ளெங்குநிறை வானபரா
பன்னு மறைவேதம் பகரும் நிரஞ்சனனே
அன்னைபிதா வின்னுயிர்நீ யமைத்தபடி யேயமர்ந்தால்
பன்னுமறை சீவன்முத்தி பதிக்குமஹ துல்லாவே (ரு)

நிர்மலனே நிட்களனே நித்தியனே நித்யசுத்த
நிர்மலனே யெங்கும் நிறைந்தாய் நிரஞ்சனனே
நிர்மலநி ராதரனே நேர்மையெந்தன் தந்தையுயிர்
நிர்மலசொ ரூபஜெம்மாய் நிறைக்குமஹ துல்லாவே. (சு)

என்னைநினைத் தோர்கேட்ட தெல்லாங் கொடுப்பனெனப்
பன்னு மறைவேதம் பகர்ந்தாய் பராபரனே
நண்ணுமெந்தன் தந்தையுயிர் நல்லருளாற் சீவன்முத்தி
எண்ணும்வழு வாமலரு ளெங்குமஹ துல்லாவே. (எ)

முத்தாய் வலம்புரிக்குள் முச்சுடரா யுட்சுடரோ
சித்தாய் மயில்வேஷச் சேவையுறுங் காரணனே
பத்தா யுனதுபதம் பணியுமெந்தன் தந்தையுயிர்
நித்தா கருணைமுத்தி நேர்மையஹ துல்லாவே. (அ)

கண்ணாடிக் குள்ளொளிவாய்க் காணும்நபி நாயகமே
முன்னாள் ஜிபுரீல் மொழியுமுடு வைச்சிரசில்
தன்னாகக் காட்டிவெளி தானாக்குந் தாயகமே
நண்ணுமென் தந்தைமுத்தி நாட்டுமஹ துல்லாவே. (கூ)

வெளியில் வெளிகலந்து மெய்யுணர்ந்து மெய்யாகி
ஒளியி லொளிசிறந்த வுண்மையெனை யாளாக்கும்
அளியி லளிமறைந்து மருள்வழியா னந்தமதில்
தெளிய வெந்தன் தந்தையொளி தெளிக்குமஹ துல்லாவே. (கo)

அஹதுல்லாப் பதிகம் முற்றிற்று.

ஆ திருப்பாடல் - ருகூ.

## சமதானவா என்றபதிகம்.

சந்தவிருத்தம்.

ஆதி யந்தமு மிலாத தொன்றுமென
 தன்புள் வந்துறையு மாதலால்
வேதம் யாவுமுரை மேவு சோதியருள்
 மெய்யென் றுள்ளகம் விளங்கையால்
போத சாதனம தாயி ருந்துவெளி
 பொன்றி டாமலொளி மேவையால்
சாது காரணம தாக வேனுமருள்
 தந்தை முத்திசம தானவா. (க)

ஏழை பங்கிலுறை கின்ற நித்தியனே
 எங்கு மெங்குநிறை வானவா
சூழு கின்றவினை மாள வந்தெனுளில்
 தோன்று ஞானசொரு பானவா
வேளை வந்துமறை வான தந்தையுயிர்
 மேவு பூரணம்வி ளங்கவெந்
நாளும் நின்றனருள் மேவ வந்தகுரு
 நந்தி முத்திசம தானவா. (உ)

அண்ட பிண்டபுவ னங்கள் யாவையு
 மமைத் தளிக்குமுத லாதியே
தொண்ட ருள்ளமி லெழுந்து நின்பிரபை
 தோன்றி யெங்குமொளிர் சோதியே
மன்றுள் வந்தெனைய மீன்ற தந்தைதுயர்
 வஞ்ச பாதக மறுத்தருள்
நின்ற பூரணமெய்ஞ் ஞான பாதவொளி
 நேர்மை யாக்குஞ்சம தானவா. (ங)

நாலு யோனியொடு மேழு தோற்றமதில்
 நாதி நீதிபரி பூரணு
சாலி ரேடுவெளி பாரி ரேடுமேறல்
 காந்தி யோகிவர் காரணு
நாலி ரேடிரு நாலில் நாலென
 நடம் புரிந்தருள தானவா
மால தானதென தான தந்தைவளர்
 சோதி யாக்குஞ்சம தானவா. (ச)



உன்னை யல்லதிங் குரைக்க வேறுமிலை
 ஒன்றி லாகிலும டங்கிடாய்
அன்னை தந்தையுநீ யெண்ணு மெண்ணமுநீ
 அன்பு வன்பிலும்நீ யன்பனே
என்ன பேசவுரை யென்ன சொல்வனினி
 என்னை யாள்பரம யேகனே
அன்னை யோடுபிதா நண்ணுஞ் சிவனொளி
 யாக முத்திசம தானவா. (ரு)

மதிய ழைத்தநபி பாத மென்றனுளில்
 வந்தெ ழுந்தருள் சிறந்ததால்
துதிசெய் தேனுனையு மான தாலெனது
 துன்ப வல்வினை பொடிந்துபோய்
அதிச யக்கிருபை ஞான போதகம
 தாக்கி யையடிமை தந்தைதாய்
விதிய மைத்தபடி யுயிர் கொடுத்துவிடில்
 மெய்ய ராக்குசம தானவா. (சு)

அஹமம தாகியு முஹம்ம தாகியஹ
 தாகி யாலமெவை யாகியே
செகம தாகியுயிர் யாவு மாகிமறை
 சேரும் வேதமுறை யாகியே
அஹமம தாகிவெளி யாகி யெங்கணு
 மடர்ந்த சுத்தவொளி சுத்தமே
இக*ம கிழ்ந்தெனது தந்தை சிவனொளி
 யேக முத்திசம தானவா. (எ)

எந்தை யெந்தவித மாலு முந்தனை
 இறைஞ்சு வோர்க்குமிறை யானவா
உந்து பாசவினை யாவும் விட்டவர்கள்
 உள்ளமீதி லொளிர் கின்றவா
நந்தியென் றெனது நாயனென்று துதி
 நாடுவோ ருளில்ந டங்கொள்வாய்
எந்தன் தந்தையுயிர் சேர்ந்த சைதன்யம
 தாக்கு மேசம தானவா. (அ)

உள்ளமே கருணை யன்பினு லுருகி
 யுதகம் யாவையுமு லாவியே

* இழந்து என்றுமும் பாடம்.

வெள்ள மானதெவை யுங்கடந்து வெளி
மேவியுள் ளொளிவி ளங்கியே
தெள்ளு ஞானதவ சிவன்முத்தி யருள்
சிற்சொரூப மூறு சிற்பரா
வள்ளலே யெனது தந்தை முத்தியொளி
வாக்கு மாக்குசம தானவா. (௯)

உடலு முத்தியென துயிரு முத்தியெனை
உற்ற தந்தையுட லுயிருமே
நட்டன முத்திபத சொரூப முத்தியருள்
ஞானமுத்தி செயு நற்பரா
மட்டல்வி ரிந்தேயென தங்க மெய்தனும்
வள்ளல் மெய்யொளிவ ளர்ந்ததால்
தடம்நிறைந் தசைவற் றெந்தன் தந்தையுயிர்
சரண முத்திசம தானவா. (௧௦)

சமதானவா என்றபதிகம் முற்றிற்று.

---

ஆ திருப்பாடல் - ௫௬௪.

---

# ஹக்குப் பதிகம்.

அறுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

அருந்தவ வொளியே சோதி யாண்டநா யகமே யென்னுட்
பொருந்திவந் தெவையுந் தானுய்ப் பொருந்துகா ரணமெய்ஞ் ஞான
மருந்தினை யுளத்தி லீந்து வல்வினை யறுத்தென் றந்தை
திருந்துமா தவமாய் ஞானச் சிறப்பரு ளாக்கும் ஹக்கே. (௧)

செகத்தினிற் பிறந்த நாளுந் தெளிவிலா திருந்த நாளும்
ஒருத்தொரு கூணத்திற் சிவ னெடுங்குமென் றறியா நாளும்
பருத்தறிந் துனைவ ணங்காப் பாதகம் பொறுத்தென் றந்தை
மவுத்துவந் தகனு லான்மா வடிவரு ளாக்கும் ஹக்கே. (௨)

சுத்தமா யிருந்து ஞானச் சுடரொளிப் பிரபை யானுய்
நித்தனு யிருந்து மெல்லாம் நிரஞ்சன சொரூப மானுய்
சித்தனுய்ச் சித்தைத் தாண்டுந் தேவனுய்த் தேசு வானுய்
முத்தனு யெந்தன் றந்தை முழுமுத லாக்கும் ஹக்கே. (௩)



அஹமதா யஹதாய் வேத மருளுனாய் பனுவ லாகி
முகமதாய் முஹம்ம தாகி மூலமந் திரமு மாகிச்
செகமதா யுயிர்கள் யாவும் சிறந்தருள் தெளிவ தான
அஹமது நபிபொற் பாத மருள்தந்தைக் கருள்வாய் ஹக்கே. (௪)

தந்தையாய்த் தாயு மாகி சகலமுந் தானே யாகி
எந்தையா யெந்த னுள்ளத் திருதயத் தெங்கு மாகி
நந்தியாம் தாமீம் தாசீன் நற்கரு ணைக்கு ளாயென்
தந்தையா முயிர்க்கும் ஹாமீம் சரணமீந் தருள்வாய் ஹக்கே. (௫)

எண்ணெணு தெழுதொண்ணு தெடுக்கொணுப் பிடிக்கொ ணுதாய்
பன்னுமா மறைக்கு ளெட்டாப் பழம்பொருட் பரனே யுன்னை
எண்ணெணு தெண்ணி யெண்ணி யிருப்பனென் றறிந்தென் றந்தை
திண்ணமாஞ் சிவன் முத்தி தெளிந்து மாளாக்கும் ஹக்கே. (௬)

பஞ்சபா தகந்து லைத்தாய் பவக்கட லறுத்தா யப்பால்
அஞ்சலென் றுயிர்தான் செல்ல வானந்த போத முத்தி
தஞ்சமாய்ச் சார்ந்து ஞானத் தவத்தரு ளாலென் றந்தை
மிஞ்சுபூ ரணமா யெங்கும் வெளியொளி யாக்கும் ஹக்கே. (௭)

தன்பதப் பொருளா யெங்குந் தாண்டியப் பாலு மாயத்
தொம்பதப் பொருளாய் நின்று சுடரொளிப் பிரபை மேலாய்
அன்பசி பதமர் முத்தி யருளரு ளாதி சோதி
என்பிரா னேநல் முத்தி யிரங்கிவந் தருள்வாய் ஹக்கே. (௮)

தூலமுங் கடந்து சூட்ச சொரூபமுங் கலந்து மேலாய்க்
காலமுங் கடந்து ஞானக் காரண சொரூப மாகி
மேலகண் டாகா ரத்தின் மெய்யரு ளேயென் றந்தை
சிலசின் மயசொ ரூபாய் ஜெம்மரு ளாக்கும் ஹக்கே. (௯)

அத்துவித மாகி மேலா யாவையுங் கடந்தோன் றாகிச்
சுத்தபூ ரணமாய்க் காண்போர் துயரொழித் தெனையாட் கொண்டாய்
நித்திய ஞன வுண்மை நிரஞ்சனு வெந்தன் றந்தை
முத்தி பெற்றரு ளானந்த முழுமுத லாக்கும் ஹக்கே. (௧௦)

ஹக்குப்பதிகம் முற்றிற்று.

---

ஆ திருப்பாடல் - ௫௭௪.

## சொரூபப் பதிகம்.

கலிச் சந்த விருத்தம்

வேதநாலு மேதெளிந்து மெய்புரிந்த மெய்யனே
ஓதுகார ணச்சொரூப வுண்மையை யுணர்ந்தியான்
பாதமே துதித்ததொண்ட னென்றுமின்ப தந்தருட்
சோதியேய்ந்தென் றந்தைஞான சொருபமாக்கும் சொருபமே. (௧)

எள்ளுளெண்ணெய் போல்நிறைந்து மெங்குமே கலந்தவா
கள்ளம்வெள்ளம் யாவையுங் கலந்துமொன்றி டாதவா
தெள்ளவேதெ ளிந்தசிவன் முத்தர்தேடுஞ் சிற்பரா
வள்ளலேயென் றந்தைஞான வடிவிலாக்கும் சொருபமே. (௨)

நாடுநாட்டு மறந்து நாடொணாத தும்மறந்து
வாடும்வாட்ட மாய்வினை மறப்பிரண்டு மேயொழிக்
தாடுமாட்டம் யாவையும கண்டசின்ம யாவெனை
தேடுந்தந்தைக் குன்சொரூப சேவையாக்கும் சொருபமே. (௩)

வெளியிலே யனந்தகோடி வேறுவேறு செய்யினும்
வெளியிலே வழியிலாத மெய்யரான சிந்தையோர்
தெளிவினுந்தெளிந்தசிந்தை யாக்கெனக்குட் சிற்பரா
வெளியிலென்னை யீன்றதந்தை மெய்ச்சொரூப சொருபமே. (௪)

கண்டதேது கேட்டதேது காணொணாத பூரணம்
விண்டதேது நான்மறைவி ளங்குஞான போதமே
தொண்டனது தொண்டனென்னை யீன்றதந்தை சுத்தமாய்
என்றுநன்ற தானமுத்தி யாக்குமேக சொருபமே. (௫)

மிடைப்பமேம்ப வக்கடல்வி ழைந்திடாமல் நின்னருள்
இடப்படத் தரித்துளந்தெ ளிந்தெழுந்த செல்வமே
கடத்துள்மேலு நின்றதொன்ற தாய்க்கலந்த காரணா
நடத்திலெந்தன் தந்தைசிவன் நற்சொரூப சொருபமே. (௬)

அண்டபிண்ட முயிர்கள்யாவு மாகிமேல தாகியே
தொண்டருள்ள மீதினிற் சுடர்ப்ரகாச சோதியே
நன்றிகொண் டருட்பிரகாச ஞதமேவுந் தந்தையை
என்றும்பொன்றி டாதமுத்தி யீந்தருள்நற் சொருபமே. (௭)



ஆதியேய னாதியேய னைத்திலும்நி றைந்தவா
ஓதும்வேத நாலினு மொடுங்கிடா துணர்ந்தவா
நீதியெந்தன் றந்தைசிவன் நித்யமுத்தி யானவா
காதல்கொண்ட சிந்தைகாணக் காட்டுநற் சொருபமே. (௮)

எந்தவெந்த வாறினு முனைத்துதித்த விருதயம்
நந்திடாது பொன்றிடாது ஞானஞான சொருபமாம்
இந்தவேதம் நாலும்நீ யிசைத்ததென்று ரைத்ததால்
நந்தியெந்தன் றந்தைசிவன் நற்சொரூப சொருபமே. (௯)

ஆளவல்லன் யாவையு மழிக்கவல்ல நாதனும்
ஏழைபங்கு ளாகியேநின் றெங்கணும்நி றைந்தவன்
வேளைகண்ட ருள்புரிந்து மெய்யிலென்னை யாண்டவன்
நாளுமெந்தன் றந்தைமுத்தி நல்குஞ்ஞான சொருபமே. (௰)

**சொரூபப்பதிகம் முற்றிற்று.**

ஆக திருப்பாடல் - ௫௮௧.

## றப்பில் ஆலமீன் பதிகம்.

**அறுசீர்ச் சந்தவிருத்தம்.**

வேதந் தெளிந்துரை பேசும் பராபரா மெய்யென் னுயிர்க்குயிராய்
நீதி சிறந்துயிர் யாவும் நிரந்தர நீக்கமில் லாதபரா
ஓதி யுணர்ந்தறி யாம லுணர்ந்திடு முன்னருள் தொண்டனென
ஆதர வாய்முத்தி யீய்ந்துமென் றந்தைக் கருள்றப்பில் ஆலமீனே. (௧)

உள்ளும் புறமுங் கலந்து நிறைந்தொளி யொன்றான வுத்தமனே
கள்ள மனத்தின் கலக்கந் தெளித்தருள் காட்டிடுங் காரணனே
தெள்ளுந் தவத்தினற் றந்தைக்கு முத்தி தெளித்தருள் சிற்பரனே
உள்ள மலக்க மறுத்தருள் காட்டிடு யாறப்பில் ஆலமீனே. (௨)

எத்தனை பாவங்கள் செய்தாலும் நீபொறுத் தெங்கும் நிறைந்தருளே
முத்தியென் றந்தைக் கருளரு ளெங்கணு முச்சுட ருட்சுடரோ
சுத்தம தாகிய சுத்தமே நித்யமே சூட்சவ ருட்சொரூபே
பத்தியென் றந்தை யுயிர்முத்தி காணப் பரம்றப்பில் ஆலமீனே. (௩)

வானுங் கடந்தொளிக் கப்பால கண்ட மயமான சின்மயமே
தானுந் தவமுங் கலந்தரு ளானந்தத் தற்சொரு பாமயமே
ஊனு முடலு முயிருங் கலந்தொளி யொன்றான முத்தியருள்
தேனுள் ருசிபோற் கலந்துதந் தைக்கருள் சேர்றப்பில் ஆலமீனே. (௪)

வஞ்சகஞ் சூது கபட வினையின் மலமுருப் பட்டதனுல்
பஞ்சவ ரஞ்சட லெந்தக் கரணம் பகர்பொறி யும்புலனும்
மிஞ்சிய திவ்வகை யாலுயிர் தன்னை விளைந்தறி யாப்பிழைபோய்
அஞ்சலெ னென்பத மீய்ந்தருள் தந்தைக் கருள்றப்பில் ஆலமீனே. (௫)

அன்னைபி தாவுக்கு நின்பத முத்தி யளித்தரு ளென்றடியேன்
உன்னை வணங்கி நினைந்து முணர்ந்துநற் றோத்திர முற்றதனுற்
பன்னும் பழம்பொருள் ரட்சித் திரங்கும் பழவடி யாருடன்சேர்
கண்ணின் மணியொளி ஹுக்கேயென் தந்தைகண் காண்றப்பில்ஆலமீனே.

பாரஞ் சரம்நால் பகர்சுடர் மூன்று பரிரண்டு மொன்றுவெளி
சேர்பதி னைந்தில் நிறைந்து புவனந் தெளிந்த நிரந்தரமே
ஆருயிர் யாவிலும் நால்கலை யாகி யகண்ட நிராமயமே
சாருநின் தொண்டனென் றந்தைக்கு முத்தி தரும்றப்பில் ஆலமீனே. ()

திங்க ளுடுக்கதிர் கங்குலோ டெவ்வையுஞ் சேர்நபி தன்னொளிவால்
எங்கணு மெவ்வுயிர் வான்கண் டம்முத லெய்திய தேவர்புகழ்
தங்குமுஹ ம்மது தன்னொளி வாலமை தற்பர நித்தியமே
எங்குமு ஹம்மது பாதமென் றந்தைக் கிசைறப்பில் ஆலமீனே. (௮)

முத்திமு ஹம்மது நன்னபி யாணையென் றந்தைக்கு முத்தியருள்
நித்திய மென்றறி வோர்பதத் தாணையென் றந்தைக்கு நின்னிருதாள்
உத்தம சோதி யருட்பிர காச வொளிசொரு பாகவருள்
கத்தனே ஹாமீம் மலர்ப்பதந் தந்தைகண் காண்றப்பில் ஆலமீனே. (௯)

மூன்றுடன் மூன்றுயிர் மூன்றவத் தைக்குறி முக்குண முச்சுடராய்த்
தோன்றிடு மெவ்வையு மெவ்வுல கும்பர சூழ்வெளி யெங்கணுமே
ஆண்டிடு மாள்பர னென்றென நின்றெனை யாண்டப ராபரமே
பூண்டுமென் றந்தைக்கு முத்திசை தன்யம் புகழ்றப்பில் ஆலமீனே. (௧௦)

றப்பில் ஆலமீன்பதிகம் முற்றிற்று.

ஆக திருப்பாடல் - ௫௧௧.

# பூரணசின்மயப்பதிகம்.

கட்டளைக்கலிப்பா.

அகந்தெ ளிந்தருள் யாவும் நிறைந்தநின்
அந்தமாரு மறிந்துமு ணர்ந்திலர்
ஜெகம றந்துமெய்ஞ் ஞானச் சுடரொளி
தேர்ந்து முள்ளந் தெளிந்து வளர்ந்தவா



முகம லர்ந்தருள் முத்திக்கு வித்தென
முன்னும் பின்னு முழுது முதல்வனே
அகம கிழ்ந்தேயென் றந்தைக்கு முத்திநீ
அருள கண்ட பரிபூர்ண சின்மயா. (௧)

ஏழை நெஞ்சி லிருக்கின்ற காரணு
யென்னுயிர்க் குயி ராகிய பூரணு
சூழும் வல்வினை யாவும் பொடிந்திடத்
தோன்று மென்னுட் சுடர்ப்பிர காசமே
நாளு நின்னிரு தாள்மற வாமலே
நம்பு தொண்டனை யீன்றபி தாவருள்
ஆள தாக்கிநின் முத்திகொ டுத்துநீ
அருள கண்ட பரிபூர்ண சின்மயா. (௨)

பாரின் மீதிற் பிறந்ததி னற்பிழை
பாத கங்கள் செயினும் பொறுத்தருள்
நேர தாகிய நின்மல நித்திய
நினைவி னோடரு ளாகிநி றைந்துநின்
சாரு வாகிய பாத மலரருள்
தந்தே யென்றனை யாண்ட தயாபரா
சேரு வாயெனை யீன்றதந் தைக்கருள்
சேர கண்ட பரிபூர்ண சின்மயா. (௩)

வேச மாமயி லாய்த்தெளி வாகியே
மிக்க சோதி யுடுப்பிர காசமாய்
ஆசை கொண்டெழு வாரிய லக்குளே
அதிக சங்குள் வருள்தொனி யானவா
ஓசை கொண்டுயிர் யாவும மைத்ததின்
உள்ளி னுள்ளி னுயிர்க்குயி ரானவா
நேச மாயெனை யீன்றதந் தைக்கருள்
நிறைய கண்ட பரிபூர்ண சின்மயா. (௪)

ஏழை பங்கி லிருக்கின்ற வன்பனே
என்றுயர் வினை யாவு மறுத்தவா
சூழு மாய்கை மறந்துநின் றொண்டனுய்த்
தோத்திரஞ் செய்தி டும்படி யென்றனை
நாளு மீன்றவென் றந்தை யுயிர்முத்தி
நல்க வந்தருள் நற்கரு ணைகரா
ஆள வந்தெனை யாண்டுகொண் டாண்டுநீ
அரு ளகண்ட பரிபூர்ண சின்மயா. (௫)

வஞ்சர் நெஞ்சம் பொடிக்தே யெரிந்திட
வல்வி னைத்துயர் யாவும் மடிந்திட
நெஞ்சில் நின்னரு ளுள்ளம் புரிந்திட
நேர்மை ஜென்மொடு ஜென்மா யுறைந்திட
தஞ்ச மாயெனை யின்றபி தாவுயிர்
சரண பாதத் தருள்முத்தி சேர்த்திட
அஞ்ச லென்றெனை யாண்டுகொண் டாண்டுநீ
அரு ளகண்ட பரிபூர்ண சின்மயா. (சு)

கன்ம மெட்டுறு வஞ்ச மெரிந்திடக்
கடவு ளான்பதங் காணமல் வீணிலே
வன்ம மாங்கொடு மாய்கையி னுலுள
மருளும் வஞ்சர் பகையற்ற மாதவா
தன்ம ஞானச் சுடர்ப்பிர காசமே
தஞ்ச மென்றடி யேன்புகழ்ந் தேனுனை
மென்மை சுத்தத் தவமேயென் றந்தைக்கு
மேவ கண்ட பரிபூர்ண சின்மயா. (எ)

விடய மும்பொறி யோடு கரணமும்
மேலதா முயிர் மேலுறு சாட்சியே
நடுவ தாயிவை யெங்கு முலாவியே
நால தாம்பத மாகிய நற்றவம்
அடிய னென்னுயிர் மீதுற வாகவே
அன்பதா யெனை யாள்பர வன்பனே
அடிய னேனுறு தாதைக்கு முத்திநீ
அரு ளகண்ட பரிபூர்ண சின்மயா. (அ)

அவ்வும் உவ்வு மருள்மவ்வு மாகவே
அடிநடு முடி வாகிய வத்தனே
செவ்வி லுற்றெழு மக்கினி ரூபமாய்ச்
சேர்ந் திதயந் தெளிவுறு சித்தனே
நவ்வி னுடைந்து மொன்றாய்க் கலந்தருள்
நம்பு பொன்மையின் நற்றவ நித்தனே
அவ்வில் மவ்வருள் முத்தியென் றந்தைக்கே
அரு ளகண்ட பரிபூர்ண சின்மயா. (கூ)

உன்னு ளாயரு ளாகம வேதமாம்
உன்னி லிக்கடை யானுரு வெவ்வையும்
பன்னும் வேத முறைவழி சத்தமாம்
பரிசம் யாவும் பகர்கெந்த நாசியாம்



எண்ணு நின்பொறி யேகமே சுத்தமாம்
இசைப் பராபர தத்துவ நித்திய
அண்ணலே யென்றன் றந்தைக்கு முத்திநீ
அரு ளகண்ட பரிபூர்ண சின்மயா. (க0)

பூரணசின்மயப்பதிகம் முற்றிற்று.

---

ஆ திருப்பாடல் - கூ0க.

---

## றஹ்மான் பதிகம்.

---

தாழிசை.

எனையாள்பர னெனையாள்பர னெல்லாம்நிறைந் தாள்வன்
என்போடுட லுயிராய்த்திற னெல்லாமுற வுறைவோன்
நினைவோர்மனம் நினைவோர்மனம் நிறைவோனுளின் நிறைவோன்
நீங்காத வுளத்தோருளில் நீங்காதுறை வானேன்
மனவாக்கதுக் கெட்டாதென மறைவேதமு முரைக்கும்
வழியோடருள் குருவோதிய மனமானதுள் வருவோன்
அனையோடுபி தாமுத்திய தாக வருளாக
அடியேனுன தடிமைத்துதி யருளாம் றஹ்மானே. (க)

நின்னாலருள் நின்னாலுனை நின்னாற்றுதி நின்னை
நீயாகினை நீயாயருள் நீநானென நீயாய்
என்னுயக ளுகியுயிர் யாவுக்கிறை யாகி
ஈரஞ்சொடி ரண்டாகியும் நாலாகியு மென்கோன்
பன்னாளும்நி னைத்தேதொழும் பழமாமறை முதலே
பழகும்பழ வடியாருளிற் பரமாகிய பரமே
நின்னாதர வருளாலெனை நிறைவாயருள் தந்தை
நின்றாளுறு முத்தியருள் நிலைசேர் றஹ்மானே. (உ)

ஆதிபரஞ் சோதியழி யாத பராநீதி
அன்பாகிய தொண்டாமென வாள்வா யருள்சோதி
ஓதியுணர் வோர்கள்மன துறுதிக்குறு சோதி
உள்ளந்தெளி வாகும்படி யுறையும்பரஞ் சோதி
யாதுமறி யாமலறி வாகும்பழ மறைநூல்
யாவுமுறை பேசுமதில் நானுவுயிர் தானுய்
நாதியொட நாதியெனை நன்றாயருள் தந்தை
நல்கும்பர முத்தியருள் நல்கும் றஹ்மானே. (ங)

வெளியானதி லுறவாய்மன வெளியாயுடல் வெளியாய்
 மேவும்படி தானயதின் மேலாயதின் மேலாய்
ஒளியாயொளி சொருபாயொரு காலு மழியாத
 உயிர்சுத்தசொ ரூபாயுயிர் யாவுமுறை வாய்நீ
வெளியோடொளி யொன்றாகிய வெளியேவெளி யொளியே
 மெய்யென்றனை யேதொண்டுசெய் விதியேபெற வடியேன்
தெளிவாயெனை யருள்தந்தைநின் றிருமாமலர்ப் பதமே
 சேரும்படி முத்தியருள் தேசார் றஹ்மானே. (௪)

தூலத்துறு தேகத்துடன் சூட்சத்துறு தேகம்
 சுடர்ஞானம தாங்காரண தேகத்துடன் தோன்றி
ஞாலத்துறு மதிசாக்கிர நன்றாமுயி ரான்மா
 நடமேவுசொற் பனமானதில் நல்கும் வெளியான்மா
மூலத்துறு குறியாகிய முன்மேவு சுமுத்தி
 முடிவானதி லுறவாம்பர வான்மாவுடன் துரியம்
மேலாமறை யுரைநேர் துரி யாதீதமோ டஞ்சும்
 மேவும்பர முத்தியருள் மேவும்றஹ்மானே. (௫)

ஜிபுரீல்விழி காணச்சிர மேலேயுடு நடனத்
 திக்கியருள் முத்திதெளி வுற்றேயருள் முத்தே
அவரீதம தாய்மேல்வெளிக் கப்பாலொளிக் கப்பால்
 அகண்டசொரு பாயெவ்வையு மாளும் மறைவித்தே
தவறாதுனை யேதொண்டுசெய் தொண்டனெனை யீன்ற
 தந்தைக்குன தருள்மாமலர் சரணப் பதமுத்தி
தவறாமலே யருள்வாயுயிர் தாயீம்ஹா மீமே
 சரணமசி பதமாமருள் தருவாய் றஹ்மானே. (௬)

அருரூபசொ ரூபாகியு மருளாகியு மப்பால்
 அடியாகியும் நடுவாகியும் முடிவாகியு மப்பால்
பொருவாகியும் புகழாகியும் பொறையாகியும் நிறைவாய்
 பொன்றாதநிர் மலமாகியும் புவனாகியு மெவையும்
ஒருரூபசொ ரூபாகியு மொன்றாகியு நின்றாய்
 ஒன்றாமென நின்றோர்மன துள்ளாகியு நின்றாய்
குருவாகிவந் தெனையாள்பர னென்னெயன்பி தாவைக்
 குறியாதமெய்ஞ் ஞானமுத்தி கொண்டாள் றஹ்மானே. (௭)

விண்ணோடழல் வாய்வாகியும் மேவுமுத கந்தான்
 வேண்டும்படி பூமியிவை விரவும்பர மஞ்சும்
நண்ணாமுக மஞ்சாகியு மிரண்டஞ்சுறு விழியும்
 நல்குமிவை யொன்றாயெழும் நற்பார்வையோ வருபாய்





கண்ணாமுயி ரெல்லாமிதி னாலெகவர்ந் தாண்டாய்
 காணும்படி ரூபாகினை காணாதரு வாகிப்
பண்ணும்மறை யுரைநேர்சொரு பாகும்பழ மறையே
 பதமானதென் றந்தைக்கருள் பரிவாம் றஹ்மானே. (௮)

பொன்றாக்கழல் பாராம்புக ழாடைசல மாமாம்
 புகழ்சேரிரு விழியாமனல் பொறியாமிரு நாசி
நன்றாகிய கீழ்நேர்முகம் மேலே முதுகாகி
 நலஞ்சேரிரு கரமானது நாடும்வலந் தெற்காய்
ஒன்றாகிய பரநேர்வழி * யேகச்சொரு பாகி
 ஒளியானதுள் ளுயிராயுறை செய்தா யுயிர்யாவும்
அன்றாதிகள் புவனாதிகள் யாவுமறி தரிதாம்
 அடியேனுடை தாதைக்கருள் முத்தி றஹ்மானே. (௯)

மயில்வேஷசொ ரூபாகினை மஹ்மூதென வானாய்
 மணிமந்திரப் பொருளாகினை வடிவாகினை யுலகில்
செயல்செய்யடி யாராகினை நீனாகினை மேலோன்
 சேரும்பர அறுஷானதின் மேலோனருள் சேரத்
துயில்சாக்கிர கனவானதின் சுடராயருள் தோன்றித்
 துரியத்துடன் துரியாதித சுகமாகினை தோன்றாப்
பயிராமுனில் நன்றாகினை பரனேயென் பிதாவை
 பரிபூர்ண சொருபாக்குவை பரமாம் றஹ்மானே. (௧௦)

றஹ்மான்பதிகம் முற்றிற்று.

---

ஆ திருப்பாடல் - ௬௧௧.

---

# மயில்ஹாமீம் பதிகம்.

---

கொச்சகம்.

ஆடும் பறவையென்ன வம்பரவி லாசமெல்லாம்
ஆடுமயில் வேஷத் தன்பிலுறு மாசோதி
தேடு மடிமைதந்தை சீவன்முத்தி யான்காணத்
தேடும் பரமயிலே செப்புகவே ஹாமீமே. (௧)

அறிவாஞ் சிறகுவிரித் தாடுயிர்கள் யாவுமொன்றாய்
அறிவாம் பரநடன மாடுமறை மாமயிலே
செறிவா மடிமைதந்தை சீவன்முத்தி யான்காணச்
செறிவாமென் காதல்துயர் தீர்மயிலே ஹாமீமே. (௨)

---

* தேக என்றும் பாடம்.

எந்துயர மெல்லா மிசைந்தவுனை பேசிமலர்
எந்தனுளில் வந்த யிறைபோ டுரைமயிலே
சிந்தையுறு தொண்டுதந்தை சிவன்முத்தி யாங்காண
அந்தமில்லா ஞேடுனைசெய் யருள்மயிலே ஹாமீமே. (ங)

உள்ளம் பெருங்கடலா யுருகியன்பி னுற்சலமாய்
வெள்ளக் கடலடங்கா மெய்யிலே மெய்யுருகும்
வள்ளலே யென்றன் மனத்துல்ய மாமயிலே
தெள்ளுதந்தை முத்தியருள் செப்புகவே ஹாமீமே. (ச)

உலையிலிடு மெழுகதுபோ லுருகியென் னுள்ளமெல்லாம்
வலையிலகப் பட்டுழலும் மான்போலும் வாடுவனே
நலமாமென் றந்தைமுத்தி நான்காண நீயருள்வாய்
தலையறிவா ஞேடுனைசெய் சார்மயிலே ஹாமீமே. (ரு)

அல்லும் பகலுமன மவ்வருளி லேநினைவாய்
நில்லெனவே நன்றாய் நிறுத்தியெனை யாள்பரனே
சொல்லுவதொன் றெந்தன்பிதா சொரூபமுத்தி யாங்காண
செல்லருளி ஞேடுனைசெய் சேர்மயிலே ஹாமீமே. (சு)

உள்ளும் புறமுமொன்றா யோங்கி யனந்தமெல்லாம்
வள்ளலா யெங்கும் வடிவாகு மாமயிலே
தெள்ளுதவ முத்தியென்றன் செய்யபிதா மெய்யிலுற
உள்ளபடி யுண்மையரு ளோதுமயில் ஹாமீமே. (எ)

அண்டருக்கெல் லாமரசே யன்புடையோர் நற்பரனே
தொண்டன் றனையாண்ட சுருதிமுடி வேசுடரே
என்றுமழி யாதமுத்தி யெனக்குமென்றாய் தந்தையர்க்கும்
நன்றென் றிணைவருக்கும் நாட்டுமயில் ஹாமீமே. (அ)

அந்தஹா மீமெனவும் அந்தயா ஸீனெனவும்
அந்ததா ஹாவெனவும் ஆள்பரம வாரணமே
அந்தவலி யுன்னுடசில் மூமிநத்தி யாய்நபியே
எந்தன்பிதா சிவன்முத்தி யெய்துமயில் ஹாமீமே. (கூ)

அண்டர்பர வும்நபியே அஹ்மதுமு ஹம்மதுவே
முண்டகநல் முத்தலக்கே முன்னுள் முழுமுதலே
ஒன்றுபட வென்னுளத்தி லொன்றாகக் காணவருள்
தொண்டனென்றன் றந்தைமுத்தி சொரூபமுத்தி ஹாமீமே. (க0)

**மயில்ஹாமீம்பதிகம் முற்றிற்று.**

---

ஆக திருப்பாடல் - சுஉக.

---



# முஹம்மதுப்பதிகம்.

---

**வண்ணத்தாழிசை.**

அருள்தரப்பவ வினையறக்கொடும்
அசடர்நெஞ்சமும் பொடிபட
அதிகநின்றிரு வசனமெய்யுரை
அடிமைநெஞ்சினி லருள்பெற
வெருளாறுக்குநின் கடைக்கண்பார்வையின்
விரகமுத்தியென் னுயிர்பெற
வெளிக்குள்ளொளிக்கு மொளிக்குள்ளொளிக்க
விழிக்குங்குருக்கண் ணருளினைத்
தெளிக்குந்தெளித்துன் னருள்பொற்பதத்தைத்
திறத்திற்றுதிக்கும் விதியெனைச்
சிவபொற்பதும கருணைக்கமலத்
திறத்திலெனைப்பெற் றெடுத்தநற்
பொருள்பெற்றுறையு மத்தனன்னை
புகழ்மெய்ஞ்ஞான முத்தியாய்ப்
புனிதவேத் சொருபமாகப்
புகழும்யாமு ஹம்மதே. (க)

அடிமைமனது முருகுதுனதின்
அருளிற்பிரபை யொளியினுள்
அறிவிற்கலந்து மருவிச்சுகித்தே
ஆகம்நிறைந்த நிரந்தரா
நடுவிலிருந்து மிதையகமல
நலனுற்றதிக கருணையாய்
நடனப்பதுமக் கிருபையெனதுள்
நறைநற்கமல முகிழ்விரிந்
திடுமப்பொழுதிற் கருணைக்கடலொப்
பெனவொத்தெழுந்த கடினையுன்
டிடுநற்றவத்தின் யெனைப்பெற்றெடுத்த
யிருவருயிரு முனதருள்
நடனச்சொருபப் பதுமமுத்தி
நல்கிடெந்தன் நாதனே
நாயினேன்பி தாவுக்குண்மை
நல்கும்யாமு ஹம்மதே. (உ)

தேவர்க்கரசு ஜிபுரீல்மனதிற்
றெளிவிலாம லுனாதரத்
திறனுற்றறிந்தே யவரோடுரைத்துச்
சிதுரத்தினிற்செய் திடுதவம்
மேவும்பொழுதிற் றிரைவந்திறங்க
விளங்கும்வலது பாகமாய்
விரையும்பொழுதிற் சிறகோடுயர்த்தி
விழிக்கண்ணோக்க வுனதருள்
பாவும்பதும வழகினொளியின்
பரமவெளிகண் ளெமெலாம்
பதறியொடுங்கி மனந்தட்டழிந்து
பதத்தில்ஸுஜூதிட் டிடுமெதால்
பூவும்வாசம் போலேயாவும்
பொருந்தும்பரம பிரமமே
புகழ்தொண்டெனது தந்தைக்கருளைப்
பொருத்தும்யாமு ஹம்மதே. (௩)

அடிமைக்கதிக நலனுந்திறனும்
அருளுமடிமைக் களித்ததால்
அடிமையுனது பதத்தைத்துதிசெய்
ததிகவதிக வதிசயம்
அடிமையுடலு முயிருமுனதின்
அதிகக்கருணை விழியினால்
அருள்செய்யருளென் னுளமின்னிறைந்தே
அதிகவதிகத் துதிசெயப்
படியிலடிமை விதியிலதிக
விதியேபெறுமப் படியினாற்
படியிலடிமை யுளமிற்காணப்
பரிசுபெறவன் றிணைகள்போய்
அடிமைதந்தை தாயுமுந்தன்
அரியசிவன் முத்திபெற்
றதிகஞான சொருபமாக
வருளும்யாமு ஹம்மதே. (௪)

வேளைகண்ட றிந்தெனக்குள்
மெய்யனாகு மெய்யனே
வேதபோத சோதியான
மெய்ப்ரகாச வெண்மையுன்



தானையென்னு ளத்தின்மேவி
தற்சொரூப மாகவே
சரணஞான பூரணவென்
சகலமான காரணா
ஆளவென்னை யாண்டுகொண்ட
அன்பனேயென் னன்பனே
அடிமைபாவம் யாவையும்
பொறுத்தேயாண்ட வாதியே
நானுமென்றன் றந்தைசிவன்
முத்தியாக நல்குவாய்
நாவனந்தம் பாவினாற்று
திக்கும்யாமு ஹம்மதே. (௫)

உள்ளிலும் புறம்பிலும்
உரைக்கொணாத ரூபமாய்
உன்னையென்னுள் ளென்னையுன்னுள்
ஒன்றதாய்க் கலந்தவா
தெள்ளுஞான போதரூப
மாயெழுந்த சிற்பரா
சித்திசித்தி யென்றுதாண்ட
வம்புரிந்த தேவனே
என்னுளென்னைப் போலவெங்கும்
என்னுளாம் நிரஞ்சனா
என்னையீன்ற தாதையர்க்கு
சிவன்முத்தி யீந்தவா
கள்ளமாம் புலன்களுங்
கரணமும் மடிந்திடக்
காட்டொணாத நின்சொரூபங்
காட்டும்யாமு ஹம்மதே. (௬)

சுழிந்துச்சுருண்ட சரணத்தொனிக்குள்
தொடுத்தவிரவி ராறுமே
தொகுத்ததனில் நாலுமுனது
சொருபக்கிருபை யானதால்
அகத்துளெனதுள் ளடங்கும்படியின்
றுனபரிசை யறிகிலேன்
அடிமைபவத்தைப் பொறுத்தேயெனையுன்
ஆளதாக்கி யாளுவாய்

ஜெகத்திற்கொடிய மனுடர்பகையை
யறுத்துத்திருக்கண் ணொளியினல்
தெளித்துக்கரைத்து வடித்தமறையின்
தெளிவையெனது ளழுத்துவாய்
இகத்தி லெனைப்பெற் றெடுத்த தாதை
தாயு முனதி னிருபதம்
இன்ப ஞான சொருப முத்தி
இசைக்கும் யாமு ஹம்மதே. (எ)

அனைத்தும்படைத்து மழித்துமழித்தி
டாமலாக வாக்கியும்
யாவும்நிறைந்து மகத்துள்ளாக்கி
யனைத்தும்யாவு மாகியும்
மனக்கண்டிறந்து தெளிக்குமுளத்தின்
மறைசொற்படவுள் மருவியும்
மவுனமாகிக் காணொணாத
வடிவங்காண வருடியும்
நினைப்பும்மறப்பு மறநின்றுணரும்
நிலையிற்சொருப நிரஞ்சன
நினைவுற்றடிமை துதிபெற்றிருந்த
நிறையென்றெனைவந் தாள்வையென்
அனையுற்றதிக தாதையுடனென்
அருகர்துணைவர் யாரும்நின்
அரியபாத சொருபமுத்தி
யருளும்யாமு ஹம்மதே. (அ)

அகிலக்கரிதத் தோமநியென
யாவும்யாவு ளானவா
அளவுமுடிவு மிலேநின்கருணை
அனந்தவனந்த நடனமாய்ச்
சகலதேவ ராக்கர்முனிஜின்
சரணந்தேடி யறிகிலார்
தவத்துளிருத்திப் பவத்தையறுத்துத்
தவத்தோர்க்கருளுஞ் சரணநின்
பகல்போலதிக வொளியின்பிரபை
பழயவடியா ருளமெலாம்
பரமநடனத் துரியாதீதப்
பரமசொருபப் பிரமமே



அகலமிதைய கமலமதினுள்
அறிவுசெறிய வருள்செய்வாய்
அடிமைதாதை யுனதுபாதம்
அதனில்யாமு ஹம்மதே. (கூ)

என்பிரான்பி ரானேயெங்கும்
ஏகமான சோதியே
எந்தனுள் நிறைந்தகண்டம்
எவ்வுயிர்க்கு மானவா
துன்பமான மாய்கையின்
துடக்கற வறுத்துநின்
சொருபஞான பிரபையாகித்
தோன்றியாண்ட சுத்தமே
அன்பிலாதோ ருகிலும்நின்
அன்பனென்றே யாளுவாய்
அகிலவண்ட ரண்டமான
புவனம்யாவு மாள்பரா
நம்பினேனின் னடிமையென்றன்
தந்தைதாயும் நற்றவம்
நடனவேத சொருபமுத்தி
நாட்டும்யாமு ஹம்மதே. (கo)

முகம்மதுப்பதிகம் முற்றிற்று.

ஆ. திருப்பாடல் - சுஙக.

# நபி நாயகப்பதிகம்.

கலித்துறை.

ஆதியோ டந்தமி லாதான் பெருமையை யான்புகழ்ந்தும்
ஓதியுணர்ந்துந் துதிசெய்த தாலென் னுறுந் துயர்போய்ச்
சோதி யருளின் பிரபையை யீந்தெனுட் சுத்தமுத்தி
நாதனே யென்றன் பிதாவுக் கருள்நபி நாயகமே. (க)

முன்னே ருடலைச் சிரசில்வைத் தீர்முதிர்ந் தெவ்வுலகும்
நின்னுமத் தாலரு ளாக்கிவைத் தீரென் னினைவுள்வந்து
பன்னுரு மென்றுயர் போக்கிவைத் தீர்நின் பதத்தின்முத்தி
நண்ணுமென் றந்தையர்க் கீந்தருள் வாய்நபி நாயகமே. (௨)

எத்தனை கோடி சுகத்தி லிருக்கினும் யான்மறவேன்
எத்தனை துன்பம் வரினு மறந்தில னென்பெருமான்
உத்தம னானந்த னெவ்வுயிர் யாவுமுள் ளோங்குபரன்
நற்றவ மென்றந்தைக் கீந்தருள் வாய்நபி நாயகமே. (௩)

உலகோர்கண் ணேறுடன் நாவுளற் றுதனு மோடிவிட
அலையாத ஞானப் பொருளீந்த நாதனின் னன்பதனில்
நிலையாக நின்று பரிபூ ரணமென நின்றமுத்தன்
நலமாமென் றந்தையர்க் கானந்த மாம்நபி நாயகமே. (௪)

சுத்தம் வியர்த்தங் கிருத மிரணியந் தோன்றும்விராட்
டுற்றதில் வான்வெளி வன்னி சல மண்ணுதித்தவுடல்
வைத்ததிற் சூட்சநற் காரண மாமவ் வடிவனுவாம்
நற்றவ முத்தியென் றந்தையர்க் காம்நபி நாயகமே. (௫)

என்னை யறிந்து வணங்காத பாவத் திழிம்புதவிர்த்
தென்னை யறிந்துநின் பாதந் துதிசெய வென்னுள்வந்து
முன்னுனை யாகம வேதங்கள் யாவும் மொழிந்தபரா
நண்ணுமென் றந்தையர்க் கானந்த மாம்நபி நாயகமே. (௬)

அனுவா யகண்ட வெளியாய் வளிவன்னி யைம்புலனாய்
தனுவாய்க் கரணமுஞ் சீவனுஞ் சாட்சியுந் தானுமொன்றாய்
நினைவாய் நினைவி லடங்காத நின்மல நித்தியனே
நனவாமென் றந்தையர்க் கானந்த மாம்நபி நாயகமே. (௭)

அங்கிருந் தானந்த மாயிருந் தாயுயிர் யாவினுமாய்
இங்கிருந் தும்முனை பேசிநின் றாயிறை யோன்விடுதூ
தங்கனும் யானுனை பாங்கனு மாமென் றருள்புரிந்தாய்
நந்தந்தை யானந்த மாக்கிவைத் தாள்நபி நாயகமே. (௮)

ஜிபுரீல் மனதிற் பெருமைகொண் டேயுனை செப்புதற்காய்
அவரீத மாய்ச்சிது ரத்தினில் நீதொழு தங்கிறங்கும்
அவரீத மாந்தினை யுள்ளேசொ ரூபமென் னம்பரனே
நவரீதென் றந்தையை யானந்த மாம்நபி நாயகமே. (௯)



அவ்வல முஹம்மது ஆகிற் முஹம்மது வாருயிர்கள்
எவ்வு முஹம்மது வெங்கு முஹம்மது வென்னுளத்தே
செவ்வு முஹம்மது ஞான முஹம்மது சித்திமுத்தி
நவ்வுமென் றந்தையர்க் கானந்த மாம்நபி நாயகமே. (௧0)

**நபிநாயகப்பதிகம் முற்றிற்று.**

ஆ திருப்பாடல் - ௬௪௧.

# சொரூபானந்தப் பதிகம்.

**அறுசீர்த்தாழிசை.**

திருவரு ளுலகுயிர் சொருபமென் னுளமிசை திரளா னந்தம்
மருவியென் னுயிர்நிறை யணுவறி வருள்தெளி மகிழா னந்தம்
கருவுறு பனியினி னறுகினி நுனியெனக் கருவா னந்தம்
சொருபம தருளெனைப் பெறுபிதா வுயிர்தவச் சொருபா னந்தம். (௧)

அகரம தனுகொடு சுழியினி லெனையும்வைத் தருளா னந்தம்
உகரமொன் றெனவிரு சுடரென நிறைமல ருறையா னந்தம்
மகரம துறுமல மறவுறு ஹாமீன் வடிவா னந்தம்
சுகமுற வெனையருள் பிதாவுயிர் சைதன்ய சொருபா னந்தம். (௨)

நரகம டைபடசு வணந்திறந் திடவரு நன்றா னந்தம்
பரமுல கதிலதி செயமென துதிதரு பரமா னந்தம்
வரமுன தருள்கொடு வெனையருள் பிதாவுயிர் வழியா னந்தம்
சொருபமி லதிசெய சொருபருள் புரிபர சொருபா னந்தம். (௩)

வெளியொளி யொளியினில் விரவிட வெனையுறு வெளியா னந்தம்
எளியவ னுளமிசை பரவிட நிறைதரு மிறையா னந்தம்
களிமகிழ் கொளவென திதயமி லுறுதவ களியா னந்தம்
சுழிவினை யறவெனைப் பெறுபிதா வுயிர்தவச் சொருபா னந்தம் (௪)

அன்புறு மடியவர் நெஞ்சக மதுதனி லமுதா னந்தம்
முன்பவ ருளமிசை செம்பக டுறைமறை முதலா னந்தம்
என்பொடு முயிர்தசை புண்பட வுருகிய தெழுமா னந்தம்
துன்பம தறவென தன்புறு தந்தைநின் சொரூபா னந்தம். (௫)

அண்டர்கள் மகிழ்பெற வெங்கணு மசைவற வடியா னந்தம்
பண்டொரு வனமிசை முண்டக மலரெழு படியா னந்தம்
நன்றென நினைவுற வென்றுமே யுயிர்மிசை நடுவா னந்தம்
தொண்டென வெனையருள் தந்தையி னுயிர்தவ சொருபா னந்தம். (௬)

வஞ்சர்கள் பகையினைப் பஞ்செரி யெனவிடு வரமா னந்தம்
நெஞ்சினி லுறுதுய ரஞ்சிட வருள்தரு நிறையா னந்தம்
உன்செய லதுவென தங்கமி லுறைதுதி யுரையா னந்தம்
சொந்தவ முதருமென் றந்தையை யருள்தவ சொருபா னந்தம். (எ)

மறைமொழி பகரும் படியுனை யுணரும் மனமா னந்தம்
கறையற வுனையே நினைருவ ருளமே கனவா னந்தம்
நிறைபல வகையும் பலதினு மதுவே நினைவா னந்தம்
துறைவழி யெனையே பெறுபிதா வுயிரே சொருபா னந்தம். (அ)

அதுநீ யாகினை யெனுமே மறையுரை யனுவா னந்தம்
பொதுமா மறைநா லருள்சேர் விதியாற் புகழா னந்தம்
பதியே பசுவே பசுபதி பாசப் பரமா னந்தம்
துதியே னெனையே பெறுதா தையர்தாஞ் சொருபா னந்தம். (கூ)

ஹாமீ மெனமுத் தொளிவா கியநற் கடலா னந்தம்
பூமீ தனில்வந் துறைவாம் நபியே புகழா னந்தம்
ஆமீ னெனவே யடியேன் புகழ்கொள் ளருளா னந்தம்
சோமா யெனையே பெறுதா தையர்தான் சொருபா னந்தம். (க0)

சொருபாநந்தப்பதிகம் முற்றிற்று.

ஆக திருப்பாடல் - கூக.

# அஹதில் மஹ்மூதுப் பதிகம்

கலிச்சந்தவிருத்தம்.

தோன்றுமுல கெங்குமுழுபி ரெங்குமருள் தோன்றி
யாண்டததி னுலகிக சுத்தமென வாகிப்
பூண்டபரி பூரணம் பொருந்திதய மீதில்
ஆண்டருளென் றாதையருக் கஹதில் மஹ்மூதே. (க)

உற்பர போதவறி வுண்மையையு ணர்ந்த
முத்தர்பர முத்தியருள் முச்சொருப மொன்றாய்
நித்தியமென் றாதையற்கு நின்கருணை யாலும்
அத்துவிதந் தாதனுய்யெற் கஹதில் மஹ்மூதே. (உ)

வஞ்சர்பகை யொன்றிடவ ளர்ந்தறஹ் மானே
நெஞ்சகமி லுன்கிருபை நின்றுநிறை வாகிச்
செஞ்சொலுறு மாகமந் தெளிந்துனைபு ரிந்த
அஞ்சலென்றன் றாதையருக் கஹதில் மஹ்மூதே. (௩)



பன்னுமறை நாலினும்ப ழம்பொருளும் நீயே
எண்ணுவதெல் லாமறிந் தெங்கணினும் நீயே
நண்ணுநடு வாகுபர நாயகனே யெந்தன்
அன்னையொடு தாதையருக் கஹதில் மஹ்மூதே. (ச)

நாலுகலை யோடுறையும் நம்பரனை நம்பி
மேலுமறி வாகுபெரி யோர்க்கருள்வி ளங்க
மூலமணி மந்திர மொழிந்தமுத லோனே
ஆலமுதந் தாதையருக் கஹதில் மஹ்மூதே. (ரு)

எழுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

முன்னொளி யெழுந்தே யெங்குமாய்ப் படர்ந்து
முதிருயிர் யாவுமாய் முளைத்தே
என்னகத் திருந்து வேதவே தாந்தம்
இசையருட் பனுவலா யிசைந்து
தன்னிக ரில்லாப் பிரபையாம் நடனச்
சச்சிதா னந்தமாய்த் தரித்த
அண்ணலே யென்றாய் தாதையர்க் கருள்நீ
யஹதுறு முஹம்மது நபியே. (சு)

வேறு.

தெளிந்தவர் நெஞ்சுள் ளிருந்தநா யகமே
ஒழிந்தவ ருளத்தி லுண்மையாம் பரமே
எழுந்தருள் புரியென் றாதையர்க் கிறையே
அழுந்திடு மருள்நீ யஹதில் மஹ்மூதே. (எ)

இதயமி லுறைந்தே யிருப்பது கட்டனே
பதமொரு நான்கும் பரிந்தருட் பரனே
சுதருல கினிலென் றாதையர் சொருப
அதிகநற் கிருபை யஹதில் மஹ்மூதே. (அ)

வனமதில் நதியை யழைத்தவல் லபமே
நினைவுறு மருளை நிறைத்தநித் தியமே
தினகர னொளிநின் றிருவடிச் சேர்வை
அனையொடு தாதை யஹதில் மஹ்மூதே. (கூ)

பூவுல கினிலும் புகழ்பெறு நபியே
மேவுமே லுலகம் விளங்குநன் னபியே
மூவுலகி னுக்கும் முழுமுதல் நபியே
ஆவியென் றாதைக் கஹதில் மஹ்மூதே. (க0)

அஹதில் மஹ்மூதுப்பதிகம் முற்றிற்று.

ஆக திருப்பாடல் - சுசுக.

# மஹா மூதுப் பதிகம்.

கலிச்சந்தவிருத்தம்.

உந்தனையென் னினைவிலுற வுயிர்முழுது முனதாய்ச்
சிந்தனைசெய் திடுமுனது சிந்தனைசெய் தவமாய்
எந்தனையே முழுதுமுருப் படவெனைப்பெற் றெடுத்த
தந்தையர்நற் சீவன்முத்தி தந்த மஹாமூதே. (௧)

இதயமதி லுனதிதய விதயகமலத்துள்
துதிசெய்திடு மடிமையென துதிசெய்துதி யத்தில்
கதியெனவந் தெனையின்றுன் கருணையுள மீதில்
ததிகொளுமென் றாதைமுத்தி தந்த மஹாமூதே. (௨)

அதுநீயா யினையெனுநல் லசிபதமுற் றவரோ
டதுநீயா யினையெனவு மருட்கடவுட் கடனே
விதியேயான் பெறுநினது விமலபதத் துதியே
அதுநீயா யினைதாதைக் காக்கு மஹாமூதே. (௩)

தின்னமற வேதமுறை செப்புவது நீயே
என்னமதி னுருவி யெங்கணுமு லாவி
கண்ணின்மணியாயொளிக லந்தெழுக ருத்தாய்
அண்ணலேயென் றாதைமுத்தி யாக்கு மஹாமூதே. (௪)

உத்தமப் தத்தொடெனை யுற்றுறவ தாக்கி
அத்துவித சீவன்முத்த ரானவரோ டாக்கி
நித்தியமு நின்றுதிசெய் நேசதொண்டன் ஹக்கே
முத்தியெந்தன் றாதைமுத்தி முத்தி மஹாமூதே. (௫)

எந்தனுடெ திர்த்தபகை யாவுமெரி பட்டு
நிந்தனைசெய் வஞ்சர்மனம் நீறவருள் நித்தா
உந்தனருள் தொண்டனென வெந்தனையாட் கொண்டாய்
நந்தியேயென் றாதைமுத்தி நல்கு மஹாமூதே. (௬)

ஒன்றெனவே நின்றுனையு கந்தபெரி யோர்கள்
முண்டகவி ழிக்கடையின் முத்தியருள் நித்தா
அன்றமரர் யாவரும்வ ணங்கிவரு மன்பா
என்றனுறு தாதைபர வின்ப மஹாமூதே. (௭)



உச்சிமறை யுச்சிநடு வுச்சிநிறை வுற்றே
அச்சரம தச்சரம தச்சரச ரத்தே
முச்சுடரொ டெச்சுடர்மு தற்சுடர்மு டிந்த
அச்சுடரென் தாதைசொரு பாக்கு மஹாமூதே. (௮)

நிரந்தரநி ரஞ்சனநி ராமயநி ரந்த்ரா
புரந்தரபு கழ்ந்தருபு ணர்ந்தபர போதா
கரந்தருப தந்தருக லந்தகரு நாதா
பரம்பரமென் றாதைக்கசி பதமீ மஹாமூதே. (௧௦)

முன்னைவினை யாவுமிருள் மூடுஜெக மாய்கை
சன்னபின்ன லானதுத விர்த்து மெனையாண்டாய்
உன்னையலால் வேறுநினை வொன்றுமறி யேனே
அன்னையொடு தாதையும்ஜெம் மாக்கு மஹாமூதே. (௧௦)

மஹாமூதுப்பதிகம் முற்றிற்று.

ஆ திருப்பாடல் - ௬௭௪.

# பலசந்தப்பதிகம்.

எழுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

அருளுளத் தெழுந்து பவக்கட லடைத்தும்
அனைத்திலும் யாவுமாய் நிறைந்தே
இருளறத் துணிந்து நிரஞ்சன னாகி
என்னுளத் தெங்குமாய் நிறைந்து
வெருள்கடந் தகண்ட வெளியினும் மேலாய்
மேவியுள் ளொளியொளி யாகி
திரளருள் சொரூபே யடிமையின் றாதை
ஜெம்முற வாக்குமென் லாகி. (௧)

கலிச்சந்த விருத்தம்.

லாகியென்றெழு போதநற்றவ நாதருள்ளமில் நம்புவில்
லாகியென்று நடம்புரிந்திடு நந்தியெங்குரு நாதனே
லாகியந்தசொ ரூபமொன்றிலை நற்சொரூபசொ ரூபமே
லாகிலாகியென் றாதைஜெம்மருள் நல்குமெங்கணும் லாகியே. (௨)

வேறு.

லாகியேயென துயிரினுள்ளுயிர் நடுவிலெங்கும் நிறைந்ததால்
யோகியானவர் கண்டுதொண்டுசெய் யோகஞானம துண்மையே
ஏகமாகிநி ரந்த்ரனாகியே யெங்குமொன்றென மெம்பிரான்
மோகமாகுமென் றாதைஜெம்முற முத்தியீந்தருள் முதல்வனே. (௩)

### அறுசீர்ச்சந்தவிருத்தம்.

முதல்வ னெனதுளி லுறுதிதருபர முழுது மழுதுண வாகுநல்
இதய கமலமின் னழகு பிரபையென் னிதயமதிலுறு நிறைவினல்
அதிக சொருபமெல் வகையுநிறைதர வறிவில்மருவிய வசிபத
விதியை யடியனென் றுதை மருவிமெய் வெளியிலொளியருள் வேதமே.

### எண்சீர்த் தாழிசை.

வேதமொரு நாலுமுறை பேசுமறை வேதம்
மெய்யுரைய தெங்கணும் விளங்குபர னீயே
நாதுமஹூ மூதெனவு மோதுபர னீயே
துன்பமற வந்தெனக்குள் தோன்றுபர னீயே
சோதியே யென்றந்தை ஜெம்மில் சூழ்கருணை யாகி
தோன்றுசிவன் முத்தியருள் சுத்தபர சுத்தா
போதமுற வெந்தனையு மாண்டுயிர்க ளெங்கும்
பொங்குகின்ற நின்கருணை போதமுறு நித்தா. (௫)

### சந்தவிருத்தம்.

நித்தனே மனமீ துற்றற வாகி நினைவுறும் நினைவாகி
யுற்றுணர் போத சுத்தவெ ளியிலே யொளிசொரு பொன்றாகி
முற்றிடு மறவா துற்றறி வுடனே முழுமுதல் நீயான
வஸ்துவே யடியேன் றாதைநின் முத்தி வடிவருள் மாமணியே. (௬)

### அறுசீர்த்தாழிசை.

மணிமாமணி தேவர்கள் யாவரும் மறைவேதம தானது யாவையும்
தணிவாகிய வுயிர்புலன் யாவையுந் தானுகிய புகழ்தவ சொருபமே
கணியாதப வக்கடல் மாற்றிநின் கழல்தந்தெனை யாண்டிடு காரண
மணியேயடி யேனுறு தாதைநின் மலர்ப்பாதம தீந்தருள் மாதவமே. (௭)

### அளவடி விருத்தம்.

மாத வத்தினி மாத வத்தருள்
போத முற்றிடப் போத முற்றிடும்
நாதனே யென்பி தாவை நற்றவ
பாத முத்திநின் பதும பாதமே. (௮)

### கலித்தாழிசை.

பதுமப் பதத்தை யுன்றுணர்வாய் பருகி யடியேன் பசிதீர்ந்தேன்
இதய மதில்நின் கமலவொளி வெங்குங் கலந்து மோர்சொருபாய்
அதிகப்பிரபை யொளியான வருளே யெனைவந் தாட்கொண்டாய்
பதுமபதமென் றுதையருள் பழகு மறையின் பழம்பொருளே. (௯)



### எண்சீர்ச் சந்தவிருத்தம்.

பொருளே யருளே யிருள்வெளி யொளியே
பொறையாய் நிறையா யுறைபோ தகமே
திரள்ஞா னமதாம் பரவுயிர் யாவுந்
தெளிவாய் வெளியா கியசிற் பரனே
மருள்மா யையறுத் தெனையாள் பரனே
வடிவே யென்பிதா வுயிர்மா கருணை
அருள்முத் தியதீந் தருளெப் பொழுதும்
அஹமத முஹம் மதுநன் னபியே. (௧௦)

பலசந்தப் பதிகம் முற்றிற்று.

---

ஆக திருப்பாடல் - ௯௮௧.

---

## வில்லாஹிப் பதிகம்.

### கலிவிருத்தம்.

தெளிக்குநின் னருளானந்தத் திருவொளிப் பிரபை தந்து
களிக்குமென் னுளங்களெல்லாங் கழலொளிக் கருணை யாலே
பழுக்குமா னந்தபோதப் பழமறைப் பரமே யென்னை
உளத்துறு தாதைக்குன்ற வுயர்பத முறும்பில் லாஹி. (௧)

சாக்கிர சொற்பனத்தின் றன்மையற் றருளே யந்தம்
நோக்கிடாச் சுழுத்திதன்னில் நண்ணறி வாகித் தானும்
பாக்கிய ஞானசோதி பழகுவர் பதமென் றந்தைக்
காக்கியா னந்தமுத்தி யருள்தர வருள்பில் லாஹி. (௨)

மாயைவி ளெழுந்துநின்றன் மலர்ப்பதம் வழுவா தொன்றாய்க்
காயகங் கருணையாகிக் கதிபெறும் பெரியோர்க் கந்த
ஆயகத் தமுதென் றந்தைக் கருள்பதத் ததிகமுத்தி
நேயகத் துள்ளாஞ்சோதி நிறைதவம் நிறைபில் லாஹி. (௩)

சுழுத்திசாக் கிரத்திலாகிச் சொருபமாம் பெரியோர் பாதம்
அழுத்துமென் னுளத்திலென்றன் றுன்பயர்க் கருளு மன்பாய்
எழுத்தற வெங்குமொன்றா யெவ்வையு மாண்டா யென்கோன்
விழித்தருள் தந்தென்றுதை மெய்ப்பதம் வெளிபில் லாஹி. (௪)

சுவனமாம் பதியும்வேண்டேன் தொல்லுல காசும் வேண்டேன்
செவுனமாம் சித்தும்வேண்டேன் கேடில்லா வாழ்வும் வேண்டேன்
அவனிவ னென்னிரண்டு மற்றொன்று மவர்பா தத்தைத்
தவனமா மென்றுய்தந்தை சகலர்க்குந் தரும்பில் லாஹி. (௫)

திங்களைப் பாதிசெய்து செழுமுழு மதிய தாக்கிக்
கங்குலில் நிலவுகாட்டிக் கடுகிசி யிருளுங் காட்டி
அங்கமொன் றில்லாக்கட்டி யழகொளி மயில தாக்கும்
எங்கள்நன் னபியேதாதைக் கிரங்குநின் பதம்லில் லாஹி. (௬)

நின்பதம் வழுவாதார்க்கு நின்னருள் றஹ்மத் தீந்த
அன்பனே நின்பால்சேர்ந்த வடியவர்க் கருள்செய் யாதி
என்பிரா னேநீயெங்கு மேகமாய் நிறைந்த ஹக்கே
தன்பிரா னேயென் றந்தைக் குன்பதந் தரும்லில் லாஹி. (௭)

பார்புவ னங்களெல்லாம் பராபரச் சொருப மானாய்
நேர்கம லத்துள்ளாக்கும் நியமு வெளியோர்க் கெல்லாம்
சாருமா னந்தமுத்தி தனிமுதற் றவர்தற் போதா
ஓருட னடிமைதந்தை திருப்பத மருள்லில் லாஹி. (௮)

கற்றவர் கற்றறிந்தோர் கழல்சிர மீதிற் கொண்டேன்
பெற்றவர் பெறப்பெற்றோர்கள் பெரும்புகழ் புகழப் பெற்றேன்
உற்றவ ருற்றுணர்ந்தோ ருயர்பத மமுதா யுண்டேன்
நற்றவ மென்றன்றந்தை நடனமா நடுலில் லாஹி. (௯)

முஹம்மது நபியேயெல்லா மாண்டுமென் றனையு மாண்ட
முஹம்மது நபியேயென்றும் முழுமுதல் முழுதுந் தானும்
முஹம்மதுர் றசூலுல்லாஹி முத்தியென் றந்தைக் கீந்து
முஹம்மது மஹ்மூதான முழுமுத லருள்லில் லாஹி. (௧௦)

லில்லாஹ்ப்பதிகம் முற்றிற்று.

ஆக திருப்பாடல் - ௬௧௧.

ஞானதோத்திரம்

முற்றுப்பெற்றது.

ஹாமீம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஞானப்பஃறொடை.

கலிவெண்பா.

க. வருவாயே யென்னுளத்தில் வந்துநிற மீரிருந்து
தருவாயே நின்கழலைத் தானவனே—பொருவாகி

அண்டரண்ட முங்கடந்த வாதியே அம்பரனே
தொண்டருள மீதிலுறை சுடர்விளக்கே—நன்றிதரும்

மூலச் சுடரே முடிவே கலைநான்கின்
மேலுந்திற மாயிருந்த மெய்யருளே—நாலுகலை

உள்ளாய் நடம்புரிந்த வுண்மையே உற்பனமே
விள்ளாத சோதி விளக்கொளியே—தெள்ளுதவம்

117892

௫. அட்சரமுந் தானு யடங்குஞ் சொருபமதில்
நிற்சிவமுந் தானான நிட்களமே—யுட்சிவத்தைப்

பார்க்கு மடியவர்க்குட் பன்னுதவ மாயிருந்து
சேர்க்குங் கருணைத் திருவருளே—ஆக்கமுற

முந்நான்கி லொன்றாய் முடிந்தோனே மூன்றுமொன்றாய்
நன்னாஞ் சுழிமுனையி னுதனே—எந்நாளும்

உன்னைத் தொழுவோர்க ளுன்னைமற வாதிருக்க
என்னுங்குரு வாயிருந்த வேகனே—மூன்றுவாயில்

வேதமொரு நான்கில் விளங்கு மதிலடங்காப்
போதமருள் ஞானம் புரிமணியே—நீதமுற

௧௦. வேத சுருதி விளங்குமுத லாவதனை
யாதிபசு பதிபாச மாகவே—சோதியுற

முடிவா லருள்பார்த்து முத்திதரும் வேதமொன்றில்
வடிவா யிருந்த வகைகளெல்லாந்—திடனுகக்

கூற வுனதுதிருக் கூர்மை முஹம்மதனாத்
தேறவுளி லீந்தருளென் சிமானே—வேறுபடா

அன்பே முழுமுதலே ஆரணங்கே யடியவருள்
பம்பரம்போ லாடிநின்ற பழம்பொருளே—துன்பமற

உள்ளமதி லேவிளங்கு முற்பனமே யுட்சுடரோ
கள்ளமற வந்துதவுங் காரணனே—விள்ளநிக

௧௯. உற்பனமே சோதிக் குருவே யுருவருளே
நிற்பரமே காணு நிலைப்பொருளே—மெய்ப்படியுள்

ஆரும் அறியாத அருக்கிருவே யம்பரனே
சாரும் வலம்புரிக்குள் தானவனே—சேருமொரு

உச்சிநடு வாயிருந்த வுண்மையே யற்பனமே
பச்சை யொளிவான பழம்பொருளே—நிற்சிவமாய்ப்

பன்னிரண்டு மோடிப் பதியுஞ் சுழிமுனையில்
மின்மறைந்தாற் போன்மறையும் வேந்தனே—உன்னுகின்ற

அசைவைச் சுழினை யதினிடையி லேயுதித்துப்
பிசகாமற் சக்கரத்துட் பேறறிவாய்—நிசமாக

௨௦. அஞ்சு திருக்காகி யதினடுவ தாய்விளங்கு
பிஞ்செழுத்தி னேடிருந்த பிர்மமே—நஞ்செழுத்தை

எண்ணுத பாவிகளை யெங்காரு முன்னுடனே
பண்ணும் போக்குப் படுத்துவையே—நின்னுமஞ்

சற்றுமறி யாமலருள் தற்பரம தாயிருந்த
பற்றையறுத் துன்னருளைப் பாய்ச்சுவாய்—சிற்றடிக்குள்

ஆறு முகமா யதிலோர் முகம்பழுத்துக்
கூறுவது மஞ்சாய்க் கொடுத்தோனே—தேறிவரும்

நாலுமுக மாயதிற்குள் நடுமூன்றுந் தானுகி
மேலுமுகம் ரண்டாய் விளங்கினுய்—நாலுமதில்

௨௧. ஓர்முகமா யென்னுள் ளுறைந்திருந்து முள்ளமதிற்
கூறினு யென்றன் குருபரனே—மீறுகின்ற

ஆசைக் கடல்போ லடங்காப் பெருவெள்ளமாய்
நேச நிலையாய் நெடுஞ்சலமாய்—ஓசையுறும்

இன்னதென்று சொல்லி யெழுதப் படாததிகம்
பன்னுமடி யேன்பூசப் பரமனே—உன்னுவிதம்

நன்று யறிந்து நலந்தருவாய் நாயகனே
குன்றாத சோதிக் குருபரனே—ஒன்றாக

உள்ளந் தனில்வந் துறைவாயென் னுட்கமலத்
தெள்ளத்தெளி வாயிருந்த சீமானே—விள்ளரிய



௩௦. அஷ்டாறது வென்றுசொல்லு மருமையறிந் தோர்கள்
விசுவாசம் நீயாய் விளங்குவாய்—நிசமாக

ஒன்றுபடக் கூட்டி யுரைக்குங் கலிமாவதிலே
நன்றிதர நீயிருந்த நாயகனே—முண்டகமில்

அஞ்சுசுடர் மூன்று யருளாய் வெளியாகி
நஞ்சிலுற வாருகின்ற நாளையிலே—பிஞ்சதுக்குள்

முன்பிறந்து தானே முடிநாலு வேதமுமாய்
அன்புபஞ்ச பூதமஞ்சு மாகியே—பண்புறவே

எட்டாகி யாறுகி யிதினிடையி ரண்டாகி
மட்டிடாச் சோதி மணிவிளக்காய்த்—திட்டமுடன்

௩௧. வட்டெழுத்தா யுன்னும் வகையிரண்டு மோரெழுத்தாய்
முட்டெழுத்தாய்க் காணு முதலோனே—அட்டதிக்கும்

முட்டிநின்ற சோதி மூதறிவே முச்சுடரே
வட்ட மதிற்சொருபாய் வந்தோனே—ஒட்டுமதிற்

கால்மேற் றலைகீழாய்க் காட்டினு யன்றிரவில்
நாலுமுகம் மூன்றுசுட ராணுயே—மேலுமதில்

உற்றசொரூ பம்ரண்டு மோங்கியதி லேமருவச்
சித்துநடு வாகவொன்று செய்வித்தாய்—வைத்ததனை

யாருமறி யாம லகத்துள்ளே தான்புதைத்தே
ஊரும் நினைவறியா தொளித்தாயே—சாருகின்ற

சந்தம்.

முரண்டசங்கு மீதெழுந்து முச்சுழிக்குள் ளன்புகொண்
டருந்தவந் தெளிந்துநின் னகத்துள்வந் துறைந்துபின்
றிரண்டுருண்ட மணியினுள் ளிருந்துசிந்தை கொண்டபின்
திருந்தவந் தருந்தொனி தெளிந்துநின்ற வன்பனே
உருண்டெழுந் ததிர்ந்துநின்ற வுட்சிவப் பனிக்குளே
உற்றபார்வை யாலெழுந் துருச்சமைத்து வைத்தவா
அருண்டபாவம் வந்திடா தகத்துள்நின் றிருக்கழல்
அணிந்துகொண் டிருந்துநின் னருந்தவ மனத்துளே

அரியதொரு சுழிமுனையி லறிவுகூன லாகி
அகாமுத லுயிர்பலது மதிலுருவ தாகி
அருணனொடு மதியுமதில் விளைவுதிற மாகி
அடிமுடியு நடுவுமொரு சுழியில்வினை வாகி
அருவுருசொ ரூபமதி லேயுறைவ தாகி
அணுவணுவ தாய்வெளிய தாகிநட மாகி

அசைவைகடு பேதமது மாகியிரை வாகி
அதிலதிக கலைமருவ முளைசுழியி லாகி

அந்தமிலாத சொருபமு மாகி
அகாஉகாமுத லானது மாகி

அருளா கினையே பொருளா கினையே
அன்பா கினையே முன்பா கினையே
அழகா கினையே உளமா கினையே

அடிவைத்து நடுவுற்று
முடிவைத்து வருபத்தை
அருள்சித்தி தரமுத்தி
வரமுத்தி திருமுத்தை
யொருபத்தி நினைவுற்றே
அருள்முத்தி தரமொய்த்த
குருசித்தி பதமுற்றும்
அடிமை யுளில்வர வருள்புரி திறமாக

அருமணியே யுருமணியே
திருமணியே தருமணியே

அறுதும்கல் வெகுகிருபை உறுதினினை வெனவரவும்
அருள்பரவும் நபிசுழலை யடிமையுளி லருள்பெருக
அதிவிதசுற் பாமுற்ற சதப்பரமா னந்தமுற வருளாமீன்

கலிவெண்பா.

௪0. ஆமீனு யெங்கு மருள்நிறைந்த சோதியொளி
மூமீன் கருத்தின் முழுமுதலே—நேமிதனில்

உற்ற தாளமதா யுள்ளுறைந்து நின்றதொரு
முத்திமு ஹம்மதெனு முழுமுதலாய்—எத்தலமும்

அந்தவொளி வாலமைத்த வாதியே யவ்வருளைச்
சிந்தைதனிற் றந்தருளுஞ் செல்வமே—முந்தவுநீ

தானு யிருந்து தான்றாங்கும் வேளைதனில்
மோன மருள்மவுன முத்தியே—ஏனமுற

ஆரு மறியாம லவ்வனத்தி லேயிருந்து
சேரு மொருசொருபஞ் சேரவே—பார்வையதில்

௪௫. நன்று யிருந்து நானுமல்ல வென்றுனைநீ
கண்டாய் தெரிசனையாய்க் காணுங்கால்—முண்டகம்போல்

மூன்றட் சரமாய் முளைத்தே யுலகமெலாம்
பூண்டே திறந்தொளிரும் பொற்பதமே—யீன்றெடுத்த



கால்முனையைப் பார்த்துமிரு கண்ணு லருள்சிறந்து
மால் கொடுத்து முன்மை வளர்பொருளே—மேலைவெளி

ஈன்ற சொருப மிசைந்ததிரு மேனியனே
ஆண்ட பராபரம தானவனே—மூன்றெழுத்தில்

ஆதிய ஜாதி யருளாகுஞ் சோதியெனும்
நீதி பரம்நிலைக்கும் நின்னுள்ளே—போதமதில்

௫0. பார்க்கும் பொழுதே பராபரம தாய்த்தோன்றிச்
சேர்க்குங் கிருபையருள் சித்தனே—ஆக்கமுற்று

வைத்ததெல்லா மச்சொருபின் வன்னவொளி வாலமைத்துத்
தைத்ததெல்லா மச்சொருபின் றன்னாலே—உற்றதொரு

மூன்றெழுத்து மொன்றாய் முடிந்த திருவருளில்
ஈன்ற சொருபமதா யெங்கிறைத்—தோன்றுமந்த

அப்பரத்தைக் கண்டு மறிபவரா ரப்பரனே
தற்பரமுந் தானாய்த் தரித்தோனே—நற்பரமும்

உச்சிதனி லேயிருந்து முருகியதி லேகனிந்து
நச்சித் திருவருளாய் நாடினாய்—பச்சையொளி

௫௫. பாங்காய் நடம்புரிந்து பரமவரு ளானதுக்குள்
தூங்காத சூட்சமுறுஞ் சூட்சியே—யேங்கினதைக்

கண்டறிந்தோ ருள்ளிற் கலங்கா திருப்பவனே
நன்றருளு மூல நடுப்பரனே—ஒன்றதனைத்

தூக்கியுளத் தேயமைத்த சூட்சமுறு நாயகனே
ஆக்கிப் பராபரத்துள் ளானோனே—நோக்கினதில்

எல்லா முனதுசொரு பல்லாம லில்லையென்று
வல்லாமை யாக்கிவைத்த வல்லோனே—நல்லதிரு

முத்தையுளத் தேயருளு முச்சுடரே யுட்பரனே
அற்றதையுள் ளாக்கியரு ளாண்டோனே—நித்தலுந்தான்

௬0. என்னுத பாவிகளை யேன்படைத்தாய் நீயுமது
ஒன்னுதென் றுலொருவ ருண்டாமோ—நன்னுக

வைத்ததெல்லா முன்னுடைய வாழ்வதிக மாகுமென்றும்
வைத்ததெல்லா முன்கிருபை வல்லோனே—எய்த்ததனை

விட்டா லினிப்போமோ மேலவனே நீயுமன்
றொட்டா திருந்தா லுதிக்குமோ—திட்டமுடன்

வைத்துநீ யல்லாமல் மற்றொருவ ருண்டாமோ
பத்தியுனக் கல்லோ பரமனே—நற்றவத்தைக்

காணுமடி யார்களென்றுங் காணுத பாவியென்றுந்
தோணுமல் நீபடைத்தாற் சொல்லுவதா—ராணுலும்

அடியவரைக் காக்கினும்நீ யல்லாமல் வேறுமொரு
கொடுமைவினைத் தாலுநீதான் கொற்றவனே—படியிசையில்

ஆனதுவு மன்றி யழிவதுவு முன்னையல்லாற்
போனதும்வே றுண்டோ புகழ்ந்திடுங்கால்—மானுமன்று

கலையை வெருட்டியிளங் காரிகையைக் கைப்பிடித்துத்
தலையுங்கா லுங்காட்டுந் தற்பரனே—நிலையமதில்

உள்ளதுக மெல்லா முருகியதி லேகனிந்து
வெள்ளமா றோட விளைந்தோனே—தெள்ளியதோர்

ஆற்றில் மணிவிளைய வம்மணியை நீயெடுத்துக்
கோத்துமிரு கண்ணிற் குறிப்பாகச்—சேர்த்தவுடன்

மறைந்தா யதற்குள் மறைந்ததறி யாமல்
நிறைந்தவிடந் தேடுவது நிச்சயமாய்க்—குறைந்ததனை

வைத்ததனை யென்சொல்வேன் மன்னேவுன் றன்பெருமை
வைத்ததெல்லா முன்னுடைய வண்மைகாண்—வைத்தபொருள்

கண்டதெல்லா முன்னுடைய காட்சிகா ணுதுவுங்
கொண்டதெல்லா முன்னுடைய கோலமே—பண்டுமுன்னுள்

ஆனதுவு நீயே யருந்துணைய தாயிருந்து
போனதுவு நீயேயென் புண்ணியனே—ஊனுயிர்க்குள்

ஒளித்த பராபரனே உள்ளமதி லுன்னைத்
தெளித்தோர்க ளுள்ளத் தெழுஞ்சுடரோ—வெளுத்ததனில்

நாலுவெளி யாகி நடுமூன்று மொன்றாகிக்
காலுடனே தூங்கவைத்த காரணனே—மேலுமந்த

எண்ணுத சோதி யெழுத்தா யுறைந்தோனே
உன்னுமெ லுன்னி லுதிப்பவனே—பன்னுங்கு

மாறியிடத் தேவருக்கும் வல்லோனே மாயமதாய்க்
கூறிவரு ஞானக் கொழுமுடியே—தேறியுனை

எண்ணுமல் வீணே யிருந்தேனிப் பூமிதனில்
உன்னற் குறைவிலதா வுத்தமனே—முன்னுளில்

வைத்த சொரூபமதில் வாகா யிடத்திலெனை
உற்றுமிரு கண்ணு லுறநோக்கி—முத்ததுக்குள்



வைத்திருந்தே யன்று வளமா யெனைப்பார்த்தே
உற்ற கிருபையரு ளோங்கினுய்—சித்திர
மயில்வேஷ மாயிருந்த வடிவி லெனையாக்கித்
துயிலொழிக்குஞ் சூட்சவருள் தோற்றினுய்—வெயில்பரவ
எக்கின் மரத்தி லிருத்தினு யல்லாமல்
முற்கா ரிருட்குள் முடித்தாயே—சிக்காத
கண்ணுடிக் குள்ளிலெனைக் காரணம தாயாக்கிக்
கண்ணு லெனைப்படைத்த காரணனே—உன்னுலே
ஒன்றுங் குறைவிலையென் னுத்தமனே யக்கடலில்
அன்று வலம்புரிக்குள் ளாக்கினுய்த்—தண்டாளம்

ஆக விருத்தி யதிலிருந்தி யானுனையும்
மோகமதாய்த் தேடவருள் முன்னுய்ப்—பாகமுடன்
இவ்வளவெல் லாம்வருத்தி யெனக்களித்த நாயகனே
செவ்விலுனைக் கண்டியான் தேடறியேன்—இவ்வுலகிற்
பொல்லாத மாயப் புவியிலே யான்பிறந்தே
எல்லாப் பொழுதுமே யீடழிந்து—வல்லமையைக்
காணவறி யாமற் கருத்தெல்லாந் தட்டழிந்தே
ஊணவறி யாதே யொடுங்கினேன்—தானவனே
கொஞ்சுகிளி மாதர் கொடுமைதனி லுள்ளாகிப்
பஞ்சொரிபோ லுள்ளம் பதறியே—யென்செய்வேன்

என்றுமன தெல்லா மிளகியுலை வாய்மெழுகாய்ப்
பண்டுநீ செய்த பதமறியாத்—தொண்டனுளம்
விறுதாவி லேதிரிந்து மெய்யெல்லாம் பொய்யாய்ப்
பெறுபே றறியாமற் பேதலித்தேன்—மறையோனே
எந்நாளு முள்ளிலெனை யின்பமுடன் வைத்திருந்த
பொன்னே கருணையருள் பூமானே—நின்னடியார்
எத்தனையோ பாவங்க ளிவ்வுலகிற் செய்தாலுஞ்
சுத்தமுனை யல்லாலோர் தூதுமுண்டோ—பற்றலர்கள்
தன்னே டிணங்கித் தவத்தைமறந் தானெனவே
இந்நா ளிழக்கிலிங்கே யாரெனக்கு—முன்னேனே

யாவுமே னெனவுதித்த நாயகனே கல்வனத்தில்
தேசுடராய் மாயத் திருவுளமாய்—ஊசிமுனை
போலே * யிருந்தாடும் பூமலரன் ளுளதனில்
கோலுமுனக் கென்று குறித்தோனே—சிலமுடன்

---

* விரித்தாடும் என்றும் பாடம்.

ஆலகபி தன்னை யதிகப் பெரும்புகழாய்
ஞாலமதி லாக்கிவைத்த நாயகனே—மூலம்

அறுநான்கு கொண்டா ருயிரெல்லாம் யோற்ற
உறுநான்கு சோதி யுறும்பொருளே—பெறுநான்கில்

லாஹூயென் றென்னுமந்த நாதாந்தச் சோதிதன்னை
லாஹூயென் றென்ன வெழுந்தோனே—லாஹூயதில்

க௦௦. லாஹூதாண் டாகுமதில் லாஹூமூன் றென்னுமதில்
லாஹூதூ லாஹூயெனும் நாயகனே—யோகிகளுக்

கரிய மணிவிளக்கா யாத்மாவுக் குள்ளிருந்தும்
உரியதொழி லாயிருந்த உத்தமனே—பெரியதொரு

பிஸ்மில்லா ஹூயென்று மெய்யாக அவ்வெழுத்தால்
பசுபதிபா சம்முதலாம் பரமனே—நசுமனுடன்

எல்லா மதிலமைத்த வேகனே யென்கோனே
வல்லோனே யுண்மை வளர்பொருளே—நல்லதொரு

ஹீர்றஹ்மா னென்று மிருந்த பெருஞ்சுடராய்
நிர்றஹீ மெனவு நேசமுற்று—நிர்றஹீம்

க௦ரு. அல்ஹம் ததிலிருந்த வாசைப் பெருஞ்சுடரைச்
செல்வமுற நன்றாகச் செப்பக்கேள்—கல்பதனில்

அர்றஹ்மா னுலா யடைந்தோனே யாகமுற
நிர்றஹீ மென்றெழுந்த நிற்பரமே—அர்றஹ்மான்

ஊடுறையுஞ் சோதி யுதிரா டுறைந்துபர
மூடு பராபரத்தின் மூட்டியே—தேடரிய

லாமை மறைத்துமுன் நல்ல அஹமதெனும்
பூவிலுறுந் தேனாய்ப் புரிந்தோனே—ஆவதனை

முன்னே யிருளில் முடிவிலே தான்தோன்றி
முன்னே யெழுத்துமுதன் முத்தியாய்—முன்னேநீ

கக௦. மீமை மறைத்து விளங்குஞ் சொரூபமதாய்
நாமம் அஹதெனவும் நாட்டினாய்—வாமமுறும்

அலிபைலா மூடாக்கி யரியதால் தன்னை
வலியலா மாக்கினவைத்த வல்லோனே—மெலிவறவே

அல்லா வெனும்பே ரதில்நிறைந்த வம்பரனே
சொல்லாத ஞானச் சுருதியே—எல்லைதனில்

மூன்றெழுத்துந் தானாய் முழுமுதலே ஹேயதனில்
தூண்டு மணிவிளக்கின் சூட்சமே—ஆண்டவனே



ஹூவென் றுயிரனைத்துங் கொண்டுநிற மாகியன்று
வாவென் றெழுந்தபொருள் தெள்ளமுதே—வாவெனுந்தான்

அன்றுநீ சத்தமிட் டலறும்போ தக்கினியாய்
ஒன்றாய் நடம்புரிந்த வுத்தமனே—வென்றிதருந்

துரியமுத லேயறிவே தோற்றமே ஞானத்
துரியமே காணாச் சுடர்விளக்கே—பெரியவனே

யில்லாஹூ யானதொரு நிர்மலமே நிட்களமே
எல்லாம் வெளிப்பட் டிருப்பவனே—யில்லாஹூ

றப்பில்ஆல மீனெனவும் நேசப்பொரு ளாயிருந்தும்
ஒப்பாவுக் கெட்டா துறுந்துணையே—மைப்புயலார்

சந்தம்.

அஹமது முஹம்மது அஹமது ஜெகமதில்
மகிழ்ந்துளம் நிறைந்திட வரந்தரந் தரும்படி
வனந்தனி லிருந்துநீ வருந்தியே யிருந்துநீ
மறைந்தொளி நிறைந்திட மலர்ந்ததும் நிமிர்ந்ததும்
வளைந்ததும் குழைந்ததும் வளர்ந்தருள் தெளிந்திட
வருந்திநீ யிருந்ததில் வளர்ந்தொளி சிறந்தபின்
வளர்ந்துரு வமுந்தியே வளர்ந்தர நிறைந்ததும்
மணியினுள் ளிருந்ததும் வடந்தனி லடர்ந்தபின்
மதியினுள் ளிருந்ததும் வருங்கலை சிறந்ததும்
வருந்தியே திரண்டதும் மலர்ந்ததில் நிறைந்ததும்
மனத்தினுள் ளிருந்ததும் வருஞ்சுரு விளைந்ததும்
மகிழ்ந்துற நினைந்ததும் மணங்கமழ்ந் திருந்ததும்
மலர்க்குகை புரிந்ததும் மலர்க்குளி ருந்ததும்
மனந்தனி லுறைந்ததும் மனத்தெளி வுறைந்ததும்
வடித்தருள் தெளித்ததும் வருத்தம தறுத்ததும்
வருங்கலை வெருண்டதும் வருந்ததி யறிந்ததும்
மதங்கொடு முகந்ததும் மதத்திரு ளினின்றதும்
வசங்கொடு சுகந்தர மகிழ்ந்தனை வுகொண்டிட
வருந்திய தெனக்குற வரும்படி கனிந்திட
வரந்தனையே நீயறிவதால்

மற்றொருவர் கண்டதிலை மற்றொருவ ருற்றதிலை
மற்றொருவ ருக்குமிலை மற்றொருவ ரற்றதிலை
மற்றொருவர் வேறுமிலையே

வைத்ததும திற்குள்வெகு வட்டமும திற்குள்வளர்
வட்டவிழி யும்மதிற்குளாய்

வட்டமதில் வட்டமுறு மைக்கணிதில் வக்காமு
மற்றவைகள் வைத்ததனுள்

வன்னியுமதிலே - மின்னுசூரியன் - வான்முமதிலே - கானுலாவிய
மாருதமதிலே - வாசமீறிய - வாயுவுமதிலே - ஓடுங்கீரொடு
மாதலம்திலே - நாரில்மேவிய - மாதவமதிலே - சோதியாகிய
வாண்மையுமதிலே - போதமீறிய - மாமணமதிலே - நீதிசேர்நெறி
மாமறையதிலே - வோதுகாரண - மாதவமதிலே - ஞானபோதக
மாதிருவதிலே - வாசமீறிய - மாமயலதிலே - சேருமோரொளி
மாமணியதிலே - நேமிமீதுறு - மாபுரியதிலே - பாகமாய்வரு
மாதொனியதிலே - நாதமேங்கிய - மாகுருவதிலே - கர்ணுநாதனே
மாவிழியதிலே - பார்வையாலுறு - மாசுகமதிலே - தோனுமேயருள்
மாரசமதுவே - யுண்டுதானுனே - மாகளிபெறவே - யன்புமேவிய
மாவடிவதிலே - மன்னுநேரொளி - மாமோனமதிலே - கருதியாகிய
மாஹாமீ மாமெவ் வுயிர்கள் யாவுமுறும்

வரமாமே - யுயிர் வடிவாமே - பொருள் வகையாமே - யிருள்
வனமாமே - வசம் நினைவாமே - மதி யருளாமே - மறை
யொளிவாமே - யருள் நிறைவாமே - வழி சுழியாமே - யடி
வளைவாமே - நடு வரமாமே - முடி மறைவாமே - முதல்-வரமாமே

வரமதிக கிருபையருள் தருகும்வடி வாகும்
மவுனமதி லுருகியொரு தொழிலில்வினை வாகும்
மதியருண னொடுகலையை தழுவிமரு வாகும்
மதிசுழியை யதிகமுனை தனில்வளைவ தாகும்
மலரதனி லொழுகிடுதேன் ரசவசன மாகும்
வளமதிக கிருபையரு ளுளில்வரவ தாகும்
மனமுமடி முடியுநடு வளையவர வாகும்

மாகுரு வனந்தமொரு நாதமுறை யாட
மாநாத கருவிதம தாயாண்ட வுயிரின்
மாகோடி தொழிலதிக மாகவுரு வாக
மாசொருப னந்தமுறை யாகவினை யாட
மாகோடி வேதமுடி வந்தமில் நின்றுட
மாசொருப கலையாக மங்கள்தொழி லாட
மாகோடி சரணமொடு புரணபிர ணவமா
மாயோக வனந்தத்வ கோடிகள் முடிக்க
மாகோடி ❋ மத்திய மானபே தனங்கள்

மாசக் கரமும தக்கரமு மாக
மாகோடி யண்டமும கண்டமது வாக
மாகோடி யந்தரதி க்கயன விழிகள்

---

ஒத்தியமான என்றாகும் பாடம்.



மாகோடி விற்பனசொ ரூபதவ மாகி
மாகோடி நேமியுறு மாவொளிவ தாகி
மாசற்ற தற்பரம தாகி மாசற்ற நிர்மலம தாகி
மாசற்ற நிட்களம தாகி மாசற்ற நிற்குணம தாகி
மாசற்ற நித்யகலை யாகி மாசற்ற நிற்சொருப மாகி
மாசற்ற நிற்பிரம மாகி மாசற்ற நிற்பரவெளி யாகி

மனமுருகிய கலையாகி வடிவுதரு கிருபையாகி
மறிவொடுபிர ணவமாகி மன்மதமும் முறவாகி
மலர்க்கருணை யருளாகி

வைத்து மனத்துள் ளிருத்தி நடத்திடு.
உத்தம சித்திவ ருத்தி யிருத்திடு
மற்றவை யற்றுயி ரண்டற வைத்திடு
மைக்கழல் முத்திரை யித்தம வக்கர
மைக்கரு ணைக்கொடு மன்புகழ் தந்திடு
மத்தம தற்றிட மாமன முற்றிடு
மாமவு னம்பெறின் மாசுக முற்றிட

வருநபி சரணமெ னுளமிசை பரவிட
வருவது தரவருள் புரிவது கடனென
மனமுனை நினைவுகொ டனுதினம் வருடிட
மயல்கொடு வடியவ னுலைமெழு கெனவர
மதிநினை வதுகிட னுனதரு ளெனவர
மதிமுக மனுநின முன்திரு முகமென
வளமுட னடியவ னுளமிசை நிறைதர
வருகலை யறிவுகள் பலவகை யுறைதர
மனுடர்க ளதின்வழி செயலுறு கதிபெற
மனமுனை நினைவுகொ டடியவர் மகிழ்பெற
முஹம்மது நபியிரு சரணமெ னுளமிசை
வளரதிபதிப மெனவென

துயிர்தனில் வருகுநன் மணியெனும்
அடியவ னுளமிசை தொனிதர
வருவது சிரமொடு நகைமுதல்
நிறைதர வரமருள் தருகுரு
வடிவெனும் வருபொரு ளதுவெனும்
வருமுட லதுவெனும் வருமுயி
ரதுவெனும் முஹம்மது நபிவடி
வதுவெனும் மாஞான மனபோதம்

வருமுனை முஹம்மது நபியெனும் வளமுறு
மனதுறு முயிர்முத னடுவுறு நிலைபெற

மாசற்று நின்றமன மாகியே போதம்
வைத்தபடி மாகிருபை முடிமுதலா யென்னுள்
வைத்தபடி ஆமீன்

கலிவெண்பா.

ஆமீனென் றுன்னை யடியேன் புகழ்கின்றேன்
ஆமீனு யுள்ளி லருள்செய்வாய்—ஆமீனை

௧௨௦. முற்றும் வழுவா துளத்தில் முத்திவர மீந்தெனக்குள்
முற்றுமுள மீதிலருள் முப்பொருளே—முற்றுமுனை

எண்ணுமல் நானு மிருந்தேன்நீ தான்பொறுப்பாய்
எண்ணுமல் வேறிருந்து மெண்ணுமோ—எந்நாளும்

நின்னுமந் தன்னை நினைக்குமடி யாருளத்தில்
நின்னுமந் தானாய் நிலைத்தோனே—நின்னுமம்

வேறொன் றிலேயே விளங்கவடி யேனுரைக்கக்
கூறுந் திருவருளைக் கூறக்கேள்—தேறில்

முச்சுடருங் கூடியன்று முப்பொருளா கும்போது
அச்சுடரி லொன்றுவெளி யாகியே—நிற்சிவமாய்

௧௨௫. மாயா சொரூபமதாய் வந்துநிற மாயிருந்தும்
ஓயாதென் னுள்ளத் துருவாகிக்—காயமதில்

மின்னுஞ் சுடர்மணியே வேந்தேயென் னுள்ளமதில்
என்னுந் திருவருளி லென்கோனே—யுன்னறிவைப்

பார்க்கும்பொழு தேயடியார் பாசம் வழுவாமற்
சேர்க்குங் குருவருளைச் சேர்த்தேதான்—ஊக்கமுற

ஆறிரண்டு நாலா யடர்ந்த திருவருளைக்
கூறிடினல் வேறாய்க் குறிக்குங்கால்—தேறுகின்ற

அப்பொருளை யுள்ளி லறிவா லறிந்தாக்கால்
தப்பாது ஞானந் தலைப்படுமே—செப்பமுடன்

௧௩௦. இந்தவகை சற்று மியலறியா வேழைதனைச்
சிந்தைதனில் நீமறக்கிற் செய்பவரார்—நின்றனுடன்

அடியேன் புகல்கின்றே னுதியேநீ யறிந்து
முடியா வருளை முடிவிப்பாய்—படிமீதில்

மாலிக்கி யௌமித்தி னுக வளர்ந்தோங்கிப்
பாலித் தருள்தருநற் பைந்தருவே—காலினுற

இய்யாக்க நஃபு தெனுங்கிருபை யாற்றெளிந்தே
இய்யாக்க நஃபுதெனு மின்பமுற—இய்யாக்க



நஃபுதெனுஞ் சொருபான நாயகனே யுன்னை
நஃபு தெனும்விழியால் நாடியே—நஃபுதெனுங்

௧௩௫. கண்ணாற் றெரிசித்துக் காணவெளி தோயிறையே
உன்னாற் சொருப மொளிவாகும்—உண்ணாத

மூலத்தூண் மேலே முடிவிலொரு காலேங்கி
மேலைத்தூண் காட்டிவரு மெய்யிறையே—மேலைத்தூண்

முட்டிநின்ற சோதி முழுமுதலைத் தானறிந்தே
இட்டமுட னுன்னை யிறைஞ்சுதற்கு—வட்டமதி

யந்தரத்தி லேதெளிவா யந்தரத்தி லேமறைவா
யந்தரத்தை யுன்னுளத்தி லாக்கியே—அந்தரத்தை

வெளியோ டுறவாக்கி மெய்யைவெளி யாக்கி
வெளியை மனமீதில் வெளியாக்கி—வெளியதனில்

௧௪௦. ஊன்றுஞ் சொரூப மொளிக்கும் வகையறிந்தே
ஊன்றுஞ் சொரூபமதி லூன்றியே—ஊன்றுமந்த

அட்சரத்தைப் பார்த்தவ் * வருளதனி லேவிளைந்தும்
அட்சரத்தைக் கண்ணு லருளாக்கி—யட்சரத்தை

மூடுஞ் சொருப முனையா லுறத்தூங்கி
மூடுஞ் சொருப முளிபார்த்து—மூடுமதில்

தூங்குகின்ற வேளைதனிற் சூட்சமெலாந் தோன்றுமதில்
தூங்குகின்ற வேளை சுகமாகுந்—தூங்குமதில்

அண்டரண்ட பூதலமு மக்கடலு மம்மலையு
மண்டலமூன் றோடு மதியுடனே—மண்டலந்தான்

௧௪௫. மேலுருவி மேலான மேல்வெளிமுப் பாழுமதில்
மேலுருவிக் காணு விளக்கொளிவாய்—மேலுருவி

யப்பாலே நின்ற தறுமூன்று மாறொளிவும்
அப்பால் நடனவொலி யானதுவும்—அப்பாலே

பாத மிரண்டும் பரவேத சாஸ்திரமும்
போதமதிலான புகழொளியும்—நீதமுடன்

அப்பு பிருதிவியு மானதே யும்வாய்வும்
மெய்ப்பான விண்ணும் வெளியொளியும்—ஒப்பமுடன்

தூங்குகின்ற வேளைதனில் தோன்றுமிவை யெல்லாந்தான்
ஆண்டோ னமைத்ததெல்லா மாகுங்காண்—மாண்டிடுகிற்

௧௫௦. காணுத தெல்லாங்கண் காணுமே காரணத்தில்
தோணுத தெல்லாந்தான் தோணுமே—தோணுமதில்

---

* இருளதனில் என்றுமொரு பாடம்.

அந்த முடிவுமந்த மில்லாத வம்முடிவுஞ்
சிந்தைதனில் நன்ருய்த் தெளியுமே—சிந்தைதனில்

வைத்ததெல்லாம் நீயே வளர்பொருளே மாதவமே
வைத்ததெல்லாமுன்னையல்லால்வரம்வேருே—கைத்ததெல்லாம்

நீயே மனத்துள் நிறைந்தவனும் நீயாகும்
நீயே யமைத்துவர நிச்சயமாய்—நீகபூல்செய்

ஒஇய்யாக்க நஸ்தகீனென் றுன்றன்றிருப் பாதம்ரண்டும்
ஒஇய்யாக்க நஸ்தகீனென் றுள்ளினுள்ளே—ஒஇய்யாக்க

கருரு. நஸ்தகீ னென்னுமுன் ஞதாந்தச் சோதியருள்
நஸ்தகீ னென்னுமுன் ஞட்டமதில்—நஸ்தகீன்

என்றதிரு நாட்டமதி லென்னையுற வாக்கியருள்
நன்றிதர வந்துதவும் நாயகனே—நன்றிதரும்

அறிவே பொருளே அகமே மணிவிளக்கே
நெறியே குருமொழியின் நிச்சயமே—நெறிபரவும்

அன்பே கருணை யருளா ரமுதேவுன்
முன்பே ரொளியான முப்பொருளே—முன்பேர்

ஒளியிற் சொருபவொளி யுத்தமனே யுட்பரனே
ஒளிவையுரு வாக்கிவரு முட்பொருளே—யொளிவதனை

கசுo. வைத்ததெல்லா முன்னுடைய மார்க்கமே மாசோதி
வைத்ததெல்லா முன்னுடைய மாகிருபை—வைத்ததெல்லாம்

என்னசெய்வே னென்னுளத்தி னிந்திரமா யத்தொழிலே
என்னசெய்வே ஞதத் திருவொளிவே—என்னசெய்வேன்

பூவுலகும் வானுலகும் புகழ்ந்த திருவுலகும்
பாவிதமாய் நிற்கும் பழம்பொருளே—பாவிதமாய்

சரசரண மோகத் தவமேமெய் யோடுறையுஞ்
சரசரண மோகத் தவப்பொருளே—சரசரணம்

அதிர்தொனியைக் காய மதிலழக தாயுறநல்
அதிர்தொனியைச் சித்திரம தாகவே—அதிர்தொனியை

கசுரு. உறுதியா யுள்ளில் லுருகியெடுத் தோர்கள்
உறுதியே யன்பி லுறுந்துணையே—உறுதிதரும்

மெய்ஞ்ஞான முத்தே விளக்கே விளக்கொளியே
மெய்ஞ்ஞான வித்தே விளக்கொளியே—மெய்ஞ்ஞானம்



நாலு பரிசதிடும் நல்லவடி யார்க்குதவும்
நாலுங் கிருபையருள் நாயகனே—நாலுமதில்

உன்னிவரு வோர்க ளுளத்தில் நடம்புரியும்
உன்னிவரு வோருளத்தி லுட்பரவும்—உன்னுமதில்

மாறுந்தொழிலாகி வரிரண்டு மொன்ருகி
மாறி யிருந்த வகைகேளாய்—மாறுவது

களo. கீழ்மேல் தலையறிவாய்க் கெம்பித்துள் ளூடாக்கிக்
கீழ்மேல் தலையறிவாய்க் கிண்டியே—கீழ்மேல்

தலைகடந்து கால்கடந்து தாண்டிநடு வாகித்
தலைகால் நடுவறிந்து தாண்டியே—தலைகாலும்

முறுக்கியறுத் தூடாக்கி முத்திதனைப் பார்க்கில்
முறுக்கியுருள் நேரே மொழியுங்கால்—முறுக்கியதில்

முகக்கண் ணறுத்தனலை மூட்டியகக் கண்மீதில்
முகக்கண் ணடைத்ததனில் முத்தியாய்—முகக்கணதை

அகக்கண்ண தாய்வைத் தறிந்தபெரி யோர்கள்
அகக்கண்விழி யாற்றெரியு மம்பரனே—அகக்கணதில்

களரு. இஹ்திநஸ்ஸி ருத்தலெனு மின்பப் பெரும்பொருளே
இஹ்தியெனு முள்ளி லிதமாக—இஹ்தியெனு

முன்னின்றே பார்க்க முழுதும்வடி வாயிருந்து
முன்னின்றே பார்க்கவரு முச்சுடரே—முன்னின்றே

வடிவி லதிகவொளி மாசொருப மாயிருந்து
வடிவி லதிகவொளி வாக்கினுய்—வடிவதனில்

எல்லா வுயிர்களுக்கு மிந்தவகை சூறத்தெனும்
எல்லா வகையுள் ளிசைந்தோனே—யெல்லாந்

திரட்டிவிளங் காய்போற் சிறியவனு வாக்கியதை
திரட்டியுளி லீந்த செயப்பொருளே—திரட்டியதை

கஅo. இஹ்திநஸ்ஸி ருத்தலென் றியம்புமடி யார்க்கதனை
இஹ்திநஸ்ஸி ருத்தலென வீந்தோனே—இஹ்தி

நஸ்ஸிருத்த லென்றே நடுநிலையாய் நிற்பவர்க்குள்
நஸ்ஸிருத்தல் முஸ்தகீமருளும் நாயகனே—நஸ்ஸிருத்தல்

முஸ்தகீ மென்றதிரு மூலமணி மந்திரத்தை
முஸ்தகீ மென்றுணர்வோர் முன்னினின்று—முஸ்தகீம்

ஆக வுயிரெவையு மந்தவடி யார்க்கருளும்
ஆக மெனக்கருளும் ஆண்டவனே—ஆகமதை

கேட்டபடி யாகக் கிருபையுட னேகொடுக்கும்
கேட்டபடி யுற்றருளுங் கேள்வியே—கேட்டபடி

கஅரு. தந்தா யெனக்குமொரு தானவனே நீயெனக்குள்
வந்தாய் வசன மறவாமல்—உன்றனருள்

எறும்புகடை யானைமுதல் எல்லா வுயிர்க்கும்
உறும்படி நீபரவு முற்பனமே—உறும்படிதான்

நினைத்தவர்க ளுள்ளமதில் நின்றோனே நிச்சயனே
நினைத்தவர்க ளுள்ளுறையும் நேயனே—நினைத்தவருள்

மாறாத சோதி மணிவிளக்கே மாமணியே
மாறாத ஞான மகிழ்ச்சியே—மாறாமல்

வெள்ளியையுரு வாக்கி விளைவிலெழுந் துள்ளில்
வெளியுருவாய் நின்றருளும் வேந்தனே—வெளியுருவாய்

ககூ0. ஆடை சலமா யவனிபத மாயிருந்து
கூடுகின்ற வாயு குறிமூச்சாய்—நாடுமதில்

வெளியக் கினியாய் விளங்கியதோ ரவ்வுருவங்
தெளிவடக்குத் தெற்கதனிற் சேகரமாய்—ஒளிபரவக்

கீழ்முகமாய் மேல்முதுகாய்க் கிருபையுடன் கண்டவர்க்குக்
கீழ்முகமு மேல்முதுகு மானோனே—கீழ்மேலாய்

அம்பரமே தானுருவா யானதுவை யுள்ளமிசை
யம்பரமே யம்மனத்தி லாக்கியே—அம்பரத்தின்

முடிகீழ் முறையான மூதறிவின் பாதமதை
முடிகீழ் பிருதிவியில் மூட்டியே—முடிகீழாய்

ககூரு. உடைசலமாய் நின்ற உரிமைதனை யுள்ளுருக்கி
யுடைசலமா மவ்வெழுத்தை யுள்ளமதில்—உடைசலத்தை

மேவுகின்ற வாயு விளங்குமூச் சானதனை
மேவுசரத் தோடறிவாய் மேவியே—மேவுசரம்

அடங்கா விழிதனக் கையக்கிய மானதனை
அடங்காத் தியானவிழி யாற்பார்வை—அடங்குமதில்

தெற்குவடக் காயிருந்த சித்திகர மானதனைத்
தெற்குவடக் காயிருத்திச் சேரனுமாய்க்—தெற்குவடக்

கொட்டுமுகங் கீழுமுயர் வாய்முதுகு மேற்கானல்
ஓட்டதனை மெய்க்குருவா லுன்னியே—ஓட்டியபின்



உ00. இந்தவகை யாயிருந்த யின்பத் திருச்சொருபை
இந்தவகை யாய்வணங்கி யேத்தியே—இந்தவகை

காணுமடி யாருளத்திற் கர்மியமெல் லாமறுத்துக்
காணுமவர்க் கிப்படியே காட்டினாய்—காணுமவர்

தானு யவரோடு தற்சொருப மானாயே
தேனே மதியமுதே சிற்பரனே—கோனான

ஆதியே சோதி யனாதியே யிப்படிநீ
ஆதியே யென்முன்வரு மாண்டவனே—ஆதியருள்

சொருபமிது போலாகித் தோன்றுவா யெந்தன்முனே
சொருபம்போ லென்னையுந்தான் சூட்சிப்பாய்—சொருபமதுள்

உ0ரு. விருத்தல்ல தீனவெனு முன்னைப்புகழ்ந் தோர்களுக்கு
விருத்தவெளி தாகிவருந் தேனமுதே—விருத்தலது

மயிரினுமோர் கூர்மை மகாநேர்மை யாக
மயிர்முனையை ரண்டு வகையாக்கி—மயிர்முனையுட்

கூறுஞ் சிறுத்தலெனுங் குறிநாசிக் குள்ளிருக்குங்
கூறுகின்ற மாலைக் கொடுமுடியே—கூறுமதில்

அக்கினிசொ ரூபமதா யனல்பரவி மோதுமதை
அக்கினிபோ லாகவரு மாரணனே—அக்கினியைக்

கடந்திந்தப் பாலக் கதிர்முனையுந் தான்கடந்து
கடந்துநின்ற சூட்சமருள் காரணனே—கடந்துநின்ற

உக0. அடியா ருடனென்னையு மாதியே நீசேர்ப்பாய்
அடியா ருடன்கூட்டென் னகவிளக்கே—அடியார்கள்

உன்னைத்தெரி சிப்பார்க ளுன்னை யறியேனான்
உன்னைத்தெரி சிக்கும்வகை யூன்றறியேன்—உன்னறிவில்

என்னைவழு வாதவர்க ளோடே யிதமாக்கி
என்னைவழு வாதருளு மென்கோனே—என்னுளத்தைக்

காணமற் றானே கலங்குகிறேன் கற்பகமே
காணும லுள்ளங் கரைகரைந்து—காணுகின்ற

பெரியோ ருடனென்னையும் பேதகமில் லாமலங்கண்
பெரியோ ருடன்கூட்டென் பெரியவனே—பெரியோர்கள்

உகரு. பாதந் தொழுத பலன்தருவாய் பன்முறையே
பாதந் தொழுத பயலெனவே—பாதமதைத்

தந்துவினை யாடியுள்ளில் தற்பரம தாயிருந்து
தந்துவினை யாடுந் தயாபரனே—தந்தருளில்

அன்அம்த அலேகிமெனு மாசைப்பெ ருங்கிருபை
அன்அம்த அலேகிமெனு மக்கடலில்—அன்அம்த
அலேகிமெனுந் திரையெடுத் தடித்து வெகுமுழக்காய்
அலேகிமெனு மோசையிடு மக்கடலில்—அலேகிமெனும்
வணங்குமடி யாருளத்தில் மாகடலின் திரையெனவே
வணங்குமடி யாருளத்தில் வந்தோனே—வணங்கவருள்

௨௨0. ஆகமங்கள் வேத மதிசாஸ்திர நூன்முறையும்
ஆகமநூல் வேதமுறை யாமெவையும்—ஆகமுடன்
ஆழிதா னுகியதி லத்திரைய தாயடித்தே
ஆழிபோற் பொங்கிவரு மாசையே—ஆழிதனை
உண்டு திறமாகி யுன்னினைவி லேயுறவாய்
உண்டுகொள்ளு வோர்க்கருளு முள்ளருளே—உண்டுகொண்டு
கய்ரில்மக் லூபியென்று முன்னைத் தொழுவோர்களுக்கு
கய்ரில்மக் லூபியென்று மொன்றாய்—கய்ரில்
மகுலூபி யென்ற வசனப்ர காசம்
மகுலூபி யாகவரும் வல்லோனே—மகுலூபி

௨௨௫. என்று வனமீதி லிசைந்தநகத் தாயிருந்து
கொண்டு படைத்தவுயிர் கூறக்கேள்—முண்டகத்துள்
வைத்ததுவு மந்த மகுலூபி யென்றசொல்லால்
வைத்ததுவு மந்தவுனை யார்க்கமே—வைத்தவுனை
மக்லூபி யென்றமுக மாறாய்ச் சுடர்நான்காய்
மக்லூபி யென்று வருஞ்சொருபம்—மக்லூபி
மூன்று சொருபாய் முடிந்ததுமொன் றாயிருந்து
மூன்றுமக் லூபியென்று முடிந்தசொலால்—மூன்றுமொன்றாய்
அலேஹிம்வலல் லால்லீனென்று ஷிக்குமக்ஷூக் காகி
அலேஹிம்வலல் லால்லீன்யிஷ்க தானேனே—அலேஹிம்

௨௩0. வலல்லாவெ னுந்தொழிலே யுற்றமன்கூ ஸதுதனிலே
வலல்லாலீன் மஃகூஉலி லுற்றுறவாய்—வலல்லால்லீன்
என்றுமன்கூ லின்முதலி றைஞ்சுமஃ கூலின்முதல்
ஒன்றுபடக் காட்டிவரு முட்கூட்டோ—ஒன்றுபடக்
காட்டுங்கிரு பையெனக்குக் காரணனே நீயருள்வாய்
காட்டுங் கிருபையருள் காரணனே—காட்டுகின்ற
மன்கூலி லானவுண்மை மஃகூலி லானவகை
இன்குறூஸுக் குள்ளாக்கு மேகனே—யின்குறூஸ்



அமைத்தாய் பலவுயிரு ளாண்டமைதுக் குள்ளிருந்தே
அமைத்த குறூஸிலறி வானவனே—அமைத்துவைத்த

௨௩௫. உன்குறூஸை யிக்குறூஸி லொன்றுபடக் காட்டியருள்
உன்குறூஸை யிக்குறூஸி லொன்றாக—நின்கருணை
அஹ்மதிற் ஸூல்நபிக் காக்கினே னென்று
ஜெகமகிழ வேயுரைக்குஞ் சீமானே—முஹம்மதுக்கு
கொடுத்தவரி சைப்பேறுங் கூறுமொழி மார்களுக்கு
கொடுத்ததவப் பேறுங் குதறத்தையுங்—கொடுத்தபடி
என்றனக்கு நீயருள்வா யென்றனைப்போ லுன்றனுடன்
வந்திரப்ப வர்க்குமருள் வல்லோனே—அந்தவருள்
எல்லா வொலிமார்க்கு மின்பமுட னேகொடுத்த
வல்லமையும் பேறும் பறக்கத்துடன்—நல்லதொரு

௨௪0. அரிய விலாயத்து மவர்க்களித்த வாழ்வுகளும்
உரியநபி மார்க்களித்த உண்மைகளுங்—கதியுடனே
அஹ்மதிற ஸூல்க்களித்த வதிகப்பெரும் புகழுஞ்
ஜெகமிலிற ஸூலருகில் சேர்வையுறும்—அகமகிழ
நாலுபே ருக்களித்த நலவும் பெருவாழ்வும்
கோலுமதி ராசதமும் குறிக்கவொண்ணு—மாலுடைய
முஹயித்தீன் தனக்களித்த முறையும் பெருதவமுஞ்
செகத்திலொலி மார்க்களித்த திருவருளு—மகத்துவமாய்
ஒன்றாய்த் திரட்டியெல்லா மொன்றா யெனக்கருளும்
ஒன்றாய்த் தருங்கிருபை யுத்தமனே—ஒன்றெனவே

௨௪௫. தேடியுனைக் கேட்டவர்க்குச் செப்பமுடனே கொடுப்பாய்
நாடுமடி யார்க்கருளும் நாயகனே—கூடுதற்கு
ஒன்றுபட வேயெனக்கு முத்தமனே நீயருள்வாய்
ஒன்று படவருள்வ லல்லால்லீன்—ஒன்றுபட
ஆமீனெ னக்கருள்வாய் ஆதியே கேட்டதெல்லாம்
ஆமீனெ னக்கருள்வாய் ஆதியே—ஆமீனே
ஆமீ னுனைநினைந்தி யான்கேட்ட தெல்லாந்தான்
ஆமீ னுளத்திலிறை வாக்கு. ஆமீன்.

## சந்தம்.

அண்டபகி ரண்டமுட னந்தரவி சும்புடனே
அங்கமை புரிந்தவகை யாவுமே
அங்கமை புரிந்தவகை யாவுமே

அந்தநல்வி னைந்தொழுகு நந்திவடி வாகுகுரு
அங்கமை சிறந்தவுயிர் யாவுமே
அங்கமை சிறந்தவுயிர் யாவுமே

அந்தியில்மு டிந்துருவி னைந்ததில்ந டம்புரிய
அங்குநீ யிருந்ததிற மாகுமே
அங்குநீ யிருந்ததிற மாகுமே

அஞ்சலஞ்ச லென்றுபர மம்பரமி லேமறைவும்
அங்கநீள் புரிந்தும்வரு மாதியே
அங்கநீள் புரிந்தும்வரு மாதியே

அஞ்சுபஞ்ச பூதமதில் அஞ்சில்நடு வாயினைந்தே
அஞ்சிலொன்ற தாயிருந்த வாதியே
அஞ்சிலொன்ற தாயிருந்த வாதியே

அங்கெழு சிரங்களொடு பொங்குதிரு நாமமதில்
அங்குறவ மர்ந்துவரு மாதியே
அங்குறவ மர்ந்துவரு மாதியே

அவ்விருளில் நின்றுமுடி யவ்விருளில் வந்துதிறம்
அவ்விருளி லஞ்சுசுழி யானவா
அவ்விருளி லஞ்சுசுழி யானவா

அந்தமுறை யங்குருவி யங்குதிருத் தூக்கமதில்
அங்குளனி லஞ்சுசுழி யானவா
அங்குளனி லஞ்சுசுழி யானவா

அவ்வுயிர் படைத்ததிக வவ்வுயிரி னுள்ளினுழைந்
தவ்வுயிர கத்துள்மறை வானவா
அவ்வுயிர கத்துள்மறை வானவா

அவ்வுயிரை முன்பரவ சப்புசப்ப தாய்ப்பிரித்தே
அங்குமஹூ மூதுவிழி யாலெதான்
அங்குமஹூ மூதுவிழி யாலெதான்

அவ்வுயிரை நன்றிகொடு பார்வைதிற மாகவர
அவ்வுயிர் தெளிந்துவிழி யாலெதான்
அவ்வுயிர் தெளிந்துவிழி யாலெதான்

அவ்வுயிரை ஆலநபி நோக்கியதி னூடுவர
அவ்வுயிரு மந்நபியை நோக்கியே
அவ்வுயிரு மந்நபியை நோக்கியே

அவ்வுயிரி லங்கவரைக் கண்டுதெளி வானவுயிர்
அங்கவரை யிங்குவர நோக்குமே
அங்கவரை யிங்குவர நோக்குமே



அந்தவொளி யங்கிலொரு தங்குபுரிக் குள்ளவரை
அங்குபுரிக் குள்மணிய தாக்கியே
அங்குபுரிக் குள்மணிய தாக்கியே

அங்குபுரிக் குள்ளிலுறு மந்தரத் தொனிக்குள்வரும்
அந்தரத்தொனி யோடுற வாக்கியே
அந்தரத்தொனி யோடுற வாக்கியே

அங்கதிர வத்தொனிகொ டங்குவர வவ்வுயிர்கள்
அத்தரள முத்தைவளை வாக்கியே
அத்தரள முத்தைவளை வாக்கியே

அத்தரள முத்தையிரு கண்களொடு கண்டவர்கள்
அங்குவர விங்குதிற மாகுமே
அங்குவர விங்குதிற மாகுமே

அத்தவம தத்தொடுநி றைத்துளிலு றைத்திடவும்
அத்தரள முத்தின்வடி வாக்கினுய்
அத்தரள முத்தின்வடி வாக்கினுய்

அத்தரள முத்தினிறை வுற்றவுயி ரெவ்வையும்
அமைத்ததர ளத்தினிறை வாக்கினுய்
அமைத்ததர ளத்தினிறை வாக்கினுய்

அக்கரத வக்கரமொ டுட்கரம தானெவையும்
அக்கரம சக்கரம தானதுள்
அக்கரம சக்கரம தானதுள்

அட்டதிசை முட்டியொரு வட்டமிடு மச்சுழியில்
ஆனவுயி ரெவ்வையும தானதுள்
ஆனவுயி ரெவ்வையும தானதுள்

அட்டதொழில் திட்டமுட னெட்டுபர மாமெவையும்
அட்டதிரு வெட்டெழுத்துள் ளாகையால்
அட்டதிரு வெட்டெழுத்துள் ளாகையால்

அப்படி யழைத்துவரு மவ்வுயிர்க்குள் முங்கியதில்
அந்தர விசும்புவெளி மேவவே
அந்தர விசும்புவெளி மேவவே

அப்படி யமைத்ததிற னப்படியென் னுள்ளமதில்
அப்படி யெழுந்தருளு மேவவே
அப்படி யெழுந்தருளு மேவவே

அப்படி நடத்தியெனை யப்படியே யாண்டருளும்
அப்படித் தெளித்தறஹூ மானும்நீ
அப்படித் தெளித்தறஹூ மானும்நீ

அட்சர சரத்தொனியென் னங்கமதில் தங்கவரும்
அட்சர சரத்தில்றஹூ மானும்நீ
அட்சர சரத்தில்றஹூ மானும்நீ

அற்றதை வருத்தியுளில் வைத்தெனைத் தெளித்தருளும்
அற்றதை வருத்திடும் இலாகிநீ
அற்றதை வருத்திடும் இலாகிநீ

அப்பொடு பரப்புயிர் பரப்பிரம மாகிவரும்
அப்பர முளத்திலருள் லாகிநீ
அப்பர முளத்திலருள் லாகிநீ

அன்னவடி வாகியென்முன் வுன்னுதிற மாகிவரும்
அச்சொருப நந்திமவு ஜூதுநீ
அச்சொருப நந்திமவு ஜூதுநீ

அன்புகொண் டமைத்ததெலா முன்கிருபை யாற்றெளிய
அன்புட னெனக்குள்மவு ஜூதுநீ
அன்புட னெனக்குள்மவு ஜூதுநீ

ஐயமற மையல்வெள்ள மானதுவு முள்ளில்வர
அவ்வுயிர் நடங்கொள்றப்பில் ஆலமீன்
அவ்வுயிர் நடங்கொள்றப்பில் ஆலமீன்

அந்தவன மீதிலேய மைத்ததையெல் லாமெனக்குள்
ஆக்கியருள் தாயாறப்பில் ஆலமீன்
ஆக்கியருள் தாயாறப்பில் ஆலமீன்

அதிலே திருத்தூக்க மானதும் அதிலே திருவோசை யானதும்
அதிலே யுயிர்யாவு மானதும் அதிலே மஹ்மூத ரானதும்
ஆகவிவை யானதெல் லாமுன் தூக்கமில்
ஆகவமை வாகிவரு மேவுன் தூக்கமில்
ஆனதொழி லென்னுளமி லேவரும்படி
ஆனவனே நீகிருபை செய்தரும்படி
ஆகவுள மீதில்வரு வாய்நடம்புரி
ஆழிதனி லானபுரி யேதிடங்கொடு
ஆனமணி யானவடி வாயிருந்ததென்
ஆருயிரின் மீதிலருள் வாயிளைத்ததில்
ஆன்தொனீ யூடுறைகு வாயதிர்ந்திடும்
ஆனவடி யேன்சரமி லேநிறைந்திட
ஆனதொனி யையருள் வாய்சரந்தனில்
ஆருடனே ராறுமதி லேகழிந்திடும்
ஆறுலென் னுள்ளமதி லேதெளிந்திட
ஆதிறஹ்மா னேயருள் வாய்நலந்தரும்



ஆதரவ தானபடி யேபழம்பொருள்
ஆனதடி யேற்கருள் வாயகந்தனில்

மெய்யே தெளிந்துவர வையா பதந்தாவுன்
விழியையென் விழியாக்கி - யதிலுற
விளைவதை யிளைவாக்கி

வெகுசர முடன்வரு சரமதை யடியவன்
சரமதில் நினைவாக்கி - யடியவன்
சரமதில் நினைவாக்கி

வெகுதொனி பெறவுன திருசெவி யடியவன்
செவிதனி லுறவாக்கி - யடியவன்
செவிதனி லுறவாக்கி

வெகுபொருள் தருமுன ததிமறை நாவதை
அடியவன் நாவாக்கி - நாவதை
அடியவன் நாவாக்கி

வெகுபதி மறையெனு மதுதனக் களவிடா
தகமென தகமாக்கி - யளவிடா
தகமென தகமாக்கி

வெகுபொருள் தருமதி சுகஞான மனமதை
அடியவன் மனமாக்கி - மனமதை
அடியவன் மனமாக்கி

வெகுகர மதுதனை யடியவன் கரமாய்
வெகுநடம் புரிகழ லடியவன் கழலாய்
விளைவருள் பொருளாய் நளினமின் குழையாய்

வேதப்பிரகாச சொரூபமதாக
நாதச்சரோருக ரூபமதாக

நாதாவிப்படி யருள்வாய் நாயடியேற்கு வழுவா தருள்புரிவாய்
நாயடியேன் றனையாண்ட நாதா நாதாவெனையாண்ட நாதா

நாதாந்த சொருபமருள் நாதா
நாதாந்த வேதமருள் நாதா
நாதாந்த சமையமருள் நாதா
நாதாந்த வெளியையருள் நாதா
நாதாந்த மாகவருள் நாதா

நாதாந்த நிர்மல நாதாந்த நிட்கள
நாதாந்த நிற்சிவ நாதாந்த நித்திய
நாதாந்த நிச்சய நாதாந்த நின்மய

நாதாந்த நிற்குண நாதாந்த நிற்பன
நாதாந்த நிற்பர நாதாந்த நாதா

நிற்சுருதி நிற்கருளி
நிற்பனம் நிர்மயம்

நினைவுசுழி தனிலருளும் அதிகசுழி யுளிலருளும்
அதிகரதி சுகமருளும் அதிகரச வமுதருளும்

ஆதியே சோதியே

அடியேன் கேட்டதெல்லாம் அருள்புரிவாய்
அடிமைதனை வழுவாம லாள்வாய்

ஆதி சோதி அம்மா அப்பா

அதிசொருப ஆதி
நிதிசொருப மாக

அமுதகலை குமுதவொளி யாக
அருணனொளி புரணமதி யாக
அகரசொரு புகரவடி வாக
அடிமுடியும் நடுவிலுற வாக
அடிமையுளி லருள்புரிய ஆமீன்
யாறப்பில் ஆலமீன்.

ஞானப்பஃறொடை

முற்றுப்பெற்றது.

ஹா ா மீ ம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஞான அம்மானை.

## பாயிரம்.

### காப்பு.

அறுசீர்க்கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

குருவினு லருள்மெய்ஞ் ஞானக் குறிப்பதை யடியே னுள்ளில்
திருவினு னுரைக்க வென்றே திருமல ரலர்ந்த தேனில்
மருவிய வுயிர்கட் கெல்லாம் வரமருள் வடிவ தான
அருவரு விறகு வல்லா அடிமுடி காப்ப தாமே (க)

கருவினி லமைத்த வாதி கருணையை யடியே னுன்னிக்
குருமுடி யடியி னுமங் குறைவிலா தடியே னின்றன்
மருவிய தொழிலில் ஞான வகைதனை யருளா லுன்னித்
திருவருள் முறைமூன் றுன ஜெம்மலைச் செப்ப லாமே. (உ)

கண்ணினுக் கடங்கான் மெய்யிற் கருத்தினுற் றெளிந்து பார்க்கில்
விண்ணினுக் கடங்கா னந்த வெளிக்குளே யிருந்த கோனை
முன்னிலைக் குருவி னுக முறையருள் மூன்றம் மானை
எண்ணியுள் மனத்தாற் கூற விறைநபி காப்ப தாமே. (ங)

அறுசீர்ச் சந்தவிருத்தம்.

மனதினெலி பெருகுகடல் மலைமகர
மிவைமினிடி வகைகள் யாவும்
களமுனது மவுனமதில் கருணைதப்பா
மலேயமைத்துக் காத்த கோனை
இனமனதி லிருந் துறைந்தே யேகவஸ்தா
யெறும்புகடை யெவ்வகைக்கு மான
மனமுனைக்கண் டல்லாமல் வணங்கவே
நிலைக்குருவின் வடிவ தாமே. (ச)

### கலிவிருத்தம்.

முத்திரைப் பொருள் முடிவினில் முச்சுடராகி
வத்துவா யொரு பொருளென வருந்திடுமோனே
சித்தியாயுன தருளினிற் சிறந்திடு மிறகுல்
பத்தியாயரு கிருந்திடும் நால்வரைப் பணிவாம். (ரு)

ஆதிநாயகன் அறுஷினி லருள்கரம் நீட்டிப்
பாதியாயமு தெடுத்தவ ருருந்திடும் பதத்தோர்
சோதியாந்துணை யின்றிடு மதலைக ளிருவர்
போதமாமவர் மலர்ப்பதஞ் சிரசினிற் புனைவாம். (சு)

### அறுசீர்த் தாழிசை.

வரிசை யருளாற் பெரியோரும் மவுன வுவைஸுல் கற்னிபதம்
பிரிய முடனே யருள்பெருகும் பெரியோ னருளா லுதித்திருந்த
பரிசின் படியே குருவான பரஞ்சேர் ஹல்லா ஜவர்பதமும்
உரிசை யுடனென் னுளமதனி லுக்ந்தே னமுதா யுண்டேனே (எ)

மறுவொன் றணுகா திறையவன்றன் வரிசைஅ்றுஷிற் றுயின் றிருந்தோர்
முறுவலான ஒலிகள் பொன்னின் முடிமே லிருக்கும் முதியோராம்
அறுச மயமுங் கடந்துநின்றே யடங்கா திறைவன் றனைநாளும்
குறுசி லிறையைத் தினம்பார்க்குங் குதுபுல் அஃலம் பதம்பணிவாம். ()

---

## அவையடக்கம்.

---

### அறுசீர்க்கழில் நெடிலடி யாசிரியவிருத்தம்.

வல்லகுரு கிருபையினு லம்மானை தனையடியேன் வழுத்தும் பாடல்
எல்லவரு மிசைத்ததென்ன மாணிக்கக் கற்றனைக்கு மிசையா யொப்புக்
கல்லதனை வைத்ததுபோ லடியேனுட் கருணையினுற் கவல வென்று
நல்லவரோ யிதன்பிழையைத் தீர்த்தருள்வீ ரெந்நாளும் நவிலத் தானே()

தமிழறியே னுரையறியேன் பொருளறியேன்
சிறியவனுன் தரணி மீதிற்
குமிழுறையு மமுதமதைக் குடித்திருந்து
மெய்க்குருவின் குறியைப் பார்த்துச்
சிமிழ்மலர்த்தே னமுதமுண்டு திரண்டுவரு
மம்மானை சிறந்து கூறத்
தமிழறிந்த பெரியோர்க ளிதன்பிழையைத்
தீர்ப்பீர்தள் ளாமற் றுனே. (க0)



மறித்திருந்த கலைநாலின் வழியுமதி
னேடுநால் வகையுங் காலில்
சுருட்டெழுந்து சுழித்திருந்த சுழியிதமு
மதன்பொருளுந் தொந்த மாக
அறுத்திருந்து வெளியில்வந்தே யமைந்ததுவு
முனைநான்கி னருளுந் தூங்குங்
குறித்திருந்த குறிப்புமதில் குறிக்கவரு
ளம்மானை கூற லாமே. (கக)

---

## ஆக்கியோர்.

### எண்சீர்க்கழில் நெடிலடி யாசிரியவிருத்தம்.

கூறிடவே சோனகர் குறிதென் கோடை
கொடும்புலியும் பசுவுங்கூ டித்திடங்கொண் டோங்கும்
ஆறிடையும் நாலிடையும் அருட்புராண வேதம்
ஆய்ந்துபதி னென்பாஷை யறிந்துணர்ந்த வல்லோர்
ஊறும்பல் கிதாபினுரை யுணர்வாக வுண்டோர்
ஒலிசெய்கு உதுமாலெப்பை யாலிமருள் வரத்தால்
தேறிவருஞ் செய்குமன்னுன் திருவருளில் உதித்த
செய்குஅபூ பக்கர்இருப் பாலனுரை யாமே. (கஉ)

### அறுசீர்ச்சந்தவிருத்தம்.

உத்தம வேதபு ராணக லைக்கொரு வுற்பன மானதுரன்
பத்திய ருள்குரு முத்திரை யானது பாய்ந்துறைக் கும்பயலாம்
வத்துவை யுள்ளிலு•கந்துகு டித்திடும் வல்லவ னம்மானை
சித்திய ளாக்கமு கியித்தீன் மனுக்குமு தலியான் செப்புவனே. (கங)

செப்புவன் ஷெய்குமு கியித்தீன் மனுக்குமு தலியா னுனைபைதல்
நற்புகழ் பெற்றிடும் நற்பெரி யோர்கள் நலத்துறு மம்மானை
சொற்பிழை தீர்த்துளு கந்திடு வாரெனுந் தொந்தம தானகுரு
கற்பனைச் சொற்படி கட்டனை யம்மானை கட்டுரை செய்வாமே. (கச)

---

## நூல்.

### கலித்தாழிசை.

ஏறும்புகடை யானைமுத லெல்லா வகையுமலர்
வுறும்புகழாம் நம்மிறசூ லொளிவுகா ணம்மானை
உறும்புகழாம் நம்மிறசூ லொளிவுகா ணுமாகில்
பிறைமதியு மவற்குவந்து பேணுமோ அம்மானை
பேணியல்லோ வவரளவிற் பிறந்ததுகா ணம்மானை. (க)

எல்லா மமைக்குமுத லேகனுகத் தாயிருந்து
நல்லதிரு வாகவொன்றை நாடுவா னம்மானை
நல்லதிரு வாகவொன்றை நாடுவா னுமாகில்
எல்லை வெளியி லிருக்குமோ வம்மானை
இருந்தல்லோ நம்மிறகு லிசைந்தார்கா ணம்மானை. (உ)

எண்ணெய்க் கறுப்பா யிருக்குமந்தக் கூரிருளில்
மன்னன்முன்னே யொன்று வந்ததுகா ணம்மானை
மன்னன்முன்னே யொன்று வந்ததுகா ணுமாகில்
உன்னுமவ னேயெதிர்த்து முனைக்குமோ வம்மானை
உனைத்தல்லோ வெவ்வகையும் உண்டான தம்மானை. (ங)

பச்சை சிவப்புப் பாய்ந்த வெளுப்போடு
நிச்சயமா யிந்தவகை நினைவானு னம்மானை
நிச்சயமா யிந்தவகை நினைவானு னுமாகில்
வச்சிரமோ நம்மிறைவோன் வன்னமோ வம்மானை
வன்னமாய் நின்றல்லோபல் வகையமைத்தா னம்மானை. (ச)

ஆருமறி யாமலிறை யாவையுமே தானமைத்து
ஊரு நினைவறியா தொழித்தான்கா ணம்மானை
ஊரு நினைவறியா தொழித்தான்கா ணுமாகில்
பேருமறி யாமலிறை புதைத்தானோ வம்மானை
புதைத்தல்லோ காணப் பிறந்தார்கா ணம்மானை. (ரு)

அண்டபிண்ட மனைகட்டு மவனிமுழு துந்தேடி
மண்டையுருண் டாலுமந்த வடிவறியா ரம்மானை
மண்டையுருண் டாலுமந்த வடிவறிவா ராமாகில்
கண்டுதெரி சிக்கவிரு கண்ணுண்டோ வம்மானை
கண்ணிருந்தல் லோவிறையின் காட்சிகண்டா ரம்மானை. (சு)

இடமுடைய குருவினடி சேர்ந்தே யிருந்தவன்றன்
வடிவுதனை யின்னதென்று வகைகாணு ரம்மானை
வடிவுதனை யின்னதென்று வகைகாண்பா ராமாகில்
அடிமுடியும் நடுவடியு மறிபவரோ வம்மானை
அறிந்தல்லோ வுட்கமலத் தருள்திறந்த தம்மானை. (எ)

காட்டும் பொருளும் நடுவுஞ் சுழிமுனையுங்
காட்டும்வகை யின்னதென்று காணுர்கா ணம்மானை
காட்டும்வகை யின்னதென்று காண்பாரோ யாமாகில்
கூட்டிமுடிக்கவொரு குறிப்புண்டோ வம்மானை
குறிப்பல்லோ குருவினிலை கொண்டார்கா லம்மானை. (அ)



தவனமா யண்டர்முனி சகலமனுப்பே யரக்கர்
மவுனப் பொருளின் வகையறியா ரம்மானை
மவுனப் பொருளின் வகையறிவா ராமாகில்
உவகை மலரடியி லூமையோ வம்மானை
ஊமையலோ பேய்போ லொடுங்கினு லம்மானை. (கூ)

கொல்லுகின்ற நஞ்சிற் கொடியதொரு நஞ்சதனை
அல்லலறுத் துள்ளி லருந்தார்கா ணம்மானை
அல்லலறுத் துள்ளி லருந்துவா ராமாகில்
வல்லவமாய் நஞ்சு மயக்காதோ வம்மானை
மயக்கியல்லோ மஸ்தாய் மகிழ்ந்திருந்தா ரம்மானை. (க0)

ஆகங் கலைவேத மறியாத மெய்ப்பொருளை
சாகாமற் * செத்ததனைத் தாமறியா ரம்மானை
சாகாமற் செத்ததனைத் தாமறிவா ராமாகில்
வேகாமல் வெந்தவெளி விளங்குமோ வம்மானை
விளங்கியல்லோ பொறியறுத்து மேலானு ரம்மானை. (கக)

மனக்கவலை மாற்றி வருந்துகுரு வின்னருளை
உனைப்பதமென் றெண்ணி யுருகார்கா ணம்மானை
உனைப்பதமென்-றெண்ணி யுருகுவா ராமாகில்
நினைத்துமடுப் பேற்றிவைக்க நெருப்புண்டோ வம்மானை
நெருப்பல்லோ கொடுமுடியை நீறுக்கு மம்மானை. (கஉ)

மாயா சொரூப மயக்கத்தைத் தானறுத்துக்
காயாமற் காய்ந்திறையைக் கண்டறியா ரம்மானை
காயாமற் காய்ந்திறையைக் கண்டறிவா ராமாகில்
மாயாமல் மாய்ந்து மறக்குமோ வம்மானை
மறந்தல்லோ குருவினருள் வடிவுகண்டா ரம்மானை. (கங)

வெள்ளெழுத்தை மாற்றி விழலெழுத்தைத் தானறுத்தே
உள்ளெழுத்தைப் பார்த்தே யுணரார்கா ணம்மானை
உள்ளெழுத்தைப் பார்த்தே யுணருவா ராமாகில்
வள்ளல்தனைக் கண்டு மகிழ்வாரோ வம்மானை
மகிழ்ந்தல்லோ வின்பதுன்ப மற்றுநின்று ரம்மானை. (கச)

சாத்திரமும் வேதமுறை தானறியா மெய்ப்பொருளைப்
பார்த்திருந்து தூங்கப் பரிசறியா ரம்மானை

* செத்திருந்து என்றூஉம் பாடம்,

பார்த்திருந்து தூங்கப் பரிசறிவா ராமாகிற்
காத்திருந்து பொருளினடி காண்பரோ வம்மானை
கண்டல்லோ ஞானமிரு கண்ணுனை தம்மானை. (கரு)

அன்பரெல்லாம் போற்றுமெங்க ளாதியிற சூல்நயினர்
இன்ப வலம்புரிக்குள் ளிருந்தார்கா ணம்மானை
இன்ப வலம்புரிக்குள் ளிருந்தார்கா ணுமாகில்
முன்பினிறை யின்றுவந்த முத்தாமோ வம்மானை
முத்தல்லோ நம்மிறசூல் மொழிந்தார்கா ணம்மானை. (கசு)

நாலு மறைவேதம் நவிலுமிற சூல்நயினர்
கால்தலையை யின்னதென்று கண்டறியா ரம்மானை
கால்தலையை யின்னதென்று கண்டறிவா ராமாகில்
வாலெவய தாயிருந்து வாழ்வாரோ வம்மானை
வாழ்ந்தல்லோ காயமதில் வடிவிலேகா ணம்மானை. (கஎ)

முத்தி லுதித்த முஹம்மதுர்ற சூல்நயினர்
பெற்றுப் பொருளுகந்த பெரியவர்கா ணம்மானை
பெற்றுப் பொருளுகந்த பெரியவர்கா ணுமாகில்
உத்தமமாய் நீளம்வெகு வுயரமோ வம்மானை
உயரமல்லோ அறுஷச்சிரங் கடந்துகந்தா ரம்மானை. (கஅ)

அஹதுமுத லானபடைப் படங்கலுக்கும் நம்மிறசூல்
வுஹதுமுத லாயிருந்த வுண்மைகா ணம்மானை
வுஹதுமுத லாயிருந்த வுண்மைகா ணுமாகில்
வஸ்துவகை யெவ்வுயிர்க்குள் வாழ்வாரோ வம்மானை
வாழ்ந்தல்லோ வுதித்தொடுங்கி வந்ததுகா ணம்மானை. (ககூ)

அச்ச மறுத்தே யரியதிருக் கண்மூடி
உட்சிவத்தைக் கண்டே யுகக்கறியா ரம்மானை
உட்சிவத்தைக் கண்டே யுகக்கறிவா ராமாகில்
வைச்சிருந்து கொள்ள மதியுண்டோ வம்மானை
மதியிருந்தல் லோவுளத்தில் வைத்தார்கா ணம்மானை. (உ௦)

காலறியார் மாலறியார் கையறியார் மெய்யறியார்
கோலெடுத்தே யாட்டுங் குறிப்பறியா ரம்மானை
கோலெடுத்தே யாட்டுங் குறிப்பறிவா ராமாகில்
காலன் றனைவெருட்டக் கட்டுண்டோ வம்மானை
கட்டிருந்தல் லோகாலன் றனைக்கடந்தா ரம்மானை. (உக)



மின்னெளிவ தாயிருந்த மெய்யிற சூல்நயினர்
கண்ணெளிவ தாய்ப்பார்க்குங் கண்ணுடி யம்மானை
கண்ணெளிவ தாய்ப்பார்க்குங் கண்ணுடி யாமாகில்
முன்னிறைய வுள்ளில் முகமுண்டோ வம்மானை
முகமல்லோ வமைத்ததெல்லா முழித்துப்பா ரம்மானை. (உஉ)

வாசமுற்று நின்ற முஹம்மதுர்ற சூல்நயினர்
வேசமயி லாயிருந்த மெய்யர்கா ணம்மானை
வேசமயி லாயிருந்த மெய்யரோ யாமாகில்
ஆசைச் சிறகைவிரித் தாடுமோ வம்மானை
ஆட்டமல்லோ வெவ்வகையு மாடுதுபா ரம்மானை. (உங)

தந்தையுட னன்னைசுற்றஞ் சகலமுமே தானறிந்து
வந்தவகை கண்டு மறவார்கா ணம்மானை
வந்தவகை கண்டு மறவாரோ யாமாகில்
சிந்தை மயங்கித் தெளியுமோ வம்மானை
தெளிந்தல்லோ பின்வாங்கிச் சென்றார்கா ணம்மானை. (உச)

உற்ற வுருவாகி யுறைந்திருந்த காயமதில்
ஒத்துக்குசை பூட்டிப்பரி யோடுதுபா ரம்மானை
ஒத்துக்குசை பூட்டிப்பரி யோடுதுபா ராமாகில்
மெத்த நடக்கவெகு காலுண்டோ வம்மானை
காலல்லோ பன்னிருகால் காட்டுங்கா ணம்மானை. (உரு)

வெற்றுப் பரியாய் விரையுநடக் கும்பரிமேல்
சித்தறிந்தே யேறித் திருப்பறியா ரம்மானை
சித்தறிந்தே யேறித் திருப்பவறி வாராகில்
பத்திருந்து கீழே பணியுமோ வம்மானை
பணிந்தல்லோ காலாற் பரிவுகொண்டா ரம்மானை. (உசு)

நால்வெ றெழுத்தில் நாதனென்றை நாடிவருங்
காலாற் பிடித்திருத்திக் கண்டறியா ரம்மானை
காலாற் பிடித்திருத்திக் கண்டறிவா ராமாகில்
நாலாம் பதத்தினையே நாடுவரோ வம்மானை
நாடியல்லோ வடிமுடிக்கும் நடுவானு ரம்மானை. (உஎ)

சித்திருக்கு மூலத் திருக்குகையி லாடிநின்ற
முத்திருக்குங் கண்ணை முழிக்கறியா ரம்மானை
முத்திருக்குங் கண்ணை முழிக்கறிவா ராமாகில்
பத்திருந்து மேல்வீட்டிற் பார்க்குமோ வம்மானை
பார்த்தல்லோ வுள்ளிலொளி புரிந்ததுகா ணம்மானை. (உஅ)

தாளிட்டுப் பூட்டித் தான்மறைந்த வீடதனைக்
கோள்விட் டகந்திறக்கக் குறிப்பறியா ரம்மானை
கோள்விட் டகந்திறக்கக் குறிப்பறிவா ராமாகில்
தேள்விட் டொடுங்கியருள் தெளிவாரோ வம்மானை
தெளிந்தல்லோ காயஞ் சிறந்ததுகா ணம்மானை. (உ௯)

காலில்லா தோடிக் கரமில்லா தேயெடுத்துக்
கோலில்லா தூன்றுங் குறிப்பறியா ரம்மானை
கோலில்லா தூன்றுங் குறிப்பறிவா ராமாகிற்
காலில்லா தோடிக் கடப்பரோ வம்மானை
கடந்தல்லோ மெய்ப்பொருளைக் கண்டுகொண் டா ரம்மானை.()

அறிவுக் கடங்கா தரிய பெரும்பொருளைப்
பரிவறிந்து கொள்ளார் பசாசர்கா ணம்மானை
பரிவறிந்து கொள்ளார் பசாசரே யாமாகில்
வெறியெழுந்து பவக்கடலில் வீழ்வாரோ வம்மானை
வீழ்ந்தல்லோ வீணாய் விளைந்தார்கா ணம்மானை. (௩௧)

அத்த னிருந்த வருமைதனை யேயறிந்து
பெற்றிருந்து கொண்டு பிழையார்கா ணம்மானை
பெற்றிருந்து கொண்டு பிழைப்பாரே யாமாகில்
முத்தியில்லா மாண்பரொடு மொழிவாரோ வம்மானை
மொழியும் வகையறிந்து மொழியுங்கா ணம்மானை. (௩௨)

நாத முறைந்திட்டமும் நந்தியிருந் தத்தலமும்
பாதமிருந் தாடிடமும் பரிவறியா ரம்மானை
பாதமிருந் தாடிடமும் பரிவறிவா ராமாகில்
கோதறு மாண்பரொடு கூட்டுவரோ வம்மானை
கூட்டும் வகையறிந்து கூட்டுங்கா ணம்மானை. (௩௩)

பாட்டும் படிப்பும் பலநூல் கருமறிந்து
கூட்டுங் குருவினடி குறியார்கா ணம்மானை
கூட்டுங் குருவினடி குறிப்பாரே யாமாகில்
நாட்டும் வகையறிந்து நாடுவரோ வம்மானை
நாடியல்லோ மெய்ப்பொருளை நவின்றார்கா ணம்மானை. (௩௪)

அளவுக் கடங்கா தருமைப் பொருளறிந்தோர்
எளிதுதரு முள்ள மெழுகடல்கா ணம்மானை
எளிதுதரு முள்ள மெழுகட்லே யாமாகில்
தெளிவுதருங் கடலுக்குயர் திரையுண்டோ வம்மானை
திரையல்லோ திருவருளைத் திறந்துரைத்தா ரம்மானை. (௩௫)



உற்றிருந்து காலா லுதைக்குஞ் சுழிமுனையில்
முத்திருந்த பாத முறையறியா ரம்மானை
மூத்திருந்த பாத முறையறிவா ராமாகில்
மத்தறிவைக் கொள்ளாத மாடாமோ வம்மானை
மாடல்லோ மெய்ப்பொருளின் வகையறியா ரம்மானை. (௩௬)

ஆயும் பொருளி லமர்ந்தடங்கி நின்றதனைக்
காயும் வகையறிந்து காணார்கா ணம்மானை
காயும் வகையறிந்து காண்பாரே யாமாகிற்
பாயுமொரு காலால் பரியுமோ வம்மானை
பரியுமோ வடங்கிநின்ற பரமறிந்தா லம்மானை. (௩௭)

செடியார் வனத்தினில்வாழ் சேர்ந்தமா னுங்கலையும்
குடியறிந்தி ணங்குசுகக் குறிப்பறியா ரம்மானை
குடியறிந்தி ணங்குசுகக் குறிப்பறிவா ராமாகில்
மடியிறங்கி மதலைபெற்று வாழாதோ வம்மானை
வாழ்ந்தல்லோ மூன்றுமொன்றாய் மகிழ்ந்ததுகா ணம்மானை()

ஆடுங் திருவணையி லாடுங்கா லொன்றாகி
நாடு மிடவலமும் நடம்புரிந்தா னம்மானை
நாடு மிடவலமும் நடம்புரிந்தா னாமாகில்
கூடி யடிக்கவொரு கொட்டுண்டோ வம்மானை
கொட்டல்லோ வோசைக் குருவாகு மம்மானை. (௩௯)

நடுவே யுறைந்திருந்து நாற்கலைக்கு மெட்டாதான்
இடமுடைய மங்கையுடன் சேர்ந்தான்கா ணம்மானை
இடமுடைய மங்கையுடன் சேர்ந்தான்கா னாமாகில்
அடவுடனே நம்மிறையோ ராருருவோ வம்மானை
ஆருருவோ மாயமா யிருந்தான்கா ணம்மானை. (௪0)

தாக்கும்வடி வில்லாத சங்கையில்லா ரூபமதைப்
பார்க்கும் படிபார்த்தாற் பரியுருவா மம்மானை
பார்க்கும் படிபார்த்தாற் பரியுருவா மாமாகில்
கோர்க்கப் புழுப்பொதிந்த குளவியோ வம்மானை
குளவியல்லோ வறிந்தவிடங் கொண்டாக்கா லம்மானை. (௪௧)

அந்தரத்தி லண்டமிட்டே யந்தரத்திற் குஞ்சுபொரித்
தந்தரத்தி லேபறந்தே யாடுதுகா ணம்மானை
அந்தரத்தி லேபறந்தே யாடுதுகா னாமாகில்
வந்து மருவமண வாளனுண்டோ வம்மானை
மணவாள னகவல்லோ குஞ்சுவந்த தம்மானை. (௪௨)

கையுமில்லை காலுமில்லை கண்ணுமில்லை மூக்குமில்லை
மெய்யுமில்லை யொன்று விளங்குங்கா ணம்மானை
மெய்யுமில்லை யொன்று விளங்குங்கா ணாமாகில்
மையிருளில் வந்துதித்த மாயமோ வம்மானை
மாயமல்லோ வுருப்படுத்தி வைத்தார்கா ளம்மானை. (௪௩)

உச்சி நடுவே யொளித்தொருவ ரோடிவந்த
கச்சைச் சிலம்பொலியைக் காணார்கா ணம்மானை
கச்சைச் சிலம்பொலியைக் காண்பாரோ யாமாகில்
மிச்சப் பொருள்பார்க்க விழியுண்டோ வம்மானை
விழியல்லோ கண்டு விளங்கினா ரம்மானை. (௪௪)

வளம்பெற் றுளத்தில் மகிழ்ந்திருந்து மறைந்தொளித்த
பழம்போற் பழம்பொருளைப் பழக்கறியா ரம்மானை
பழம்போற் பழம்பொருளைப் பழக்கறிவா ராமாகில்
உளம்போற் றுடையா துரைக்குமோ வம்மானை
உரைத்தல்லோ வழியில்லா துறைந்திருந்தா ரம்மானை. (௪௫)

எட்டெழுத்தைக் கண்ணாக்கி ரண்டெழுத்தி னூடுற்ற
வட்டெழுத்தைக் கண்டு மகிழார்கா ணம்மானை
வட்டெழுத்தைக் கண்டு மகிழுவா ராமாகில்
பட்டமரமும் பழுக்குமோ வம்மானை
பழுத்தல்லோ வுண்டு பசியறுத்தா ரம்மானை. (௪௬)

வட்ட மதியழைத்த வள்ளலிற சூல்நபினார்
அட்டமுள்ள மேனியா காசங்கா ணம்மானை
அட்டமுள்ள மேனியா காசங்கா ணாமாகில்
வட்டமதி முத்துங்கை வடிப்படுமோ வம்மானை
வடிவல்லோ * வோடி மறைந்தார்கா ளம்மானை. (௪௭)

இருந்த விருபெரு மிசைந்தசுகத் தானுருகிப்
பரிந்து திருகியொன்று பற்றுங்கா ணம்மானை
பரிந்து திருகியொன்று பற்றுங்கா ணாமாகில்
விரைந்து வெளியில்வந்து விள்ளாதோ வம்மானை
விண்டல்லோ வைவருமே விளங்கினா ரம்மானை. (௪௮)

காடுஞ் செடியுங் கடந்த வனமதனை
வாடி யறுத்துவெட்டி வருந்தார்கா ணம்மானை
வாடி யறுத்துவெட்டி வருந்துவா ராமாகில்
கூடிக் கலந்திருந்துக் கொள்ளாதோ வம்மானை
கொள்ளாதோ விருவரையுங் குறித்தக்கா ளம்மானை. (௪௯)

---

* ஆடி என்றும் பாடம்.



மூல மிறுகான்கின் முடிவுதனைக் கண்டிருந்தும்
நீலவிழிக் கண்மூடி நினையார்கா ணம்மானை
நீலவிழிக் கண்மூடி நினைப்பாரோ யாமாகில்
பாலும் பசுவும்வந்து பாயாதோ வம்மானை
பாய்ந்தல்லோ வுண்டு பரிந்திருந்தா ரம்மானை. (௫௦)

விம்மிக் கதறும் விரைவுதனை விட்டொழிந்து
நம்மறிவில் நின்றதனை நாடார்கா ணம்மானை
நம்மறி வில் நின்றதனை நாடுவா ராமாகில்
தம்மிற் பிணைக்கறுத்துத் தரியாதோ வம்மானை
தரித்தல்லோ காயந் தனைக்கண்டா ரம்மானை. (௫௧)

கள்ளச் சினமறுத்துங் கசடுதனை யேயொழித்தும்
உள்ளச்சங் கொண்டே யுகந்திரா ரம்மானை
உள்ளச்சங் கொண்டே யுகந்திருப்பா ராமாகில்
வெள்ளை சிவப்போடு மேவாரோ வம்மானை
மேவியல்லோ வுள்ளம் விளங்கினா ரம்மானை. (௫௨)

மூலத்தின் மேற்றோன்றும் முடிச்சதனைத் தானவிழ்த்து
மேலைத்தூண் பார்த்து விளங்கார்கா ணம்மானை
மேலைத்தூண் பார்த்து விளங்குவா ராமாகில்
காலந்தூண் டன்னைக் கடப்பாரோ வம்மானை
கடந்தல்லோ மேவிக் கலந்திருந்தா ரம்மானை. (௫௩)

முந்தவொளி வாயிருந்த முஹம்மதுர்ற சூல்நபினார்
பிந்த வுலகிற் பிறந்தார்கா ணம்மானை
பிந்த வுலகிற் பிறந்தார்கா ணாமாகில்
அந்த வடிவு மடங்காதோ வம்மானை
அடங்குமோ நம்மிறையோன் ஆதிக்கானா லம்மானை. (௫௪)

எக்கீன் மரத்தி லிருந்த நபியிறசூல்
முக்கீம்நபி கட்கெல்லாம் முன்னானா ரம்மானை
முக்கீம்நபி கட்கெல்லாம் முன்னானா ராமாகில்
சிக்காத வர்க்குச்செங் கோலுண்டோ வம்மானை
கோலல்லோ நம்மிறையோன் குதறத்துகா ணம்மானை. (௫௫)

ஐய மறுத்தே யருளதனைத் தான்பார்த்துக்
கையெடுத்துக் கால்பிடிக்கக் கண்டறியா ரம்மானை
கையெடுத்துக் கால்பிடிக்கக் கண்டறிவா ராமாகில்
மெய்யகத்தி லுண்மை விளங்காதோ வம்மானை
விளங்காதோ கால்பிடிக்க விரைவறிந்தா லம்மானை. (௫௬)

சூத்தி யிருந்து குறித்து நடுவறிந்து
பத்தி தனிலூன்றும் பரிவறியா ரம்மானை
பத்தி தனிலூன்றும் பரிவறிவா ராமாகில்
முத்திரைக்குட் கண்ணும் முழியாதோ வம்மானை
முழித்தல்லோ வாடும் முடிவுகண்டா ரம்மானை. (௫௭)

மன்னை யொழித்து வருங்கலையைத் தான்மறித்து
தன்னை மறந்திருந்து சாரார்கா ணம்மானை
தன்னை மறந்திருந்து சாருவா ராமாகில்
முன்னும் பின்னுந்தேடி முழிப்பாரோ வம்மானை
முழிப்பாரோ வந்த முடிவுகண்டா லம்மானை. (௫௮)

பனித்துளிபோற் பாய்ந்து பாரவுரு வாய்மனுவாய்த்
துனித்து வெளியில்வந்து தோன்றுங்கா ணம்மானை
துனித்து வெளியில்வந்து தோன்றுங்கா ணாமாகில்
அனைத்துமுரு வாகிநின்றே யாடுமோ வம்மானை
ஆடாதோ சூட்சமம்விட் டாட்டினு லம்மானை. (௫௯)

குத்தை யொருநாக்கால் குறித்துவிழி நேர்பார்த்து
செத்திருந்தே யோரெழுத்திற் சேரார்கா ணம்மானை
செத்திருந்தே யோரெழுத்திற் சேருவா ராமாகில்
நற்றவத்தைக் கண்டு நாடாதோ வம்மானை
நாடியல்லோ நற்பதியை நம்பினு ரம்மானை. (௬௦)

ஊமை யிருந்தவிடத் தாண்மைதனைக் காணாமல்
ஆண்மைதனைப் பேசி யலைந்தார்கா ணம்மானை
ஆண்மை தனைப்பேசி யலைந்தார்கா ணாமாகில்
பான்மையில்லாப் பொல்லாத பாதகரோ வம்மானை
பாதகரல் லோவாண்மை பதுக்கறியா ரம்மானை. (௬௧)

அக்கரந்த வக்கரத்து ளாடிநின்ற வட்சரத்தை
உட்கரந்த வக்கரத்து ளுருக்கறியா ரம்மானை
உட்கரந்த வக்கரத்து ளுருக்கறிவா ராமாகில்
சக்கரத்துட் கொண்டவனல் தாவுமோ வம்மானை
தாவியல்லோ வெட்கலந்து தவமானு ரம்மானை. (௬௨)

ஆவென் றெழுந்தே யலறுங் கடலதனில்
ஹீயென் றிரைந்த கிருபைகா ணம்மானை
ஹீயென் றிரைந்த கிருபைகா ணாமாகில்
ஹூவென் றவர்க்குக் கொடுக்குமோ வம்மானை
கொடுத்தல்லோ வக்கிருபை கொண்டார்கா ணம்மானை.



பார்வைகொடி ரண்டுமொன்றாய்ப் பரிந்துமரு வும்வேளை
வேர்வை யலர்ந்துவிழும் வெம்பனிகா ணம்மானை
வேர்வை யலர்ந்துவிழும் வெம்பனிகா ணாமாகில்
கோர்வையதில் வந்து குறிக்குமோ வம்மானை
குறித்தல்லோ நந்தி குறியுருவா மம்மானை. (௬௩)

நாலுமுக மாயிருந்த நந்திமுகத் தின்னடுவே
கோலமா யொன்று குறிக்குங்கா ணம்மானை
கோலமா யொன்று குறிக்குங்கா ணாமாகில்
சீல வடிவு சிறக்குமோ வம்மானை
சிறந்தல்லோ ராஹாய்த் திரண்டதுகா ணம்மானை. (௬௫)

பேயு மலிபும் விரைந்துதிரண் டேமருவி
மாயமாய் வெம்பனிக்குள் வடிவாகு மம்மானை
மாயமாய் வெம்பனிக்குள் வடிவாகு மாமாகில்
ஓயாமற் சென்றே யுருப்படுமோ வம்மானை
உருவல்லோ சீனுடனூன் உறைந்தக்கா லம்மானை. (௬௬)

உச்சி பழுத்தே யொழுகுந்தே னூடெழுந்து
மெய்ச்சிவமா யொன்று விளையுங்கா ணம்மானை
மெய்ச்சிவமா யொன்று விளையுங்கா ணாமாகில்
செச்சையருள் காண்சென்னி தெரியுமோ வம்மானை
தெரியுங்கா ணுவி திறமாகி லம்மானை. (௬௭)

ஊன்றி யிழுத்தே யுருப்பட்டுறை வாருமதில்
தாண்டிநடு வாகவொன்று தானிறைந்த தம்மானை
தாண்டிநடு வாகவொன்று தானிறைந்த தாமாகில்
ஊன்று மதற்கு முயிருண்டோ வம்மானை
உயிரல்லோ குத்தி யுறைந்திருந்த தம்மானை. (௬௮)

விண்ணைக்கா னூட்டி விரைந்தெழுந்த வக்கினியால்
கண்ணிரண்டு மூடிக் கருதார்கா ணம்மானை
கண்ணிரண்டு மூடிக் கருதுவா ராமாகில்
முன்னுளதெல் லாமவர்க்கு முத்தாமோ வம்மானை
முத்தல்லோ தீயால் முடிந்தாக்கா லம்மானை. (௬௯)

ரண்டுபத்து நான்கில் நடுவறிந்து மொன்றதனைக்
கொண்டிருந்து வாசி குறிக்கறியா ரம்மானை
கொண்டிருந்து வாசி குறிக்கவறி வாராகில்
மன்றுளா டும்பொருளின் வகையாமோ வம்மானை
வகையல்லோ வுள்ளில் மருவினு ரம்மானை. (௭௦)

முன்னொன்று காலால் முதிர்ந்தெழுந்த வாசிதனை
முன்னொன்றி லொன்ருய் முடிக்கறியா ரம்மானை
முன்னொன்றி லொன்ருய் முடிக்கறிவா ராமாகில்
நன்னாம் பயக்கூனில் நல்குமோ வம்மானை
நல்கியல்லோ மேலே நடந்தார்கா ணம்மானை. (எக)

கோழிமுட்டை போலுருண்டு கொண்டிருக்த மூலமதில்
தாளிரண்டா லேநடக்கத் தடமறியா ரம்மானை
தாளிரண்டா லேநடக்கத் தடமறிவா ராமாகில்
ஊழிரண்டு காலா லுதைக்குமோ வம்மானை
உதைத்தல்லோ காய முருப்படுங்கா ணம்மானை. (எஉ)

உச்சி யறிந்தே யுட்பூட்டுத் தானறிந்து
குச்சியால் தாள்திறந்துக் கொள்ளறியா ரம்மானை
குச்சியால் தாள்திறந்துக் கொள்ளறிவா ராமாகில்
நச்சியமு துண்டுபொருள் நாடுமோ வம்மானை
நாடியல்லோ வுண்டொடுங்கி நன்ருனு ரம்மானை. (எங)

மத்தாகி நின்று வளர்ந்துமுரு வாயெழுந்து
கொத்தான வுண்மை குறிக்கறியா ரம்மானை
கொத்தான வுண்மை குறிக்கவறி வாராகில்
முத்தானசோதி முளைக்குமோ வம்மானை
முளைத்தல்லோ கனிந்தரச முண்டார்கா ணம்மானை. (எச)

உள்ளக் குவளைக்குள் ளுருண்டெழுந்த நாதவிந்தில்
கள்ளத்தொழி லாகவொன்று கலந்ததுகா ணம்மானை
கள்ளத்தொழி லாகவொன்று கலந்ததுகா ணுமாகில்
துள்ளித் தெறித்த சுடராமோ வம்மானை
சுடரல்லோ வஞ்சுமொன்ருய்த் தோன்றினதா மம்மானை. (எரு)

ஆ திருப்பாடல் - அகூ.

---

ஞான அம்மானை

முற்றுப்பெற்றது.

ஹா ம ீ ம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஞானக்குருவடி விளக்கம்.

## பாயிரம்.

### கலிவிருத்தம்.

அருவமோ டுருவமாகி யருவினுட் சொரூபமாகி
மருவவே மலரிற்றேனுய் வளர்ந்துறைந் திருந்துநின்று
திருவருள் மணியுமாகித் திருந்தவே மஹ்ரூதாகிக்
குருவதாய் விளக்கமான குருவடி விள்ளலாமே. (க)

மறைந்திருந் துண்மையாகி வளருங்கா விருளிலன்றுள்
உறைந்திருந் தருளாய்மூன்றி லுதித்தமுச் சுடராயுண்மை
அறைந்திருந் தஹூமதாகி யருளுமு ஹம்மதாகி
நறைதிகழ் விளக்கமான நலமதை விள்ளலாமே. (உ)

ஒன்றினி லொன்ருய்நின்றே யுறைந்ததற் குள்ளிருந்து
கொண்டதைக் குருவினுகங் குறித்ததை வெளியிலாக்கும்
மன்றுளே வடிவாயுண்மை வளரும்ஹல் லாஜூபாதம்
விண்டதில் மஹூமூதான விளக்கொளி விள்ளலாமே. (ங)

## நூல்.

### இரட்டை ஆசிரிய விருத்தம்.

பொன்னிலகு வொன்றினில் விண்டவடி வாகியே
பூரணம தாகவிரிவாய்ப்
போந்துமஹூமூதெனவும் நின்றதனில் முச்சுடர்ப்
பொங்கியதில் முங்கிவரவே

மன்னுள்வடி வாகியொரு மாமணிய தாகியே
மனுஹூறருள் மந்திரமுமாய்
வந்ததில்நி றைந்தது மிருந்தது திறந்தது
வளர்ந்தபிர காசவொளிவாய்

என்னுளுறை மின்னியே பொன்னென நிறைந்ததா
லிருந்தகலி மாவிலுறவாய்
இருபத்து நாலதனி லியலஞ்சு நான்கைவிட்
டொருநான்கி லெண்ணிவரவே

தன்னுளுறை மன்னுமுயிர் தன்வாசி யிற்பொருளைத்
  தரவேணு மிதுசமயமே
 தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
  தானாக நின்றகுருவே. (௧)

ஒன்றுநிறை முத்தாகி யொன்றுநிறை யொன்றாகி
  யொன்றுநிறை முச்சுடருமாய்
 ஓங்கியதி லேங்கியே வாங்கியருள் தாங்கியே
  யொருபொருள தாகவுருவாய்
அன்றதில் நிறைந்தரு பருபாது வாகியே
  யருளுன்றி நருத்தாவதாய்
 ஆவென்று நின்றநின்மு னாகவரும் ஊவென்ற
  வட்சரம் ஈயென்றவடிவாய்
அண்டிவரு மச்சுடரைக் கண்டுதிற மாகவே
  அயினிலுறை சீனாகியே
 அதனிலுறை காபுநான் வடிவுமது வாகியே
  யட்சரங்குன் னென்றவடிவாய்
தண்டரள மாகியொரு மாமணிய தானபொருள்
  தரவேணு மிதுசமயமே
 தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
  தானாக நின்றகுருவே. (௨)

வெம்பனிய தாகியே முன்னொளி சிறந்ததாய்
  வீரேவ மேருவழகாய்
 வெள்ளைசிவப் பாகவே வேண்டிவரும் பச்சையாய்
  விளங்கிவரும் வோர்வையதனில்
அன்பினிறை யள்ளியே யாலயாறு வாஹூமுதல்
  யாவையு மமைத்தபொருளே
 ஆருமறி யாதபொரு ளாகிவரு மானதில்
  அன்றுகுன் னென்றவடிவாய்
முன்புநிறை யுட்சுட ராகு முதலானது
  முடிவையறி யாதவகையாம்
 முச்சுடரில் நின்றது முதலுமலி பாகவே
  முன்னின்ற சோதியருளே
தம்பநிறை வெம்பனியை யேந்தியருள் காணவே
  தரவேணு மிதுசமயமே
 தானாக நின்றுவரு மாணர் பதங்கள் தரு
  தானாக நின்றகுருவே, (௩)



அருவமது வுருவிலே ரூபமது சொருபிலே
  ஆகிவரு மண்டரொளிவாய்
 அனல் கனலை மூட்டவே யங்கியது வெளியிலே
  யச்சுடரெ ழுந்துதிறமாய்க்
குருவென நிறைந்ததால் கோர்வையது மேல்வாசல்
  கொண்டவிதழ் பன்னிரண்டில்
 கோலமுடனே அயினி லேறிவரும் வாசியைக்
  கொண்டருள தாகவினைவாய்
வருவழிதன விண்டகுரு மலரடியைக் கண்டுதான்
  மருவவிரு சரணணிந்தே
 வாகுடனே லாஹூத் தெனும்பதியி லேறியே
  வந்தவகை காணவரிதாய்
ஒருபொருள தாகவே முன்சொன்ன திருவொளியை
  ஓங்கியதை விட்டுமுன்போய்
 உயர்பொருளைக் கண்டுதா னுண்மைதிற மாகவே
  ஓங்கியருள் வாசிக்கவே
தருபொருள தாகவே யிருவருறை வெளியிலே
  தரவேணு மிதுசமயமே
 தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
  தானாக நின்றகுருவே. (௪)

இந்தவகை யாகவே நின்றபெரி யோர்கள்பால்
  ஏகிவரு மேயப்புறம்
 இனிமையுறை யிதினுளே கடைவுவெணெ யானதை
  இசைவுனருள் கனலாகவே
அந்தமுறை யானதை யிந்துதனில் வைக்கவே
  அரியமுகங் காணுவதுபோல்
 அவ்வருளை யுன்னுளே மவ்விதிற மாகவே
  ஆசைகொள வேணுமனமே
வந்தபிர காசமாய் நின்றனருள் வாசியை
  வடிவுதரும் வகைகடையவே
 வான்தொட்டு நின்றபொருள் தான்தொட்டு லாசமாய்
  வருகுமது கண்டுகொளவே
தந்திரம தானபொருள் மந்திரம தானவகை
  தரவேணு மிதுசமயமே
 தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
  தானாக நின்றகுருவே. (௫)

ஓசைகொளு மேல்பாக மேகிவரு மேதிறமி
லொன்பதித முான வடிவுள்
உவ்வென்றும் உம்மென்றும் நவ்வென்றும் நின்றஹறு
புலவிவரு மதுவெளியிலே
வாசமுட னேயிருவ ரேகிவரு வாரவர்கள்
வந்தவகை கண்டதிலையோ
மலரடி பரந்தது மவர்சிரங் கவிழ்ந்ததும்
வந்தவிரு கண்மின்னியே
ஆசைகொள வேயெனது நேசமதி லேயுறையும்
ஆனபொருளா ரறிவதோ
அந்தரமி லேபட்சி நின்றண்ட மிட்டதால்
அறுமவுன கும்மென்றதால்
தாசமது போலவே தாறைகும் வாறது
தந்தபடி யருள்சமயமே
தாளுக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தாளுக நின்றகுருவே. (௬)

அட்டதிசை மேருவாய் கட்டமிது நாலிலே
யானஹறு பறுநான்கதாய்
அட்சரம தொன்றிலே யுச்சிசுழி முனையிலே
அனலொளிவு * ஜெம்மானதும்
வட்டமதி விட்டசுழி கொட்டியரு ளாகவே
மனதிலுறை மலராகியே
வாசித்துக் கோடானு கோடிநூல் கற்றாலும்
வாராது வாராதுபார்
ஒட்டிவரு பெட்டையுட னுலவிவரு சேவலது
வோங்கியறி வாயுன்னுமே
ஒத்தபடி யப்படி யெனக்குமது காணவே
உள்ளிலொளி தந்தருளுவீர்
தட்டிவரும் வாசியது தட்டாமல் தட்டிவரத்
தரவேணு மிதுசமயமே
தாளுக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தாளுக நின்றகுருவே. (௭)

செங்நெல்விளைந் துன்னியே மன்னுதிற மாகவே
திறமாக நின்றதென்னத்

* செம்பானஹம் என்றுமும் பாடம்.



தெரியாது சாவியா யுறைவதிலே யென்றுதான்
திருடனாய் நின்றவகைகாண்
உன்னுமதி லாண்மையும் நானென்று சொல்வதும்
உறைவிலாச் செங்நெலதுபோல்
ஓங்கிவரு தன்மையாய்ப் பாங்கினுட னேயறிவும்
உன்னுவது மிப்படியதாய்
மன்னுமுறை செங்நெலில் வந்துபொருள் சேர்வதாய்
வளருதலை குழையவேதான்
வடிவையது போலவே கடிதுமன மேபெருக
வன்மையறி யுண்மைமனமே.
இன்னறிவு நெஞ்சிலே யெண்ணிவர விப்படித்
தரவேணு மிதுசமயமே
தாளுக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தாளுக நின்றகுருவே. (௮)

அச்சமற வெளியிலே யுட்சிவம தானதால்
அஹுமது மஹுமூததாய்
அன்றுமுதல் வெம்பனியைக் கண்டுதெரி சிக்கவே
யறிவையரு ளரியகுருவே
நிச்சயம தாகவே யென்னுளே தானுறையும்
நீதியரு ளானபனியை
நினைவினுட னுந்தியே கவுஸதுக் கப்புறம்
நிலையாக நின்றபொருளே
பச்சையது முத்ததாய்ப் பார்வைசிவப் பானதாய்
பன்னிவரு முச்சுடரிலே
பரமாகி நின்றது பாதவுளா ஞானவொளி
பண்பாக நின்றநினைவே
தச்சொருப நிலையிலே யுட்சிவம தானதைத்
தரவேணு மிதுசமயமே
தாளுக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தாளுக நின்றகுருவே. (௯)

நாசிநடு வெளியிலே யூசியருள் போலவே
நம்பியது நூலிழையினுல்
நாதமது பூதமாய் நாலினுட னென்றதாய்
நாபிதிற மானவகையில்

ஓசையருள் தாகமா யொன்றிவரு வென்றியாய்
உருவான தேகமதனில்
ஒத்தபிரு திப்புறமு மப்பினுடன் ரண்டுமாய்
ஒத்தபுற மானவகையை
வாசமுட் னேயதிக வாயுவுட னுகாசம்
வளருமுயி ராகிநிறமாய்
வந்ததி லுறைந்தபொரு ளுந்தியது தேயுவாய்
வந்தபிர காசகுருவே
தாசமல முந்துபொருள் நின்றனரு ளிந்தனந்
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (௧௦)

முனைசுழியி லழகதா யொருபுறமி லொளிவதாய்
முன்னின்ற சோதியருளே
முத்தியலி பானதாய்ச் சித்தியதின் மோகமாய்
முதலலியில் எக்கினுமாய்த்
தனையருள்வ தாகவே வஸ்துவகை யுற்றதாய்த்
தரளமதி லாமக்கானில்
தானின்ற லாமலிபு வான்தொட்டு நின்றது
தருப்பமது சொருபமழகாய்
மனைபுகுந் துலவியே மறையருள் பரவியே
வளர்மணி யுலாவிவரவே
மந்திரச் சுடர்திரு மலுஹறென வொளிர்வதாய்
மற்றொருவர் காணமலே
தனையுகந் திருபுறமு மறியாமல் நின்றபொருள்
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (௧௧)

உச்சிசுழி முனையிலே யட்சரம தாகவே
யொன்பதருள் ஊறுபானதும்
ஒன்று நிறமாகவே யொன்றுதிற மாகவே
யொன்றுதனி லஞ்சுநிறமாய்
வச்சிர மழுத்தியே யதுதனக் கிருவிரல்
வடிவதின் கீழாகவே
மறையிரவு பகலுமற் றிருக்குமத் தலத்திலுறை
வளர்ஊறுபு மஞ்சாகியே



தற்சொருப மாகவே நபுசுல் அம்மாறத்தென்
றுன்னுமது தனைக்கடந்தால்
தலமான தின்பேரை யறியார்க ளெவ்வகை
தான்படித் தாவதெனவே
தச்சொருப மானதில் லிருசுழியின் கீழாகத்
தானென்ற தருள்சமயமே
தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (௧௨)

உள்ளமது தன்னிலே விள்ளரிது பனிரண்டில்
உறவாகி நாலுவெளியில்
உந்தியது கழிவதாய் விந்தைசிவம் போவதாய்
வேறுபட நின்றதலவோ
தள்ளியது போனதை மெள்ளவுயிர் வாங்கியே
தான்குருவைக் கண்டுகொளவே
தத்துகடல் மீதிலே வொத்தமம ரோசென்று
தான்முத் தெடுப்ப தருபோல்
தெள்ளிய வுயிர்க்குளே திருவினுறை பரமதனை
திருடிக்கொள வேணுமனமே
செயலறிவ தாகவே குருவினருள் மேவவே
சித்தமது முத்திபெறவுந்
தன்னுமதை யுள்ளிலெள் ளளவுமே தப்பாமல்
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (௧௩)

ஓரெழுத் தாகவே லெளஹில்வரு மூன்றதாய்
உணருமது கலமதனையே
உந்திவரு பலகையில் நின்றனரு ளெழுதுமூன்
றெருள்றையருள் வென்றிகுருவே
வாரெழுத் தந்தவொளி வந்தவடி வாகவே
மஹ்பூழ தெனும்பதியிலே
மலுஹறென விரையவே வந்துதிரு மந்திரம்
வடிவுகொள வேணுமனமே
பேரெழுத் துன்னியே மகரிபத் தென்னுமே
பெரியபொருள் காணர்கள்பார்
பேரரிய கோடானு கோடிநூல் கற்றாலும்
பேரறிய வரிதரிதுபார்

தாரெழுத் தாகவே முத்தலக் கென்னவே
 தரவேணு மிதுசமயமே
தானுக நின்றுவரு மாணுர் பதங்கள்தரு
 தானுக நின்றகுருவே. (க௪)

தந்தைமலர் தாயுமா யந்தநிற மஞ்சுமாய்த்
 தருரூப ரூபமூன்ருய்த்
தான்கொண்ட தேகமிது தன்னிற்பல நினைவுகோ
 டாகோடி யுன்னிவருமே
* அந்தில்செறி மூந்திரிகள் தந்திரிகள் கொம்மைகள்
 அழகிலுறு பீரங்கியும்
அங்கியதி லேசிலவர் பலநினைவ தாகவே
 அருள்கோட்டை யிட்டபேரும்
பந்திபங் கியதாக வொன்பது துவாரமதில்
 பாரமது கிரியைவிடவே
பரவிவரு கொட்டாவி தும்மலது விக்கலது
 பாரமல சலமுறக்கம்
தந்திரம தாகவே வீணன் காயமதில்
 தள்ளிவிட வருள்சமயமே
தானுக நின்றுவரு மாணுர் பதங்கள்தரு
 தானுக நின்றகுருவே. (க௫)

இருவாசல் சிறுவீடு மியல்பாக வருவாசி
 யிவைரண்டி லொன்றுபடவே
எண்ணுமிரு பத்துநா லுன்னுமதி லொன்றிலே
 இயங்கித் தியங்கிநிறைவாய்
மருவாசல் வெளியூடு திறமாகி யுருவாகி
 வளர்மின்னி வந்துபுகுதும்
மனுஹற்றெனு மந்திரம் வாசியோ டின்னியே
 வாசிக்க வாசகமதாய்க்
குருவாசல் வெளியான வகையிலருள் பொருளுமாய்
 கொடியென்று நின்றதுவுமாய்க்
கும்மென்று நின்றவடி வும்மென்று நின்றதும்
 குருவான வேட்டுவனுமாய்த்

*அந்தமா யிந்தமுறை காயமீதிற்பல ஆணுவம தானவர்களும்,
என்பன மிகுந்தஉம்பாடம்.



தருவாசல் வெளியூடு திறமாக வருகுபொருள்
 தரவேணு மிதுசமயமே
தானுக நின்றுவரு மாணுர் பதங்கள்தரு
 தானுக நின்றகுருவே. (க௬)

பனிவார வெளியூடு பனியுதிரு மதிலூடு
 பாதமல ராதமலராய்ப்
பங்கய மலர்க்குளே செங்கைவிழி காணவே
 பார்வையது நேர்மையழகாய்
முனிநீவார தொனியோசை முத்திவரு மொன்ருகி
 முச்சுடரி லயினிலழகாய்
முன்னின்ற தீபமாய் முதலொளிவ தாகியே
 முறைஅயினில் எக்கினுமாய்
மணியொளிவ தாகியே ஹக்குல்ளக் கீனுமாய்
 மணிதிரளும் வகையாகியே
மலரிலுறை தேனுகி வருகுமஹ் மூதாகி
 வந்தவகை யறியவெளிதோ
தனியாகி நின்றபொரு ளுருவாகி நின்றனருள்
 தரவேணு மிதுசமயமே
தானுக நின்றுவரு மாணுர் பதங்கள்தரு
 தானுக நின்ற குருவே. (கஎ)

ஓரொளிவ தாயவையும் மெய்மையும் நாகமுறை
 யுற்றபத முத்தியழகோ
ஓரெழுத் தானபத மவிபுலாம் முத்தலக்கி
 லோங்கிவளர்ந் தேங்கிவரவே
பேரொளிவி லென்றதிற் பிரித்துவரு மெய்யொளி
 போண்ட ரண்டாமுகாய்
பின்முனையி லுந்தியே முன்முனைய் தாகவே
 பிரிவுறுஹே யினிலுதயமாய்
வாரொளிவ தாகவே வருகுக்டல் மேவவே
 வந்தபிர காசகுருவே
வளரொளிவ தானதும் யருவுருவ மீமதாய்
 மறையுமொளி தாலிலுறைவாய்
தாரொளிவி ஞகமுறை தானருள் புரிந்திடத்
 தரவேணு மிதுசமயமே
தானுக நின்றுவரு மாணுர் பதங்கள்தரு
 தானுக நின்றகுருவே. (க௮)

ஆருமறி யாதபொருள் பாருதிற மாகவரும்
ஆவென்ற வட்சரமுமாய்
அங்கியது கொண்டெழுந் தனலதுவு முருவதாய்
அருள்குருவி னழல்மூட்டவே

சேருமொரு பிரகாச மானகுரு வுபதேசஞ்
செப்பிலது கொள்ளவெளிதோ
திருடவிரு கண்பார்வை வெளியிலது கொள்ளாது
செயலுருவ தானவகையே

பாருமென வேயறிவு சேருமென லாகுமோ
*பாதமல ராதமலராய்
பத்திமற வாமலே யுற்றசுழி மீதிலே
பரியையுற வாய்நெகிழ்த்தே

தாருமென நின்றறிவு வாருமென வென்றபொருள்
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (௧௯)

வாங்கிநின் றேங்கியே தாங்கியரு ளோங்கியே
வந்தபிர காசமுருவாய்
மருவவொரு பெண்கொடி வாவென்ற ழைத்ததும்
மருவவறி யாதவகையோ

ஓங்கியுரு வானதுறை யுண்மையிரு பத்தினு
லொன்றில்வரு வென்றியுடனே
ஓரெழுத் தாகவென துள்ளினுப தேசமரு
ளுற்றபிர காசகுருவே.

பாங்கிவரு மேல்வீடு மேங்கியருள் காணவே
பன்னுமுறை யுன்னுகுருவே
பக்கமிரு புறமுமே சாயவொரு மிக்கவே
பரமிலருள் பொருள்காணவே

தாங்கியரு ளானபிர காசவொளி வானதுறை
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (௨௰)

வாசமது பூவுமே யான்சநிறை வாகவே
வந்தபிர காசமறிவாய்

* பாதமருளாகமெனலாம் என்றூஉம் பாடம்.



வாசமது றப்பதாய் பூவுமது தேகமாய்
வகைதன்மை யானபடியே

* ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...

ஓசையுட னப்படி யிருக்குமது காணவே
ஓகோவெ னக்கருளுவீர்
ஒந்ததைப் பிரிக்கவே கோபமுட னுண்மையும்
உண்மையுரு வானவகையாய்த்

தாசமது போலநின் றப்படி யிருக்கவே
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (௨௧)

அத்தியருள் முத்தியே சித்தமது முத்தியே
யாகிவரு புத்தியுருவே
அண்டரண் டத்திலே நன்றிகொள வேணுமென்
முறையுரு வாகிநிறைவாய்

பத்திமுறை யொத்ததால் நித்தமருள் கத்தனே
பரமிரு வாசலதின்மேல்
பாங்காக நவகோண மீதிலே நாவிதழ்
பன்னுமறு மூதினுறைவாய்

உற்றவித மொன்றிலே யுறைஉறுபு நாலதாய்
ஓங்கினது நகத்தாவுமாய்
உன்னுமது தன்னிலே யோங்கிவரு மொன்றிலே
வோரெழுத் தானகுருவே

தத்துமுறை யுபதேசஞ் சித்தமதில் வைக்கவே
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (௨௨)

ஆருமறி யாதபுக ழானதொரு வாசலில்
அமுருதனை விள்ள வகையோ
ஆறுநா றாயிரங் கோடிநூல் கற்றாலும்
அதனையறி யார்கள்வகையே

* இந்த அடி எமக்கு கிடைத்த பிரதிகளிலில்லை.

பாருநீர் வாரியி லமையது கரையிலே
பாரண்ட மிட்ட வகையோ
பருகியதி னெண்ணமும் நவ்வுமவ் வென்றதால்
பாருமது போலாச்சுதே

சேருமது போலவே நம்முள்ளு மப்படித்
திறமதனை யறியுமனமே
செவ்வென் றுரைத்தபொருள் மவ்வென் றிருத்தியே
திருடவறி வாகுமனமே

தாரொன் றுரைத்த பொருள் தவ்வென்று மென்னுளே
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே (உ௩)

பச்சை மண்ணைதும் புழுவதில் பொறிந்ததும்
பாருமது உம்மென்றதால்
பறவையது போலாச்சு * லாமது பரந்ததும்
பச்சைமண் விரிந்ததுவுமே

அச்சமற நானென்ற வாண்மையும் பெருமையும்
அதுதனக் கில்லாததால்
அப்படிய தாச்சுதே நற்புகழைக் காணவிங்
கரிதரிது காண்பார்களோ

உட்சிவம தாகவே குளவியது போலவே
உன்னுள் ளிருப்பதைப்பார்
உம்மென்று சொன்னது முன்னுளே நன்றாக
ஒத்துவரு சத்தமதுதான்

தச்சமர வுற்பன மெனக்குமது போலவே
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (உ௪)

உன்னிய கபாலமதில் மின்னுசிர மேறியே
ஓங்கிவரும் வாசியதுதான்
ஓவென்றும் ஊவென்றும் ஆவென்றும் நாவென்றும்
ஒத்துவரு மஞ்சுதலமில்

பன்னுதிற மாகவே தலமஞ்சி லஞ்சுசுழி
பரமாக வேசுழித்துப்

* வாமது பறந்தது என்றாஉம்பாடம்.



பாரமாய்ச் செக்கதுபோ லாடிவரு மோசுழியில்
பரமிலுற வாகவெளிதோ

மன்னிவரு மிக்கது மாலைபி லாட்டவே
மருவுநீர் வேறானதும்
வந்தது பிறிந்ததும் மறைசிவம தானதும்
வாறான தேகமதனில்

தன்னுள்மறை யிப்படி யுன்னுமது வாசியில்
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (உ௫)

காயினுடன் ஹேயுமாய் ஏயினுட னயினுமாய்க்
கலந்துவரு சாத்தினுறைவாய்க்
காணாத துக்குளே தானுகி நின்றதனை
காணவெளி தாகிவருமோ

காயினுள் மீமுமாய் நானதனிற் கூடியே
கண்டுவரு அயினிலழகாய்
காணாமல் நின்றபொருள் காணவே வேணுமது
கண்டுகொள வேணுமனமே

காயினுட னவிபுலா மேகிவரு மேயதனைக்
கண்டறிய விண்டுகொளவே
ஹறுபான முப்பதும் ஹறுபல்ல வென்றுமுரை
ஹறுபுவே றுண்டு மெனவுங்

தாவுமது பொருளிலே யாகுமது ஹறுபிலே
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (உ௬)

ஒத்தபத மந்திலே சித்தியது முந்திலே
உறவாக நின்றஹறுபாம்
உன்னுளே நின்றபொரு ளென்னுளே வந்ததும்
உற்றபதம் ரண்டொன்றுமாய்ப்

பத்தியுட னேயறிவு சித்தமதிற் காணவே
பரிவாக நின்றகுருவே
பாரொன்று வெட்டிவரு * மாறென்றுங் காணார்கள்
பரிவிலுற வாகுமதுவாம்

* ஆறென்றுங் காணார்கள் என்றாஉம் பாடம்.

வைத்தொன்ற தற்குளே பத்தென் றெனக்குளே
வைத்தபிர காசகுருவே
வருவென்று ஞானமே தருமென்று நிச்சயம்
மலர்கண்டு கொண்ட குருவே
தத்தற வெனக்குளே முத்திபெற வருளைநீ
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணூர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (௨௭)

காபிலொரு பெண்கொடி அயின்சூறந் தாகவே
காட்டிமறைத் தோடி வருவாள்
கனகபணி யுடைகளும் வெகுவசன மாகவே
கண்டவளை விட்டிடுவதோ
ஆவிறுகுத் தாகவே யப்புறமி லுள்ளபொருள்
யாருமறி யார்களதுபார்
அன்றுதிற மானதவள் வென்றியொளி வானதவள்
அப்புறம தானதவளாம்
பாவியிவன் காணும லாவிவீண் போகாமல்
பலனுரைக் குருவையறியான்
பச்சையோ வவளழகு நெற்றியோ முத்துநிறம்
பாரவுட லுட்சிவப்பாம்
தாவவே வேணுமது காணவே யாருமருள்
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணூர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (௨௮)

அழகிலுறு பார்வையில் வெளியில்வரு வேர்வையில்
அருமையருள் ஹூவென்றதால்
அதனிலெழு சத்தமே யெவையுமமை முத்தியே
ஆகமுறை யானபொருளே
பழகியதை வெளியிலே தள்ளிவிட வேணுமே
பாரறிவு மேலாகவே
பன்னுமுறை யுனிலுளே யெண்ணிவரு மின்னியே
பற்றித் திரண்டதலவோ
அழகிலொளி விம்மியே வருவதருள் *வென்றதோ
அவ்விளிறை நவ்விளழகாய்

* விண்டதோ என்றுஉம்பாடம்.



அற்றது பொருத்தவே சித்திபெற வேணுமென்
றாசைகொள வேணுமருளால்
தழுவிவரு வானிலொளி பெருகியருள் காணவே
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணூர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (௨௯)

அன்னையுட னேபிதா வுன்னுமிரு பேருமே
ஆவியுட னுதமழகாய்
ஆனதிலே தானுருவ தாகவே தான்வெளியில்
ஆசைகொள நின்றபொருளே
தன்னையறி யாமலே யுன்னுமது வெளியிலே
தான்வந்து நின்றபொழுதே
தாரகம தாகவே தானற்றுப் போனதும்
*தானறிய வகையறிவதோ
என்னுமது வுன்னியே யிவைாண்டும் வேறுபட
இற்றற்றுப் போனபொருளே
என்னிலுறை வாசியுள் ளிதனையதி லேற்றியே
ஏறிவர வருள்செய்குருவே
தன்னுள்நிற மாகவே யற்றதை யென்னுளே
தரவேணு மிதுசமயமே
தானாக நின்றுவரு மாணூர் பதங்கள்தரு
தானாக நின்றகுருவே. (௩௦)

ஆவிதிற மாகவே நாவியுரு வானதும்
ஆருமறி யார்களெனவே
அன்றுநிறை பிரகாச மதுகண்டு கொண்டவர்கள்
அணுவுமுறை யார்களதுபார்
வாவியதில் நீராக வந்தவகை போலவே
மனுடருள மான்ததனில்
வருமுறைவு வாரிபோல் தனதிலுள மாகவே
வந்தவகை கண்டதில்லையோ
பாவியிது நாலுமே யோவியம தாகவே
பரமதனை விட்டுநெகிழ்ந்தே
பண்ணவறி யாமலே முன்னுமது வோடியே
பாரமதி லுள்ளாகவே

* தாண்டிய வகையறிவதோ என்றுஉம் பாடம்.

தாவிவரு நாலையு மாவிகொடு தாகமாய்த்
    தரவேணு மிதுசமயமே
  தானாக நின்றுவரு மாணூர் பதங்கள்தரு
    தானாக நின்ற குருவே. (௯க)

கண்டமதின் மேலாக ஹறுபுபதி னெட்டிற்
    கலந்துவரு சோதியதிலே
  காணாது பாருமே தோணாத தப்பொருள்
    காணவரி தாகிவருமே
விண்டதனி லஞ்சுதலங் கொண்டதனில் வாசமாய்
    விரைவாக வேயுரைக்க
  மீறுவது மஞ்சுபேர் கூறுவது கேண்மினே
    விதிஅயினுங் காபு நானும் *

அண்டருறை வானது மதனில்மஹூ முதுநின்
    ருடியுறை வானபொருளாய்
  அண்டிவரு மீமிலே பெருகிவருந் தாலிலே
    அன்புகொளும் யேயிலுறைவாய்
தண்டரள மாகவே விண்டவடி வானதைத்
    தரவேணு மிதுசமயமே
  தானாக நின்றுவரு மாணூர் பதங்கள்தரு
    தானாக நின்றகுருவே. (௯உ)

அப்புறம தாகவே நற்பொருளு மத்தலம்
    ஆடிவரு மஞ்சுசுழியில்
  அன்புபெறு காபுமாய் லாமிலுறை ஜீமுமாய்
    அண்டியெனே வந்தபொருளே
விற்பர விலாசமாய் நற்புகழ தாகவே
    விரைவுதரு லேயெனவுமே
  விண்டபுகழ் வாவுடன் கண்டபுகழ் றேயுடன்
    விரவியது முப்பதுவுமே †
  அப்புறமு நானென்று மற்றதுவும் நானென்றும்
    ஆதியினை யணுவுமறியான்
  அஞ்சுமே யொன்றாகி வந்தபிர காசகுரு
    வருளதனை யாருமறியார்

---

* விரைவாக வப்புற முறையவருள் புரியவே
  விண்டபிர காசமுருவாய். என்பன மிகுந்தாஉம்பாடம்.

† வீனென்று சொல்லியே யேனென்று நின்றதலம்
  விரையவரும் ஹறுபஞ்சுமே. என்பன மிகுந்தாஉம்பாடம்.

128



தப்பறவே யிப்பொரு ளொன்றாகி நின்றதைத்
    தரவேணு மிதுசமயமே
  தானாக நின்றுவரு மாணூர் பதங்கள்தரு
    தானாக நின்றகுருவே. (௯௩)

உச்சியதின் மேலாகத் தாமரையொன் றுண்டுமது
    வொத்தவித மானவகையும்
  ஓங்கியது மாயிரத் தெட்டிதழ தாகவே
    யுன்னிவரு சோதியதிலே
தற்சொருப மாகவே தாமரைய தானது
    தான்ஷரீ அத்ததுவுமாம்
  தள்ளாது * முள்ளூறவே தானே மலர்ந்ததுவுந்
    தான்தரீ கத்தெனவுமே
உட்சொருப மாகவே யுள்ளூறவி லாசமா
    யோங்குஹகீ கத்தெனவுமே
  ஊன்றிவருவாசமது கொண்டமக ரிபத்துற
    வானமுஹப் பத்தெனவுமே
தற்சொருப மானபொரு ளுள்ஷிபத் தொன்பதுந்
    தரவேணு மிதுசமயமே
  தானாக நின்றுவரு மாணூர் பதங்கள்தரு
    தானாக நின்றகுருவே. (௯௪)

அரியதொரு கிருபையாய் மணிதிரளும் வகையதாய்
    ஆருமறி யாதபொருளாய்
  அன்றதனுள் நன்றிதரும் வென்றிஹறு பானதும்
    அழகாகும் பதினலதாய்ப்
பெரியமுறை யாகியே யொருவரறி யாமலே
    பேரண்ட ரண்டரழகாய்ப்
  பெருகுஸூரி யானிலே வருகுநூற் றஞ்சிலே
    பெரியவகை யருளுகுருவே
ஒருவரறி யாமலே யுண்மைமீ திற்பர
    மொத்தபெரு வாசலறிய
  ஓங்கியே நின்றபிர காசஹறு பானதும்
    ஒன்றிவரு முப்பதையுமே
தருமொழிய தாகவே பெருகுமது முனையிலே
    தரவேணு மிதுசமயமே
  தானாக நின்றுவரு மாணூர் பதங்கள்தரு
    தானாக நின்றகுருவே. (௯௫)

---

* உள்ளறிவு என்றாஉம் பாடம்.

வருகுமொரு சுழியிலே பெருகுமது முனையிலே
    வடிவுதரு பொருளுருவதாய்
  வந்தவகை யானதிற் சேர்ந்துறையும் ஞானமே
    வானதிற் கப்புறமதாய்ப்

பொருள்வழிய தாகியே நூலிட்ட செவையதாய்ப்
    புந்தியதி லோர்ஹறுபதாய்ப்
  போந்துவரு மேஹறுபு நின்றபதி னுலுமே
    பொங்கிவரு கம்ஸினுருவாய்ப்

பருவமதி லாகியே யிருசுழியைப் பின்வாங்கிப்
    பன்னுமுறை யுன்னுகுருவின்
  பாதவுப தேசமதை நேசித் திருத்தியே
    பரமினுற வாகவரிதே

தருபமறை முக்கோண சக்கரமீ ராறுமே
    தரவேணு மிதுசமயமே
  தானுக நின்றுவரு மாணுர் பதங்கள்தரு
    தானுக நின்ற குருவே. (௫௬)

ஒருஹறுபு தில்லிலே ஒருஹறுபு சுல்பிலே
    ஒருஹறுபு ஷுஹறுதுமீதில்
  ஓடிவரு மங்கியே யிதுமூன்றுங் கூடியே
    ஒன்றுபட வருள்புரிகுவீர்

ஒருஹறுபு லுத்பிலே ஒருஹறுபு ஸிர்றிலே
    ஒருஹறுபு மீமிலேதான் *
  உண்மைஹறு பாகவே வெண்மைதிரு வுளமதாய்
    உறுமறிவை யாருமறியார்

ஒருஹறுபு கவுஸிலே ஒருஹறுபு நபுஸிலே
    ஒருஹறுபு லாமக்கானில்
  உன்னியது மூன்றுமே வீணுக நின்றதால்
    ஒருஹறுபு † ஸிஹ்ஸில்நினைவாய் ‡

தருஹறுபு மொன்றுமே வெளியிலரு ளாகவே
    தரவேணு மிதுசமயமே
  தானுக நின்றுவரு மூணுர் பதங்கள்தரு
    தானுக நின்றகுருவே. (௫௭)

* ஓடியிது ஆறு மொழித்தே. என்பன மிகுந்தஉம்பாடம்.
† சஹ்ஸில். என்றுஉம் பாடம்.
‡ ஒருகோடி நூலறிவு வேதமுறை கற்கினும்
  ஒருஹறுபை யறியார்கள்பார். என்பன மிகுந்தஉம்பாடம்.



ஆருமறி யாதபொரு ளங்கிதரு மஞ்சிலே
    அட்சரம தொன்றில்நினைவாய்
  அந்தறிவு மேற்சாய சிந்துமிது நாவிலே
    அதுகுருவின் வடிவாகவே

தாருமொரு பிரகாச வாரிகடல் மீதிலே
    தான்முத் தெடுத்ததுபோல்
  தள்ளாத ஹறுபதில் விள்ளும்வகை யாவையுஞ்
    சகலமு மதிலொடுங்கும்

வாருமென வேயாறு சாஸ்திரமும் வேதநூல்
    மருவுபிர காசம்நாலும்
  வளர்வேத மானது மிறைவடிவு மாதியும்
    வரிசைபெரி யோர்கள்தாமும் *

சார்ஹறுபை யினமொருவர் கண்டதிலை யெனக்குமே
    தரவேணு மிதுசமயமே
  தானுக நின்றுவரு மாணுர் பதங்கள்தரு
    தானுக நின்றகுருவே. (௫௮)

ஆசைகொள வேயதிக பாலமுது சீனியும்
    ஆருமறி யாதபொருளும்
  அதனிற் குழைத்ததை யினிமையுற நாவிலே
    யரியதருள் பெரியகுருவே

பாசமுட னிதனையே தின்றுருசி பார்க்கவே
    பாரெனமுன் நின்றகுருவே
  பரமினுறை வாகவே யினிமைதரு பொருளைநின்
    பாதமலர் சிரமணிந்தே

வாசமுட னேகிவரு மலுஹறருள் விளையவே
    மலருறை கபாலமதிலே
  வருமறிவு தானுன பொருஹறுபு பதினெட்டும்
    வகையல்ல வென்றதொழிலாய்

தாசமுட னையறிவுந் தாமரையுள் ளாகவே
    தரவேணு மிதுசமயமே
  தானுக நின்றுவரு மாணுர் பதங்கள்தரு
    தானுக நின்றகுருவே (௫௯)

* மன்னுமுறை வானோர்கள் உன்னுபல ஜின்முனிவர்
  வரும்ஹறுபை யினக்தேவோர். என்பன மிகுந்தஉம்பாடம்.

ஒருவரறி யாமலே யெனதினுள மானதில்
உன்னிவரு முன்னுமதிலே
ஓரெழுத்தாகவே யதனையறி யாமலே
யுன்னுளே நின்றபொருளாய்
வருகுமது தன்னிலே பனிரண்டு ஹறுபதாய்
வளர்நாசி நெற்றிநடுவில்
வாழ்வுதரு நாலொன்று மாகவே நின்றபொருள்
வகையதனை யருளுகுருவே
பெருகுமது வொருசுழி வருகுமது விருசுழி
பேரண்ட ரத்தொழிலதாய்
பிரிவுதரு பொருளிலே யருமையுறு நிலையிலே
பேரையறி யாதவகையே
தருகுமது மிப்பொருள் மனதிலுறை யருளவே
தரவேணு மிதுசமயமே
தானுக நின்றுவரு மாணுர் பதங்கள்தரு
தானுக நின்றகுருவே. (௪௰)

உருவா யிருந்ததுந் தேகமது வானதும்
ஒன்றிவரும் வென்றியஞ்சாய்
உரையதனி லாகவே பருவமதி லுருவதாய்
ஓங்கிவளர்ந் தேங்கிவருமே
திருவதி லுறைந்ததும் மஹமூத தானதும்
திருவினருள் வாசிமீதில்
செல்லென்று வந்ததும் வெல்லென் றிருந்ததுந்
திருவையறி யாதவகையே
அருபமது வாகவே நின்றபிர காசமாய்
அதனையறி யாதவகையோ
அருளுருவ தாகவே பொருள்மனதின் மேவவே
யாருமறி யாதகுருவே
தருவதென வன்றுநீ சொன்னவரு ளாகவே
தரவேணு மிதுசமயமே
தானுக நின்றுவரு மாணுர் பதங்கள்தரு
தானுக நின்றகுருவே. (௪௧)

ஆக திருப்பாடல் - ௪௪.

ஞானக்குருவடி விளக்கம்
முற்றுப்பெற்றது.

---

130

ஹா மீம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்:

# ஞானத் திருநிதானம்.

அறுசீர்த்தாழிசை.

குருவைத் துதிக்கக் குருவுடைத்தாள் கொண்டே னடியேன் சிரமீதில்
அருவி லுருவி லெட்டாம லப்பா லப்பா லனுவாகித்
திருவிற் றிருவா யுறைந்துதித்த சேரு மிறையோன் றனைப்புகழ்ந்த
குருவாம் செய்கு ஹல்லாஜைத் துதிக்கக் குருமுன் னிற்பாமே. (௧)

அருவா யருவி லடங்காம லணுவா யணுவி னப்பாலுங்
கருவாய்க் கருவி லடங்காமற் கருவென் றுதித்த ஹக்கவனை
பொருவாய்ப் பொருவி லண்டாண்டப் புகழாய் நிறைந்த பெரியோனைக்
குருவா லறிந்த குருவவர்தாள் கொண்டே னடியேன் சிரமீதில். (௨)

அலிபா மதனி லெட்டாமல் அலிபா யிருந்து மறிபவனை
மெலியா துகந்து தினந்தோறும் விரைவாய் வணங்கு மவர்மனதில்
பொலிவா யிருந்து போதரவாய்ப் பொருளாய் நிறைந்த பெரியோனைக்
குருவா லறிந்த குருவவர்தாள் கொண்டே னடியேன் சிரசீதில். (௩)

பேயா யிருந்து பேயதனில் விரைவா யுகந்து தினந்தோறும்
காயாய்க் கனியாய்ப் பூவாகிக் கருத்தோ டுறைந்த ஹக்கவனை
மாவா சியிலுறைந் தண்டாண்டம் வகையுங் கடந்து மிருப்போனை
கோவா லறிந்த குருவவர்தாள் கொண்டே னடியேன் சிரமீதில். (௪)

உருவா யுணர்வா யுயிராகி யுயிருள் ளுறைந்து முயிராகி
யருவா யருவுள் ளுருவாகி யருளா யருளி னப்பாலும்
பொருவாய்ப் பொருளாய்ப் புகழாகிப் புருவத் திடையி லிருப்பவனைக்
குருவா லறிந்த குருவவர்தாள் கொண்டே னடியேன் சிரமீதில். (௫)

உருவா யுன்னு வொளிவாகி யொன்று யொன்றி லுறைந்திருந்து
மருவாய் மன்னு மனமதனில் வடிவா யிருந்து வடிவாகித்
தருவாய்ச் சகல பொருளதனுந் தானே யிருந்து தரிப்பவனைக்
குருவா லறிந்த குருவவர்தாள் கொண்டே னடியேன் சிரமீதில். (௬)

பொருவாய்ப் பொன்னாய்ப் புகழாகிப் புனலாய்க் கனலாய்ப் பொருளாகி
மருவா யவ்வி லுறைந்தேதான் மண்ணாய் விண்ணி லடங்கலுந்தான்
பருவாய்ப் பனிரண் டினிலுறைந்தே பருவப் பொருளா யிருந்தோனைக்
குருவா லறிந்த குருவவர்தாள் கொண்டே னடியேன் சிரமீதில். (௭)

ஆவென் றமைத்த வண்டபிண்டம் அறுஷும் குறுஸு லெளஹுகலம்
தாவென் றெழுந்து தானாகித் தருவாய் மருவாய்த் தயலாகிப்
பாவென் றுதித்து பலபடைப்பும் பகர்சே ரண்ட பிண்டமெலாம்
கோவென் றுதித்த கொற்றவனைக் கொண்டே னடியேன் சிரமீதில். (௮)

பாரும் புகழும் பலபடைப்பும் பகர்சே ரண்ட பிண்டமெலாம்
சேருஞ் சுழிக ளெட்டீதுவுஞ் சென்றே யிருந்த தசவாய்வும்
ஆருமறியா தகாரமொடு மப்பாற் சிகார முடிப்பவனை
பீரா லறிந்த பீர்பாதங் கொண்டே னடியேன் சிரமீதில். (௯)

ஆக முடனே பலபொருளு மருளுந் தவமு மதின்பெருமை
வாகு பெறவே யின்னதென்று வகையா லுரைத்த வல்லோரை
தாக மோகத் தாலவரைத் தானே காண வாசைகொண்டேன்
சேகென் றுதிஹல் லாஜுபதம் கொண்டே னடியேன் சிரமீதில். ()

முத்தாய் முத்தில் வடிவாகி முனையாய்ச் சுழியி லணுவாகிச்
சித்தாய்ச் சித்தில் வடிவாகித் திருவாய்த் திருவி லுறைந்தேதான்
பத்தாய்ப் பத்தில் பனிரண்டாய்ப் பாங்காய் நான்கி லுறைவோனை,
எத்தா லறிந்த பீர்பாத மெளியேன் சிரமீ தணிந்தேனே. (௧௧)

எண்ணு யெழுத்தா யிசையாகி யிரவும் பகலு மற்றிடத்தில்
நண்ணு யோடும் பனிரண்டில் நான்கா யிருந்த நாயகனை
யுண்ணு யுருவி லொளிவாகி உகார முடிவி லுதித்தவனைத்
தன்னு லறிந்த பீர்பாதந் தானே சிரமீ தணிந்தேனே. (௧௨)

* அஞ்சாய் அஞ்சி லாறுரு யமர்ந்து நின்ற வரும்பொருளைப்
பிஞ்சாய் மீமில் புதையலுமாய்ப் பிறந்த வெழுத்தங் கொன்றுதித்து
நஞ்சாய் மூல் நடுவணையில் நடனம் புரிந்து மிடவலமும்
துஞ்சி யிருந்து துறையாகிச் சொரூப விழிக்குட் டுதிப்பவனை
வஞ்ச மறவே யறிந்தகுரு மலர்த்தாள் சிரமீ தணிந்தேனே. (௧௩)

மூன்றாய் முதலாய் முடிவாகி மூலத் தமர்ந்த சோதியதாய்
ஆண்டோ னென்று மடங்காத வருள்மூன் றுதித்தே யப்பாலும்
நீண்டே யதிலொன் றிறையெனவும் நெகிழா ரதிலொன் றுருவெனவும்
ஆண்டே யறிந்த குருவினுட பதந்தான் சிரமீ தணிந்தேனே. (௧௪)

* இதில் ஓரடி பிரதிகடோறும் மிகுந்தே பாடம்.



நாலாய் நடுவில் நாயகமாய் நயன விழியில் முச்சுடராய்
நூலாய் நூலி லுறைந்தேகி நுனியாய் நுனியுள் ளுறைவாகி
மாலாய் மால்கொண் டெழுப்புதலாய் வரியாம் புரியெட் டினுமுறைந்த
கோல் கண்டறிந்த குருவினுட பதந்தான் சிரமீ தணிந்தேனே. (௧௫)

அஞ்சா யஞ்சில் முடிவாகி யஞ்சி லிருந்தே யாடிநின்று
நெஞ்சாய் நெஞ்சி லுறைந்தேகி நினைவாற் றுதிக்கும் நித்தியனைப்
பஞ்சாய்ப் பஞ்சா போலிருந்தே பரமா யுரமா யிருப்பவனை
வஞ்ச மறவே யறிந்தகுரு மலர்த்தாள் சிரமீ தணிந்தேனே. (௧௬)

ஆறு யாறி லாறுரு யதனி லெட்டா தப்பாலும்
நீறாய் நீறைச் சுட்டங்கி நிலமுங் கடந்து நிலந்தாண்டி
ஊறு லூறு மமிர்தமதி லுறைந்தே யிருந்த வுத்தமனைப்
பேறு லறிந்த குருபாதம் பெலமாய்ச் சிரமீ தணிந்தேனே. (௧௭)

ஏழா யெழுத்தா யினமாகி யினத்திற் கெட்டா திருப்பாகிப்
பாழாய் முப்பாழ் வெளியாகிப் பரமாய்ப் பரமி லுறவாகி
வாளாய் வாளின் கூர்மையதாய் வாளால் வெட்டும் வகையாகி
ஆளாய்க் கண்ட குருபாத மடியேன் சிரமீ தணிந்தேனே. (௧௮)

எட்டா யெட்டில் மவுனமதா யெட்டா னெட்டா னெவரொவர்க்கும்
ஒட்டாப் பொருளி லுருவாகி உகார அகாரத் துறைவுசெய்து
தட்டா வட்டச் சுழியாகித் தானே யிருந்து தரிப்பவனைக்.
கட்டா லறிந்த ஹல்லாஜு கதந்தான் சிரமீ தணிந்தேனே. (௧௯)

பத்தாய்ப் பத்தி லுருவாகிப் பதமா யிருந்த பாலகனைச்
சித்தா லறிய வடியேற்குச் செயலுந் தருவாய் செயல்கோவே
முத்தாய் முத்தில் வடிவான முறையுந் தருவாய் சிறுபயற்கு
பத்தி யருள்செய் ஹல்லாஜு பதந்தான் சிரமீ தணிந்தேனே. (௨௦)

கோச்சகம்.

இத்தனையும் நின்பேரி லேழையடி யேன்புகழ்ந்தேன்
பத்திதரு மெய்ஞ்ஞான பீதமுமடி யேற்கருள்வாய்
முத்திதரு மெய்ஞ்ஞான மோட்சவழி யும்மருள்வீர்
சித்தமதி லேயுறையுஞ் செய்குஹல்லா ஜென்குருவே. (௨௧)

ஆதாரம் நீர்தா னடியேற்குன் னுதரவு
நீதாரம் நீயெனவே நிச்சயங்கொண் டேபுகழ்ந்தேன்
பாரேழுந் தானடங்கப் படைத்த பெரியோனைச்
சீராக வேயறிந்த செய்குஹல்லா ஜென்குருவே. (௨௨)

காயமதி லேயிருந்து கண்ணொளிவ தாயாட்டும்
உபாயக் கருவியெல்லா மொக்க னொறுங்கிடவே
அபாயத் தனங்க ளவைகள்பொடி படவருள்வீர்
ஷபாஅத் தனமுமருள் செய்குஹல்லா ஜென்குருவே. (௨௩)

ஏழைசிறு பைதலவ னெத்தனைசொன் னாலுமுங்கள்
ஆளிற் சரியாக்கி யாண்டுகொள்ளும் ஆண்டவரே
நாளு முமதுபதம் நன்றாக வென்சிரசில்
ஆளத் தரிக்கவருள் செய்குஹல்லா ஜென்குருவே. (௨௪)

சின்னஞ்சிறி யேன்றனையும் சேர்ந்தவர்கள் யாவரையும்
நண்ணு மருள்கொடுத்து நன்றாக வாள்வீர்காண்
விண்ணில் விரைந்துயிரை மேலாக வஞ்சதையுஞ்
சின்மயத்தாற் காட்டியருள் செய்குஹல்லா ஜென்குருவே. (௨௫)

ஒன்றா யுறைந்து முருவா யுகந்தேதான்
நன்றாங் கமல நயன விழியதனில்
மன்றுளே யாடும் மலர்ப்பாதந் தந்தெனக்குள்
சென்றபிர காசமருள் செய்குஹல்லா ஜென்குருவே. (௨௬)

அஹதா யதின்பொருளா யப்பாலு றைந்தேதான்
உகார நலமு முதிப்புமரு ளென்பீரே
அகார வடிவி லருப சொருபமதாய்
சிகார முடிவருளுஞ் செய்குஹல்லா ஜென்குருவே. (௨௭)

ஒன்றா யுதித்தெழுந் தொன்பதாய் வந்துலகில்
நன்றாக நின்று நடுவணையி லேசிறந்து
வென்றி சுழிமுனையில் மெள்ள வுறைந்திடும்வஸீன்
என்ற பொருளருளும் செய்குஹல்லா ஜென்குருவே (௨௮)

மண்டலமா றிலிருந்து வாகாய் மணியொலியாய்க்
குண்டலியின் மேலாய்க் குருவிருக்கும் முப்பாழ்மேல்
தண்டலையை யுங்கடந்து தாண்டுமரு ளும்மறிய
வென்றியரு ளும்பீரே விளங்கும்ஹல்லா ஜென்குருவே. (௨௯)

கண்டம கண்டமுதற் கன்னியே முன்னில்நின்று
வென்றியாய் நல்ல விளங்குசங்கு சக்கரத்துள்
கொண்டலிற் றாவிக் *குருத்தெழுந்த குருவருளைச்
சென்றவடி யேற்கருளும் செய்குஹல்லா ஜென்குருவே, (௩௦)

* குறித்தெழுந்த என்றாஉம் பாடம்.



அப்பாய்ப் பிருதிவியு மானதேய்வு வாய்வுமுதல்
மெய்ப்பான விண்ணும் வெளியுமொளி யுங்கூடி
ஒப்பாம் உகாரத் துருவான தேகமதைச்
செப்பி யருள்காட்டுஞ் செய்குஹல்லா ஜென்குருவே. (௩௧)

தாமரையி னுள்ளே தருவா யுறைந்தகெந்தி
தேன்மரையி னுள்ளாய்ச் சிக்கறுத்துத் தான்பாய்ந்து
பூமரையாஞ் சுழிமுனையிற் போக்குவரத் தாயிருந்த
தேன்மரையைக் காட்டியருள் செய்குஹல்லா ஜென்குருவே. (௩௨)

அந்தமுடி வாயிருந்தே ஆவென் றெழுந்துநின்ற
சிந்தையிலொன் றாயிருந்த திருத்தாக்க வேளைதனில்
முந்துஞ் சொருப முறையாகி வந்தவனைச்
சிந்தித் திருக்கவருள் செய்குஹல்லா ஜென்குருவே. (௩௩)

மின்னா யிருந்து வெளியாய் வெளியொளியாய்
உன்னா வுருவாகி யுயர்ந்த பொருளதனை
எண்ணா வெழுந்தா யிருதயத்திற் காணுதற்குச்
சின்மயத்தைத் தானருளும் செய்குஹல்லா ஜென்குருவே. (௩௪)

மூலமாய் மூல முடிவாகி நின்றவரே
கோலமாய் வந்து குருவாகி நின்றவரே
ஆலமா யெங்கு மமர்ந்தபொரு ளாகிநின்ற
சீலவடி வைக்காட்டும் செய்குஹல்லா ஜென்குருவே. (௩௫)

எங்கும் நிறைந்தே யிருந்தபெரி யோனுடனே
தங்கத்தி னோடுதங்கந் தானிசைந்தாற் போலிசைந்தே
அங்கத்தி னுள்ளேதா னாடிநின்று தானிருந்த
செங்கைவடி வைக்காட்டுஞ் செய்குஹல்லா ஜென்குருவே. (௩௬)

ஆடும்பொரு ளெல்லா மவனோ டவனாகிச்
கூடும்பொரு ளாய்ச்சூத் திரத்திற் றலைவிதியாய்த்
தேடுவோர்க் கெந்நாளும் சிக்கியிருந் தேயுறைந்து
தேடுபொரு ளைக்காட்டும் செய்குஹல்லா ஜென்குருவே. (௩௭)

அத்த முடிவா யருவாகி யாணியதாய்
அத்த முடிவா யழகுக் கடங்காதாய்
அத்தங் குருவா யருவாய்ஆ வென்றெழுந்த
*சித்தந் தெரியவருள் செய்குஹல்லா ஜென்குருவே. (௩௮)

* அத்தம் என்றாஉம் பாடம்.

சித்தி லுறைந்துநின்று திருவின் பொருளாகி
சித்திலே நின்று தெளிந்த குருவாகி
சித்திலே மாயச் சிவவடிவ தாகிநின்ற
சித்தை யருளுஞ் செய்குஹல்லா ஜென்குருவே. (௩௯)

அடியேன் றனையீன்ற வன்னைபிதா தந்தைமுதல்
அடியே னுடன்சேர்ந் திருந்தவர்கள் தன்கிளையும்
அடியேன்றன் சொல்லதனை யாதரித்தோர் யாவரையும்
அடியுளாண் டோனருளிற் சேர்க்குமுஹல்லா ஜென்குருவே. (௪0)

**எண்சீர்க்கழில் நெடிலடி யாசிரியவிருத்தம்.**

உண்ணயிலு முதிக்கையிலு முதவி நீர்தான்
உண்கிறதுக் குதிக்கிறதுக் குரமும் நீர்தான்
எண்ணுகிற தெழுதுகிற விசைவு நீர்தான்
என்சிரசி லும்துபத மிசைவாய்க் கொண்டேன்
உண்ணயிலு முறங்கயிலு முதிப்பு நீர்தான்
உருகையிலும் பருகையிலு முதவி நீர்தான்
சின்மயம தாகின்ற செய்கே யென்னைத்
திருவடியில் வரவழைக்குந் திருஹல் லாஜே. (௪௧)

மனதிலுறைந் துன்பதத்தை மனதே வைத்து
மகிழ்ந்திருந்த பூரணத்தின் வாசி யூடே
நினைந்திருந்த மூன்றெழுத்து வாலை தன்னை
நெகிழாம லெந்நாளு மாண்டு கொண்டே
புனைந்திருந்த திருநடன வெளியி லேதான்
பொருளதனைக் காணவருள் புரிவீ ரையா
சினந்திருந்த மனமதனிற் காண மற்றுன்
திருவொளிவி னருள்தருமென் திருஹல் லாஜே. (௪௨)

நடனபுரி வெளியிலிரு கோணந் தாண்டி
நயனவிழி தனிற்றெரியுங் காட்சிக் கப்பால்
புடையிலடி முடியாக மட்டும் நின்ற
பொருளைமன மதனிலருள் புரிவீ ரையா
திடமருளும் மனதிலுறை செய்ய வேதான்
திருவருளி லுருவாகி நின்ற கோவே
உடலுயிரு மொன்றாக நின்றே யாட்டும்
உருவி லுறைந் திருக்குமருள் திருஹல் லாஜே. (௪௩)

விண்ணதிலு மொளிவதிலு முறைவு நீர்தான்
வேதாந்த வட்சரத்தி லுறைவு நீர்தான்



கண்ணதிலுங் கருத்ததிலு முறைவு நீர்தான்
கமலமதில் நின்றாடுங் காட்சி நீர்தான்
உண்ணிடினு முதித்திடினு முதவி நீர்தான்
உள்ளபடி காபுநா ஞன கோவே
தின்னிடினுந் திரும்பிடினும் நீரே யாகும்
திருவிலுரு வாகுமருள் திருஹல் லாஜே. (௪௪)

ஆடியதோ ராட்டமெல்லா நீரே யாகும்
அடிமுடியும் நுனிமணியு நீரே யாகும்
நாடியதோர் நாட்டமெல்லா நீரே யாகும்
நடுவிலுறைந் தருள்புரியும் நடன கோவே
தேடியதோர் தேட்டமெல்லா நீரே யாகும்
திருவொளிவை மனதிலருள் செய்வீ ரையா
தேடியவர் மனதிலுறை செய்யுங் கோவே
திருவிலுரு வாகுமருள் திருஹல் லாஜே. (௪௫)

முப்பாழின் மும்முடிவின் மேலி ருந்தே
மொழியுமதில் முனையாகி முன்னே நின்றும்
அப்பாகி பிருதிவியுந் தேயு மாகி
அருள்வாயு வாகாச மஞ்சு மாகிச்
செப்பாமல் நின்றபர வாயும் விண்ணுந்
தேயுடனே மூன்று மொன்றாய்த் திருகியோடுஞ்
செப்பாத பொருளதனை யறியக் காட்டுந்
திருவிலுறு வாகுமருள் திருஹல் லாஜே. (௪௬)

ஒன்றதனில் நிறைந்தபர நிலையில் நன்றாய்
ஒன்பதுமூன் றாகியுறைந் ததையும் நன்றாய்
வென்றியருள் காணவெளி விளைந்ததையும் நன்றாய்
விரிசுடரும் மணியொலியும் விளையு மோசை
கொண்ட வருள் பரநிலையாய் நிறைந்தமூலக்
குருப்பொருளை மனதிலுறை செய்வீ ரையா
சென்றவருள் விளையவொளி தன்னைக் காட்டுந்
திருவிலுரு வாகுமருள் திருஹல் லாஜே. (௪௭)

மண்டலமூன் றினிலுறைந்து வகைய தாகி
வதையாகி மணியொலியின் மேலே யாகிக்
கொண்டலெனுங் குருவடிவின் வடிவ தாகிக்
குறித்தெழுந்த பரநிலையுங் குருவா மோசை

என்டல்மெங் கணுநிறைந்து மிருந்தே தேகத்
திருந்தசுழி முனையில் நிறைந் தேகமாகி
நின்றுமனத் துறைந்தபர நிலையைக் காட்டும்
நிறுவிநய முறைந்தபர மருள்ஹல் லாஜே. (௪௮)

மூலவனை யாறுதனில் முதலாய் நின்று
முன்னுதலா யுன்னுதலாய் மொழிய தாகிப்
பாலவனை மேலாறி லுறைந்தே ஞானப்
பருகுதலாய்த் தருகுதலாய்ப் பகர்மே லாகிச்
சாலமுடன் பன்னிரண்டி லுகீறந்தே நான்காய்த்
தனுவாகி யணுவாகித் தனுவின் மேலாய்ச்
சீலமதி லுறைந்தபொரு ளதனைச் செப்புந்
திருவிலுரு வாகுமருள் திருஹல் லாஜே. (௪௯)

அண்டமுதல் பிண்டமுத லணுவே யர்கி
அசையுமொரு நாலதனை யகத்துள் ளாக்கி
விண்டருளும் புரியருளுந் தருவீ னையா
மேலாகி நின்றபரம் விளங்குங் கோவே
என்றபர நிலையமதி லிருந்து மேலாய்
இருவினையு மறுக்கவரு ளிசைவீ னையா
சென்றுலகெங் கணுநிறைந்த கோவே ஞானத்
திருவிலுரு வாகுமருள் திருஹல் லாஜே. (௫௦)

கொச்சகம்.

கன்னுசு மாயக் கபடத்தி னுள்ளாகி
என்னுற் கறையேற வெத்தனைநாள் செல்லுமையா
என்னு லதுகடந்தே யேற்றப் பொருள்காண
நண்ணுகக் காட்டுவீர்காண் நாயனரு ளுங்கோவே. (௫௧)

பெண்ணென மாயப் பெருவலையி னுள்ளாகிப்
புண்ணு யுலைந்து * புவியி லலைவேனே
புண்ணு யுலைந்து புவியி லலையாமல்
கண்ணுன தைக்காட்டி கருத்தையரு ளுங்கோவே. (௫௨)

பஞ்சவர்க ளைவர் பார்வைதனி லுள்ளாகிப்
பஞ்சுபோல் நானும் பறந்தங் கிருப்பேனே
பஞ்சுபோல் நானும் பறந்தங் கிருக்காமல்
தஞ்ச மெனும்பொருளைத் தந்தருளு மென்கோவே. (௫௩)

* பேதித்தலைவேனே என்றும்பாடம்.



கருவிகா ணுதிகள்தன் கபாடத்தி னுள்ளாகி
அருகி லிருந்தே யலைந்து மெலிவேனே
அருகி லிருந்தே யலைந்து மெலியாமல்
பொருவி லிருக்கப் புகழ்தருவீ ரென்கோவே. (௫௪)

பெற்றவர்க ளன்னைசுற்றம் பேரு மயராமல்
சித்தை மறந்து திரிந்து மலைவேனே
சித்தை மறந்து திரிந்து மலையாமல்
பத்தி யருளும் பதமுமரு ளென்கோவே. (௫௫)

காய மதைவிட்டுக் கருத்தை நெகிழாமல்
காயமதி லேயிருந்து கருதி யலைவேனே
காயமதி லேயிருந்து கருதி யலையாமல்
தாயை யுறவாக்கித் தாருமரு ளென்கோவே. (௫௬)

பன்னிரண்டில் நான்கைப் பருக வறியாமல்
எண்ணிரண்டு சிந்தை யிருந்து மெலிவேனே
எண்ணிரண்டு சிந்தை யிருந்து மெலியாமல்
பன்னிரண்டில் நான்கைப் பருகவரு ளென்கோவே. (௫௭)

வாசி தனிலுறைந்த வடிவதனைக் காணமல்
பேசி யிருந்து பிறந்தங் கலைவேனே
பேசி யிருந்து பிறந்தங் கலையாமல்
வாசி தனிலுறைந்த வடிவையரு ளென்கோவே. (௫௮)

மூலத் திருந்தாடும் முனைசுழிகா ணுமன்மயிர்ப்
பாலத்தில் நின்றவர்போல் பதறி யலைவேனே
பாலத்தில் நின்றவர்போல் பதறி யலையாமல்
மூலச் சுழிமுனையின் முடிவையரு ளென்கோவே. (௫௯)

பன்னிரண்டு காலாற் பறந்தோடும் வாசிதனை
எண்ணி யடக்கி யிருந்துயான் சாவேனே
எண்ணி யடக்கி யிருந்துயான் சாகாமல்
பன்னிரண்டில் நான்கைப் பரிந்தருளு மென்கோவே. (௬௦)

அம்பரத்தில் விண்ணு மசைந்துமொன்றாய் நின்றபொருள்
நம்பரத்திற் காணமல் நாய்போ லலைவேனே
நம்பரத்திற் காட்டி நாய்போ லலையாமல்
பம்பரத்தை யென்றனக்குப் பகர்ந்தருளு மென்கோவே. (௬௧)

உள்ளந் தனிலே யுறைந்திருந்த மெய்ப்பொருளை
விள்ளுங் குருத்தேடி விரைந்து திரிவேனே
விள்ளுங் குருத்தேடி விரைந்து திரியாமல்
துள்ளு மருளுந் துதிப்புமரு ளென்கோவே. (கூஉ)

மூலத் திருந்த முதண்ட மெய்ப்பொருளைப்
பாலித்துப் பாராமல் பயந்து திரிவேனே
பாலித்துப் பார்த்துப் பயத்தை யகற்றிவிடச்
சூலித்த மெய்ப்பொருளுந் துணையுமரு ளென்கோவே. (கூ௩)

கபாலத் துதித்த கருவை யறியாமல்
விபாலத்தில் * நந்தி மேல்நின்று பார்ப்பேனே
விபாலத்தில் நந்தி மேல்நின்று பாராமல்
கபாலத் துதித்த கருவையரு ளென்கோவே. (கூச)

உச்சியுச்சி யென்றே யுரைப்பா ருலகமதில்
உச்சிதனை யறியா துள்ளுருகி வாடுவேனே
உச்சிதனை யறிந்தே யுள்ளுருகி வாடாமல்
பச்சைப் பொருளும் பதமுமரு ளென்கோவே. (கூ௫)

அந்த முடிவி லடங்காமல் நின்றவனைச்
சிந்தித்துப் பார்க்கத் திறமுமில்லை யென்கோவே
சிந்தித்துப் பார்க்கத் திறமதனைத் தான்வருத்தி
உந்தி தனிலுதித்த வுதிப்பையரு ளென்கோவே. (கூகூ)

சொல்லற்றுப் பொருளற்றுத் துணையற்று நின்றவனை
† மல்லுற்று வந்த வகைகாட்டி வைப்பீர்காண்
சொல்லற்று மூலச் சுபசொருபந் தனைக்கான
வெல்லைப் பொருளதனை யெனக்கருளு மென்கோவே. (கூஎ)

பொய்யும் புலையும் பொருந்த வுரைத்தடியேன்
மெய்யதனி லாகாமல் வீணு யலைவேனே
மெய்யதனைத் தானறிந்து மெள்ள வுரைப்பதற்கு
மெய்ப்பொருளைக் காட்டி விடியவரு ளென்கோவே. (கூஅ)

மெத்தப்பிழை செய்தடியேன் வீணுகப் போகாமல்
உற்ற பதந்தனக்கே யுடனுள தாக்குவீர்காண்
உற்ற பதந்தனக்கே யுடனுள தாயாக்கிச்
சித்தை யருளுந் திருவுமரு ளென்கோவே. (கூகூ)

* நெற்றி யென்றாஉம் பாடம். † மல்லற்று என்றாஉம்பாடம்.



என்கிளையு மென்சொல்லைக் கேட்டவர்க டங்கிளையும்
அங்கமதில் வைத்தீன்ற வரியதந்தை தாய்முதலோர்
பங்கயஞ்சே ருன்னைப் பதத்திற் பணிந்திடுவோர்
தங்க மலர்ப்பதத்திற் றுணுக்கு மென்கோவே. (எ0)

சந்தவிருத்தம்.

திருவுறைந்து திருவுகந்து திருநிறைந்த போதினில்
மருமலர்ந்து திருவலர்ந்து வாசம்வந்து கொண்டபின்
திருவுறைந்து திருவிலுற்று திருவினுள் நிறைந்திடக்
குருவுகந்த திருஹல்லாஜ- தாள்சிரமேற் கொண்டேனே. (எக)

அண்டபிண்ட மெங்கணு மருள்நிறைந்து கொண்டதால்
விண்டலங்க ளெங்கணும் மேவியேநி றைந்ததால்
மண்டலங்கள் மூன்றிலும் வாசியோடி மீள்தலாற்
குண்டலிக்குள் குருஹல்லாஜ- தாள்சிரமேற் கொண்டேனே. ()

ஆவியோ டுறைந்தமூல மெங்கணும் நிறைந்திடத்
தாவியெங்க ணும்நிறைந்து தண்டலைபு குந்ததைப்
பாவியேழை கண்ணினிற் பரிந்துகாண வேயருள்
கூவினுக்குட் குருஹல்லாஜ- தாள்சிரமேற் கொண்டேனே. (எ௩)

உற்றஞான போதக முறைந்தது முகந்ததுஞ்
சித்திஞானச் சித்தியோக சித்தியுள் நிறைந்திட
முத்திஞான மேவியந்த முயற்சியான் முயன்றிடக்
குத்தினுக்குட் குருஹல்லாஜ- தாள்சிரமேற் கொண்டேனே. ()

மனத்தினுள் மனத்தைவைத்து வாயுவோ டிசைந்திட
இனத்தினுள் ளினத்தைவைத்து மேகமாக நின்றதை
மனத்தினுள் ளிருத்திட வகையதாக வேயருள்
தினத்திடென்றன் குருஹல்லாஜ- தாள்சிரமேற் கொண்டேனே.

வேறு.

உத்தம மானவல் லோனருளாலடி யேனுடன் சேர்ந்தவரும்
அத்த னருளா லெனையீன் றிடுமுய ரன்னைபி தாவுடனே
உத்தம வல்லோ னருள்ஹல றத்திலு தித்தஹல் லாஜ-டைய
சுத்தபொற்பாதத்துணையையென்னுளுஞ் சேர்வதையுண்மைகொண்டே.

வேறு.

உத்தம ஞான போதமு முற்பன மான யோகமும்
பத்திமா ருத நேசமும் பார்வையி லேகண் ணுசையுஞ்
சித்தியி லேநின் றேகமாய் தேவர் காண்கி லாதவா
கத்தனே யெந்தன் கண்ணினிற் காண்பது மெந்த நாளிலோ. (எஎ)

ஆதியோ டந்த மாகவே அவ்வில் நிறைந்த வன்பரோ
வேதியர் காண்கி லாதவா வினைக ளறுக்கும் வேதரோ
நீதியி லுந்து போதரோ நேசம் விடாத வாசரோ
காதல் நிறைந்து கண்ணினிற் காண்பது மெந்த நாளிலோ (எஅ)

அஞ்செ ழுத்தோ டந்தமா யருள்நி றைந்து கொண்டவா
தஞ்சநின் பாதச் சாயலுள் சாதக மேனி யானவா
வஞ்சமில் லாமல் நின்றவா வடிவி லுகந்த வல்லவா
கஞ்சபொற் பாதங் கண்ணினிற் காண்பது மெந்த நாளிலோ. (எகூ)

வேதநெ றிக்குள் நித்தலும் வேதப்பிர காச மாகவே
ஓதிய மூன்றெ ழுத்தினை யுறைத்திட நித்த முன்திறம்
பாதிர ஞான வாசியுள் பதினெட்டி லுறைந்து நின்றவா
காதிரு கண்ணில் யானுமே காண்பது மெந்த நாளிலோ. (அ0)

அவ்வலில் நின்று அஹதாய் அவ்வில் நிறைந்து பேயுமாய்
மவ்வி லுறைந்த சோதியாய் மதன விழிக்குள் நினைவுமாய்
செவ்வி லுறைந்து நின்றுதான் செய்குஹல் லாஜென் சாகிபை
கல்பில் நிறைந்து கண்ணினிற் காண்பது மெந்த நாளிலோ. (அக)

ஒன்றில் நிறைந்து முண்மையா யோரெழுத் தெங்கும் நின்மையாய்
ரண்டில் நிறைந்து மூலமாய் நடுவில் நிறைந்து நடுவுமாய்
வென்றியுள் ளாசை கொள்ளவே வேதரோ ஞான யோகரோ
கண்டிரு பாதங் கண்ணினிற் காண்பது மெந்த நாளிலோ. (அஉ)

அவ்வில்க பால மானதும் அகாரத்தில் ரூப மானதும்
மவ்வி லுதித்த நெற்றியும் வகாரத் துதித்த புருவமும்
குவ்வி லுதித்த மூலமுங் குதறத் துதித்த அயினையுங்
கல்பில் நிறைந்து கண்ணினிற் காண்பது மெந்த நாளிலோ. (அங)

இல்லில் நிறைந்த நாசியும் இல்மில் நிறைந்த நாவையும்
குல்லில் நிறைந்த வாசியுங் குதறத் துதித்த காதையும்
முல்லில் நிறைந்த மூக்கையும் முவலிருத்தி லுதித்த விதழையும்
கல்பில் நிறைந்து கண்ணினிற் காண்பது மெந்த நாளிலோ. (அச)

சிகாரத் துதித்த வடிவையுந் திருவி லுதித்த ரேகையும்
நகாரத் துதித்த நடுவையும் நவலிருத்தி லுதித்த நன்மையும்
மகாரத் துதித்த வாசமும் மவலிருத்தி லுதித்த நேசமும்
அகாரம் நிறைந்து கண்ணினிற் காண்பது மெந்த நாளிலோ. (அரு)



உன்னிய ஞான போதத்தோ ரொன்றி னிறைந்த வேதத்தோர்
சின்மய மான கரத்தினோர் சிகாரி லெழுந்த பரத்தினோர்
என்னுடன் சேர்ந்த பேர்களும் யானுநின் பாதத் தாகவே
கண்ணில் நிறைந்து கண்ணினிற் காண்பது மெந்த நாளிலோ. (அசா)

எட்டில் நிறைந்து மொன்றதா யேகிய மூல நாடியுள்
தட்டிடா ஞான போதமுந் தங்கிய மூன்று வாசியுள்
ஓட்டிய வஞ்செ ழுத்தினை யுயிராக வேநின் றறிந்திடக்
கட்டிய நீதர் தன்னையே காண்பது மெந்த நாளிலோ. (அஎ)

சிந்து.

அஞ்செழுத்தி லுற்றபர வன்புநிறைந் தோரே
ஆவியினுள் ளேயுறைந்த வேதநெறி யோரோ
தஞ்சமில்லா நாயனுடன் தானேபேசு வோரோ
தானேபதி னெலாயிர மானமுகத் தோரோ
தஞ்சமுற வேயடியேன் தனையாளும் பீரோ
தாரணிக்குள் வந்துஹக்கா யிக்குரைக்கும் பீரோ
வஞ்சமற வேழைதனைக் காத்தருள்செய் வீரோ
வல்லோனரு ளானகுத றத்தில்வரு வோரோ. (அஅ)

ஆதியுட னன்றுமுதல் பேசிநின்ற பீரோ
ஆனபனி ரண்டில்வக்கை யாகவரு வோரோ
நீதியுட னெந்தன்குரு வானவென்பி ரானே
நித்தலுமும் பாதமதில் சுத்தமருள் பீரோ
உற்றஹக்கா யிக்குபைத்து ஓதிடும்நல் லோரோ
உற்பனம தாயிறைகுத் றத்திலுதித் தோரோ
சித்தமதி லேயடியேன் றனையருள்செய் வீரோ
செல்வரோ யருள்பெருகும் செய்கேஹல் லாஜே. (அகூ)

வேறு.

ஆதித னக்குள் ளருள்ஹல றத்தில சைந்திட நின்றவரோ
வேதியர் தங்கள்ம னத்திடை காணரும் மேல்வரும் வல்லவரோ
ஓதியே வுற்பன மாகநி றைந்திட வுற்றிடு முத்தமரோ
சேதுறு பொற்பத மென்னுளே காணவே செய்குஹல் லாஜருளே. (கூ0)

வேறு.

மறையில்நி றைந்தவரோ மனமீதினி லுற்றவரோ
இறையருள் பெற்றவரோ யெவரிலு முத்தமரோ
மறையொளி முத்திடவே வகையருளும் பீரோ
தறையினில் நின்பாதந் தாளருளும் கோவே. (கூக)

கருவில்நி றைந்தவரோ ககனிடை யுற்றவரே
அருவில்நி றைந்தவரோ யருளினி லுற்றவரோ
பொருவில்நி றைந்தவரோ பொருளினி லுற்றவரோ
திருவில்நி றைந்தவரோ செய்குஹுல் லாஜருளே. (௯௨)

அந்தர மானவரோ யாதியி லுந்துவரோ
சிந்திதப் பொற்பொருளே தேவர்கா ணுதவரோ
உந்தியி லுற்றவரோ வுமையடி யேன்காணச்
சிந்தை மனந்தனிலே செய்குஹுல் லாஜருளே. (௯௩)

வானில்நி றைந்தவரோ மவ்விலு தித்தவரோ
நூனில்நி றைந்தவரோ நுன்னறி வானவரோ
தானில்நி றைந்தவரோ தானவ னுனோரோ
தீனுள்ளி ருந்தவரோ செய்குஹுல் லாஜருளே. (௯௪)

அவ்வலில் நின்றவரோ யருளுக்குளு றைந்தோரோ
செவ்விய மானவரோ திருவுக்குளு றைந்தோரோ
உவ்விலு தித்தவரோ யுருவுக்குளு றைந்தோரோ
செவ்விலு தித்தவரோ செய்குஹுல் லாஜருளே. (௯௫)

வேறு.

ஆனக பாலந் தனிலே நிறைந்திடு மையரோ - அதி
லாரு மறியாமல் நின்றுபிறந்திடு மையரோ
வானக மேழும்நி றைந்துப ரந்திடு மையரோ - அருள்
வானவர் தேவர்கா ணுமல்நி றைந்திடு மையரோ
மானத வங்கள்நி றைந்துமு கந்திடு மெய்யரோ - மெய்ஞ்
ஞானமு ரைத்திடு நீதியி லுற்றிடு மெய்யரோ
சேனக மென்னொடு சேர்ந்தவர் யாவர்கள் தன்னையும் - அருள்
தீன்படப் பொற்பாதந் தன்னி லருள்செய்கு ஹுல்லாஜே. (௯௬)

மூலச்சு ழிக்குள்ந டுவட்டந் தன்னிலு றைந்திட - முனை
யாகிய தாம்பன் னிரண்டினில் நான்கைமு யன்றிட
தாலத ராதல மெங்கணு மூழ்பன மாகிட - சகல
மாமும்முல் குருனென் றகண்டமு தற்பிர காசமாய்
பாலத லங்கள்நி றைந்திடக் கோணம தெட்டினும் - பசி
ருத்திலு றைந்துநி மிர்ந்திட வெங்கணும் நின்றதாய்
சீலபொற் பாதத்தை யெந்நாளுங் கண்ணினிற் காணவே - திரு
வாகநி றைந்துப ரந்திடு மென்செய்கு ஹுல்லாஜே. (௯௭)



என்னையும் நின்பாதந் தன்னினிற் சேர்த்திடுஞ் சாகிபே - என்னை
யீன்றவர் தன்னைநின் பாதத்திற் சேர்த்திடுஞ் சாகிபே
என்னுடன் பேசுவர் தன்னையுஞ் சேர்த்திடுஞ் சாகிபே - என்னோ
டிணங்குவர் தன்னைநின் பாதத்திற் சேர்த்திடுஞ் சாகிபே
என்னோடு சேர்ந்தவர் தன்னையுஞ் சேர்த்திடுஞ் சாகிபே - எளி
யோர்க்குநீ ரல்லாமல் வேறொன்று மில்லையென் சாகிபே
சின்மய மாகநி றைந்துப ரந்திடுஞ் சாகிபே - திரு
வாகநி றைந்துப ரந்திடு மென்செய்கு ஹுல்லாஜே. (௯௮)

அறுசீர்ச்சந்தவிருத்தம்.

உதித்திடும் வல்லவன் சேர்ஹுல றத்தினி லுண்மைய தாயெழுந்த
கதித்திடும் வல்லவ ரேயடி யேன்றனைக் காவல்செய் தேயருள்வீர்
எதிர்த்தலி லென்னொடு சேர்ந்தவர் யாவரு மென்றுயி தந்தையுடன்
திதித்திட பொற்பதந் தன்னொடு சேர்த்தருள் செய்குஹுல் லாஜருளே.

எண்சீர்க் கழில்நெடிலடி யாசிரியவிருத்தம்.

எடுத்திட்ட வஞ்செழுத்துத் தேகத் துள்ளே
இதமுற்ற ஞானமருள் முற்றுங் காணப்
படுத்திட்ட வஞ்செழுத்து மடியேன் காணப்
பராபரமு முன்னினின்ற பரமுங் காண
விடுத்திட்ட மூலமதி லாறு தாரம்
வினையறுத்து நின்றசிவ பதியுங் காணத்
திடுத்திட்ட திடுக்கமற வருள்வீ ரையா
திருவிலுறைந் திருக்குமருள் திருஹுல் லாஜே. (௧௦௦)

பூரணமாம் வாசிதனி லுறைந்த வேதப்
புகழையருள் புகழையருள் புரிய வேணும்
காரணமாம் பனிரண்டில் நான்க தான
கருவதனைத் தெரியவருள் புரிய வேணும்
ஆரணமா யெல்லாந்தா னெனக்குத் தந்தே
அடுத்தவரை வகையாய்த்தன் பதத்தி லாக்கிச்
சீரணுமென் பீர்ஹுல்லா ஜைப்பு கழ்ந்த
திருநிதா னமுமுடிந்த முற்றும் ஆமீன். (௧௦௧)

ஞானத்திருநிதானம்

முற்றுப்பெற்றது.

ஹா மீம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஞானத்திருப்புகழ்.

## காப்பு.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஒருமுகந் திறந்து மொருமுகம் நிறைந்தும்
ஒருமுக மெவ்வையு முணர்ந்துந்
திருமுக மலர்ந்தும் பலபல வுயிருந்
திரண்டுளம் புரிந்துமோர் முகமாய்
வருமுக மொன்றே பழுத்துறக் கனிந்து
வளர்ந்திடும் முளத்தினில் நிறைந்த
குருமுக மதனை யகத்தினில் நிரம்பக்
குறித்துநின் பாடலை யிசைப்பாம்.

---

## நூல்.

தனதனன தந்தனந் தந்தனந் தந்தனந்—தனதான.

அடிமுடிசி றந்துவந் தங்கெழுந் தண்டரும்
நடுவருள்வி ளைந்துயர்ந் தண்டமைந் துண்டதும்
அகிலபுவ னங்களொ டன்பருந் தொண்டரும் அழகாக
அருவுருவி ளைந்துநின் றந்தமுஞ் சந்தமுந்
திருவருள்ம கிழ்ந்துநின் றங்கெழுந் திங்களும்
அதிரொலியி னைந்திசைந் தங்குறுந் தந்தொனி யுயிர்யாவும்
உடுவொளிப ரங்களொ டங்கெழுந் தன்பரும்
நடனசுவ னங்களுந் தங்கமும் பொங்கமும்
உருகுசுக வின்பமென் றன்புறுங் கண்குளிர் மஹாமூதர்
ஒளிகொடுவ மைந்தமைந் துஞ்சிறந் தெங்கணும்
பளபளென நின்றுகந் துந்தெளிந் துன்பரம்
உருகுநபி செஞ்சரண் ணஞ்சமென் னெஞ்சகம் அருள்வாயே
கொடிமுடிய சைந்தசைந் தும்விசும் பங்கியும்
மடமடென நின்றிளந் துஞ்செறிந் தஞ்சினுங்
குறிவெளிதெ ளிந்துரண் டஞ்சிவம் வெஞ்சினங் கொடிதாகி



குவடுறவ ணிந்தணிந் தும்படிந் துந்தினுஞ்
சிலவுருவி ளைந்துளைந் தும்மெதிர்ந் தின்புறுங்
குறிவிழியி னன்பொடுந் தங்கவுந் தங்கொரு வுருவாகி
துடியுயிர்ச மைந்தமைந் துங்கொழுந் துந்திடுஞ்
சுடரொளிநி றைந்துறைந் துந்தணிந் துஞ்சரஞ்
சுழிவளிபி றந்திறந் துங்கழிந் தெங்கிடுங் கலைநாலும்
சுகமெனது ளன்பினில் நம்பிடும் நின்பரஞ்
சுருதிகலை வந்தடைந் தும்வரந் தந்திடுஞ்
சுருதிவெளி யங்குது யின்றிடும் நுக்தருள் றஹ்மானே. (௧)

---

தந்தனதனன தத்தனதனன—தனதான.

அன்புறுமணியே முச்சுடரழகே
அந்தரவெளியே வுத்தமவொளியே
அஞ்சினில்நடுவே வைத்திடும்பெரியோர்க் கருள்சோதி
அங்கியினனலே முத்தொளிதெளிவே
மந்திரநினைவே நிற்சிவவருளே
அந்தியினிருள்மீ தட்சரமுடையோர்க் கருளாதி
வன்பெறுமறிவாய்த் துட்டரொடினமாய்
நெஞ்சினிலறிவைப் பற்றிடவறியா
வஞ்சினமனதோர் டுக்ரமமதமாய் அதிகாம
மங்கையர்சுகமே நித்தலுமதுவே
மன்றியவினைபோ யற்றனுதினமும்
மன்றுளோவளரும் முச்சுடர்முகமே யருள்வாயே
நம்பினதுணையே மட்டறவடியேன்
நந்தியினருளை முட்டறவருள்வாய்
நஞ்சினையமுதாய் துய்க்கவும்நினைவோ டருள்வாயே
நன்றெனும்விளைவாய் வட்டமுமதிலே
செங்கனல்வளியோ டப்புறைவதிலே
நம்பரவெளியோ டுத்தம்புவியே நலமாக
முன்பொருவிருள்மீ திப்படிமுறையாய்
முண்டகமதிலே வைத்திடுதொழிலாய்
முந்தினசுழியோ டெத்தையுமளியோர் முதலாகி
முன்றிருவொளியாய் *சக்தினிலுருகா
சங்கெழுமுறமஃ ஷஉக்கினிற்பெருகி
முங்கியவொலிமா நுக்திஷஉக்கருளே றஹ்மானே. (௨)

---

* சங்கினில் என்றூஉம் பாடம்.

தனதத்த தந்த தந்த தந்த தந்த தான—தனதான.

அருள்சிறந்தெ ழுந்தெ ழுந்தெ ழுந்து நின்ற சோதி
யகிலவண்ட ரண்ட ரண்ட ரம்பு ரிந்த நீதி
யணுவினுங்க டந்த சைந்த சைந்த சைந்த னுதி யுருவாகி
யடரவந்த திர்ந்த திர்ந்த திர்ந்த ருண்ட ரூபம்
மடல்விரிந்த ழுந்த ழுந்த ழுந்தி யன்பு ரூபி
யடிசிறந்த விழ்ந்த விழ்ந்த விழ்ந்த ணைந்த காம நதியாகி
உருவினைந்து கந்து கந்து கந்து ருண்ட தீப
மணியிருந்தி ரைந்தி ரைந்தி ரைந்த வோசை
யுருகியங்க மெங்கு மெங்கு மெங்கு மெங்கு மாகி நிறைவாகி
உறையில்நின்று றைந்து றைந்து றைந்த ழுந்தி ரண்டு
மறைவுகொண்ட லர்ந்த லர்ந்த லர்ந்து ரண்டு மூன்று
வழிசுழிந்து யர்ந்து யர்ந்து யர்ந்து யர்ந்து மஞ்சு வளைவாகி
குருமொழிந்தி சைந்தி சைந்தி சைந்தெ ழும்பு காலில்
உயர்விசும்பொ டங்கி யங்கி யங்கி யங்கி சென்று
ஒளிபரந்தி றந்தி றந்தி றந்த யர்ந்த நாலும் உளமீதில்
குவிவினைந்துள் நஞ்சு நஞ்சு நஞ்சு நஞ்சி னோடு
அழிவெனுங்க ணன்பி னன்பி னன்பி னன்பி னாவி
குறைதவிர்ந்த ணிந்த ணிந்த ணிந்த னன்புள் மேவி-வருவோனே
மருவனந்த சங்கு சங்கு சங்கு சங்கு கோடி
மதனமிஞ்சு கங்கை கங்கை கங்கை கங்கை யாழி
வளரநின்ற சங்கு சங்கு சங்கு சங்கு ளோசை யருள்வாயே
மவுனமன்று முந்த முந்த முந்த முந்த நாளில்
ஒளிமறைந்த வந்தி யந்தி யந்தி யந்தி மீதில்
மவுனமங்கு தங்கு தங்கு தங்கு தங்கு நுக்தீ றஹ்மானே. (௩)

---

தனதனதனதன தனதனதந்த தனதனதனதன தனதனதந்த
தனதனதனதன தனதனதந்தன—தனதான.

தனுவொடுசிறுபிறை தனையும்வெருண்டு வருமிருப்புருவம தழகுசிறந்து
சலமிசைவளர்கய லதுவும்வெருண்டிடும் விழிமாதர்
சமர்பொருதிடுதலி னசையுமிகுந்து சுகரசமுறுகன சுரதம்விளைந்து
தழியல்மிகவவர் வலையில் மருண்டுடல் மெலிவேனோ
அநுதினமுனதிரு பதமுனினைந்து கனகலையறிவினொ டறிவுதெளிந்தும்
அழகொழுகமுதன வெனவுமருந்திடு பெரியோர்கள்
அவருறுகுருபணிவிடைகள்தெளிந்துமிருபதமடியவர்சிரசிலணிந்தும்
அபரவறவருளை மனதில்வருந்திட அறியாதான்



மனதுறுபவவினை யெனுந்தொழிந்து மிருவினைதுயரறு பிறவிகடந்து
மதமுறுகிருபையெ னுளமிலமுந்திட வருள்வாயே
மடலொடுசுடருயி ரளவுநிறைந்து நடமிடவருகழல் நடனமெழுந்து
மதியொடுவெருணனு முருகிநினைந்திட வருவோனே
கனகலையசடற வரவுதுடர்ந்து மனவுருவமைதரு சுழினையறிந்து
கதறியவொரு[illegible]ணி வளையிலிருந்தொளி தருவோனே
கதிரொளிவிலையிருளதனிலிருந்துபதிவுறுபலவகையெவையுமமைந்து
கருணைகொடெழுதிரு வருள்நுக்தீந்தருள் றஹ்மானே. (௪)

---

தனதன தந்தன தனனா தனனா—தனதானா.

நினைவிலவ ருந்திய மனமே கனமே
இனமில்ந டம்புரி யிதமே சிதமே
நிறையவி ளைந்திடு மொளியே தெளியே இறையோனே
நிகரில யென்றெழு மருளே பொருளே
மருவுசு கந்தரு மணியே தணியே
நிலையமெ னுங்கன வருவா யுருவாய் நிறைவோனே
வனமிசை வந்திடு வள்மே பழமே
உனையெரி னைந்திடு முளமே தளமே
மவுனமெ னுந்திரு மறைவா யுறைவாய் வருவோனே
மதியொட சைந்தெழு சுழியே வழியே
ரதிசுக மிஞ்சிய நினைவே கனவே
மணியொரு சங்கினில் வலிதா மொலிதாய் வருவோனே
தினமும னந்தனி லவமாய்ப் பவமாய்
வினைமத னன்கொடு துயலாய் மயலாய்
சினமுறு முன்மத குலமாய் மலமா யலைவேனோ
திருவடி தந்தெனை யருள்வாய் குருவே
சுருதியெ னும்பொருள் தருவா யருவே
திவலையெ னுந்துளி யிருள்மீ துருள்மா செயலாலே
கனவிறை யன்பினி லுருவாய்ச் சுருவாய்
தனதுள முங்கனன் மெழுகா யிளகா
கருணையெ னுந்திரு விழியாற் றெளிவாம் மஹமூதர்
கனமெலன தங்கமி லருள்வாய் பொருளே
யழகுப ழும்பொரு ளுளமீ தொழுகி
கனிவுத ருந்திரு முகநுக்த் தருள்வாய் றஹ்மானே. (௫)

---

*தனதனதந்தன தனனதனந்த தானதனந்தன—தனதானா.*

கடுகுபயந்துசை வலமும்வெருண்டு
வரியறல்நொந்தெழு முகிலுமருண்டு
களபமிகுந்தபன் னீருசொரிந்தெழு குழல்மாதர்

கனகலைதங்கிய மனமுமயர்ந்து
யிருடலிரண்டவள் விழியிலயர்ந்து
கருணையெனும்பல போதமயங்கியு மலைவேனோ

படிகுழிமங்கையர் மயலுமகன்று
கிருபையெனுங்கட லெனவுமிருந்து
பலனருள்நந்தியின் நாமமுகந்துயிர் பரிவாகி

பரமமெனும்பொரு ளுயிரினிறைந்து
வளரும்வலம்புரி யொலிகள்தெளிந்து
படுநினைவொன்றென துளமிலழுந்திட அருள்வாயே

நடன மெழுஞ்சுழி வளியுமெழுந்து
வெளியுடனங்கியி னுடனேகலந்து
நடுவொலிகம்பலை யஞ்சுவிளைந்தெழு நலரூப

நவிலவருந்தொனி அலியில்நிறைந்து
பருகிநடந்துயர் லர்மிலிசைந்து
நதியொழுகும்புனல் ஹேறயிலிருந்தமு துணைவாகி

அடிமுடிகண்டெழு மீமிலுறைந்தும்
உடுவொளி நந்தியின் தாலில்மறைந்தும்
அதிநெடிசைந்தொரு சுழியில்விரைந்துற வருள்வோனே

அவனியொடந்தர கதிருடுதிங்கள்
மவுனமெனும்பல வகையும் விளைந்தே
வமைதரவந்தெழு நுக்தருள்தந்திடென் றஹ—மானே. (௬)

---

*தனத்தானன தனத்தானன—தனதானா.*

மனத்தாலுனை நினைத்தேனுளில்
வடித்தேயருள் திருத்தாள்தர வருவோனே
மறுத்தானற நிறைத்தேசுடர்
வழுத்தாய்மன தழுத்தாயுற வருள்வாயே

இனத்தான்மொ டினத்தாகமா
யிசைத்தேயொலி யசைத்தேவரு மிதமாகி
இழுத்தேசுழி சுழித்தேவரும்
இருக்காலினை டுருக்காநினை வதிலுனி



சினத்தாசையொ டுறத்தாவியெ
தெளித்தேதெளி வெழுத்தோடுணை வருள்வாயே
தெறித்தேதுளி குறித்தேவிழி
திருப்பார்வையி லுறுப்பாகவோர் மணியாகி

வனத்தேகட வி[illegible]த்தேபுரி
வளத்தேவெளி லொளித்தாய்மணி இறமாக
மதித்தேமணி யுதித்தேவரு
மகத்தானமா நுகத்தாயருள் றஹ—மானே. (௭)

---

*தனனதன தந்தன—தனதானா.*

அடிமுடிந டங்கள்புரி யதிலுறைவு கொண்டுநடு
வணையருள்சி றந்துவரு மருள்சோதி
அமுதகலை யன்றதிர நடனவொலி கண்டுவரு
மனசவைநடு ரண்டுசுழி யயாத

படியதுந டந்திரைவு கடல்மிசைவி ழுந்துயரு
பரிதியெழு சந்திரனை டுறவாகிப்
பருகியசை குந்தமிடு வினமதுக டந்துதொனி
பகருமொரு சங்கினிடை பரிவாகி

வடிவுசுடர் வந்துசுழி முனையிலுற நின்றுயிரு
மதிநினைவு கொண்டனுவும் வழுவாதே
மவுனமணி தொந்தமென வதிகதிரு நந்தியுரை
மறைநிறுவி சிந்தைதனில் வழுவாமல்

கடிமலரி லஞ்சுசுட ரொழுகமல நஞ்செனது
கருணையொடு தந்தருளென் கனமானே
கவலுமறை யண்டர்புவி மலைகடலோ டந்திரகன
கதிருடுநு கத்திலமை றஹ—மானே. (௮)

---

*தனனதன தன்னதன தந்தந் தனத்தன—தனதானா.*

அருவமிலி யுருவமிலி யண்டம் பொருந்துமிலி
சுருபமிலி மருபமிலி தொந்தங் கடந்துமிலி
யகரமிலி யுகரமிலி யஞ்சுந் தெளிந்துமிலி யனல்சோதி

அழகுமிலி பழகுமிலி கஞ்சம் புரிந்துமிலி
யயர்வதிலி துயர்வதிலி துஞ்சுங் குணங்களிலி
யளையுமிலி நிறையுமிலி நெஞ்சங் குளிர்ந்துமிலி யருரூப

வரவுமிலி மருவுமிலி யெங்கும் நிறைந்துமிலி
வளருமொளி கழறுமொழி யன்புண் டழுந்துமொளி
மகிழுமொளி அகழுமொளி சங்கில் நிறைந்தவொளி-மணியாகி

வடிவுசுடர் கிருபையரு ளங்கென் றதிர்ந்ததொனி
யதிருமதில் வருமுயினா னின்கண் குளிர்ந்தொழுகி
மவுனமதி லுருகுமொரு சந்தம் புரிந்தநபி மஹ-மூதர்

திருவருள்கொ டெவையுமமை யந்தந் தெளிந்தொளிரும்
ஒருசுழியில் விளையும்விழி ரண்டுங் குளிர்ந்தமணி
திருடியுனை முழுதுமுளி லுண்டங் கெழுந்தநபி யிறசூலர்

திருவடியை யமுதமென வுண்டுந் தெளிந்தெனது
கருவியுறு பலவினைவுந் துண்டம் படும்படியுன் [ள்வாயே
நினைவுதரு கருணைகொடு தொண்டெ னுனன்பொடெனை-யா

பெருகுமிரு ளதனிலொரு மிஞ்செ னெழுந்துறைவு
தருகுகலை யருணனெடு சென்றுஞ் சகங்களுறப் [வாகி
பிணமருவு துணையொடருள் கன்றென் றெழுந்தமுது-பொழி

பிரியமொரு திரைகடலில் ஹ-ம்மென் றிரைந்துமொளி
மருவுபள பள்ளெனவரு சங்குள் ளிருந்ததொனி
பிரளுமணி நுகத்தெனதுள்ளங்கந்தனக்குளருள்-றஹ-மானே.

ஆ திருப்பாடல் - கo.

---

ஞானத் திருப்புகழ்

முற்றுப் பெற்றது.

---

ஹா மீ ம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஞானவேதாட்சர வருக்கம்.

அறுசீர்த்தாழிசை.

அலிபில் நிறைந்து சொருபமதா யருப மதுவா யகண்டமதாய்
வலிய பொருளாய் மவுனமதாய் வானுய் வானுள் வடிவாகி
ஒலியிட் டெழுந்து நடம்புரிந்து முண்மை யடியேற் கருள்புரிவீர்
கலியிட் டுளத்தி லெழுந்தருளும் கருணை ஹல்லா ஜென்பீரே. (க)

பேமுத் திரைமுத் திரையதுவாய் பேயோ டெழுந்து சுழித்துநின்ற
தாய்முத் திரையை யறியாமற் றுனே மயங்கி யலைவேனோ
காய்முத் துருண்டு கனியான கருணை யடியேற் கருள்புரிவீர்
வாய்முத் துளத்தி லெழுந்தருளும் வடிவே ஹல்லா ஜென்பீரே. (உ)

தேயென் றதற்கு ளுறைந்துநின்ற தெளிவை யடியே னறியாது
மாயா சூத்ர மாய்ப்பிறந்து வளர்ந்து குறைந்து மறைவான
காய மதிலு மதுபோலக் கலந்தங் கிருந்த தறியவருள்
ஆயும் பொருளே மெய்ஞ்ஞானத் தமுதே ஹல்லா ஜென்பீரே. (ங)

தேயென் றதற்குள் ளுறைந்துநின்ற தெளிவை யடியே னறியாது
பாயக் கமல மதுவினையுண் டோடுஞ் சுரும்ப ரதுபோலத்
தாயு மகவும் வெகுவாழ்வுந் தானே யறிந்து நின்பாதம்
ஆயும் பொருளே யெனையாட்கொண் டாள்வீர் ஹல்லா ஜென்பீரே. (ச)

ஜீமென் றெழுந்து நடம்புரிந்து ஜீமென் றெழுந்த திருக்கூத்தை
நான்கண் டதினே டிசைந்துநின்று நாதந் தனிலே யாகாமல்
மான்கன் றதனை யிழந்துநின்ற மயக்க மதுபோ லலையாமல்
வான்கண் டுளத்தி லெழுந்தருளும் வடிவே ஹல்லா ஜென்பீரே. (ரு)

ஹேயோ வமுதக் கலசமது கீழ்மேல் முகமாஞ் சிறுவாலை
ஹவா மதனி லெழுமினைச்சல் குறியா மறைநூல் குறியாதே
ஓயா தெழுந்து தினமுனைக்கு முண்மை யடியேற் கருள்புரிவீர்
மாயா துளத்தி லெழுந்தருளும் வடிவே ஹல்லா ஜென்பீரே. (சு)

கேயாங் கமலச் சுழினைமுனை கேயோ டெழுந்து சுழித்துநின்ற
கேயோ வமுத முகமாருய்க் கிருபை யதற்குள் முகமொன்றாய்
ஓயா தெழுந்து தினமுனைக்கு முண்மை யடியேற் கருள்புரிவீர்
மாயா துளத்தி லெழுந்தருளும் வடிவே ஹல்லா ஜென்பீரே. (எ)

தாலி லுறைந்து தரிப்பான தருண னதற்கு ளொளித்துநின்ற
நிதை யறுத்து முளிற்பூண்ட செயலை யடியேற் கருள்புரிவீர்
ஓது மதனில் நடம்புரிந்து மும்மை தனையே மனதில்நழு
வாத படியே யெனக்கருளும் வாழ்வே ஹல்லா ஜென்பீரே. (௮)

தாலென் றிரண்டு பிளவுசெய்து நடுவை யறியா துளிற்கலந்து
மாலை யறியா துளத்திலொரு மணிவந் திருந்த தமொழியும்
நால்கண் டடியே னருள்புரிந்து நடுவுண் டமுதப் பொருளதனைக்
கால்கொண் டிருத்திப் பிடிக்கவருள் கனிவே ஹல்லா ஜென்பீரே. (௯)

றேயுட் பொலிவா யுளில்நிறைந்து நிலைக்குங் கமல மதிவட்டம்
ருவென் றிரண்டு மெதிர்கொண்டு நாடு மொன்றை நடுவாக்கி
றீயென் றிசைந்து நிலைக்குமந்த நிலைகண் டடியே னுளத்திலுன்னி
றாவென் றிருந்த நொடியையருள் றனிவாழ் ஹல்லா ஜென்பீரே. (௧௦)

சேசே யென்னுநற் றிருக்கூத்தைத் திருந்த வடியேன் மனதில்நடுச்
சோசோ பனத்திற் சுடர்விரிந்து சுழிக்கு ளருளைத் தொனிப்பாக்கி
சூசூ வெனவுட் டிரண்டுநின்ற சூட்சக் கமல வலம்புரிக்குள்
சீசீ யெனச்சொல் லருள்புரிவீர் தெளிவே ஹல்லா ஜென்பீரே. (௧௧)

ஸீனுற் றெழுந்த திருவருளின் செயலை யடியேன் தன்னுளத்தில்
ஸீனென் றமர்ந்த திருவருளைத் திருந்த வறியா தலைவேனோ
ஸீனுள் ளுருவாய் வருந்தேகத் திறத்து ளிருந்து வருமதனை
ஸீனுட் கமல முனையயருள் செய்கே ஹல்லா ஜென்பீரே. (௧௨)

ஷீனுள் ளுகந்து திருந்தவந்து தெளியா ஷீனில் மஹ்மூதாய்
ஷீனுற் றுளத்தி லுருவாகித் திரண்டு வருகுங் காமீலாய்
ஷீனுற் றருணக் கலையூறிச் சிக்கி மவுன மணியான
ஷீனை யடியேன் றனக்கருள்வீர் செய்கே ஹல்லா ஜென்பீரே. (௧௩)

ஸாத்திலுறவே நிறைந்து பொங்கி தரித்தஞ்செழுத்தி லுறவு செய்து
ஸாத்தி யெனவே யொன்றாகி பரிவா மிடையிற் பறுதூவாய்ச்
ஸோதி யதனில் மறைவான தொழிலை யடியேற் கருள்புரிவீர்
காதி லருளைத் திறந்துரைக்கும் காமில் ஹல்லா ஜென்பீரே. (௧௪)

ஸாத்து மலுஹ ருய்த்திரண்டு லாமக் கானில் மக்காணுய்த்
தேற்றுங் தலத்தி லிருந்துறைந்து திடமா யெக்கீனில் நடுவைத்து
ஏத்தும் றஹ்மில் காமிலாய் யிதுபாத் தையுள் ளடக்கியொன்றாய்ப்
பார்த்து மெடுக்கும் பொருளையருள் பரிவே ஹல்லா ஜென்பீரே. (௧௫)



தேய்முச் சுடரி லுருவாகித் தெவிட்டா தினித்த கனியாகித்
தேயென் றதனி லொளிவாகித் தெளிவா மமுத சலமதனைத்
தாவென் றடியேன் மனம்வருட்டித் தானே பொருளைத் தரித்தென்னுள்
பாத முறையா னந்தவெள்ளம் பருக வருள்வீ ரென்பீரே. (௧௬)

லேயுள் ளெழுந்த குருவதனை நிறுத்தி மஜ்நூன் தனைவருத்தி
ஆயஞ் செழுத்தில் நடுவாகி யறிவைத் திடமென் றறிவிலுற்றுப்
பாவென் றுளத்திற் பரிவுசெய்து பலஞ்சே ரிறசூல் கலிமாவைக்
காவென் றுளத்தி லெடுக்கவருள் கனமே ஹல்லா ஜென்பீரே. (௧௭)

அயினென் றிருகண் ணுள்ளாகி யாடுங் கிருபை மஹ்மூதை
* அயினென் றிரண்டு மருவியொன்றா யாவுஞ் சுகத்தி லவதரித்து
அயினை வருத்தி முருதாக்கி யருளா லூன்று நுகத்தாவை
அயினுற் காண வெனக்கருள்வீ ரன்பே ஹல்லா ஜென்பீரே. (௧௮)

கயினென் றுளத்தி லெழும்ஷஹூதை யுருக்கிக் கமலத் துறவாக்கி
கயினு லெழுந்த வாசமதை யுண்டுண் டென்துட் பசியாறி
கயினென் றெனது நாவாலுள் ளூன்றி யதனி லுறைத்திருத்தி
கயினு மூண்மை வடிவாகி யுதிக்க வருள்வீ ரென்பீரே. (௧௯)

பேயா யெழுந்து கருணைகொடு பெருகுங் கிருபை யருள்தாரின்
மாயா சொருப மாயெழுந்து வடிவுக் கடங்கா வடிவாகி
சாயா சேர்மை கொடுவந்த தவத்தை ஹம்சுள் தரிப்பாக்கி
நேயா மனதுள் ளருள்புரிவீர் நிறைவே ஹல்லா ஜென்பீரே. (௨௦)

காபென் றுள்த்திற் கருணைகொடு கண்ணுற் சுழினை நாடியினில்
கூவென் றலரி வருங்கடற்குள் குறிக்குந் தரள வலம்புரிக்குள்
கீயென் றிரைந்து வருந்திரையுள் கிருபை யடியா ருளமதனில்
காவும் படிவந் தருள்புரிவீர் கண்ணும் ஹல்லா ஜென்பீரே. (௨௧)

காபென் றெழுந்த கருணைதனைக் கடையே னறியா தலைந்துலகில்
கோபென் றெழுந்து குணக்கறுத்து கொடிய வினைகள் பவந்தெளிந்து
காபென் றெழுந்த கருத்தையென்னுட் கமலத் தொளியைத் தெளிவாக்கி
காபென் றெழுந்த வருள்புரிவீர் காமில் ஹல்லா ஜென்பீரே. (௨௨)

லாமென் றுனது திருவுளத்தில் நாடுங் கிருபைச் சொருபமதை
லாமென் றிருகண் ணுறநோக்கி நாம மன்கூ வின்படிக்கு
லாமென் றிரண்டு மொன்றாகி லாஹூ யென்னு மச்சுருவில்
லாமென் றெழுந்து வளைந்ததருள் நாதா ஹல்லா ஜென்பீரே. (௨௩)

---

* அயின் கண்டிரண்டு மருவியொன்றா யாவும் ஷஹூதில் வருத்திருத்தி, என்றும் பாடம்.

மீமாய் வளைந்த வளையமதில் வேண்டும் படிநீ சுழித்திழுத்துத்
தானு யொளித்த சூட்சமதைத் தவத்தோ ரறிய வல்லாருன்
தேனு றெழுந்து பாய்ந்தசுடர் திருவா மமுத மடியார்க்குள்
மானே மருவும் படியருள்வாய் வடிவே ஹல்லா ஜென்பிரே. (௨௪)

நூனென் றெனைநீ யுன்னுள்வைத்து கொடிக்கு ளிமினில் முத்தலக்காய்
நானென் றறிந்து நீயிருந்த நடன மறியா தேங்குவனோ
ஊவென் றுளத்திற் சுழித்துவிம்மி யோங்கு மசைவை யூடுருவி
நீயென் றிருந்த கிருபையருள் நிறைவே ஹல்லா ஜென்பிரே. (௨௫)

வாவுள் வளருங் கொடியதனை மவுசூ ஸெனுமு ருதாக்கி
*நாவுள் ளூனே டெழுந்து நின்று நாக்கைச் சுழித்து நடுவறைக்குள்
பூவுட் டரித்த வாசமதை பொருந்தஞ் சொகுத்தோ டெடுத்தணைந்தே
ஆவுள் ளடியார் தனக்கருள்வீ ரன்பே ஹல்லா ஜென்பிரே. (௨௬)

ஹேயென் றிருளில் நுக்த்தான கிருபை யலரு மப்பணிக்குள்
காயன் றினத்துட் கனியான கருணை மவுனக் கடலோசை
கூவென் றெழுந்து வருந்திரையுட் குன்னும் ஸஃப்பூஹூன் குத்தூஸாய்க்
கோவென் றிருந்த ஸஃஜஹதையருள் குணமே ஹல்லா ஜென்பிரே. (௨௭)

லாம விபென்றி ரண்டுமொன்றாய் நன்கா ரிருளில் நடம்புரிந்து
லாம விபென்றி ரண்டுமொன்றாய் நாடி மருவும் பனித்துளியால்
லாம விபென வேயூன்றி நாடுங் கமல வலம்புரிக்குள்
லாம விபென்றி ணைந்தருள் நாதர் ஹல்லா ஜென்பிரே. (௨௮)

ஏயுள் தரித்து நின்கனிவா யிதழுண் டரிய சொருபான
ஏயுள் ளிறகு லெனும்பேரா யிருந்து பதத்தி னிணைபுரிந்து
ஏயுள் மஹ்மூ தஹூமதா யென்னு கத்தோ டிறைந்தரசாய்
ஏயென் றிருந்த கனியையருள் யிறைவா ஹல்லா ஜென்பிரே. (௨௯)

ஒவ்ஸ லாமென் றுனதுதிரு வுளத்தி லொளித்து வைத்ததனை
ஒவ்ஸ லாமென் றேவெளியி லுதிக்க வருவா யுனக்கறியும்
ஒவ்ஸ லாமென் றிருந்தவெளி யொளிகா லுறவே மஹ்மூதாய்
ஒவ்ஸ லாமென் றுளத்திலரு ளுண்மை ஹல்லா ஜென்பிரே. (௩௦)

நுக்த்தே யிருளில் வெளியாகி நூனுள் மறைந்து நின்நாமம்
நுக்த்தே யுருண்டு சொருபமதாய் நாடும் அயினில் முத்தலக்காய்
சிக்கத் தெழுந்து மஹ்மூதாய்த் திரளுங் கிருபை முழுதுமுளில்
தொக்கத் தடியார்க் கருள்புரிவீர் சுடரே ஹல்லா ஜென்பிரே. (௩௧)

ஞானவேதாட்சரவருக்கம்
முற்றுப்பெற்றது.

---

* நாவினூடெழுந்து நின்று என்றூஉம் பாடம்.



ஹா மீம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஞானப்பிள்ளைத்தமிழ்.

## செங்கீரைப்பருவம்.

முத்திரை முத்தில ருத்திய மெய்ப்பொருள் முச்சுட ருட்கமலம்
முண்டக மென்றெழு மூன்றுமொன் றாகிமு ளைத்துமெ ழுந்துளே
பத்திகொ டித்துமெ டுத்துந டத்திய பச்சைசி வப்புவெளை
பாய்ந்துப ழம்பொருள் சேர்ந்துநி றைந்துப ரந்துப ராபரமாய்
நற்றவ முத்திக் கிருபைப் பெருஞ்சுடர் நாதத்தி னூடெழுந்து
நாலைந்து வாசலு மூடுரு விப்பொருள் நாடுமு க்ராமதில்
தித்திதித் தியெனு முத்துந டஞ்சொரி செங்கீரை யாடியருள்
தெள்ளமு தேதெளி வேஹல் லாஜே செங்கீரை யாடியருள். (௧)

வன்னி யுயர்ந்து மெழிலறி வுட்கலை வாசல்தி றந்துவிடும்
வல்லிரு ளான மயக்கமு மற்று மனந்தெளி வாகிவிடும்
கன்னியு மன்மதன் ரண்டுமொன் றாகிக் கலந்து மருவிவிடுங்
காரண நேர்மையும் பூரண சூட்சமுங் கண்திறந் தேயொளிரும்
பன்னிரண் டங்குல மானதில் நாலுமே பையவுள் ளாகிவரும்
பாரொடு சந்திர சூரிய னின்றிருப் பாய்ந்துத ரத்திலுறுஞ்
சென்னிபொ ழிந்திடுந் தேனில்ந டஞ்சொரி செங்கீரை யாடியருள்
தெள்ளமு தேதெளி வேஹல் லாஜே செங்கீரை யாடியருள். (௨)

முண்டக *மீதிலி ருந்திடு மட்சர முத்திரை பூரணமாய்
முப்பாழ் வெளியொளி வாகிய வாயுவு மூன்றுமோ ரட்சரமாய்
மண்டல மஞ்சிலு முட்டி யெழுந்து வளரசை வைச்சுழியில்
†மாறி வலம்புரி யாகந டந்துமே வந்தெழு தந்தொனியாய்
வண்டெழில் பச்சைப் ‡பொருப்பி லிருந்தும னைந்துரு வானதொழில்
வாறது ¶போலவி ருந்துந டங்கொளும் வைத்துத ரத்திலுறுஞ்
சென்றெழு மக்கடல் மீதில்ந டஞ்சொரி செங்கீரை யாடியருள்
தெள்ளமு தேதெளி வேஹல் லாஜே செங்கீரை யாடியருள். (௩)

---

* மீதி லிருந்து நடங்கொளும் என்றூஉம் பாடம்.
† மாறி வலத்திருவாக என்றூஉம் பாடம்.
‡ பொதும்பிலிருந்து என்றூஉம் பாடம்.
¶ போல் விரைந்து தொனிகொடு என்றூஉம் பாடம்.

அஞ்சுருப் பட்டதி லொன்றுவி ளைந்தது மங்கெழு தீபமதாய்
அண்டமும் பிண்டமு மெங்கும்நி றைந்துமே யன்லொளி வானதினல்
பிஞ்செழுத் தொன்றுரு வாகநி றைந்துபி ணங்குத லற்றுருவாய்
பேசும்பே சாதிருந் தேநடங் கொள்ளும் பேதை யுரைத்திடும்பால்
நஞ்செழுத் தாகிநம் முள்ளும் புறமும் நடுவு மடிமுடியும்
நாதமும் நாதத்தி னோசையுங் கொண்டெழு நாதனு மஞ்செழுத்தாய்
செஞ்சொல் வருந்துரு வாகந டஞ்சொரி செங்கீரை யாடியருள்
தெள்ளமு தேதெளி வேஹல் லாஜே செங்கீரை யாடியருள். (ச)

ஆருமறிந்திலர் நின்றிரு நாமமோ ரட்சரத் தின்பெருமை
அண்டர்கள் தேவர்க ளாரு மறிந்தில ரன்று சுழித்ததனை
சாரும்வ லம்புரி மீதி லிருந்த தரளமி ளைந்ததொனி
தானவ ஞெனனு மேயுரை கொண்டெழு தாண்டவ மாய்நடனம்
ஊருமேல் தோசைங் தோடிய வாறது முந்திக் கமலமதில்
உள்ளெழு முச்சுடர் தானென வாகியு மொளிருத ரத்திலுறுஞ்
சேரும்வ லம்புரி மீதில்ந டஞ்சொரி செங்கீரை யாடியருள்
தெள்ளமு தேதெளி வேஹல் லாஜே செங்கீரை யாடியருள். (ரு)

சக்கர மூலம துட்சுழி யானச ரத்தில்ந டம்புரியுந்
தற்பொரு ளேயடி யார்மன மீதில் தத்தற நித்தலுமே
உட்கரு விப்புல னைக்கவ றுத்திடு முள்ளுரு கிக்கனிவாய்
ஊறிய தேனமு துண்டுநின் பாதமு கந்தருள் தொண்டுசெய்தேன்
நிற்கம றப்புல னஞ்சும றுத்து நின்றிரு ஞானவிழி
நேர்மைய தாமணி மந்திரப் பார்வை நின்றுத ரத்திலுறுஞ்
செக்கசை வாகுச ரத்தில்ந டம்புரி செங்கீரை யாடியருள்
தெள்ளமு தேதெளி வேஹல் லாஜே செங்கீரை யாடியருள். (சு)

பனித்துளி போலவி ரைந்து மெழுந்துளிற் பங்கயத் தின்னருகே
பஞ்சவ ரைவரும் பத்து விழிக்கொடு பார்வையி னுலுருவாய்க்
கனித்திடு பஞ்சவ ரொவ்வொன்றுக் காயிரத் தெண்கலை தான்வாங்கிக்
காட்சி யெடுத்துரு வாகவி ளைந்திடுங் கண்மணி ஞானமுத்தே
தனித்து மிருந்து விளைந்து தெளிந்திடு தக்காரிருள் தனிலே
தானுளி லாசைக் கடற்குள் வலம்புரி தன்னு ளெழுந்தமணி
சினத்துள் ளெழுந்து விரைந்துந டஞ்சொரி செங்கீரை யாடியருள்
தெள்ளமு தேதெளி வேஹல் லாஜே செங்கீரை யாடியருள். (எ)

ஆடிடு மெண்பத்தி னன்குநா ருயிர மான துயிர்முதலாய்
அட்சர மொன்று சுழித்த சுழிகொ டகண்ட தராதலமுந்
தேடிடுந் தேவர் மனுவொடு பேய்பூத ஜின்னரக் கர்முனிவர்
சித்திர மாகிய சந்திர சூரியர் சேர்மறை வேதமுதல்



வாடியி ருந்ததல் லாமலோ ரட்சரம் மன்னரு ளின்பெருமை
வைத்தின தென்று மனத்துள் ளறிந்திலர் வைத்துத ரத்திலுறுந்
தேடிடு தொண்ட ருளத்தில் நடஞ்சொரி செங்கீரை யாடியருள்
தெள்ளமு தேதெளி வேஹல் லாஜே செங்கீரை யாடியருள். (அ)

ஆயிரத் தெட்டித ழானதின் தேனமு தங்கெழுந் தோடிவரும்
அன்புகொண் டுண்டும னந்தெளி வாகிடி லஞ்சறை வாசல்விடுங்
காயது நானுய்க் கனிந்த கனிபழங் கண்டும கிழ்ச்சிபெறுங்
கண்ணிரண் டத்திருக் கண்ணிரண் டும்வெளி காட்சியுஞ் சூழ்ச்சிதரு
தாயன வுன்பதந் தன்னைத் துதித்திடிற் சாயுச்ய பாதமுறும் [ம்
தானுய் நின்றிடு சோதிமு ஹம்மது தன்னொளிமுத்திபெறுந்
தேயா தென்னுள மானந்த சோதி செங்கீரை யாடியருள்
தெள்ளமு தேதெளி வேஹல் லாஜே செங்கீரை யாடியருள். (கூ)

* செங்கீரைப்பருவம்
முற்றிற்று.

---

## தாலப்பருவம்.

நாசிச் சுழிநடு வாகப் பொருள்திரு நாதத் திடைவளைவில்
நாவுக் கரிதவை கூறப் படுதிலை ஞானச் சுடரதனில்
ஊசித் துளைவழி போலக் கதிரொளி யுருவிக் கனமுடிவாய்
ஒளிபொன் பதமல ரழகிற் கருதிய வுறுதிப் பெரியவருள்
நேசித் திருவரு ளாஷிக் குருகிய நேர்மைக் கடலதனில்
நினைவுந் திடமெவர் மூழ்கித் துயரறு நிலையைத் தருமருளே
தாசித் திருவிழி பாசத் துயரறு தாலோ தாலேலோ
சரணத் தொனியருள் ஹல்லா ஜென்பீர் தாலோ தாலேலோ. (க)

வேறு.

மூலந் தனிலெழுந் தேகுஞ் சிரமள வாகுஞ் சாமதி னோசைதான்
மூடுங் கனலொளி வாகும் பரவுயிர் யாவும் அதிரொலி யாகியே
காலில் நடமிடு சோதி யருளதைக் காண வடியவ னசையால்
கருணைச் சலமது பெருகி யெனதுளில் கசிவு கொடுவரு தானமுள்
கோல மதுதனை நாளும் நவில்வதின் குறைக ளறவரு ளீய்குவாய்
கோவை யனுவள வாலும் பழுதறு கோவே யுனதருள் மேவியே
தால மதிலுனை மேவும் படியருள் தாலம் நடமிடு தாலேலோ
சரண முறுதொனி யருள்ஹல் லாஜே தாலோ தாலேலோ. (உ)

---

* இது செவ்விய மதலைச்சொற்களைப் பேசும் பருவம். கீர் - சொல். இப்பருவத்தின் செயல் ஒருகாலை மடக்கி ஒருகாலை நீட்டி இருகைகளையும் நிலத்தி லூன்றித் தலைநிமிர்ந்து முகமசைய ஆடுதல்.

வேறு.

சிரகேர் சுழியள வாகும் படியருள் தெளிவோ ருளமதனில்
  இத்தி யெனுமரு ளூற்றே நடனம தாடுந் திருவொளியே
பரனே நிறையுயி ரவையே யதினதி னளவே பயில்பொருளே
  பழமூ துரையுறு பயனே யறிபவர் பசிபோய் விடுமுணவே
இனாயா னியவிரு ளறவே யுளமிசை தெளிவாய் நிறைமதியே
  தேவா திகழ்புகழ் கோவே யடியவர் செயலா னதைநலமாய்
தனாமீ தடிமையென் றுயரற் றிடவருள் தாலோ தாலேலோ
  சரணத் தொனியருள் ஹல்லா ஜென்பீர் தாலோ தாலேலோ. (௯)

ஆவென் றதிரொலி மேவும் பொழுதினி லாகங் கொடுதிறமாய்
  அலிகொண் டெழுக்கட லதில்வந் துறையுநின் னன்பென் றெழுபுரியில்
லீயென் றெழுசுடர் தாவும் படியது திறமங் கொருமணியாய்த்
  தெளிவென் றதிலொரு தெளிவா கியமணி திருவன் புருகியது
கூவுங் குரலொடு தேடும் படியொலி குறிகண் டுணரவருள்
  கோவென் றனையுயிர் பாவும் பதமருள் குருவென் றெழுபொருளே
தாவென் றருள்புரி பாவத் துயரறு தாலோ தாலேலோ
  சரணத் தொனியருள் ஹல்லா ஜென்பீர் தாலோ தாலேலோ. (௰)

* தாலப்பருவம் முற்றிற்று.

## சப்பாணிப் பருவம்.

சரணமோ டுருவுந் தவமணிக் கொழுந்தாய்த்
  தாண்டவம் புரிந்தநாயகமாய்த்
தங்குமாங் கடலில் முங்கியே யெழுந்து
  தற்சொரு புற்றமாபுரியில்
புரணமாய் நிறைந்து தரளமா யுறைந்து
  பொன்றிடாத் தொனியினைவாகி
பொருந்தியெவ் வுயிருளும் நடம்புரிந் தாண்ட
  பொருளினோ டுருகியபொருளே
அருணனோ டெழுந்து கலையினோ டுறைந்தும்
  அந்தியி திருந்திடுஞ்சுழியே
அங்ஙனே யுன்னைக் கண்டியான் தொண்ட
  னுவதுக் கருள்புரிவாயுன்
சரணமாம் பாத முள்ளுளாய் நிறைந்து
  சப்பாணி கொட்டியருளே
தருமருளி லுருவான ஹல்லாஜென் சாகிபே
  சப்பாணி கொட்டியருளே. (க)

* இது தாலாட்டுப்பருவம். தாலாட்டு ஓர்வகையாக நாவசைத்துப் பாடுதல்.



அட்டகெச மட்டதிரு வட்டசுழி யெவ்வையும்
  ஆனந்த மயமாகியே
அட்டபுரி நேர்மையாய் மும்மண்ட லங்கடந்
  தந்தர மகண்டமீறி
வட்டமதி தன்னுள்வந் துட்சுழி சுழித்ததால்
  மாறியிட மாறிவலமாய்
மாமோக மாரூபி மங்கையவள் தன்னையே
  வந்துவலஞ் சுற்றியிறைவாய்
முட்டற வெழுந்துமுடி யந்தரமும் விம்மியே
  மூச்சற்று நின்றதலமில்
முனையிலொரு காலேங்கி மணியொலிப் தாய்நந்தி
  முப்பாழ் கடந்துநடனங்
தட்டறவெ னுட்சரமில் நின்றுநட ஞானகர
  சப்பாணி கொட்டியருளே
தருமருளி லுருவான ஹல்லாஜென் சாகிபே
  சப்பாணி கொட்டியருளே. (௨)

அருவுரு சொருபமா யண்டபகி ரண்டமா
  யாறெழுத் தஞ்சாகியே
அந்தர சுகந்தரச கெந்தமாய் முக்கோண
  மழகாகி நின்றவடிவாய்த்
திருவருளி லுருவாகி நின்றபரி பூரணத்
  தீபவொளி யாயெங்குமே
சேர்ந்துமவ னவளாகி யதுவாகி நடுநின்று
  திருடனு னல்லவென்றே
குருவாகி வெகுகுட்ச மதுசம்ப்ர தாயமாய்க்
  குறையாமல் நின்றமஹ்ரூத்
கூர்மையிரு பாதமே யெங்நாளு முள்ளுளே
  கொண்டாட வந்தபொருளே
தருவாகி யென்னுளே நின்றுநட ஞானகர
  சப்பாணி கொட்டியருளே
தருமருளி லுருவான ஹல்லாஜென் சாகிபே
  சப்பாணி கொட்டியருளே. (௩)

அன்பினுள் ளெழுந்திய துருண்டுவடி வாகியே
  அட்சரம் நினைந்துகுருவாய்
அங்கிவடி வாகியே யெங்கனும் நிறைந்ததாய்
  அளவிடற் கரிதாகியே

முன்பிலொரு கூரிருளி னதனில்நடு வாய்நின்று
முச்சுழி சுழித்ததுடனே
முண்டகம தாய்நின்ற நன்றியருள் பூரணநல்
முழுமுதல தாயெழுந்தே
உம்பருல கெங்கணு மெவ்வுயிரு நிறைவாகி
யூடுருவி நின்றமஃறமு
துண்மையிது பாதமே செம்மைதிற மாகவே
யுரையுமடி யாருள்ளமில்
தம்பமென் துள்ளுளே நின்றுநட ஞானகர
சப்பாணி கொட்டியருளே
தருமருளி லுருவான ஹல்லாஜென் சாகிபே
சப்பாணி கொட்டியருளே. (ச)

மடம்டென வருகுபொருள் மதரூப ரூபமே
வந்துறைந் தாகமணியே
வாரணு பூரணு காரணு ஆரணு
மாமணியுல் லாசவருளோ
அடவுடனே யனைவர்களு முனதுபதம் பணியுரவே
அஹதுமுத லானபொருளே
அந்தரா சுந்தரா நந்தரா மந்திரா
ஆருமறி யாதபதமே
நட்மிடுமெ னுளமதில் வருகுசிவ ரூபமே
நாதாந்த நாதமணியே
நன்மையே யுண்மையே செம்மையே வெண்மையே
நாதாந்த நாதமருளே
தடதடென விருகண்ணில் வருகுசிவ ரூபமே
சப்பாணி கொட்டியருளே
தருமருளி லுருவான ஹல்லாஜென் சாகிபே
சப்பாணி கொட்டியருளே. (ரு)

அண்டரங் கொடுமுடி நடுவுறைவு பின்கலே
அச்சரம தொன்றுகவே
அந்திதனி லங்கியாய் நடுவிலொரு சுழியாகி
அப்புற மெழுந்தவுடனே
தண்டரள மாகியொரு மாமணிய தாகியே
தாளநிற மரியபுரியில்
தந்துதந் துன்தொனி யுந்துவின் பஞ்சரஞ்
சாருமிசை யானவகையில்



முண்டகங் கொண்டொன்று பண்டுநின் றந்தியின்
முடிவுசுழி மூன்றுமொன்றாய்
முனைமருவி யிருகாலி லருளுருவி நடனமாய்
முத்திரைச் சுழியாகியே
தண்டரள வின்படி யங்கணின் நின்கரம்
சப்பாணி கொட்டியருளே
தருமருளி லுருவான ஹல்லாஜென் சாகிபே
சப்பாணி கொட்டியருளே. (சு)

அழகுதரு கிருபையொளி பெருகுதிரு வானந்த
மருரூப திருரூபமாய்
அன்போ டெழுந்தகனி யெவ்வைக்கு முள்ளாகி
யனலங்கி விண்ணோசையாய்
நளனதிக வினிவுகொடு தேனுற தாகியே
நாடாத மணிமந்த்ரமாய்
நஞ்செழுத் தோடதிக பிஞ்செழுத் தாகியே
நல்நந்தி யுரையின்பமாய்ப்
பழகுமடி யாருளில் நடனமிடு கழலதாய்ப்
பண்டிருளி லச்சரமதாய்ப்
பழமூ துரைக்குளொரு கடன்மீ தெழுந்தபுரி
பன்னுமதி லுன்னுமணியாய்த்
தளதளென வதிரூப மாகவரு நடசோதி
சப்பாணி கொட்டியருளே
தருமருளி லுருவான ஹல்லாஜென் சாகிபே
சப்பாணி கொட்டியருளே. (எ)

வேதநால் சாத்திரம தொன்றினு மெட்டாத
விரிசுடரி னருள்மேவியே
வெண்கமல வுள்ளொளிவ தெங்கணு முலாவியே
வெண்பனிய தூடாகியே
பாதவொலி கீதமா யளவிடற் கரிதாகி
பார்வையோ டழகுசொருபாய்ப்
பருகுமதி லுருகிவரும் ஹறுபொன்று நாலதாய்ப்
பகரில்மஃற மூதென்னுமாய்
நாதமோ டெழுந்தவுயி ரல்லாத வகையிலும்
நம்பரம் பரலோகமும்

நாடொறு ததிகவொளி வாயெங்கு மூடியே
நங்கலி யகற்றுமருளே
தாதினெழு வாயுவுறை பூரண நடஞ்சோதி
சப்பாணி கொட்டியருளே
தருமருளி லுருவான ஹல்லாஜென் சாகிபே
சப்பாணி கொட்டியருளே. (௮)

கண்ணு லுனைப்பரவ வறியாத புல்லனுட்
கண்ணுயி ரங்கொடருள்வாய்க்
கமலமதி லேநின்று மென்னங்க மெங்கணும்
கருணைகொடு தீபவொளிவாய்
முன்னே யிருண்டிருளில் வடிவா யிருந்ததனை
முழுதும்வழு வாதுள்ளமில்
முத்திகொ டழுத்திவரு முத்தகுரு வைத்ததிரு
முத்திரையெ னுட்சரமதில்
பன்னுளும் நின்றுணவு மாறும லப்படிப்
பரிவாய மூத்துகுருவே
பாலமுது போலவுந் தேனு றெழுந்தொழுகும்
பாதமல ருண்டுபசிபோய்த்
தன்னுக மேநிடு வெனையாள் நடஞ்சோதி
சப்பாணி கொட்டியருளே
தருமருளி லுருவான ஹல்லாஜென் சாகிபே
சப்பாணி கொட்டியருளே. (௯)

அலையாது மசையாது விந்துவா லுருவாகி
யழகொளி சிறந்ததேகம்
அந்தமத னென்னுளே வந்துருவ தாய்நின்ற
வச்சர மெழுந்தநாதம்
நிலையாகி நின்றதோ ருயிர்பன்னி ரண்டதாய்
நித்தலுஞ் செலும்வெளியிலே
நிட்கள சொரூபமா யெட்டுமுள் ளாகவே
நிர்மலம தாகிநாலும்
உலைவாக வேகழிந் தோடுமோ டாமலே
உள்ளாக்கு வல்லகுருவே
உன்னன்பு கொண்டுமென் மனமீதில் வழுவாம
லுயிரோ டுறைந்ததெளிவே



தலையோடு காலுமொன் றாகநடு நடசோதி
சப்பாணி கொட்டியருளே
தருமருளி லுருவான ஹல்லாஜென் சாகிபே
சப்பாணி கொட்டியருளே. (௧௦)

* சப்பாணிப்பருவம்
முற்றிற்று.

## முத்தப்பருவம்.

நவ்வெழுத் தானந்த மாய்நின்ற பிருதிவியில்
நாடிய குணங்கள்கூறில்
நலமதிக மனவாக்குப் பாதமெழில் பாணியும்
பாயுரு வுபத்தமேழும்
செவ்வதிக மாய்நின்ற ரோமமோ டென்புதோல்
திடமுட னரம்பிறைச்சி
சிங்குவை சட்சுதொக் காக்ராண சுரோத்திரந்
தெளிவைசந் திராசதம்
அவ்வகையி னேடதிக வாங்கார மானதும்
ஆனவிவை ரண்டுபத்தும்
ஆற்றிட வெனக்குனது சித்தமகிழ் வாகுதிரு
வாயமு தளித்தருளுவாய்
அவ்வுறுதி தந்தபடி யானந்த மானதிரு
வமுதவாய் முத்தமருளே
அரியபொருள் விளைவுதரும் ஹல்லாஜென் சாகிபே
வமுதவாய் முத்தமருளே. (௧)

வாழ்வதிக மவ்வெழுத் தருள்சிறந் தப்பதாய்
வருமதின் குணமானதும்
மனதிலுறை பந்திசுழி முனையுமிரு கலையோடு
வருடுகாந் தாரிதானும்
கோளதிக வத்தியொடு சிங்குவை யலம்புருடை
குறியான வன்பூடாகும்
கூர்மையுட னேவளர் சங்கினி யின்குகுமன்
குணமச்சை நீருதிரமும்

* இது இருகரங்களையும் ஒருங்குசேர்த்துக் கொட்டும் பருவம்.

தேளுதிக சூதமெனும் மூளைசுக் கிலமோடு
தேறுதா மதசுக்குமை
தெளிவையங் கிரியினோ டிருபஃது கருவியுந்
தெரித்துவிட் டடியேனையே
ஆளவருள் புரியும்நட மாநந்த மானதிரு
வமுதவாய் முத்தமருளே
அரியபொருள் விளைவுதரும் ஹல்லாஜென் சாகிபே
வமுதவாய் முத்தமருளே. (௨)

சேர்வாய்ச் சிகாரமதி லேயெழுந் தேய்வுகுணம்
திறமாய் விளம்புதேனின்
தெளியவாங் காரபூ தாதியாங் காரமுஞ்
சேர்வையிரு வையென்பதின்
சோர்வா யெழுந்துவரு சோம்பல்பய மாங்கார
தூக்கமுட னேமைதுனம்
சொல்லதிக * வீசுதன் மெய்க்குறுதி சுத்திசிங்
குதாக்கிய விருப்பமோடு
சார்குணஞ் சாத்துவித மானமு வஞ்சமே
தட்டறவ றுத்துவெளியாய்ச்
சகலமெய்ஞ் ஞானரூட் சாதிரூட் சமுமருள்
தந்தென்னை யாண்டகுருவே
யாருமறி யாதபர மாநந்த மானதிரு
வமுதவாய் முத்தமருளே
அரியபொருள் விளைவுதரும் ஹல்லாஜென் சாகிபே
வமுதவாய் முத்தமருளே. (௩)

மறையாம லோடிவரும் வாயுவு வகாரமாய்
வந்ததின் தத்துவங்கள்
வகைகூற வேயதிக சத்தமொடு ரூபரச
வாசமொடு பரிசம்வன்னி
திறமாகு கெவுனமொடு தானெனும் விசற்கமும்
செப்புமா னந்தமோடு
தெளியுமத் திமைதேவ தத்தன் தனஞ்செயன்
சேரபா னன்வியானன்
உறவாமு தானன்கிரு தரன்நாக கூர்மனும்
உறுசமா னன்பிரானன்
ஓடகல நிலையுட னிருத்துதல் கிடத்துதல்
உரைரண்டு பத்தினேழும்

* வீசுரன் என்றாஉம் பாடம்.



அறையா தறுத்தெனுளி லாநந்த மானதிரு
வமுதவாய் முத்தமருளே
அரியபொருள் விளைவுதரும் ஹல்லாஜென் சாகிபே
வமுதவாய் முத்தமருளே. (௪)

வெளியாம் யகாரமதி லேதோன்று தத்துவம்
விளம்புபே ருரைகள்கூறில்
விள்ளதிக வித்தைகலை நீதியொடு ராகமும்
மேன்மையுறு புருடன்மாயை
தெளிவாகு காமமொட சுத்தமத லோபமாச்
சரியங் குரோதமோகம்
தெரிவிதம தாகவிவை கருவிபதி னாலுமே
சிக்கதை யறுத்துவெளியாய்
ஒளிவா யெழுந்தகட லதிலே விளைந்தபுரி
யுளிலே யுறைந்தமணியின்
உயர்வா யதிர்ந்ததொனி யயர்வற் றெனுட்சாமி
லுறைவாய் நிறைந்தவருளே
அளியான துக்குளுறு தொழிலாகு மாநந்த
வமுதவாய் முத்தமருளே
அரியபொருள் விளைவுதரும் ஹல்லாஜென் சாகிபே
வமுதவாய் முத்தமருளே. (௫)

பூதாதி யுடன்ஞான விந்திரிய மைந்துமே
புரியுமாத் திரையைந்துடன்
போரான கரணநால் வித்தைதத் துவமேழும்
புகழுமீ ரைந்துநாடி
வேதாதி யோர்கூறும் வாக்காதி நாலுடன்
மிக்கவச னதியைந்தும்
விள்ளதிக சுத்தமுறு காண்டமோ ரைந்துமே
விரைவுகர் மாதியைந்தும்
நாதாந்த மாய்வளர் திசைவாய்வு பத்துமே
* நாடுகுண மூன்றுமாய்கை
நவில்வது புறக்கருவி ரண்டுபத் தோடைந்து
நாலுகுறை வாகநூறும்
ஆதார மாயறுத் தாநந்த மானதிரு
வமுதவாய் முத்தமருளே
அரியபொருள் விளைவுதரும் ஹல்லாஜென் சாகிபே
வமுதவாய் முத்தமருளே. (௬)

* நாலுகுணமென்றாஉம் பாடம்.

மூலமுட னேசுவா திட்டான மணிபூரகம்
முழுமுத லனாகதமுடன்
முறையாம் விசுத்தியும் நிறைவான ஆக்ஞையும்
முத்திதரு தலமாறுமே
காலதி லெழுஞ்சுடர்கொ டாவியில் வருந்தீப
காட்சிதரு சூட்சவருளே
கமலமதில் வெளியான * கண்திறந் தருள்ஞான
கடவுளா னந்தசோதி
நால்கலையி னூடுருவி மேல்முடிவி னூடாகி
நடுவடிய தாயுச்சியில்
கனிவுகொடு கனிவாகி யதிகரச சுவையமுதம்
நானுண்டென் னருள்மேவியே
ஆலதிக நஞ்சுண்டு மாநந்த மாகுதிரு
வமுதவாய் முத்தமருளே
அரியபொருள் விளைவுதரும் ஹல்லாஜென் சாகிபே
வமுதவாய் முத்தமருளே. (எ)

சுழுத்தியுட னேயதிக சொற்பனஞ் சாக்கிரந்
துரியந் துரியாதீதமுந்
தொந்தமுட னேயஞ்ச வத்தையிவை யானதுஞ்
சுட்டருளே வெட்டவெளியே
தெளித்தருள் வடித்திரு பதத்தினை நினைத்தெனுள்
திருத்திட வருத்துகுருவே
திறத்தொளி நிறைத்தெழு சிரத்தொடு சரத்துனி
திடத்துட னடத்தியெனையாள்
எழுத்தொடு சுழித்ததி விசைத்திடு நிசத்தினை
யெடுத்திரு விழிக்கிடையிலே
எதிர்த்திடு முகத்தொடு பொருத்திடு நலத்தினை
யெனக்கருள் நினைத்தபடியுள்
அழுத்திட வழுத்துகுரு வாநந்த மானதிரு
வமுதமாய் முத்தமருளே
அரியபொருள் விளைவுதரும் ஹல்லாஜென் சாகிபே
வமுதவாய் முத்தமருளே. (அ)

மனதுருகு மோவடிமை மயல்பெருகு மோதினமும்
வாடிமெலி வாகவருமோ

* கண்ணதிறந் தருள்ஞான மென்றூஉம் பாடம்,



வந்தியா தேயுனது நந்தாத பூரணம்
மாசோதி நாதமருள்வாய்
கனவான தோடுறுதி நினைவான தோடுறுதி
கருணைக நாவன்பினுன்
கழலான தேயுறுதி யனுவேனு மாமுத
கனஞான போதமடியேன்
தனையாள வேவந்து குருவாக வேநின்று
தடையிலா தேவிண்டவா
சதகோடி பாவமா சாபாச வினைகள்போய்
தவஞானக் கடல்மூழ்கியே
அநகோடி காலமுள் ளாநந்த மாகுதிரு
வமுதவாய் முத்தமருளே
அரியபொருள் விளைவுதரும் ஹல்லாஜென் சாகிபே
வமுதவாய் முத்தமருளே. (கூ)

ஹாமீம தாய்நின்ற தெய்வுலக டங்கலுங்
கனல்நரக மொடுசொர்க்கமுங்
கருணைகொடு வான்அறு ஷுகுருஸிஸ் தரங்களுங்
கனபருவ தங்களெட்டும்
பூமிதனி லுண்டான பறவையொடு மூர்வனம்
புகழ்பெரிய சலம்வாழ்வதும்
புத்திகெடு துட்டமிரு கங்களுந் தாபரம்
புகழ்கிருபை தேவர்மனுவும்
நேமியொடு மந்தரங் கொடுமுடி யகண்டமும்
நிர்மலம தானவெளியும்
நிற்சிவப் பொருட்கிருபை யுற்றதிவை யொக்கவும்
நிட்களசொ ரூபமாக
ஆமீ னெனுஞ்சோதி யாநந்த மாகுதிரு
வமுதவாய் முத்தமருளே
அரியபொருள் விளைவுதரும் ஹல்லாஜென் சாகிபே
வமுதவாய் முத்தமருளே. (௰)

* முத்தப்பருவம்

முற்றிற்று.

* இது முத்தங்கொள்ளும்பருவம்.

## வருகைப்பருவம்.

திருவே யுருவே திருமா மணியே
தெளிவே யொளிவே தெளிவோ ருளமே
குருவே அருவே குருநா யகமே
குறியா தருளே நினைவோ டுறைவே
மருவே மலர்வா சனைபோ லெவையும்
வளர்தி பமதா யொளிர்வாய் வளர்வாய்
அருவே கருவே ஹல்லா ஜென்பீ
ரருளே தெருளே தரவே வரவே. (௧)

வேறு.

பொன்னே பொருளே பொருளோ டுறைவே
புகழே யிகழா தெமையாள் தவமே
புரியும் படியே யடியா ருளமில்
பொலிவா யுறைவாய் நிறைவா யருளே
மின்னே மின்னொளி வாயூ டுருவி
வெளியா னதுளே வெளியாம் விளைவே
வேதா திகழ்தே டியுங்கா ணாத
மெய்ஞ்ஞா னமதா கியமெய்ப் பொருளே
உன்னு வருளே யுன்னிடு மவர்கள்
உளமீ தினில்ந டம்புரி யுங்கோவே
உன்பார் மனமீ தினிலடங் காத
உயர்வா னொளியே சிரநேர் சுழியே
அன்னு ளையிலே யிருளுறை சோதி
அருளே யருள வரு வாயே
அருள்சேர் கருணை ஹல்லா ஜென்பீர்
அருளே யருள வரு வாயே. (௨)

வேறு.

பொருளாகிய பூரக ரேசகமும்
புரியும்படி கும்பக மூன்றுடனே
பொருளாகிய வாய்வி லுறைந்தசையும்
பொருளேசுழி வாய்வி லுறுந்துணையே
இருளான தறும்படி யென்னுளமில்
இசையுந்தவ மேயெனை யாள்கோவே
இரவும்பக லும்மற நின்னிசைவை
இடைமீதி லெழுந்தரு ளுஞ்சுடரே



தெருளாகி நினைத்து வரும்படியே
செயல்நேர்மை புரிந்து நடந்துபதத்
திறனாகிய சோதி யுளந்தனிலே
தெளிவோர்பத மீந்தரு ளும்படியுள்
அருளாகி நினைத்தவா நந்தமுற
வருளே யருள வருவாயே.
அருள்சேர்கருணை ஹல்லா ஜென்பீர்
அருளே யருள வருவாயே. (௩)

மேலாம்பத மானது தாண்டியிறை
மேவும்அறு ஷானதின் மிஃருஜில்
விளைவாயுறை பேசிட மெய்யிறசூல்
மெய்ஞ்ஞானம தாகிவி ளைந்தணுகி
நாலாம்பத மானது கண்டிறசூல்
நலமாமுறை யானது தானவிலும்
ரண்டாகிய வேளையில் கூறநிக
நறைமாமணம் வீசிய தேனமுதங்
கோலாகலமா மிறசூல் திருவாய்
கொண்டேயுண மிஞ்சின தேனமுதங்
கோலோட்டி யேற்குண வீந்தருளுங்
குறையன்றி நிறைந்தப ழம்பொருளே
ஆலம்பொசி வாமுளா னந்தகர
அருளே யருள் வருவாயே
அருள்சேர்கருணை ஹல்லா ஜென்பீர்
அருளே யருள வருவாயே. (௪)

உருவந்தமு மொன்றிலை யென்றபரம்
உயிரொங்குமு லாவிநி றைந்தொளிரும்
உனையன்றிவ ணங்கிட வேறுமொரு
உறுதிப்பொருள் கண்டிலே னென்றனையாள்
குருவந்தசொ ரூபம தாயெனுளிற்
குறிகண்டுண ரும்படி வந்தடிமை
குறையன்றி தரும்படி நின்கிருபை
குதறத்தெனு நேமியில் மூழ்கியேயுன்
திருவென்றதி னெஞ்சக மெங்கணுமே
தெளிவாகிநி றைந்துநின் பொற்கழலைச்

சிமைகொண்டடி யாருற் காவதனில்
இனமுற்கட னம்புரி யுங்கழலின் *
அருவாகிம லர்ந்திடா னந்தமுறும்
அருளே யருள வருவாயே
அருள்சேர்கருணை ஹல்லா ஜென்பீர்
அருளே யருள வருவாயே.

† வருகைப்பருவம்

முற்றிற்று.

---

# சிற்றில்பருவம்.

பழகுமறை யேதெரிந்து மரியபய னேயுணர்ந்து
பகருமதி லேயிருந்த வகைகேள
பருவமுறு பாரோடண்ட மலைகள்கட லோடகண்ட
பலவுயிர்க ளேயெழுந்து மமையாமும்
ஒளியிலொளி யேநிறைந்து வெளியில்வெளி யேதிறந்தும்
உறுதியழி யாதிருந்த விருள்மீதே,
ஒருபொருள தாயுறைந்து திருமவுன மாயிருந்து
மூரையதிக மேநிறைந்த பொருளாகி
வெளியில்வெளி யேதிறந்து சுழியிலுற வேமலர்ந்து
விழிதுயில வேகலந்து சுகமாகி
விரைவுசர மோடியங்கு மருவுரதி யோடிணங்கி
விளையும்ரச மேயெதிர்ந்த தினநேர்மை
அழகுபெற வேகனிந்த சுவையதிக தேனிசைந்து
மடிமைசிர மீதிருந்த தழியேலே
அரும்பொருளி னேடிசைந்து குருபரனை யேநினைந்து
மடிமையுள மீதுறைந்த தழியேலே. (க)

வேறு.

திருடாகிய வஞ்சகமறவுந் தெளிவோடுனை நெஞ்சினில்வரவுந்
திருநாமம தஞ்சினிலுறவும் அருள்கோவே
திருநேர்மையெ னுந்தியில்வரவுங் குருவாகிய நந்தியின்னுனையின்
திறமாயுனை கொண்டுவரவுமே வழுவாதே

---

* திறமானது கூடிட நின்றன்முகந் தெளிவாகியே வீந்துறை வாகுமுள்ளில், என்பன மிகுந்தூவம்பாடம்.

† இது வருகையை விரும்பிய பருவம்.



தருவாயொரு சங்கினிலுறையுந் தொனியானது வந்தருள்பெருகுந்
தரளானது விண்டிடுதொனியின் அருள்வாயே
தவமீறிய வின்பமிலுறவும் பெரியோருனை யன்பினில்வரவுந்
தாவேயுளில் வந்தரு ளுதவுங் கடனுமே
மருடாவிய மங்கையர்மயலுந் திருடானது பொன்றிடுநினைவும்
மனமீதுனை தந்திடுபதமும் அருள்வாயே
வனமீதுறை நின்றிடுகுணமும் நினைவாகிய வின்புறுசுகமும்
வழுவாதுளி லன்புறுவளைவும் வரும்வேளை
அருள்மாமணி யென்றதிலுருகுந் தொனியானது கொண்டருள்பெருகும்
அருளாகிய நின்றிருவமுதை யழியேலே
வடியார்நினை வென்றதுசிரசிற் குருவாகிய கஞ்சமெனடிகள்
அடியார்சிர மங்குறுதெளிவை அழியேலே. (உ)

வேறு.

பூவிலுறை வாசமது போலுயிர்கள் யாவும்
மேவியுனை யேநினைவி லாகமுறு பாவும்
பூரணம தேகவிரி வாகிவரு சோதி யிறையோனே
போதமக லாதபடி யேநினைவ தாகும்
வேளைதனி லோதுகலி மாவிலுறை யாயின்
போர்விழியி னுலுருவ தானபொரு ளாதி நபிகூறும்
பேஅலிப தாகுமுத லானபனி யாலும்
ஓயதிய தாகிவரு நாதவுரு வாகும்
நோமைுறு வீனிலுறை நூனுமதி லாகி வரவேதான்
ஏகவடி வானசுட ரூபமுரு வாகும்
ஆகமதை நாளுமன மீதிலுறை வாய்நின்
நாமமதை மேவுசர மீதிலுற வந்த தறியார்கள்
பாவவினை யால்நரக மீதுதுய ராலும்
ஆவதென ஆலநபி யோதுமுறை தானும்
பாவமற ஞானமருள் மேவுமுள மீதில் அருள்வாயே
பாசமரு ளானபதி யாலுருகு நாளும்
நேசமுள மீதிலுற வானமன தாலும்
பானுமதிற் கூடிவரும் வேளைசுக மாகி வருவோனே
ஆவிலமை வானவுயி ராகமுறு சோதி
பார்வையதி லேகனிவ தாகிவரு தேனின்
ஆனரச மேசிரமி லாகியுணர் வாகி லழியேலே
ஆனஅஹ ஹூவெனும்ஹல் லாஜெனது பீரின்
பாதமல ரோழைசிர மேலுறைவ தாகும்
ஆனமலர்த் தேனையுணர் வாகுசிர மீதி லழியேலே. (௩)

வேறு.

வடிவுடைய மதியெனவு மழகுமுக மாதர்
முகில்மருள வெகுகருமை பழகுகுழல் நேர்மை
வரியறலை மடியவெதிர் பொருதுதுணி வான முடிமாதர்
வளைசிலையை யடருமிள மதிநுதலி னர்கள்
கடுவனைய கொடுமைவிழி கயல்மருளு பார்வை
வலையதனி லடிமையுடல் படபடென வாகி யலைவேனோ
நடுவிலொரு சுழிமுனையி லுருகுகதிர் நேர்மை
யசைவைமுத லுடலுயிரி னழகுநிறை வாகி
நடுவெளியி லுலவிவரு கனலொளிவு சோதி யருள்வாயே
நறையொழுகு திருமலரி னழகுறுதி யாகி
முழுமதியி லதிகமென வருமுதய மாகி
நவிலதிக பெயர்கொளுநல் நபிகளர சான மஹமூதர்
உடுவொளியை யவர்சிரமி லொருவரறி யாமல்
அமரிறை ஜிபுரில்விழி யதில்வெளிய தாகி
யுடுவிலுறு சுடரிலொரு தாளமதி னூடு முறைவாகி
உயிர்கள்பல வகையுமதி லொருசுடர தாகும்
பெருகுகதிர் மதியுமதி லொருசுடர தாகும்
உருகிநட மதிருமொளி யொருசுடர தாகி வருவோனே
அடிமுடியு நடுவுமதி லருள்பரவி மோதும்
மவுனமதில் நினைவுகொடு வருசுழியை நாளும்
அடிமைசிர மதிலதிக சுழிசுடரை மேவி லழியேலே
அழகினுறு மணியெனவும் வருகுருஹல் லாஜின்
அடிமலரை யெனதுசிர மதிலதிக நாளும்
அதிகசிர மதிலதிக சுழிசுடரை மேவி லழியேலே. (௬)

வேறு.

மூலமூ டாயுறைந்து மோடுமே பாழ்கடந்து
மோகவீ டேழ்ந்து வருசோதி
மூன்றுநா லாயெழுந்து நாலும்வீ ணேகழிந்து
மோசமா காதழுந்த வருள்வாயே
காவினூ டேயெழுந்து தேவினூ டேகலந்து
காயமாய் மேலெழுந்த வெளிமீது
காணவே நீயெழுந்து பூணுவாய் நீதெளிந்து
காலினூ டேயிணைந்து வருகோவே
பாலுமா வோடிசைந்து சீனிதே னேகலந்து
பாகமாய் நீயிருந்து ரசமானுய்
பாவியா னேயருந்த வாயிலே நீகொணர்ந்து
பாசமோ டேதிருந்த அருள்வாயே



ஆலமூ தாயணிந்து சூலினோ டேகனிந்த
ஆகமே யேழைசிர மழியேலே
ஆவியூ டேநிறைந்து வாழ்ஹல்லா ஜேமகிழ்ந்து
மாகமே யேழைபங்கி லழியேலே. (௭)

வேறு.

உனையுருக வறியேனைச் சகலகலை படியேனை
யுளமிலருள் நினையாத பவமாகி
யொளிரழகு குழலாளைக் கெருவிதம துடையாளை
யுரைவசனக் கிளியாள்தன் மயலாலே
மனநினைவு மயர்வாகி யவள்வலையி லுறவாகி
மருவியுடல் விழலாகி யலையாதே
வரவுனது திருதாளி னரியசுட ரொளிவான
மலரழகு கழல்வீடு அருள்வாயே
தினம்வெளியி லுருவாகி மவுனமுறு கருவோடு
திரைகடல்க ளுலகேழும் பரமான
தெரிவுகொடு நடமாடி வருகுமுளி லிருநாலுந்
தினம்வெளியி லழிவாகு கலைநாலும்
அனல்வெளிகொ டுறுவாயு தொனியிசைகொ டெழுநாலும்
அடிமைசிர மதுமீதி லழியேலே
அழகினுறு மணியான பொருளருள்ஹல் லாஜேநின்
அடிமைசிர மதுமீதி லழியேலே. (௮)

வேறு.

கும்பமுலை மாதரை யம்புவிழி யாள்தனைக்
கொவ்வையித ழாளையென் னுயிர்நாடி
கொஞ்சுமய லானதை ரஞ்சிதம தாயதைக்
கொண்டுதின மேயுளை வதினாலே
வம்புமன தாய்வெகு துன்பவினை யாலுயிர்
மண்டிரதி பாசமி லலையாதே
வந்துனது பாதமென் னுந்திதனி லேயருள்
மன்றுளூற வாய்வரு மிறையோனே
முன்புயிருள் மீதொரு நஞ்சுசுழி யானதில்
உன்கிருபை யாலுயிர் வகையாவும்
முந்தவதி லேயமை கின்றனரு ளால்வரு
முண்டகமி லேசுடர் கனிவாகி
அன்புகொடு தானதில் வந்தநதி தேனமு
தந்தரச மேசிரசி லழியேலே

அங்கிலொரு மாமணி யென்குருஹல் லாஜருள்
அந்தரச மேசிரகி லழியேலே. (எ)

வேறு.

விழியால் மருண்டு மொழியா லயர்ந்து
விழலா யுலைந்து மலையாதே
விரைவாய் நடந்து சரமு டதிர்ந்து
மிகவே யுகந்து மருள்வாயே
தெளிவா யிருந்த கடல்மீ தெழுந்து
திருவா யிசைந்த புரிமீதே
திடஞா யிருந்து நடமே புரிந்து
திறமா யுருண்டு மணியாகி
ஒளியால் விளைந்து தொனியா லிரைந்து
முறைவா யமைந்த வுயிரோடும்
உறவா யிருந்து வருமே நிறைந்தும்
உளமீ திருந்து மருள்வாயே
அழியாதுன் னன்பு சிரமீ திருந்தும்
அமுதே யருந்தி லழியேலே
அருள்வாய் நிறைந்த குருவேநின் னன்பின்
அமுதே யருந்தி லழியேலே. (அ)

திருவருள் புரிந்து மெளியெனுள் ளிருந்துந்
தெளிவுகொ டுகந்து வருவோனே
செயலுற விருந்து சரமதி லுறைந்து
திருடற விரைந்து வருசோதி
குருவதை யிசைந்து தரமன துகந்து
குறியது விளங்க வருள்வாயே
குரைகடல் வளைந்த வுலகுயிர் நினைந்து
கொளவள மிகுந்த விறையோனே
ஒருபொருள் திரண்டு புரியிட மடைந்து
வருதொனி யதிர்ந்து வரவேதான்
உயிர்களை நினைந்து பலவகை சமைந்து
மொருமணி துலங்க வருள்கோவே
அருளடி கனிந்து தரமன திரங்கி
யளிசிர மிருந்தி லழியேலே
அடிமையை நினைந்து குருவுளம் நிறைந்து
அளிசிர மிருந்தி லழியேலே. (கூ)

*சிற்றிற்பருவம்
முற்றிற்று.

* இது பிள்ளை விளையாட்டி னொன்றான சிறுவீடு கட்டுதலும் சிதைத்தலுமாம்.



## சிறுபறைப்பருவம்.

அகடுமுக டதிர்வரு மண்டபிண் டங்களும்
அலைகடல் குபிர்க்குபிரென்
றதிரவரு மலைகள்பொடி படக்கதிர் குளிர்ந்துவந்
தார்த்தெழுந் திங்கள்தானும்
அகடது பொருந்துநெஞ் சுரமெனும் பராபரம்
அபயமிட் டேகலைந்தும்
அண்டபகி ரண்டமுங் கிடுகிடென வதிரநர
கடைபட வமர்ந்துவிடவும்
பகடுற வணுந்துபுவ னங்களெல் லாஞ்சுமை
பரிந்துறுதி கொண்டகெருடன்
பணிபொற் சிரங்களவை யாயிரத் தெட்டுநின்
றுடலது பயந்தசையவே
செருகுடறும் படியுலக மதனில்நின் திருநாமச்
சிறுபறை முழக்கியருளே
தெளிவடிமை யுயிரிலுறும் ஹல்லாஜென் சாகிபே
சிறுபறை முழக்கியருளே. (க)

மலையினுங் கனமான பவமான தொருகோடி
வந்திசெய் தாலுமுலகில்
வளர்கடலி லும்மதிக கொடுபவக் கடல்மீது
மனமும்வெந் தலைந்துலைந்தே
அலைமீதி னிற்சென்று சுழலுந் துரும்புபோ
லவனிமீ திடையில்வந்தே
அருளுறைவு தருகுருவின் பதமலரை யறியாம
லலைமிசை சுழன்றவுயிர்கள்
கலைமதியி லுறைவுகொடு மருள்தருகு நின்னுமங்
கருணையொரு தரமொழிந்தே
கவனமுறு சுவனமதில் நரவுயிர்க ளனைத்துதிரு
கழலருமை பெறுவனவே
சிலைமகிழும் ரதியுமகி ழாகமவே தாந்தவுரைச்
சிறுபறை முழக்கியருளே
தெளிவடிமை யுயிரிலுறும் ஹல்லாஜென் சாகிபே
சிறுபறை முழக்கியருளே. (உ)

சீர்தெளிந் தருள்பெருகும் வேதாந்த முங்கருணை
சித்தமதில் வைத்ததிறமுந்
தெளிவோ ருளத்தினின் னருளால்நி றைந்தருமை
செய்துதுயர் தீர்த்ததிறமும்
வார்வளந் திடுலோக மதனிலல் லாமலும்
மற்றுமெவ் வுலகாகினும்
வளர்புவன மிருநூற்றெ ழிருபத்து நாலினும்
மற்றவகை யெவ்வகையினும்
பேர்நிறைந் தந்தந்த முறையோடு மாசற்ற
பெரும்பயன் நிறைந்துவெளியாய்ப்
பிறமீதி லுன்கிருபை யகமீதி லுன்கிருபை
பேர்பெரிய சொருபமுருவாய்
சீர்தெளிந் தருள்பெருகு மதிரவுயிர் கரையேறச்
சிறுபறை முழக்கியருளே
தெளிவடிமை யுயிரிலுறும் ஹல்லாஜென் சாகிபே
சிறுபறை முழக்கியருளே. (௩)

உனதடி பணிந்துநின் றன்புறுந் தொண்டர்தன்
னுள்ளமதிற் கள்ளமறவந்
துண்மையை விளைத்தன்ன துயகமல கிருபையொளி
யுறுதியை நடத்தியெனையாள்
மனமுனது மன்மாகி லவனே டெதிர்த்தபகை
மறைபட்டு முறிபட்டிட
மலைவகல வுயிர்கள்மகிழ் பெறவடிய ருளமகிழ
வருளின்முறை தானறிந்தும்
அனவரத நேரமுயிர் வெகுகோடி கோடிதவ
மார்ப்பினுன் முறைசெய்யினும்
அருள்நிறைந் தனதுதிரு நாமமொரு தரமொழியில்
அசிபத பதத்தொனவாம்
சினமுறவ திர்ந்துவெகு சினந்திடீர் கணீரெனச்
சிறுபறை முழக்கியருளே
தெளிவடிமை யுயிரிலுறும் ஹல்லாஜென் சாகிபே
சிறுபறை முழக்கியருளே. (௪)

பொல்லாத வன்கொடிய வஞ்சகன் கருணைதரு
பொருளையறி யாதமுடன்
பூவுலக மதின்மீது மறையோ ருளத்தபடி
பொருந்திநட வாதவீணன்



கல்லாத வஞ்சகன் பெரியோ ருளத்தையொரு
கடுகுமறி யாதபாவி
காசினியில் வெகுகோடி பொய்யா யுரைப்பவன்
கடியவிடி கரையின்முண்போல்
நில்லாத கர்மியன் செய்வஞ்ச சூனியம்
நிலைகெட்டு மற்றேடவே
நின்பாத கமலமல ரென்னுளு முளமிசையில்
நினைவுறுதித் தொண்டனெனவே
செல்லாத கொடுவஞ்ச சூனியம் பொடிபடநின்
சிறுபறை முழக்கியருளே
தெளிவடிமை யுயிரிலுறும் ஹல்லாஜென் சாகிபே
சிறுபறை முழக்கியருளே. (௫)

சமைந்தமை திதிக்கையுப ரதிசிரத் தைசமா
திதனையறி குணமாறுமே
தான்கடந் தேயதிக தற்பதச் சுத்தமொடு
சச்சிதா னந்தமுறையும்
நமையறிய வைத்தகுரு தொம்பத பதத்தினும்
நானற்று நானுனதும்
நால்வேத முந்தெளிந் துரைபகரு மசிபதா
நன்றுன வருள்நித்யமும்
அமையறிய வுறுதிபெற தத்தோம சீஇயெனும்
அத்துவித மத்வைதமாய்
ஆனந்த மாகிரண் டற்றுமொன்றுகிநின்
றருள்ஞான சோதிவெளியே
சிமையிது வெனுங்கலந் தொளிமருவ வெளிமீது
சிறுபறை முழக்கியருளே
தெளிவடிமை யுயிரிலுறும் ஹல்லாஜென் சாகிபே
சிறுபறை முழக்கியருளே. (௬)

இவ்வகை தெளிந்துறுதி கொண்டபெரி யோர்க்கியான்
எளிதான தொண்டுசெயவும்
எந்நாளு மவர்பாத மீதிலே போடுதேபு
ஜெளிமைசிர மீதிலுறவுந்
செவ்வினுட னவர்கள்மனம் நேர்மையதி லொத்தபடி
சென்றுபணி விடைபுரியவும்
செகமீதி லவர்களுடை யெச்சிலமு துண்வாகத்
தின்றடிமை நன்றிபெறவும்

எவ்வுலகு மவர்களுடை யடிமை யடியேனென
விசைந்துரை தெளிந்துவரவும்
இருதயந் தனிலவர்கள் பாதமதிர் தூளியை
யெனக்குறுதி யாகுமெனவுஞ்
செவ்வுட னடத்தியதிர் வெகுதொனி முழக்கமுறு
சிறுபறை முழக்கியருளே
தெளிவடிமை யுயிரிலுறும் ஹல்லாஜென் சாகிபே
சிறுபறை முழக்கியருளே. (எ)

வழுத்துவது நின்பாத முரைப்பது நின்னாமம்
மனமீதி லுன்கிருபையே
வாழ்வினுந் தாழ்வினு மாறாத நின்போத
மாசற்ற பொருளும்நீயே
முழித்திருந் தாலுமிரு கண்மூடிக் கொள்ளினும்
மோகமத சுகமாகினும்
முடியாத துயரம்வந் திடுசெய் நாலும்வெகு
மோட்சவழி திறவாகினுங்
களித்துள்ள மகிழ்வாகி வெகுவான யோகமென்
கருணைதனி லுறவாகினுங்
கடவுளே யுனதுதிரு நாமமல் லாதொன்றைக்
கருத்தில்வே றற்றுமறியேன்
தெளித்தடிமை யுளமீது மத்துவிதப் பொருளுறுதி
சிறுபறை முழக்கியருளே
தெளிவடிமை யுயிரிலுறும் ஹல்லாஜென் சாகிபே
சிறுபறை முழக்கியருளே. (அ)

முன்னோ ருரைத்தபடி நாலெழுத் துண்டென்றும்
முதலெழுத் தொன்றெனவுமே
முறைகோடி வேதவே தாந்தவுரை பகரவதின்
முடியாது மேலும்வேறு
சொன்னாலு மெட்டாது கண்ணுக் கடங்காது
துறவிலு மகப்படாது
சுழினைசாக் கிரசொற்ப னத்திலு மடங்காது
துரியவா தீதமாகி
நின்னாமத் தருள்போத வெளிமீதில் வருமென்ற
நினைவினி லடங்குபோதா
நிர்மலா கருணைதரு நித்தியா னாமுழுதும்
நீயாயி ருந்தசோதி



தின்னாத சுவையமுத ரசமுண்டு கருணைபொழி
சிறுபறை முழக்கியருளே.
தெளிவடிமை யுயிரிலுறும் ஹல்லாஜென் சாகிபே
சிறுபறை முழக்கியருளே. (கூ)

மறையும்நீ மறையோது பொருளும்நீ கருணைகொடு
வந்தபல வுயிரும்நீயே
மாறாத போதம்நீ சீறாத குருவும்நீ
மறுவற்ற சோதிநீயே
முறையும்நீ முறைமீது பரவுசித் தம்பர
முத்திவிஸ் தாரம்நீயே
மூச்சும்நீ மூச்சற்ற மவுனம்நீ முனைமீதில்
முடியாத சுடரும்நீயே
இறையும்நீ யேகாந்த வஸ்துநீ யடிமைதுய
ரெல்லா மறுப்பைநீயே
என்னோடு பகைசெய்த மாந்தரைக் கொலைசெய்
மெழுகூர்மை வேலும்நீயே
சிறையற்ற மருள்ஞான சொருபப் பிரகாசமே
சிறுபறை முழக்கியருளே
தெளிவடிமை யுயிரிலுறும் ஹல்லாஜென் சாகிபே
சிறுபறை முழக்கியருளே. (க0)

* சிறுபறைப் பருவம்
முற்றிற்று.

## சிறுதேர்ப் பருவம்

வேறு.

அன்பே தெளிந்துவரு கிருபா கரக்கருணை
அழியாத ஞானவருளே
யடியொன் றிரண்டுமுடி நடுவொன்று கொண்டதிரு
வயராத சோதியருளே
நின்பே ரறிந்துனது பதமான சோதியருள்
நினைவூ டெழுந்துதிறமாய்
நிறைவாம் வலம்புரியி லுறைவாகு நந்திதிரு
நிறைவா யெழுந்ததொனியே

* இது பிள்ளை விளையாட்டி னொன்றான சிறிய பறைகொட்டும் பருவம்.

முன்பே யெழுந்தகுரு வதிலே திரண்டமணி
முடியாத சோதியருளே
முதல்முத் தலக்கில்வரு கனியா யலர்ந்தினிமை
முறையாய் வருந்துமதனை
தென்போ டெடுத்துறைவு முகமான தற்குள்ரதிச்
சிறுதே ருருட்டியருளே
தெளிவுதரு மணியான ஹல்லாஜென் சாகிபே
சிறுதே ருருட்டியருளே. (க)

அருள்பெறவே யுனதுதிரு மனமதிக கிருபைதர
அசையாத ஞானவருள்தா
அடிமுடியும் நடுவாகி நின்றதிரு வானந்த
அட்சரப் பொருண்மகிமைதா
வெருளறும் படியெனதி னுளமீதி லக்கினி
மேவிவரு தீபவொளிதா
வெட்டவெளி யாய்நின்று முப்பாழு மூடுருவி
வெளியான சோதியருள்தா
குருவாகி யெனையாண்ட நாதநா தன்பதங்
கொண்டாடி யுள்ளமீதிற்
குறையாத ரசமான தேனமுது போலுண்டு
குறையற் றிருக்கவருள்தா
திருவருளி னுவிவைகள் பெற்றெனுள் நடஞ்செய்ப்ர
சிறுதே ருருட்டியருளே
தெளிவுதரு மணியான ஹல்லாஜென் சாகிபே
சிறுதே ருருட்டியருளே. (உ)

காணாத சோதிமணி யருள்நிறைவு தந்தவா கருணையா யுளில்வந்தவா
கமலமதி லேநின்று மெல்லா வுயிர்க்குதவு கசடற்ற பொருள்தந்தவா
பூணாத மணிமந்த்ர மென்னுளிற் பூணவே புலனற்று முறைகின்றவா
பொல்லாத பவமாயை வினையே னுளத்திலுன் பொற்பாத மலர்தந்தவா
தானாகி யடியேற்கு வடிவாயென் னுளில்நின்று சகலமெய்ஞ் ஞானமீய்ந்து
சதகோடி பவமான வினையகற் றிப்பெருந் தவமுத்தி யருள்தந்தவா
தேனுறெழுந்தெனுளிலொளிவாய்நடஞ்செய்பர சிறுதேருருட்டியருளே
தெளிவுதருமணியான ஹல்லாஜென் சாகிபே சிறுதேருருட்டியருளே.

* சிறுதேர்ப்பருவம் முற்றிற்று.
ஆகப்பருவம் அ-இ, திருப்பாடல் - கூ0.

ஞானப்பிள்ளைத்தமிழ்
முற்றுப்பெற்றது.

* இது சிறுதேர் கட்டியுருட்டி விளையாடும் பருவம்.

ஹ்ரா மீம்.

# ஞானக்கும்மி.

கும்மி யடிபெண்ணே கும்மியடி - நல்ல
குஞ்சித ரஞ்சிதக் கும்மியடி
செம்மலாம் ஹாமீமு ஹம்மது பாதத்தைத்
தேடிக் கும்மி யடிப்பமடி - நிதம்
நாடிக் கும்மி யடிப்பமடி. (க)

வேத முடியுச்சி நெய்தோய்த்து - மென்மை
விழியிற் கூர்மையு றத்தேய்த்து
வேதமங்குறு சோதிநற்றவ
வெட்டவெளிக்குள் விளங்கமுதாகிய
மெய்யென்று கும்மி யடிப்பமடி - அருள்
ஹையென்று கும்மி யடிப்பமடி. (உ)

கண்ணை யறுத்தருள் கண்ணோ - ஹாமீமு
ஹம்மது பாத மலர்ச்சீரோ
காணநித்தலும் பூணவுத்தம
மானநற்றவந் தோணவைத்ததைக்
காட்டிக் கும்மி யடிப்பமடி - மனம்
பூட்டிக் கும்மி யடிப்பமடி. (ங)

எங்கும் நிறைந்தது வேதுலங்கும் - பொருள்
என்னு ளடிமையு ளத்திலங்கும்
ஏகவச்சர மாகநிற்சிவ
யோகமுற்றதை யேகருத்துற
என்றென்றுங் கும்மி யடிப்பமடி - அருள்
நன்றென்றுங் கும்மி யடிப்பமடி. (ச)

தொண்டர் பகையை யறுத்தொதுக்கும் - ஞானச்
சோதிக் கடலைப் பெருகவைக்கும்
சோதியான்ஹா மீம்முஹம்மது
பாதமேகதி யாமென்றேநிதம்
துதித்துக் கும்மி யடிப்பமடி - அருள்
மதித்துக் கும்மி யடிப்பமடி. (ரு)

ஆதி யனாதி முதற்சொருபாய் - வந்தும்
அங்கெழு மென்குரு வச்சரமாய்
ஆக்கியென்னுளில் தாக்கிவைத்ததை
ஆக்கமுற்றுயர் வாக்கின்மேலுற
ஆனந்தக் கும்மி யடிப்பமடி - அருள்
தானந்தக் கும்மி யடிப்பமடி. (சு)

மூலக் கிழங்கின் முறைநேரோ - அருள்
முத்திக்கு வித்தின் முறைபாரோ
மூன்றுமொன்றென வூன்றிநன்றென
வேன்றுகொண்டிடு மான்றபேரொடு
மூண்டு கும்மி யடிப்பமடி - அருள்
பூண்டு கும்மி யடிப்பமடி. (எ)

காலைப் பிடிக்க வெளியாமே - அங்கு
காணாத வச்சர மூடாமே
கண்ணையறுத்தொரு கண்வெளிநேரோ
யுண்மையைநாட்டிய தன்மையினைக்
கலந்து கும்மி யடிப்பமடி - மனம்
மலர்ந்து கும்மி யடிப்பமடி. (அ)

தன்னு ளிருந்த தறியாமல் - எங்குந்
தானே யுழன்று திரியாமல்
சார்வாயறிவொடு கூர்வாயருளொடு
சாகாமற்செத்திடுஞ் சற்குருபாதத்திற்
ரூனே கும்மி யடிப்பமடி - அருள்
மானே கும்மி யடிப்பமடி. (கூ)

பொய்யான பாண்டப் புழுக்குரம்பை - அதை
மெய்யாக நம்பல் முழுப்புறம்பே
போதமுற்றஹா மீமுஹம்மது
பாதமுற்றதென் றேதினாடொறும்
போற்றிக் கும்மி யடிப்பமடி - அருள்
ஏற்றிக் கும்மி யடிப்பமடி. (க0)

தன்னை யறிந்து மறைநேரி - லருள்
சார்ந்த வலம்புரி மீதூரிச்
சந்தவிந்தையுற வந்துதந்துதொனி
தந்திதிந்தியென தொந்தநடஞ்செயல்



சார்ந்து கும்மி யடிப்பமடி - அருள்
சேர்ந்து கும்மி யடிப்பமடி. (கக)

தூரந் தொலையினிற் செல்லாதே - குரு
சொன்ன வழிவிட்டு நில்லாதே
சோதிமுத்தொளி சோதிமெய்ப்பொருள்
ஆதியுத்தம வேதமுற்றது
சொக்கிடக் கும்மி யடிப்பமடி - அருள்
எக்கிடக் கும்மி யடிப்பமடி. (கஉ)

சித்தாந்தம் வேதாந்தம் ரண்டாகிப் - பரம்
சேர்ந்த வேதாந்தத் தெளிவாகி
ஜெகஜெககண்டித ஜெகஜெகவிங்கித
ஜெகமுறவந்தெழுந் திருவானந்தம்
தெளிந்து கும்மி யடிப்பமடி - மனங்
குளிர்ந்து கும்மி யடிப்பமடி. (கங)

ஹாமீ முஹம்மது பாதமலர்த் - திருக்
காட்சிக்குஞ் சூட்சக் கருவினலர்
காட்சிக்கும் மாட்சிக்கும்
சூட்சிக்கும் ஹாமீமைக்
கருதிக் கும்மி யடிப்பமடி - மனம்
பருகிக் கும்மி யடிப்பமடி. (கச)

ஆகம வேத முடிவாகி - ஒலு
வாகஸ்ஜ ஐததுமே தானாகி
ஆவலியாருடன் மரியமாமருள்
பேரியாரொடும் வாசமாய்வரும்
ஆவென்று கும்மி யடிப்பமடி - அருள்
தாவென்று கும்மி யடிப்பமடி. (கரு)

மூந்த நாகத்தின் வடிவாகி - அதின்
மூந்த வெளியொளி முன்னாகி
மூலவச்சர மாலுணர்ந்தருள்
சீலநித்திய மேலவன்பத
முத்திக்கும் கும்மி யடிப்பமடி - அருள்
சித்திக்கும் கும்மி யடிப்பமடி. (கசு)

வேறு.

உந்தி யெனுங்கொப்புட் கயலாகி - நல்ல
வுண்மை ஸுன்னத்துச் செயலாகி
உருகியடிமுடி நடனமென்றொளி
யுண்மையெங்கணுஞ் செம்மையாகிய
ஒளிவுபளபள தளனசொருபமே
உண்மைநபியென வந்துபிறந்ததை
உகந்து கும்மி யடிப்பமடி - மன
மகிழ்ந்து கும்மி யடிப்பமடி. (௧௭)

சொர்க்கத் தரம்பை யருங்கூடி - வந்து
சொர்க்கத்து மெய்த்துகி லேச்சூடி
சுருதியண்டபின் டங்களெங்கணும்
சுவனஅறுஷொடு குறுஸுலெவ்ஹுகலம்
சுற்றியேநட மாடிநித்தமும்
வைத்தமாபுகழ்ப் பாதமுத்தியைச்
சூழ்ந்து கும்மி யடிப்பமடி - மிக
வாழ்ந்து கும்மி யடிப்பமடி. (௧௮)

பிள்ளை பிறந்த வுடன்மிரளப் - பெரும்
பூதங்கள் புத்துக்கள் தான்மிரள
பிரளிதடதட மடமடவெனவரு
பிசகுகொண்டெழு காபிருலடது
பிரளியறுஅறு கழக்ழவெனுமது
போதிக்கும்ஹாமீம் முஹம்மதுபாதம்
பெலக்கக் கும்மி யடிப்பமடி - அருள்
துலக்கக் கும்மி யடிப்பமடி. (௧௯)

என்னு ளிருந்துயி ரெங்குமின்று - சக
மெல்லா வுயிர்க்கும் நிரம்பிநின்று
எங்குமெங்கணும் துங்கமங்கள்ந்
தங்குமங்குறுந் தொண்டருளமிசை
தந்ததொந்திமி திந்திம்திமென
தானேநடமிடு ஹாமீம்முஹம்மதைச்
சார்ந்து கும்மி யடிப்பமடி - மனம்
சேர்ந்து கும்மி யடிப்பமடி. (௨௦)



வேதாந்த மங்கு முடிவான - வருள்
மெய்யாம் பரவறி வாம்ஞான
நாதநீதசொ ரூபமாகிய
நாதவெளியொளி போதநிர்மல
நன்றென்குருகழல் கொண்டாடியேநடம்
நாயகமாகிய ஹாமீமுஹம்மதை
நாடிக் கும்மி யடிப்பமடி - அருள்
கூடிக் கும்மி யடிப்பமடி. (௨௧)

வேறு.

தேவர்க் கிறைவர் ஜிபுரீலாம் - அருள்
சேருமுதியோரொன் றெண்ணவேதாம்
சென்னிமீதிலே தளதளவெனுமொளி
மன்னுமழகொடு மின்னும்பளபள
பரம்சங்கிர்த லோலவிங்கிர்த
பழமறைக்குரு வானவெளிவொளி
பத்திதந்திமி தோவெனும்பதி
தித்திதிந்திமி தாவெனநடமருள்
பார்த்துக் கும்மி யடிப்பமடி - மிக
ஆர்த்துக் கும்மி யடிப்பமடி. (௨௨)

வேறு.

வேஷ மயில்வடி வாயிருந்து - வானின்
மேவியெக் கீன்மரத் தூடுறைந்து
மெய்யழகுற்ற ஹாமீம் பாதத்தை
மேவிக் கும்மி யடிப்பமடி - அருள்
தாவிக் கும்மி யடிப்பமடி. (௨௩)

ஞானக்கும்மி

முற்றுப்
பெற்றது.

ஹ்ரீம்.

# ஞான அந்தாதி.

## பாயிரம்.

### வெண்பா.

ஆதியந்த மில்லா தகண்டமய மாய்நிறைந்த
சோதியொளி நின்பாதந் தோன்றவே—யோதுமறை
வேத முடிவதாய் வேதாந்த மெய்ஞ்ஞானக்
காதல்நபி பாதமலர் காப்பு. (௧)

அகரமுத லெவ்வுயிரு மாகுமுன்னே யங்கோர்
அகரமுதலச்சொருப மாகி—அகரமுத
லானதுவு மவ்வேமுன் அவ்வவ் வகரமுத
லானதுவே கோவைக் கடி. (௨)

ஹ்ரீ மந்தாதி கவலுதற்கு நின்பாதம்
ஹ்ரீ மெனுமுளத்திற் காட்டுங்கால்—ஹ்ரீமென்
றுன்னைத் துதிக்கு முளத்தே வருஞ்சோதி
யுன்னைத் துதிக்கு முளம். (௩)

உன்னைத் துதிக்கு முளத்தேநின் பாதமல
ருன்னைத் துதிக்கு முளத்தோர்க்கு—முன்னே
நினைவா லறிந்தவர்க்கு நின்சொருபாம் பிரின்
நினைவாற் பனுவல் நிறை. (௪)

## நூல்.

### கட்டளைக் கலித்துறை.

நிறைக்குங் கிருபையும் நின்னடி யாருள் நினைவுகந்து
நிறைக்குங் கிருபையும் நின்னடி யாகுநின் பாதமலர்
நிறைக்குங் கிருபைப் பராபர மாகிய நின்னிருதாள்
நிறைக்கும் படியருள் ஹ்ரீமென்சோதி நிலைப்பதுவே. (௧)

நிலைப்பது நின்னிரு சூட்சாதி சூட்சம் நிறைவியுள்ளே
நிலைப்பது மன்பர் மனமுடி வாகும்நின் றன்கருணை
நிலைப்பது சூட்சி யடியா ருளத்தில் நினைவுகொண்டு
நிலைப்பதும் ஹ்ரீ மெனச்சொல்வ தாங்கண்ணி னேர்மையுற்றே. (௨)



உற்றே பொருளடி மூலமென் றேகொள வுள்ளினுள்ளே
உற்றே யிருந்தது மூலம தாமுயி ரோடுறைந்தே
உற்றே யுயிருள் ளுறவாய் நிறைந்துமுள் ளங்கமெலாம்
உற்றே யிருந்தது ஹ்ரீ மெனச்சொல்லு மோரெழுத்தே. (௩)

ஓரெழுத் தாமெவ் வுயிர்களு மாகுமுன் னான்றினதும்
ஓரெழுத் தாமுயி ரெல்லா மமைத்தது முட்சிவமாம்
ஓரெழுத் தாம்நின் திருத்தூக்கப் பார்வையி னுள்ளுகந்தும்
ஓரெழுத் தாமுறும் ஹ்ரீ மெனச்சொல் லுரைப்பதுவே. (௪)

உரைப்பது மூல முடிவான சோதியென் னுள்ளினுள்ளே
உரைப்பது மந்தி தனில்வரு மச்சர மோங்கியங்ஙன்
உரைப்பது ஞானத் திருவருளாய் நின்ற வுண்மைகொண்டே
உரைப்பது மந்தநல் ஹ்ரீ மெனச்சொல் லுளத்தறிவே. (௫)

அறிவா னதுமுயிர் தன்னோ டுறைந்து மகமகிழ்ந்தே
அறிவா னதுமன் றிரவிலிருந்து மமைத்து வைத்தே
அறிவா னதுநின் திருமுன் சொருபம தாகியங்ஙன்
அறிவா னதுமருள் ஹ்ரீமென் முன்னின் றருள்நிறைந்தே. (௬)

நிறைந்தே சொருப வடிவாயிருந்தது நின்றன் முன்னே
நிறைந்தே யருவுரு ரூபம தாய்நின் னகக் கண்ணினால்
நிறைந்தே சொருபத்தைப் பார்க்கு மப்போது நினையுகந்தும்
நிறைந்தே சொருபமும் ஹ்ரீமென் றுன்முன் னினைவுரைத்தே. (௭)

உரைத்தே கருணை அஹ்மதென் றேயுன் னினைவுகொண்டும்
உரைத்தே யுரைக்குந் தொனியதி ராலெவ் வுயிருமதில்
உரைத்தே யுரைக்க வுருவாய்ச் சமைந்து முளமகிழ்ந்தும்
உரைத்தே யுரைத்தது ஹ்ரீமென் றன்புகொ ளுண்முடிவே. (௮)

முடிவாகி நின்றது மூன்றட் சரமதில் முண்டகமாய்
முடிவாகி நின்றது மூன்று மொன்றாகி முதல்முடிவாய்
முடிவாகி நின்றது மூன்றெவ் வுயிருள் முளைத்தெழுந்து
முடிவாகி நின்றது ஹ்ரீமென் றட்சர மூன்றுமதே. (௯)

மூன்றே மறைந்து வெளிவடி வாகிய முத்தரளம்
மூன்றே திரண்டு முருவாகி யெவ்வையு மூலமதில்
மூன்றே கருணை யகக்கண்ண தாகிய வுள்மவுனம்
மூன்றே திரண்டுரு ஹ்ரீ மருளங் கொளித்ததுவே. (௧௦)

வைத்தே திரண்டது முத்தலக்கான வடிவுகொண்டு
வைத்தே திரண்டது முத்தலக் குள்ளில் மகிழ்ந்ததற்பின்
வைத்தே திரண்டது வாருறு மோடி மடிந்ததற்பின்
வைத்தே திரண்டது ஹாமீ மெனவெழும் பிஞ்செழுத்தே. (கக)

பிஞ்செழுத் தேபின் பிறவா துதித்திடும் போதெழுத்தால்
பிஞ்செழுத் தேயுடல் மேவு முயிரிடைப் போய்ப்புகுந்து
பிஞ்செழுத் தேயதி னஞ்செழுத் தேயஞ்சும் பேரெழுத்தே
பிஞ்செழுத் தோடருள் ஹாமீ மெனும்நற் பெருந்தவமே. (கஉ)

தவமே யடியவ ருள்ளக்கமீதிற் றரித்து நின்று
தவமே விளைந்து கடலாய தற்குள் தரித்துநின்று
தவமே விளைந்து முறவஞ்சி யாமெனுஞ் சத்தமதில்
தவமே விளைந்து மருள்தரும் ஹாமீமென் தற்பரமே. (கங)

தற்பர மேபொரு ளாய்ப்பச்சை மண்புழுத் தான்பொதிந்து
தற்பர மாயது தற்சொரு பாகத் தரித்துநின்று
தற்பர மாங்கண் நிறைவான வாய்வுடன் தான்திரும்புந்
தற்பர மாங்கண் ணுருவருள் ஹாமீமென் றற்சுடரே. (கச)

இசைந்தே சுழிகொடு சங்கோடு சக்கர மேழினிலும்
இசைந்தே சுழிகொடு சங்கோடு சக்கர மேற்றதற்பின்
இசைந்தே சுழிகொடு சூட்சாதி சூட்சம் நினைவினுள்ளே
இசைந்தே பிடிக்க ஹாமீ மருட்சொல் லிசைந்ததுவே. (கரு)

ஆ திருப்பாடல் - கரு.

---

ஞா ன அ ந் தா தி

முற்றுப் பெற்றது.

ஹா மீ ம்.

# ஞான அநுபவவிளக்கம்.

வெ ண் பா.

உள்ளமதிற் கள்ளமற வோர்மொழியே ஹாமிமெனும்
விள்ளுமதிற் கோடி வெளிகாந்தி—தெள்ளுதவம்
ஹாமீமென் றுன்னும் கருத்தறிந்து கூறுமதால்
ஹாமீமே உள்ளமுறுங் காட்சி. (க)

காட்சித் துயரறுக்குங் காணு மிருள்மாற்றும்
வாய்ச்சிந்த ஹாமீ மெனும்வசனம்—ஆச்சிதனுல்
எல்லா வெளியொளியும் யென்கோன்றன் முத்திரையும்
எல்லாம்ஹா மீமென் றிசை. (உ)

இசைவேத சாஸ்திரமு மிப்படியென் றோதும்
அசையாதென் னுள்ளிலறி வுற்று—நிசமாகக்
குருவுரைத்த ஞானக் குறியுமது தானுங்
குருவுமருள் ஹாமிமெனக் கூறு. (ங)

கூறவே பொல்லாக் கொடியபவ மும்மாறும்
தேறும்ஹா மீமுஹம்ம தென்திருவால்—மீறியருள்
வந்தே திறந்து வழிகாட்டு மென்னுளும்
அந்தஹா மீமுஹம்ம தாம். (ச)

தானுய் நடத்திவைத்த தற்பரனே தற்செயலே
தானுய் நடத்தியருள் தந்தாயே—தானுக
ஹாமீமென் றுன்பேர் கருணை மனதிலுறும்
ஹாமீம்மு ஹம்மதருள் காண். (ரு)

காண மனமீதிற் கருதுவது நின்பாதங்
காணவெளி யாவதும்நின் காட்சியே—காணுவதுங்
காணுமல் வேறே கருதுவதும் நீயாகும்
பூணுவது பாதமலர் போற்றி. (சு)

போற்று முலகிற் புகழ்மெத்தத் தந்தபிரான்
காத்துத் துயரறுத்த காரணனே—யேத்தி
மனம்வாக்குக் காயம் மதித்திடா மெய்யைத்
தினமழுந்த நீகிருபை செய். (எ)

செய்யு முலகமதிற் சேர்குறையொன் றில்லாமல்
மெய்யா யருள்காட்டும் வேந்தனே—மையகல
வஞ்சனைபொய் சூனியம்பொய் மாரணம்பொய் வந்தனது
கஞ்சமலர் தந்தபொருள் ஹாமீம். (அ)

அண்டபிண்ட மாகு மவனிமுழு தும்போக்கி
எண்டிசையெல் லாங்கடந் தெய்தினுமே—தொண்டருளில்
மாறாமல் நின்று வளருமருள் வள்ளலெனத்
தேறாமற் றேறுஞ் செயல். (கூ)

செயலி லுருவாகிச் சித்தந் தெளிவாகி
அயலறிவை விட்டெறி வாகிக்—கயல்விழியின்
மாதைக் கடிந்தேகி வன்னி யருள்தோன்றிப்
போதமருள் ஹாமிமெனப் போற்று. (க0)

போற்று மலர்ப்பாதம் பொருந்துபெரி யோருளத்தைச்
சாற்றுங் குருவினருள் சாரத்தை—யேத்தும்
மனத்தால் நினைத்து மனமறுத்து மொன்றாய்
நினைத்தபொருள் ஹாமீமே நித்தம். (கக)

நித்த மலரடியை நீக்கமற வெந்நாளும்
சுத்தபரி பூரணமாய்த் தோற்றியே—முத்திதா
தானேதா னாகத் தாவுமரு ளேநினைவில்
ஆனா லருள்ஹாமீ மாம். (கஉ)

வெளியில் வெளியாகும் மெய்க்குருவின் பாதம்
தெளியவுள மீதில்வெளி சேரில்—ஒளியிலொளி
தானாக நின்றிரட்சித் தம்பிரா னேமுழுதும்
தானாக நின்றிரட்சித் தான். (கங)

தானாக வென்னுளத்திற் றன்சொருப மாயிருந்து
தானாக ஆடியருள் தந்தாயே—தானாக
ஆடினாய் சித்தத் தணுவளவு மாறாம
லாடினா யெங்க ளரசே. (கச)

அன்புடையார்க் கன்பருளு மன்பே கருணைதரு
மன்புடையார்க் கன்பருளு மாகுமாம்—முன்பே
வலம்புரிக்குள் ளாகிமணி முத்ததிர்ந்த சத்தம்
வலம்புரிக்குள் ஹாமிமென வாம். (கரு)



உலகிற் பழியாம லுந்தனரு ளோடு
கல்கமற வந்துதித்த காட்சித்—தலையதிக
சோதியே தானாக தொந்தமிடு மெய்ஞ்ஞானத்
தாதியே மெய்யென் றறி. (கசு)

பழவினையற் றுந்தன் பதமே பணிய
இளகியுள மெங்நாளு மேற்றுக்—களவறுத்துள்
தானைத் தினந்தோறும் தான்பணியில் மெய்ஞ்ஞானம்
நீளவருளுண்டாம் நிலத்து. (கஎ)

இருளான தெத்தனையோ கோடிவந்தெய் தாலும்
பொருளான சூரியனிற் போயெல்—தருமதனால்
எவ்வுயிர்க்குஞ் சுத்தவொளி யென்றுன் கனகிருபை
செவ்விலருள் தந்தாய் திறம். (கஅ)

ஞான அனுபவவிளக்கம்
முற்றுப்பெற்றது.

---

# ஞான ஆனந்தம்.

வெண்பா.

நித்தியமாய் காரணத்தில் நீகலந்தங் கொன்றான
பத்தியா னந்தவெண்பாப் பன்னுன்றும்—முத்திதரும்
தாமீமே தாசீனே தாஹாவே தானான
ஹாமீமே ஹாமீமே காப்பு. (க)

நின்னை யறியாமல் நீகோடி யேயறிந்து
பன்னுதவ மெத்தனைநீ பார்த்தும்—மின்னனையீர்
காணாது காணவுன்னைக் கண்டறிந்தார்க் கல்லாது
தோணாது பூரணமே சூட்டு. (உ)

மூடி விழியாதே முன்பின்னும் பாராதே
நாடிநீ நாளென்றும் நாடாதே—வாடிமறைந்
தத்துவிதத் தந்துவை தத்தறிவை யேவைத்துப்
பெற்றதனி லுற்றறிவைப் பேணு. (ங)

தூலம்பொய் சூட்சம்பொய் தோன்றுமுறை யானதும்பொய்
ஆலம்பொ யந்தரம்பொய் யாவும்பொய்—காலுந்
தலையுங் கடந்தறிவிற் றனையந்து நின்ற
நிலையா மசிபதத்தில் நில். (ச)

ஓதலுறு மந்திரங்க ளொன்றையுமீ பாரா தே
காதலுறுங் கண்காட்சி காணு தே—வேதா
தெளிந்தமல ருச்சியின்தேன் தித்தித்துத் தித்தித்
தழுந்து மழுந்தா தழுந்து. (௫)

காணுது காணக் கரத்தாற் பிடிக்கவெட்டா
ஊணி லுரைபகரி லொவ்வா தான்—மாணுகேள்
நின்னையறி நின்னுள்வரும் நிற்கமல நிற்குணமே
நின்னையல்லால் வேறிலையே நின்று. (௬)

வேதங்கள் யாவும் விளைந்துதெளிந் தொன்றுன
போதங்கேள் மாணு புகலுவேன்—சாதனந்தான்
கோசர மாஞ்சோதி யாவுமீ யாமென்ற
கோசரம தாமறிவிற் கு. (௭)

அபர மறிய வறிவெவையு மாயும்
அபரமறி மேலறிவுன் மையாம்—விபரமது
கண்டதில்லை கேட்டதில்லை காணுமற் காரணத்தைக்
கொண்டதுவே ஞானக் குரு. (௮)

கடத்துல மக்கடத்திற் கண்டஜல மேகரணம்
கடத்தழுக்குத் தான்வித்தை காணில்—கடத்துள்வெளி
கண்டதுவே ஜீவன்மேற் காணுமற் காரணத்தைக்
கண்டதுவே ஞானக் கரு. (௯)

தன்னையே யாவுமெனில் தற்பரத்திற் சுத்தமுமாம்
அன்னையே யாவுமெனி லாரசுத்தம்—நின்னை
தெளிவதற்கு வேதமெல்லாம் செப்புமொழி யிப்படியென்
ளொளியுருவாய் நின்னு ளுக. (௧0)

தன்னை யறிந்துணர்வ தற்பதமாம் தற்பதமே
துன்னும் பொருளறியில் தொம்பதமாம்—என்னுமிவை
சேரி லசிபதமாம் சேருமா னந்தவெண்பா
பாருமுத்தி ஹாமீம் பதம். (௧௧)

ஞானஆனந்தம்

முற்றுப் பெற்றது.

ஹாமீம்.

# ஞானவகாதசம்.

அறுசீர்த்தாழிசை.

வானோர்கள் வணங்குதல் ஹாமீமெனும்
  மலர்மீமெனு மானதி லேமனமே
ஆனோர்கள் பரங்க டெளிந்திடவும்
  அருளேமன மீதுறை வைத்திடவும்
தீனோர்கள் வணங்குதல் ஹாமீமெனும்
  திரமாகிய சோதி தெளிந்துறையும்
ஆனோர்புகழ் ஹாமீ மெனுங்கிருபை
  அருள்சேருயர் ஹாமிமு ஹம்மதுவே. (௧)

மறைவேத முடிந்திட மானதிலே
  வருமேஅலி பானது மீமுடனே
நிறைவாகிய நின்சொரு பக்கட்வுள்
  நிலைகொண்டது மவ்வுள மேஹறுபாய்
மறைவாகியி ருந்துதி ரண்டுருவாய்
  வரவேவெளி மீதினில் வைத்தபிரான்
அறையற்கரு மாமீ ஞருதரத்
  தருண்மீறிய ஹாமிமு ஹம்மதுவே. (௨)

எளியார்துயர் தீர்த்திட வந்தபொரு
  ளெந்நாளுமென் னுள்ளமி லேநிறைவாய்க்
கழிவாகிய மும்மல மற்றிடவுங்
  கருணாகர நந்தி வணங்கிடவும்
மொழிவேத முடிந்திட மீதினிலே
  முனைநெட்டையும் வட்டமு முச்சுடராய்
அழியாதப ரத்தருண் முத்திறகுல்
  ஆமினவுத ரத்துறும் ஹாமீமே. (௩)

கட்டளைக்கலிப்பா.

உள்ள மீதிற் கொடுந்துய ராலும்நெஞ்
  சுருகி வாடி மெலிவதைப் பார்த்துங்கள்
தெள்ளும் ஞானத் திருமுகங் கொண்டென்னைத்
  திருந்த நோக்கித் தெளித்தருள் சாகிபே

கள்ளம் மீறும் புலனுன் மயக்கத்தின்
கருவி யால்வஞ்ச கன்னெஞ்சத் தால்வருஞ்
சள்ளை தானகன் றுய்யவு ளத்தினிற்
றரித்து நின்றருள் ஹல்லாஜென் சாகிபே. (௪)

கருணை மாமணி முத்தேயுள் ளன்பினிற்
கனிந்த மாங்கனி யேரச மேவெகு
புரண சந்திரன் போலவே வந்தென்னுட்
பொருந்தி யேதிரு நடனம தாடிய
சரண பாதந் துதிக்கின்ற பைதலுட்
சகல நோய்வஞ் சனைக்கட் டறுத்திடும்
பிரண வத்தின் மருவுமென் ஹாமீமாற்
பிழைபொறுத் தாளும் ஹல்லாஜென் சாகிபே. (௫)

வஞ்ச மீறு மனுடர் பகையற்று
மாரணங் கொடு வஞ்சனைக் கட்டற்று
பஞ்ச பூதத்தி னல்வரும் நாடியின்
பழியற் றச்சம மாகின் றுடிடக்
கஞ்ச பாதக் கிருபைக் கடாட்சத்தின்
கருணை யாலடி யேன்றுய ரோடவே
நெஞ்ச மீதெழுந் தானந்த மாய்நின்று
நெட்சித் தாட்கொளும் ஹல்லாஜென் சாகிபே. (௬)

கலித்துறை.

உள்ள முருகி யுயிர்வாடி நித்த முனைத்துதிக்கும்
வள்ளல் பதத்தை யடியேனுக் கீந்து மனமயக்காற்
றுள்ளுங் கருவிப் புலன்பொறி யான துடக்கறுத்தே
விள்ளும் படிதங் தருள்புரி வீரொந்த வேளையுமே. (௭)

வந்தேன் வெகுதுலை நொந்தே னடியன் மனதுருகிச்
சிந்தை கலங்கித் திகைக்கின்ற தெந்தத் திசைகளினும்
உந்தன் நினைவை யுளமீ திருத்திடு முத்தமர்க்கு
வந்த துயரினை மாற்றிவைத் தாளுமென் மாதவனே. (௮)

வில்லம்பு சொல்லம்பி ரண்டெனச் சொல்வரிம் மேதினியில்
வில்லம் பினுக்கும் வினைவாஞ்சொல் லம்பு விரிகுழலார்
மல்லம் பினுக்கும் மனங்கசிந் தேவிழி மாறிடுங்காற்
சொல்லம் பினுக்குந் துரிதத்தி லாட்கொளுந் துய்யவனே. (௯)

அருவுரு வந்தமு மில்லான் றிருவுரு வாகுமுதற்
கருவுரு வாயெங்கு மேநிறை வாகிய காரணனும்



பொருவுரு வேத முடிவாஞ் சொருபம் புகன்றமறை
தருவுரு வான பொருளோஹா மீமெனச் சாற்றினதே. (௧௦)

வெண்பா.

வாதசித்தி யிவதுடன் மாட்சிமைசேர் ஹாமீம்நற்
பாதசித்தி தந்தென் பழவினையை—ஊதிக்
களிம்பற் றமுதகல சத்தமுதுண் டெட்டு
நளம்பெறுசு வர்க்க நலம். (௧௧)

ஞானஏகாதசம்
முற்றுப் பெற்றது.

---

# ஞானத்தேவாரம்.

கண்ணிகள்.

அடியா ருளத்திருக்கும் ஆனந்த மாஞ்சோதி
அளவுக் கடங்கி டாதாய்
முடியாத மும்மலமும் முடிந்தே மூன்று
மொன்று யிருக்கு முதலோய். (௧)

வடிவா யுலகமனு வாய்ச்சொரு பங்கொளு
மாசறு நின்மல நித்தனே
நடுவாய் நிறைந்தசோதி நாதனென் றந்தைமுத்தி
நழுவா தருளாக்கும் ஹாமீமே. (௨)

தானந் தவம்ஞான சம்போக பூரணத்
தத்தோ மசிபத நித்தனே
ஊனு முயிரு முடலுமொன் றுய்நிரந்தர
முண்மைஹா மீம்பதம் வாழ்த்தவே. (௩)

ஆதி யந்தமிலா வானந்த பூரண
அகக்கண் டிறந்து வெளியாய்
சோதி யெங்குமுலாவிச் சொருப காரணமான
தொம்பத வசிபத மான. (௪)

நீதி நித்தியமான நின்மல நிரந்தர
நிட்கள நிரஞ்ச னனே
ஓதி யொன்றினு மடங்கா வுண்மை ஹாமீமான
வுயர்ஞான போத கனே. (௫)

அண்டர் பரவும்வேத வருள்ஞானச் சுடர்போத
வழியா நின்மல வென்றே
என்று முனைத்துதிக்குந் தொண்ட ருளத்தில் வந்தே
இலங்கு நபி நாயகமே. (௬)

எக்கீன் மரத்திருந்தே யிறைமுன் கண்ணுடிவெளி
யெங்கு மொருசொருப மாகி
துக்கத் தலிபுமாகி நாடொறு ரூபமாகி
நாடுமுளத்தி னபி நாயகமே. (௭)

அலைபோற் பவம்வரினு மடைத்துநீ காட்சிகூர்ந்தே
அன்பர்க் கன்பாகு மருளே
நிலையிற் பிரிவில்லாத நினைவாகி யென்றன்னை
நின்பாதந் தன்னி லாள்வாய். (௮)

மாய்கைவினை தொலைத்து வஞ்சகர் பகையொழித்த
மாறுத சோதி ரூபா
ஆகந்தனிற் கருணை யானந்த மாக்குவாய்
அடிமை தனையாட் கொள்ளுவாய். (௯)

பஞ்சபா தகந்தொலைத்த பரமவொளியை யீந்து
பரஞான போத மாக்குவாய்
நெஞ்செல்லாம் நீநிறைந்து நின்னரு ளாற்பரிந்து
நித்த சுத்த மாக்குவாய் (௧0)

சிரசிலுடைவை ஜிபுரீல்கண் காணவே யன்று
ஜெக சொருபம தாக்கினுய்
அரசரு யிர்க்கரச ரண்டரண் டர்க்கரசர்
அஹமது முஹம்மது நபியே. (௧௧)

உலகமெல் லாஞ்சிறக்க வுயிரொல்லா மீடேற
உண்மைக் கலிமா விண்டவா
கலகம் வராமற்காத்து காபிரெல் லாம்பொடித்து
கண்காண வரந்தரு நபியே. (௧௨)

திங்களைச் செம்பாதி செய்து நிலத்தழைத்து
தேவர் யாவருங் கொண்டாடவே
முன்புவந்த தசைரூபம் முன்னும்பின்னும் மெய்யாக
மூலமணி மந்திரங் காட்டினுய். (௧௩)

வந்தகாபிர் கண்மடங்கி நின்றன்பாதமே யிறைஞ்சி
மலர்சொ ரூபம தாக்கினுய்
எந்தவேளை யுங்கதிர்போற் சொந்தநிர்மல பூரண
ஏழை தனையு மாட்கொள்வாய். (௧௪)

அடிமை தாதைக்குமுத்தி யானந்த சொரூபமாக்கும்
அஹதாய் நிறைந்த நபியே
மிடிமைத் துயரகற்றி முத்தி யெனக்கருளும்
முச்சுட ரான நபியே (௧௫)



வனத்தி னதியழைக்கு மாசற்ற நாயகமே
வான்சொரு பாகும் நபியே
எனக்குமென் கிளைமுதல் யாவர்க்கும் நின்கிருபை
இரங்கும் நபி நாயகமே. (௧௬)

திங்கள்பத்து மாமினுர் கனவிற்சேர் நபியென்று
தெளிந்து நபிமார் சொல்லவே
தங்குமுன் னுதரத்தி லெங்குமு ஹம்மதென்று
தானே வானோர் கூறவே. (௧௭)

சோபன மாகச்சொல்ல சொர்க்கத் தரம்பைமாதர்
துகில்கொண்டு தான் பொதியவே
நாமமு ஹம்மதென்று வானோர்கள் வந்துகூற
நடனம் புரிந்த நபியே. (௧௮)

முந்த வுலகிற்பிறந் தெங்கும்பிர காசவிறை
முன்ஜிபு ரீல் வைக்கவே
அந்தாஞ் சொர்க்கலோக வண்டரண் டங்களெல்லாம்
யாவும்நின் பிரபை சூழவே. (௧௯)

தேவரா லாத்தியேந்த ஜின்கள் பதம்பணியச்
செகமு ழுதும் விளங்கவே
பூமரங்கள் சொரிய புதுமை மிகுந்துண்டாகிப்
பொன்னு லகுஞ் சிறக்கவே. (௨0)

கதிர்மதியு மெழுந்து கருணைப் பதத்தில்வீழக்
கலிமா வெங்கு முழங்கவே
அதிசய மாகுதென்று காபிர்மனஞ் சலிக்க
அடர்ந்து புத்துகள் வீழவே. (௨௧)

கடலுஞ் சிறந்துபொங்கக் கருணைச் சலங்கள்தூவ
ஹாமீமெ னும்பேர் விளங்கவே
திடனு யுயிர்கட்கெல்லாந் தின்பயிர் விளைவாகச்
சிறக்கும் ஹாமீமு ஹம்மதே. (௨௨)

ஞானத்தேவாரம்

முற்றுப் பெற்றது.

ஹரீம்.

# ஞான விண்ணப்பம்.

## பஃறொடைவெண்பா.

க. நஹுமானென் றன்னோவி லாப்பாவி நானே
செகமீதி லேபிறந்து சீர்கெட்—டிகமீது
லாவிப் பலதுயர மாகியே யானுனையுந்
தாவிப் பதமலரைத் தானறியப்—பூவின்மிசை
ஓவியம்போ லேயூன்றி வுள்ளி லுருகாத
பாவியென்றே கேளாய் பரமனே—கூவுகுர
லைந்துமுத லாகின்ற ஆதியே அம்பரனே
சொந்தவடி யார்க்குதவு சோதியே—விந்தைதரு
ரு. மெய்யென் னகத்துள் விளங்தோனே மெய்யடியார்க்
கையமறுத் துள்ளகத்தை யாண்டோனே—துய்யவொளி
ஆர்க்குமடங் காத சுடராருளே தூக்கமுறப்
பார்க்குமடி யார்க்குதவு பாதமே—ஏக்கமுற
மெய்யில் நடம்புரியும் வேந்தனே வெம்பனிக்குள்
மையல்கொண் டாசைகொண்ட மாமணியே—தொய்யடியார்
உள்ளத் தெழுந்தொளிரு முண்மையே யென்றனிலே
கள்ளப் புலனறுக்குங் காரணனே—கொள்ளரிய
வள்ளல்பதங் காட்டி வருவோனே யென்னகத்தில்
எள்ளளவு மாறு திருப்பவனே—விள்ளுசுழி
க0. ஞாயப் பொருளேயென் நாயகனே நாதமதில்
மாயச் சுடராய் வருவோனே—காயமுறு
கண்ணின் மணியிரண்டாய்க் காண்போர்க்குக் காண்பவனே
விண்ணிற் கலந்திருக்கும் வேந்தனே—உன்னடியார்
எண்ணமதி னூடுறைந்தே யெல்லா வுயிர்க்குதவும்
அண்ணலே ஞானத் தரும்பொருளே—மின்னுதவ
வேத முடிவே வெளிக்குள் ளுருண்டுருண்டு
நாதமதி னூடுவரு நாயகனே—பாதமதைக்
காணவட்டங் காமலே காண்பவர்க்குள் நின்றுதவம்
பூணவரு நாதப் பெரும்பொருளே—மான்கலையை
கரு. ஓட்டித் தவிர்த்து மொருவிடமுங் காணமல்
மூட்டத் திருவருளு முத்தியே—ஆட்டமுடன்
அண்ட பகிரண்டமு மத்தலமு மித்தலமும்
மண்டலமுந் தானய் வளர்ந்தோனே—கொண்டவிற



சூலுக் கருள்புரியுங் கோமானே கோத்தணிந்த
மாலுக் குதவிதரு வல்லோனே—நாலுகலை
வேறாய் வெளியில் விடுத்தோனே மெய்யடியார்க்
காறுசர முள்ளி லடைத்தோனே—கூறுன
உந்திச் சுழியே யொழுகியென் னுள்ளமதிற்
சிந்தி நடம்புரிந்த சீமானே—நின்றனருள்
உ0. முத்தி கொடுத்து மொழிமவுனத் தூடுறைந்து
சித்தி வருத்தியருள் செய்வோனே—பத்தும்வகை
பெற்றோ ருளத்திற் பெறும்பொருளே பேதமறச்
சுற்றாய் வலம்புரிந்த சூட்சமே—உற்றகலை
ஆறாறு மோடி யதில்நான்குந் தான்வெளியிற்
கூறாய் வருவதற்குக் கொண்டோனே—மீறாமல்
உள்ளத் தடைத்து முருகுமவ ருள்ளமதில்
மெள்ளவே தாள்திறந்த வேந்தனே—கள்ளப்
புலனை யறுத்துப் புரியுமடி யாருள்
நலனுறவே யொன்றாய் நவின்றோய்—ஜலமதனை
உரு. அப்போ டிருத்தி யனல்வாய்வை யூடாக்கி
ஒப்பாங் கருவிதனை யூடறுத்துத்—தப்பாக்
குருவின் பதமுருகுங் கொள்கையுள்ளோ ருள்ளம்
மருவிக் கலந்தொன்றாய் வந்தோய்—திருவினருள்
ஊடெழுந்து பாயும் ஒளியையமு தாகவுண்டு
கூடிமூழ்ந்து நின்றோர்கட் குக்கொடுத்தோய்—நாடதனில்
உப்பும் புளியு முறக்களைத்தே யொன்றாகத்
தப்பா தீவர்க்கருளுந் தானவனே—செப்பாத
உள்மந் திரத்தை யுணர்ந்தவர்க்குள் முச்சுடராய்
விள்மந் திரக்குருவின் வேந்தனே—கள்ளதனில்
௩0. உண்டுவரும் வன்டை யொழிக்க வறிந்தோர்கள்
மண்டுள்வினை யாடிவரு வல்லோனே—ஒன்றுருவி
அட்டாத்தி னூலே யடங்கா ததிற்கலந்து
உட்சிவமு மூன்று யுறைந்தோனே—பச்சையொளி
பாய்ந்துவரு முண்மைப் பழம்பொருளே பாரமுடி
ஆய்ந்தோர்க ளுள்ளத் தருந்தவமே—காய்ந்தமனக்
கண்ணால் நடம்புரிந்த காரணனே காமவலை
மின்னாய் வளைந்துவரு வேந்தனே—உன்னுகம்
அண்டபிண்ட தேவர் அவனிமனு வோடரக்கர்
மண்டலமு மின்னிடியு மற்றெவையும்—நன்றாய்
௩ரு. அமைக்குமுத லேயவ் விருளிலோர் நுக்தாய்
நிமைக்குள்வடி வொன்றிரண்டு மூன்றாய்—தமைக்கருதி

முன்னேர வந்து மொழியுமவு னக்கிருபை
தன்னுலி ரண்டுமொன்ருய்த் தான்மருவி—கண்ணுலே
பார்க்கும் பொழுதே பனிவேர்வை யாய்ச்சொரிந்து
சேர்க்கும் வடிவிற் றெளிந்துருண்டும்—ஆக்கினருள்
ஆவென் றிரைந்து மதிலோர் கடலாகி
ஹூவென் றெழுந்தவொலி கேட்டதனுல்—ஹீயெனவும்
முச்சுடரு மொன்ருய் முளைத்துவரு மக்கடலில்
அச்சை வலம்புரியு மாகியே—நிச்சயமாய்

௪௦. வளரும் வலம்புரிக்குள் வந்துறைந்து தானெழுந்த
தாளமிறைந் தேதேடுந் தானவனே—திருநமணி
தன்னை யுளத்தே தவரு திருத்தியதுள்
ஞன்னிவருஞ் சத்த முறவாகில்—தன்னுவுத்தில்
முந்தநுக்த்தா யுற்ற முறையுமதி னுட்சுடருஞ்
சிந்தைதனில் நன்ருய்த் தெரியுமே—நின்று
கலந்து நுகத்ததனிற் காணு ரவிபாய்
அலர்ந்து மலர்ந்ததுவு மாங்காண்—நலந்தரவே
மூன்றுநுகத் தாகியதில் மூன்றுமலி பானதொழில்
பூண்டிடுகி லுள்ளே புணருங்கா—லாண்டுவரு

௪௫. வாயு விருத்திவருங் காலையூ டாக்கிக்
காயமதி னூடே கலந்தாக்கால்—ஓயாமல்
வந்துரைக்குஞ் சத்தம் வடிவையறிந் தேமனதிற்
பந்தினே டுள்ளிருத்திப் பார்த்தாக்கால்—எந்தவிதங்
காணும் வகையதனைக் காரணத்தி னூலுரைக்கத்
தோணும்நுகத் தாவில்வரு சூட்சமே—தேனமுதம்
பாய்ந்துவரு முத்தலக்கின் பாத முருவமதாய்
சாய்ந்து சரிதலொலி தானுகி—யேந்துநடு
வட்டமதி னுள்ளே வருகுமஹூ மூதினையுள்
திட்டமுடன் நன்ருய்த்தெரியுமே—ஓட்டிவரும்

௫௦. ரண்டுமொன்ருய் கூடி நடனத் துடன்மருவி
என்றும் வெளியி லிதமாகிச்—சென்றலர்ந்த
பூவினுறை வாசம் புரிந்துநடு வாயுநித்த
ஆவிக் கவுவிலெனு மச்சரமும்—நாவியதின்
ஊடுருவி யொன்ருகி யோங்குமணி மந்திரத்தைத்
தாவிவரு முள்ளமே தானறியும்—கூவில்
அடிமுடிக்கு மெட்டா தகன்றுநடு வாய்ந்து
வடிவுதனை யுள்ளில் வளர—நெடியதொரு
மூலப் பொருளாய் முடியா முடிச்சிலுறுங்
காலைத் தெரியவருங் காரணனே—ஆலம்பதி



௫௫. னெண்ணு யிரம்படைத் தாண்டருளைத் தான்புரிந்து
கண்ணுல் வெளிதெரியக் காண்பவனே—நின்னுகம்
ஆஷிக் கெனுமுள் ளருள்கிருபை யாலுனது
நேசத்திரு வாயால் நிகழ்த்திவைத்த—ஓசைமறை
ஆயிரத்தெண் வேத மதில்வேதத் தோர்கமலஞ்
சாய முறையருளுந் தானவனே—மாயம்
வளர்ந்துநிறை வாகிவரும் வல்லபத்தை வேதந்
தெளிந்துரைத்து நன்ருகச் செப்பில்—ஒழிந்தபொருள்
மூலத் திருவேத முங்நான் குறும்வேதம்
ஞாலம் புரவி நடம்வேதம்—சாலக்

௬௦. குரவேதம் புரவேதங் கொண்டோர்க் குறுதிச்
சிரவேத நம்புதிரு வேதம்—முறமுரவே
கால்வேத மாயக் கழல்வேதங் காண்பவர்க்கு
நால்வேத முண்மை நயவேதம்—பால்மருவு
மைவேதம் தூம்புரத்தி னல்வேத மாய்ந்துணர்ந்த
மெய்வேதங் காம விதவேதம்—பொய்யின்
நறைவேதந் திரைவேதம் நாருமலர் வேத
முறைவேதங் காந்தியுள வேதங்—குறையறவே
கண்டவர்கள் தூங்குமது காமச் சுழிவேதங்
கொண்டவர்க ளுள்ளக் குறிவேதம்—மன்றுள்

௬௫. காவேதம் சாம்புரிவே தங்காமா ளோர்வே
திராமயக்க வேதந் திரமாய்ப்—பரமுறவே
இந்தவகை வேதமிவ் வாருயி ரத்தினெட்டுந்
தொந்தமுற நின்றுரைக்கும் சூட்சமே—அந்தமுடன்
ஆயிரத்தெண் வேதமொன்றுக் காயிரத்தெண் கோடிமுடி
மாவிதத்தி னூலே வளர்பொருளே—நாயகமாய்
கொடுமுடியொன் றுக்குவருங் கோடிசக்ர மாயிரத்தெட்
டடிமுடிக்கும் நன்ருக ஆள்வாய்—படிமுடியும்
எல்லாவகை யுஞ்சுத்தி யின்பமுட னேவனைந்த
வல்லசே டன்தலையில் வைத்தோனே—நல்லரவுக்

௭௦ காயிரத்தெண் கொடுமுடியு மாகுமொன்றி லேசிறக்க
ஆயிரத்தெண் கொடுமுடியு மாண்டோனே—ஐயவாலே *

ஞானவிண்ணப்பம்

முற்றுப் பெற்றது.

---

* நம்மிடத்துள்ள பிரதிகளிலிதுவரையே உள்ளன.

ஹ ா மீ ம்.

# ஞான ஆனந்தத் துதி.

உயிருக்குயி ராயென்ற னுள்ளமெலாந் தானாய்
மயிர்த்துளையெல் லாம்நிறைந்த வண்மையே

என்றுமழி யாதபரத் தெங்குமாய்த் தானாகிக்
குன்றாத ஞானக் கொழுந்தன்

ஆதியந்த மில்லாத வானந்த சின்மயத்தை
ஓதியடி யேன்துதிக்கு முண்மை

வேதங்கள் யாவையினும் மேவுஞ் சொரூபமதாய்
பாதங்க ளால்நடனப் பாதத்தான்

கர்ம பவக்கொடிய காணவா வினைதவிர்க்கத்
தர்ம விழிநோக்குந் தயாபரன்

கள்ள மறுத்தருளைக் காட்டியெனை யாட்கொண்டு
தெள்ளுகுரு வாகவந்த சிற்பரன்

மூல முதற்சிரசு முட்டியெங்குந் தானிறைந்து
மேலுமரு ளோங்குதவ மெய்ஞ்ஞானன்

ஆண்ட பரனென் றந்தைக் கருள்முத்தி
தோன்றும் படிகொடுக் குஞ்சுத்தன்

எந்நாளும் நீங்காதென் றந்தைக்குச் சிவன்முத்தி
நன்றாகக் காட்டுமருள் நற்கமலன்

எத்தனைபா வங்களென் றந்தைசெய்தா லும்பொறுத்து
முத்திகொடுத் தாண்ட முழுமுதலோன்

மக்கத்தில் நன்றாய்ப் பிறந்து வளர்ந்தோங்கி
முக்கியவே தங்கள் மொழிகுவோன்

பொல்லாத குமர்தனைப் பொன்றிட மெய்ஞ்ஞானம்
சொல்லா லருட்கருணை சூட்டுவோன்

அவ்வல் தொடுத்தாகி றுகுமட்டும் அல்ஹம்தை
செவ்வாய் நிறுத்துமருளீர் சேர்வையோன்

எங்கள் நபியொளியா லெல்லாஞ் சிறந்ததெனுந்
திங்கள் வதனத் திருமுதலோன்

அடியேன் துதித்திருகு மன்பினு லென்றும்
முடியா வருளளித்த முத்தன்



அடிமைதந்தை செய்தபவம் யாவும் பொறுத்தாண்டு
நடனமுத்தி யீந்தருளும் நாதன்

மாசற்ற றுள்ஞான வடிவொளியி லாக்கியென்னை
நேசத் தொழில்காட்டும் நித்தன்

பந்த மறுத்துப் பரமசொரு பாக்கியென்றன்
தந்தைக்கு முத்தியருள் தற்பிரமம்

அசுணனு மென்றனக்கே யானந்த முத்தி
நிசமென் றளித்தநிற் பிரமம்

ஒன்றான காட்சி யுண்மையடி யேன்காண
நன்றாக வந்தாண்ட நற்பிரமம்

ஆராருங் காணு வதிசயம்யான் காண்பதற்குத்
தாதாவாய் வந்தாண்ட தற்பிரமம்

ஏழிரவு மோரிரவா யென்கோனென் கோன்கலந்த
வாழ்வையென்னுள் காட்டுசெத்த மாபிரமம்

இருதமா யுட்புறமா யெங்கனுமா யெனையாண்டும்
உறுதிகுறை யாதருள்செ யுட்பிரமம்

ஒன்றுமறி யாதவெனை யுன்பதமொன் றாய்த்துதிக்கத்
தொண்டனென் றென்றனையாள் சுகப்பிரமம்

வாதனையெல் லாந்தவிர்த்து வந்தெனையாட் கொண்டென்றன்
தாதையற்கு முத்திசெய்த தற்பிரமம்

முகக்கண் ணகக்கணினும் மூதறிவாய் வந்தெனையான்
டகக்கண் வெளியெவையு மாள்பிரமம்

பூதலத்தில் மக்கம் பொதுவிற் பிறந்துதித்த
மாதவமாம் ஹாமீமெ னும்பிரமம்

அஹ்மதெனுங்கிருபை யானந்த மெல்லாமாய்
அஹ்மதுமு ஹம்மதெனை யாள்பிரமம்

மாதொருத் திக்காக மகனைவருத்தி வைத்துக்
காதறுயர் தீர்த்தநபி காண்பிரமம்

மலைபோற் றுயர்வரினும் வாராமற் காத்தெனையாண்
டலையா தருள்தரித்த தற்பிரமம்

சங்கு ளிருந்து தாளவாடி வாய்க்கருணை
எங்கு மொளியதிரு மெம்பெருமான்

அவ்விரவை நோக்கியுயி ரங்குசென்று தாளிறைஞ்சும்
எவ்வுயிர்க்கும் ஞானமரு ளெம்பெருமான்

குற்றமெல்லாந் தீர்த்தென்னைக் கொண்டாட்கொண் டானந்த
முத்தியென்று தைக்கருளும் முத்தலக்கோன்

மிக்கமிடை கண்ணேறு வினைதுயர்வா ராமலருள்
ஹக்கா யெனையாண்ட கண்மணியே
பூவுலகில் நாவுளத்தல் பொன்றிவிட வென்றனக்கு
மேவுபர மாகவந்த விண்மணியே
*நாலா யிரத்துநா னூற்றுநாற் பத்தெட்டும்
மேல்வாரா தாக்கியருள் மெய்மணியே
கற்பூரத் தீபமும்போற் காட்டுசெம் மில்ஜெம்மாக
செப்பா தருளாக்குஞ் சின்மயமே
மாய்கைக்கு ரோதவழி மறந்து மாகருணை
யாகவுளத் தாக்கியுரு ளாரணமே
சிந்தை தெளியத் தெளிய வெனையின்ற
தந்தைக்கு முத்தியருள் தானவனே
இருளுலக மாய்கையெல்லாம் போயென்ற னுள்ளில்
அருளொளிவ தாக்கென்ற வாமுதே
அகண்டமெல்லாந் தான்கடந் தப்பாலுக் கப்பாலாய்க்
† ககனரு ளாற்பேகங் காரணமே
சீர்பெருகு முண்மைதெளிந் தோருளத்தில் நின்று
நேர்பெருக வந்தாளும் நிர்மலனே
ஏழையடி யேன்றந்தைக் கெங்காளு முத்திசெய்து
நாளும் மணிவிளக்காம் நாயகமே
மேகங் குடையிடவும் வேண்டுசின்ன மூதிடவும்
ஆகம் பயில்கிருபை யாண்டவனே
சதைமாங் கிஷத்தைத் தானதிக மாமயிலாய்
விதியருளி னுலெழுப்பு மெய்யனே
அண்டபகி ரண்டமெல்லா மானந்த மாய்க்கலந்து
நின்றப்பரி பூரணநல் நித்தியனே
ஓடிவரும் வாய்வுசரத் துள்ளே யருட்கனலா
லாடி நடனமிடு மன்பனே
நாலா றெழுத்தில் நடுவினுறுஞ் சுழியாய்
மேலோ ருளத்திலருள் மெய்த்தவமே
உரைக்குங் கலிமாவி லோரெழுத்தா யெங்கும்
நிரைக்குங் கருணை நிருமயமே
எங்கெங்குந் தானா யிருந்தடியார் நெஞ்சகத்துள்
தங்கு மவுனத் தயாபரனே

* நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டுமிடை, என்றூஉம்பாடம்.
† ஹக்க னருளாலுனை என்றூஉம் பாடம்.



நிறுவிகற்பத் துள்ளாகி நின்றோ ரிதயமதில்
அருவுரு சொரூபவெனை யாள்பரனே
மூலமுத லாறுதலம் முட்டியெங்குந் தானாகி
மேலுந்தல மாறில் விளக்கொளியே
முந்த வொருசுழியில் மூவே மூலகமைத்து
நந்திசொரூ பாயாண்ட நாயகமே
முற்கா ரிருளில் முதிர்ந்ததுகத் தாயிருந்த
ஹக்கே யிதையமலர்க் காரணமே
திங்களைச்செம் பாதிசெய்து சேர்நிலத்தி லேயழைத்து
தங்கியொன்றாய்க் காட்டிவருந் தற்பரனே
சூதை யமுதருந்துஞ் சோதியே சுத்தமுறும்
ஆகம்லாஞ் சனைதரித்த வாதியே
உன்பதமே தொண்டனெனை யின்றதந்தைக் குன்பதமே
அன்புமுத்தி யீந்தருளு மாதியே
எல்லா மனைக்குமுத லென்கோ னருள்சொருபாய்
வல்லமைய தாயுதித்த வல்லபமே
இரவில்மிஃறா ஜினிற்சென் றென்கோ னுரைபகர்ந்து
விரவிக் கலந்திருந்த வேண்டுதலே
அகண்ட வெளிகடந்தப் பாற்சின் மயமாய்
புகன்றுலக மெங்குநிறை போதமே
வானோர்க்குந் தேவர்க்கும் வல்லரக்கர் பேய்மனுடர்
தானும்நீ தானான தற்சொரூபே
வெளிவாயு வன்னிபுனல் வேண்டுமண் ணோடும்
ஒளியா துயிரமைக்கு முத்தமனே
அனந்தசொரு பங்க ளனந்தவுரை பேகும்
அனந்தவுயிர் யாவுமொன்று யாள்பரனே
முச்சுடரா யெங்கு முடியா வருளாகி
உட்சுடரா யென்னுளுறை யுண்மையே
பாவக் கடலடைத்துப் பத்தியென்றன் தந்தையர்க்குச்
சீவன்முத்தி யீந்த திரளொளியே *

ஞான ஆனந்தத்துதி
முற்றுப்பெற்றது.

* நம்மிடத்துள்ள பிரதிகளிலிதுவரையே உள்ளன.

ஹ ா மீ ம்.

# ஞானவாழ்த்து.

நேரிசை யாசிரியப்பா.

அன்பி னுருகும் அருளுளத் தீந்துந்
துன்ப வினையைத் தொடரா தொழித்தும்
மாய்கை யறுத்தும் வழியைத் திறந்தும்
ஏக சொரூபி லென்னைக் கலந்தும்
உள்ளந் தெளிந்து மொன்றாய் நிறைந்தும்
வள்ளலாய் வந்தெனை யாட்கொண்ட வல்லோன்
வேதத்துள் ளாய வெளியொளி மேவி
போதத்தி லாயநின் பதுமப் பொகுட்டைத்
துதிசெயு நாயினேன் தொண்டனென நன்றாய்
விதிபெற வென்னைமெய் யாக்கு மெய்யன்
ஹாமீ மெனுமருள் காட்டிய காரணன்
தாமீ மெனுநற் சரண்தந்த தற்பரன்
அந்தயா ஸீனென் றருள்தந்த சோதி
எந்தையுள மெல்லா மெங்கணு மாள்பரன்
அன்னை பிதாவுக் கருள்முத்தி யீந்தவன்
பன்னிடு நான்மறை பயிலும் பரமன்
நித்திய நிர்மலன் நிறைந்த நிரஞ்சனன்
அத்து விதத்தரு ளாக்கும்மா னந்தன்
ஞானக் கொழுந்தன் நடுவில் நடஞ்செய்வன்
வான்வெளி யாகி மயமான சின்மயன்
உன்பத முன்னைத் துதிப்ப துனதருள்
செம்பொற் பதமலர் சிரசி லணிந்து
ஆமீனென் றன்பா லடிமை யிரப்பதை
நேமித் தருள்செய் நிறைகரு லாக்கி
வழுவா தளித்த வள்ளல் பதுமமுள்
நழுவா துளத்தி னல்லித யத்துள்
பொங்கிச் சிறந்து பூரண மாகித்
தங்கும் பதுமச் சரணமே வாழ்த்து
அருளொளிச் சோதி அஹ்மது நபிதன்
திரள்மலர்ப் பாதச் சேவடி வாழ்த்து
அபுபக்க ரென்ற அருள்நாமத் தென்றந்தை
தவமுத்தி யீய்ந்த சரணமே வாழ்த்து



அடிமை பிதாவுக் கருளொளி யானந்தம்
திடமுத்தி யீந்துதெளிக் கும்பதம் வாழ்த்து
ஆவென்றி யாவு மமைக்கு முதலங்கு
மேவிய சுத்தமெய்ஞ் ஞானமே வாழ்த்து
உடுவி னழகி னொளியாய்ச் சிறந்து
படிபுவ னம்படைத் தான்பதம் வாழ்த்து
ஆசைகொண் டுன்னி அஹ்மத தெனுந்தொனி
வேர்வையால் யாவும் விளங்குபதம் வாழ்த்து
ஆஷிக் கெனுநல் லஷியி லெழும்புரி
மாசற்ற மாமணிச் சோதியை வாழ்த்து
எக்கின் மரத்தி லெழி லொளியாகி
தொக்கா யிருந்த சொரூபத் துணைவாழ்த்து
கண்ணாடிக் குள்ளாயக் காரணம தாயாகி
விண்ணுஞ் சொரூப மேவுபதம் வாழ்த்து
மயில் வேஷமாகி வளர்ந்தாடி வல்ல
பயில்ஞான மோதும் பாமனடி வாழ்த்து
உண்டான தெல்லா முனதரு ளாகி
நன்றாய்ப் பிறந்த நாதனடி வாழ்த்து
ஆதமுத லாக ஐம்பத்தொன் றாகிப்
பாதலமீ திற்பரிந் தான்பதம் வாழ்த்து
அப்துல்லா தந்தை யதிக நுதலிலாய்
அப்தாக வந்தவரு ளாண்டோன் பதம்வாழ்த்து
மெய்ப்பாங் கமலம் விளங்கு மிதயத்துள்
ஒப்பா யிருந்த வுண்மைப்பதம் வாழ்த்து
ஆமினர் தங்க ளருளுத ரத்தில்
நாம முறுநபிநன் றாங்கழல் வாழ்த்து
வானோர் நபிமார் வருந்தினந் திங்களும்
தானும் நபியென்றுஞ் சரணமடி வாழ்த்து
சொர்க்கத் தரம்பையர் சூழ்ந்தரு ளோங்க
முக்கிய மாயருள் முகம்மதடி வாழ்த்து
பிறந்தவுடன் வானோர் போண்ட மெல்லாம்
நிறைந்திறை நாயம் நிறைந்தோ னடிவாழ்த்து
அந்தஹா மீமென்றும் அந்தயா ஸீனென்றும்
அந்ததா ஹாவென்று மருள்நாம மேவாழ்த்து
அந்தவலி யுன்னுபூவில் மூமினத்தி யாகி
அந்தமவுலா ஹாவென் றடிநாம மேவாழ்த்து
வஸ்துவா யெங்கும் வளங்கும் பராபர
முஸ்தபா வான முஹம்மதடி வாழ்த்து
ஒன்று யிரண்டா யுரைக்க வடங்காதாய்

நன்றாகி யொன்றும் நபிமா மலர்வாழ்த்து
குறையாதென் றந்தைக்குக் குன்றாத முத்தி
மறையாமற் காட்டும் முஹம்மதடி வாழ்த்து
௭௫. எல்லா வுயிர்க்குள் ளுயிரொங்கு மெங்குமாய்
நல்லா தரவுற்ற நபிமா மலர்வாழ்த்து
ஞுகை முலையமுத துண்டோ ரடிவாழ்த்து
ஏக சொரூபமா மென்கோ னடிவாழ்த்து
முத்தி விருந்த முஹம்ம தடிவாழ்த்து
௮௦. நித்தனு யெங்கும் நிறைந்தோ னடிவாழ்த்து
காணாத சோதிக் கடவு ளெனவாழ்த்து
தானான பூரணஞ் சார்ந்தோ னடிவாழ்த்து
மறைவேதத் திண்மை வழுவா வுளத்தோர்க்கு
நிறைவாகுங் கண்காண நின்றோ னடிவாழ்த்து
௮௫. எளியார்க் குதவு மின்பப்பதம் வாழ்த்து
அழியாதென் றந்தைக் கருள்வோன் பதம்வாழ்த்து
அறுகு நுதியின் னருளிற் சிறந்து
பிறவிக் கடல்போக்கும் பெம்மான் பதஞ்சரண்
எங்கள் கிளைக்கு மெழுநா யகமென
௯௦. திங்கள் நபிபதச் சேர்வைச் சரண்சரண்
நாயேன் பிதாவுக்கு நன்முத்தி யீந்த
தாயக மாம்நபி பதமே சரண்சரண்
கலிமா விளக்கென்றன் கல்புள்ளாய்க் காட்டி
மெய்யா தருள்நபி மேவும் பதஞ்சரண்
௯௫. குன்றாத வேதக் கொழுந்தே பதஞ்சரண்
தொண்டாக வாண்ட சுடர்ப்பத மேசரண்
ஐயமறுத் தென்னை யாண்டார் பதஞ்சரண்
வையத்தி லுட்பகை மாற்றும் பதஞ்சரண்
உன்பதந் தன்னை யுருகார் துதியார்
௧௦௦. வன்பர் பகையற்று வந்தாள் பதஞ்சரண்
என்னைப் புரந்த வென்கோன் நபிபதம்
தன்னுள் துதிசெய் தவத்தோ ரடிசரண்
பத்தோ டிரண்டாய்ப் பாங்காம் சரமதில்
ஒத்தொரு நான்கா யொளிரும் பதஞ்சரண்
௧௦௫. முப்பாழ் கடந்த முதல்வ னடிசரண்
முப்பாழுந் தானாய் முடிந்தோன் பதஞ்சரண்
அகண்ட வெளியி லானந்த மாகி
புகன்றிடு முள்ளம் பொருந்து நின்முத்தி
அண்டவ கண்டங்கள் யாவுங் கடந்து



௧௧௦. நின்றுமே லாஞ்சிர நேர்மைக்கன் முத்தி
பாதல மெலாங்கடந் தப்பாற் பாய்ந்து
ஓத வரிதா முண்மைப் பதமுத்தி
தன்னை யறிந்திடில் தானா யிருந்து
திண்ணம தாமருள் தெளிசி வன்முத்தி
௧௧௫. அருமறை வேதம் யாவு மொழிந்த
குரு வடிவான குணஞ்செய முத்தி
ஏழையென் னெஞ்சத் தெழுந் தருளாகி
ஆள வென்னைவந் தாண்ட பரன்முத்தி
பந்தமும் வீடும் பதமுந் தானான
௧௨௦. சிந்தைக் கமலந் தெளிந்தோன் பதமுத்தி
மறைவேதம் நாலும் வாக்கா லுரைத்த
நிறைவான சோதி நிமலன் பதமுத்தி
ஆயிர நாமத் தாகியா னந்தம்
மாயாத வுண்மை வடிவாம் பதமுத்தி
௧௨௫. அவ்வலும் ஆகிறும் அஹ்ம தென்நின்று
செவ்வாக வந்து தெளிந்தோன் பதமுத்தி
நடுவி லுதித்துல கெங்கும் நடஞ்செய்
அடிமுடிக் கெட்டா வானந்த பதமுத்தி
குறைஷிக் குலத்தில் குருபர னாகி
௧௩௦. இறையென வந்த வென்கோன் பதமுத்தி
வேதந் தெளிந்து விளங்க வெனவந்து
போதமெய்ஞ் ஞானம் பூட்டும் பதமுத்தி
மெலியாம லெங்கும் விளங்கிய சோதி
அலிமா தலனும் ஆண்டோன் பதமுத்தி
௧௩௫. லவ்ஹில் வரிகள் டெழுதும் உதுமான்
நலமான மாதுலன் நன்றாம் பதமுத்தி
உமறுகத் தாபுக் குரிய மருகனாய்
தவறாத நன்னபி தந்த சரண்முத்தி
அபூபக்க ரானோர்க் கருள்சேர் மருகனாய்
௧௪௦. புவிமிக்க நன்னபி புகழ்பத மேமுத்தி
வானோர் கரத்தால் வன்பித் தெடுத்த
தேனுரை யாம்நபி தெளிவாம் பதமுத்தி
வயதாம் துருவை வருத்தி யிளமையாய்க்
கயிறுக்கும் ஞானக் கருத்தான் பதமுத்தி
௧௪௫. அஹது முதலா யானோன் பதமுத்தி
ஜெகமிழுந்தோர் நெஞ்சிற் சிறந்தோன் பதமுத்தி
என்போடு மாங்கிஷ மிசைதோல் நரம்பொடு

பண்போ டுயிர்முதற் பாங்கோ னடிமுத்தி
யாவர்க்கு மேலாய் மேலான நாயகன்
யாவர்க்குந் தாழ்வினைக் காத்தோன் நடன்முத்தி
பொல்லாக் குரம்பைப் புழுவிற் கிடந்து
கல்லா மதத்தின் கடையேன் கடையேன்
யாவினுந் தாழ்வாய் நாயேன் நாயேன்
பாவக் கடலிற் பழகி விழுகுவோன்
பொய்யன் கொடிய புலைப்பனும் புல்லன்
மெய்யென் றெனையாண்ட மெய்ய னடிசேர
வம்பா மடியேனை வந்தருள் கூர்ந்து
அன்ப னெனவுந் தான்டோ னடிசேர
கள்ளு மென்னைக் கருணை விழியினல்
தெள்ளத் தெளிந்து தெளிந்தோ னடிசேர
கர்ம வினையின் கசடனெனை நோக்கி
தர்ம விழியருள் தந்தோ னடிசேர
அடியவன் றுதைக் கன்பருள் கூர்ந்து
திடஞ்சிவன் முத்தி தெளிந்தோ னடிசேர
அன்னை பிதாவையு மானந்த மாக்கி
தின்னருள் சோதி நிறைந்தோ னடிசேர
ஆவிக் கெனும்நல் லதிகக் கடல்மிசை
நேசிக்கு மாமணி நித்த னடிசேர
உள்ளக் கடலொளி யொன்றாய் நிறைந்து
வள்ளலெனவந்த முஹம்ம தடிசேர
ஹாஷிம் கிளையி லதிகத் தரளமாய்
காஸி மெனவந்த ஹாமீ மடிசேர
அடியேனை யாட்கொண் டாக்குவை ஆமீன்
அடியேன் பிதாவுக் கருளாக்கு ஆமீன்
மாய்கை வினையெல்லாம் மாற்றிடு ஆமீன்
பாகக்கருணை பழம் பொருளே ஆமீன்
அளவுக் கடங்கா யருசொருபே ஆமீன்
விளைவுற் றுலகில் விளங்குமருள் ஆமீன்
சச்சிதா னந்த சரணந் துதிசெய்ய
அச்சமில் லாத ஆனந்தமே ஆமீன்
கடையேன் பிதாவுக்குக் கருணை யருளீந்த
உடையான் பதமே யுன்னருளே ஆமீன்
ஹக்காக வந்த கடாட்சக் கருணையை
ஹக்கா மருள்நபி கழலிணையே ஆமீன்
எங்குமாய்த் தானு யிசைந்தோ னருள்ஆமீன்
அங்கமென் னங்கமுள் ளந்தமில்லான் ஆமீன்



இன்ன சொருபமென் றிசைக்க முடியாத
தன்னடி தானுந் தாவலீன்பதம் ஆமீன்
எங்குங் கிருபை யெழுந்தசொரு பென்னுள்
தங்கிவளர்ந் தோங்கும் தாமீம்பதம் ஆமீன்
ஏழை யென்காதற் றுயரொலாங் கண்டு
தானேயென் றந்தைக்கு தாமீம்பதம் ஆமீன்
அடங்காதென் னுசைக்கு ளானந்த மாகி
தடங்காட்டு முத்தித் தாமீம்பதம் ஆமீன்
என்னுட் கிருபைக் கடலெங்கு மாகி
யுன்னுட் கலந்தரு ளொன்றாக ஆமீன்
கண்ணின்மணி முத்தே ஹாமீ முஹம்மதே
என்றந்தைக் குன்பத மீந்தருள் ஆமீன்
உள்ளக் கருணை யொளிவே தெளிவே
கள்ள மறுத்தருள் காட்டிடு ஆமீன்
பிதாவுக்கு மன்னைக்கும் பேதக மில்லாமல்
சதானந்த முத்தி தானுக்கு ஆமீன்
ஏழை யிரப்பை கபூல்செய்த வெம்மிறைத்
தானைத் துதித்தேன் தவம்பெற்றேன் ஆமீன்
தொண்ட னெனக்குந் துணைவனொன்றாய் தந்தைக்கும்
அண்டர்மகிழ் முத்தியருள் ஆமீன்
ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீனே.

ஞானவாழ்த்து

முற்றுப்பெற்றது.

ஹாமீம்.

# ஞானகீதாமிர்தம்.

க. இராகம் - பைரவி; தாளம் - ஆதி.

பல்லவி.

ஏழைக் கிரங்கி யருள் தானே - இந்த
வேளை முகம்பாரும் ஈமானே.

அநுபல்லவி.

சூழும்வினையகலத் தானே - உந்தன்
சுடர்பொற் பதமருள் ஈமானே
தொந்த வினையகல வந்த துயரகல
உந்த னருள்பெருகச் சிந்தை மிகமகிழ (ஏழை)

சரணங்கள்.

மனது மயங்கி யலை யாதே - பொல்லா
வஞ்சகம் வந்து துட ராதே
நினைவு கலைந்து மெலி யாதே - உந்தன்
நேர்மைப் பதமரு ளிப் போதே
நெஞ்ச மதனில்வரும் வஞ்ச மறவுனது
கஞ்ச மலருறுதி தஞ்ச மருள்புரியும் (ஏழை)

கல்லு முருகு முந்தன் நாமம் - மனது
கசிந்துரை செய்யி லருள் நேமம்
அல்லும் பகலும் பத வாமம் - நெஞ்சி
லிலையா திருத்தி யருள் க்ஷேமம்
அச்ச வினையறுமே உச்ச வருள்வருமே
பக்ஷ மனதுறுமே ரக்ஷித்தருள் ஹாமீமே (ஏழை)

ஆவென் றெழுந்த கடல் மீதே - சுடர்
அருள்வலீ யென்முகம் புரி மீதே
மாவென் றெழுமணி யப் போதே - என்றன்
வருத்தந் தவிர்க்கு மஹ் மூதே
வம்பு தவிரமல ரன்பு பெருகவருண்
முன்பில் வருஹாமீமே நம்பு முளமகிழ (ஏழை)

---



உ. இராகம் - மத்தியமாவதி; தாளம் - ஆதி.

பல்லவி.

ஏழைதனைக் கிரங்கிமுகம் பாருமிந்த வேளை
எளியேனுக்காய் தயவுசெய்து தாருமலர்த் தாளை.

அநுபல்லவி.

சூழும்வினையறவுந் துயரறவும் அருளுறவுந்
தொந்தமுடன் வந்துதவி
தந்தருளென் சிந்தையினுன் (ஏழை)

சரணங்கள்.

ஆதியந்த முங்கடந்த சோதியொளி வாகும்
அண்டரண்டந் தேடினுங் காணாதவொளி மேவும்
நீதியென்று மாய்நிறைந்த நித்தியத்துள் ளாகும்
நினைவுகலங் காதிருக்கில் நிலைமனதுள் தாவும்
ஓதுமறை யாகமவே தாந்தமுடி யூடெழுந்து
உள்ளமதிற் கள்ளமறத்
தெள்ளுமொழி வள்ளலேநின் (ஏழை)

பன்னுமறை யாகமங்கள் பணிந்துநிற்ப தொருபால்
பழையவடியாருன் னடியிற் பயந்துநிற்ப தொருபால்
விண்ணிலுறுந் தேவர்வந்து விரும்பிநிற்ப தொருபால்
மெய்யடியா ருன்னடியில் வீழ்ந்துநிற்ப தொருபால்
இன்னமுறு நபிசபையிற் றினந்துதிக்கு மடியவர்கள்
இங்கவொளி பொங்குகழ
லங்கமதிற் றங்கிநின் (ஏழை)

முந்தவொரு விருளிற்சுழி யானமஹ் மூதர்
முழுமுதலா வென்றெழுந்த கடலினுறும் போதர்
அந்தவலை மீதிலெழு சங்கிலுறு நீதர்
அதனிலொரு தாளவடி வாயிருந்த வேதர்
சொந்தவடி யார்வினை யறுத்தருள் புரிந்தநபி
சோமமல ராமகலா
ஆமினருள் ஹாமீமேநின் (ஏழை)

---

ங. இராகம் - காம்போதி; தாளம் - ஆதி.

பல்லவி.

என்னையாட்சித் தாட்கொள்ள வாரும் - வந்து
எளியேன்துயர் போகமுகம் பாரும்.

அநுபல்லவி.

விண்ணுந் தீபமும் வாய்வும் விளைந்து தெளிந்த சோதி
வெண்பனி யன்போ டமுந்தி வலம்புரி
பண்படு தந்தொனி யீந்தருள் சோதி (என்னை)

சரணங்கள்.

அண்டரண்ட மும்புவனந் தானுங் - கலை
யாயிரத்தெட்டுக் கொடுமுடி தானும்
மண்டலமு மட்டகெசந் தானும் - நாத
மவுனமாய்த் தாங்குந்தொழில் தானும்
முண்டகந் தனிலன்று முளைத்தெழுந்த சுழியால்
முன்னுளா யானதெல் லாமமை வாயொரு
பன்னக கொடுமுடி சுழியதி லாகிய
பத்திகொ டுத்தவை வைத்திடு சித்திர
பத்தியெ னக்கரு ளுத்தம சோதி. (என்னை)

ஈரஞ்சு நாலாலுரு வாகி - யதி
லின்ப சுகமுமொன்றி லாகி
நேரஞ்சு பஞ்சபூத மாகி - யதில்
நிலைத்த அசைவைநடு வாகி
சேரஞ்சு திருக்காகித் தெளிந்தரு வாய்வெளியில்
சென்னியோ டேயிரை வாக நடம்புரி
பன்னிரண் டங்குல மானதில் நாலுமே
சென்று கழிந்து மறைந்த தகந்தனில்
நின்று நடனசுக மருள்தருஞ் சோதி (என்னை)

ஆருறு சமையமு மாகி - யதில்
ஆறுபத் தாருய்நின்று மேவி
வேறுபட் டோர்காணுமை லாகி - யதில்
மெள்ளக் கடந்துமவுன மாகி
தேருயென் னுள்ளுறைந்த தெளிவே ஹல்லாஜென்பீரோ
தேனுரு கிக்கனி வாகக் கனிந்திடுந்
தெள்ளமு தேதெளி வேயடி யாருளில்
ஊனுருகிக் கனி வாகிய தேனமு
துண்டினை முழுதுங் கண்டருள் சோதி (என்னை)

---

௪. இராகம் - பைரவி; தாளம் - ஆதி.

பல்லவி.

ஏழையே னெனையாட்கொண் டாளையா - எளி
யேன்றனை யாட்கொண் டாளையா.



அநுபல்லவி.

தாளைப் பணிந்துணர்ந்து நாளு முங்கள்பாதந்
தம்பமென்றுமன தன்பினுலுருகும் (ஏழை)

சரணங்கள்.

சின்னவய தாய்ப்பிறந் திருந் தேனே - மாயக்
கன்னிமார் வலைக்குள் திரிந் தேனே - அதை
எண்ணியான் துயரப்பட் டலைந் தேனே - கருவிக்
கண்ணிதனி லகப்பட் டுலைந் தேனே
வன்னியுன்னிமுட்டி சன்னபின்னலற்று
அண்ணல்பொன்னின்பதந் கண்ணில்வைத்துருகும் (ஏழை)

அஞ்செழுத் தருளுரு வாகியே - ஞான
பஞ்சகல் யாணியை மேவியே
பிஞ்செழுத் துறப்பிடித் தேங்கியே - சரம்
நஞ்செழுத் துறவாகித் தூங்கியே
பஞ்ச பாவமற்று அஞ்சு பூதமற்று
நெஞ்சுள் நினைவுமற்று நினைவிற் கனல்வைத்துருகும் (ஏழை)

ஆவென் ருஷிக்கிலாழி யானதும் - ஏகன்
கிருபை அலைஇல்லென் றுனதும்
ஹுயென் றெலிகிருபை யானதும் - கேட்டுக்
கிருபைச் சுடர்ஷியென் றுனதும்
தில்லில் நேமியினுள் நல்லபுரி யுள்மணி
சொல்லும் ஓசையருள் ஹல்லாஜென் றன்பீரோ (ஏழை)

---

௫. இராகம் - தேவகாந்தாரி; தாளம் - ஆதி.

பல்லவி.

ஏழையென்மலக்கந் தவிர்த்தென்னை ரகூித்தாட்கொண்
டெளியேனிடர் தீர்த்தாளும்பீரோ.

அநுபல்லவி.

நாளுநம்பின வடிமை நாயேற்குக் குற்றந்தீர்த்து
சூழும் மணிவிளக்கின் சுடர்பொற் பிரபையாம்பீரோ
தொந்தவினையற - வந்துதவிதரு
மென்றனிருதய - மந்தஹாபீமே (ஏழை)

சரணங்கள்.

பஞ்சப்பவமறவும் - பழையவடியாருறவும்
பிஞ்சிலருள்திறவும் - பெருகும்படியருளும்பீரோ
பிந்திடாமலே - வந்துசேரவே
நந்திசொருபமாய் - அந்[illegible]யாவஸீனே (ஏழை)

சோதியுன்கிருபைக்கடல் - தொந்தமாயெனைமுழுதும்
சாதித்தேனருளுள்ளம் - பொங்கித்தானுண்டருளும்பீரோ
சந்தமிலையரு - ளந்தசொருபமும்
பந்தமெரியொளி - அந்ததாவீனே (ஏழை).

வேதாந்தமுழுதும்நின் - பேராய்ந்துதொழுமந்த
வேதாந்தருட்சமருளும் - வேதாந்தவெளியென்பீரோ
விந்தை வெளியொளி - வந்து சேரவே
நந்தி சொருபமாம் - அந்த தாமீமே (ஏழை)

---

சு. இராகம் - ஆனந்தபைரவி; தாளம் - ஆதி.

பல்லவி.

ஏழைதனை ரக்ஷித்தாளு மென்பீரோ.

அநுபல்லவி.

ஏழை தனக்கிரங்கி யென்முகம் நோக்கி
நாளு முங்கள்பொற் பாதாரமருளும் நாதரோ ஹல்லா ஜென்பீரோ (ஏழை)

சரணங்கள்.

காபும்நூனும் தெளிவான கருணையைத் தேடி
நாவினா டேங்கிநின்ற நடனச்சுழி யையருளும் (ஏழை)

நேமிக்குள் ✻ வலம்புரி நிறைந்தெழுஞ் சோதி
ஹாமீம் வடிவையருளுங் காரண ஹல்லா ஜென்பீரோ (ஏழை)

சுக்கிர னனியாகி சுகசொரு பமதாகி
நிற்குந் தொனியை யருளும் நீதரோ ஹல்லா ஜென்பீரோ (ஏழை)

---

எ. இராகம் - மோகனம்; தாளம் - ஆதி.

பல்லவி.

ஏழையான் செய்தகுற்றம் எல்லாம் மனம்பொறுத்தே
என்னை ரட்சித்தருளையா.

அநுபல்லவி.

ஏழையான் செய்தகுற்றம் எல்லாமனம்பொறுத்தே
இன்பப்பொற் பாதகமலன்படி யார்க்கருள்வீர் (ஏழை)

சரணங்கள்.

உங்கள்பா தாரவிந்தம் நம்பின அடியேற்கு
ஒருகுறை தானு முண்டோ
மங்கு லிருள்வெருட்டும் வாராமற் காப்பாற்றி
வளந்தந் தருளும் பீரோ

✻ கிலம்புரி என்றுமுளம் பாடம்.



திங்கட்குடை நிழற்றும் வேதநபி நயினர்
சிறந்த சபாஅத்துத் தந்தருள்வீ ரென்பீரோ (ஏழை)

தேகந் தனிலேமிடை வந்தாலென் மனமெத்தச்
சித்தங் கலங்கு வேனே
பாகமதாய்ப் பொறுக்கப் போகாதென் றடியேனைப்
பார்த்து ரட்சித்தருள் செய்வீரோ
ஆகம் புகழுமெந்தன் ஆண்டவரோ யுள்ளி
லடியேன் துயர்வினையை மாற்றியருள் செய்வீரோ (ஏழை)

திருநாமப் பேருரைக்கும் வேளையி லப்படிச்
சேர்வது கடனுமோ
குருநாம மாகவென்னை யாட்கொண் டிருந்தபீரோ
கொத்தடிமை யாகக் கொள்வீரோ
திருநாம முரைக்கின்ற சிறியேற்குப் பலதுயர்
க்ஷணத்துக்குள் மாற்றிநின் றிருப்பாத மருள்தந்து ✻ (ஏ)

---

அ. இராகம் - காம்போதி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

பாலன்செய்த பிழையைப் பொறுத்தே - உங்கள்
பாதத்துக் காளாக்கும் பீரோ.

அநுபல்லவி.

ஞாலந்தனிலே யுங்கள்பாதம்
நாடுமடிமைதுயர் தீர்த்தருள்வீர் (பாலன்)

சரணங்கள்.

பிள்ளைதனையே தள்ளிசினத்தால் பின்போயிருக்க வருமோ ஐயா
கள்ளனுனு முந்தனைக்கொண்ட கத்தன்சினத்தாற் போமோ ஐயா
வள்ளலேயென் பிழையைப்பொறுத்து வருத்தந்தவிர்த்தாட் கொள்வீ
(பாலன்) [ரையா

சூரியன்வந் துதிக்கும்போது சூழ்ந்தபனிநின் றிடுமோ ஐயா
நாதரேயென் பிழையைப்பொறுத்து நாயகாயென் துயர்தீ ரையா
பாதங்கண்ட போதிலடிமை பழவினைநின் றிடுமோ ஐயா
(பாலன்)

தந்தைதனிலு முரிமையானல் தாயகம்நீர் தானே ஐயா
என்றன்வருத்தந் தவிர்க்கவந்தே யெனையாட்கொண்ட பீரோ ஐயா
சிந்தைவருத்தந் தவிர்த்தாட்கொண்ட செய்குஹல்லாஜென் பீரோ ஐயா
(பாலன்)

✻ கருவான வினைதன்னை மாற்றிநின் செங்கமலக்
காட்சிதந் தருள்செய்வீர் ஹல்லாஜென் சாகிபே, என்பன மிகுந்துளம் பாடம்.

௯. இராகம் - பைரவி; தாளம் - ஆதி.

பல்லவி.

பாதந்தந்தெனை யாட்கொள்ளுநூ சாகிபே - என்னுள்ளம்
பதறுதுறைப் புண்டாக்குஞ் சாகிபே.

அநுபல்லவி.

சோதி யந்தமில்லா நாதிமாய சொரூபமா கவேயாண்ட
சோதியே யருள் நீதியேயுன் (பாதம்)

சரணங்கள்.

இருந்தா னெல்லாமே தீர்ந்து - பின்பு
இருச்சாண் கபுரிலென்னைக் கொண்டுபோய்த் தூர்ந்து
பெருந்தலை யாளர்கஞ் சினந்து - இருபேர்
பெரியதடி கொண்டடிக்க நினைந்து
பிரதாப மாய்வரும் வேளையிலெதிர் மொழிகூற
வருகுருநாதரே யருள்நீ தரோயுன் (பாதம்)

வல்லயத் தழகுரு ரியன்றான் - வந்து
வாட்டி யெரிதழலா கிடுந்தான்
சல்லாப மஹஷ றில்தான் - படுந்துயர்
சகிக்கப்ப டாதுதள்ளா டுங்கால்
தளதளென வொளிவீசுஞ் சொரூபந்தா னழகுநிழற்றரும்
பழமைமுதுரை வளமைக் குருவேயுன் (பாதம்)

பாலத் தலையில்நிற்கும் போது - மயிர்போல்
பாவிகளுக் காக்கும் போது
பாலம் விரிவாய்வந்த போது - உங்கள்
பழைய வடிமையைக் கடத்தும் போது
பாதமீதுகபு சானதுள்ளிலெனை சாலசம்பிரதாய மாய்கடத்துங்குரு
நாதரோ யருள் நீதரோ யுன் (பாதம்)

தூக்குந் திராசுநிறை தனிலே - தீமைத்தட்டைத்
தாழ்த்து மன்று தனிலே
ஏற்குமென் குருநாம முனிலே - நன்மைத்தட்டைத்
தாழ்த்து மன்று முனிலே
ஏழைதனையிரு காமதாழ்கறை யேற்றும்வேளையி லிறையவ
னிருசரண மெனதுட்சிரசிலுறைபடதரிக்கும் ஹல்லா ஜென்பீரோயுன்()

---

௧௦. இராகம் - முகாரி; தாளம் - ஆதி.

பல்லவி.

அடிமைதனை ரக்ஷித் தாட்கொண்டு - பொல்லா
கொடுமைவினை தவிர்த்தாட் கொள்ளும்.



அநுபல்லவி.

அடிமுடி நடுவு மடங்காத ரூபமான
வடிவாய்ச் சொருபமாகி மவுனத்
திடனுமாகித் திடனு மெவ்வுயிர்க்குள்ளா யதிர்ந்த
வெளியவ் வளவாய்
தேடினுமறிக மெய்ஞ்ஞான சொருபமே (அடிமை)

சரணங்கள்.

மனமு நினைவு மொன்றா காகி - இந்த
மயக்க வினையறுத் துண் மேவி
கனவென்றிவை யொழிந்துட் பாவி - யொளி
கழலை வெளியிலுறத் தாவி
நினைவற் றழுந்துமந்த நினைவை யெனக்கருளும்
நீடுல கானதிலே பழியாதருள்
கூடிவர வுனது நன்றும சொருபவெளி (அடிமை)

பிரபஞ்ச மயக்கத்தை யிர்ந்து - மனம்
பிரளாம லுனதரு ளீந்து
குறையுறை யாமலேகத் தீர்ந்து - மனங்
குறையாம லுனதரு ளீந்து
நிறைவற் றுயர்ந்தவந் மறையை மகிழ்ந்தருளும்
நேசமுறு மவுன நேசமழ கொளுகு
மாசையறுமுணர்வின் ஆசைவெளியிலொளி (அடிமை)

---

௧௧. இராகம் - தோடி; தாளம் - ஆதி.

பல்லவி.

மனத்துயரம் மாற்றி - யுங்கள்
மலர்ப்பொற்பதமருளும் பீரே.

அநுபல்லவி.

நினைத்திருந்த வடிமை யானே
நேசமானேனுனெம் மானே
கனத்தபொருளை யருளுந் தேனே
கமலந்திமுகக் கிருபைதாவருள்
கருணையுளமிசை பெருகிவரவுமென் (மனத்துய)

சரணங்கள்.

அஞ்சி யிருந்த தொன்றே - யுளத்தி
லாகமோகன பாகமாகவே
நெஞ்சு தனில் வைத்துறைய - மனத்தில்
நேமமீறிய நேசமாகவே

வஞ்சமறுத்துன் னருளை யினத்தில்
    வாசமீறிய ஆசையாலுளில்
    மருவி யனுதினம் பெருகவேகுரு (மனத்துய)

ஆஷிக்கா யன்றெழுந்த - சுழியி
    லவனிமலைகடல் புவனம்யாவையும்
நேசித்துருவா யமைக்கும் - விழியில்
    நினைவிலுறுமொழி மவுனமதிலெழும்
மஹ—ஞக்கெனவங் தெழுந்த வெளியில்
    வளைவுட் பலவகைத் தளைவு கொடுவருள்
    வளரு நபியிரு கழலை மருவவென் (மனத்துய)

ரூமின் கருத்தி லுறுதிக் - குருத்தே
    முழுதுமடிமையைப் பழுதில்லாமலுன்
நேமிக்கிரு பைபெருக - வருத்தே
    நிறையவடிமையுள் ளுறையவுனதருள்
ஹாமீமெனு மட்சரத்தைப் பொருத்தே
    கருதியுளமிசை கருதியொருபொருள்
    சுருதிமுடிவுறுஞ் சுருதிநபியேயென் (மனத்துய)

---

௧௨. இராகம் - தேவகாந்தாரி; தாளம் - ஆதி.

பல்லவி.

பகையறுத் தாட்கொள்ளும் ஹாமீமே ஹாமீம்முஹம்மதே
பழமறைக் குருவான தாவீனே.

அநுபல்லவி.

செகதலந்தி லருள்புரியும்வேதர் தெளிவின்வெளி யொளிபுரியும்போதர்
சித்திமுத்திய நற்றவப்பொருள் வைத்தகுருவடி துத்தியமுறவெகு
பழமையாயறி வுளமேயுறவருள் மவுனமுருகிய வுருவேசொருபமே ()

சரணங்கள்.

அடியுமுடியுநடு வதிரவரு மணியே - என்னுளுமுன்னுடை
    அடிமையுளமிசை நடனமிடு தொனியே - முன்னேயுதித்திடு
அமரரிறைவிழி மகிழவொளிசிர மழகினெடுநட மிடவேதமிழ்தரு
அமுதகுணஜெய குமுதபரவெளி அண்டர்மனமகிழ் கின்றசொருபமே
(பகையறுத்)

வறுமையறவெகு கிருபையுற வருள்தா - தந்தாலுமுன்றன்
    வடிவினழகொளிர் பதமேபெறு கதிதா - தந்திரட்சித்து
உறுதிதருமுன துறுதிமனமிசை யருளுறையவரு ளலைநிறையடியே
னுள்ளமெங்கணும் வள்ளன்மலரொளி யுங்குபொங்கிடு தங்குசொருபமே
(பகையறுத்)



அந்தஹாமீமான சோதியே - யாசினேதாகா
    அந்தமவுலா ஹாவான நீதியே - வேதஞ்சிறந்திடு
மாகமங்கள்வே தாந்தநூல்களும் யாவுமுறைமொழி பேசியுனதருள்
அந்தமாதி கடந்தநின்திரு வமுதமாகிய சோதியுளமிசை
அன்புகூர்வெகு முன்பின்வெளியொளி யாகமாகும்ஹாமீமேசொருபமே
(பகையறுத்)

---

௧௩. இராகம் - சாமா; அடதாளம்.

பல்லவி.

ஒருபோதாகிலும் நெஞ்சி லுனைத்தானே-நினையாத
    உலுத்தர் பகையறுக்கும் ஹாமீமே.

அநுபல்லவி.

குருபாதச் செயல்சற்று மறியாத பொல்லாக்
    கொடியவஞ்சக நெஞ்சம் வெறியாக
    கோதற அடியவ ருளமருள்சோதி
    ஆதியந்தமுமிலா தருள்குருவென் (ஒருபோ)

சரணங்கள்.

கள்ளமறுத்தைம் புலன்தனைப் போக்கி - ஞானக்
    கருணை யானந்த வெள்ளமுள்ளிடத் தேக்கி
எள்ளளவாகிலும் விடாதுள்ளுறப் பாக்கிப் - பருவ
    மிதுவென்றறிந்து சோதி நிறை வாக்கித்
தெள்ளு முளத்தோரொன் றறியாப்பொல்லாத வஞ்சர்
    திருடு குருடுபல பரடு நிரடுவினை
    வருடிமவர்கள்பகை யுதறிவிடு குருவென் (ஒருபோ)

விதித்தவிதியிற் சற்றுந் தவறாத வெங்கும் - உயர்
    வேதமுறைத்தவுரை மறவாதோர் நெஞ்சில்
உதித்த வுதிப்பறிந்து குறையாது தங்குஞ் - சோதி
    யுள்ளங்தெளிந்துதெளிந் தறிவோரா மென்றும்
பதித்துநெஞ் சிற்சற்று மறியாப்புல்லோர் செய்வினை
    பஞ்சினிலிடுமன லென்செயு மதுவென
    நெஞ்சினினையும்வெகு வஞ்சமறுகுருவென் (ஒருபோ)

அந்தஹாமீமா மந்த யாஸீனு யெங்கும் - அருள்
    அந்ததாஹாவாயிருந்த துயிர்மீதே பொங்கும்
சிந்தை தனிலுறைந்து நிறைவாயே தங்கும் - அதைத்
    தெளியுமடியாருளிற் குறையாதா மெங்கும்

அந்தவலியுன்னு பூசில் மூமினத்தி யாகவே
அருள்தருங் குருவே மருளறுங்குருவே
யருளுறவிருட்பவ வினையறுங் குருவென் (ஒருபோ

---

௧௪. இராகம் - காம்போதி; தாளம் - ஆதி.

பல்லவி.

இந்த வறுமை தவிர்த்தாட் கொண்டுன்
இன்பப் பொற்பாத மருள்வாய்.

அநுபல்லவி.

அந்தமில்லாத வேதாந்தப் பொருளே - யென்
றகமிகவே பாசமுடன் வெகு
யோக மருள்புரி மேவு ஹாமீமே (இந்த)

சரணங்கள்.

ஏழை மனதுரு குமோ - அடிமைதுயர்க்
கென்செய்வே னெனலா குமோ
வேளைகண் டுதவி டுமோ - அடிமைதுயர்
வெந்து வெண்ணீறதா குமோ
குழுவாசனை தந்துன் சுடரொளிப் பிரபைதந்து
தொண்டனுமென நன்றிமகிழவே
என்று மருள்புரி யின்றஹாமீமே (இந்த)

கும்பமுலை மருட் டிலும் - காமவிகாரக்
குசலைத்தொழி லுருட் டிலும்
என்பட்டுலை மெழு கிலும் - மிகவும்நொந்து
இடைந்து மலைகிறுனெ னவும்
அன்புபெறுந்திருக் கண்ணருள்வைத் திரட்சித்து
அன்பனிவனென நம்புமடிமையென்
துன்பமறவருள் நம்பும் ஹாமீமே (இந்த)

ஆமென் றெழுந்த புரியில் - இல்லெனுமோசை
அருட்கொண் டிரைந்த அலையில்
ஹூவென் றதிர்ந்த தொனியில் - லீயென்றவொளி
கிருபை திரண்ட புரியில்
தாவென்றதற்குளே தண்டரள முத்திரைசோதி
தாமீமாகிய தாவீனேசுடர்
ஆமீனருள்கை முக்கும்ஹாமீமே (இந்த)

---



௧௫. இராகம் - காகரப்பிரியை; தாளம் - ரூபகம்.

பல்லவி.

குணக்கறுத்தென் றுயரைமாற்றிக்
கொத்தடிமைதனை யாட்கொள்வீரென்பீரோ.

அநுபல்லவி.

மனக்குரங்கா லடியேன்தினமும்
வாடுவேனோ வென்வாட்டந் தவிர்ப்பீர். (குணக்)

சரணங்கள்.

என்றன் வருத்தமெல்லாந் தவிர்த்தீர்
ஏழைமனத்தா லிரக்கம் பார்த்தீர்
உன்றன்பதத்தி லெனையே சேர்த்தீர்
உள்ளம் பரிந்தென்னையே யேற்றீர்
நந்தியாய் வந்தாட் கொண் டோரே
நடுநீர்த்தாரை திறக்க வருள்புரிவீரோ (குணக்)

சிறையிலகப்பட் டிருந்தது போலே
தினமு மடிமை மெலிவ தாலே
நறைமாமலர் வீசியநா யகரோ
நாயென் சிறையை விடுத்தாள் வீரோ
மறைபட்டிருந்த தாரை வெளியாய்ப் பின்
வந்ததாரை யடைக்க வருள் வீரோ (குணக்)

துரிதமா யென்புண்ணை யாற்றி
தொடுத்த துயரமெல்லா மாற்றி
பரிவாய் முன்போற் றுரை திறந்து
பள்ள மடைத்தாட் கொள்ளும் பீரோ
குருவே யடியாருயிர்க்குட் பொருளே
கோஜாவே ஹல்லாஜென் பீரோ (குணக்)

---

௧௬. இராகம் - சஹாநு; தாளம் - ஆதி.

பல்லவி.

முகக்கிருபை யருள் சாகிபே - உங்கள்
முகக்கிருபை யருள் பீரே.

அநுபல்லவி.

முகக்கிருபை யருள் தாரும் - மதி
முகத்திரு விழியாற் பாரும்
அகத்தரள வொளி வானோரே - யென்னை
யாண்டு கொண்டருளும் பீரே (முகக்கிருபை)

சரணங்கள்

அருணனொளிவு கதிர் விசி - தெளி
அழகு பளபளென வீசி
புரணத் தழகு சின்ன வோசை - தொனி
பொருமி யதிர்ந்து சின்னவாசி
கிரணச் சொருபகலை யாலே - ரதி
கிருபை மதனசுக மாலே
சரண மவுனவிழி யாலே - கட்டித்
தழுவின தெளிவொளி - பொழுகினரதிசுக (முகக்)

முந்தநாளி லந்தி நேரக் - திரு
முண்டகத்தி லுறை பாதம்
நந்திபாய் திரண்ட ரூபம் - உள்ளில்
நாட்டினய் நடன ரூபம்
சிந்தை கொண்டு தெளிந் தானே - உள்ளிற்
றிரண்ட கனியின் ரசந் தானே
அந்தநாளினில் ரண்டுங் கூடி - யொன்றுகி
யடிமுடி தொடுகெடு - வடிவெனுமதிசுக (முகக்)

எந்தாயகம் றஹ - மானே - யெனக்
கிரங்கி ரக்ஷித்தருள் ஈமானே
சிந்தை தனிலுறைந்த தேனே - குருவாய்த்
தெளிய வெளியில்வந்த கோனே
நந்தியான குரு நீரோ - யெங்கள்
நாதரோ ஹல்லாஜென் பீரோ
அந்தமாஞ் சுகத்தி லாகி - மெள்ள
அருகினில் மருவியே - உருகின ரதிசுக (முகக்)

---

௧௭. இராகம் - முகாரி; தாளம் - ஆதி.

பல்லவி.

என்றைக்குக் காண்பேனோ - ஆண்டவர்பாதம்
என்றைக்குக் காண்பேனோ.

அநுபல்லவி.

என்றைக்குக் காண்பேனோ யெவ்வுயிர்க்குஞ் சோதி
தொண்ட ருளத்தில்நடஞ் சூக்ஷவெளி யொளியாகி (என்றை)

சரணங்கள்.

அடியார்க் குதவு முகமுந் - துதித்திருந்த
அடியார்க் கருளு முகமும்
உடுவெளி தரு முகமும் - ஜிபுரீல்கண்
டுண்மை விளங்கு முகமும்



நடுவடி முடிவாகி நாலைக்கடந்து மேலாய்
வடிவொப்பனை யில்லாத மவுனச்சுழிவொளி வெளியாகி
(என்றைக்கு)

ஆதியந் தமுங் கடந்து - நின்மலமான
அழகு சிறந்த கரமும்
சோதிசொ ருபமா யெங்கும் - வளர்கருணை
தொந்த மானந்த கரமும்
நீதித வக்கரமும் நினைப்போர்க்கருள் கரமும்
பாதச்சுருதியோதும் பரவறிவொளி வெளியாகி
(என்றைக்கு)

அந்த ஹாமீம் கழலுங் - கிருபையொளி
அந்த யாஸீன் கழலும்
அந்த தாஹா வெனவும் - திகுதிகென
ஆடும் நடனக் கழலும்
அந்தஒலி யுன்னுபூவில் மூமினத்தி யெனவே
அந்தமவுலாஹா வென்றருள் நபிகழலொளி வெளியாகி
(என்றைக்கு)

---

௧௮. இராகம் - சங்கராபரணம்; அடதாளம்.

பல்லவி.

வரவர வேணும் - உமதுபதம்
தரவர வேணும் - அநுதினமுந்
தரவர வேணும்

அநுபல்லவி.

அருள் சிறந்தோரோ - அடியேன்துய
ரறிந் துகந்தோரோ - அமுதகலை
முடிவில் நடுப்பட நின்
றுறையுந் திருக் கதத்தை
முளித்தே இருகண் தூங்கித்
தெளித்து வடித்துக் காண (வரவர)

சரணங்கள்.

வட்டமிட் டதுவுங் - கலையிரண்டும்
மாறிவிட் டதுவும் - வளைவுசுழி
தட்டிவிட் டதுவும் - ஒருகால்தூக்கித்
தாண்டிவிட் டதுவுந் - தடநடன
கட்டு பரிபன்னிரு கால்கொண் டெழுந்துசுக
காரண கதமலர் பூரண மாய்த்தா (வரவர)

காஸ்தலை கடந்து - நடுவானசொல்
காரணத் தடர்ந்து - கண்ணிலடங்கா
மானுறப் புரிந்து - இருமணியுள்
வரவுட னிருந்து - மலர்புகுந்து
நால்கலை வெளியி லெண்கலை யுளிலாகி
நாசிக்குள் ளோசைக்குள் நேசிக்குள் வாசிக்க (வரவர)

வல்லமைப் பொருளே - வறுமைத்துயர்
மாற்றுநற் பொருளே - வடிவுடைய
ஹல்லாஜென் பீரே - பொருளுறைந்த
ஹாமீம்முத் தலக்கே - கருணைதரு
அல்லும் பகலுமுங்கள் பாதம் பணிந்துநின்ற
அடிமையை யாட்கொளு மாளுமென் சாகிபே (வரவர)

---

௧௯. இராகம் - சங்கராபரணம்; அட்டதாளம்.

பல்லவி.

வருவீர் வருவீர் வருவீர் - குருவேயென்
வறுமைத்துயரகற்றி யருளைத்தினம்பருக (வருவீர்)

அநுபல்லவி.

அருவே குருவே அருவே - யென்
னகமதில் நிறைதர மகிழ்பெற வுளமிசை
தருவே உருவே தருவே - உன்
சரணமதை நினைவிற் பூரணமதாகவே
தந்தவுனதருளைச் சிந்தைதனில்மருவ (வருவீர்)

சரணங்கள்.

ஒளிவே தெளிவே ஒளிவே
உருகி யடிமுடியின் னடுவிலதிர் தொனியின்
உருவ மணியொளியி னுருவ் மருவிவரு
வழியே சுழியே வழியே
மருவி யிருகலையிற் பருகி நடனமிடு
மவுனமதி லுருகும் புவனவடி மைகொடு
விழியே தெளியே விழியே
விளைவில் வருசொருப அருவவுரு வமதாய்
விந்தவோ டெழுந்திடவு நந்தி யருண்மருவ (வருவீ

உளமே பழமே உளமே
உயிர்களனைவையுமுன தொளிகொ டருள்பெருக
உயிர்கள் தொறும்பல வடிவென வருகுல



நளமே தளமே நளமே
நறைகமழ் மலர்மிசை நிறைகொடு வருகுதேன்
ரசவமு துணவருள் பிசகறும் முதலே
தளமே நளமே தளமே
சகலகலை யறிவு முளமில் மருவவருள்
சல்லாப மற்வே ஹல்லாஜுன் னருள்தர (வருவீர்)

முத்தே சித்தே முத்தே
மூதுரை தனில்வரும் சோதி சொருபவொளி
மூலமணி மவுன மேலக்கபால வெளி
வித்தே பத்தே வித்தே
வேர்வை தனிலதிகப் பார்வை சொருபமதாய்
வேசமோ ருயிர்கள் நேசமுறுதி கொடு
உற்றே பற்றே உற்றே
யோகச் சுழிவிளைவி லாகம துண்மறையும்
யோக மருள்புரியும் ஹாஹூ முஹம்மதே (வருவீர்)

---

௨0. இராகம் - ஆனந்தபைரவி; தாளம் - ஆதி

பல்லவி.

அனந்த நாவுகொண்டு துதிக்கவேணு மென்பி
ரதிக பாதமலர்த் தாளே.

அநுபல்லவி.

அனந்த நாவுவேணும் அனந்தபாஷை வேணும்
அனந்த புகழும் வேணுமே
அனந்த முறையதிகக் கிருபை சொருபமுடன்
அனந்தசுடரழகு பிரபையொளிர் கழலை (அனந்த)

சரணங்கள்.

அடிமைதா னினைந்தபோதி லேதுயர் களறவந்
தாசை கொள்ள வேணுமே
கொடுமை தானயர்ந்து விடவுமே நின்பாதக்
கூர்மைநேர்மை வளமே
முடுமை யானதறும் படியிலே கிருபை
முழுமதி யெனவரு முழுமுதல் சொருபமே
முழுது மடிமையுளின் முழுது நிறைவுகழல் (அனந்த)

பிள்ளை யென்றருமை கொண்ட நாயகமே
பேறைப்பெறத் தாக்குவீர்
கள்ளனென் றெனைத்தானே நீர்தள்ளாமற்
கபடந் தீர்த்தாட் கொள்ளுவீர்

வள்ளலே யுன்பாத மல்லால்வேறு முண்டாமோ
வருகுறையிடர்தவி ராருவுரு சொருபமே
வருமிறையலர்மிசை மணியொலி வளர்கழல் (அனந்த)

அந்தஹாமீம் அந்த யாஸீனுக வந்தே
ஆண்டு கொண்ட குருவே
எந்நாளு மென்னுள் வந்த சந்நிதிசை
யேற்றுட் கொண்ட திருவே
முந்தக்கண்டவுடு வுன்றன் சென்னி மீதில்
மொளுமொளென வொளி தளதளென நடன
பளபளெனரவிகள் கோடியொளிரு கழல் (அனந்த)

---

உக. இராகம் - மோகனம்; தாளம் - ரூபகம்.

பல்லவி.

இருட்டை வெளியிலாக்குஞ் சோதியே - என்சாகிபே
இருட்டை வெளியிலாக்குஞ் சோதியே

அநுபல்லவி.

மருட்டா யிருளிலிருக்கும் போதிலே - வெளியாகநின்று
வருத்தி யுயிர்க ளமைக்கும் பேரிலே
இருட்டுத் தொழிலை வெளியி லாக்கித்
இருட்டை வெளியி லாக்கியாண்டு
மருட்டும் குருட்டை நீக்கிய பின்பு
வடித்த வெளியில் வெளியென்பீரோ (இருட்டை)

சரணங்கள்.

வஞ்சமனைத்தை யறுக்குஞ் சோதியே - உனைத்துதித்தபேர்க்கு
வருமிடரைக் கெடுக்கும் நீதியே
நெஞ்சிற்பதத்தை நினைப்போர்க் காதியே - உனைநினைந்தபேர்க்கு
நேசப்பொருளைக் கொடுக்கும் வேதியே
அஞ்சியிருந்த வடிமைக்குக் குறை
யணுவும் வாராம லாக்கியாண்டு
நஞ்சிலுறவாய்ப் பிஞ்சி லெழுந்து
நடுவிற் சுழித்த வெளியென்பீரோ (இருட்டை)

உண்மைமறந்தோர்க் கிருளைப் பூட்டுவீர் - ரெந்நாளுமுங்கள்
உண்மைநிறைந்தோர்க் கருளைக் கூட்டுவீர்
வெண்மைமறந்தோர்க் கவத்தைப் பூட்டுவீர் - ரெந்நாளுமுங்கள்
வெண்மைமனத்திற் பதத்தைக் காட்டுவீர்



தண்மையாக விருக்கு மடிமை
தனக்குட் பழுதை யறுத்தேயாண்டு
உண்மைவெளியில் நடனம் புரிந்த
வொளியினழகு வெளியென்பீரோ (இருட்டை)

மூன்றுசுழி யொன்றாக்கும் ஹாமீமே - யெவ்வுயிரெவ்வனைக்கும்
முதலுமடியு நடுவும் ஹாமீமே
ஆண்டுவந்தெனை யாளும் ஹாமீமே - யெந்நாளுமடிமைக்
கணுகுமிடரைக் கெடுக்கும் ஹாமீமே
தாண்டும் ஜிபுரீல் பார்க்கச் சிரசிற்
றொடுத்து மறைந்த வுடுவை வெளியிற்
பூண்டுவிழிகண் மகிழ வொளிர்பொற்
பிரபைஹாமீம் முஹம்மதென்பீரோ (இருட்டை)

---

உஉ. இராகம் - தோடி; தாளம் - ஆதி.

பல்லவி.

தனிவழி போகிற பீரோ - சற்றுநேரமிங்கே
தரித்திருந்தாலநி ஞலெனக் குபகாரம்.

அநுபல்லவி.

அநியாயஞ் செய்யவேண்டாம் அபூபக்கர் மைந்தனையா
அருள்முகியித் தீன்மஹுக்கு முதலி யானபைதல்
துனியாவாசை யகற்றித் துன்பம் வாராமற்காத்துத்
துயரை யகற்றுஞ் செய்கு ஹல்லாஜே
துணைவனெனக்கொரு நாயகரோ
துன்பமறுத்துரை செய்பவரோ
அருள்குருநிறையொளி வானவரோ
ஒன்றுக்கொன்றுயிராய நின்றவரோ (தனிவழி)

சரணங்கள்.

உண்மை கொண்டு நாடி யுள்ளமெல்லாந் தான்வாடி
யுலையின் மெழுகதுபோ லுருகுவேனே
செம்மைகொண்டு நின்பாதஞ் சிந்தை தனிலேவைத்தேன்
துயரை யகற்றுஞ் செய்குஹல்லாஜே
தொன்மை யுடையவிறை தூதுவரோ
நன்மை யருள்கிருபை நாயகரோ
வெண்மை மனதிலுறை வைப்பவரோ
உண்மை யருள்கிருபை யுற்பனரோ (தனிவழி)

முத்திபெற்ற வல்லோன்றன் முதுகுக் குரமதாக
முன்னும் பின்னுமாய்நின்று மொழிந்தோரே
கத்த னருட்கிருபை காட்டி யெனக்கு நன்றாய்க்
காட்சியுஞ் சூட்சியுந் தருவீரென்பீரோ
உத்தம நாம முகப்பவரோ
உற்பன மாக வரும்பீரோ
கத்த னருட்கொரு காரணரோ
சித்த மிரங்கிமுகம் பார்ப்பீரோ (தனிவழி)

நெஞ்சந் தனிலிருக்கு மஞ்சுபுஞ் சவர்கள்தான்
அலைப்பா ரவர்களைத்தா னடக்குவதும்
மிஞ்சிப் பேசிடாதுன்மை யஞ்சி யொடுங்கிநின்றாய்
ஆவென்ற சொல்லத னடக்குவதும்
வஞ்சமகற்றிடும் வல்லவரோ
தஞ்சமெனக் கொரு தானவரோ
அஞ்சலென்றென்னை யணைப்பவரோ
கொஞ்சியெனக்கருள் குருநீரோ (தனிவழி)

---

௨௩. இராகம் - சுருட்டி ; அடதாளம்.

பல்லவி.

கண்ணாடி வெளி காட்டுவீர் - என்சாகிபே
கண்ணாடி வெளி காட்டுவீர்.

அநுபல்லவி.

மண்ணொடு பூமிவான் மலைகட லாகுமுன்னே
எண்ணுமெக் கின்மரத்தி லியல்பாஞ் சொருபமாகி
அந்த வடிவேமன தெந்த னிலினைவிலுறத்
தந்து வெளியிலொளி வந்து கிருபையிரு (கண்ணாடி)

சரணங்கள்.

முன்னே இருளில் நகத்தாய் - இருந்தகுரு
முன்னே வருஞ் சொருபமாய்த்
தன்னே யுளத்திலே அறைதாய் - இருந்தகுரு
தன்னைதன்னுள் சொருபமாய்
பின்னே யதுக்குள்வைத்து முன்னே மறைந்துநின்ற
வேர்வை யுயிர்ப்பதும் வேர்வை யதில்வினையும்
கோர்வை நடுவுடனப் பார்வை யழகிலுற (கண்ணாடி)

நெஞ்சகந்தனி லருள்வீர் - ஐயாவென்றன்
நினைவிற்கருணை புரிவீர்
இன்சொல்லமு தருள்வீர் - ஐயாவெனக்
கின்பசுக மருள்வீர்



பஞ்ச பூதமில்வந்த மையலுக் கருள்செய்ய
பாத மலரடியிப் போது நடனமிடும்
வாதைப் படுமடிமை சோதி வடிவிலுறக் (கண்ணாடி)

பத்தி முனை சுழியில் - பரியிலேறிப்
பார்க்கும் பர வொளியில்
சித்தி நட மொலியும் - எழுஞ்சுடர்
சேரு மனை வெளியும்
சித்த மடியேன்காண வெற்றி யருளும்பீரோ
நிறையும் பலதுயரை யறையும் வகையறியும்
இறையின் கருணையிக வுறையுந் திருஹல்லாஜே (கண்ணா)

---

௨௪. இராகம் - பைரவி ; தாளம் - ரூபகம்.

பல்லவி.

எந்தன் குருவே யாண்டவரே - எம்பிரோசாகிபுவே
எந்தன் குருவே யாண்டவரே

அநுபல்லவி.

சிந்தையிலெழுந்த தீபமே
நந்தியாகவமுந்தும் ரூபமே (எந்தன்)

சரணங்கள்.

வேதப்பொருள் முடிவே - நடுவில்நின்று
வீற்றிடும் வடிவே - அடிமுடிக்கும்
பாதத்தொனி நடுவே - சிரசிலுயர்
பார்வைக்குறு முடிவே
நாதத்திடையில்நின் றாடுந்திருவடிவே
நம்பினேனுனி லன்பிலாகுமாம்
எம்பிரானிரு செம்பொற்கழல்தரும் (எந்தன்)

மூலச்சுழி வழியே - உருவுங்கதிர்
மூடுங்கண லொளியே - அளவிடாத
கோலச்சுடர் வெளியே - நடம்புரிந்த
கூர்மைத்தெளி மொழியே
ஆலந்தனையமு தாகவுண்டாடிய
அந்திமீதிலே தொந்தமாகவே
வந்தநோர்துகத் தந்தமேயருள் (எந்தன்)

ஏழைதுய ரறுத்து - அடிமையுள்ளில்
நாளும்பொருள் நிறைத்து - ஹல்லாஜென்பீர்
தாளைப்பணிந் துறைத்து - அடியேன்பவந்
தானெல்லாமே யறுத்து

குழும்வினையறுத் தடிமையை யாட்கொண்டு
தொண்டுசெய்யவே நின்றுள்ளாடியே
பண்பேபுரிகுடன் கண்டுதொழவருள் (எந்தன்)

---

உ௬. இராகம் - முகாரி ; தாளம் - ரூபகம்.

பல்லவி.

எந்தவிதம் வருமோ - திருமனம்
எந்தவிதம் வருமோ.

அநுபல்லவி.

அந்தமில்லாவொரு ரூபமில்லானுயி
ரார்ந்தெல்லாம் நடத்தும்பிதாமனம் (எந்த)

சரணங்கள்,

[illegible]பிடித்தக்கண் தூங்குவ தாமோ
[illegible]ணியறுத்தருளைக் கண்டிட லாமோ
[illegible]டைத்துளே நடத்துவ தாமோ
நாதத்திடையில் நடஞ்செய்பிதாமனம் (எந்த)

பாவவினையை யொழித்திடு வானே
பாதமதிதன்னுள் ளமுத்திடு வானே
மெய்ம்படியைப் பெளித்திடு வானே
மேலவெளியிற் றரித்தபிதாமனம் (எந்த)

உள்ள முருகி மனத்தெளி வேனோ
உண்மையடியார் பதந்தொழு வேனோ
கள்ளப்புலனைத் தருள்மொழி வேனோ
ஹல்லாஜ பதந்தரும் கனகப் பிதாமனம் (எந்த)

---

உ௬. இராகம் - சாவேரி ; தாளம் ஆதி.

பல்லவி.

ஒருச்சாம வேளையாச்சே - சீர்வராம
சோகித்ததும் பிறக்கேச்சே.

அநுபல்லவி.

ஒருச்சாம முமைத்தேடி யுளமெல்லாம் மிகவாடி
உருகி யுருகியே பெருகிக் காமஜலம்
பெருகிப் பெருகியே அருவி யாகுதே (ஒருச்சாம)

சரணங்கள்.

[illegible] முகிழ் மொட்டு யுருகுதே - மையற்
[illegible] அலைப்பத்துப் பெருகுதே



மடலும் விரிந்துகாம மதனும் படமெடுத்து
வருந்தி வருந்தியே திருந்திப் புரமனம்
பொருந்தி மதன்சன நிறைந்து பெருகுதே (ஒருச்சாம)

காலு மெரியுங்கூடி முறுகியே - விம்மிக்
கருணையா யோமொழுத்தைப் பருகியே
நாலுங் கழிந்தெட்டுள்ள நடன ரூபத்தொழிலே
நாடி நாடியே தேடி வருமதிற்
கூடி மருவிட வாடி யுருகுதே (ஒருச்சாம)

ஆமென் றமைக்குமுதல் ஊமென்றே - யிருளில்
அலறிச் சொரிந்துசின்ன மதுக்குள்ளாய்
மாவென்ற தொனியருள் ஹல்லாஜென் சாகிபே
வளர்ந்த வலம்புரி தெளிந்த தாளத்தோ
டெழுந்த தொனியினோ டமுந்தி மருவிட (ஒருச்சாம)

---

உ௭. இராகம் - தோடி; தாளம் ஆதி.

பல்லவி.

உள்ளமுருகுதென்பீர் - ஹல்லாஜ-யர் பதந்தேடி.

அநுபல்லவி.

கள்ளக்கருவிப் புலனையறுத்துக் கருத்தையொன்றுக்கித்
தெள்ளத்தெளியுங் குருவின்கிருபை திருவளலை மூட்டிமூட்டி (உள்ள)

சரணங்கள்.

இந்துங் கதிருமெவு மிருதயத் தாலேயென்
சிந்தைமிகக் குளிர்ந்துன் திருவடிக்கன் பாகியாகி (உள்ள)

வாசிதனிலேயேறி மவுனமுங்கூறி
நாசிச்சுழியிற்சேர்த்து நாதனருளைப் பார்த்துப் பார்த்து (உள்ள)

காபு ஹாயா அமின் லாத்து காபிலுறவாகி
நாவிலெழுந்த சோதி நாதரோ ஹல் லாஜென்பீரோ (உள்ள)

---

உ௮. இராகம் - மோகனம் ; தாளம் - ஆதி.

பல்லவி.

மனதுருகு தென்பீர் பாதம் - மயலுறவாக
மனதுருகு தென்பீர் பாதம்.

அநுபல்லவி.

தினமுமடிமை யுமதுபதந் தேடியேநாடி
மனமும்நினைவு மொன்றாய் மெத்த வாடியேதேடி (மனது)

சரணங்கள்.

குருவுபதேசத்தாலே திருவருள்கானை
அருளானதெல்லா மென்ற னகத்தினிற்றேனை
விருளானதெல்லா மென்றன் கல்பைவிட்டகல
மருளான மாய்கைதனை விட்டுநா னொழிய
விருவினையகற்றிநின் பொருளை நிறைத்திட
வொருபொருள் கண்டு திடமுடனுகவென் (மனது)

இந்துங் கதிருமுவு மிருதயத்தாலே
அந்தவொளியில்வந்த ஹல்லாஜென்பீரோ
சிந்தை தனிலுறைந்த ஹாமீம் முத்தலக்கே
தெளிந்த வடியாருளி லுறைந்த மெய்ப்பொருளே
சிந்தைமனமகிழ வன்ற னருள்பெருக
எந்தன் துயரகல வந்தருள் புரியுமென் (மனது)

இவ்வுலகத்திற் பாதந்தோ யாதிறசூலே
மேலுலகத்திற் காசான நபினுரோ
மூவுலகும் புகழும் முத்திமுஹம்மதுவே
முறுசலான நபிமார்களுக்குங் கோவே
ஆதிநாயகரோ நீதியாயெனையாள்
ஓதுகாரணரோ வேதநபிறசூலே (மனது)

---

௨௯. இராகம் - முகாரி; தாளம் - ஆதி.

பல்லவி.

இன்றைக்குக் காண்பேனோ - ஆண்டவர்பாதம்
இன்றைக்குக் காண்பேனோ.

அநுபல்லவி.

இன்றைக்குக் காண்பேனோ வென்னுளென்னுள்ளாகி
நின்றுன் பரவறிவாகியவாகிய நிட்களப்பொருளருள் சோதியை (இன்)

சரணங்கள்.

அன்ன மயமுங் கடந்து - பிராணமயமும்
அடக்கி மனமுங் கடந்து
சொன்னமெய்ஞ் ஞானமுங் கடந்து - ஆனந்தச்
சுருதி மயமாய் நிறைந்து
என்னையென் வடிவாகி - யெவ்வுயிருந்தானுகி
முன்னும் பின்னுமதாகி - முடியுந்தத்வோமசிப்பொருளை (இன்றை)



விடையந்தனையுந் தவிர்த்து - பொறிகடந்து
மேவுங்கரணமுந் தாண்டி
அடையும் பிர்மந் தோடுயி - ரயிக்கியமான
அசிபதமாகவே தோன்றி
கடையிற்றால சூட்சத்தைக் கடந்துகாரணமாகி
நடையுங் கடந்துசோதி நன்குறு பரவொளியை (இன்றை)

சமைமுதலா மறு வகையு - மறிந்துஹாமீம்
சரணமதின்மும் மூட்சுமாய்
அமைமுதலாம் வகையுங் - கடந்துயாஸீன்
அருள்சச்சி தானந்தமாய்
நமையறியும்பரிசு நாமேநாமான
தமையறியும் பரிசு சாற்றுஹாமீம் பரவொளியை (இன்றை)

---

௩௦. இராகம் - தேசிகத்தோடி ; தாளம் - ஆதி.

பல்லவி.

திருமுகங் கண்டபோதென் தீவினை தீர்ந்ததென்பீர்
செய்கு ஹல்லாஜென் சாகிபே.

அநுபல்லவி.

உருவாகி யெனையாண்ட வுண்மையு முறுதியு
மொருகொடிப் பொழுதினிற் கண்டேனென்பீரோ (திரு)

சரணங்கள்.

பாவத் துரோகத்தாலே பூவுலகந்தனிற்
பழவினையா லழுந்தி னேனே
மேவும் வியாதியாலே உடலில் வருத்தந்தீர
மிகவும் நொந்துழு திராந் தேனே
கூவுங் குரல்முழக்கந் தவிர்க்கவுங்கள் பொற்பாதக்
குறிகண்டவுடன்துயர் தீரப்பெற் றேனே (திருமுகம்)

ஏழை துயரத்தாலே நீங்கவெழுந்தருள
வெளியேன்கண் காட்சிபெற் றேனே
சூழும் வினைகளெல்லா மொழிந்தடியேன் தேகத்
துன்பம்போ யின்ப முற் றேனே
நாளுமுங்கள் பொற்பாத மடிமை கண்டபோதிலென்
நடுவில் வியாதி தீரப்பெற் றேனே (திருமுகம்)

செந்தாமரைப் பொற்பாதத் தீபச்சுட ரழகுந்
திருமேனிப் பிர காசமுந்

சந்திரவுதயமான முகமுங் கஸ்தூரி வீசும்
சருபந்தழகு நேசமும்
சுந்தரவதனமும் அடியேன் கண்ட வுடனே
துயர்தீர்ந்துன் னருளைப்பெற் றேனே (திருமுகம்)

---

௬௧. இராகம் - எதுகுலகாம்போதி ; தாளம் - ஆதி.

பல்லவி.

கண்டேனென் பிர்பாதப் பிரகாச மென்னுளிற்
கருணை யானந்த மாகுதே.

அநுபல்லவி.

அண்டரண்டர் தேடினுங் காணுதசோதி யாகி
மன்றுள் விளங்குநின்ற மாமணி சொருபாகி
மாமணி பீதும வாகிய பூரண
சோமனழகு கதிர் போலிலங்கிய கழல் (கண்டே)

சரணங்கள்.

நாசி நுனிநடுவி லாடியண்ட ரண்டமுந்
தேசி போற்றிரும்பியென் சிந்தையுள் ளுறைவாகி
வாசிபனி ரண்டினு லாகும்நடு வெளியில்
வாடிய கீலிரு சோடிடு பாழ்வெளி
யாடிய மவுனமுள் ளழகொளி கழலென்னுள் (கண்டே)

ஆவென்றெழுந்து நின்ற ஆஷிக்கெனுங் கடலில்
ஏகன் கிருபைகொண்டு இல்லென்றெழு மொலியுள்
ஊரியென் றதிர்ந்தவொலி கேட்டுலவீ யென்றசுடர்
கேசரி சொருபம தாகிய புரியினுள்
நேசமுடனே வளர் வாசனைக் கழலென்னுள் (கண்டே)

அல்லும் பகலுந்தேடி யிருந்துக் காக்வுஞ்
சல்லாபந் தீரவென்னுள் தயவருள் பூணவும்
ஹல்லாஜென் பிரிரு கழலருண் மேவவுங்
காரண நேர்மைய தாகிய சோதியின்
காரண னாமீமு ஹம்மது கழலென்னுள் (கண்டே)

---

௬௨. இராகம் - கல்யாணி ; தாளம் - ரூபகம்.

பல்லவி.

அதுவல்லோ மருந்து - என்பீர் நாமம்
அதுவல்லோ மருந்து.



அநுபல்லவி.

அதுவல்லோ மருந்தென் னரும்பிணி தன்னைமாற்றும்
அதுவல்லோ சம்பாதாய மாயருந் துயர்தீர்த்த (அதுவல்லோ)

சரணங்கள்.

வல்வினைக் களங்கத்தை யறுக்கு - முள்ளில்
வந்தபவக் கடலைச் செறுக்கும்
தொல்லை இபுலீசினை யுறுக்கும் - ஞானச்
சூட்சப்பொருளை யுள்ளில் நிறைக்கும்
தொந்த மாகவே யெந்த நேரமுஞ்
சிந்தை கூறவ ருந்தி யருள்தரும் (அதுவல்லோ)

அண்டபிண்ட மெங்கணும் நிறைந்து - தினம்
அன்பாமடியாருளி லுறைந்து
மன்றுளாடியே நடம் புரிந்து - பொல்லா
மயக்கக் கருவிகளை யரிந்து
வஞ்ச மீறிய நெஞ்ச ராகிலும்
கொஞ்ச மாகிலுங் கெஞ்ச வருள்தரும்(அதுவல்லோ)

அசவைவெளி யில்வித்தாய் நிற்குஞ் - சுழி
யதுக்குள்ளிருந்துபிரகா சிக்குங்
குசவனுய் மனைந்து வைக்கும் - அதைக்
குறித்த பேர்க்குள்ளாக நிற்கும்
கொல்லு நஞ்சினை மெல்ல வுள்ளினில்
நல்ல வமுதருளும் ஹல்லாஜென் பீரருள் (அதுவல்)

---

௬௩. இராகம் - முகாரி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

வாத சித்தி தாரும் - என்சாகிபே
வாத சித்தி தாரும்.

அநுபல்லவி.

வாத சித்தி தாரும் வாழுஞ் சோதியென்னுள்
நாதமுட்கருவோ டாகுமுப்பூ முதல் (வாத)

சரணங்கள்.

வாத மோடதிக தம்பன மோகனமும்
மாய ஆக்கிர்ஷண பார்வை யஞ்சனமும்
நீதி மேவுசொரு பங்கள் மாரணமும்
நித்ய ஞானமுத லுற்ற தோர் கெவுனம்

சாத மேவும்று பத்து நாலுதொழில்
தக்க தொக்கவிவை கட்டு மாதிகுரு
சோதி ரூபமய மான வாதிகுரு
சூட்ச மானகரு வருளுங் தொண்டனுக்கு (வாத)

எண்ணெ யொத்தசவுக் காரம் வைத்திடவும்
இன்ப முற்றதனுள் ளெண்ணெய் வாங்கிடவும்
பின்னு மக்கருவில் கார மேற்றிடவும்
பிண்ட வண்டமுதற் சுண்ண மாகிடவும்
மண்ணில் நீர்மருவுந் தாளங் கண்டிடவும்
மனுட ருக்குரிய வாறு விண்டிடவும்
சொன்ன வித்தைதிற மாக நின்றிடவும்
தொந்த முங்கள்பதத் தொன்று தொண்டனுக்கு (வாத)

சொன்ன வித்தைரச வாதமுற்ற தொழில்
சோர்வி லாமலருள் காணுமப் பரிசுந்
தொட்டு விட்டகுறை திட்டமாக வென்னுட்
சூட்சமாக வருங் காணுமப் பரிசும்
பன்ன வந்தநவ லோக மொன் பதிலும்
படுமுன் வேதைதிற மாகுமப் பரிசும்
பைய லுங்களுடன் கைய மேத்திவெகு
பர்ச மாயடிமை கேட்கிறேன் கிளைவில்
மெய்ய ஞானகுரு வாக வென்னுள் வந்து
மேவி நின்றமஹ முதரே தொண்டனுக்கு (வாத)

---

௯௪. இராகம் - எதுகுலகாம்போதி ; தாளம் ஆதி.

பல்லவி.

தானாரோ தந்தை தாயாரோ பெற்ற மகவாரோ.

அநுபல்லவி.

மாணுபியரான வாசலருள் வாசலெல்லாம் (தானாரோ)

சரணங்கள்.

* ஐவர்பசி யாலிருக்க ஐவர்விசையாய் நடக்க
ஐவரைவ ருங்கூடி யானதெல்லாம் பார்த்திருக்க
ஐவரில்வந் தொருவனை யழைத்துக் கொண்டோடும்போது
(தானாரோ)
தாயார் தன்பிள்ளை யென்பள் தந்தையென் மக்களென்பன்
மாயாவி நோதியான மனைவியென் கணவ னென்பள்

* இதில் ஓரடி குறைவாகவே பிரதிகடோறும் உள்ளன.



ஆயகுலத் துதித்தோ ரனைவரும் பார்த்திருக்க
ஓயாமல் வந்தொருவ னுருட்டிக் கொண்டோடும் போது
(தானாரோ)
வருந்தித் தேடினமுதல் வைத்த விடத்திருக்கத்
திருந்தி யமைத்தவீடு திறமாக வேயிருக்கப்
பொருந்தின பந்துக்கள் பொதுவிலே பார்த்திருக்கத்
துடர்ந்து துடர்ந்தேயெம தூதர்வந்தழைக்கும் போது
(தானாரோ)

---

௯௫. இராகம் - ஆரபி; தாளம் - ஆதி.

பல்லவி.

ஆணை நம்பினாலும்பெண் ணவளைநம்ப லாகாதென்
றறியாயோ மனமே.

அநுபல்லவி.

நேர்செய்து பிரட்டுவாள் நிலைமாறி யிருப்பாள்பின்
னெட்டேரக் கொடுமை செய்வாள்
பார்மீதி லவளைநாம் நம்பி யிருந்துகொண்ட
பாவம்பொறுக்கும் பீர்பொற் பாதந் துதிமனமே (ஆணை)

சரணங்கள்.

ஹவ்வா தனையேநம்பி ஆதம் அறிவழிந்தார்
அதுபோ லெத்தனைபேர்கள் தான்
செவ்வாய் முன்யுக மூன்றும் பெண்ணா லழிந்த தல்லாற்
சிலபேர் பெண்சொல்லாலே மாண்டார்
ஒவ்வாத பவபாச வினையைச் சுமந்தபெண்ணை
உறவானேன் றனையாண்ட குருதாள்துதி மனமே (ஆணை)

வனத்திற் றவசிருந்த விருடிபெண் சொல்லால் மாண்டார்
மகத்தான சித்தர்களு மாண்டார்
சினத்துக் கொண்டவீசுரன் பெண்ணால் மதிமயங்கித்
தேவர்களு மயங்கினார்
நினைத்துப் பாராமற் பாவஸ் திரியை நம்பினபிழை
நிமிஷத்திற் பொறுத்தாண்ட நபிதாள் துதிமனமே (ஆணை)

சொல்லவென்றால் மூன்று லோகமும்பெண் ணால்மாண்டு
சூரியனும் மயங்கினான்
அல்லாற் பூமியைச்சுற்றுஞ் சேடன்பெண் சொல்லினா
லறிவற்றுளம் மயங்கினான்
எல்லாரு மயங்கின தறிந்துஸ் திரியைநம்பும்
எளியேன் பிழைபொறுக்கும் நபிதாள் துதிமனமே (ஆணை)

பெண்ணாற் றேவர்க்கரச னிருடிசாபத்தி னாற்றேகம்
பெருகயோனி யாயிரமாய்
கண்ணாற் காணுமென்னத் தேவர்முறை யிடப்பின்
கண்ணாய்ச் சபித்ததும் பெண்ணாலே
முன்னோர் களிப்படி மயங்கின தறிந்துயான்
மோசம்போனே னெனையாண்ட நபிதாள் துதிமனமே (ஆணா)

---

௱௬. இராகம் - வசந்தா ; தாளம் - ஆதி.

பல்லவி.

கண்ணின் மணிபோல் நான் கருத்தால் வளர்த்தமகவுன்
கருத்தெல்லாம் வீணிலாக்கிக் கலங்குவதேன்.

அநுபல்லவி.

என்னினே னுன்னைப்போலிவ் வுலகிலரிதென் றெண்ணி
இருந்த விதமனம் பொருந்த விலையினம்
வருந்தி யறிவதைத் திருந்த வறிகிலேன் (கண்ணின்)

சரணங்கள்.

அண்ட புவனமு முண்டாக்கு முதலிறையோ
னமைத்த சுகத்தையுந்தந் தருளமுதூட்டி
தொண்டனென்றுனக்குச் சுருதி நாமமு மீந்து
சூட்சவெளியில் ஞானச் சுடரொளிகாட்டி
வண்டத்தன மறுத்து விருளை வெளியதாக்கி
வனத்தை யறுத்துநற் - கனத்தை யகத்தில்வைத்
தினத்தைப் பிடித்தரு ளுணர்ந்தி யறிகிலேன் (கண்ணின்)

முகந்தெரி யாதபாலி லுறைவிட்டுத் தயிராக்கி
முடுகக் கடைந்து வெண்ணெய் யெடுத்தருளாலே
அகங்கொண்டு திருவாநல் லக்கினி யாலுருக்கி
யானந்த மநந்த மென்றருள் தொந்தத்தாலே
செகந்தெரியுங் கண்ணாடி யொளிபோலிருந்த கல்பு
திருட்டி வருமன துருட்டி யுனையிருள்
வெருட்டிமுகவிழி மருட்டி யறிகிலேன் (கண்ணின்)

செல்லாத விடந்தனிற் செல்லாதே யென்றுன்னைச்
சேர்ந்திருந்தபேர் சொல்லத் தினமுங் கேளாமல்
நல்லதுணை யென்றீருபேரை யொன்றாக வைத்து
நடத்தினதுங் கேளாமல் நாயறிவாகி
எல்லையருளுமென்பீர் ஹல்லாஜ பொற்பதம்மறந்
தெப்படி யோமன தப்படி யானது
தப்பனா விட்டரு ளேப்பிடி மகனே (கண்ணின்)



௱௭. இராகம் - காம்போதி; அடதாளம்.

பல்லவி.

உன்னாற் படுந்துய ராருடன் சொல்லிநான்
உருகி மனந்தேறுவேன்.

அநுபல்லவி.

முன்னாளில் நீசெய்த அருமையும் பெருமையும்
மோசம தாக்கி வைத்தாய்
என்னாலே யுன்மன மிந்தப்படி யானா
லிதையாருடன் சொல்லி யிசைப்பேன் முறையிடுவேன் (என்)

சரணங்கள்.

அல்லும் பகலுஞ்சிந்தை யுலைமெழு காகியென்
னாசையா லுற வாடினேன்
சல்லாப மாயென்றன் மையற் கடல்போலாகித்
தயங்கியென் னுளம் வாடினேன்
தொல்லை விதியாலுன்னை நினைந்து மதனன்பாணந்
தொடமனம் மிக நாடினேன்
எல்லையில் நினைவாகி யிருந்ததுக்கு நீசெய்த
இதத்தப்பை யாருட னுரைப்பேன் முறையிடுவேன்
(என்னாற்)

விழியிரண்டு மூடியோர் விழியைத் திறந்துநின்ற
வெளிகாண நினை வாகினேன்
கழிவற் றனுபோகக் காட்சியி லுறவாகிக்
கருணையால் மன மாகினேன்
சுழியற்ற சுழியினுள் மருவிக் கலந்துவந்த
சுருதியால் நினை வாகினேன்
ஒளிமுச் சுடருமொன்று யிருந்ததுக்கு நீசெய்த
உறைப்பை யாருடன்சொல்லி யுரைப்பேன்முறையிடுவேன்
(என்னாற்)

கண்ணாடி யிற்கண்ட முகம்போ லெதிர்நின்று
கவனத் தொழில் பாராட்டுறாய்
முன்னான்கி லொன்றாய் முடிந்தரி ரூபமான
முழியா லெனை மருட்டுறாய்
எந்நாளு முனக்காக விருந்த சிநேகிதத்துக்
கென்னையே மருட்டுகிறாய்
பன்னாளும் ரக்ஷித்தாட் கொண்டபீர் ஹல்லாஜ
பாதமிருக்க நீசெய்ததை யாருடன் சொல்லுவேன்
(என்னாற்)

௲௮. இராகம் - எதுகுலகாம்போதி ; அடதாளம்.

பல்லவி.

என்னை யிகழாடி யுன்னாலே யுருகுதே
என்னாசைப் பெண்கொடியே.

அநுபல்லவி.

முன்னு ளொரு சொரூபமாகவே
முத்தில் வைத்தே யெடுத்த போதினில்
முழுதுமதினுட் கிருபை பெருகியே
அதிகவுருவமு மருவி யுருகியே
முனையில் நடுவுற யுருவி லடிமுடி
யுதிரும்வடி யதனி னடமிடு
முறையே வெளிமிசை பரவிமருவிட
முனையில் வருசுழி யதனை வருடியே (என்னை)

சரணங்கள்.

நினைக்கும் பொழுதி லெல்லா முருகியுருகிமையல்
நீராக ஆறோடுதே
மனக்கண்திறந்துன்னைப்பார்க்கும்பொழுதிலெல்லா
மாமோக சுகமாகுதே
முனைக்கண் மலர்ந்து நோக்கி யிதழமு துண்டுசுக
மோகமாகிய போக - மீறுது
முத்திரைப் பொருள் வைத்த கடல்மிசை
முழுகிப்பவமது கழுவியடியவன்
மூகமுமுனதுட முகமுங்குருவருள்
முடுகிக்கலரவே கிருபை பெருகவே
முழுதுமதிசயம் வரவும்வருடியே (என்னை)

உடலுமுயிரு மெட்டா திடையில்ரண் டையுமாட்டும்
உத்தம குணரூபியே
சுடர்விரிந் துயிரண்டு மொன்றான சம்ப்ரதாய
சூட்சாதி சுகரூபியே
மடலெடுத் ததனிடை நடமிட்டா னந்தமான
மாயமோகன மாயமாய் - நடு
மத்தி பத்திலு ரூத்த ரித்திட
வளைவு மொருகுறை வளைவு மதினிடை
மருவு சுழியதில் நடுவி லொருமுனை
மதன சுகரதி யிசைவு கொடுவதில்
மனைவு கொடுவரு சரண முருகிய
வனகயை யடியவன் மனதுள் வருடியே (என்னை) (நின்)



பிறக்குமுத லாகவென்னை ரட்சித் தாண்டுகொண்ட
பீரோயென் சாகிபுவே
நிறைக்கு முடலெடுத்தே ஆட்டிபருளை யுள்ளி
னிறைக்குமென் சாகிபுவே
உறைக்கும் பொருளே மனந்தனிலேயிருந்த வர்க்கே
உண்மைகூறிய வெண்மையாகவே
ஊட்டியே யருள் காட்டியே வரும்
உருவசொருபமு மருவிலுருவமும்
ஒளிவி லொழுகிய வொளிவு மடியவன்
உருகியருளுமல் லாஜென்சாகிபே
உமது பதமல ரென்று நாஹினி
லுறைய மதிசயம் பெருக நாளுமே
ஒளிரு முமதடி பழகி நாளுமே
யுயுதி தருமருள் பீரோவருடியே (என்னை)

---

௲௯. இராகம் - சாவேரி ; தாளம் - ஆதி.

பல்லவி.

என்னமோ வுருகுதுயிர் - இந்த்ர ரதிமோகம்.

அநுபல்லவி.

முன்னைநாள் கூரிருளில் மூன்று மொன்ற தாயிருந்த
தின்னமோ வுடலுயிருந் தினமும் நினைந்து நினைந் (தென்ன)

சரணங்கள்.

மாமோகி வெகுகாமி மாமதன சுகவாமி
தேனுருகிக் கனிவான சித்திர மதரூபி
வான் வெளியில் நடம்புரிந்து மவுனமதுள்ளோடிவரு
ஊனிஞெளி பளபளென வுறும்ரதியை நினைந்துநினைந்(தென்ன)

முடிவிலொரு சுழியாகி முப்பாழப்பாழ் மேவி
அடிமுடியி னடுவாகி யாசையனல் தாவி
கடிமலர்ப்பொன் நிறமேவுங் கருணை சுகவழகொளிரு
வடிவொப்பினி லடங்காத மாரூபிதனை நினைந்துநினைந் (தென்ன)

ஆசைபெருங் கடலாகி யதில்வளர்ந்த் புரியாகி
ஓசைமணி யினாவாகி யுனை நினைந்துருகி பேகி
நேசமதி மயலாகி நினைவுமுறவாய் மேவி
காசமறவருளுமென் பீர்ஹல்லாஜ—பதம்நினைந்துநினைந் (தென்ன

---

௪௦. இராகம் - காம்போதி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

அன்னமே யென்றுயரந் தானே - சொல்லுகிறேன்கேள்
ஆசைபெருகுது மின்னே.

அநுபல்லவி.

என்னை நினைந்துகொண் டிருந்ததுக் காகவே
உன்னை நினைந்துட னுருகி மயல்பெருகி
யுள்ளக் கடலலை மீறி யேவெகு
துள்ளிச் சொரியுது தெள்ளு ரதிமின்னே (அன்னமே)

சரணங்கள்.

உன்னை நினைந்து வருடி - சம்மதியாயுன்
னுள்ளங் கனிந்ததை நாடி
என்னை நினைந்து வருடி - மருவுந்தொழி
லிங்கேவா வென்று வருடி
முன்னும் பின்னுமறியா திடத்தேயிப்படிச் சொல்லி
மூன்றும்ரண்டு மொன்றாகத் தூங்கவே
நானுமதுக்குன் மருவு ரதிமின்னே (அன்னமே)

கங்குல் விடிந்த பின்னிலே - ஞாயிறுதித்துக்
கருணைக் கதிர் விளங்கியே
தங்குநிசி பிறந்தவெண் - டாளவாசல்
தன்னிற் காத்தைக் காட்டியே
கொங்கை யமிர்தப் பெண்ணே கூறியேயுரைத்ததும்
இங்கு சொருபப் பிராண நாயகி
பொங்கும் பரிமளத் திங்கள் ரதிமின்னே (அன்னமே)

ஆழிக் கெழுந்த ஆழியில் - வலம்புரித்தரள
மாகமுத் தொளி யாகியே
மவுஷூக் குடனி ஷூக்கதாய்த் - தெளிந்து
வளர்சுத்த வெளி யாகியே
பாசம தறுபாச பரவொளி ஹாமீமே
நேசமதி லுறு மாசைபெருகியே
நேசமிகுக மருவுரதிமின்னே (அன்னமே)

---

௪௧. இராகம் - குறிஞ்சி; ஏகதாளம்.

பல்லவி.

மனந்தினந்தினஞ் சகிக்கு தில்லையடி - அடியே பிள்ளாய் பிள்ளாய்
மனந் தினந்தினஞ் சகிக்கு தில்லையடி.



அநுபல்லவி.

அனைத்தும் படைத்துரு வாகு முன்பில்
அகத்தில் தாளவடி வாயிருந்து
நினைக்கு மிறைமுன் ஸுஜூதிடும்படி
நிலைக்கும் ஹாமீ முஹம்மதருள் கண்டு (மனம்)

சரணங்கள்.

ஆசையுறையுங் கடலி லிருந்தவர் - திரமாய் வலம்புரி
யதுக்குளிருந்து தொனிகொண்ட திருந்தவர்
நேசக்கிருபை மனக்கண் டெளிர்ந்தவர் - கலிமாவையுளத்தில்
நினைக்கு மடிமை தனக்கு ளுறைந்தவர்
காலுந்தலையுங் கடந்தரூப
கருணைமுத்தொளி வளர்ந்த சொரூப
நாலுந்திரண்டு மெழுந்த ரூப
நடனப்பதத்தி னருளைத் திறந்து (மனம்)

வானின் வெளியில் மீமா யுதித்தவர் - ஜிபுரீல் கண்காண
மகிழ்ந்து சிரசி லுடுவைப் பதித்தவர்
தானுந்தவமுந் தெளிந்து துதித்தவர் - இறையோனைக்காண
சகலதவஹ் தருளை விதித்தவர்
மானிலீங்கித நானமுங்கமழ்
தேனிலுங்கன ஞானமெனுந்திரு
மாலெழுந்ததி லேசிறந்திடு
காலுறுந்துணை மால்திறந்தருள் (மனம்)

ஏழையடிமை தனையாட் கொண்டதும் - என்மனமுறைத்திட
வெகுக்குக் குருவரு யருளை விண்டதும்
தாளைப்பணிந்தே அடிமை கண்டதும் - என்றனக்குள்வந்து
சகலகிருபை யருளை விண்டதும்
ஆளவந்திரு தாளுகந்திடும்
நாளுமன்புசெய் வாழுமென்குரு
ஹாமீம்முத்தொளி ஹாமீமுள்தர
ஹாமீமுஹம்மது கருணைசிறந்து (மனம்)

---

௪௨. இராகம் - தன்யாசி; தாளம் - ஆதி.

பல்லவி.

சொல்லடி பெண்ணே சொல்லாயோ பெண்ணே
தொன்மை மயவெளி தன்மயம் பெண்ணே.

அநுபல்லவி.

அல்லா பிராப்பக லற்ற விடத்தே
ஆவென் றலறியே ஊவென் றெழுந்து
பல்லுயிரு மவன் தானு யெழுந்து
பரம முடிந்திடு நிர்மயமா மென்று (சொல்லடி.)

சரணங்கள்.

ஆசைக் கடலில் மோதலை யடித்து
அதினல் வலம்புரி அஹமதாய் வளர்ந்து
ஓசையிடுமணி புலகெலாம் நிறைந்து
ஒருபொரு ளானதைப் பரவெளி யாகிப்
பாசைபலதும் புலதும் பல்முக மாகிப்
பார்த்தாலு மேயொன்றுக்கொன்று மொவ் வாமலே
நேசந்தனில் வந்து நின்று நிரப்பமாய்
நின்மல மானதைத் தன்மயமா மென்றும் (சொல்)

குன்னென் றெழுந்து தன்வடி வாகிப்
கூடுமெது தானே முச்சுட ராகிப்
பன்னும் பலபல வுயிர்களு மாகிப்
பாழ்வெளிக் கப்பால் சுழிமுனை யாகி
மின்னென் றெழுந்த வெளிச்சமு மாகி
மீறுமவ் வெளிதானே மன்னுள் ளொடுங்கி
பொன்னென் றதிற்பல பணியும தாகி
பேருமொன்றுகினேன் தானஹு தாமென்றும் (சொல்)

அந்த ஹாமீம்தான் ஹையுல் கையூமாய்
ஆகவுயிராய் நிலை நின்றதுமந்த
அந்த ஹாமீம்தான் ஹமீதும் அலீமாய்
அடங்கலையுங் காத்திருந்து மிருந்து
அந்த ஹாமீம்தான் ஹன்னனு மன்னனு
யாசைக் கிருபையாய் உபகாரஞ் செய்தது
அந்த ஹாமீம்தான் அஹ்மது முஹம்மது
ஆனகுருநந்தி தானுமதா மென்றும் (சொல்)

---

௪௩. இராகம் - தோடி; தாளம் - ஆதி.

பல்லவி.

மருவிக் கலந்திருந்த சுகமனு பவிக்கவென்
மனதுமுருகி மையல் பெருகுதடி.



அநுபல்லவி.

அருபரூபமா யிருக்கும் பொழுதன்றே
அணைந்து மருவிநின்ற வலம்புரிக்குள்
உருகியுருகிமயல் விளைத்த தொனியைநாடி
யுள்ளம்வெள்ளமா யுருகி வருகுதடி (மருவி)

சரணங்கள்.

ஓரெழுத் தாயிருந்து மவுனப் பொருளானது
றாஹில் மீமென்ன வுரைக்குதடி
பேரெழுத்துக் குள்ளே சுழித்துச் சுழித்துத்தினம்
பேசும்பேசாது நடம் புரியுதடி
பாரெழுத்திலே யென்றன் விழியாற் றெரிசித்து
பதவியடைய வென்மனம் நினை வாகுதடி
சீரெழுத்தா யமுதக் கலசம் நிரம்பிநின்ற
தெள்ளமுதுண்டுமனந் தெளியவருளென்பீரோ (மருவி)

அஞ்சினடு வில்விளைந்த அசைவைதனி
லாறினில் ரண்டங்குல மா யுடர்ந்தோடி
மிஞ்சியெட்டு முள்ளாகி நாலுங்கழிந்திட் டந்தா
விரைவாய் விரைந்து மின்ன மதனைத்தேடி
பிஞ்செழுத்தி லிருந்து பூதமஞ்சு மொன்றாகிப்
பின்னு மனைந்துருவாய் வரும்நாடி
நஞ்செழுத்துக் கெல்லாங் குருவாய் முடிந்தநாதம்
நாடு சுழியையுள்ளில் நாடியருளென்பீரோ (மருவி)

விண்ணிற் கலந்திருந்து தீபச் சுடராய்நின்று
வெளிக்குள் வெளியொளியாய் வருஞ்சோதி
உன்னும் வெளிப்பாழ் வெளியொளிப் பாழும்
உன்னிக் கடந்து நின்றோர்க் கருள்சோதி
மன்னுந் தன்னருள்கூடிக் குழைத்துக்கூ றானசூட்சம்
மருவிக் காணவேய்குள் தருஞ்சோதி
கண்ணின் மணியேமுத்தே கருணையெனக் குள்வந்து
கலந்தானந்தமாய் நின்ற ஹல்லாஜென்பீரோ (மருவி)

---

௪௪. இராகம் - ஆனந்தபைரவி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

அஞ்சித ரஞ்சித கொஞ்சிதங் கண்டநிந் தானந்தமாகுதடி.

அநுபல்லவி.

மிஞ்சியசோதி வெளிக்குள் விளங்கிடும்
வேதாகமங்களை யாராய்ந் தடக்கிடும்
பிஞ்செழுத்துஞ்சர நஞ்செழுத் தோதிடும்
பிரமமாய்முடிந்த் சுழியுறு மானந்த (அஞ்சித)

சரணங்கள்.

பொல்லாப் புலனும் பொறியுங் கரணமும்
  பொன்றிடும் வேதம் முடிந்திடந் தன்னிலே
கல்லா தறிவினைக் கற்றரு ளானந்தக்
  காட்சி யமுதுண்டு சூட்சத்தை யுன்னியே
சொல்லான் முடிந்திடுஞ் சொல்லைக் கடந்திடுந்
  தொன்மை வெளியொளி தன்மய மாகவே
எல்லாம் பொழுது நடனம் புரிந்திடு
  மெவ்வையுந் தானென்றே ஆடிடு மானந்த (அஞ்சித)

சந்திர சூரியனுன கலையையுந்
  தானே கடந்த பிரமத்தைத் தாண்டியே
அந்தரமாகவே யாராய்ந்த தனுவெல்லாம்
  அடக்கும் விபர வறிவையுந் தாண்டியே
எந்தையே யென்ற னுயிருற வாகவே
  யெங்கும் பரவறி வானதிற் பூண்டுனை
தந்த குருவை யுணரும்படி யருள்
  தந்த குருவின் சரண மானந்த (அஞ்சித)

அந்த ஹாமீமாகி யந்தயாஸீனுகி
  யுந்தா ஹாவென் றடங்கலு மாகியே
அந்தவலியுன்னு பூசில்மூ மினத்தி யென்
  ருகவே மேல்வெளிக் கப்பா லுருகியே
அந்தமவுலாஹா வென்ற பரஞ் சோதி
  யானதை யந்த வறிவோ டுணர்த்தியே
அந்தவலம்புரி மீதிற் ருெனி கொளும்
  அங்கெழும் ஹாமீ முஹம்மது ஆனந்த (அஞ்சித)

---

௪௫. இராகம் - கல்யாணி; தாளம் - ஆதி.

பல்லவி.

ஆனந்த மாம் பெண்ணே - சுழுத்தி
  யறிவி லிருந்தரு ளானந்தமாகிய
ஆனந்த மாம் பெண்ணே.

அநுபல்லவி.

தானுமே நானுமல் லாத வனத்திலே
  தானு யிருந்து சகலது மாகியே
ஊனுக்கு ஞானுகி யுள்வடி வாகி
  யுண்மை வெளியொளி யோங்கும் ஹாமீமென் (ஞானந்த)



சரணங்கள்.

உண்மை மஞேலைய மாகவே நின்றரு
  ளோங்கும் பரமா யொளிவை யறிவாக்கி
செம்மை திறந்தொளிர் நீயுமநா னுமொன்ருய்ச்
  சேர்ந்து பரவறி வாகும் ஹாமீமென் (ஞானந்த)

தற்பதந் தொம்பதம் ரண்டுமொன் ருகியே
  தாங்கு மசிபதத் தானந்த சோதியே
அற்புத மாக வதிலொன்று முன்னியே
  யானவ சோசர மாகும் ஹாமீமென் (ஞானந்த)

தாமீமே தாஸீனே தாஹாவே தானுகி
  தாங்குஞ் சுருதி முடிந்திடத் தேமேவி
ஹாமீமதாகிய காரணச் சோதியைக்
  காட்டி மருளருள் ஹாமீமே ஹாமீமென் (ஞானந்த)

---

௪௬. இராகம் - தன்யாசி ; தாளம் - ஆதி.

பல்லவி.

கருகியென் னுள்ளமெல்லாங் காய்ந்தென் பீர்பாதங்
கண்ணிற்கண் டானந்தம் ஹக்கடிமானே.

அநுபல்லவி.

உருகியென் னுள்ளம் பணிந்து வந்தே
  ஊன்றியே மனம் பரிந்து குருவருட்
  பூண்டு மிருளறிந்து ஹக்கடிமானே (கருகி)

சரணங்கள்.

ஒருநாளைக் கொருநாளென் னுள்ளமெல் லாம் வாடி
  யுன்னுசைக் கென்னுவி யுடனுற வாடி
திருவாயு புரிகின்ற மணியொலி தேடித்
  தினமுந் தினமுமே மனமிக நாடி
    சிந்தை விழியின் மலர்ந்து - மோரெழுத்தை
    நந்தி யனலைக் கலந்து - சுழிமுனை
      நாட்டிக் கொண்டேன் - அனல்
      மூட்டிக் கொண்டேன் - முனை
      தீட்டிக் கொண்டேன் - கலை
      வாட்டிக் கொண்டேன் - சுகம்
  வந்து தெளிந்தருள் சிந்தைகுளிர்ந்தபின்
  அந்தர மானந்தம் ஹக்கடிமானே (கருகி)

உற்றவுன் ஞக்கதை யோர்குத் தினிற் சேர்த்து
ஒளிர்நெஞ்சைக் கால்வாயு வோடுருக் கியே சேர்த்து
பத்தொடி ரண்டில் நாலையுமுளிற் சேர்த்து
பழம் பொருள் ஹல்லாஜு பாதமே பார்த்து
பறந்தோ ரொழுத்தினி லேங்கிக் - காலே
சிறந்தோ ரொழுத்தினிற் றூங்கித் - தூங்கிக்கொண்டு
பழு பழுத் தழுந்தி - மிக
விழி விழித் தழுந்தி - உயர்
சுழி சுழித் தழுந்தி - தினந்
தெளிதெளித் தெழுந்து
பல்லாயிரமுடி ஹல்லாஜெனும்படி
சொல்லானந்தம் ஹக்கடிமானே (கருதி)

---

௪௭. இராகம் - சங்கராபரணம்; தாளம் - ஆதி.

பல்லவி.

அன்னமே யெனக் கன்புக் கன்பாகி - யென்னை
ஆக்கிவைத் தாளும்நபி காண் - குருவாகியென்னை
ஆக்கிவைத் தாளும்நபி காண்.

அநுபல்லவி.

முன்னமேயிந்த ரூபாரூபமதாகு முதலங்குமுழுமுத லாகவிருந்து
சொன்னமா மதில்வெளி யொளியுங் கலந்து
சுடர்விரி பொழுதே நடமிடு மவையே
தொந்தத் தவதிமி சுடருயி ராகும் (அன்னமே)

சரணங்கள்.

ஆசைதானெழுந் தலறுமாழி மீதினி லங்கொரு புரியிடமாம்
நேசமாந்தரள மதிர்த்தொனி யிடும்இன் நேயசொருபம் விளைந்து
பாசந்தானறு கிருபையா னந்தசோதி
பதமணி சிரமே பதமச் சிரமே
பாவத் துயரறு பரவெளி நடனம் (அன்னமே)

சருவசந்தேகமறச் சகலவினையுமறத் தானுண்டுகொண்ட வேதராம்
பருவதம்போற்றுயரம் பறந்தோடும் படிக்கும் பதந்தரு நாதபோதராம்
கிருபை பெருகுங்கடற் கிருபை யருள்தருநல்
கிருபையி னுறவே கிருபையி னிறைவே
கிண்கிணி சங்கித மங்குற மருளே (அன்னமே)

அந்தஹாமீமாமந்த யாஸீனந்ததாஹா வாயுயிர்யாவு மாகுமுதலே
அவ்வுருவெளியொளியால் அந்தமவுலாஹாவென் றங்கங் கருளதாகி



அந்தவலி யுன்னுபூவில் மூமினத்தி யாகவே
அருள்தரு நபியே யருளுறு நபியே
அந்தப் பதநடன திந்திந் திகுவென (அன்னமே)

---

௪௮. இராகம் - சுருட்டி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

உன்னைக்கண் டென்னுவி துடிக்குதே - என்றன்
உள்ளக் கடலிலலை யடிக்குதே.

அநுபல்லவி.

முன்னே சிறுப்பமாக விருக்கையில் - கட்டி
முத்தமிட்டனு போகம் பெருக்கையில்
என்னைக்கொண் டென்னைக்கொள்ள இயலுமை குறிக்கையில்
பின்னும் வந்து வந்து போகையிற்
பெருக சுகரதி மருவ ரதிமின்னே (உன்னை)

சரணங்கள்.

என்னை மருவ நெஞ்சில் நினைந்தாயே - நினைந்
தேழை மனதாற் சற்றே பிரிந்தாயே
கன்னற் கரும்பே பின்னும் புனைந்தாயே - என்னைக்
கசடற் றனுபவிக்க மணந்தாயே
சொன்ன நிறமயிலே சுடர்மின்போலிடையாளே
சொருப சொருபமே மருவு பருவமே
யுருகு திதுவேளை வரவும் ரதிமின்னே (உன்னை)

அகண்ட பரி பூரணச் செம்மையே - பொரு
ளானந்தந் தந்தெனை மேவுந் தன்மையே
செகன்றனை சுத்தத்தைத் தெரியான் - பிரமச்
செயலோ டிறவாநியன் தெரியான்
புகன்ற படியருளும் பொருள்தரும் ஹாமீமே
பொருந்து மன்மத நிறைய சலமறு
பெருகு திதுவேளை வரவும் ரதிமின்னே (உன்னை)

தன்னை பின்னை யெனவு முளைத்தாயே - நிரம்ப
சளமாய மயக்கத்தைப் பறித்தாயே
உள்ளபடி சொல்லவுந் தடுத்தாயே - காயம்
உயிரை மதனன்கூட்டில் விடுத்தாயே
எள்ளளவுந் தவறு தென்னை மருவுவாயே
இரத சுகுர்தமே யுருகு துயரற
சரத மிதுவேளை வரவும் ரதிமின்னே (உன்னை)

௪௯. இராகம் - தேசிகத்தோடி ; தாளம் - ஆதி

ப ல் ல வி.

பாலனைப்போல் வந்தடிமை பசிதீர்க்குந்தாயே - அம்மம்மா
பரமகுரு ஹாமீமே பழம்பொருள் தாவலீனே.

அநுபல்லவி.

வாலை வயதாம்பருவ சொருபவெளித் தாயே - எங்கள்
மஹமூது முஹம்மதுவென் வறுமை தீர்த்தாயே (பாலனை)

சரணங்கள்.

திங்களொடு ஞாயிறினைச் சிரசி லணிந்தாயே
ஜிபுரீல்கண் ணேக்கூச்சென்னி சிறந்தொ ளிருந்தாயே
அங்கமதில் நவமணியொன் பதையும் பதிந்தாயே
அடியார்க்குன் செவ்வாயித ழமுத மளித்தாயே (பாலனை)

அன்புதனில் விழிக்கிருபை தந்தருளுங் கனியே
அங்கமதில் தங்கிநிறைந் தெங்குமொளிர் மணியே
முன்பிலொரு கடலில்வலம் புரிக்குள்ளுறை மணியே
மூதுரைவே தாந்தவுரை முழுமுதலுட் டொனியே (பாலனை)

வியாழனழ கொளிசிறக்கும் வெண்மையொடு பத்தே
வெள்ளியிலு மதிகவொளி வெண்டரள முத்தே
தயாபர சொரூபவெளி தாமீம் ஹாமீம் வித்தே
சரணபத மருளுளத்தில் சகலகலை யுற்றே (பாலனை)

---

௫௰. இராகம் - தோடி; தாளம் - ஆதி.

ப ல் ல வி.

அம்மாநான் பட்டதுயரம் ஆருடன் சொல்லி யாறுவேன்.

அநுபல்லவி.

செம்மையா யிருபேருந் திருந்தக் கலவிலீலை
வெண்மையாய்ப் பொருந்தின விதமோ சகிக்குதில்லை (அம்மா)

சரணங்கள்.

விழிக்கண்ணு லெனை
விந்தை மதனைப் மருட்டி - கைவசமாக்கி
குளிர்ந்த தன்யத்தைக் பூட்டி
குறியுங் குணத்தையும் காட்டி - கொவ்வையிதழுங்
நாட்டி
தெளிந்திரு பேருங்கூடி தினமுமதனசுக
மழுந்தின மணிமார்போ டணைந்தசுகத்தை நினைந் (தம்மா)



முகத்தை முகத்தில் வைத்ததும் - முத்தமிட்டாவி
முலையைச் சுவைத்துக் கொண்டதும்
அகத்தை யகத்துள் வைத்ததும் - ஆணையிட்டவள்
அணைத்து மருவிக் கொண்டதும்
செகத்தி லுனைப்போலெனக்கு தேடக் கிடையாதென்று
மகத்துவம் போலேவந்த மாமோக வல்லிமையல் (அம்மா)

காலைக் காலோடு பின்னியே - கையாரக்கட்டிக்
கரிகர லீலை பண்ணியே
சால வுடலைக் குன்னியே - சையோகவித்தை
சகல தொழிலும் பண்ணியே
ஞாலந் தனிலேயுண்மை நாதர்ஹல் லாஜைப்புகழும்
வாலையென் றெனக்கவள் வருத்தின சுகத்தைநினைந் (தம்மா)

---

௫௧. இராகம் - தோடி ; தாளம் - ஆதி.

ப ல் ல வி.

ஆசைதானெழு கடற்போற் பெருகுது
ஆற்றப்போமோ அம்மம்மா.

அநுபல்லவி.

நேசமாக வுங்கள் பாதந்தா னனுதினம்
நினைந்து நினைந்துமையல் பொருந்தின விதந்தானே (ஆசை)

சரணங்கள்.

முந்தநாளிருளில் மூடியிருந்த தூக்கம் - அதனில்
மூதறிவா யிறையோன் தெளிவர்கிய
முத்தலக் குத்தம சித்திரமாகவே [முந்த]
முனைசுழி யணுவினில் வெளிமிசை பரவிய
முழுமுத லெனவொரு பழுதற நிறையும்நல் [முந்த]
மூன்று தீபவொளி வாயிருந்த சுகமதனில்
சிந்தையால் மருவிநோக்கு ஞானக்கண் ணதனில் - நன்றாய்
திருடித் திருடியிறை தெளிந்த விதத்தை நினைந் (தாசை)

ஆவென் றுஷிக்கெழுந் தலறும் ஆழிதனில் - அன்று
அருபரூபம தாகிய வடிவுகொண்
டத்தநுகத்தொரு முத்து வருத்திட [ஆவென்]
அகில புவனமதி லருள்கொடு அமைதர
அடிமுடி நடுவொரு தரளமதாகிய [ஆவென்]
அன்புகொண்டொரு வலம்புரியானது கண்டு
ஊவென்றே யெழுந்துருண்டு திரண்டமணி யன்று - நன்றாய்
உருகி யுருகியதி ரொலியை நினைந்துநினைந் (தாசை)

ஹாமீமாகவருங் கருணைதனிலே யருட் - கலந்து
காரணமாகிய பூரணக் கதிரொளி
கண்டுமகிழ்ந்து முருண்டு திரண்டெழு [ஹாமீ]
கனகலை ரூபமோர் தினகர வடிவுமாய்க்
கண்கள் குளிர்ந்து தெளிந்து வழுந்திய [ஹாமீ]
காமமோகசுக பாகமாகவிருந் தலர்ந்து
நேமியாகவிரு சொரூபநேர்மைகொடு கலந்து - அதில்
நிறைந்த பூரணர் ஹல்லாஜூ பொற்பாதம் நினைக் (தாசை)

௩௨. இராகம் - நாதநாமக்கிரியை; தாளம் - ஆதி.

பல்லவி.

மருவினவாசை யினியென் செய்வேனம்மா.

அநுபல்லவி.

உருகியடி முடியற்றி பெருகு ரசவாதமது
உண்மைதரு மெய்ஞ்ஞானத் தோடிசைந்து கூடி (மருவி)

சரணங்கள்.

காரமுடன் சாரமிரண்டுங் கால்மாறிப்பிணைந்த பின்பு
கண்டதலையான தொழிலால்
சேணிய நலமும்வந்து வேதைதிறமான தொழில்
சேர்ந்த மவுனத்தோடு வாழ்ந்திசைந்து கூடி (மருவி)

இந்தவகைதனை யெனக்கு நந்திசொன்னவுடனே தான்
ஏகசுகமதி போகமாகி
சிந்தைகொண்ட வெனைமறந்து நோக்கியகண் ணடிதனிற்
சேர்ந்து வெளிவாயுகட ரோர்ந்திசைந்து கூடி (மருவி)

சோதியாந் துரியமுடன் சொல்லிலடங்காத துரிசும்
தொந்தமிமெயித்துக் காதிருவும்
காதிலே திறந்துரைத்து மனக் கண்ணாலே யான்பார்க்க
ஹாமீமுஹம்மது திருக்கழ லிசைந்து கூடி (மருவி)

௩௩. இராகம் - தோடி; தாளம் - ஆதி.

பல்லவி.

ஆசைக் கடல்பெருகி யுள்ளன்பு மீறுதென்னை
யாண்டுகொண் டாளும்பிரே.

அநுபல்லவி.

நேச முமதுபத மீதிலுற வாகியென்
நெஞ்சனல் மெழு காகுதே
வாசப் பிரகாசமுற்றுச் சோதிச் சொரூபங்காண
மருவிமருவி கலந் தனுபவிக்க (ஆசை)



சரணங்கள்.

இந்துங் கதிருடுவும் அந்த வொளியில்வந்த
வின்ப சுகத்தை நாடுதே
முந்த விருள்நுகத்தில் நந்தி சொரூபமான
முறையையுள் ளன்பு தேடுதே
அந்தஹறுபுதனை சொந்தமாகமனதி
லருள்விரருள்வீர் மருவியனுபவிக்க (ஆசைக்கடல்)

முத்தே வலம்புரிக்குள் வைத்த தொனியைத்தேடி
மோக மிக வாகுதே
அற்றுப் பிரிந்ததனை யொத்துப் புணரமன
தாசை மிக வாகுதே
சித்திதரும் ஹல்லாஜூ பாதந் துதிக்கமயல்
தேடித் தேடியே கூடி யனுபவிக்க (ஆசைக்கடல்)

நாவி லெழுந்தவொலி மேவுஞ் சுருதிதனில்
நாதப் பிரகாச வெளியில்
ஆவென் றெழுந்தலிபு ஹூவென் றிரைந்துநின்ற
ஆழிக் கெனும் கடலில்
ஆவென் றெழுஞ்சொரூப ரூபப் பிரகாசங்காண
ஹாமீம் ஹாமீம் ஹாமீ முஹம்மதேயென் (ஆசைக்கடல்)

௩௪. இராகம் - தோடி; தாளம் - ஆதி.

பல்லவி.

ஆசை பெருகுதென் பீர்பாதம் - அடிமை கண்காண
ஆசை பெருகுதென் பீர்பாதம்.

அநுபல்லவி.

ஓசை யெங்கடலி லுண்மை வலம்புரிக்குள்
ளுருகிய தாளம தகிற்றொளி யிமைதில்
அடிமையை மனமிசை நினைவுறமருவிட
ஆகத்தினை யேகுழி மீதினில்
மோகத்துற மாமய லாகியென் (ஆசை)

சரணங்கள்.

வாசி யெழுந்திசைந்து வன்மையா னந்தமாகி
மருவும் அனல்வெளியும் வந்துற வாயிருந்து
தேசிபோ லாடியெங்குஞ் செம்மைசிங் கென்றுள்ளாகி
திருநட னம்புரிந்து தெளிவதிற் கொண் டிசைந்து
ஊசி நுதியிலெழுந் தூன்றியகண்ட மெல்லாம்

ஒருசுழி யெழுமொரு சுழிதனில் நடுவுற
வருசுழி மனமிசை வெளிசுழி மருவிட

வாமப்பிர காச மூலாவிய
நாமத்திரு வோடருள் மேவிய
சோமக்கதிர் போலலே தாவிய
நேமக்கரு ணாகர ஆவியென் (ஞசை)

சுருதி முடிந்திடத்தில் தூய்மைசா யுச்யமாகி
தொந்தந் தொந்தமென் றூடுநு சுகமோக நிதமாகி
பருதி திங்களிரண்டும் பங்கயங் குருவாகி
பரம அநுக்கிரகப் பாங்கண்ணி நிறைவாகி
கருதிடு முளமீதிற் கர்மியமற் றுருவாகி
கழலழ் கொழுகிடும் பழன களிசுக
தளதள வெனவெளி யுளமிசை மருவிடத்

தாகித்தடி யேன்மனம் வாடுது
கூவிக்குர லோடிசை பாடுது
மேவித்திரு நாதமே நாடுது
ஆவிக்குரு பாதமே தேடுதென் (ஞசை)

ஜிபுரீல் காத்தாலேந்தி செகதல மெல்லாஞ் சுற்றி
திருமுன்வைக் கும்போது திருமன மகிழ் பத்தி
அவரீத மாய்றகு மானந்தஹா மீமென் றேத்தி
யகமகிழவே அந்த யாவீனென்றவன் முத்தி
சுகமீத மாயந்த தாஹாவந்த வலி யுன்னு
பூசில் மூமினத்தி யென்றிரு காத்தாலணைத்தே
அகமகிழவேஅந்த மவுலாஹா வென்று கண்ணில்

அதிசய ஜெயமுட னிருவிழி ஜெயமுறும்
அதிசய ஹாமீம் முஹம்மது கழலெனுள்

ஆஷிக்குட னேகழல் காணவென்
ஆஷிக்குட னேயருள் பூணவென்
ஆஷிக்குட னேமஃ ஷூக்கருள்
ஆஷிக்கிஷ்க் காகியே பெருகுதென் (ஞசை)

---

௫௫. இராகம் - எதுகுலகாம்போதி; தாளம் - ஆதி.

பல்லவி.

அணைத்தெடுத் ததுபோலே யடிமை தனைரட்சித்தே
ஆளவேணு மையா.



அநுபல்லவி.

நினைத்த விடத்திலுந்தான் நினையா விடத்திலுந்தான்
அணைத்த விடத்திலுநின் றுளுமென் சாகிபே
அடிமை தனையுமது நடன மருள்புரியுந்
திடமுட னருள்தரும் அடிமுடி நடுவே (அணை)

சரணங்கள்.

முன்னுளி லேநுகத்தா யிருந்தது நீரோ
முதலா மலிபுவடி வானது நீரோ
என்னங்க மெங்குநிறைந் திசைந்தருள் வோரோ
எளியேன் மனநினைவிலுங் கனவிலும் நீரோ
ஏக மாங்குரு பாதமே கதியென்
றூக மகிழமிக வாசை பெருகத்தானே (அணை)

வாசிதனிற் பன்னி ரண்டானதில் நான்காய்
மாசற்று நின்றபொரு ளானதும் நான்காய்
தேசி நடனமுள்ளோர் பார்வையும் நான்காய்
ஜெகதல மெல்லாம்படைத் தாண்டதும் நான்காய்
அலிபெனு மதிகநற் பொருளருள் சோதி
அயினெனு வடிவென மருவியெவையு மாண்டாய் (அணை)

இசையெனு மாஷிக்காய்க் கடலது பெருகி
யின்ப மஃஷூக்கா யருளது முருகி
நேசம் இஷ்க்காய்வலம் புரியது பெருகி
நினைத்துட் டரளமாய்த் தொனியோசை பெருகி
நேமி யானதிலே நேமிமலர் புகட்டி
ஆமீ மெனவளரும் ஹாமீ முஹம்மதுவே (அணை)

---

௫௬. இராகம் - தேசிகதோடி; தாளம் - ஆதி.

பல்லவி.

மையல்பெருகு தென்னையா - நின்பாதங்காண
மனது முருகுது மெய்யா.

அநுபல்லவி.

மையல் பெருகு தென்றன் மனதி லுமதருளே
ஐயா தினந்துதிக்க வாசை பெருகுதையா
செய்யிதே யென்செய்கே செய்கு ஹல்லாஜே
வையமுழுது முன்மை வழுத்து மாண்டவரோ யென்
மனமு முருகுது வாஞ்சை பெருகுது
மடலும் விரியுது கடல்போல் வருகுது (மையல்)

சரணங்கள்.

உடலுமுயிரு மொன்று யுருகுதே யென்செய்வேன்
கடுவில்விளைந்ததென்னவே - அடியேனுட்
கருணைபெருகுதுன்னவே
படியிற்பிறந்த பாலனு - னின்பாதங் காணப்
பரிசை யருளும் வேதரோ - என்சாகிபே
பரிசை யருளும் வேதரோ - கருணையருளிலுற
ஆடுதேமனந் தேடுதே தினம்
வாடுதேயயல் கூடுதே யினம் (மையல்)

நாசிநுனி நடுவில் நாதனுறைந்திருந்த
வாசிவருகுதே ஐயா - அதின்பொருளை
வாசிக்கத் தாருமே மெய்யா
ஆஷிக்குடனும தருளையென் னுளமதில்
நேசிக்கத் தாருமென்பீரே - என்சாகிபே
நேசிக்கத் தாருமென்பீரோ - பாசமகற்றிஞானப்
பரிவருள்வீர்மன தறிவருள்வீருயர்
பொருளருள்வீரும தருளருள்பீரோ (மையல்)

அஹதி லுறைந்திருந்து அருள்ஜெம் ஹஹுத்தில் வடிவாய்
உஹதில் நிறைந்த வுண்மையே - யென்னுள்ளமதில்
உருகி நிறைந்த வெண்மையே
வஹதி லுமதுதிரு மணிமுத்தருளதான
உஹதையருளு மென்பீரோ - என்சாகிபே
உஹதையருளு மென்பீரோ - நகைமுத்தமுதந்தரும்
நாதரோதிரு வேதரோமிகு
மாதவமதிலுறை நீதரோபீரோ (மையல்)

---

௫௭. இராகம் - காம்போதி; தாளம் - ஆதி.

பல்லவி.

மையலாசை வெள்ளம் பெருகுதே - யென்றன்
மனதனல் மெழுகா யுருகுதே.

அநுபல்லவி.

கையிலே கண்ணாடிவைத்துக் காட்டியே தந்தவொஸ்தாதை
மெய்யிலே விளக்கையேற்றி மேன்மையாக்கும் பீரைக்காண (மையல்)

சரணங்கள்.

ஒன்றுட னொன்றுக விருந்தாரடி - பொரு
ளோரொழுக்கினி லுறவாமடி
கண்டு மனதிரங்கி நன்றி யுடனெனக்குக்
காரணந் தன்னைவிள்ளும் ஹக்கடியோ பெண்ணே



மண்டலமெங்குமேசுற்றி வந்துநிறைவாகவரு
கொண்டலில்விளக்குந்தந்து கோவையாக்கும்பீரைக்காண (மையல்)

பூரணமெங்கும் நிறைவாமடி - யருள்
பொருந்த வகையுரைத்த பீரடி
காரணமானகுரு வாகமனதில் வந்து
காட்சியுஞ் சூட்சிதரும் ஹக்கடியோபெண்ணே
ஆரணமறைநூல்வேத மார்க்குமறியாதன்று
பூரணம்பொருந்தவந்து பூட்டிடுமொஸ்தாதைக்காண (மையல்)

நாலுபொருளு மவர்தாமடி - யிறை
ஞானக்கண்மீதி லுறவாமடி
காலுந்தலையுங்கடந்தேநடுவாகிய
காரணந்தனைவிள்ளும் ஹக்கடியோபெண்ணே
சேலிலுருவாயிருந்த செய்யிதுதாமீமருளாற்
காலிலுறைவாயிருந்த காரணஹல்லாஜைக்காண (மையல்)

---

௫௮. இராகம் - காம்போதி; தாளம் - ஆதி.

பல்லவி.

வாசிவலம் புரியி லுண்மையாய் - மருவுமதுநான்
மருவுமதுநீ மருவுதொழில் ஓசையரு ளூடுருவியாய்.

அநுபல்லவி.

பாசமெனு மாமயக்கம் பாரவலை ஞானதொழில்
நேசமுட னேயருளும் நீதரோஹல் லாஜென்பீரோ (வாசி)

சரணங்கள்.

ஓடியெழுந் தோடிமறையும் - ஒளிமருவுநான்
ஒளிமருவுநீ ஒளிமருவு வாடிவலம்சுற்றி வருகும்
நீடுமலி பாயெழுந்துநீ நிதானமுறுநான்
நிதானமுறுநீ நிதானமுறும் ஆடியகா லஞ்சுசுழிக்கும்
கூடுமிரு காலெழுந்தங் கோடியின்மீ தேயழுந்தி
நாடுமரு ளைப்புரிந்து நாதன்றனை யேயுகந்து (வாசி)

கால்தலை கடந்துநடுவாய்க் - கருமமுறுநான்
கருமமுறுநீ கருமமுறு மாலுயர்ந்து மூடெழுந்ததால்
ஆலதி லிருந்துறைந்ததால் அமுதகலைநான்
அமுதகலைநீ அமுதகலை வரிலைவய தாகமறைந்தாய்
கோலமொரு நான்மறையுங் கூறவரி தாயிருந்து
மாலகத்துள் ளேசுழித்து வாலகத்துள் ளேயருள்வீர் (வாசி)

அனஅஹதின் ஞவின்வழியே - அஃயான் நிறைவுநான்
அஃயானிறைவுநீ அஃயான்நிறைவு பஞவைபக்கா வாகவருள்வீர்
வஞவலாமீஞக் வுறைவாய் மறையருவிநான்
மறையருவிநீ மறையருவின் நாமறையி ஞதமருள்வீர்
குஞவதை யகற்றுஞ்ஞான குருபரனே யேயருஞம்
குஞவைவெளி யாக்கிவைத்துக் காத்தருள்ஹல் லாஜென்பீரே.()

---

௫௯. இராகம் - அடாணு; தாளம் - ஆதி.

பல்லவி.

ஆடுஞ் சரத்தில்நட மாடினார் - குருவாகிய நாயகர்
ஆடுஞ் சரத்தில்நட மாடினார்.

அநுபல்லவி.

ஆடுஞ்சரத்திற் குரு
ஆசைக்கு ளாசிக்கும் நேமிக்குள் நேசிக்கும்
ஓசைக்குள் வாசிக்கும் வாசிக்கு ளாசித்தே (ஆடும்)

சரணங்கள்.

நடனப் பொருளினில் தித்தி தித்தி யென
நடுவுட் சுழியினில் தத்தாம் தத்தா மென
அடிவைத்த சபையினில் தத்தோம் தத்தோ மென
அருண ஞளிவுபள பளெனக் கதிரிலகு
புரண தீபமும்வாய்வும் வெளியு முருகிவிம்மி (ஆடும்)

கருணைக் கடலினில் ஹாகீம் ஹாமீ மென
கதிக்க வெழுந்திரை யாஸீன் யாஸீ னென
புரண வலம்புரி தாஹா தாஹா வெனப்
பொருந்தி விளைந்தமணி யதிர்ந்து மிரைந்தொனி
பொருங்கண் சரத்திலருள் தருங்கண் மவுனமாக (ஆடும்)

உள்ளுறை றூஹில் ஆமீன் ஆமீ னென
வுறையுந் திக்கீற் லாஹூ லாஹூ வென
வள்ளல்ளக் கீனில் குத்தூஸ் குத்தூ ஸென
வளரு மவுனமரு ளொளிரும் ஹல்லாஜிரு
மலர்பொற் பாதம்நினைவில் நலனுற் றிருந்துகாண (ஆடும்)

---

௬௦. இராகம் - மோகனம்; தாளம் - திரிபுடை.

பல்லவி.

அசிபதப்பொருள தாக வாக வொன்றாக
ஆகவாகஆ ளாக்குங் குருவே.



அநுபல்லவி.

நிசமாந் தத்தோமசி பதமாய் நின்ற தல்லாமல் மற்ற
நிலையெல்லாம் பொய் விடையமென்றே நீக்கி
அசையாத விவேக வறிவையறிந்து பதத்தோடுறவாய்
அங்கப்படி யாகிய பூரண
மெங்குந்திற மாகிய காரண (அசிபத)

சரணங்கள்.

நித்யவநித்ய மானநேர்மை தெளியும்போது
நித்தியமாம நித்தியம் பொய்யாம்
உத்தரத்தாபர போகம் விராகம் போலவே நீக்கி
யுன்னை யென்னையு மொன்ற தாக்கி
உற்றசச்சி தானந்த வொளிவைத்தெளிவ தாக்கி
ஒன்றோடொன் றென்றருண் மேவிய
நின்றும்பர மாகிய காரண (அசிபத)

சமைதமை திதிக்கை யுபரதி யாஞ்சிரத்தை
சமாதிமுதற் கோணங்க ளாறும்
அமையா திருந்துதான மப்பால் பரமசமந்தம்
ஆநந்த மானவகை நாலும்
நமையே நம்மறிவாக நன்றாயிவை யுணர்ந்து
* நானேயிவன் றாமென வாமெனத்
தானேநினை வாகிய காரண (அசிபத)

அந்த ஹாமீமாய் வந்தென் சிந்தைதனி லுறைந்தே
அகோசரம தாக வாக்கியே
அந்த யாஸீனாய் நின்றென் னறிவைப்பதத் தோடுற
அத்துவிதமா யாக்கியே
அந்த தாஹாவே தாமீம் தாஸீன், தாஞகநின்றே
ஆகும்பர மாகிய பூரண
ஏகந்திற மாகிய காரண (அசிபத)

---

௬௧. இராகம் - நாதநாமக்கிரியை; தாளம் - ஆதி.

பல்லவி.

செப்படி சங்கர னெப்படிச் செய்வான்
அப்படிச் செய்மனமே - அனுதினம்
அப்படிச் செய்மனமே.

---

* நான் நீயவன் றானிவனமென என்றாஉம் பாடம்.

அநுபல்லவி.

செப்படி சங்கர னெப்படிச் செய்வான்
அப்படி மெய்ப்பொருள் ஒப்பர வாகியே
சித்தி யெனுந்திரு வுற்று நடந்தரும்
சித்திர மாய்வசை வைத்திற மாய்வரும் (செப்படி)

சரணங்கள்.

அலைகட லெழுபுவி யதிலுறை மனுடரும்
அமரரும் முனிவரும் அரக்கர்ஜின் பலருமோர்
நிலைதனில் வரவருள் நிறையவே கொடுமுடி
நின்பர மாகிய பம்பர மாகவுள்

நினைவருள் கூர்ந்து - அழகழகாய்க்
கனவருள் சார்ந்து - அருள்புரிந்து

தலையோடு காலுமெட் டாதரு ளாகிய
சரண மதிலுறைந்து புரணம தாகவே
கலைமதி வானவர் யாவர்கா ணுமலே
கந்துக மென்றொரு வுந்தி சுழித்திடுங்

கனகலை மானே - கிருபைதரு
மனதுறை தேனே - மவுனசுகச்

சிலையும் மதனனும்போல் மருவிக் கலந்திருந்து
தேனும் பாலும்ரச மாகவமு தருந்தி
அலையா தருள்புரிந்து மவுனப் பொருளளித்தும்

அங்க மெங்கு மருள்
தங்கிப் பொங்கி வரும் (செப்படி)

மூலம தகதம் விசுத்தியாக் கினையும்
முற்று மணிபூரக முற்றசு வாதிஷ்டானம்
சாலமாக ஆறு தலமுங் கடந்துஞானத்
தத்தி யணையிலொரு மித்துச் சுழிசுழித்துத்

தானவ ளுகி - யதில்நிறைந்த
கோனவ ளுகி - யருள்புரிந்தும்

ஆல மதிற்புகுந்து நாஸூத்து மலக்கூத்து
நல்ல பாஹூதீது லாஹூத்து மொன்றுகிய
பாலந் தனைக்கடந்து ஜம்ஹூத் ததனில்வந்து
பாங்கா யருள்புரிந்து தூங்கிநின் றுடிய

பழம்பொருள் வேந்தே - ஓரொழுத்தை
நலம்பெறச் சார்ந்தே - நடுவணையிற்



கோல மாயிருந்து முப்பாழ் வெளியில்வந்து
கோவை தனையுஞ்சுற்றி நாவி னூடெழுந்து
மாலைக் கடந்துரச மேலந் தெருவூடாடி

வந்து வலம்பு ரிக்கு
ளந்தரத் தொனி யெழும்பும் (செப்படி)

மவுனப் பொருளளித்தும் அருளுற்று பொருளுற்று
மதன சுகமளித்துத் துயரற்று வினையற்று
மறையுட் கபடமற்று முறையுட் புலனுமற்று
மனமற்று நினைவற்று மணிமந்த்ரப் பொருளற்று

மாசறத் தாண்டிப் - பாசவினை
யாசறத் தாண்டிக் - குருவருளைத்

தவனத் துடனறிந்து நிலையிட்டு விதிரிட்டுச்
சரத்திற் பொருளையெட்டி பிடியெட்டி யிடமுட்டிப்
புவனக் கலையறுத்து கிரியற்று புரையற்றுப்
போக்கு வரவுமற்று நோக்கும் பார்வையற்றுப்

பொருளுற வாக்கி - மாமயக்கம்
வெருளுறத் தாக்கி - யுளமுறைத்துக்

கவனத் தருளைத்தேக்கி யுரையாக்கி நிரையாக்கிக்
காலைப் பிரிமுறுக்கி யருள்சிக்கிப் பொருளெக்கிச்
சிவனைக் கமலத்தாக்கி தெளிவாக்கி யொளிவாக்கிச்
சித்தி நடம்புரியும் மந்த்ரத் தொனியெழும்புந்

திருவரு ளாலே - ஹல்லாஜென்பீ
ரருளுற வாலே - கிருபைபொங்கி

உவன மலரடியிற் பாபளெனவே சங்க
மொன்றி லிருந்துகன மண்டலம் பிரகாசிக்கும்
மவுனத் துடனிருந்து தரளத் தொனியருளும்

வல்லவ மாங்கி ருபை
ஹல்லா ஜென்றன் பீரோ (செப்படி)

---

௬௨. இராகம் - கேதாரகௌளம்; தாளம் - ஆதி.

பல்லவி.

ஏதுக்கு மயங்குகிறாய் மனமே - எனையாட்கொண்ட
இன்ப நாயகருண்டு தினமே.

அநுபல்லவி.

ஏதுக்கு மயங்குகிறாய் எனையாட்கொண்ட குரு
பாதத்தை யனுதினம் பணிந்தாற் பயமுமுண்டோ (ஏதுக்கு)

சரணங்கள்.

வாராத வினைகள்வந் தாலும் - பாவம்
வந்து வந்தணுகிக் கொண் டாலும்
சாராதபிணிகள் சார்ந் தாலும் - துயரஞ்
சதகோடியாகிவந் தாலும்
வேதாந்தந் தனக்கடங்காத மெய்ப்பொருள் கண்டு
நாதாந்தத் தொழிலாகி நாளு மனந்தமான
நாத ராகிய வேதர் பாதமே
நாடி டில்வினை யோடுமே திடன்
நலன தாயுடல் பொருளு மாவியும்
பலன தாகக்கைக் கொண்ட பாத்திபர்
நாளு மெனதுடை நூஹில் மருவிய
சூழு மணிவிளக் கான பிர்துணை (ஏதுக்கு)

அற்ப ஜலத்தையுரு வாக்கிக் - குவ
ளைக்குட்டெளி வாகவே தேக்கி
கற்பான ஞானமுள் ளாக்கிச் - சோதிக்
கருணையால் வெளியினி லாக்கி
செப்பமாக விப்படி யெல்லாமி ரக்ஷித்துத்
திறமாய் வளர்த்துமரு ளுறைவா யுள்ளினிற் சேர்த்துச்
சேர்வையாகிய கோர்வையானதைத்
தெளிய வேயுளில் வெளிய தாய்நடஞ்
செய்து முடலுயி ருருகி யருள்மழை
பெய்து திருவடிக் காட்கொண் டென்றனைப்
பேணியே யருள் சோதி யானது
பூணவே வெளி யானபிர் துணை (ஏதுக்கு)

அருவுரு சொருபமு மாகிக் - காரு
ணிகசோதி யெனவு மாகி
மருவியெவ் வுயிர்க்குமுள் ளாகி - யென்னுள்
மகத்துவ மாங்குரு வாகித்
திருவாயுளில் நிறைந்து தெளிந்து பரபரெனக்
குருவாயென்னுயி ரெங்குங் குறையாதுறைந்து பொங்கி
கோண மாறுதிசை தோண வேமதி
கோடி தீபமே சூடி யேகதிர்
குறைக ளறவொளி யிலகி வருகழல்
கொண்டு தித்தியென் றுன நடனமுட்
குள்ளென் றெவ்வுயி ரெங்கும் நின்றருள்
குருவ தானஹல் லாஜென்பிர் துணை (ஏதுக்கு)



௬௩. இராகம் - தன்யாசி ; தாளம் - ஆதி

பல்லவி.

மயங்காதே - மனமே - மயங்காதே.

அநுபல்லவி.

பயங்கா ணுலகவாழ்வு பாசத்தை நம்பாமலே
நயங்காண் ஹாமீமாமுண்மை நபியாந் துணைநமக்கு (மயங்)

சரணங்கள்.

வேதப்புராணகலை மெய்யாமெனநினைத்துப்
பாதச்சுருதியோதும் பாதந்துணையென்றெண்ணிப்
பார்த்துக்கோ - பரமாய்வெளி
சேர்த்துக்கோ - அருளொளியை
ஏற்றுக்கோ - குருவருளை
ஏத்திக்கோ - ஹாமீம்பதத்தைப்
போற்றிக்கோ - விதுவேதிடம் (மயங்)

பொய்யான புழுக்குரம்பை பொல்லாத காயமிதை
மெய்யா மெனநினைந்து வீணே யலையாதருள்
மேவிக்கோ - சுழியிலுறத்
தாவிக்கோ - வொளிமருவ
ஆவிக்கோ - தெளிவருளைக்
கூவிக்கோ - ஹாமீம்பதத்தைத்
பாவிக்கோ - விதுவேதிடம் (மயங்)

பஞ்சப்புலன் மயக்கம் பாவிக்க வேண்டாமருள்
நெஞ்ச வலம்புரிக்குள் நேச நபிபதத்தை
நேடிக்கோ - வுணரறிவைத்
தேடிக்கோ - மனமகிழ்ந்து
பாடிக்கோ - தாவீனெளியிற்
கூடிக்கோ - ஹாமீம்பதத்தை
நாடிக்கோ - விதுவேதிடம் (மயங்)

---

௬௪. இராகம் - காம்போதி; தாளம் - ஆதி.

பல்லவி.

மனமே மயங்காதே - ஆண்டவருண்டு
மனமே மயங்காதே.

அநுபல்லவி.

மனமேமயங்காதே மருவியெவ்வுயிருக்கும்
நினைவூடுறைவான நின்மலப்பொருளுண்டு (மனமே)

சரணங்கள்.

உச்சி திறந்துவெளி யமுதந் தந்தவராம்
உடலில் நடனச்சோதி காட்டித் தந்தவராம்
அச்சமறுத்தி ரட்சித் தாட்கொண்ட பிராம்
அடிமை துயரறவந் தருள்புரிந் தோராம்
உச்சிதமா யென்ற னுள்ளில் வந்தவராம்
உரிமை யறிந்துதவு முறுந்துணை பிராம்
உள்ள மீதில் நினைத்த போதினிற்
கள்ள மான தறுக்கு மென்குரு
வள்ளல் பாதம் நினைக்கும் வேளையி
லெள்ள ளவுந்துய ரில்லை யென்றறி (மனமே)

அடிமையைக் காப்பதே ஆண்டவர்க் கழகு
அடிமைத்திறங் கொண்டாலும் ஆண்டவர்க் கழகு
அடிமை கொடுமைசெய்தா லகற்றுவ் தழகு
அடிமை பிழைபொறுப்ப தாண்டவர்க் கழகு
மிடிமை மாற்றுவதுந் துயரை யகற்று வதும்
விலைகொண்டெனை யாட்கொண்ட வாண்டவர்க் கழகு
வந்து மெய்ப்பொருள் சிந்தை மீதினிற்
றந்து மென்றனுள் வந்திருந் துயர்
சரண மானதுட் புரண மாகவே
கிரணமதி தருங் கருணைபீர் துணை (மனமே)

அறியாச் சிறியவனுக் கருளுள்ளி லாக்கி
ஆனந்த வெள்ளமென தகத்துள்ளே தேக்கி
பொறியறுத் தருள்ஞானக் கடலை யுள் ளாக்கி
பொங்கி யடிமைதுய ரனந்தையும் போக்கி
குறியாத மாசற்ற வெளியாய் நின்மல மான
குருவாயெனை வந்தாண்டு மருவியெ னுளிற் பூண்டு
கோவை யாக நிறைந்து நின்றிரு
சேவ டிப்பிர காச மென்னுளிற்
பார்வை கோடி குறித்தி டாதருள்
நேர்மை யாக்கும்ஹல் லாஜென் பீர்துணை (மனமே)

௬௫. இராகம் காம்போதி; அடதாளம்.

பல்லவி.

ஒருநாழி கைநேரம் நினைவுடன் தூங்கினல்
உடனே தெரியுமடா - நீ தூங்கினல்
உடனே தெரியுமடா.



அநுபல்லவி.

திருவுங் குருப்பொருளை வருத்தி - ஞானத்
திருவை மனமதனி லிருத்தி
உருகு மிருகாலினை வருத்தி - யோர்நிலையை
உறவாடியே பொருத்தி
அருவின் பொருளெனவே யறிவைத்திடம தாக்கிக்
குருவின் பதத்தைநாடிக் குறித்தே யிருவிழியா (லொருநாழி)

சரணங்கள்.

ஈரேழுலகம் வந்த வாறும் - இதில்
இமையோர் முனிவர் வந்த வாறும்
வாரேழு கடல்மலை வாறும் - வகை
அறுஷும் குருஸும் வந்த வாறும்
நேராக வொருநிலை நினைவாக வுரைத்திட்டால்
பாரேழு லௌஹுகலம் பதமுமதிற் றேனுமே (ஒருநாழி)

பஞ்சபூத மஞ்சையு மறுத்து - பல
நினைவை யொன்றாகவே மறித்து
தஞ்சங்குரு பதத்தி லுரைத்து - மோரெழுத்தைத்
தயங்காமலே நிறைத்து
செஞ்சொ லருள் புரியுந் திருவுமஹூ மூதான
வஞ்ச மறவே ஹக்கு வடிவுமதிற் றேனுமே (ஒருநாழி)

வாசியதனி லுற வாடி - வாகாய்
ஹல்லாஜு பாதமலர் தேடி
நாசி நுனியமுத மோடி - குசை
நடுவே விழிதிருத்தி யாடி
வாசம் புகழுஞ் செய்யிது தாயீம் மலர்ப்பதத்தை
நேச முடனிருந்து நினைவை யவர்பேராக்கி (ஒருநாழி)

௬௬. இராகம் - தோடி; தாளம் - ஆதி.

பல்லவி.

இருந்தது மதிவிதமோ நிறைந்துரு
வருந்தின ததிவிதமோ சிறந்ததும்
பொருந்தின ததிவிதமோ அறிந்துநான்
புரிந்ததுமதி விதமோ.

அநுபல்லவி.

இருந்தது மிசைந்தது மிருண்டதி லுருண்டதும்
இழிந்ததுங் குளிர்ந்தது மிணைந்தது மணைந்ததும்
இசைத்திடி லரிதாமே - சொல்லிடிலந்த
நிசத்தொழில் பெரிதாமே - அவ்விருளினில்

அருந்தவம் புரிந்ததும்
பொருந்திவந் திருந்ததும்
அசைந்தது மிசைந்ததும்
வசந்தர வுசந்ததும்
அமைத்ததும் நிமைத்ததும்
அழைத்ததுந் துளைத்ததும் *
அலர்ந்ததும் மலர்ந்ததும்
அகத்துளே புதைத்ததும்
அடுத்ததும் பிடித்ததும்
அதுவதுவாய் நின்ற

ஆனந்த சோதி - விளம்பிடுங்கால்
நானுங்கு பாதி - யானலந்த

அருவிலே யுருவிலே சொருபிலே மருவிலே
வெளியிலே தெளிவிலே யுறைவிலே நிறைவிலே

ஊ ஊ ஆ ஆ நா நா யா யா
மா மா கா கா கூ கூ குன்னென்

றுயர்தொழி லாகி - சம்பிரதாய
முறுந்தொழி லாகி - மவுனமதில்

வருத்தியே யிருத்தியே
பொருத்தியே திருத்தியே
மனத்துள்ளே இனத்துள்ளே
யகத்துள்ளே தெளித்துள்ளே
யானந்தமாமோக மானந்தமாகி
யானந்தசொருபம தானந்தமாகி
அஞ்சு பஞ்ச நெஞ்சில் வந்து
செஞ்ச ரந்தந் தந்த விந்து
தேவே கோவே
மாவே பாவே

சித்தி யொத்தவி தத்தொழிற்குளே
தித்தி யொத்தப தக்கழற்குளே

திந்தோம் தந்தோ மென்றே நன்றாய்த்
திருவுருண்டதிலே - நிறைந் - தசைந் - தெழுந்து நின்றிடு
மருவுசந்தமிலே - மகிழ்ந் - துகந் - தழுந்தி யங்கொரு
சொருபம்வந்ததிலே - யுறைந் - தறைந் - தவலம்புரி
தெளிவி லோர்மணி வெளியில் நடமிடு
சிகர மதிலுறு வகர மதிநுதல்
திருடி வருசொரு பதனுள் ளுறுமுயிர்

* துழைத்ததும் என மிகுந்துளதும் பாடம்.



திகுர்தத் திகுர்தத்
தகுர்தத் தகுர்த
ஜெணங்கு ஜெணங்குதா
திமிதா திமிதாதிமி

சித்தமுற்ற பத்திவைத்து மொத்தகைக்க ருத்துள்வைத்தும்
சித்திமுச்சு டர்க்குளன்பு நம்புபய்ப ரங்கள்போல

தேவர் தேடவே
வேதர் தேடவே
நாதர் தேடவே
பாதர் தேடவே

திருவித முருகிய தொழிலது செயுமென
வருமொரு வனமிசை யிருள்மிசை நடமிடு
வருமுரு நபிவடி வதிலொரு சுழியென

வந்தே னென்கோ
னந்தா வனமிசை (இருந்தது)

சரணங்கள்.

வானவர்க் குறுந்தேவே - அறியுந் தொண்டர்
மானிடர்க் குறுந்தேவே - உளத்தில் நின்
றுடுங்கற் பகக்காவே - நடம் புரியும்
ஆனந்தப் பொருள்மாவே

அகில புவனமு மண்ட ரண்டமும்
அந்த ரங்களு மம்ப ரங்களும்
அதிக சுழிகொடு மவுன திருவருள்
அந்த விந்தையி லங்கு தங்கிய
பொங்கு கங்கையில் வந்து தங்தொனி
அழகி லுறுபுரி யதனு ளுறுமணி
அவ்வு நவ்வொடு சிவ்வு வவ்வெனும்
அச்ச ரத்தொடு வச்சி ரப்பொருள்
அத்தன் முத்தொழில் வைத்த சித்திரம்
அறிவ தரிதொரு தாரா வடிவினை
அண்ணல் முன்னொரு வண்ண மாகவே
அந்த நந்திய முஞ்சொ ரூபினில்
ஆக வுயிர்பல வகையு மேவிய
அருண னொளிபள பளென் வழகுறு
நளின சுகநல நளென வுருகிய
அமிர்த சலமட மடெனப் பெருகிய
அதனி லெழுநட நடன மாடிய

அரிபூ ரணமே - கிருபை மிஞ்சும்
பரிபூ ரணமே - உயிரிடையி
லரிபூ ரணமே - இருளில் வந்த
தரிபூ ரணமே

அடியுமாய் முடியுமாய்
நடுவுமாய் மனமுமாய்
அருவமாய் உருவமாய்
அழகுமாய் வெளியுமாய்
அவனியாய் வளியுமாய்
அனலுமாய் புனலுமாய்
அசைவையாய் சுழிவையாய்
இடையுமாய் நடையுமாய்
இரவுமாய் பகலுமாய்
எங்குமாய்த் தங்குமால்

எளியவர் கோனே - இருளிலொரு
சுழியுறு மானே - அறிபவருள்
ரசமுறு தேனே - உயிரிடையில்
வெளியருள் கோனே - திறமிகுந்த

வானமுற்ற கலையெழுஞ் சூரியப்ர ணவவடி
வாய்நிறைந் தொளிர் போலெழுத்தினை
மேவு சித்திர பாவிதத் தொழில்
விண்டும ருண்டுவு ருண்டுதி ரண்டெழு

விரிவுற்ற சோதி
பரிவுற்ற ஜோதி
விளைவுற்ற நீதி
யுளையொத்த சாதி

விற்பனசொருபம தாகியரூப
ஒப்பும திப்பிலை யேயதிரூப
கற்பக முட்கரு ஞகாரரூப
நற்புகழ் மெய்ப்பொடு நிற்பிரமா தீத

நாத விந்துவி னூடு சென்றெழு
வாலை யங்கொரு ரூபநந்தியின்
மாயவடி வாயதிக காயமுரு வாகி
மணிமந்த்ர முச்சுட ராகிய சோதி
அணியென்று வாசியி னுட்சிவ ஜோதி
அஹ்மதின் வடிவெனும் முஹம்மது நபியெனும்
அவனெனு மவளெனு மதுவெனும் நடுநிலையே



அவனெப் படியோ
அவளெப் படியோ
அதுவெப் படியோ

அத்துவி தத்தொழில் முத்திவ ருத்திய
அருவுரு சொருபாய் - அகரமுதல்
மருவிய வுயிராய் - உள்ளன்பினில்

அலையடித்துவரு கடலுள் ளேகிருபை
யலைஇல்லென்றுமதி லாகியே
அதிலெழுந்துவரு புரியகத்தினுள்
ளருளுறைந்தமணி யானவா
கலையெடுத்ததிக தொனிமுழங்கிடக்
கருணைமுத்திஞெளி யானவா
கசடறத்தொனியை அடிமையுள்ளிலருள்
கவலுநான்மறையின் ஹக்கனே

கதிர்வடி வருள்கோனே - சுருதிமா
மறையொளி யிறையோனே - அருவுரு
சொருபமின் மறைவோனே - வெகுதுயர்
அறவருள் தருவோனே - விதி

மறைதனி லொருபொருள் வருகுநல்
விரிசுட ருரையென வுறுதிகள்
தருகுநல் வினையுளம் அறவினை
அனுதின முருகிட விரைவுறு
கனலதி லனலிட மனமிசை
வெகுசல வாரிதி யதுதனில் - மூழ்கியே

வினையொடு பவமற வொருபொரு ளெனவுற
வெளிதனில் மனவெளி யதுதனில் வரவருள்

மிக்கசொ ரூபம தோடு நற்புகழ்
ஒக்கவ ரத்திரு நாம முத்திரை

வெண்டர ளத்தொனி யையுளி லருள்புரிய
வெகுகிருபை வரவெகு ரசனை யமிர்தகுண
மெய்ஞ்ஞான நதியினில் மூழ்கவெகு கிருபை

தகிட திமிதா தத்தோம் திந்தா தக்க திந்தா
தகிட திமிதா தத்தோம் திந்தா தக்க திந்தா
தந்ததத்த தந்ததத்த ஜெணுத ஜெணுதகிட
தகிடஜெணுதகிட தகிடதிமிதா தகுண தகுணதரு

திமிர்தத்தோத் திந்தி திகிர்தா திகிர்தி
திமிர்தத்தோத் திந்தி திகிர்தா திகிர்தி
தகிர்த திகிர்த திகிர்த திகிர்த

திகிர்தத்த திந்தா திகிர்தத்த திந்தா
திகிர்த திந்தா தகிர்த திந்தா திகுதிகு தாத்தெய்ய

சாமெழுந்ததிலே - நிறைந் - தசைந் - தெழுந்து நின்றிடு
மருவுசந்தமிலே - மகிழ்ந் - துகந் - தழுந் தியங்கொரு
பிரணவக்குருவாய் - நடந் - தசைந் - தகன் றதும்பர
மருவியென்னுளிலே - நிறைந் - தருந் - தரும் படி

மவுன முறுசுழி யதனில் நடமிடு
வருகு சிரமந்து மருவி யிருபுரம்
வளரு மிருகலை யதனி லுறுசர
மருவு தொனியதை யமைய நினைவுற
வந்து தந்து முன்ற வன்பு
அங்க மெங்குந் தங்கி யிங்கு
அன்றே புறைவதை யின்றே தரவளர்ந் (திருந்தது)

---

௬௭. இராகம் - தன்யாசி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

என்னையும் நின்பதந் தன்னினிற் சேர்த்திடுஞ் சாகிபே - எளி
யேன்கேட்ட தெல்லாம்நின் பாதத்தி லாக்கிடுஞ் சாகிபே.

அநுபல்லவி.

உன்னிய வாயுவுள் ளுறைந்து மிருந்து
முற்பனமாக கிமிர்ந்து பரந்து
நன்னிய நாயனே டொத்து முறைந்து
காலி லுறைந்து நடுவி லிருந்து
விண்ணிடை பூமியோ டண்ட மறுஷூங் குறுஸூம்
வெளியும் நிறைந்துகந் திருந்திடும் பிரோ
என்னிய வென்றனை யீன்றிடுந் தந்தைதாய்
உன்முறை யானசொல்லி னிற்செய்தவர் யாவரும்
நன்னிய நின்பதச் சிந்தையிற் சேர்த்து
நாய னருள்ஹறை றத்தினிற் சேர்த்து
பொன்னடி மூலப் பொருளினிற் சேர்த்தருள்
பொங்கி நிறைந்திடும் செய்குஹல் லர்ஜே (என்)



சரணங்கள்.

மன்னும் நகார வகாரம தானது
மவ்வினுள் நவ்வை மனத்துள் ளிசைத்திட
பொன்னடி மூலச் சிகார முறைத்திடப்
பொங்கி யகாரத்துள் வந்து நிறைத்திட
கன்னிக்குள் மூலக் கருவினுள் ளாகவே
கஞ்ச மலர்ப்பொற் பதத்தில் நிறைந்திட
உன்னியகார வெழுத் தொன்றே டிசைந்திட
ஒன்றுமூன் றுக வுகந்து பரந்திட
நண்ணிய சிந்தையுள் ளெங்கும் நிறைந்திட
நன்மய மூல நடுவி லிருந்திட
விண்ணவர் சொர்க்க நரக திரங்கள்
மிகுந்திடுஞ் சந்திர சூரியன் மூனும்
பின்னிட விந்த வகைகள் பிரண்டாலும்
பேதுற மென்றனை யீன்றிடுந் தந்தைதாய்
தன்னையு நின்முறை செய்தவர் தன்னையும்
தன்னடி முன்னின்று தொழுபவர் தன்னையும்
நின்னய மாகநின் பாதத்திற் சேர்த்தருள்
நிச்சய மாமருள் செய்கு ஹல்லாஜே (என்)

அதிகப் பொருளை நினைத்திடச் சிந்தையி
லையமோ யென்றனக் கேயருள் வீசொன்னத்
துதிதர வுன்றனை யேதுதி செய்திடச்
சூட்சம தான தொழிலின் முறைதரும்
பதிதரு மேலோ னருள்ஹல றத்திற்
பகர்ந்திடும் பாத்திஹா தன்னை அமானமாய்க்
கெதிதர வெந்நாளும் நீர்துக் கேட்சென்று
கிருபைய மானத்துக் காவல தாகவே
அதிகப் பொருள்செய்ய வடியேனுக் காகுமோ
அறியாச் சிறுபயல் வைத்தவ மானத்தை
அதுக்குநீ தான்துணை ஆதி யிடத்துக்கும்
துதிக்குமென் றந்தைதாய் என்னுடை பிறந்தவர்
என்குரு பாதம் துதிக்கின்ற பேர்களும்
என்குரு வேயேகன் பாதத்தி லாக்கிடும்
ஏக னருள்பெறும் செய்குஹல் லாஜே (என்)

உண்மை யருள்புகழ் செய்கு ஹல்லாஜே
உற்பன மாகும்பீர் செய்கு ஹல்லாஜே
நண்புகழ் சேரருள் செய்கு ஹல்லாஜே
நாய னருளும்பீர் செய்கு ஹல்லாஜே

வெண்மை மனத்தருள் செய்கு ஹல்லாஜே
மிகப்புகழ் பெற்றிடும் செய்கு ஹல்லாஜே
சின்மயம் பெற்றிடும் செய்கு ஹல்லாஜே
சிந்தையில் நின்றிடும் செய்கு ஹல்லாஜே
நின்மய் மாகவே யென்றனை யாண்டு
நிச்சய மென்றந்தை தாயொடு மின்னமும்
உண்மைய தாகவென் ேனாடு பிறந்தவர்
உற்றவ ரென்னொடு சேர்ந்தவர் யாவையும்
நன்மை தருமென்பீர் செய்கு ஹல்லாஜே
நற்பாதந் தன்னினிற் சேரும் வல்லோனே
நின்மய மான வருள்தர வேணும்
நின்பாத கமலத் தருள்தர வேணும்
பொன்மய மாகவல் லோனே யுறைந்திடும்
பேர்தரோ நீதரோ செய்கு ஹல்லாஜே (என்)

ஞானகீதாமிர்தம்

முற்றுப்
பெற்றது.

ஹாமீம்.

# ஞானமன்றட்டம்.

இணைக்குறளாசிரியப்பா.

பார்புக ழெங்கும் நிறைந்தவர் பேரிற்
பரிந் தடியேன் சீர்பெற
உன்னும்.அக்காயித்தை வைத்துத் திருவை
உன்னி யேர்பெற வேழை தன்னை
ஈன்றவ ரிந்த முறைசெய் தென்னொடு
சேர்ந்தவ மார்பெற வேழை தன்னொடு
பிறந்தவர்
அடியேன் செய்தவை சொன்னவை துதிந்தவை
நினைத்தவை யடங்கலுங்
கார்பெறக் காதன் முறையாய்
என்பீர் செய்கு ஹல்லாஜு பாதம்
ஏர்பெறத் துதித்திடி லெல்லாம் வருமென்றே
ஏழைசிறி யேனு மென்னொடு சேர்ந்தவரும்
எனையீன் றவருங் கூடிப் பிறந்தவரும்
பிழை நினைத்துச் சொன்னவர் கேட்டவர்
செய்தவ ரெல்லாரும் சாகிபு பதத்தில்
சேரவென் றுதி தன்னைப் புகழ்ந்த
வல்லோ னருளால்
குருவை நினைத்துக் குருபதத்திற் சேர
என்றே யெல்லாம் படிக்கினும் யானெனை
அன்றியென் பீர்பேர் நினைந்தால்
எல்லாருஞ் சாகிபு பதத்திற் சேர
என்றே யென்பீர் செய்கு ஹல்லாஜு
பாதந் தனைத் துதித்தேன்
அவரலால் வேறில்லை யடியேற் கென்றும்
அவர்பதந் துதித்தே னெங்கள் யாவரையும்
அவர்பதத்திற் சேர்க்க வவர்மேற் கடனென்
றவரைத் துதித்தேன் றுதித்தேன் றுதித்தேன்
ஆமீன் யாறப்பல் ஆல மீனே.

ஞானமன்றட்டம் முற்றிற்று.

---

ஞானத்திருப்பாடற்றிரட்டு
முற்றுப் பெற்றது.

---

ஹாமீம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

கொட்டாம்பட்டி

எம் - கருப்பையாப்பாவலரவர்கள்

இயற்றிய

# திருக்கோட்டாற்றுக்கலம்பகம்.

## கடவுள் வணக்கம்.

### நேரிசை வெண்பா.

தலம்பகருங் கோட்டாற்றிற் றங்குமெய்ஞ் ஞானி
கலம்பகநூல் சாற்றக் கனிந்து—நலம்பகஞ்செய்
ஆதியந்த மில்லா வகண்டவடி வாய்நிறைந்த
சோதி யந்தப் பாதந் துணை.

### மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

இது எட்டடித்தரவு.

மணிகொண்ட கடலாடை மருங்குடுத்த பூமகட்கோர்
அணிகொண்ட திருமுகம்போ லமைந்தவள மலைநாட்டில்
அண்டருல கத்தருவு மஞ்சுதரு வாய்மறையத்
தண்டலையிற் கொண்டலையார் தண்டலைகள் வளர்ந்தோங்கி
மதியுலவ வோங்குமணி மாடங்கண் மிடைந்துமிகு
நிதியுலவத் துதியுலவ நெடிதுபுக ழொடுபிறங்கும்
கோட்டாற்று மாநகரிற் கோதிலடி யார்விழையும்
வீட்டாறு காட்டவந்த மெய்ஞ்ஞானி யானுரே.

இவையாறும் ஈரடித்தாழிசை.

அணிமகுட ரேத்துநபி யரசவையிற் சூட்டுநவ
மணிமகுட மேற்றுவந்த வரங்களெங்கு மறைவன்றே. (க)

மதியழைத்தார் முதலையுண்ட மகவழைத்தார்ப் புகழார்க்கு
மதியழைத்தார் வங்கொளவோ மழையழைத்தீர் மாநிலத்தே. (உ)

ஒடுங்குவது முண்டாவ தும்மறிய வேண்டுநர்க்கோ
அடுங்குவளைக் குளநீரை யட்டுவர வருள்புரிந்தீர். (ங)

துறந்தவராற் செயமுடியாத் தொழிலொன்று மில்லையெனற்
கிறந்தவருக் குயிர்கொடுத்தி ரிறும்பூது மீதாமோ. (ச)

மலைநாட்டு மன்முதலோர் மலைக்கமொழி வாசகத்தின்
கலைநாட்டும் வழுக்குறியைக் கையேடுங் காட்டியதே. (ரு)

பார்மீதுள் ளார்பலரும் பார்த்திறம்பூ துட்கொள்வான்
பார்மீது மதிகாட்டப் பட்டதறி யார்யாரே. (௬)

இவைநான்கும் ஈரடியாரகம்.

அருணிலை மறைநெறி யறைமுறை யவைகளி
னிருணிலை யறவரு மியறவ மருளினீர். (௧)

துதியொடு நுமதடி தொழுபவ ருளதினை
வதுபெற மகிழ்வொடு மதிதரு மதியினீர். (௨)

அதிதமு கமதுபர் பதியமு துவகைய
துதிகழ வுணுமொரு துரியக வுருவினீர். (௩)

பரசுக முறவுறு புவாக விழிமிசை
பரவொளி வெளிவிடு பவரென மருவினீர். (௪)

இவைநான்கும் ஈரடித்தாழிசை.

சீர்மே னடந்தவளத் தேவர்பதி மேனடந்தீர்
நீர்மே னடந்ததிந்த நிணிலத்து வியப்பாமோ. (௧)

கட்டவினை நீத்தடியார் கதிக்கவினைப் பெறவருள்வீர்
குட்டவினை நீத்ததிந்தக் குவலயத்தில் வியப்பாமோ. (௨)

கற்றகைய சித்தசெல்லா காடுகையைக் கூடவைத்தீர்
இற்றகையைக் கூடவைத்த திக்கிலத்தில் வியப்பாமோ. (௩)

காணு திருநடனக் காட்சியெலா நீரானீர்
தாணு திருநடனந் தான்காட்டல் வியப்பாமோ. (௪)

இவைநான்கு முச்சீரோரடி யம்போதரங்கம்.

ஞானமாய் விளங்தோர் நீர். (௧)
ஞாலமாய் விரிந்தோர் நீர். (௨)
மோனமா யமைந்தோர் நீர். (௩)
முத்திவடி வானோர் நீர். (௪)

இவையெட்டு மிருசீரோரடி யம்போதரங்கம்.

மதியு நீர், கதிரு நீர், வரமு நீர், உரமு நீர்,
கதியு நீர், துதியு நீர், கனமு நீர், மனமு நீர்.

இது தனிச்சொல். எனவாங்கு.

இது பதின்மூன்றடி ஆசிரியச்சுரிதகம்.

பொற்பகத் தேத்துவர்க்கற்புத வமலக்
கற்பக ஞான வுற்பன மோன
கற்றவர் பழிச்சு நற்றவ முடையீர்
கல்வியுஞ் செல்வமுங் கரிசற வோங்கும்



பல்வள மிகுந்த நல்லெழிற் கோடை
நன்னக ரமர்மெய்ஞ் ஞான நாயக
கல்லா நெஞ்சனேன் கல்லா வஞ்சனேன்
நல்லார்த் தொழாஅப் புல்லேன் புல்லேன்
முன்றவத் தானே முன்றவத் தானே
நுஞ்சீர் சொல்ல நோற்றனென் றழீஇக்
கெழூஉம்பத மீந்து வழூஉக்களைந் தன்பாக்
கொண்டுயர் ஞானக் குறிவழி
ஆட்கொள லுந்தந் தாட்கட னன்றே. (௧)

நேரிசைவெண்பா.

கடந்தங்கு வந்துயிர் போமுன்கன் மத்தைக்
கடந்தங்கு வந்து கருதில்—இடந்தங்கும்
பொய்ஞ்ஞானி யார்பார்க்குட் போதமருள் கோட்டாற்று
மெய்ஞ்ஞானி யார்பாத மே. (௨)

கட்டளைக்கலித்துறை.

பாதந் தரங்கநும் மெய்ஞ்ஞான காரணப் பாமுறையை
ஓதந் தரங்கமு ளார்ஞான யோக முடன்பெறுவார்
சீதந் தரங்கஞ் செறிதடங் காவிற் றிகழ்மணங்கட்
போதந் தரங்கவி கோட்டாற்று ளோங்குமெய்ப் போதகரே. (௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

போதகமும் மதங்கொண்டாற் போலுமினர் மயல்மதத்திற் புகுந்து வாடிப்
பாதகமும் பழியுங்கொண் டலைந்தேற்கு மெய்ஞ்ஞானப் பரிவு காட்டித்
தீதகமுங் கவலையும்விட் டுயரறிவாற் றன்மைப்புகழச் செய்தார் யோக
சாதகமும் ஞானமுமே வுருக்கொண்ட மெய்ஞ்ஞானித் தகைமையாரே. ()

கட்டளைக்கலித்துறை.

ஆராயுங் கான மகவிரு ணீக்கு மருட்கதிர்நற்
சீராயு மங்கலஞ் சேர்திருக் கோடைச் செழுநகர்வாய்
ஆரா வமுதென் றமர்ந்தமெய்ஞ் ஞானி யருள்பழுத்துப்
பாராயத் தந்த சுகஞான காரணப் பாடல்களே. (௫)

நேரிசைவெண்பா.

பாடற் குவகைதரும் பந்தவினை யாவுமின்றே
வீடற் குவகை விளக்குமால்—நீடுபுகழ்
வீட்டாற்றுண் மேயதவ மெய்ஞ்ஞானி யாய்வந்து
கோட்டாற்றுண் மேய குறி. (௬)

## புயவகுப்பு.

### எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியச்சந்தவிருத்தம்.

*தனதான தந்ததன தந்தத் தனந்தன*
*தனதான தந்ததன தந்தத் தனந்தன.*

குறியான செந்தமிழி லங்கப் புனைந்தன
 கொடிதான வஞ்சநெறி யஞ்சத் துறந்தன
நறவாய பைந்தொடைக ளங்கத் தணிந்தன
 நலமான சந்தமவை கந்தித் திருந்தன
அறிவாய வந்ததிற முந்தப் புரந்தன
 வகமாய பந்தமற வுந்திக் கிளர்ந்தன
செறிமேரு விந்தவரை நந்தப் படர்ந்தன
 திகழ்ஞானி யந்தமிகு விந்தைப் புயங்களே. (௭)

## மேகவிடுதூது.

### நேரிசை வெண்பா.

புயல்காளின் றேபோய்ப் புகன்மினென் சோகம்
அயலா ருரைக்க வறியார்—கயலுகளும்
ஓடைகளா லேபெருக வோங்குசெழும் பூமலருங்
கோடைநகர் மெய்ஞ்ஞானிக் கு. (௮)

## தவம்.

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

குன்றிருந்த குகையிருந்துங் கொடியதொரு வனத்திருந்துங்
 குழைகாய் மூலந்
தின்றிருந்த வம்புரிந்தீர் மூச்சுமற்றுப் பேச்சுமற்றுச்
 செயலு மற்றீர்
முன்றிருந்த வழியறியீர் கோடைநகர் மெய்ஞ்ஞானி
 முன்னே சென்று
நன்றிருந்தங் கவர்ஞான காரணத்தை யாய்ந்துவரி
 னன்குய் வீரே. (௯)

### குறள் வெண்பா.

உய்ஞ்ஞான மோன முடன்மேவுங் கோட்டாற்று
மெய்ஞ்ஞானி ஞானமோர் மின். (௧௦)

## குறம்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மின்னேதென் கோடைநகர் மெய்ஞ்ஞானி குறியை
 விட்டுவிடா தேகுறித்து வேண்டுகுறி கூறுந்
தன்னேரில் மலைக்குறவர் குலமகளென் குறியோ
 தப்பாதுன் கைக்குறியு மெய்க்குறியு நன்றால்



முன்னுக நிறைநாழி தக்கனையோர் பழைய
 முழுக்கந்தை கொடுவாநீ நினைத்தகுறி முற்றும்
உன்னுசை நாயகனை யின்றணைவா யன்பா
 யுள்ளபழங் கஞ்சிவா ருள்ளமகிழ் வாயே. (௧௧)

### நேரிசை வெண்பா.

உள்ளக் கிடையா வுவந்திருந்தி நீநோக்கில்
கொள்ளக் கிடையாக் குணமுண்டாம்—விள்ளற்
கருங்கனக மேற்சோதி யாயமர்மெய்ஞ் ஞானி
தருங்கனக ஞானவிருத் தம். (௧௨)

### கட்டளைக்கலித்துறை.

விருத்தங் கலித்துறை வெண்பாவி னூற்றின மேவித்தத்தம்
பொருத்தங் கலித்துறை கூறிக்கயவர்ப் புகழ்ந்து நிற்பீர்
திருத்தங் கலித்துறை கோட்டாற்று ஞானிதஞ் சீர்படித்தும்
வருத்தங் கலித்துறை ஞானூர்த்த மேற்க வராததென்னே. (௧௩)

## மறம்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றுமுனை விடுவதிலை யாயினுநீ தூதென்
 றிரந்ததினாற் பொறுத்தனம்யா மெம்மதமுங் கொள்ளத்
துன்றுநெறி ஞானமுறை மெய்ஞ்ஞானி வரைவாழ்
 தொன்மறவர் குலமுறைமை சொல்வதுகேட் டிலனோ
நன்றரசன் திருமுகத்துக் கறுமுகமா யடவி
 நடுவிலொரு குமரிதனை நாங்காட்டு வேமால்
இன்றுகொடு போமனமுங் கூடுமிகு சோறு
 மிருக்குமுனக் கேன்கவலை யிப்பொழுது தானே. (௧௪)

### மடக்கு. எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தானக மானவரும் யானக மானவருந்
 தலைமை யிருந்தவரும் புலமை யிருந்தவரும்
தேன்வ மாலையரும் வானவ மாலையருஞ்
 சித்தங் களித்தாருஞ் சித்தங் களித்தாரும்
ஞானவன் புள்ளாரு மீனவன் புள்ளாரு
 நாட்ட விருப்பாரு நாட்ட விருப்பாரும்
மானசம் பத்தாரு மானசம் பத்தாரு
 மந்த னதியாருந் தந்த நதியாரே. (௧௫)

### நேரிசைவெண்பா.

ஆரறிவார் மெய்ஞ்ஞானி யாயெனக்கு வந்துதந்த
பேரறிவாம் ஞானப் பெருமைதனைப்—பாரறிய
ஊன்றிய காட்சிக்கோ ருவமமெடுத் தோதரிதால்
தோன்றியவென் னெஞ்சறிந்த து. (௧௬)

மடக்கு. கட்டளைக்கலிப்பா.

துன்ன வாய்ந்தது வேதத்து வத்தையே
சொல்ல வாய்ந்தது வேதத்து வத்தையே
உன்னி யேறிய துள்ளக வாசியே
யோது வார்தம துள்ளக வாசியே
பன்னல் ஞானம் பதிதிருப் பாடலே
பண்ணன் முத்திப் பதிதிருப் பாடலே
இன்னங் கோடை யிருக்குமெய்ஞ் ஞானியே
யேத்து வார்க ளிருக்குமெய்ஞ் ஞானியே. (கஎ)

உ வ கை.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஞானமுறை யுதவுமெங்கண் மெய்ஞ்ஞானி யார்க்கே
நாங்கண்முறி யடிமையினி நாடகத்து வினையால்
ஈனமுறு மிடர்ப்படோம் பிணியுறியோம் பகைஞ
ரெவர்க்குமஞ்சோஞ் சமனுமெமை யேறிட்டுப் பாரான்
தானதவஞ் செய்வாரிற் றலைமையுற்றோ மன்னுஞ்
சச்சிதா நந்தபரப் பிரமவுரு வத்தோ
டானபத முத்திநிலை யகமருவு முரிமை
யடைந்தோமிங் கேதுகுறை யம்புவியி னிடத்தே. (கஅ)

ஒரு பொருண்மேன் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை.

தேமாம் பொழிற்சூழுந் தென்கோடை மாநகரார்
தாமீந்த ஞானத் தனிச்செந் தமிழ்ப்பாடல்
நாமா ரகவிருட்கோர் நற்கதிரோ னாகுமால்

வண்டார் மலர்த்தடஞ்சூழ் வண்கோடை மாநகரார்
கண்டீந்த ஞானக் கலைச்செந் தமிழ்ப்பாடல்
பண்டைவினை தீர்க்கும் பயன்மருந்தே யாகுமால்

சங்கமடர் பண்ணைகள்சூழ் தண்கோடை மாநகரார்
இங்குதவுஞான விருஞ்செந் தமிழ்ப்பாடல்
எங்கண்மனக் கின்பளிக்கு மின்னமிழ்தே யாகுமால். (ககூ)

வ ண் டு.

கொச்சகக்கலிப்பா.

ஆலுமணி காணிவி ரன்புமிகு மெய்ஞ்ஞானி
மாலினமர் தென்கோடை வாழ்ந்துமரு ளில்லீரே
நூலிடைகொங் கைமலைக ணைதுக்கவருந் தென்குழலின்
மேலும்விழுந் திருத்துவது மிகுவண்டர் குணமன்றே. (உ0)



கை க் கி ளை.

ம ரு ட் பா.

குணமுங் குறியுங் கொடுநின்ற மின்னின்
வணமும் விழியின் மலரு—மணமருவு
மெய்யுநன் கூன்றி வியந்து நோக்கில்
மெய்யுணர் வுற்ற விமலமெய்ஞ் ஞானி
வையகஞ் சனித்த மாதாம்
ஐயமிலைநீ யறிதியென் னெஞ்சே. (உக)

நேரிசைவெண்பா.

நெஞ்சே யுனக்கு நிகழ்த்து முபதேசு
மஞ்சேய் பொழிற்கோடை வாழ்ஞானி—கஞ்சத்
திருப்பாத மேத்தலதே தீவினையி லென்றுந்
திருப்பாத மேன்மையுணர் தீ. (உஉ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உணங்குபன் னோய்வா யுடன்படுத் திடுக்க
ணுறப்புரி மடந்தையர் மயலுக்
கிணங்குபுன் மனமே யிதுவரை யவர்ச்சேர்ந்
திருந்தனு பவித்ததிற் சுகமென்
மணங்குல வலர்கா மருவுதென் கோடை
வளருமெய்ஞ் ஞானிசீர் வழுத்தி
வணங்குனக் கின்ப மிதுவலா லுண்டோ
மகிமைசேர் முத்தனு குவையே. (உங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முத்திருக்குங் கரும்புவயன் முழுதுமிருக் குங்கோடை மூதூர் தன்னில்
எத்திருக்கு மகற்றுவதற் கெந்திருக்குப் போலுதித்த வியன்மெய்ஞ் ஞானி
சத்திருக்கு முறைவடித்துத் தந்திருக்கு ஞானநெறிச் சாத்தி ரத்தை
வைத்திருக்கு மேற்றுதிப்பார் மனத்திருக்கும் பொருளளவையு மருவு வாரே.

பொருள்வயிற்பிரிவு—தோழிகூற்று.

கட்டளைக்கலித்துறை.

வாரொன் றியதனம் பொன்மலை போலுமுன் மார்பிருக்கப்
பாரொன் றியதன நேடிச்சென் றூரவர் பண்பென்கொலோ
கூரொன் றியவிழி வாணுத லாய்திருக் கோடையெனும்
ஊரொன் றியதவ மெய்ஞ்ஞானி யார்வரை யுள்ளவரே. (உச)

நேரிசைவெண்பா.

உள்ளஞ் சலியாம லுற்றதவ மெய்ஞ்ஞானிக்
குள்ளஞ் சலியாம லுற்றதவ—றுள்ளவர்கள்
அற்பதத்தை யேகொண் டலைந்தலைந் தென்ஞான்றும்
நற்பதத்தை யேகனைக்கா ணார். (உரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காணற் கரிய பரஞ்சுடரைக் கற்றோர் கருதுங் கதிநிதியை
வீணர்க் குதவா மெய்ப்பொருளை விள்ளற் கரும்பே றமுதமதை
மாணற் புடையார் தொழும்பதத்தை மருவுங் கோடை மாநகர்வாய்
வாணர்க் குவகை தருஞான மணியைத் துதியார் மதியிலரே. (உஎ)

வண்ணச்சந்தவிருத்தம்.

தனதத்தன தனதானன தனதத்தன தனதானன
தனதத்தன தனதானன - தந்ததன தனனு.

மதியொத்தவ தனமீறிய விடமொத்திடு விழிதாவிய
மலையொத்திடு முலைமேவிய - மங்கநகை யினரான்
மனமிக்கம யலினோடவர் மனைசுற்றிய லையலாயனை
மருவித்திரி வதுவேயுற - வந்தவினை பலவால்
நிதியத்தினு மனைபூமியி னதிகத்தினு முளராய்நிலை
நிகரற்றிடு முழுலோபியர் - சந்ததமு மறமே
நிலையத்தம தெனுமோர்வறு தலையுற்றவ ரதிபாவிக
ளினைவுற்றுயர் கவிபாடின -னெந்தநிதி பெறவோ
கதிருற்றிடு விளைவேறிய பழனத்தமர் வளையாலுமிழ்
கதிர்முத்தின தொளியாலிரு - ளங்கனுக லிலதாங்
ககனத்தவர் கலையாலுயர் சுகமுற்றவர் தினநீடிய
கவினுற்றது விழிநாடிய - தந்தநதி யுடையீர்
அதியுத்தம தவஞானியர் மதிவைத்திடு நெறியாகிய
வருளுற்றெளிர் தருநூல்விதி - தந்தருளு மதியீ
ரகம்வைத்தும தருள்கூடிய நிதிபெற்றுய வுயர்சாதன
மதுநித்தமு மருள்வீரடு பந்தவினை யறவே. (உஅ)

வஞ்சித்துறை.

பந்தவினை யறவே
வந்துதவி புரிவீர்
சந்தமிகு மறுகார்
தந்தநதி நகரீர். (உகூ)

குறள்வெண்செந்துறை.

நந்தங் கோடை நகரின்மெய்ஞ் ஞானியார்
புந்த நீக்கும் பரம்பொரு ளாவரே. (௩0)

பதினன்குசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பொருவரிய கருணைகொடு வளர்பரம சுகிர்தமது
புரிவரத சரத நிதியே
புகலரிய மறைமுடியி னுறுபெரிய விரதநிறை
புனிதமொழி துரிய மதியே



அருவவுரு வவருவுரு வமதிகதி ருரியகுறி
யனகவறி வரிய கதியே
யதிவிதசு கவிருதய வறுகுணச கசநிலையி
னமரதிக வகில பதியே
ஒருவிதமெ னிருவினையி னுறுகரும மெவரறிவ
ருமதுமன மலது தலமே
லுயரருளின் மலரகித முறுபதக மலமலர்க
ளுளமலர வருள்வி ரினியோர்
தருமமுத நிகரமுத மிடுதரும முளமனைக
டவளமதி யனைய குணமே
தகுநதியி னகரமுறு முரிமையொடு புரியுவரு
தவமகிமை யுடைய குருவே. (௩க)

நேரிசைவெண்பா.

உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவரென்—றிடுமறைபோற்
கற்றார்தம் மேன்மைகருதா திஞ் ஞானிநூல்
கற்றாரே மற்றையரா கார். (௩௨)

சிந்தியல்வெண்பா.

ஒரு பொருண்மேல் மூன்றடுக்கிவந்த வெள்ளொத்தாழிசை.

காவமரும் தந்தநதிக் கண்ஞானி யார்ப் போற்றிப்
பாவமறப் பாற்றுதென் பாரினிடை யேசில்லோர்
ஆவா வலைகின் றனர்.

செய்யவளத் தந்தநதி சீர்ஞானி யார்ப்போற்றி
வெய்யபுவம் பாற்றுதென் மேதினியி லேசில்லோர்
ஐயோ வலைகின் றனர்.

சந்தமிகுந் தந்தநதி சார்ஞானி யார்ப்போற்றிப்
பந்தவினை பாற்றுதென் பாருலகி லேசில்லோர்
அந்தோ வலைகின் றனர். (௩௩)

ஆசிரியவண்ணவிருத்தம்.

தந்த தனதன தந்த தனதன தந்த தனதன தனதானு.

அந்த மிகவரு மிந்த மினைநிக ரண்ட ருலகினு மிலைபாரே
யம்பு யவதன மம்பு விழிகுழ லம்பு பொழிமழை முலைநேரே
தந்தம் வளைகுழை யிந்து நுதலிடை தந்து துவரிதழ் மொழிபாலே
தங்க மலைமுலை சங்கு களமத தந்தி யனநடை யெனலாமே
சந்த மதனுமு வந்து மயலுறு சந்த வழகினை மருவாதே
சங்க டமுறம யங்க விடுவது தங்கு முறையல வணைவாயே
சந்த தமுமுயர் சிந்தை மருவிய தந்த நதியினர் வரைமீதே
சம்பி ரமமிகு சுந்த ரசுகுண சங்க நிதியென வளர்வோனே. ()

### நேரிசைவெண்பா.

வளங்காட்டுங் கோடைநகர் வாழ்ஞானி யார்க்கே
உளங்காட்டு மன்புடைமை யுற்றேங்—குளங்காட்டுஞ்
சொல்லுடையார் காமச் சுழற்குளுரு ஞானநெறி
நல்லுடையாக் கண்டோமிந் நாள். (௩௫)

### கட்டளைக்கலித்துறை.

நாளுக்கு நாட்டனம் பூரித் துயர்ந்து நகத்தையொத்து
வேளுக்கு மாறு புரிமட வார்கள் விழியெனுங்கூர்
வாளுக்கு நெஞ்ச மருண்டுநின் றேனையு வந்தருள்சேர்
ஆளுக்கு ளாளெனக் கோட்டாற்று ஞானிய ராக்கினரே. (௩௬)

### கலிவிருத்தம்.

ஆக்கவ ளிக்க வழிக்கவல் லானைத்தன்
னோக்கினி னேக்கி நவலரு மின்பமெய்ப்
பாக்கிய மென்னப் படுமுயர் தோத்திர
வாக்கிய மீந்தார் வந்தெமைக் காக்கவே. (௩௭)

### வேற்றொலி வெண்டுறை.

காமலை யொத்துறுங் குழன்முலை மாது களிகொள்ள
தாமிலை கொத்தலங் கலையணி வீர்நற் றகவாக
பூமி புகழ்சிர் பொற்கோட் டாற்றுள்
தேமிகு ஞானச் செல்வ நாயகரே. (௩௮)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செல்லார் பொழிற்கோடை நகராநியர்
சிவயோக மெய்ஞ்ஞான வருளுதியர்
சொல்லா லடங்காத புகழ்மேவினர்
சுகமாகு நெறிகாணு முறைதாவினர்
கல்லாத முழுமூட ரறியாதவர்
கற்றோர் மனத்தென்று முறுமாதவர்
பொல்லாத வடியேனை யாட்கொண்டதே
புகழாக வெஞ்ஞான்று நிலைநின்றதே. (௩௯)

### இன்னிசைவெண்பா.

நின்ற நிலையாகு நிச்சயத்தை நேர்நோக்கி
யொன்றுமறி வாய்ஞான முற்றகலை நூல்களெல்லாம்
நன்றறிவி னிந்திடுமெய்ஞ் ஞானியா ரைத்துதித்தார்க்
கென்றுந் துயரமிலை யே. (௪0)

### பஃறொடைவெண்பா.

ஏடவிழும் பூம்பொழிலி னின்னிசையால் வண்டினங்கள்
பாடமுதின் மேன்முழவப் பண்பி னொலித்ததிர



ஆடமயின் மந்திகள்கண் டாநந்த மாய்க்கனிகள்
போடவள ரந்தவளம் பொன்னுலகுங் கண்டுவக்குங்
கோடைநக ரஞ்செய்த கோதிறவத் தால்வந்து
தேடரிய சச்சிதா நந்த சிதம்பரத்தை
நாடகக்கண் ணுற்கண்டு நாடகஞா லத்திலுண்மை
கூடவருள் மெய்ஞ்ஞானி யாரெங் குறைமுழுதும்
வீடவுயர் வீடருள்வர் மேல். (௪௧)

## ச ம் பி ர த ம்.

### பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மேலெடுத் தண்டங்க ளவையுமொரு கைக்கொண்டு
விட்டெறிந் தேதகர்ப்பன்
விள்ளுபல வரைகளைக் கைக்குளடக் கிக்காட்ட
வேண்டுமெனி னுஞ்செய்குவன்
சாலமல வேழ்பெருங் கடலையுங் குளமோடு
சாப்பிட்டு மேப்பமிடுவன்
தருவன்னி நடுவெந்த வேளையினு நிற்பனிவை
சாற்றரிய வித்தையலவால்
மாலினக லுயர்யோக ஞானசா தனைமருவி
மானத மிறந்துசித்தி
வகைகள்பல செய்தரிய புகழ்நிறீஇ யன்பர்மன
வாழ்க்கைகொண் டெந்தஞான்றும்
சிலமிகு கருணைகொடு வேண்டுவன வந்தருள்செய்
திடுமரிய கோடைநகர்வாழ்
தெய்வமெய்ஞ் ஞானியார்க் குரிமையா காதபல
சிவரையு முன்விடுவனே. (௪௨)

## கா ல ம்.

### எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

விடலரிய மாயைநமை விட்டுவிடுங் கால
மெய்யினைப்பொய் யென்றுணரு மேலான காலம்
மடமையகன் றுயுநெறியின் மறையுணருங் கால
மனம் வாக்குக் காயமொரு வழிபடியுங் காலம்
கடல்குடித்த மேகமெனக் கவிபொழியுங் காலங்
கன்மமிகும் பந்தவினைக் கட்டுவிடுங் காலம்
மிடியகலுங் கோடைநகர் மேவிவருங் கால
மெய்ஞ்ஞானி யாரருள்வி ளங்கியவிக் காலம். (௪௩)

### நேரிசை வெண்பா.

காலங் கடந்துநிற்குங் காரணத்தைக் கண்டறியு
மூலங் கடந்த மொழிஞான—நாலங்கந்
தந்தவரை மெய்ஞ்ஞான தற்பரரைத் தந்தநதி
வந்தவரை நீவாழ்த்து வாய். (௪௪)

### பாண்.

### ஆற்றுப்படை.

### ஏகத்நாளேதுகை. நிலைமண்டில ஆசிரியப்பா.

வாயரும் புகழின் மேயசீ ரமுதும்
வடிக்கரும் பாகு மடிக்கரும் பாகும்
மதுரமும் பாலும் மதுரமுப் பாலாம்
கனிகளின் சுவையு மினியமற் றெவையும்
நவைபட நரம்பிற் றுவையுறப் புனைந்த
யாழ்வழி யெவர்க்குந் தாழ்விலா தாக
இசையமு தூட்டி நசைமிகக் காட்டும்
பாணன் மகனே பாணன் மகனே—
கடல்புடை சூழும் புடவியை யாளும்
காவலன் மகனலன் கேவலம் யானு
நின்போற் பாணற் கன்புடை மகனே
ஊற்றமிக் குடைந்தவென் மாற்றங் கேண்மதி
தரித்திர மென்னுந் தரித்திர வசத்தால்
மனைவியு மக்களும் துனியுறும் யானும்
கூரை வேய்ந்துஞ் சீரின் மாறுயப்
பிரிந்து சுவர்க்கால் கரைந்தே யுதிர்ந்து
வெயின்மழைக் கென்றும் பயில்வதற் கொல்லாப்
பீற்றற் குடிலிடைச் சோற்றுக் குழன்று
பசியெனுந் தீயின் வசம்புகுந் தரிய
மானமுங் குலமுந் தானமுந் தவமும்
கல்வியு மறிவும் பல்குண வூக்கமும்
தாளாண் மையுமத வேளாண் மையுமத
மாகி மயங்கிச் சோக முற்றுவுங்
குடிக்க வாடையும் படுக்கப் பாயலு
மின்றியென் மனைவி மன்றலன் றெடுத்துக்
கட்டிக் கிழிந்து மட்டிலாப் பொல்லம்
பொத்தித் தைத்து வைத்த கந்தையிற்
பாதியை யரையுடீஇ வேதைசெய் வாடைக்
காற்று வூடல மாற்று தாடி



முழந்தாள் தாடையி னுழைந்தாங் கிடிக்கக்
காங்கண் முடக்கி யுரம்பட வொடுக்கிப்
பற்பல தாளமும் பற்களே நீர்க்க
அடங்கி நடுங்கி யொடுங்கிக் கிடந்தே
இனையு மனத்தொடு மனையு மக்களுந்
திக்கற் றவர்போ லுட்கிவந் தென்முகம்
நோக்கயா னவர்முகம் நோக்கக் குழைந்து
சகத்திடை யெவருஞ் சகித்திட வொண்ணுக்
கவலையான் மிக்க வவலமுற் றிருந்தனன்
எத்தவத் தானோ வத்தல மொரீஇக்
கல்வியுஞ் செல்வமும் பல்விதத் தோங்கு
மலைநா டண்மிக் கலைநா டியநவர்
வளர்ந்திட மிக்க வளந்தரு மெழிலார்
தந்த நதியெனு மந்த நகரிடை
சென்றங் குலவி நின்று நோக்கினன்
காணற் கரிய மாணமர் கனக
வரையென வாயிரம் பரிதியொன் றுகி
நின்றெனப் பிரபை யொன்றிய வொப்பில்
பொன்மணிச் சிகர நன்மணி மாட
மன்னகப் பள்ளியொன் றென்னகண் காட்சி
இதுவென வெவரும் விதிர்விதிர்ப் படைய
இருப்பது கண்டங் கிருப்பவர் பாலுற்
றதோவொளிர் பள்ளிக் கதிபதி யெவரெனக்
கேட்டன னவரென் மாட்டுவந் தப்பா
அவர்புக ழினைச்செப் புவதெளி தன்றால்
ஆயினுஞ் சிறிது பாயமாய்க் கிளர்த்துவம்
கேளிவ் வூர்செய் நீளியற் றவத்தால்
இங்கவ தரித்துயர் துங்கநல் யோக
வாசியாய் மோன வாசியை வயஞ்செய்
தீனமா மாய்கைத் தீன மறுத்து
ஞானதே சிகராய் தீனவர் தவமாய்
புத்தியும் பத்தியுஞ் சித்தியு முத்தியும்
கல்வியு மதியும் செல்வமும் பதியும்
வேண்டுநர் மனத்துள் வேண்டிய வாறே
தந்தருள் செய்ய வெந்தவ நிதியாய்
நின்றமெய்ஞ் ஞானிய ரின்றிருப் பள்ளி
என்றன ருடனே நன்றென வோடி

அத்தலம் புக்கென் வித்தையைக் காட்டி
வலம்பா டொழிக்கு மிலம்பா டழிக்கும்
வகையா நிதியு மிகையாம் புகழும்
பின்னர்க் கதியாத் துன்னற் பதியும்
ஈந்தருள் கென்னத் தாழ்ந்திரந் தேத்தி
வணங்கிப் பாடலு மிணங்கிய விந்த
நிதிமுத லனைபெற் றதிக மகிழ்வாய்
வந்தன னியுமவ் விந்தையா நகரார்
அற்புத ஞான விற்பனர் திருமுன்
சென்று வணங்கி நின்றுன் கவலையைச்
செப்பியா மிசைக்கி லொப்பிலா யாவும்
பெறுதிநீ துறுதி யறிதிசெல் குவையே. (௪௫)

## ம த ங் கு.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வையெலாந் திரட்டி வாங்கிய விழிவாள்
வரிக்குடைந் தவனியி லெவரு
மெய்யெலாந் துளக்க முறவருந் துவரேன்
மிளிர்வனைக் கரத்துவாட் கிலக்கென்
செய்யெலா முத்தி னந்தினந் தவழுந்
தெருவெலாம் பன்மணி திகழும்
பொய்யெலா மகன்மெய்ஞ் ஞானிதன் னகர்வாழ்
புகழ்செறி மதங்கியாம் பொறியே. (௪௬)

## பூ வை வி டு தூ து.

### நேரிசைவெண்பா.

பொறியும் புலனும் பொருந்தியொன் றாக
அறியு மறிவே யமலற்—குறிநெறியென்
றோதுதவ மெய்ஞ்ஞானிக் கோதுவா ரென்மயலை
ஈதுதவ மெய்ப்பூவை யே. (௪௭)

## த ந் தை வி டு தூ து.

### மடக்கு. கட்டளைக்கலித்துறை.

ஏதத்தை யேமத னேதத்தைக் காட்டி யிகல்செய் தென்றல்
வாதத்தை யூர்ந்திட்டு வாதத்தை யம்பூ மருவுமம்பிப்
போதத்தை யேவியென் போதத்தை நீங்கப் புரிந்திடமெ
ஞீதத்தை ஞானியர்க் கோதத்தைச் செய்திடி னீதத்தையே. (௪௮)



## அ ம் ம ா னை.

### மடக்கு. கலித்தாழிசை.

தத்தார் கலியுலகஞ் சாற்றுபுகழ்க் கோட்டாற்றூர்
செத்தார் பிழைத்துவரச் செய்தனர்கா ணம்மானை
செத்தார் பிழைத்துவரச் செய்தனரே யாமாகில்
இத்தா ரணியிலவர்க் கீடுண்டோ வம்மானை
ஈடெவரே மெய்யிலுயி ரேற்றுவார்க் கம்மானை. (௪௯)

## இ ர ங் க ல்.

### நேரிசைவெண்பா.

மானேயென் னெஞ்சமல்லால் வஞ்சமற்று ரில்லையெனத்
தானே விடுத்தேன் றனித்தொருது—தேனேவம்
மெய்ஞ்ஞானி யார்க்கண்டு மீண்டுவரா தேயிருந்த
தெஞ்ஞான்று காண்பே னினி. (௫0)

### கலிவிருத்தம்.

இன்னு மின்னு மெனைப்புன் பிணியொடு
துன்ன வைத்தனுஞ் சூழ்ச்சிக் கடாதரோ
அன்னை தந்தை குருதெய்வ மாயினீர்
இன்ன நீர்க்கு மெழிற்கோடை நாதரே. (௫௧)

### ஒருபோருண்மேல் மூன்றடுக்கிவந்த வஞ்சித்தாழிசை.

நாதன் றிருக்கோடை மீதமர்மெய்ஞ் ஞானியிரு
பாதப்போ தணிவீரேற் றீதினுக்குள் ளாகீரே
நந்தந் திருக்கோடை வந்தமர்மெய் ஞானியிரு
சந்தவடி பணிவீரேற் பந்தனைக்கு ளாகீரே
செல்லார் பொழிற்கோடை வல்லார்மெய்ஞ் ஞானியிரு
நல்லசர ணேத்துவிரே லல்லலுக்கு ளாகீரே. (௫௨)

### எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஆகாத பல்வினையு மகற்றி யைந்தா
யடர்புலனை யோர்நெறியி லாக்கிக் கெட்ட
மோகாந்த காரவிருள் மூடா வண்ண
முனைவழியா ருதார முன்னி நோக்கி
ஏகாந்த மாயிருந்த சோதி வாழ்வை
யெங்குமாய்க் கண்டுவக்கு மின்ப மான
யோகாந்த மெய்ஞ்ஞானி யார்க்கே யென்ற
னுடல்பொருளா வியைக்காக்க வுவந்திட்டேனல். (௫௩)

## இரங்கல்.

### மடக்கு. தாழிசை.

உவரி மயலி னலையலையே
உவரி மயலி னலையலையே
உள்ளத் திருக்கு மச்சங்களே
உள்ளத் திருக்கு மச்சங்களே
பூவன மேல மருங்கலமே
புவன மேல மருங்கலமே
பொன்று தமருந் தண்டலையே
பொன்று தமருந் தண்டலையே
மவுனித் துளமே நந்தினமே
மவுனித் துளமே நந்தினமே
மதனம் பயிலு மானுராய்
மதனம் பயிலு மானுராய்
தவனந் தடிக்கும் பாலனமே
தவனந் தடிக்கும் பாலனமே
தந்த நதியா ரவராலே
தந்த நதியா ரவராலே. (௫௪)

## சி த் து.

### பதினான்குசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அவனிபுகழ் கோடைநன் னகரில்வரு மெய்ஞ்ஞானி
யார்வரையி னுளசித் தரே
மானுலு நம்மருமை யாரறிவ ராரறிவ
ரப்பனே யார்க்கு மரிதே
கவனியுல குளமலைக ளவையுமொரு கணமதிற்
கனகமென வாக்கி வைப்பேங்
காட்டிரும் பைத்தங்கப் பணமெனச் செய்குவங்
கருதுவங் கத்தை வெட்டி
உவகையுற வெள்ளியது வாக்காட்டி யாவர்க்கு
மொப்பிப்ப நாக மதனை
யொன்றுஞ் செயாதுபொனு லோகமே யாக்குவே
முரியகரி கொணரில் நிற்கே
தவறிலைத ராதலத் தோங்குமா தங்கமாத்
தருவமெந் தகைமை காணுய்
சத்தியநம் வித்தைகட் கருமையா தேபழைய
சாதம் புளித்த தீரே. (௫௫)



### ஊர்-சிலேடை-நேரிசைவெண்பா.

நீரம் புயஞ்சாலி நீள்கழனி வீரர்புயங்
கூரம்பு தாக்கவளர் கோடையே—சீரருள்வர்
எந்தமெய்ஞ் ஞானியா ரென்றுலக மேத்திடவு
வந்தமெய்ஞ் ஞானியார் வாழ்வு. (௫௬)

### ஒரோலி வெண்டுறை.

வாழ்வளிக்குஞ் சீரருள்வார் மதியளிக்கும் பேரளியார் வணங்கினோர்க்குத்
தாழ்வகற்றித் தருந்திருவார் தகைமைமிகுங்கோட்டாற்றூர்தானையேத்தி [ல்
ஆழ்பவத்துன் பதுவடையா தகண்டவடி வாவீர்
ஊழ்வினையும் பாழ்வினையா முற்றுணர்மின் னீரே. (௫௭)

### செவியறிவுறூஉம் மருட்பா.

நீர்மெய்க் கருத்தறியா தேபலநா னீண்டநாள்
ஊர்மெய்க்கக் கற்றனமென் றோதுகிற்பீர்—சீர்வைத்த
செந்தமிழ்ப் புலமைத் தேர்ச்சியான் மிக்க
விந்தையிற் பலவாய் விரித்துப் பேசுவிர்
அதனாற் றன்மெய் யறிந்திடற் கெதுவும்
விதிநெறி யுண்டேல் விளம்புதிர் புலவீர்
தன்னையறிந்த தனிமெய்ஞ் ஞானிதான்
சொன்னமெய்ஞ் ஞானமுட் டோன்றப்
பன்னரு மதனுட் பயனுணர் வீரே. (௫௮)

### நேரிசைவெண்பா.

உணருமுணர் வாலுள் ளுவந்துநீர் நோக்கில்
புணரும் புணர்ப்பெல்லாம் பொய்யா—மணமருவுந்
தந்தநதி யாரருளிற் றந்தருண்மெய்ஞ் ஞானமாந்
தந்தனதி யாரறிவர் தான். (௫௯)

### கலிநிலைத்துறை.

தானம் பொழிமா தங்கம் பொலிபூ தரநாடார்
பானந் துலவும் வயலார் கோடைப் பதிவாழ்வார்
ஞானந் தருமெய்ஞ் ஞானு கரறென் னவைநீத்தே
வானம் பரநா டியர்வாழ் வருள வல்லாரே. (௬௦)

## க ளி.

### எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வல்லகுரு மெய்ஞ்ஞானி யாரருளின் களியே
வாக்குமனங் காயமெனும் வகைமூன்று மகிழத்
தொல்லைவினைப் பிணியுமொரு மாமாயப் பேயின்
றொடர்புமறுத் தரியசிவ தொம்பததற் பதமேல்

நல்லவசி பதமருவித் திரிவிதகா லத்து
நல்கிடுமோ னந்தமென ஞங்கண்டுட் கொண்டேம்
எல்லையிலாக் களிப்புடையே மாகினமா லந்த
வெக்களிப்புக் கிணையுரைக்க வெக்களிப்பு மிலையே. (௬௧)

## கா ர் கா ல ம்.

### கலிநிலைத்துறை.

இலையென்ற தருள்கின்ற வியனின்ற குடிகொண்ட வின்கோடையார்
மலையென்ற முலையொன்ற வணைகின்ற மதிகொண்டு வருவார்கொலோ
சிலைகொண்டு மதனம்பு பொழிகின்ற தெனவிங்கு சிலையோடுவிண்
கலைவின்றி நிலைநின்று முகிலம்பு பொழிகின்ற கார்காலமே. (௬௨)

### மடக்கு. கட்டளைக்கலிப்பா.

காலமுங்கற் பனையுங் கடந்தவர்
கதிக்கும்யோக வினையுங் கடந்தவர்
பாலமேனடு வாசிகண் ணட்டினர்
பகருமானந்த வாசிகண் ணட்டினர்
சீலமன்பு திகழ்வடி வாயினர்
செஞ்சொல்ஞானந் தினம்வடி வாயினர்
தாலம்போற்றுதென் கோடை யகத்தரே
தாளுமென்மனந் தங்கி யகத்தரே. (௬௩)

## உயிர்வருக்கை.

### நிலைமண்டில வாசிரியப்பா.

அகவிருள் பறிக்குஞ் சுகவருள் குறிக்கும்
ஆர்வந் தழீஇய சீர்வழி கெழூஉம்
இசையு மியலும் வசையக னயமும்
ஈகையுங் கருணையு மோகையு நிறைதரூஉம்
உளத்தவ ரமர்ந்த வளத்திருக் கோடை
ஊருமென் னகமுங் கூரக முறவாழ்
எண்ணிலா நற்றவத் தண்ணிலா வியசீர்
ஏகமெய்ஞ் ஞானியர் சோகம தொரீஇ
ஐயந் திரிபறத் துய்யவர் தேர்ந்த
ஒப்பிலாக் கல்வியும் பொற்புறு செல்வமும்
ஓதரு சீர்த்தியு மேதகு முத்தியும்
ஔவிய மொழித்தெனக் கிவ்வயி னருள்வரே. (௬௪)

## ஊ ச ல்.

### எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அரியகாற் கரணமர கதக்கா ணட்டி
யகனவரப் பலகையினை யமைத்துச் சேர்த்துப்



பெரியவருட் பாசச்சங் கிலியைக் கோத்துப்
பேதாபே தங்கடந்து பிறங்கு ஞானத்
துரியதுரி யாதீதக் கலைமேற் கட்டிச்
சோதிநிறீஇ நடுவணையிற் சுகமா மேவி
விரியவருள் கருணையினீ ராட லூசல்
மெய்ஞ்ஞானி யாம்பெரியீ ராட லூசல். (௬௫)

### ஈற்றடிமிக்குவந்த நான்கடிக் கலித்தாழிசை.

ஊசலென வாசைமன மோடியலைந் தாடாமே
மாசுடைய வேசையர்த மாயமதிற் றோயாமே
தேசுநிக ணேசநிதி தேவகதி மேல்வாழப்
பாசமக றந்தநதி வாசர்புகழ் பாடீரே
பாகனமெய் ஞானமிசை யோகர்புகழ் பாடீரே. (௬௬)

### மடக்கு-வெளிவிருத்தம்.

பாடலன்பு கொடுதொடுப்பார் பவமறுப்பார்
பவமறுப்பார் கோட்டா றுற்றூர்
வீடமர வேண்டுநர்க்கும் மெய்யுடையார்
மெய்யுடையார் கோட்டா றுற்றூர்
பாடகலப் பணியார்கள் பார்க்கரியார்
பார்க்கரியார் கோட்டா றுற்றூர்
தேடரிய ஞானநிறை செய்யகத்தார்
செய்யகத்தார் கோட்டா றுற்றூர். (௬௭)

### வெண்டளைக்கலிப்பா.

உற்று றுறவினர்தாயோடு தந்தை யும்மையல்லால்
மற்று றெனக்கிந்த வையகத்து மாதவமாய்க்
கற்றூர் புகழ்கோடைக் கண்ணமர்மெய்ஞ் ஞானியரே
சற்று நிலுமுமது தாள்காட்ட லாகாதோ. (௬௮)

## இளவேனில்.

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தோமகன்மெய்ஞ் ஞானியர்வாழ் கோடைநகர்
தனித்துவைத்துத் துணிவா யென்னைத்
தாமகன்றூர் வளர்நாட்டி லிலைபோலு
மலையமலை தனிற்ச னித்துத்
தேமருவும் பொழில்வாவி மலர்மணநுண்
டாதாடித் திரிந்தே யோடிப்
பூமருவு மிளவேனில் வரவருத்துஞ்
சிறுதென்றற் புலிதான் மாதோ. (௬௯)

## முதுவேனில்.

### எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மாதரையின் மாதர்மிகு மாதரசே யெனது
மனவருத்த மெவரிடத்து வழுத்துவ னீகேளாய்
ஓதரிய மதியங்கிப் பொறிபறக்கத் தென்ற
லூதிநிற்க மதனம்பு முளவணையுந் துவராய்
மீதமரத் தெளிபனிநீர் நெய்யெனமேல் வீழ
மெய்வெதுப்ப முறச்செய்முது வேனிலும்வந் ததுவால்
நாதனமர் திருக்கோடை நகரினரென் பாலாய்
நண்புடன்வந் தணைந்தருளு நாளெந்த நாளே. (எ0)

### இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

நாடுமின் நாடுமின் நாடுமின் நாடுமின்
கூடுவிட் டாவிநெட் டோடுமுன் கோடையின்
மாடுளார் பாத மலர். (எக)

### இணைக்குற ளாசிரியப்பா.

மலர்தலை யுலகின் மல்கிருள் ப்ாற்ற
அலரவன் வந்தாங் கலகில்சிர் தழீஇ
ஏத்துநர் பணிகுநர் யாவர் மாட்டு
மலவிரு ளகன்று புலர்தர வளத்தில்
திருவிற் கல்வியி லொருவில் சீர்த்தியில்
பொருவில் கோடைப் புரியிடைப் போந்தும்
ஒருமறை யாய்ந்து மிருவினை வீழ்த்தி
மும்மல மொரீஇ நன்மையின் திரீஇய
நாற்பத மேற்பத மேற்பது குறிக்கொண்
டைந்தின் வலிகெடச் சிந்தையி னடக்கி
அறுவகைச் சமாதியி னுறுநிலை வழாஅதும்
எழுதலை யுற்றும் விழைவுல கடைய
அட்ட சித்தியு மட்டில் லாமே
செய்தொன் பதுவழி யெய்து சட்டையின்
பற்று நீக்கியின் பத்த ளாகி
யோக வாசியா யேக வாசியைச்
சுத்தநிர்க் குணத்தைத் தத்துவ மணத்தை
அத்து விதத்தை நித்திய வத்துவை
பால நடுவணைச் சீலச் சோதியைக்
கண்டு கொண்டும்
வென்றி நின்றும்



இன்ப வாரிபுக் கன்பரா னுரே
என்செய் கோயான் என்செய் கோயான்
வம்பினிற் பொல்லா மாதரை
மாதரை மாதிரி லிவரேமாதர்
என்னப்
பார்த்தும் வேர்த்தும்
ஆர்த்த மயலி லீர்த்தலைத் தென்றும்
அவர்க்கா ளவாவி னடிக்கடி யவர்வாழ்
தெருத் தொறுஞ் சுற்ற
வருத்திய வருத்திப்
புன்மனக் கொடுமையை யென்னெனப் புகல்கேன்
அதாஅன்று
சான்றவர் மதிக்கத் தகாதென வெறுத்து
வெறுக்கை யென்ன விளம்பி விடுத்த
பொன்னை மண்ணை யெண்ணி யெண்ணி
ஊர்தொறும் நாடொறுந் தேடுவான்
ஓடி வாடிக்
கன்னு மன்னு தென்னு வென்னப்
பாடிப் பாடிப் பற்பல வகையாய்ச்
சொல்லினுஞ் சொல்லின் சுவைநனி தேரா
திகழ்ந்தரைக் காசு மீயா வுலோபர்
பாற்சென் றளவில் பாப்புனைந் தேத்திப்
புகழ்ந்தனன் வறிதே போத மில்லேன்
அதாஅன்று
மாதவ ரிகழுந் தீதுடைத் தேகம்
ஆயினு முமது நேயசீ ரோதிப்
போற்றக் கிடைத்தவென் னுற்றவுடம்பின்
உற்றநோய் வருத்த மொருவா றுரைக்க
முடியா ததுநும் முன்னுணர் வுக்கிங்
கறியா தேதுள தருட்க ணோக்கா
திருந்திடி னந்தோ
என்செய் கோயான் என்செய் கோயான்
இன்னும் பராமுக மெய்த லடாதால்
வேண்டுவார் வேண்டுவ விரைந்தருள் செய்தீ
ஆண்டகை யென்ப தறிந்தும்
புண்ணியம் பழுத்தநின் பொன்னடி யிறைஞ்சினன்
அன்னவந் தாண்டெனக் கருள்புரிவீரே. (எஉ)

**நேரிசைச் சிந்தியல் வெண்பா.**

அருள்வளர்தென் கோடைநக ராதிபர்நற் றெய்வத்
தெருள்வளர்மெய்ஞ் ஞானியரென் சிந்தை—யிருளகல
நோக்கியருள் ஞானபா னு. (எ௩)

## கூ திர் கா ல ம்.

**எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

பானுமுகிற் படம்போர்த்துச் சவிமழுங்கிப்
பயந்துலவ வாடைவந்து பாயுங் காலம்
சானுவிரண் டுந்தாடை மோதப்பற்பல்
லுளமிட வுடன்முடக்கித் தயங்குங் காலம்
கூனுமதிக் குடையன்மணக் கோலஞ் செய்யக்
கொண்டிக்கு வலயமுறக் குலவுங் காலம்
தேனுகும் பொழிற்கோடை நகராரென்னைச்
சேரவரா திருந்தமனந் திகைக்குங் காலம். (எ௪)

## பாலனைப் பழித்தல்.

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

கால வசத்தாற் பழையனபோய்ப் புதிய புகினுங் கரிசலவென்
றேல மிகுநன் னான்முறையை யூன்றி யுணர்ந்தோ வுன்னுலோ
பால னினைப்பெற் றதுமுதலாப் பரத்தை யணையப் பரிந்துற்றார்
ஞாலம் புகழ்தென் கோட்டாற்றூர் நண்புற் றகலா நாயகரே. (எ௫)

**விருத்தக் கலித்துறை.**

நாடா திருந்திட்ட மூழூடர்க் கருள்ஞான நல்காதவர்
கோடா திருந்திட்ட நற்கோல் மலாட்டெங்கள் கோட்டாற்றினார்
தாடா திருந்திட்ட புகழ்பாடல் விட்டினர் தமையோதியே
வாடா திருந்திட்ட முலகின்க ணில்லாவில் வல்லோர்களே. (எ௬)

## த ழை.

**கட்டளைக்கலித்துறை.**

வல்லவந் தங்குமெய்ஞ் ஞானியர் கோடையின் மாநடையை
வெல்லவந் தங்குல வுங்கனி யேற்று விழைவொடுபின்
புல்லவந் தங்குட மாமுலை கண்ணிற் பரிந்தணைத்தே
நல்லவந் தங்குண முற்றுவி பெற்றன ணற்றவனே. (எஎ)

**நேரிசைவெண்பா.**

நற்றவருங் கொற்றவரு நாடுபுகழ்க் கோட்டாற்றூர்க்
குற்றவருங் கொற்றவகை யோதரிதால்—இற்றவுயிர்
தந்தார்க்குந் தன்னிலையைத் தானறிய ஞானமுறைத்
தந்தார்க்குந் தன்மையுணர்ந் தால். (எ௮)



## நிரோட்டகம்.

**மடக்கு-கட்டளைக்கலிப்பா.**

தாலக் கண்டனந் தன்னிற் றனதனேர்
தங்கக் கண்டநந் தந்தந்தியினர்
சாலக் கண்டனந் தந்த நகையிசை
தாளங் கண்டனந் தன்னடை யன்னதே
ஆலக் கண்டனந் தங்க நகத்தின
ளாசைக் கண்டனந் தன்னீ ரறிகிலாள்
காலக் கண்டனங் கந்தழ லாக்கனங்
கன்னைக் கண்டனங் கண்டனை கர்த்தரே. (எ௯)

## இ டை ச் சி யா ர்.

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

கற்றறிந்தா ரேத்துபுகழ் ஞானிதிருக் கோட்டாற்றுக் கடிநகர்க்குள்
உற்றதனம் வல்லினமாச் சிலம்படிகள் மெல்லினமா யொருங்கு தேயப்
பெற்றவிடை யினமாலில் வந்தவிடை யினமின்னீர் பெருமா லாக
விற்றரும்பா லாடையிலா தரைப்பணப்பா லெற்குவிட விரும்பு வீரே.

**ஒத்தாழிசைக்கலிப்பா.**

விரும்பாத வனுமதியுந் தகைதீரப் புகுஞ்சினை
அரும்பாருங் கொம்பர்மணை மாரமலர் மலர்க்காவில்
சுரும்பார்க்குங் குரல்கேட்டுக் கந்திருவர் யாழ்கேளா
தொருங்காங்கு பயின்றும்பு ருளமகிழ வளர்வளஞ்சூழ்
தருங்காம னகரனைய தாங்கோடை மாநகர்வாய்

பொல்லாத மடமாதர் மயனீங்கிப் பொருவிலாச்
சொல்லார்ந்த புகழ்வாழ்விற் சுகிக்கநீ விரும்பினையேல்
வல்லார்மெய்ஞ் ஞானியர்தாள் வாழ்த்துவாய் மடநெஞ்சே

பண்டாரும் புலைநெறியைப் படுத்துயர்ந்து மேலாகக்
கொண்டாடு மொருவாழ்வு குடிகொள்ள விரும்பினையேல்
வண்டார்மெய்ஞ் ஞானியர்தாள் வாழ்த்துவாய் மடநெஞ்சே

நம்பாத மெய்ந்நிலையை நாடிவரு பல்பேத
வெம்பாவ வினைநீங்கு மெய்வாழ்வை விரும்பினையேல்
வம்பார்மெய்ஞ் ஞானியர்தாள் வாழ்த்துவாய் மடநெஞ்சே

எனவாங்கு,

கற்றவ ருள்ளங் கருதுமெய்ஞ் ஞான
நற்றவ முடையீர் நான்மறை வழியே
சொற்றமெய்ஞ் ஞானத் துறைக்கட லாடி

இன்பந் திளைக்க வெற்கே
அன்பின் கொருவா தளித்தனும் பரமே. (அக)

**வண்ணச்சந்தவிருத்தம்.**

*தனத்தாத் தாத்தன தானன - தனதான*

பரத்தாற் ருக்கன மாமலை முலையாலே
பசட்டாக் காக்கைய ராசையி லுலையாதே
வரத்தாற் ருக்கிய யோகமு மகிமேலே
மதிப்பாற் பாக்கிய ஞானமு மருள்வாயே
தரத்தாற் பார்ப்பதி லேமிகு மெழிலாலே
சகத்தேத் தாக்கமு மேதகு தவமீதே
திரத்தாற் றாக்கிய லார்புகழ் தருசீரூர்
திருக்கோட் டாற்றுறை ஞானியர் பெருமானே. (அஉ)

**நேரிசைவெண்பா.**

மானந் தரிக்குமந்த மார்குழல்கண் டங்கணிவள்
மானந் தரிக்குமந்த மாருதத்தாற்—றேனுந்தல்
ஆங்கா வளஞ்சுகங்கண் ணார்கோடை நாதாநின்
பாங்கா வளஞ்சுகங்கண் பார். (அந)

**எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.**

பாவையின்று செவ்வந்தி மாலைவரப் பார்த்தே
பகரிதா மரைக்கலைகை தாங்குவளை நழுவத்
தாவிமென் மதபாண மாம்பலுந்தி யாகத்
தாக்கமுலை பசந்துமனோ ரஞ்சிதமு மில்லா
தாவலறிக் கதிர்ப்பச்சை வாசியெங்கே துன்ப
மாரோசாற் றுவர்மல்லி கைத்தாயெற் பெற்ற
பூவைபிச்சி யென்றழுதா ளணைந்தருள்வீர் கோடைப்
புண்ணியமெய்ஞ் ஞானபர போதநிலை வரரே. (அச)

## நற்றாயிரங்கல்.

**வண்ணச் சந்தவிருத்தம்.**

*தனதந்ததந்த தனதந்ததந்த தனதந்ததந்த தனனா.*

வரமுஞ்சிறந்த தரமுங்கசிந்த மனமுந்தருந்த வசியாய்
வளரும்பரந்த புகழும்பொதிந்த வராந்தநந்த நதியார்
திருமுன்பணிந்து தவமும்பரிந்து தினமுங்கனிந்து திறமாச்
செயவும்பிறந்த மகளென்குழந்தை செயலென்றுணிந்து நவில்கேன்
உருவங்கரந்த மதனென்கவந்த வொருவஞ்சகன்ற னுடனே
யுயிரென்றிருந்த வெனையுந்துறந்து முறுவங்கிவெந்த சுரமே
பரவும்பசந்த படிவந்தகைந்து பழிவந்துநந்த விதியோ
பருவம்படிந்த பினரிங்கணைந்த பயனன்றுநன்று பனவே. (அரு)



**வஞ்சிப்பா.**

பன்னற் கரிய வன்னக் குழுக்கள்
துங்க மணியைத் தங்கரு வென்னக்
காக்கு மிக்க வாக்க வயலிற்
பூங்கு வளையுட் டேங்கு வளைகள்
பதிவளைத் தந்த நதிவள ரெந்தம்
கவலை யொழிய நவநிதி மகிழ்ந்தே
அருளற் புதத் தெருள் விற்பன
மெய்ஞ்ஞா னியரே யஞ்ஞா னவிருள்
பாற்றும் பானுத் தோற்ற மனனே (அசு)

**கட்டளைக்கலித்துறை.**

மனம்பரந் தங்க மலையிடை மாதன மாதர்கள்பால்
மனம்பரந் தங்க மதிவலி குன்றி மருண்டலையா
மனம்பரந் தங்க மதியுயர் மாட வளக்கோடையார்
மனம்பரந் தங்க மலக்கழ லேத்தின் மலமறுமே. (அஎ)

**நேரிசைவெண்பா.**

மலப்பிணிக்கு நல்ல மருந்தொன்று கண்டேன்
சொலப்பிணிக்கும் பந்தங்க ளுண்டாம்—உலப்பில்வளந்
தந்ததந்த வாற்றுநகர் தங்குமெய்ஞ்ஞா னப்பொருளாச்
சந்தந்த வாததுவாய்த் தான். (அஅ)

## நாணிக்கண்புதைத்தல்.

**கொச்சகக் கலிப்பா.**

தானேதனக்கு நிகர்த்திருக்குந் தனிமெய்ஞ்ஞானி தடவரையின்
மானேதனத்தின் குடத்தைவெளி வைத்தேயுலவு மச்சத்தை
ஏனேபுதைத்து நிற்கின்ற யிதுவோவுனக்குத் தகுதியன்றால்
கானேயனைய குழன்மயிலே கல்லார்செய்யுங் கருமமிதே. (அகூ)

**அடிமறி மண்டில வாசிரியப்பா.**

தேறல் பம்பிய தேமலர்த் தாமரை
கூறு நீர்வயற் கோட்டின் மலர்ந்திடச்
சாறு மறுகருத் தனிவளத் தந்த
வாறு நகரி னமரு ஞானியர்
பேறருள் பெறப் பெற்றனந் தவமே. (கூ0)

**ஆசிரியத்தாழிசை.**

தவமிக் கடியேன் றனக்குவந் தன்பினாந்
துவமிக் கற்கரும் யோகமீந் தாண்டவர்
நவமெய்ஞ் ஞானமு ணன்னிய போதரே. (கூக)

### வலைச்சியார்.

நேரிசை யாசிரியப்பா.

போத மகன்ற புருடரா மீன்களை
ஓதற் கரியதா யொருகணத் துள்ளே
தன்வயப் படுத்தத் தக்ககண் வலையொடு
பொன்வயத் துடுத்த புரிசையு மகழும்
நரகமா நகரென நவிலிரு நகர்க்கும்
போகமும் யோகமும் பொருந்தக் காக்குந்
தன்மையி னிறீஇய தந்த நதியின்
நன்மறு குலவி நண்வலைச் சியரே
என்னே யோர்வலை யெடுத்துழல் கின்றீர்
பன்னீர் பிடிக்கப் படுமுயி ரெதுவோ
கெளிறு வராலொடு கெண்டை ஞெண்டாதி
வளமலி நும்வயின் வதிகின் றனவே
ஆம்பலுக் கலரு மாம்பலும் பகலில்
அலரவற் கலரு மலருஞ் சைவலக்
கொத்தும் பலவுங் குலவிய தடமே
ஆக வாக மமைந்தநீ ரெந்த
ஆவி வேட்டிங் கலைகின் றீரோ
அறிகிலே மஃதை யறிய
அறிவிப் பீரேல் யாங்கூட் டுதுமே. (௯௨)

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

மேலிருக்கும் வானவர்க்கு மேதினிக்குட் பல்லுயிர்க்கும்
நாவிருக்குப் பல்கலையும் நவன்றிருக்கு மாதவர்க்கும்
மாலிருக்குந் திருஞானம் வளர்ந்திருக்கும் படிதந்தெம்
பாலிருக்கு ஞானியர்க்கே படித்திருக்கப் படிப்பீரே. (௯௩)

வண்ணக்கலித்துறை.

படியி லடியவ ருடைய வினைகளை பண்பினர்
கொடிய நடையின ரடைய வரியதென் கோடையார்
முடிவி னடமிடு மடியர் நமதுள முன்னுவார்
நெடிய தடவருள் படிய நினைதினை நெஞ்சமே. (௯௪)

வஞ்சிவிருத்தம்.

தினமன நொந்து திகைக்காமல்
மனமுன வந்து மதிப்பான
தனதரு டந்து தமிழ்ச்சீர்கொள்
நனவரு டந்த நதிக்காரே. (௯௫)



### வண்டுவிடுதூது.

நேரிசை வெண்பா.

காரளிகாள் நீரென் கவலையொழி யச்சென்று
பேரளிகாட் டுங்கோடைப் பெம்மானூர்—பாலுரைமின்
வந்துவந்து மோதமதன் வம்பினம்பு பாயமதி
இந்துவந்து காய்துயரை யே. (௯௬)

### தாழிசை.

ஏவைநிகர்த்த விழிகாட்டி யிருளேயனைய குழல்காட்டி
  யிருமாமலைபோன் முலைகாட்டி யிடையில் வெளியி னியல்காட்டி
மாவையுறுத்த வுருக்காட்டி மதிக்குமதிக்கு முகங்காட்டி
  வண்ணவுடையி னடைகாட்டி வழுத்தற்கொல்லா மயல்காட்டிப்
பாவைபுரைய வுலவுமடப் பாவையருக்குப் பணிபூரிந்து
  பந்தவினைக்குட் சுழலாமற் பரமஞானம் பெறவிரும்பிற்
கோவையடியார் மனந்துகுடி கொண்டமுகிலை வளமிகுந்த
  கோடைநகரின் மெய்ஞ்ஞானக் குருவைத்தினமும் பணிமனமே. ()

### பனிக்காலம்.

ஆசிரியச்சந்தத்தாழிசை.

மனக்காத லொருக்காலு மறக்கேன் மறக்கேன்
  மதனம்பு பாய்கின்ற தென்னென் றுரைக்கேன்
எனக்காக வத்தந்த நதியார்க் குரைப்பா
  ரிவரென்று மறிகில்லே னென்செய்வ னந்தோ
பனிக்காலம் வந்திந்தப் படிக்கென்னை வாட்டப்
  படுந்துன்ப மறியார்கொல் பதிநீங்கி யுற்றார்
வனக்காவி மலர்போலும் வரிக்கண்கொள் பாங்கி
  மாதேயென் னுயிரொன்றும் வகைசொல்லு வாயே. (௯௮)

### வெறிவிலக்கல்.

நேரிசை வெண்பா.

வரயருமை கொன்று மனத்தருமை கைவிட்டிங்
கேயருமை கொள்கின்றீ ரென்பயனோ—தூயருமை
விட்டுவிடார் தந்தநதி மெய்ஞ்ஞானி பாலென்னை
விட்டுவிடிற் கோட்டி விடும். (௯௯)

### கட்டளைக் கலித்துறை.

விடலரும் ஞான விபவ வுதிதம் விளங்குமணி
நடமிடு நாத நலமணி கோடையி னுடுமணி
கடலன ஞானக் கருமணி யென்னிரு கண்ணுண்மணி
திடமிகு செந்தமிழ் தந்தமெய்ஞ் ஞானத் திருமணியே. (௧00)

## திருக்கோட்டாற்றுக்கலம்பகம்
## முற்றுப்பெற்றது.

---

இக்கலம்ப காசிரியரியற்றிய தனிச் சித்திரகவிகள்

## திரிபங்கி.

கட்டளைக்கலித்துறை.

கற்பகமே தாமாமணியே நிதிகாரணரே
விற்பனமே வரமாமணியே கதிமேலவரே
அற்புதமே தருத்தாரகமே ததியாள்பவரே
நற்புகழே குருதாரகமே மதிஞானியரே. (க)

## சதுரங்க அசுவகதிபந்தம்.

இட்ட உத்தரம்.

ஞானமேழந்திநிலை.

நேரிசைவெண்பா.

போதமனத் துண்ணிறைந்த பூதரமே மாநிமல
சாதனத்திற் றந்தநதி தங்குமுத்தர்—மாதகைய
பாத கவலையைமுன் பாற்றுவா ஞகுமா.
நீதரே பூரணஞா னி. (உ)

## இரதபந்தமும் கூடசதுக்கமுமாம்.

நேரிசைவெண்பா.

ஞானமணி மோனவிதா ஞகருணை யார்ககனு
தாநாப தந்தனந்தந் தாண்டவஞ்செய்—வானிசைந்தி
ருந்தவச்சீர் நற்றவதா வோத வரமுந்து
தந்தநதி வந்தநா தா. (ங)

திருக்கோட்டாறு, திருவாங்கூர், கழதி, தேநூர், கன்னியாகுமரி, நாகர்கோவில்,
ஏர்வாடி, மேலப்பாளையம், ஆரூர், தற்கலை, திட்டுவளை, தோவாளை,
திருவனந்தபுரம், பறக்கை, சுசீந்திரம்,
ஆகிய இப்பதினைந்து ஊர்ப்பெயர்களும் அமையப்பாடியது.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மன்னுதிருக் கோட்டாற்று வந்ததிரு வாங்கூர்
மாகமுதி ஞானமணி தேநூர்தல் கண்டென்
கன்னியா குமரியமின் ஞகர்கோ விலையே
கருதல்கு விடைநுதலி னேர்வாடிப் பனிநீர்
தன்னையுமே லப்பாளை யம்பட ரவ்வாரூர்
தற்கலைவா திட்டுவளை சோரவந்தோ வாளைப்
பன்னுவிழித் திருவனந்த புரத்தகநீ ரொழுகப்
பறக்கையயச் சுசீந்திரற்குப் பகருவாரர் மானே. (ச)

மூன்றுவெண்பா.

நிலைமோனு வித்தகா காநாவல் வேதா
தலைவாம கத்துவபூ தானு—கலாநிதிமா
தத்துவா தீனு தராபரம தேசார்ந்த
கத்தனே ஞானு கரா. (ரு)

---

ஹாமீம்.

பிஸ்மில்லாஹி.

ஞானியார்சாகிபு அவர்கள்பேரில்

திருநெல்வேலிஜில்லா சாத்தன்குளம்

சி. வெ. அரவமூர்த்தி உபாத்தியாயர்

அவர்களியற்றிய

# தோத்திரப்பா.

---

## காப்பு.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

முன்னுமாய்ப் பின்னு மாகி முடிவுமாய் முடிவி லாத
மன்னுல குயிர்க ளெங்கு மருவியு மருவா தாகி
யென்னுளத் தறிவி லன்பா யிருந்திடு மினையி லாநற்
பொன்னுமாய் முதலாய் நிற்கும் பூரணஞ் சிரமேற் கொள்வாம். (க)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அருணிறை பழுத்த வானந்தக் கனியை யளவிடற் கரியநிட் களத்தைத்
திருவளர் தேவச் சிவப்பொருள் விளக்கைத் தேனினு மினியதெள் ளமுதைக்
கருவினு மெனைவைத் தமுதளித் தாண்ட காரணக் கடவுண்மா மணியைப்
பெருநிலம் புரக்குந் கனிமுத லான பெரும்பொரு ளினைந்துளந் தொழுவாம். (உ)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆசைநா யகனைக் குன்று வளவிலாப் புகழோன் றன்னைத்
தேசுறு முன்டிவே தாந்தச் சின்மயப் பொருளை வாழ்த்தி
மாசறு மறைமா லோங்கு மணியிற சூலைப் போற்றி
நேசமாங் குருவைப் பாட நிறைஹல்லா ஜருளே காப்பாம். (ங)

---

இரட்டை ஆசிரியவிருத்தம்.

அருவாகி யுருவாகி யருளாகி யொளியாகி யளவிடா தானந்தமா
யண்டபகி ரண்டமு மெண்டிசையு மேலாகி யடிமுடியு நடுவுமாகிக்
கருவாகிக் கரையிலா துயிராகி நிலையாகிக் கதிராகி மதியுமாகிக்
கடலாகி மலையாகி யிருளாகி வெளியாகிக் காலாகி மாலுமாகி
மருவாகி மலராகி வளர்கனியு மாகன்மை மறையாகி மறைபொருளுமாய்
மனமாகி நினைவாகி மற்றுள வெலாமான மாமுதல்வ னருள்சீலமே
திருவாய் விளைந்தகற் கதியே நலம்பெருகு தென்கோடை நகரின்வாழ்வே
திறந்தருநி யானமொரு நிறந்தருவி தானவருள் சிறந்திடுமெய்ஞ் ஞானகுருவே ()

சுந்தரா னந்தகுரு தேசிக சிகாமணி சோதிப்பிர காசமுதலே
சொல்லரிய நன்னிலைச் சுகிர்தகரு ணாகரா தூயவே தாந்தநாதா
எந்தம்வினை யைத்தூரத் திடுமெங்க ளிறைவனே யிணையிலா விருகண்மணியே
யேகபெரி யவனருளும் வாகுசிறை யோகமே யேகசற் சங்கநிதியே
பந்தாடு மூலைமாதர் மோகவலை யிற்சிக்கிப் பாழ்மன மலைந்துலைந்து
பலனேது மற்றதுற் குணமே மிகுத்தவிப் பதகனெனை யாள்வதென்றோ
சிந்தாகு லந்தீரு கந்தகரு கூலமே தென்கோடை நகரின்வாழ்வே
திறந்தருதி யானமொரு நிறந்தருவி தானவருள் சிறந்திடுமெய்ஞ் ஞானகுருவே.

பொல்லாத காமிநிலை நில்லாத கோபிகொலை புரிகின்ற வன்னெஞ்சனேன்
பொய்யே மிகுத்திடும் புலையினேன் குண்டணிப் புன்மையே னன்மை நிலையைக்
கல்லாத புல்லனபி மானமே யென்பதிலை கருதுவ தெலாந் திநெறிக்
கள்ளமெல் லாமுள்ள முழுதுமே வஞ்சகக் கசடனே னுக்கருள்வையோ
எல்லா மறிந்தஹல் லாஜருளும் வள்ளலே யெனையாளு நித்யவடிவே
யெண்ணாத வெண்ணங்கள் பலகோடி யொருகொடியி லெண்ணியழி கின்றமனது
செல்லாத விடமெலாஞ் செல்லாம லுதவிசெய் தென்கோடை நகரின்வாழ்வே
திறந்தருதி யானமொரு நிறந்தருவி தானவருள் சிறந்திடுமெய்ஞ் ஞானகுருவே.()

மங்காதெ மூங்தொளிரும் வயிரமணி யேமுத்து மறுவிலா மாணிக்கமே
மாசிலா முழுநீல வயிடூர்ய மேகருணை வாருதி தயாமேருவே
சிங்கார மாமனைவி மக்கண்மே லெனதன்பு செல்லுதலல் லாதுதவமே
சிந்திக்க வொட்டுதிலை யான்செய்த கன்மமோ சிதடனே னளாவனோ
எங்கோனு நீயெனது மாதாபி தாவுநீ யென்னுயிர்த் துணையுநீயே
யேழையடி யேனுக்கிவ் வேளைவந் துதவியா யின்பவீ டருள்புரிகுவாய்
செங்கரும் பேமாற்று மதியாத தங்கமே தென்கோடை நகரின்வாழ்வே
திறந்தருதி யானமொரு நிறந்தருவி தானவருள் சிறந்திடுமெய்ஞ் ஞானகுருவே.

நல்வசன மேநாவி லுரையாத வம்பனொரு நலமுமறி யாதமூடன்
நாடினே னுனதினந் தேடினேன் மெய்ஞ்ஞான நற்பொருளு நீயாகையால்
வல்பிணிகள் மாயையை வேரோ டறுத்திடும் வல்லஹூல் லாஜளித்த
மவுனமந் திரமும்நீ கலியைத் தொலைத்துவிட வந்தமக ராஜனியே
பல்பிழைகள் செய்தமா பாவியே னென்முகம் பார்த்தரு ளிரங்குதேவே
பழுதிலா மாதவப் பொருளேயெ னன்பனே படரிலா மணிவிளக்கே
செல்வமா யுறுமனோ கரமேவி னோதமே தென்கோடை நகரின்வாழ்வே
திறந்தருதி யானமொரு நிறந்தருவி தானவருள் சிறந்திடுமெய்ஞ் ஞானகுருவே.

பணமிக விருந்தென்ன சனமிக விருந்தென்ன பதிபடை யிருந்துமென்ன
பரிசன மிருந்தென்ன ரதகஜ மிருந்தென்ன பல்லக் கிருந்துமென்ன
மணமான மலரணைவீ டழகோ டிருந்தென்ன மணிமுத் திருந்துமென்ன
மதியாத பீதாம் பரம்பட் டிருந்தென்ன வாகன மிருந்துமென்ன
குணமான கொடையாச ருமவா யிருந்தென்ன குறையாத வாடம்பரங்
கோலவிழி மாமனைவி காதல ரிருந்தென்ன கொலைசெயமன் வரும்வேளையில்
சேணமேனு மிவையெலாம் வருமோ வுயிர்க்குதவி தென்கோடை நகரின்வாழ்வே
திறந்தருதி யானமொரு நிறந்தருவி தானவருள் சிறந்திடுமெய்ஞ் ஞானகுருவே



எத்தனை படித்தாலு மெத்தனை யுரைத்தாலு மென்மன மிணங்குதிலையே
யென்றலையின் விதியிதோ வென்பாவ மோகொடிய னேன்பிறந் தேனுலகினிற்
பத்தியனு வளவிலாக் குற்றமுடை யேன்வாசி பாவனைக ளொன்றுமறியேன்
பஞ்சாட் சரத்தையென் னெஞ்சா னுடம்பிற் பகுத்தறிய மதியறிகிலேன்
சித்திதரு முமதடியை நத்தியொரு நாளுற்ற தெரிசனங் கண்டுமறியேன்
சிதறிப் பறந்தோடு மனதையொரு நிலைமையிற் சேர்த்துவைத் தருளையறியேன்
சித்துவினை யாடிவரும் வற்றாத செல்வமே தென்கோடை நகரின்வாழ்வே
திறந்தருதி யானமொரு நிறந்தருவி தானவருள் சிறந்திடுமெய்ஞ் ஞானகுருவே.

கொந்தார் மலர்க்குழற் கருமுகிற் கயல்விழிக் குயில்மொழித் தரளநகைசெங்
குமுதவாய்க் குழைவள்ளை குறைவிலா மதிமுகக் கோதையர் சொகுங்காதலால்
நைந்தே னுலைந்துடல் மெலிந்தேன் மிகுந்துயரில் நாள்முழு வதுங்கழித்து
நலனேது மற்றுமொரு பலனேது மறியாத நாயினே னளாவனோ
சந்தான கற்பகத் தண்ணமுத மேநினைச் சார்ந்தவர் தயங்கிடுவரோ
சந்தாரும் ஞானசா கரமே பெருஞ்சுத்த சைதன்ய சாயுச்யமே
செந்தா மரைத்தடந் தென்கமுகு சோலைசூழ் தென்கோடை நகரின்வாழ்வே
திறந்தருதி யானமொரு நிறந்தருவி தானவருள் சிறந்திடுமெய்ஞ் ஞானகுருவே.

பொய்யான வுலகமிது சந்தையிற் கூட்டமெனப் போதத்தி னலறிந்தும்
பொல்லா மனத்தினால் வல்லாண்மை பேசியென் புத்தியைப் போக்கடித்து
மெய்யான சுகநிஷ்டை சாதித் திடாமலு மிகுவித்தை கற்றவன்போல்
மேதினியி லிரவுபகல் வீண்டம்ப மேபேசி வினைகளை மிகத்தேடினேன்
அய்யாவென் மீதினி லிரக்கமிலை யோவல்ல தசடனிவ னென்றெண்ணியோ
வழகான யோகசித் திரைசமய மோநீயு மறியாத தேதுமிலையே
செய்யாத வினைசெய்த சிதடனுனை யண்டினேன் றென்கோடை நகரின்வாழ்வே
திறந்தருதி யானமொரு நிறந்தருவி தானவருள் சிறந்திடுமெய்ஞ் ஞானகுருவே.

என்போலு மாபாவி யுலகத்தி லெங்குமிலை யேதென் றெடுத்துரைப்பே
னிமையளவு போதேனு மிறையருளை நாடியமு தேங்கிமுகம் வாடியறியேன்
துன்பமுறு மண்ணாசை பெண்ணாசை யான்மனஞ் சுழலுதே மதிமயங்கித்
தொல்லைவினை யோவிது நல்லதவ மில்லாத தோசியா னளாவனோ
அன்பேயென் னன்பிலுறு மானந்த வெள்ளமே யருள்ஞான மணிவிளக்கே
யடிமையே னின்னமு மவலமா காதபடி யரசேநீ யருளிரங்காய்
தென்பிறங் குங்கழனி செஞ்சாலி விளைவுறும் தென்கோடை நகரின்வாழ்வே
திறந்தருதி யானமொரு நிறந்தருவி தானவருள் சிறந்திடுமெய்ஞ் ஞானகுருவே.

ஒப்பிலான் றன்னரு ளுறைந்தஹல் லாஜருளு முண்மைமெய்ஞ் ஞானவடிவே
யுலையாப் பெருந்தவக் கனியே செழுங்கனியி னொழுகுசெந் தேனமுதமே
தப்பிலா நற்றவச் செய்குஉது மானொலி சாரதேசா தாதிபமே
தஞ்சமெனு முமதுதிரு சரணார விந்தமே தரவேண்டு மிதுதருணமே
எப்பிழைக ளும்பொறுத் தெனையாளு மன்னவே யின்பமே சம்பன்னமே
யேழையா னுமதடிமை யரவமூர்த் திக்கருளு மெளதுசற் குருநாதனே
செப்பரிய பொற்பிரபை கற்பக விளக்கமே தென்கோடை நகரின்வாழ்வே
திறந்தருதி யானமொரு நிறந்தருவி தானவருள் சிறந்திடுமெய்ஞ் ஞானகுருவே.

தோத்திரப்பாமுற்றுப்பெற்றது.

ஹாமீம்.

பிஸ்மில்லாஹி.

# ஞானியார்சாகிபு அவர்கள்பேரில்

கழதி

## கா. மீருனயினார்புலவரவர்கள்

இயற்றிய

# தியானமஞ்சரி.

## காப்பு.

### இரட்டை ஆசிரிய விருத்தம்.

மதியிரவி ககனமறு ஷெடுகுறஸ ஸெளஹகல மலர்வா றுமிக்கணமிருள்
மகிதலமு மலைதமர மிடுகடலு மசராசர மற்றுளவெலா மமைத்தே
அதிரிச நிரஞ்சன நிராதர நிராமயநி ராலம்ப வரியசுநிர்த
வாகமபு ராணமோ கத்துமெட் டாநிற்கு மஇலாட்சக முகூர்த்தம்
நதியுலவு குடவரையி னகுமணி சவேதகன் னிலவுகம் பித்தவளமை
நந்தாது சிந்திற் செழித்துவளர் தென்கோடை நகரில்வா ழெனதுகுருமா
அதிபுரியு மடியவர்க் கினியகல் பருள்பரம திரியநிலை பரவுகருணைத் [வே.
துறையிலமர் மோனமலி வானமெய்ஞ் ஞானவொலி தோள்புனைக் கவிதழைய

---

பூமேவு பழமறைப் பொருளாய்நி ராதாப் புண்யபூர் தருவைநிகராய்ப்
புவியினிற் புகழ்கொண்ட மஹ்மூதி னுக்குரிய பொன்மறைப் பொருளறிந்து
நாமேவு சொற்கொண் டுரைக்குமுஉது மான்லெப்பை ஆலிமாற் கருணைவள்ளல்
நவந்தரு துவக்கிரண் டெழும்ணி விளக்கென நல்முலவு ஷெய்குமன்ஞன்
தாமேவு கரதல தியாகதர் மத்திறுற் சந்ததிய தாகவந்த
தம்பர நிலைக்குரிய பொற்பொரு ளபூபக்கர் தந்தசுந் தரதீபமே
தேமேவு பொற்று மரைப்பதந் தந்தருள்செய் தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே.(௧)

மக்தமா ருதமுலவு காவனை முகப்புபொன் மலையென நிமிர்ந்திரண்டா
வதுபள்ளி வாசல்முன் றுவதழு லஸ்தான மணவறை யுறைந்தசோதி
சிந்துவரி சந்தன மெனுங்கரத லப்பிரபை தேசோமயானந்தமாய்
தேககஸ்தூரியுரு வாகையணி மஹ்மூது சிற்சபை விளங்கு நிதியே
சொந்தமென வுன்றனடி வந்துதொழு மடியவன் துயர்சிந்த் வந்தருளுவாய்
துங்கநற் சங்கரிநி யேபத்ம வாஸன சுகானந்த அரிய வாழ்வே
சிந்துபற் பலநீத சந்தம்வன் மேள்பாடு தென்கோடை நகரின் வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()



ஆதார மூன்றனிரு பாதார விந்தமே யல்லாது வேறுமுளதோ
வனுதினமு முனதுதிரு நாமமல் லாதுதுதி யடியனு வேறுசொலுமோ
மாதாபி தாவுநீ யாதலா லன்பர்க்கு மற்றுமொரு கதியுமுளதோ
மனுநீதி சற்குண விலாசபூ தரஞான மௌனகெம் பீரவாழ்வே
நாதா வெனக்குனருள் தாதாவி தாபதா நவசந்த்ர முகசுந்தரா
நாடுமடியா ரவர்கள் தேடுபொரு ளுதவுசம் பூர்ணநய முற்றகோவே
சிதார விந்தமலர் மீதார வஞ்சம்வளர் தென்கோடை நகராதிபா
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. (

சித்தம்வைத் தாலணுவு மோராகு மேருமொரு திரணமா முனது இருபைத்
திருவிழி திறந்துநோக் குற்றவர்க் குறுபவஞ் சிந்தித்து ணர்ந்துவிடுமே
சுத்தநிறை தீபமே கங்குலங் கோதையென் றுங்கமல முகையொக் குமோ
சொல்லுஞ் சுகந்தமுறு கனதனமி தென்றுபாச் சொல்லித் திரிந்தலைவனே
கந்துகட லுலகிற் றிரிந்துமட மாதர்மேற் காதல்கொண் டுற்றபாவக்
கனச்சுமையை நீக்கியுன தடிமையென வென்யாட்கொள் கிருணைக ரானந்தமே
சித்திபெறு முத்தமர்ம னத்தினி லிருந்தவுயர் தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

நித்யசுத் தத்தத்வ சத்தநி வுக்குளுயர் நீதிநெறி யொழுகுநிதியே
நிதவிரத நிறைகற்ப தருவேநிர் பானந்த நேமமுறு சுகிர்தநிறைவே
சத்யவே தாந்தசற் குருமுஹம் மதுதமைச் சந்தித் துறைந்தருவே
சகலகலை யறிவுபொறை தர்மகுண மதுவசன சந்தந் திகழ்ந்தசரதா
தத்துமலை சப்தித்து முத்துமணி சிகரந் தருகரைக் கடலுலகினிற்
றன்னனி தரும்பயோ தரமுறுக் கானலிற் றங்குபயிர் மங்குமாப்போற்
சித்தமுலை யாதபடி ரட்சிக்க வேண்டுமுயர் தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

பல்லொன்று சுரிமுகப் பணிலமணி நிரையொன்று பங்கயத் தைக்குவிக்கும்
பனிமதிய முனை மெழும்பயோ தரமொன்று பைங்கரும் கூந்தலொன்று
வில்லொன்று புருடிகன் னம்பொன்று சண்பகம விளங்குகுமி ழொன்றுசங்கம்
விரிபாளை கமுகெனுங் களமென்று மின்னொளி விரித்தபணி யுற்றசிகரக்
கல்லொன்று கனதனப் படமொன்று கடிதடக் கசமொன்று மடமாதரைக்
கவிகொண்டு பாடித் திரிந்தவென் பவச்சுமைக் கனநிலை யிறக்கி யருள்வாய்[ழ்
செல்லென்று மருவுமொழி துள்ளொன்று மணமலரு தெருவொன்று கோடைநகர்வா
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே.(

கறையற்ற சந்த்ரோத யத்திரு முகக்காட்சி கவின்றெழுகு நினதுகமலக்
கட்கருணை யொழுகுகம் பககமல விருகரக் காமர்நின் றெழுகுசிகரக்
குறையற்ற பூதரப் புயமீது குங்குமக் கோவைதேவெழுகவாசக்
குலவுவிக சிதகமல பாதமெரி சனைதரக் கோவே யெழுந்தருளுவாய்
சிறையற்ற பறவையிற் றேம்பநல் குரவெனும் தின்புலி யெழுந்துசிறித்
திவாந்த ரம்புக வெருட்டுதென் செய்குவேன் திருவிழி திறந்தருளுவாய்
செறிவற்ற தேனெழுகு மலர்கொண்ட சோலைவளர் தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

பல்லாயி ரங்கோடி யண்டத்தி னுற்றபற் பல்லுயி ரெலாம்புகழ்தரும்
பகரரிய சத்தசை தன்யப் பரமானந்த பழமூது ரைப்பொருளினைச்
சொல்லாது கந்தந்தச் சமுகசுக முற்றசோ பிதசுகிர்த ஞானமணியே
சுந்தர சவுந்தர துரந்தர புரந்தர சுவேதவிரு தயதீபமே
யல்லாத சிற்மூடக் கசடனு னுன்றனிரு கடிமலர்க் கழலருளினும்
கவிமதுர சித்ரவித் தாரம் படிக்கவுன் கனகருணை தந்தாளுவாய்
செல்லாட மயில்கண்டு நடமாடு சோலைசூழ் தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

பொற்பூ சலத்தினதி விற்பூ விளக்குறற் பொன்மேடை மீதுமாதர்
புனிதவம் மணிமலர்க் கையேந்தி யாடநற் புகழ்சவன மடமாதரார்
கற்பூ விளங்குபொற் பந்தெனக் கையேந்தி நகைமுக மலர்ந்தாடவான்
கறையுலவு தென்றலங் கன்றாட மலர்ச்சோலை நறுமலர்க் கொம்பாடமா
சொற்பூவி னற்கனி சொரிந்தாட மீதுற்ற சரிமுகக் கூனுறுகவி
சொல்லுதற் கரிதான நடமாட மரகதத் தோகைகின் றுடவோங்கும்
செற்பூ விலங்குதண் டண்டலைகள் சூழ்ந்திலகு தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

மகரமடு கடல்சுவற மலைசிதற வன்குர மழுத்திவின் ஞெருங்கிமேக
மலைதர கடித்துக்ர கதிகொண்டு பரிதிரத வாம்பரிக ளைச்சினந்து
பகரரிய மாருதத் தைக்கனன் றேறிப் பவனளிக ளையழக்கிப்
பந்தாடு துல்துல்மிசை வந்தேறு மலியெனும் புலிபணியும் சுபிநாயகர்
சுகரமல ரடியிணை தொழுந்துரிய நிதசுந் தராதிபதி சந்த்ரரூபா
சொந்தமென வந்துனடி நின்றுதொழு மென்றனைச் சூழ்வினை யகற்றியருள்வாய்
சிகரமணி மாடநிரை ககனமொடு நீடிவளர் தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

எந்தெந்த வகைகோர முன்றன்ற னிணையடியி னெனதுமன துதையமலது
மேதொன்று மிலைமிகுதி கோதொன்று கசடர்க் கிரங்கிவந் தருள்புரிகுவாய்
சந்தந்த முறுநின்பு யாசரத ஞானதய யாபரா னந்தநித்ய
தன்னனி யுறுங்கற்ப காவேதுயர்க்குமிகு சஞ்சீவி யருமருந்தே
தந்துன்ற னிருபதாம் புயமோட்ச சம்பூர்ண தகைதரு மாதவத்தின்
தருவைசந் த்ரோதயா வெனதுபா வக்கடல் தகர்க்கும்நித் யானந்தமே
சிந்தித்த தெவ்வையுமு வந்தருள்செய் வளமான தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

ஹாமீ மெனுங்கருணை யம்பக கிராமயக் கடவுளா னந்தவத்தைக்
கவினெழுகு பூங்கற்ப காவையங் காமுறுக் காமினி விளங்கு மதியை
நேமிதரு சுரிமுகப் பணிலமுத வாழுநெறி நிஷ்டைதரு ஞானமணியை
நிஷ்களா னந்தபரி பூரணத் தைத்தினமு நேசித் துறைந்த நிதியே
சாமீப சாலோக சாரூப சாயுட்சிய தகைகடக் தெங்கும் நின்ற
தற்பர நிலைக்குரிய பொற்பொருள தாய்வந்த சகலரட் சகநிதானி
தேமருவு நின்பதச் சேவைதக் தருளுவாய் தென்கோடை நகரின் வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவெலியே. ()



எந்தவித மோசோலி யெந்தவித மோகருணை யெந்தவிதமோ வறிகிலே
னேகமய மாயசர மசரமாய் நிரந்தர னிட்டசட் டனைநிஷ்டையோ
சந்தமணி மார்பரனல் ஹக்கெனும் ஹல்லாஜுல் சமுகசுக முற்றுறைவதோ
சரோருக மலர்ப்பாத நபிகளு யகமெனும் சருவரட் சகர்சமுகமோ
சிந்தனைய தாகினு முன்றனிரு கழலருள் தேடுமடி யார்கிலியானோர்
சிற்றடியன் நீயிட்ட நற்பணி யறிந்திலாத் தேகசோம் புற்றசிதடன்
சிந்தைதனில் வந்துனருள் தந்தாள் செழுந்தடத் தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

சந்தனு டவியடுத் துறைதரு வனந்தசுத கோடியுற் றுலும்வாசச்
தருமென்ப திவ்வுலக நீதியல வோவந்த சாதபூம் படீரமாமோ
உன்றனிரு கழலம் புயம்பணியு மடியவர்க் குறுசலி யடுங் கொடுமையா
லுழைபர நெடுங்கானி லோடியோ டித்திரிந் துறசல மிலாதுவாடிச்
சிந்துகண் ணீர்சொரியும் வாறுபோல் யானுந் தியங்கித் திரிந்தலைவனே
சிகரபூ தரதுங்க வம்புயப் பேரின்ப தேவே புரந் தருளுவாய்
செந்துவர்க் கொடிகுவளை நந்துமணி மிகுதடத் தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

என்போதும் நன்மனமி லாதசிறி யோர்கள்பிழை யெத்தனைசெய் தாலுமுலையி
லிடுநெருப் பினிலுருகு பொன்போற் குளிர்ந்தமன தினையுற்ற பெரியோர்பொறுத்
தன்பா லிரட்சிக்க விலையோ சுருக்கத் தடர்ந்தபிழை யைப்பொறுத்தே
யாதார மாய்நின்ற நாதாந்த வஸ்துமவ னைப்புரந் தாளவிலையோ
இன்பா லிரங்கிவந் தருள்வாயென் னிருதயத் திரவியே ஞானமணியே
யிகபர மிரண்டினு மேகமய மாய்நிற்கு மிறைவனருள் பெற்றநிதியே
தென்பாவி லன்புகொடு நன்பாவில் வலவர்துதி தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

பூவே செழுங்கற்ப காவேயென் னின்பவாத் மாவே புரந்தநிதியே
பொற்பூ சலத்தகில கோவே பவக்கடல் புகாதுகாக் குஞ்சதாவே
நாவே தருந்திரு மொழிக்குமேட் டாந்திரு நயனசய னத்துறைவதோ
நம்மே நிறைந்துகுறை யாதபொக் கிஷமேயுன் னன்மனை திரங்கிவருவாய்
ஏவே தரும்புழையி னிடுநெருப் பால்விதன மெய்துமவர் துனிநுமிகவா
யிருந்துதுய ரக்கட லழுந்துசிறு பைதலுக் கிதுதரு மோவெனரசே
தேவே நினைப்புகழ்ந்தன் னுவே கொடுத்தருள்செய் தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

துங்கமக ரந்தமல ராலையத் துறபுட் சாந்துகட் கலுழியுங்கு
சரமகர கின்னரத் திசைபாட மதுரசுக் தாழ்முழவு மழைமுழங்கப்
பொங்கொளி தருஞ்செம் மணிக்கட் கருங்குயிற் பூஞ்சுழ லொலிக்கசடனம்
புனிதகோ மளகலப மாடக் கவிக்குலம் பொற்கனியி னற்கனிதரச்
சங்கையுறு சினைமதி மறுத்துடைத் தோங்கிவிமிர் தண்டலையு லாவுதென்றற்
றருகுளிர்க் கொளித்தாடு வளமைதரு செல்வந் தரித்துலவு கோடைநகர்வாழ்
சிங்கமே மெய்ஞ்ஞான தீபமே யிருதயத் தெளிவே புரந்தருளுவாய்
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

தண்ணக் தளிர்க்கருங் குவளைபுதை யக்கமலத் தடமூழி மூடைக்குவாசத்
தாதுதிர்க் கக்குடை வளைக்குல முடைக்துகற் றவளமணி சிதறமேகம்
பண்ணும் புலம்பியெழ வாளையுள் ளமூக்குலிரு பகடுபூட் டியகலப்பை
பருமணிக் கொளுவிடத் தவிழ்மள்ளர் தென்பணைப் பாலெலா மூளைதெளிக்கக்
கண்ணெளித் தராக் கரும்பென வார்தருங் காமர்இளை யிற்கிளைத்து
கதிர்தரு மணிக்குலை சரிக்துவிளை யம்பணைக் காடெலாங் கமுகினங்கள்
திண்ணக் தருக்குலை சமர்த்தவு சோலைசூழ் தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

அம்பொற் செழுஞ்சுளையின் முட்புறக் கனிசுமக் தசைதரு பலாவொருபுற
மருதுகு பசுங்கனி சுமக்துகிளை யேக்கிகின் றுகித்தே மாவொருபுறம்
பம்புகரு மணியிற் கருங்கனி சுமக்துகிளை பாரித்த நவலொருபுறம்
பருவயிர மணியினற் கனிசிக்தி நக்தாது படர்கொம்பு வெலியொருபுறம்
விம்பக் தருக்கிருக் கனிசிக்து விரிதலைக் கொழுமிச்சை மிகுமொருபுறம்
மிருதுவா வியாச மூலவுபழ வெலுமிச்சை மேவிநிற் பதுமொருபுறம்
செம்பொற் செழுக்தே னுவட்டெடுத் தோயிசீர் தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

எண்ணரும் பலபடைப் பெவையும் புரக்தருளு மேசனருள் ஊலறத்தினி
லின்புற் றுறைக்துஜெம் மோடுஜெம் மாகியென திருவிழிமி ஹறைமணியதாய்ப்
பண்ணக் தருக்தம்பி யாடுபைக் தாரணிப் பகல்தரு சதாகரனெனப்
பகரிய ஞானே தயப்ரமா ணப்ரபல பாக்யயோக் கியத்தைநீதா
கண்ணிஜுரு செய்குஉது மாஜெலி சாகிபக் கருணைகொண் டுருசோதரா
கவிஜெருது ஞானப்பிர பந்தஞ் சொலித்தவென் கன்னே புரந்தருளுவாய்
தெண்ணிலவு ரத்தினம் முத்தினும் பண்ணைசெறி தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

அம்பொற் செழுங்கிரண மகிமீதி லிமசுடரி னவனியெல் லாம்விளங்கி
யாளுற கலைநிலை யடக்கியோ ராறென்ற வதிருண விலாசயோக
விம்பமுற் றெக்குநிறை யம்பொருளி ஞெடுற்ற மெய்ஞ்ஞான வேதபோத
விற்பனு நிபர்செய்து தாமீமா லீமெனும் பிருதுங்க சங்கரிதியே
கொம்புறு செழுங்கனி கொழுக்திரு மணிப்பிரபை கோதுற்ற பத்மநிதியே
குருமணிய தெனதிரு விழிமணிதா காலெப்பை குணமணிநல் லிருமணியையும்
செம்பொன்மணி யெனவீன்ற மணியேவக் தாளுவாய் தென்கோடை நகரின்வாழ்வே
செய்யரிய தானவலி மைதிகழு மோனமலி ஷெய்குமெய்ஞ் ஞானவொலியே. ()

ஞியானமஞ்சரி

மூற்றுப்பெற்றது.

---

ஹாமீம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

கோட்டாறு

மெய்ஞ்ஞானசொரூபராகிய

ஷெய்குமுஹியித்தீன்மலுக்குமுதலியார்

என்னும்

ஷெய்குத்தம்பிஞானியார்சாகிபு

அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய

# மெய்ஞ்ஞானவிளக்கம்.

இஃது

இந்நூலாசிரியரவர்களின் சகோதரரவர்கள்குமாரர்

ஞானியார். செய்யிது தாஹாலெப்பை

ஆலிம்சாஹிபு அவர்களாலும்,

கோட்டாம்பட்டி

எம். கருப்பையாப்பாவலரவர்களாலும்

பார்வையிட்டு,

மேலப்பாளையம்

வ. செ. ஷம்ஸுதாஸீன்தரகனரவர்கள்

பொருளுதவியால்

சென்னை:

கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜரி ௧௩௧௬-முஹர்றம்மீ.

ஹாமீம்,

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

கோட்டாம்பட்டி

எம். கருப்பையாப்பாவலர் அவர்களியற்றிய

# வாயுறைவாழ்த்து.

---

## நேரிசையாசிரியப்பா.

வாரிதி சூழ்ந்த வையகத் திடைபொற்
சீரிதி லுயர்ந்த நிலையெனச் செப்பற்
குரியபல் வளனு மோங்குவா னுலகெனப்
பெரியசீர்த் திகளே பிறங்குமு லாட்டிற் .
சங்கிளம் பிள்ளைக டாமரைப் பாசடை
தங்கித் துயில்கொளத் தண்ணிறை யிசையால்
வண்டுதா லாட்ட வரும்பா லன்னம்
அண்டுத லாகி யமர்புனற் றடத்தின்
மன்னுபூஞ் சோலை மதுமலர் மணமே
துன்னுவான் மின்னார் சுரிகுழன் மணக்கக்
கமழ்ந்திடு மரிய கவின்பல நிறைந்து
நமதுள முவக்க நன்கமர்ந் திட்ட
திருக்கோட் டாற்றுறை திருவுடைச் செல்வர்
திருக்கோட் டாற்றினைச் செம்மையி னுணர்ந்தோர்
வளர்புகழ் ஷெய்குது மான்லெப்பை ஆலிம்
உளமகிழ் குமாரர் ஒலிஷெய்கு மன்னன்
செல்வப் புதல்வர் ஷெய்குஅபூ பக்கர்
நல்விற் புனர்பா னன்கவ தரித்த
யோக ஞானத்தி னொருமணி யாகிப்
பாகமாஞ் சித்தி பலகுயிற் றியசீர்
பிறங்குஞா னியரொடு பிறந்த வினைஞர்
அறங்குலா வியபல வற்புதம் விளைத்தோர்
சுத்தமெய்ஞ் ஞானத் தூநெறி கண்டோர்
வித்தையிற் குறையா மேம்பா டுள்ளோர்
மேலப் பாளைய வியனகர் தனிலே
சாலப் புகழ்பெறூஉந் தனிப்பெருந் தொண்டர்
ஒருவர் மவுத்தின்முன் னுரைமொழி தவறு
தருவமா விளங்கும் அல்லாகுத் தஆலா
திருவரு ளாலே திரும்ப வெழுப்பி
வெருவருந் தந்துடை மீதிற் கிடத்தி
உயிரினைச் சுவர்க்கத் துறவருள் செய்தோர்

செயிர்தீர் தந்திறத் திருமொழி நிலைமையை
யாரு மறிய வறிவிலா வொருவன்
பாருட் கூறிய பழிமொழிப் படியே
நடக்கு மாயின் நடக்குநின் மனைக்கட்
டிடமென் றுரைத்திங் கிந்நாள் வரையும்
வறிதே கிடக்க வழுத்திய வாக்கினோர்
நன்னெறி யுடையார் நற்கலை யுடையார்
உன்னருட் படையா ருளத்தவிப் படையார்
மலிபுகழ் வரத்தார் மன்னுதா வரத்தார்
ஒலிகொடைக் கரத்தார் யோகசா கரத்தார்
ஷெய்குது மானெனுந் திருப்பெய ருடைய
மெய்குறி யிலைப மெய்ஞ்ஞா னியர்தம்
புத்ரசி காமணிப் பொற்பில் வருமணி
எத்தரத் தவரு மேத்து நவமணி
மதிமணி துதிமணி வளமணி யொளிமணி
மதிமுக ஷெய்கு மன்சூர் சாஹிபு
தருசே யாகத் தறையுளோர் தவமே
ஒருசே யாக வுருவெடுத் தாங்கு
மாயிரு ஞாலம் வழுத்தும் ஹிஜரி
ஆயிரத் திருநூற் றையெட் டஞ்சாம்
ஆண்டிற் பிறந்திங் கரியபன் னூலும்
ஆண்டவ னன்பி னருளிய குறஆனும்
கற்றுத் தேர்ந்து கருதுதற் கரிய
கற்றவ யோக ஞானசா தனங்களை
பெரிய தந்தை பெற்ற புத்திரர்
தெரிதரும் பெரிய ஷெய்குத் தம்பி
என்னும் ஞானிய ரிடத்தடுத் துணர்ந்து
மன்னுசீர் ஞானியார் வளர்பரம் பரைக்குத்
தலைமைக் குருத்துவ சாசனம் பெற்றுச்
செய்தபல் லற்புதம் செப்புதற் கெளிதோ
மைதவழ் சோலை மலிகோட் டாற்றுள்
அருமது காலுக் கக்குவின் தாத்து
புருமது வாசப் பொற்பினை நொடியில்
உணர்ந்து களிக்க வொருநெறி காட்டியு
மணமலர்க் குழலியர் வளர்திரு வாங்கூர்
மூலந் திருநா ளெனும்பெயர் முதலோன்
தால மாளத் தகுமுடி பெறுநா
ளிதுவென முன்ன ரெடுத்துரைத் தந்த

வாயுறைவாழ்த்து.

விதமே யரசு நிலைபெறல் விளக்கியும்
அங்குகொட் டாரத் தங்கா டிருடிய
பங்கனைப் பொருளைப் பற்றிக் கொடுத்தும்
பரவெழிற் கழுதியிற் பாவை யொருத்திக்
காவங் கடிவிடத் தாலறி விழந்து
தறிந்தவ் விடத்தி லடிப்பெரு விரலா
லுறவங் கழுத்தி யொருநிமி டத்தில்
விடமது நீங்கி விடவருள் செய்தும்
திடமுறப் பல்லோர் தீவினை தீர்த்தும்
மலைநாட் டிறைவன் மந்திரி விரும்ப
மலிபுனல் பெருக மழைபெய் வித்து
மிக்க வன்பினர் வேண்டிய வாறே
தக்கபல் லற்புதந் தான்புரி வித்தும்
சென்னை முதற்பல தேசங்க ளெல்லாம்
மன்னிய தம்புகழ் வழங்கக் காட்டியும்
அளவில்லாக் கீர்த்தி யருட்டிறம் பெற்றே
வளமலி தமதின் மவுத்துநா ளினதென
முன்னரே கூறி முந்தையோர் கபுறின்
நன்னய மாக நாப்பனோர் கபுறிட்
டழகிய குப்பா வமைத்துவைத் திருந்து
பழகிய தொண்டர் பலர்களும் பார்க்க
இன்னுயி ரதனை ஹிஜரி ஆயிரத்து
முன்னூற் றுறின் மூன்றா மாதத்
திருபத்து மூன்றி னெய்திய வாதி
வாரத்தி ராவில் வல்லவன் சமுகத்
தோரத் துறந்தோர் ஷெய்குத் தம்பி
எனுமபி தானத் தியர்மெய்ஞ் ஞானியர்
மனமொரு நிலையின் வயக்கிய தீரர்
அன்பொடு கற்றோ ரகவிரு ளகல
இன்பமெய்ஞ் ஞான விளக்க மெனவே
வகுத்தரு ளியவிம் மாண்புறு நாலின்
மகத்துவ முற்றும் வழுத்தற் பாற்றோ
அறம்பொரு ளின்ப மார்ந்துயர் வீட்டி
னுறவரு ணெறிதனை யுதவு மாமறை
அவரவர் பக்குவ மறிந்தரு ளூட்டித்
தவமதிற் புகுத்தத் தக்கது வாயிற்
பெறலரும் ஞானப் பெரும்பே
றுறுவீர் புலவீ ருணருமின் னீரே.

---

ஹா மீம்.

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

ஷெய்குத்தம்பி ஞானியார்சாகிபு அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# மெய்ஞ்ஞான விளக்க

# நூற்பிரிவகராதி.


| பக்கம். | பதிகங்கள். | பாடற்றொகை. | பக்கம். | பதிகங்கள். | பாடற்றொகை. |
|---|---|---|---|---|---|
| உக | க. ஞானநடனம். | ,, | எக | ரு. ஞானவநட்புலம்பல் | ,, |
| ,, | பாயிரம் | கஉ | ,, | எக்காலக்கண்ணிகள் | சுக |
| ச | நூல் | கoஉ | எச | எக்காட்கண்ணிகள் | உஉ |
| உங | அருள்புரியென்றபதிகம் | கக | எரு | ஹல்லாஜ-கண்ணிகள் | உக |
| உச | அருள்தேவேயென்றபதிகம் | கக | எஎ | என்குருக்கண்ணிகள் | கக |
| உஎ | அருள்வாயேயென்றபதிகம் | கo | எஅ | சு. ஞானவடைக்கலம் | உo |
| உஅ | நகுமானேயென்றபதிகம் | கங | அக | எ. ஞானக்கீர்த்தனை. | ,, |
| ஙo | நகுமானேயென்றபதிகம் | கக | ,, | மருவக்கோளங்கள் | க |
| ஙக | நகுமானேயென்றபதிகம் | கo | அஉ | தங்கப்பதமலர் | உ |
| ஙஉ | வாழ்வேயென்றபதிகம் | கo | ,, | மருவிக்கலந்திருக்க | ங |
| ஙரு | கோவேயென்றபதிகம் | கo | அச | இன்னம்வரக்காணவில்லை | ச |
| ஙசு | ஆண்டவனேஎன்றபதிகம் | கo | ,, | ஏழைதனையாட்கொள்ள | ரு |
| ஙஎ | கோவேஎன்றபதிகம் | கo | அரு | மனதுமிகவுமெலியாதிருக்க | சு |
| ஙஅ | ஆண்டவாவென்றபதிகம் | கஉ | அசு | என்வினையெல்லாந்தீர்த்து | எ |
| சக | மஹ்மூதுபதிகம் | கக | அஎ | என்மனமேயுனக்கிசை | அ |
| சச | முஹம்மதாபியேயென்றபதிக | எ | அஅ | ஆசைமிகவுமானேன் | கூ |
| சரு | குருவேயென்றபதிகம் | கக | அகூ | மையல்பெருகுதெம்மானே | கo |
| சஅ | கோனேயென்றபதிகம் | அ | கூo | மன்னர்வருவார்மயிலே | கக |
| ருo | ஆண்டவரேயென்றபதிகம் | கo | ,, | தங்கிடவேணுமையா | கஉ |
| ருக | ஹல்லாஜென்பீரேயென்றபதி | கங | கூக | ஆட்கொள்ளவாருமையா | கங |
| ருங | என்பீரேயென்றபதிகம் | கo | கூஉ | நித்தம்புகழவேணும் | கச |
| ருச | ஹல்லாஜேயென்றபதிகம் | கo | ,, | மையல்மீறுதடி | கரு |
| ருசு | தனிப்பாக்கள் | ச | கூரு | மையல்மிகமீறுதே | கசு |
| ருஎ | நாட்டுவளம் | ச | கூசு | ஆள்வீராள்வீராள்வீர் | கஎ |
| ,, | உறுதிநிலைஇளைத்தல் | ரு | ,, | எப்போதுங்காணவேணு | கஅ |
| ருகூ | உ. ஞானஆநந்தக்களிப்பு. | சக | கூஎ | ஏழைக்கிரங்கிடுவீர் | ககூ |
| சுச | ங. ஞானத்தயில்மயிலேசல் | ருo | கூஅ | ஷெய்கபூபக்கருக்கருள் | உo |
| சுஎ | ச. ஞானத்தம்மீ | உo | கூகூ | இன்னம்வராக்காணவில்லை | உக |


ஹா மீம்.

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

இஃது

கோட்டாறு

மெய்ஞ்ஞானசொரூபராகிய

ஆரிபுபில்லாஃ

ஷெய்நுழஷ்ரயித்தீன்மலுக்கு முதலியாரென்னும்

ஷெய்குத்தம்பி ஞானியார்சாகிபவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# மெய்ஞ்ஞான விளக்கம்.

## காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முத்தினி லுதித்த வேத முடிவரு ளருளாய்த் தோன்றிச்
சித்தினிற் சித்தாய் நின்று சிறப்பருள் கருணை ஞானம்
பத்தொரு மூன்றாய் நின்ற பழம்பொருள் தருநற் சீலம்
குத்தினிற் குறியாய் நின்ற குருவருள் காப்ப தாமே.



ஹாமீம்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# ஞானநடனம்.

## பாயிரம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவினுந் திருவாய்த் திருமல ரலர்ந்து திரண்டது திருமணி யொளிவாம்
அருவினு மருவா யணுமுத லகண்ட மானது மருள்மணி யரசாம் [ல்
குருவினுங் குருவாய்க் குவலயத் துறைந்து குவிந்திடுங் குருமணி யிறகு
கருவினுங் கருவாய் கல்பினில் நிறைந்து கருத்தினி லுறைந்தது காப்பே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அயினுக்குள் ளழகாய் நின்ற வரும்பொரு ளலிப தான
தயினுக்குள் ளயினுங் கூடி யணுமுத லகண்ட மான
தயினுக்குள் ளயினாய் நின்றே யடங்கலும் அஹ்மத தான
தயினுக்குள் ளடங்கி நின்ற வருள்நபி காப்ப தாமே. (உ)

ஆதியு மந்த மில்லா தரும்பொரு ளருளே காப்பு
ஓதிய மறைகண் மீதி லுறும்பொரு ளருளே காப்பு
நீதியாய் நிறைந்த வெங்கும் நெறிநபி யருளே காப்பு
ஆதியா யடங்க லான வருள்ஹல்லா ஜருளே காப்பு. (௩)

கண்ணிலு மடங்கா னந்தக் கருத்தினி லுறைந்த தேனே
விண்ணிலு மடங்கா னந்த வெளியினில் நிறைந்த கோனே
பொன்னிலு மதிக மாயப் புகழருள் புரிந்த மானே
என்னிலே யிலங்கு கின்ற விறைப்பொருள் காப்புத் தானே. (௪)

தோங்கல்.

பொருளும் முஹம்மது பொற்பாதத்தைப்
புகழ்ந்து தினந்தினம் சிரசிலேந்தி
அருளு மபுபக்க ருமறுதுமா
னை அலியாரும் ஹசனுசைனும்
மருளும் மயக்கமில் லாதவள்ளல்
மன்னன் ஹலறத்தில் வருகாதிறு
இருளை யகற்றிடு மிவர்கள் பதம்
என்ற னுளஞ்சிரங் கொண்டனனே. (௫)



கொண்டே னடியனு னிவர்கள்பாதம்
கோத்து மிருகண்ணின் மணியாகவே
பண்டே பழம்பொரு ளானவள்ளல்
பகரும் ஹல்லாஜின் பதமலரைக்
கண்டே தெளிந்தோர்செய் குமுஹ்யித்தீன்
மலுக்கு முதலியார் கனகபதம்
கொண்டே கருத்தினிற் றரித்துக்கொண்டு
கூர்ந்து மெய்ஞ்ஞானங் கூறலுற்றேன். (௬)

கூறு மெய்ஞ்ஞான நடனந்தன்னைக்
கொண்டு புகழவே கண்டுநித்தம்
ஆறும் நாலுமே யகந்தரித்த
தான அபூபக்கர் மகிழ்ந்தபாலர்
சீருஞ் சிறப்புமே மிகப்புரிந்த
செல்வம் பொருந்திய ஷெய்குதுமான்
ஊரும் புகழ்கின்ற ஷெய்குமன்சூர்
உள்ள மகிழ்மைந்த னுரைத்ததுவே. (௭)

உரைக்கு மருள்ஞான நடனந்தன்னை
யுண்மை யுடன்சொல்ல வுளந்தெளிந்து
விரைக்கும் விரிவான வேந்தரெங்கள்
வேதர் நபிபதம் நாவிருத்தி
நிரைக்கும் நெடியவன் கிருபைபெற்ற
நீதர் ஹல்லாஜிரு பதம்போற்றி
மறைக்குந் திரையெல்லா மாற்றியென்றன்
மனதிற் புகழ்ந்தனன் மகிழ்ந்துவந்தே. (௮)

மன்னி லத்தில்ஹல் லாஜருளால்
மகிழ்ந்து புகன்றிட்ட பொருளுணர்ந்து
இன்னி லத்திலே யிப்பொருளை
யிசைத்து மணிரத்தி னம்போற்கோத்து
பொன்னி லத்திலே புகுதம்போர்கள்
பொறுத்து மிதன்பிழை தீர்த்தருள்வீர்
மன்னிய வேழைஷெய் குமுஹ்யித்தீன்
மலுக்கு முதலியான் புகன்றனனே. (௯)

புகழும் புகழ்ச்சியைப் புகழ்ந்தவர்க்குப்
பொங்குங் கிருபைதான் பொன்னுலகில்
மகிழு மகிழ்ச்சியு மாதவமு
மன்னன் கிருபையு மிகப்பெருகும்

இகழு மிடரெது மணுகிடாதே
யெந்த வினைகளு முடுகிடாதே
புகழும் புகழறிந் துகந்தவர்க்குப்
பொங்கும் ஹல்லாஜ ருடங்கிடுமே. (௧௦)

தங்கு மருள்ஹல்லா ஜெழுத்து நாலுந்
தானே தலம்நாலிற் றரித்துப்பார்க்கில்
எங்கும் நிறைந்திடு மேகப்பொரு
ளிலங்கித் துலங்கிடு மிருதயத்தில்
பங்கப் படுமெனப் பயமகலும்
பாதா திகேசமு தற்றெரியும்
தங்க மலர்ப்பதந் தன்னிலானுற்
றுனே தெரிந்திடு மிவ்வகையே. (௧௧)

வகைகள் தெரியுங்காண் வான்பொருளும்
வானே மூலகேழும் வகைவகையாய்த்
துகைகள் தவறுது பதம்பணிந்தாற்
றேன்றுப் பொருளெல்லாந் தோன்றிடுமே
பகைகள் பலவெல்லா மாற்றிவைக்கும்
பாவி இபுலீசைப் போக்கிவைக்கும்
வகைகள் துகையறிந் திவர்கள்பதம்
வந்து பணியுங்க ளருளுறவே. (௧௨)

---

## நூல்.

### வெண்பா.

அருளறிய ஞானத் தருமுறையைப் பூமேல்
பொருளறியச் சொல்லப் புகல்வாய்—இருளறவே
எவ்வகையு மொன்று யிசைந்திருந்தா யெங்கோவே
அவ்வகையை நீயருள்வா யாதி. (௧)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதியரு ளானவன்று ஞதமுக்குச் சொன்னபொரு
ளாசறிவ ரிவ்வுலகினில்
நீதியுட னேயறிந்து நிச்சயம தாகுமவர்
நீடூழி காலம் வாழ்வார்
ஓதுமுறை யோர்களிதி னெழுங்கறிய வேண்டுமென்
றொருவன் பொருட்டு ரைப்பேன்
சோதியரு ளானதது சூழ்ந்தவுட லதனிலே
சூட்சமாம் பொருளு மதுவே. (௨)



ஆனவகை யானதை யறியும்வகை விபரங்க
ளாதியரு ளால றியவும்
ஈனமணு காதவ னிவ்வுடலி னிற்சொன்ன
திசைமூன்று மறிய வென்றே
ஆனவுடல் தன்னிலே யாதிஅலி பொன்றதே
யருள்வளரும் ஹேயு மொன்றும்
ஊனமணு காமலே யுறுதியுட னின்றதவ்
வுடையவன் ஹூவு மொன்றும். (௩)

ஆதிகலி மாவிலே அலிபுநபு ஸானது
மானதுள் ளான ததுகேள்
நீதியுட னின்றது நிச்சயம தானது
நிறைந்துவளர் ஹேயின் குணமாம்
சோதிவடி வானதே சூட்சப்பொரு ளானதது
சூழ்ந்துறையும் ஹூவ தாகும்
ஓதியுணர் வோர்களிதை யுற்பனமென் றுள்ளில்வைத்
துண்மையுட னேயு ணருவார். (௪)

உண்மையுட னேயறிவ ரொத்துறை யிரண்டவையு
முன்னுடலில் நின்று கொண்டு
செம்மையுட னேநின்று செய்யும்விப ரங்களைச்
சிராகச் சொல்வ தரிதாம்
வெண்மையுட னேயறியும் வெண்டரளம் காணற்கு
விரிவான குருவி டத்தில்
நன்மையுட னேநிலம் பெற்றிடவுஞ் சிந்தைதனில்
நாடிநின் றவர்க்க ருளுவார். (௫)

சொற்பொருளைக் கேட்டோர்கள் சொர்க்கநலங் கொள்ளுவார்
சோதிமுறை யான துறையில்
நற்பொருளைக் கண்டுமவர் நாடிநலங் கொள்ளுவார்
நாயன்பொரு ளான ததிலே
வெற்றிபெற விப்பொருள் வேதமுடி வாகுமாம்
வேதநெறி யோர்க ளறிவார்
சொற்பொருளா மிப்பொருளே சோதிமய மாகும்நற்
சூட்சப்பொரு ளான திதுவே. (௬)

இவ்வகை யறிந்திடுகி லிவ்வுலகி லெவருமே
யிவர்க்குநிக ரில்லை யெனவும்
மவ்விலுற நின்றதும் மாதவத்து வந்ததும்
வண்மைபெறு மாறி ரண்டாம்

நவ்விலுற நின்றதும் நாயன்பொரு ளானதும்
　நாடுவதும் நாட்ட மிதுவாம்
அவ்வலஹ தானதி லருமைப்பொரு ளானதும்
　ஆதிவ்டி வான திதுவே. (எ)

இப்படியே வந்தது மிவ்வுடலில் நின்றதும்
　இசைந்துறும் வேளை தனிலே
அப்படி யிருக்கையி லதன்படி நடக்கவும்
　அசைந்துவரு மண்ட மதிலே
ஒப்புட னிருந்தது மிருந்தவிட மேயசைய
　வுறவாக நின்ற பொருள்தான்
எப்படி நினைக்குமோ வப்படி நடக்குமென்
　றிசைவா யிருந்து மகிழும். (அ)

இசைவா யிருந்தது மகிழ்ந்திடுமவ் வேளையி
　லியல்பா யிருக்கு மொருவன்
அசையா திருந்தவ னெழுந்திடுமே யப்பொழு
　ததின்படி கொடுக்க மனமாம்
நிசமா யிருந்தவன் நினைத்தபடி யேசெய்து
　நேசமுற வான ததின்பின்
வசமா யிருந்தவன் கொடுத்துமறு படியுமது
　வந்தவிடம் போயு றையுமாம். (சு)

ஆனவிடந் தன்னிலே யகமகிழ்ந் துறுகையில்
　ஆனதொன் றணுகி நினைவாம்
ஆனபொழு தொன்றிலே யதன்படி முடிக்கவும்
　அப்பொரு ளகத் தெண்ணுமாம்
ஈனமனு காதபொரு ளில்லிட மிளகவே
　இவைரண்டுங் கூடி யொன்றாய்
ஊனதை யருந்தினவ னப்பொழு துறக்கமோ
　வொன்றுந்தெரி யாத திதுவே. (க0)

இப்படி யிருவரு மிசைந்திட மறிந்திடி
　லிவ்வுலக மதிலொ ருவர்காண்
அப்படி யிருக்குமே யதன்படி யறிந்தவ
　ரதன்முறைமை சொல்வ துளதோ
சொற்படியே மறைகளை யறிந்துணர்ந் தவருமிதின்
　சொற்படி யறிய வலரோ
இப்படியென் குருஹல்லர் ஐவரமுத முண்டுதா
　னிசைந்தவ ரறிந்தி டுவரே. (கக)



அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இசைத்திடு மிவைகள் ரண்டு மிப்படி யறிவா ராகில்
வசப்படும் ஞானந் தானும் வண்மையு மிகவுண் டாகும்
ருசிப்புட னமுத முண்டு நொடிக்குமுன் னறிவா ரப்பா
நிசப்படு மெட்டு மஞ்சும் நிமைக்குமுன் தெரிசிப் பாரே. (கஉ)

தெரிசிப்பார் தெரிசிப் பார்கள் தீவினை யகல நீங்கித்
தெரிசிப்பார் தெரிசிப் பார்கள் திருமணி யதனைக் கண்டு
தெரிசிப்பார் தெரிசிப் பார்கள் திருமறை யருளை யென்றும்
தெரிசிப்பார் தெரிசிப் பார்கள் திருமுறை யறிந்து கொண்டே. ()

திருமுறை யறிந்த பேர்கள் திசையெங்கு மவரே யாகும்
குருமுறை யிதுதா னென்றே குறித்துமொன் றுன பேர்கள்
கருமுறை யிதுவே யென்று கருதியே கருத்தில் வைப்பார்
ஒருமுறை யறிந்த பேர்க்கிங் கிலெங்கும் நிகரே யில்லை. (கச)

நிகருண்டோ விவர்க்குத் தானே நெடியவன் கிருபை யாலே
நிகருண்டோ விவர்க்குத் தானே நிசமறிந் திருந்த தாலே
நிகருண்டோ விவர்க்குத் தானே நீதியை யறிந்த தாலே
நிகருண்டோ வுலகு தன்னில் நிகரில்லை யிவர்க்குத் தானே. (கரு)

தானப்பா தானு மாகும் தனியனை யறிந்த தாலே
ஆனப்பா வானு மாகு மதன்முறை யறிந்த சிங்கா
கோனப்பா கோனு மாகுங் குண்டுடல் முறைதா [illegible] கண்டால்
காணப்பா காண வேண்டி யிம்முறை கருதிப் பா[illegible]. (கசு)

கருதியே பார்க்கும் பேர்க்குக் கவலையே [illegible] சொல்லு
கருதியே பார்க்கும் பேர்க்குக் கயல்விழி யடைவ துண்டோ
கருதியே பார்க்கும் பேர்க்குக் கருத்துவே றுவ துண்டோ
கருதியே கருத்தில் வைப்போர் கண்மணி யான பேரே. (கஎ)

கண்மணி யான பேர்கள் கருத்தினில் வைப்ப தற்கே
இம்முறை யறிந்து தானு மிதன்படி நடக்க வேண்டும்
நன்மையா யிருந்து நாயன் காட்டிய கலிமாத் தன்னில்
வெண்மையா யிருக்கும் ரண்டெ ழுத்தினை யறிய வேண்டும். (கஅ)

எழுத்தினை யறியும் பேர்க ளெப்படி யறிய வேண்டும்
உளத்தினி லெழுத்தி ரண்டி னுயிர்நிலை யறிய வேண்டும்
களித்துமே யிருப்ப தற்கு காரண மறிய வேண்டும்
எழுத்தினை யறிந்த பேர்க்கே யிசைவதைச் சொல்லக் கேளே. (கசு)

கேளுநீ யிரண்டி லொன்று கேட்பதற் கஞ்சு மாகும்
கேளுநீ யிரண்டி லொன்று கிருபையோ டெட்டு மாகும்
கேளுநீ யெட்டு மஞ்சுங் கிருபையை யறிந்தா யானால்
கேளுநீ யிவைகள் ரண்டு மிசைந்திடு முறையைக் கேளே. (உ0)

இசைந்திடு மிவைகள் ரண்டு மிடமதை யறிய வேண்டும்
வசமது வறிந்திட் டாலும் வல்லின மறிய வேண்டும்
நிசமதை யறிந்திட் டாலும் நீதியா லறிய வேண்டும்
இசைத்திட வேண்டுமென்று லிசைந்துமுன் னறிந்தோர் வேண்டும்.

அறிந்தவ ரிடத்திற் சென்றங் கருகிருந் தநேக நாளாய்
அறிந்தவ ரிடத்திற் சென்றங் கவரமு தருந்திக் கொண்டு
அறிந்தவ ரிடத்திற் சென்றங் கவர்பதம் பணிந்து கொண்டால்
அறிந்தவ ரவனுக் கென்றே யருள்முறை சொல்லு வாரே. (௨௨)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சொல்லுவா ரிப்படித்தான் சொல்லு வார்கள்
சூத்திரமா யிருக்குமொரு பாத்தி ரந்தான்
அல்லலெலாம் விளையுமந்தப் பாத்தி ரத்தில்
அரியபொரு ளெல்லாந்தா னிருக்கு மப்பா
வல்லவமும் வான்பொருளு மிருக்கு மப்பா
வன்னிமுதல் நால்வகையு மிருக்கு மப்பா
நல்லபொருள் வல்லபமா யிருந்து கொண்டு
நாடியதில் செய்விபரம் நவிலக் கேளே. (௨௩)

நாட்டமனத யறிந்தோர்க்கு நலங்கள் செய்யும்
நானிலத்திற் பிரியம்வைத்தாற் செய்வ தென்ன
சூட்டுமந்த விடந்தனிலே சுடரெ ழுந்து
சூத்திரமாய் வந்திருந்து சூட்ச மாகக்
காட்டுமதை யெல்லாந்தான் கண்ட றிந்து
கருத்துவே றுவதற்குக் கலகஞ் செய்யும்
நாட்டமதில் நற்பொருளை நந்தி சொல்லில்
நானிலத்தை நாடாமல் நவிலு வாரே. (௨௪)

நவிலுவார் நற்பொருளை நாட்டி நன்றாய்
நயனவிழி யடைபடவும் நாட்டஞ் சொல்வார்
நவிலுவார் நற்பொருளை நாட்டி யுற்ற
நாசிவழி யடைப்படவும் நாட்டஞ் சொல்வார்
நவிலுவா ரப்பொருளா லவர்தான் சொல்வார்
நல்ராகங் கேட்டுமந்தக் கேள்வி போக
நவிலுவார் நற்குருதான் நாட்டத் தாலே
நாவதையு மசையாமல் நாட்டஞ் சொல்வார். (௨௫)

நால்வாச லடைபட்ட பின்னர்க் கூடி
நாட்டஞ்செய் விபரத்தை நன்கு கேளே
நால்வாச லடைபட்ட பின்னு லந்த
நானிலத்தில் நாட்டமொன்று மில்லை காணே



நால்வாச லடைபட்ட பின்னால் நாட்டம்
நாடுகின்ற நல்வழியை நவில்வார் யாரே
நால்வாச லடைபட்ட பின்னு லந்த
நாதன்செய் நலங்களைநீ நலமாய்க் கேளே. (௨௬)

கலிவிருத்தம்.

நாடும் நாடின வன்வெளி யானபின்
தேடுந் தேட்டங் களுந்தெரி யாதப்போ
வாடும் வாட்டங் களுமொன்று மில்லைகாண்
தேடுந் தேட்டங் களுந்திரு வாகுமே. (௨௭)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவது தேட்ட மானால் தீவினை யகல நீங்கும்
திருவது தேட்ட மானால் திசையெலாந் தெரியும் பாரே
திருவது தேட்ட மானால் தெளிந்துநின் றாடும் பாரே
திருவது தேட்ட மானால் தெளிந்ததி லெல்லாங் காணும். (௨௮)

காணுமே காட்சி யெல்லாங் காரண மிகவுண் டாகும்
பூணுமே பூண்டு நின்றால் புதுமைகள் மிகவுங் காணும்
தோணுமே தோற்றந் தன்னில் தோன்றிடாப் பொருளுங் காணும்
ஆணவ மறுத்த பேர்க ளரும்பொரு ளறிவார் தாமே. (௨௯)

அறிந்திடு மருமை யெல்லா மவருளந் தனிலே காணும்
முறிந்திடும் நாலு மப்பா முன்னமே போன தாலே
பிரிந்திடா திருந்து தானும் பேச்சதைச் சுருக்க மாக்கி
உறைந்திடும் பொருளைக் கண்டே யுளமகிழ்ந் திருப்பர் தானே.

உளமகிழ்ந் திருக்கும் போதங் கொன்றுட னொன்று மாகும்
களங்கமற் றிருந்து கொண்டு காரண மிகவுஞ் செய்யும்
வளங்களை மிகவுண் டாக்கி வண்மையா யிருந்து தானும்
நலங்களா யிருந்து கொண்டு நாடமுன் நலங்கள் செய்யும். (௩௧)

சந்தவிருத்தம்.

ஆதியானவன் சொன்னதென்னவறி வானபேர்களுடன் கேளுநீ
சோதியானமுறை யையறிந்தவர்கள் சொல்லுவாரிதனைச் சூட்சமாய்
நீதியானமுறை யையறிந்திடுகில் நேசமாகுவது மவரிடம்
ஓதுமேமுறை யறிந்தபேர்களுட னுண்மைகேட்பதுவும் நன்மையே.

நன்மையானதை யறிந்தமுமினுக்கு நாயன்சொன்னதென்ன கேளுநீ
வெண்மையாகமுன்னிருந்ததின்முறையைத் தானறிந்திடவும்வேண்டுமே
உண்மையானதை யறிந்திடாதவர்க்கு முற்பனங்களு முண்டுமோ
நன்மையானமுறை யையறிந்திடவும் நாடிச்சொல்வதையுங் கேட்டிடே.

வே று.

அந்தநாளையிலிருந்ததின்முறையையறியவேண்டுமெனக்கேட்டிடே
அதனைவிட்டுமேநம்மளானமுறையையறியவேண்டுமெனக்கேட்டிடே
இந்தப்பூமியிலிருப்பதின்முறையையென்னவென்றிதனைக்கேட்டிடே
இதனைவிட்டுநாம்போவதாமிடமெங்கேயென்றதனைக்கேட்டிடே
சொந்தமாகவேயிருப்பதுஞ்சுகத்தினிடமுமெங்கேயெனக்கேட்டிடே
சோதியானமுறையையறிந்திடவுஞ்சூழ்ச்சியென்னதனைக்கேட்டிடே
நந்தியானகுருவானபேர்களுடன்நாடிக்கேட்பதையுஞ்சொல்லுவார்[யே.
நாடிக்கேட்டபடி விண்டபேர்களுடன் நாட்டம்வைப்பதுவும் நன்மை

கலிவிருத்தம்.

நன்மையா யிருந்துநீயும் நலமதி லாகவேண்டும்
உண்மையாய் முரீதுபெற்றே யுற்பன மறியவேண்டும்
வெண்மையா யிருந்தமுத்தின் விசேடத்தை யறியவேண்டும்
செம்மையா யிருந்தபேர்கள் செல்வமா யிருப்பர்தாமே. (௩௫)

தானவன் சொன்னதென்ன தானமாந்தலமொன்றுகும்
ஆனதை யறிந்துநாடி யதன்முறை யறிந்தபேர்க்கே
ஊனமு மவர்க்கொன்றில்லை யுடலுமே யழியாதப்பா
தானத்தை யறிந்தபேர்கள் தாணியிற் பெரியோராமே. (௩௬)

ஆனதோர் தானந்தன்னி லருளதை யறியவேண்டும்
ஆனதோர் தானந்தன்னை யறிந்துநீ யிருக்கவேண்டும்
ஆனதோர் தானந்தன்னி லடுத்துநீ முடுகவேண்டும்
ஆனதோர் தானந்தன்னை நோக்கினல் ஹாலிருகும். (௩௭)

ஹாலிரு மாவிதானு மதன்குண மறியவேண்டும்
ஹாலிரு மானபோதே யரும்பொரு ளதனிற்றேன்றும்
ஹாலிரும் முல்ஹிமாவைக் கடந்துமே லானபேர்க்கு
ஹாலிரும் ஹாலிருகு மத்தலந் தனிலானேர்க்கே. (௩௮)

தோ ரங்கல்.

இந்த வணக்கந்தா னறிவதற்கிங் கிசையு மூன்றுண்ட தறியவேண்டும்
மூந்த ஹாறுபொன்று யானதுக்குள் முடிவையறிந்துதான் முடுகவேண்டும்
அந்தப் படிதந்த வணக்கத்திலே யருளாய்க் காண்பது மவர்குறத்தாம்
சொந்த மாகவே தெரிசித்தாக்கால் தோற்று மதுக்குள்ளே தன்குறத்தே

கலிவிருத்தம்.

இந்தவகை மூன்றறிய வேகநாயன் சொன்னதை
முந்தவள்ள லானவெங்கள் முஸ்தபா நபிசொன்னுர்
அந்தவகை யானதை யறிவதுவும் பறுலுமாம்
இந்தவகை யிருட னிருந்தறிய வேண்டுமே. (௪௦)



எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இந்தவகை யெல்லாந்தா னறிந்தோர் பேராம்
இயல்பாக வவருடனே யிருந்து கேளே
அந்தவகை யறியாம லவர்த மக்கே
அறிவறிய வகையுளதோ வறிவிற் பாரே
சொந்தமுட னிந்தவகை யறியா தார்க்குச்
சோதிவெளி யாவதுமெப் படியா மண்ணில்
வந்தவகை யறியாதோ ரிடத்திற் சென்று
கைபிடித்து வணங்குவது மாகா தப்பா. (௪௧)

அப்பனே யிதன்முறையை யறியா விட்டால்
ஆதிபொரு ளறிவதுமெவ் வித்தி லாகும்
அப்பனே யிதன்முறையை யறியச் சொல்வேன்
அவருடனே சிலமுறையைக் கேட்க வேண்டும்
அப்பனே யவரிடத்தி லடுத்தா யானல்
அஹதியத்தின் வாசமவ ரிடத்திற் றேன்றும்
அப்பனே யவரிடத்தி லடுத்த பேர்கள்
ஆதிபொரு ளறியாம லகல்வ தில்லை. (௪௨)

ஆதிபொரு ளானதுதா னுடலந் தன்னி
லாயிருக்குந் தலமதைநீ யறியக் கேளே
நீதியுட னேயதுதா னிறைந்தே யெங்கும்
நிலையாக நிற்பதைத்தான் நினைத்துக் கேளே
சோதிவடி வானதுதா னுலக னைத்துஞ்
சூழ்ந்திருக்குஞ் சூட்சமதின் தொடர்ச்சி கேளே
ஆதிவடி வானதுதா னடங்க லுங்கும்
ஆனவிப ரங்களையு மறியக் கேளே. (௪௩)

கேளப்பா விப்படித்தா னுன கோமான்
கிருபையைநா மறிவதுமெவ் விதத்தி லாகும்
கேளப்பா விப்படித்தா னிருந்தால் நாயன்
கிருபையுடன் சேர்வதுமெவ் விதத்தி லாகும்
கேளப்பா விவ்விதங்க ளறிந்தோர் பாலிற்
கிருபையுட னேயிருந்து கேட்பா யானல்
கேளப்பா நானுமுறை சொல்வா ரப்போ
கிருபையுடன் கேட்டதெலா மறிய லாமே. (௪௪)

அறிவதற்கு நலமதுவை முன்னே சொன்னேன்
அத்தலத்தைக் காட்டியவ ரறிவுஞ் சொல்வார்
பிரிவதற்குப் பலமுடனே பொருளுஞ் சொல்வார்
பிரளுமனம் பிரளாமல் நிறுத்தி வைப்பார்

செறியுமப்பா விடந்தனிலே தெளிவாய்த் தானும்
செறிந்திருந்த வகைகளெல்லாந் தெளிவாய்க் காணும்
அறிந்தவரோ ரிடந்தனிலே சேர்ந்த பேர்கள்
அறியும்வகை யிவ்விதமா யறிவார் தானே. (சரு)

அறியும்வகை விபரந்தான் சொல்லா விட்டால்
அவரிடத்தி லின்னுமொரு முறையைக் கேளே
பிரியமுட னமதுடலி லாறுவகை யாகப்
பெலமாக விருக்குதப்பா வதனைக் கேளே
தெரியும்வகை விபரமுடன் சொல்வா ராஞல்
தெரிந்தவரென் றவருடனே தெளிவாய்க் கேளே
அறியும்வகை முறைபோலே சொல்லா விட்டால்
அவரிடத்தி லறிவிலையென் றகலப் பாரே. (சசு)

பார்த்துநீ கேட்பதற்கு வகைசொல் கின்றேன்
பரமறிந்த பேர்களுடன் கேட்ப தென்ன
சேர்த்திருக்கு மாறுவகை விபரந் தன்னைச்
சீராகக் கேட்பதற்குப் பிரிவைக் கேளு
கோத்தவுடல் தன்னிலொன்று நபுஸ தாகும்
கூறிடவே யின்னுமொன்று கல்ப தாகும்
நேர்த்திருக்கு நேர்மையுள்ள றாஹொன் றாகும்
நிறைத்திருக்கும் றூறதுதா னென்று கும்மே. (சஎ)

ஆமெனவே யின்னுமொன்று சிர்ற தாகும்
அறியும்வகை யஞ்சுடனே அசலொன் றாகும்
தாமெனவே யாறுமவர் சொன்ன போது
தனித்தனியே விபரமதைத் தயவாய்க் கேளே
ஓமெனவே யொழுங்குடனே யொன்றே டொன்றை
உள்ளபடி யுண்மையுடன் சொல்லு வாரேல்
ஆமெனவே காமிலென்றே யறிந்து கொண்டங்
கவர்கைதான் பிடித்தோர்க்கே யறிவுண் டாமே. (சஅ)

இவ்விதத்தை யறியாதோ ரிடத்திற் சென்றே
இசைவாகக் கைப்பிடித்தே யிருக்கும் பேர்தான்
எவ்விதமோ வவர்படும்பா டாதி முன்னே
இறையறிவா னல்லாதே யறிவா ருண்டோ
அவ்விதத்தை யறியாதோ ரிடந்தான் சென்றே
அணுகாம லிருப்பதுவு மறிவுண் டேகாண்
எவ்விதந்தான் சொன்னாலு மவரி டத்தி
லிணங்காம லிருப்பதுவும் நலங்க ளாமே. (சகூ)



நலமான நபுஸதைத்தா னறிய வேண்டும்
நாட்டமதில் பலநினைவு மதன்கு ணத்தாம்
பெலமான கல்பதுதான் செய்வ தென்ன
பிசகாமல் நினைவிகுறு றுக்கி வைக்கும்
குலமான றூஹதுதான் செய்வ தென்ன
குத்றத்துடன் கல்புடைய நோக்கம் பார்க்கும்
நலமுடனே யிப்படித்தா னிருக்கும் போது
நன்முறையாய் வருவதுவும் நவிலக் கேளே. (ரு0)

கேளப்பா கிருபையுடன் கல்பும் றூஹுங்
கெவனத்துடன் ரண்டுமொன்றி லான போது
கேளப்பா கிருபையைத்தான் சொல்லப் போமோ
கிருபையுள்ள றஹ்மான்று னறிவா னப்பா
கேளப்பா விம்முறையை யுலகந் தன்னிற்
கிருபையுட னறிந்தோர்க்கு நிகர்தா னுண்டோ
கேளப்பா விதுவிரண்டு மொன்றாய்க் கூடிக்
கிருபையுட னிசைந்திடுகிற் புகலக் கேளே. (ருக)

புகழுடனி ரண்டுமொன்று யிருக்கும் போது
பூரணமாய்க் காணும்ப்பா தெளிவு தானும்
புகழுடைய பேர்களிதை யறிய வேண்டும்
புதுமைமிகப் புதுமைமிகச் சொல்லப் போமோ
புகழுடைய தெளிவதிலே ரூபங் காணும்
புதுமையுள்ள காரணந்தான் றூற தாகும்
புகழுடைய றூறதிலே புதுமை கேளு
புகழரிதாய் வருவதுதான் ஸிர்ற தாமே. (ருஉ)

ஸிர்றதுதான் வெளியானுஞ் செல்வந் தன்னைச்
சீராக விபரஞ்சொல் முடியா தப்பா
ஸிர்றதுதான் வெளியானு லுலகு தன்னிற்
செய்விபரஞ் சொல்வதற்கு மொருவ ருண்டோ
ஸிர்றதுதான் வெளியாம்றூ றதினுக் குள்ளே
ஸிர்றுவெளி யானவுடன் செயலைப் பாரே
ஸிர்றுடனே சிறப்பறிந்த பெரியோர் தானும்
ஸிர்றறிந்து சேர்ந்திடுகில் அசலு மாமே. (ருங)

கலிவிருத்தம்.

அருளும்றூ ஹானதே யந்தந்த வுடலினில்
அருளும்றூ ஹானதே யகம்நிறைந் திட்டபின்
அருளும்றூ ஹானதே யகம்நிறைந் தபடியே
அருளும்றூ ஹானதே யருள்கிர்பை செய்யுமே. (ருச)

### சந்தவிருத்தம்.

செய்யுஞ் செய்யுங் கிருபையுஞ் செயல்சிபத்து மறிந்திடில்
வைய முழுதும் நாயன்செய் வஸ்துவான தடங்கலும்
பைய வொன்று பருவமாகப் பதுங்கிநின்ற பழம்பொருள்
துய்ய தாகச் சுடரெழுந்து சொருபந் தன்னிற் றோன்றுமே. (ருரு)

தோன்றும் ஞானச் சொருபந்தன்னிற் றோற்றமாக நின்றபின்
ஆண்ட நாய னுத்துமா வடங்கலு மமைத்ததும்
ஈன்ற தந்தை யன்னைக்குள் ளிருந்தவிர்றுஞ் செய்தியும்
பூண்டுநின்று கொண்டதும் புகழ்நிறைந்து பொங்குமே. (ருசு)

பொங்கும் ஞானப் புகழ்நிறைந்த பூரணத்தை யறிந்தபின்
தங்குந் தங்குந் தன்னுளத்திற் றுனவனு முகந்தது
பங்கம் பங்க மொன்று மில்லைப் பாழுடம்பு தன்னிலே
எங்கு மெங்கும் நிறைந்த சோதி யிருதயத் திலங்குமே. (ருஎ)

இருதயத் திலங்கும்போதே யிவன்நினைத்த படியெலாம்
உறுதியாக நின்றவுண்மை யுளம்நிறைந்து கொண்டுதான்.
அறுதியாக வகமகிழ்ந்தே யடங்கலும் நினைத்ததை
மறதியொன்றில் லாமலேதான் மனமகிழ்ந்து சொல்லுமே. (ருஅ)

மனமகிழ்ந்து நின்றது மருவரூப சொருபமாய்
கனமிகுந்த ககனமேழுங் கதிர்மதிக ளானதும்
தனமிகுந்த தரணியேழுந் தாவிநின்ற பருவமும்
இனமிகுந்து மிவன்முன்னின்று மெவையும்வந்து தோற்றுமே. (ருகூ)

தோற்றுமந்த வகைகளுந் துகையறிந்து கொண்டபின்
ஆத்துமா வமைத்தவாதி யருளுங்கிருபை யடங்கலும்
நேர்த்தியாக நின்றிரண்டு பத்துநாலில் வந்ததும்
பார்த்துநின்ற பழம்பொருள் பருவமாகப் பார்க்குமே. (சுo)

பார்க்குமொன்றி லானபின் பகர்ந்தநாலும் காயிபாம்
பார்க்குமொன்றை யன்றியே பகரவேறு முண்டுமோ
பார்க்குமொன்றி லானபின்பு பரமல்லாமல் வேறுண்டோ
பார்க்குமொன்றி லிவனல்லாமல் பகரவேறு மில்லையே. (சுக)

### வெண்பா.

மீமாய் வளைந்த வளையமதில் மெய்ப்பொருளாய்
தர்மே யெழுந்த தயாபரமே—ஆமேசிர்
கொண்டறிந்து கூறக் குருபரனே நின்னருளை
தொண்டனுக்குள் மேவும்வகை சொல். (சுஉ)



### தோங்கல்.

மீழும் தேயும்லாம் காபதுக்குள்
மிகுந்த அயின்வலீன்கா படக்கமாச்சு
நாலும் வலீனுமா யொன்றுய்நின்ற
நாறு லாமுக்குள் ளடக்கமாச்சு
ஊறவ்வு மீமுக்கு ளடங்கியபின்
குறியாம் அலிபுக்கு ளடக்கமாச்சு
றேயும் வாவுஹே யானதுக்குள்
நிறைந்த பெரியோனே யருள்செய்வாயே. (சுங)

ஆறு பத்துமோர் பத்துமொன்றும்
ஆன ஊறுபது மௌஜூதென்றும்
ஆறு மூன்றிலு மாறுறிலும்
ஆன ஊறுபதை யாராய்ந்துபார்
ஆறு மாயிர மாறுநாறும்
ஆறு பத்தாறும் ஊறுபதுவாம்
ஆறு நான்குக்கு மாறஞ்சுக்கும்
ஆதி யாமந்த ஊறுபானதே. (சுச)

ஆதி யாமந்த ஊறுபானதே
ஆல மடங்கலு மாண்டதுவாம்
ஆதி யாமந்த ஊறுபானதே
அகமும் புறமுமா யலங்கரிக்கும்
ஆதி யாமந்த ஊறுபானதே
ஆரு மறியார்க ளனுவாகிலும்
ஆதி யானவன் ஊலறத்திலே
ஆன அலியார்க்கு மகிழ்தேனினன். (சுரு)

ஆன ஊறுபது மூன்றுமான
தகிலே ஊறுபொன்று ஊக்குமான
தானல் ஊறுபொன்று முஹம்மதான
மன்னன் முஷாஹதா தானுமான
கோனு னமார்க்குக் கோனுமானோர்
குறித்த ஊறுபொன்று தானுமான
ஆனு லிதுமூன்று ஊறுபானதை
அறிந்தால் அஹதிட மறியலாமே. (சுசு)

அஹதின் பெருமையை யறிவதற்கே
ஆனு லதிற்கோடி ஊறுபுண்டுமே
அஹதின் பெருமையை யறிவதற்கே
ஆனு லதிற்கோடி வழியுண்டுமே

அஹறின் பெருமையை யறிவதற்கே
ஆனு லதிற்கோடி முறையுண்டுமே
அஹறின் பெருமையை யறிவதற்கே
ஆனு லதன்அசல் மூன்றுகுமே. (சுஎ)

ஆலம் அறுவாஹூ காலத்திலே
அதுக்கு ஈஹதானேன் ஸமதாகினுன்
ஆலம் கியாலான காலத்திலே
அந்த றாஹூக்குள் பலதாகினுன்
ஆலம் அஜ்ஸாம்தங் காலத்திலே
அலிபு தால்முதல் தானுகினுன்
ஆலம் இதுமூன்று காலமான
அருளை யறிந்திடில் அஹறதாகுமே. (சுஅ)

அஹறதை யறியாதா னருளறியான்
அருளை யறியாதா னசலறியான்
வஹறதை யறியாதான் வழியறியான்
வழியை யறியாதான் வடிவறியான்
உஹறதை யறியாதா னொழுங்கறியான்
ஒழுங்கை யறியாதா னுடலறியான்
வாஹி திதுமூன்று மறியாதார்க்கு
வன்னி நரகல்லால் வருவதில்லை. (சுகூ)

இதனை யறியாதா னின்ஸானில்லை
யிதன்மே லறிவதற் கருளுமில்லை
மதன கபிமுஹம் மதையறியான்
மன்னேன் கிருபையுந் தனமறியான்
சுதன சுந்தர கலையறியான்
சூட்ச மாகிய தொழிலறியான்
விதனப் படுவானே வெந்நரகில்
வேதப் பயனிதை யறியாதாலே. (எ0)

வேதப் பயனிதை யறியாதார்க்கு
வெற்றி யுண்டுமோ விழிகுருடாம்
ஓது முறைகளை யறியாதார்க்கு
முன்னுங் காரிய முறுதியுண்டோ
சாதித் திடும்வகை யறியாதார்க்குச்
சாயுச் சியபதம் வருவதுண்டோ
நீதி யிதன்முறை யறியாதவர்
நினைவு தடுமாறித் திரிவாரே. (எக)



நினைவு தடுமாறு திருப்பதற்கு
நினைவு நிலைதனை யறியவேண்டும்
கனவில் லாக்காட்சி காண்பதற்குக்
கனிந்த ரசமமு துண்ணவேண்டும்
உணவு மோர்மையொன் றுவதற்கிங்
குற்ற குருவிட மறியவேண்டும்
நினைவு மனமுமொன் றுயிருந்தால்
நிறைந்த பொருள்தை யறியலாமே. (எஉ)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அறிந்திடும் பொருளை யகத்தினிற் றெளிந்தே
அறிந்தவ ருகந்திடு மருமை
செறிந்திடுங் கமலத் திருநடம் புரிந்து
தெரிந்திடும் வுயிர்றருள் காட்சி
முறிந்திடும் நாலு முறிந்திடா திருந்து
மொழிந்திடுந் திருவருள் முறைமை
உறைந்திடும் பொருளை யறிந்தவ ருகந்தே
உருகியொன் றுகுவ றுண்மை. (எங)

உண்மையா யிருந்து முளத்தினி னிறைந்து
முயிரெங்கு மானதை யுணர்ந்துஞ்
செம்மையா யிருந்து செலுத்துவர் திறத்தைச்
சென்னிமீ தின்டநடு வனத்தில்
வெண்மையா யிருந்த வெண்டர ளமதை
விழிக்கிடை கண்டவர் விரைந்து
நன்மையா யிருந்து நடுவணை சிறந்த
நந்தியின் பதிதனி லாவார். (எச)

நந்தியின் பதியி லானதின் பின்னை
நாடுவர் நாமவ னெனவும்
இந்துவுங் கதிரு மிருந்திடங் கடந்தோ
மினிக்குறை யில்லையென் றெனவும்
வந்துளங் குளிர்ந்து செவ்விதழ் திறந்து
வந்தமு தருந்துவ ரகத்தில்
முந்திநா மிருந்த முறைதனி லானே
மென்றவர் மொழிந்துள மகிழ்வார். (எரு)

மகிழ்ந்திடுங் கமல வடிவையுங் கண்டு
மயக்கமு மறுத்தவர் மகிழ்ந்தே
இகழ்ந்திடுஞ் செகத்திற் பிறந்ததி னுலே
பிறப்பிறப் பொன்றிலா தவனைய்

உகந்ததி னாலே யுடலுயி ருற்று
முகந்தன ருறும்பொரு ளதனை
அகந்தனி லிருந்த வரும்பொரு ளருமை
யறிந்தவ ருகந்தன ரன்றே. (எசு)

அண்டமுங் கடந்து மதன்வகை கண்டு
மந்தரங் கடந்தன ரறிவால்
பிண்டமுங் கடந்து பின்மல ரேழும்
பிரளயங் கடந்தவர் பெலத்து
மண்டல மூன்றுங் கடந்தப்பா லுருகி
மயக்கமுங் கடந்தனர் மருவி
முண்டக விளக்கிற் சுடரையுங் கண்டு
முடிவையுங் கடந்தனர் முடுகி. (எஎ)

முடுகினர் முத்துப் பவளமும் பச்சை
மூன்றுமொன் றானதில் முடுகி
கடுகெனக் கமலக் கருத்துற விருந்து
கருவிது வென்றெனக் கருதி
உடுவெனச் சிறந்து முடலினில் நிறைந்து
முயிரெங்கு மானதி லுறைந்தும்
இடுமிது வகையை யெவருமே யறிந்தால்
இமைப்பொழு தாகிலு மிகழார். (எஅ)

இகழ்ந்திடாப் பொருளை யிருந்திட மிருந்தே
இறைவனைப் புகழ்ந்தவ ரெவரோ
மகிழ்ந்திடா மனதை மயக்கமு மறுத்து
மனந்தெளிந் திருந்தவ ரெவரோ
உகந்திடா தகந்து முறும்பொரு ளறிந்து
முற்றுணர்ந் துயர்ந்தவ ரெவரோ
இகந்திடா திசைந்தே யிருமலர் நடுவி
லிருந்தறிந் திசைந்தவ ரெவரோ. (எகூ)

இருமலர் நடுவி லிருந்தரு ளறிந்து
மிசைந்திட வவாமு தருந்தி
மருமலர் வாசம் மனமதில் நிறைந்து
மயக்கமுந் தீர்ந்தனன் மகிழ்ந்து
புருமலர் பூத்த பூமலர்க் கருவைப்
புகழறிந் துகந்தனன் புகழ்ந்து
தருமலர்க் கருவின் பதமலர் சிரசில்
தரித்தனன் தயவருள் புரிந்தே. (அ0)



புரிந்திடுங் குருவே பூமலர்க் கருவே
புகழரி தாகிய திருவே
தெரிந்திடுந் தெளிவே தெளிவினி லொளிவே
தேவனே தேவர்நா யகனே
அறிந்திடு மறிவே யருள்மறைக் கருவே
அகண்டம தானநல் லரசே
புரிந்திடும் புகழே பூரணத் திரளே
புகழருள் புகழருள் குருவே. (அக)

குருவென வுரைத்த குருநபி பாதங்
கொண்டிடக் குவிந்தனன் சிரசில்
தருநபி மலர்பொற் பதமல ரருளை
தருவதற் கிரந்தேனுன் னருளால்
திருநபி மலர்பொற் பதமல ரறிந்து
திதித்தனன் கருத்தினிற் பொருத்தி
வருமிறை நபியே வந்துளங் குளிர
வரும்பொருள் வரமருள் புரிவீர். (அஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புரிந்திடும் பொருளி னாலே பொற்பத மலரைப் போற்றி
அருந்திடு மமுதத் தாலே யருளடி சிரசி லேந்தி
திருந்திடுந் தெளிவி னாலே திருவரு ளுளத்தி லேத்தி
வருந்திடும் வாழ்வே யென்னுள் வரஞ்செயு முண்மை சாற்றே.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதியரு ளானவனை யறியமுறை கேளும்
ஆனகலி மாவிலிரண் டெழுத்தறிய வேண்டும்
சோதியரு ளாகுமருள் சூழ்ந்திருக்கு மெழுத்து
சொன்னாலுந் துலையாது சொல்வதற்கு மரிதாம்
நீதிமறை யோர்களிதை நிசமறிய வேண்டும்
நிசமறிந்த பேர்க்குநிசம் நினைவுதவ றாமல்
ஓதுமுறை யோர்களிதி னெழுங்கறிய வேண்டும்
உற்றுநிற்கு முடல்தனிலே யுயிரெழுத்து மிதுவாம். (அச)

இந்தமுறை யானவகை யெவருஞ்சொல்வ தில்லை
எங்கள்ஹல்லா ஜெங்கள்குரு தங்கமலர் திறந்தே
அந்தமுறை யானதுவை யகமகிழ்ந்து சொன்னார்
ஆனவெழுத் தானததை யாரறிவார் ருலகில்
சுந்தரவடி வுஞ்சுகமுஞ் சூட்சியறி வோர்க்கு
சுகமாக விவ்வெழுத்துச் சுருதிமுடி வாகும்
நந்திவடி வானவரை நாடிமற வார்க்கு
நலமாக விதன்முறையை நாமறியச் சொல்வோம். (அரு)

நாடிநின்ற ரண்டெழுத்தும் நாயன்கலி மாவில்
நலமாகு மிவ்வெழுத்தை நாமறிய வேண்டும்
கூடிநிற்குங் குண்டலிற் குருவெழுத்து மிதுவாம்
குணமாகு மிவ்வெழுத்தைக் குறித்தறிந்த பேர்க்கே
ஆடிவரு மண்டபிண்ட மலைகடல்க ளெவையும்
ஆனவகை யானதுக்குள் ளகமிருக்கு மெழுத்தாம்
தேடியிதைத் தெளிவறிந்து தெரிந்துகொண்ட பேர்கள்
தின்கிளைக்குந் திசைகளெங்குந் திங்களைப்போ லாவார். (அசு)

ஆனஹறு பானதனை யகமிருத்திக் கொண்டால்
அப்போது வெளியாகும் அஹறியத்தின் வெளிச்சம்
வானமதின் கதிர்நிலவு வானொளிவு தானும்
வகைமூன்றி மொன்றுச்சு வானமுறை தனிலே
வானமென்ற பேருமிலை வண்மைவெளி யானால்
வகைமூன்று விபரங்கள் வகையறியச் சொல்ல
ஆனமுறை யானதனை யாரறிவா ருலகில்
அந்தவெளி யானதிலே யந்தரமாய்க் காணும். (அஎ)

அந்தரமென் றுனதுதா ளுதிவடி வாகும்
அவ்வல்முத லாகிர்வரை யதில்விபரந் தோன்றும்
மந்திரமாம் பொருள்மவுன மறைவெளியிற் காணும்
மாமோகக் காமியவள் மகிழ்ந்திருப்பா ளதிலே
சுந்தரமாம் வடிவுமவள் சுடரழகைச் சொல்லச்
சொன்னாலு முடியாது சொல்வதற்கு மரிதாம்
அந்தரமு மாதிமுத லானதுவு மவளாம்
ஆரறிவா ரிவ்வுலகி லவள்பெருமை யழகே. (அஅ)

சொல்வதற்கு மூன்றிலொன்று சொல்பொழுதொன் றுகும்
சோபனமாய் நின்றதொன்று சோமனென வருகும்
வெல்வதற்கு வெண்மையுடன் வெள்ளியுமொன் றுகும்
விதித்தபடி யிதுமூன்றும் ஹக்களவிற் சேர்த்தால்
அல்லலொன்று மில்லையிந்த வருமைமுறை யறிந்தால்
ஆரறிவா ரிவ்வகையை யகந்தனிலே சேர்க்க
நல்லமுறை நிலையமதை நாடியறிந் தோர்கள்
நானிலத்தில் செய்யுமுறை நல்வகையைக் கேளோ. (அகூ)

கேளுங்கள் நல்வகையைக் கிருபையுட னறிந்தால்
கீழுலகும் மேலுலகுங் கிருபையெல்லாந் தெரியும்
வாழுகிற வான்பொருளும் வல்லபமுந் தெரியும்
வன்னிமுதல் நால்வகையும் வசப்படுமோ மவர்க்கு



பாழ்வினையும் பாழ்நரகும் பாவங்களு மிலையால்
பலநாளு மிவர்பாதம் பணிந்துநின்ற பேர்க்கு
நாளுமொரு குறைவின்றி நாடினதைக் கொடுப்பார்
நாழிகைக்குள் ளுலகெல்லாம் நடக்கும்வகை சொல்வார்.

கொடுக்கும்வகை யின்னதென்று குறித்துமுடி யாது
கோமான்றன் கோனருளைக் கொள்ளைகொண்ட படியால்
தொடுத்துமிவர் பதமலரைத் துதித்துநின்ற பேர்க்குத்
துயரங்கள் வல்வினைகள் தோஷமணு காதே
அடுத்துநின்ற பேர்களவ ரகமறிவ துண்டோ
ஆதிமுத லடங்கலையு மறிந்தபடி யாலே
எடுத்துநின்ற பேர்களுக்கே யிறையருள்தா னதிகம்
எவ்வுலகு மெவ்வுகையு மிவர்க்குவசப் படுமே. (கூக)

வசப்படுத லவர்க்குவசம் வானுலகம் புகுந்து
வல்லோன்றன் னெல்லஹளவும் வாசிக்கவுந் தருமே
நிசப்படுமோங் குருவமுதங் குடித்துநின்ற பேர்க்கு
நிலையான வோர்நுகத்தின் நேசம்வெளி யாகும்
இசைத்திடுவீ ரென்றனக்கே யிறையருளைப் பூட்டி
எங்கும்நின்றந் திருக்கும்நபி தங்கமலர் காட்டி
வசப்படும்வல் லோனருளால் வண்மைபெறு குருவே
வளர்பொருளா வானருளை வருத்திவைப்பீ ரருளே. (கூஉ)

வெண்பா.

கலிமாவை நாடிக் கருத்தறியா தார்க்கே
அலிமாம ஞர்ஷபாஅத் துண்டோ—ஒலிமார்கள்
உள்ளத் துணரு முதிப்பறியா மூடரவர்
கள்ள மறிந்துணரார் காண். (கூங)

தோங்கல்.

கண்ட பேர்கள்சொற் கருத்தில்லையான்
கருதி யறியாமற் கசடனுவான்
ஒன்று மறியாம லொழுங்குஞ்சொல்வா
னுறுதி நிலைகொண்ட வொழுங்கறியான்
விண்ட பேர்கள்சொல் விதமறியான்
வேதப் பயன்களை விளங்கறியான்
நன்றி யறியாமல் நலங்கள்கெட்டு
நாட்ட மறியாமல் நரகிலாழ்வான். (கூச)

அறிவை யறியவு மறியமாட்டான்
அறிவை யடங்கலு மலக்களிப்பான்
பிரிய முடையர்பால் பிரியம்வையான்
பெரியோர் சொல்லதைப் பேணமாட்டான்

வெறியர் போலவே வீணிற்கூடி
விசைகள் மிகப்பேசி வசைகள்சொல்வான்
அறிவை யறியாம லலக்கழித்தால்
அஃயா னில்தோஷி யவனாகுமே. (கூரு)

சொன்ன வுஞ்சொல்லை கழுவுஞ்செய்யான்
சொல்லும் பேர்களைச் சூட்சம்சொல்வான்
தன்னை யுந்தன்னை யறியமாட்டான்
தன்னை யறிந்தோர்கள் தங்கயறியான்
என்னை யுமிவன்று னிடமுஞ்சொல்லி
யிறையை யறியாமல் இபுலீசுடன்
பன்னை யுமிவன்றன் பாவமீறிப்
பாவி யவனோடே தான்சேருவான். (கூசு)

இப்படிப் பட்டவன் இபுலீசாகும்
இவன்றன் முஹப்பத் திடராகும்
இப்படிப் பட்டவ னிடந்தனிலே
யெந்த நேரமு மிறைகோபமாம்
இப்படிப் பட்டவன் முஹப்பத்திலே
யெவரு மாகாமற் காத்தருள்வாய்
இப்படிப் பட்டவ னிடரதனில்
ஏகா இறையருள் செய்குவையே. (கூஎ)

கலிவிருத்தம்.

தன்னறிவு தன்னுடலிற் றானறியா தென்ன
உன்கபுசி னேமொன் றட்கலுந்தி ருந்த
நின்வகையை நீயறிந்து நின்னுளம்நி றைந்தால்
தன்னறிவு மொன்றுபடுந் தானறிந்த காலே. (கூஅ)

தானறிந்தால் தன்மனதில் தானவனுண் டுண்டும்
நீயறிந்து சேர்ந்ததனை நீயிணக்கஞ் செய்தால்
வானறிவும் வான்பொருளும் வண்மையுமே வந்து
தேன்மலர் திறந்தமுதந் தின்றுதெளி வாமே. (கூகூ)

தெளிந்தமலர் தேனமுதந் தின்றுதெளி வானால்
கழிந்தவகை நாலுங்கழி யாமற்கரு வாகும்
பளிங்கியென மின்னும்பிர காசமதிற் றோன்றும்
ஒழிந்தவனைக் கண்டுமென துண்மையுற வாமே. (க00)

உண்மையுற வாகுமரு ளாற்றுணர்ந்த பேர்க்கு
செம்மையென வேயறிந்தால் செவ்விதழ்தி றக்கும்
வெண்மையென வேயிருந்த வெண்டாள முந்தை
நன்மையுட னேயறிவர் நந்திவடி வாமே. (க0க)



நந்திவடி வானவரை நாமறிந்தோ மானால்
எந்தவினை யோரிடமு மெவ்விதமு மில்லை
பந்தமுறும் பாழ்வினையும் பாழ்நரகு மில்லை
சுந்தரவடி வுஞ்சுகமுஞ் சூட்சம்பெற லாமே. (க0உ)

---

## அருள்புரியென்றபதிகம்.

### நேரிசை வெண்பா.

அருளாய் நிறைந்த வகப்பொருளே மேலாம்
பொருளாய்த் துணையறிந்து போற்றித்—தெருளுறவே
எவ்வகையுந் தானான வென்னுளத்தில் நீயான
அவ்வகையை யுய்ய வருள்.

---

### தருழிசை.

அவ்வ லஹூதாக விருந்தவனே யடியேன் மனதிற் றுயர்தீர்த்து
நவ்வி லிருந்த நாட்டமதை நடனம் புரிவா யெம்மிறையே
கவ்வி லிருந்த வச்சரத்தைக் காணக் கிருபை தருந்திருவே
செவ்வி லிருந்த சிர்றதனைச் சிறப்பா யறிய வருள்புரியே. (க)

ஆதி யருளே யாண்டவனே யடியேன் றுயரந் தீர்ப்பதற்கு
நீதி யுடனே நீயல்லால் நினைத்தே கேட்க வேறுளதோ
ஓதி யடியேன் புகழ்வதற்குன் னுண்மை தவறு துளத்திருந்து
சோதி யருளா யுலகனைத்துஞ் சூழ்ந்த பொருளை யருள்புரியே. (உ)

அலிபா யிருந்த ஹூறுபதனி லக்ஷீ திருந்தே யடங்கலையும்
அலிபா யழகா யகம்நிறைந்தே யருளா யிருந்தா யாண்டோனே
அலிபி லிருந்தே யரும்பொருளா யணுவுக் கணுவா யிருந்தோனே
அலிபி லிருந்த வரும்பொருளை யடியே னறிய வருள்புரியே. (ங)

பேயா யிருந்த பெரும்பொருளில் பெலமாயிருந்த பெரியோனே
காயாய்க் கனியாய்ப் பூவாகிக் கருத்தோ டுறைந்த காவலனே
மாவா சியிலே தானிறைந்து மகிழ்ந்தே யிருந்த மறையோனே
தாயாய் வந்தே யென்றனக்குத் தருவா யமுத மருள்புரியே. (ச)

வாசம் நிறைந்த வல்லபமே வடிவா யிருந்த வான்பொருளே
ஆசை யுன்மே லெனக்கிலையோ வணுகா திருந்தா லறிவர்களோ
பாச மகற்றி யென்னுளத்திற் பரிவா யிருப்பாய் பழம்பொருளே
ஆசை நிறைந்த வரும்பொருளை யறியக் கிருபை யருள்புரியே. (ரு)

ஆரு மறியா தானபுக ழருளே யறிய வருள்புரிவாய்
பாரி விருப்போர் பழியாமற் பரமாய் நிறைந்தே யருள்புரிவாய்
சீருஞ் சிறப்பு மென்னுளத்திற் செயலா யிருந்த செயப்பொருளே
ஆரு மறியா வரும்பொருளே யறியக் கிருபை யருள்புரியே; (சு)

ஆசை கொளவே யுன்பேரி லதிகப் பொருளைக் கேட்டிரந்தேன்
நேச முடனே நீகொடுக்கா திருக்க முறையோ நெடியோனே
பாச மகற்றி யென்றனக்குப் பரிவா யுருந்தப் பாலமுதம்
வாச முடனே நீகொணர்ந்தென் வசமாய்க் கிடைக்க வருள்புரியே. (எ)

எங்கும் நிறைந்து நீயிருந்தா யெவர்க்கு மேலோ னெனவுறைந்தாய்
தங்கும் பொருளுந் தானென்று சாற்று மறையிற் றுன்மொழிந்தாய்
ஙங்குந் தனக்குள் நிறைந்தேனென் றறிவுஞ் சொன்னு யடங்கலுக்கும்
பொங்கும் பொருளும் புகழ்புரிந்து பொருந்தி யிருப்பா யருள்புரியே. ()

இந்தப் படியே நீயிருந்தா லெவரு மறிய விசைவுளதோ
அந்தப் படியென் னகம்நினைத்தா லறிவை யறிவ தெப்படியாம்
முந்த விருந்த பெரியோர்கள் முறையா லறிந்த முயற்சிதனைச்
சொந்த முடனே யெனக்கீந்து சூட்சப் பொருளை யருள்புரியே. (கூ)

முன்னு ளிருந்த முறையறிந்து முடுகி யடியேன் கேட்பதற்கே
இந்நா ளறிய வென்னுளத்தி லிசையா திருக்க ஞாயமுண்டோ
இந்நா ளெளியேன் செய்பவங்கள் யாவும் பொறுத்தே யிரக்கஞ்செய்து
முன்னு ளிருந்த முடிவறிந்து முடுக விரைவா யருள்புரியே. (க0)

---

## அருள்தேவேயென்றபதிகம்.

---

### நேரிசை வெண்பா.

செய்யுங் கிருபை சிறப்பு மெனக்கருள
வையகத்தி லுன்னையல்லால் மற்றுண்டோ—துய்யநெறி
தொன்மையுடை யோர்க்களித்த தூதருளும் வல்லபத்தை
நன்மையுடை யோனே நவில்.

---

### தோங்கல்.

நவிலுங் கிருபையு மெனக்கருள்வாய்
நதிபோல் மனதினிற் பெருகுதற்குப்
புவியி லேமனம் பூண்டிடாமற்
புகழை யெனக்கருள் புண்ணியனே



செவியீ தெனக்கருள் குருவுரைத்த
செல்வம் பொருந்திய சிறப்பருள்வாய்
செவியோ டறிந்துனை வணங்குதற்குக்
கிருபை யுடையோனே யருள்தேவே. (க)

அருளும் ஒலியினில் நிறைந்தவனே
யாறெட் டிலக்கத் துறைந்தவனே
பொருளும் புகழறிந் துகந்தபேர்க்குப்
புகழ வீரெட்டி லிருந்தவனே
இருளை யகத்தினி லறுத்தவர்க்கே
யெட்டெட் டாறுங்கொ டுத்தவனே
அருளும் ஒலியினி லிருந்தபொரு
ளென்னை யெனக்கிங் கருள்தேவே. (உ)

ஐயெட்டு மெட்டுமொன் றுசக்கூடி
யாக வதிர்கின்ற வேளையிலே
ஐயெட் டும்மதிற் பிறந்ததினு
லதிலே யடங்கலு மமைந்துநின்றே
ஐயெட்டு மெட்டுட் புகுந்ததினு
லலங்கா ரப்பச்சை யெழுந்ததுவாம்
ஐயெட்டு மெட்டு மானகோவே
ஐயெட் டேயெனக் கருள்தேவே. (ங)

ஐயெட்டு மெட்டும் நடம்புரிந்தே
யந்த நடனத்தில் ஒலிபெழுந்தே
ஐயெட்டு மெட்டு மொன்றுங்கூடி
அஹது அஹ்மது முஹம்மதாச்சு
ஐயெட்டு மெட்டும் ஒலிபுக்குமுன்
னடங்கி நின்றே யணுவெட்டுக்குள்
ஐயெட்டு மெட்டு மாய்நிறைந்தே
யடங்காப் பொருளெனக் கருள்தேவே. (ச)

ஆறு பத்துமாய் நின்றதிலே
ஐயெட் டும்பத்து மதிலெழுந்தே
ஆறெட்டு மிரண்டு மானதிலே
ஐயெட் டும்பத்து மதிற்பிறந்தே
ஆறெட் டிரண்டி லக்கத்திலே
யதிலே யோரஞ்சு மெழுந்ததுவும்
ஆறெட் டிரண்டு மானகோவே
ஆறு பத்தெனக் கருள்தேவே. (ரு)

அருளு மோரஞ்சில் மாவெழுந்தே
    அதிலே வொருநான்கு நூறெழுந்து
பொருளா யிதுவாறுந் திரளானபின்
    பொங்கும் இருபையு மதிலாகியே
மருளு மயக்கத்தை யறுத்தகோவே
    மாறு மலுனையே வணங்கவேண்டி.
அருளா யடங்கலு மிதனைக்கொண்டே
    யமைத்த பெரியோனே யருள்தேவே. (௬)

ஆறஞ்சு மொன்று மஞ்சுங்கூடி
    யாக வுயிரெழுத் தானதுவாம்
ஆறஞ்சு மொன்று மானதுதான்
    அடங்கலில் நிறைந்தே யாண்டதுவாம்
ஆறஞ்சு மொன்று மையெட்டுக்குள்
    ளடங்கி யதுமூன்று யெழுந்ததுவாம்
ஆறஞ்சு மொன்று மானகோவே
    ஆறுறு மெனக்கே யருள்தேவே. (௭)

அல்லா ஹூவென்ற வெழுத்துநாலும்
    ஆதி ஆதந்தி லானதுவும்
நல்லோன் அலிபுதான் சடமானதும்
    நலமான கல்புலா மானதுவும்
எல்லாம் நிறைந்தலாம் றாஹானதும்
    ஏகன் ஹூவ்வது தாத்தானதும்
வல்லா னிதன்படி யமைத்த வாழ்வே
    வாலைப் பொருளெனக் கருள்தேவே. (௮)

அல்லா மனிதனைப் படைக்கப்படு
    மாக விருபத்து மூன்றுவகை
நல்ல தந்தையால் நாலுவகை
    நலமான தாயால் நாலுவகை
வல்ல மலக்காலே யஞ்சுவகை
    வகுத்தான் நால்வகை றாஹானியால்
எல்லாம் நிறைந்தெங்கு மாண்டகோவே
    யின்பப் பொருளெனக் கருள்தேவே. (௯)

இந்தப் பதினேழு பங்குங்கூட
    விதமாய் நால்பங்கு றாஹினாலே
அந்த முளவாதி பங்கிரண்டு
    மாக விருபத்து மூன்றுஞ்சேர்ந்து



வந்த வகையறி யாதவர்க்கு
    வணக்க முண்டோ வணங்கினாலும்
இந்தப் படியெல்லா மமைத்தகோவே
    யேகப் பொருளெனக் கருள்தேவே. (௧௦)

---

## அருள்வாயேயென்றபதிகம்.

### தாழிசை.

நின்னைத் துதித்தே னென்றனக்குள் நிறைந்த பொருளே யென்குருவே
உன்னைப் புகழ்ந்த வுளந்தனிலே யொன்றுந் துயர மணுகாமல்
மன்னர்க் கரசே மாமணியே மறையாற் பெரிய மாதவமே
என்னை வழுவா தெந்நாளு மிறையே கிருபை யருள்வாயே. (௧)

கண்ணின் மணியே பொன்மானே கருத்தி லமைந்த கதிர்மதியே
விண்ணுக் கரசே மெய்ப்பொருளே வேதப் பொருளே நாயகனே
ஒண்ணுக் கடங்கா துலகனைத்து முறவா யிருந்த வுட்பொருளே
நண்ணுங் குருவே நற்பொருளே நலமுற் றடியேற் கருள்வாயே. (௨)

அருளு மிறையே யாண்டவனே யகாரப் பொருளே யருந்தவமே
வெருளு மயக்கம் வினையகற்றி விரிவா மொளிவை பென்னகத்துள்
பொருளாய் மிகவு மென்னுளத்தில் புகழா யிருந்து போதரவாய்
மருளு மயக்கந் தான்தீர்த்து மாறாக் கிருபை யருள்வாயே. (௩)

அஞ்சா யாறு யருந்தவமா யகண்ட மயமா யருவுருவாய்ப்
பிஞ்சாய் மீமில் புதையலுமாய்ப் பேசாப் பெரிய பொருளாகி
நெஞ்சாய் நெஞ்சில் நீயிருந்து நினைவு முணர்வுந் தானாகி
வஞ்ச மகற்றி வான்பொருளை வகையா யெனக்கு மருள்வாயே. (௪)

கண்டா லொழிய வென்றனக்குக் கவலை தீரா தென்குருவே
அண்டர் முனிவ ரெவ்வகைக்கு மருமைப் பொருளா யிருப்பவனே
ஒன்றுங் குறையா தென்றனக்கு ளுறவா யிருந்த வுட்பொருளே
தொண்ட னெனது துயரறுத்துத் துன்ப மகற்றி யருள்வாயே. (௫)

காலே கமல நாயகமே கருத்தோ டுறைந்த காவலனே
மாலே மவுனப் பொருளெனக்குள் மயங்கா தருளே மறைபொருளே
நாலே நடன நாயகமே நயனப் பொருளே நிறைமதியே
பாலாய்ப் பொருளா யமுதாகிப் பரிவா யருந்த வருள்வாயே. (௬)

நின்னை யறியா திவ்வுலகில் நெளித்தே யிருந்த வென்பிழைகள்
தன்னைப் பொறுத்துத் தாயகமாய்த் தானே கிருபை செய்தருள்நீ
உன்னை யன்றி யுலகதனி லுண்டோ வகையு மொன்றிலையே
மன்னே மவுனப் பொருளுளத்தில் மருவி யெனக்கு மருள்வாயே. (௭)

அண்டந் தனிலும் பிண்டமதே ழுழகா யிருந்த வரும்பொருளே
கண்டு வணங்கா தேயிருந்தால் கவலை தீர வகையுளதோ
ஒன்று மறியா திருந்தபிழை யுலகந் தனிலே நீபொறுத்தே
என்று மழியா தென்பெருமா னெனக்குக் கிருபை யருள்வாயே. (௮)

குடத்துக் குள்ளே நீரிருக்கக் குணத்தை யறியா தவர்களைத்தான்
மடத்த ரெனநான் சொல்லுவனோ மகத்தாற் பெரிய மாமணியே
இடத்துக் கிசைவு போலறிய விசைவா யெனக்குன் கிருபைசெய்து
படைத்து மாண்ட பழம்பொருளே பரிவாய் மவுன மருள்வாயே. (௯)

கத்தன் றானே நிறைந்திருக்கக் கருதி யறியா தவர்களைத்தான்
உற்ற வீண ரெனச்சொலவே யுகந்த முறையோ வென்றனக்கு
பத்தி பணியா துட்டர்பகை பலது மறுத்துக் கிருபைசெய்து
சித்தை யறிய வென்றனக்குள் சிறப்பா யெழுந்து மருள்வாயே. (௧௦)

---

## றகுமானே என்றபதிகம்.

இன்னிசை.

அஹதா யுஹதாகி வாஹிதியத் தானவனே
பகுதா யடங்கலுக்குள் பரப்பிரம மானவனே.
மிகுதா யுலகமெல்லா மெய்ந்நிறைந்த மெய்ப்பொருளே
தகுதாய்ப்புக ழாதநினை லேற்கிலையோ றகுமானே. (௧)

தன்னிலே தானகித் தான்வெளியா யானவனே
என்றும் வழுவாம லெனைக்காக்கு மிறையவனே
பின்னை பிறந்தநின்பின் செய்பிழையோ பெரியவனே
உன்னைப் புகழ்ந்தபுக ழேற்கிலையோ றகுமானே. (௨)

மூன்றுபத்து முன்னுன்கை முயற்சிசெய்தா யெங்களுக்கு
நாலுபத்து நாலிரண்டை நாட்டினு யென்னுளத்தில்
மேலும்பெரி யோர்களுக்கு மெய்ந்நிறைந்த மெய்ப்பொருளாம்
பாலன் புகழ்ந்ததினல் பார்க்கிலையோ றகுமானே. (௩)

ஹையுல்கையூ மாயெவைக்கு ளாடிநின்ற வரும்பொருளே
பொய்யா முலகதனில் போக்கிவிட்டேன் வீண்பொழுதாய்
மெய்யான மெய்யுளத்தில் மெய்ந்நிறைந்த மேலவனே
அய்யா புகழ்ந்தபுக ழடுத்திலையோ றகுமானே. (௪)

ஆதியே யாண்டவனே யெனக்காந் துயரங்களை
சோதியே துய்யவனே சொல்வதற்கு வேறிலையே
நீதியே நிச்சயமே நினைவில் நிறைந்தவனே
ஓதியடி யேன்புகழ்ந்த தேற்கிலையோ றகுமானே. (௫)



தன்னை யறியாமல் தன்னினைவு தானெழுந்தே
உன்னை யுருகாம லுலகிருந்த தின்பிழையோ
என்னபிழை செய்தேனே வெனக்கிரங்கா திருப்பதுநீ
அன்னைபிதா செய்பிழையோ வறிந்திலனே றகுமானே. (௬)

உச்சிதனை யறிந்து முள்பூட்டை நான்திறக்கக்
குச்சியெனக் கார்தருவார் குன்னுரைத்த கண்மணியே
தற்சொருபா யத்தலத்தில் தானகி நின்றவனே
இச்சையுட னீவருவா யென்னுளுறை றகுமானே. (௭)

உள்ளேநீ தானுறைந்து முருவா யிருந்ததனை
கள்ளத்தொழி லல்லாமற் காண்குவரோ காரணத்தைத்
துள்ளி தெறித்ததனே டேட்புகுந்த துய்யவனே
எள்ளுளெண்ணெய் போலவென் னுள்ளுறைந்த றகுமானே. (௮)

மச்சுவீட்டுக் குள்ளிருந்த மாமோகி மாயமதை
இச்சையுடன் காணுதற்கு மெத்தனைநாள் செல்லுமய்யா
குச்சுவீட்டை யுங்கடந்து குருபரனை நானறிய
தற்சொருப மாகவென்னுள் தான்வருவாய் றகுமானே. (௯)

ஒற்றெழுத்துக் குள்ளே யுறைந்திருந்த வுட்பொருளே
சித்தெழுத் துக்குட்காண செயல்தருவாய் மேலவனே
நெட்டெழுத்துக் குள்ளிருந்து நீமேழி பரமாணுய்
வட்டெழுத்துக் குட்காண வகைதருவாய் றகுமானே. (௧௦)

உடலுருகி யுளமுருகி யுலையிலகு மெழுகதுபோல்
கடல்பெருகுங் கண்ணீராய்க் கதறுவதுங் கேட்கிலையோ
மடல்விரிந்து மனமகிழ மறையவனே மனமிலையோ
நடமிலையோ தான்வரவுந் தாமதமேன் றகுமானே. (௧௧)

மலையுருகு மண்ணுருகு மறையினியற் பெரியவனே
கலையுருகுங் கல்புருகும் காரணனே கலையுமொரு
வலையிலகப் பட்டதுபோல் வாடுவனோ வாடாமல்
நிலையிற்பிரி யாதவனே நீவருவாய் றகுமானே. (௧௨)

அல்லாவே யுன்னை யறியாமல் நானிருந்தேன்
பொல்லா வுலகதனில் போக்கிவிட்டே னென்பொழுதை
எல்லாப் பிழையுமென் னிறையவனே நீபொறுத்து
நல்லா ருடன்சேர்த்து நலந்தருவாய் றகுமானே. (௧௩)

## றகுமானேயென்ற பதிகம்.

### சந்த விருத்தம்.

தானிலும்நீ யல்லவோ தவத்திலும்நீ யல்லவோ
வானிலும்நீ யல்லவோ வகுப்பிலும்நீ யல்லவோ
ஊனிலும்நீ யல்லவோ வுணர்விலும்நீ யல்லவோ
பேணிலும்நீ யல்லவோ பெரும்புகழ்நீ ஹக்கனே.

### கலிவிருத்தம்.

உன்னைப்புகழ் யாவருமே யுன்பரத்தி லானேம்
அன்னைபிதா செய்பிழை யடங்கலும் பொறுநீ
மன்னனன்றி வேறுமோர் மதிப்பிடமு முண்டோ
என்னினைவி லொத்தபடி யிரங்கும்றகு மானே. (௧)

எங்கள்கிளை யாவருக்கு மிழிவிடர் தவிர்த்துப்
பங்கமறப் பாவமெல்லாம் பாழ்வினை யொழித்துத்
திங்கள்மஹ- மூதுதிருப் பாத்மே யளித்தும்
எங்கள்பிழை நீபொறுப்பா யெங்கள்றகு மானே. (௨)

தானவா வெனக்குதவி தானல்லாமல் யாரே
கோன்முறை கொண்டாடுவதுங் கோனுமெனக் காரே
தீனோர்பகை தீவினையுந் தீர்ப்பதுவு மாரே
ஆனவாநீ யாவரையு மாண்டறகு மானே. (௩)

இவ்விதமா யுன்னுடனி ரந்திரந்து கேட்டேன்
அவ்விதமென் றாய்தந்தைகட் கனுவுந் தவறாமல்
எவ்விதமும் நீபொறுத் திறைபதியி லாக்கி
நவ்விலுன்றிருப் பதத்தில் நல்கும்றகு மானே. (௪)

பல்லுயி ரனைத்தையும் படைத்தமைத்த நாயன்
வல்வினைகள் யாவையும் வெருட்டிவிட வல்லன்
நல்கிருபை யாவருக்கும் நலமளிக்கும் நாதன்
சொல்படி கபூல்செய்தருள் சோதிறகு மானே. (௫)

இப்படி யொருவர்க ளிரந்துடனே கேட்டால்
சொற்படி யவர்க்கருள்நீ சோதிறகு மானே
முப்படி மறைதனில் மொழிந்தமுத லோனே
அப்படி யென்க்கருள்நீ யூாதிறகு மானே. (௬)

ஆதமுதல் யாவையு மமைத்தறகு மானே
வேதந்தனில் யாவுமே விளங்கும்றகு மானே
ஓதுமறை யுள்ளினி லுதிக்கும்றகு மானே
ஆதியே யெனக்கிரங்கி யருள்செய்றகு மானே. (௭)



ஆறுடனே ராறுமே யணுவுந்தவ றாமல்
கூறும்பெரி யோர்க்குப்பிழை கொண்டிடவு மில்லை
தேறிவரு மேதினியிற் றீவினையொன் றில்லை
மாறும்பெரும் பாவங்களு மாற்றும்றகு மானே. (௮)

ஊரிலொரு பேருமில்லை யுற்றுணர்ந்து கேட்கப்
பாரிற்றரு வார்களோ படைத்தவனே யல்லால்
ஆருந்தரு வார்களோ வடிமைக்கருள் செய்து
சீர்பெருகும் சிந்தைதனிற் செல்வறகு மானே. (௯)

அன்றுமுதல் யாவையு மமைத்தழிக்க வல்லன்
ஆதிமுத லெங்களையு மாண்டவனு நீயே
தொண்டமரென் னுள்ளமதில் துய்யபெரி யோனே
தொல்வினை யகற்றித்துயர் நீக்கும்றகு மானே. (௧௦)

## றகுமானேயென்ற பதிகம்.

### கொச்சகம்.

கத்தனேயென் கண்மணியே கார்க்குடையோர் தம்மானே
முத்திதரக் கேட்டதெல்லா முழுதுந்தரு மென்கோவே
பத்தியுடன் கேட்டிரந்தேன் பரப்பிரம மானவனே
குற்றமெல்லா நீபொறுத்து கொண்டாட்கொள் றகுமானே. (௧)

எத்தனையோ பாவங்களென் றாய்தந்தை செய்திடினும்
அத்தனையு நீபொறுத்தே யாள்வாயென் றாண்டவனே
முத்தி யுதித்த முஹம்மதுர்ற சூல்பதத்தில்
சித்தமுடனே சேர்த்து செய்தாட்கொள் றகுமானே. (௨)

ஆலமறு வாஹ-முத லாண்டுகொண்ட வம்பரனே
பாலன் றனையீன்ற பரமதந்தை தாயார்க்கும்
காலம்வரும் நேரந்தனில் காவலனே காரணனே
மூலமறு நான்கவர்க்கு முத்திகொடு றகுமானே. (௩)

முத்தேயருள் முச்சுடரே முத்திமழ கானவனே
சித்தே செயப்பொருளே சித்திலட்சங் காதவனே
உற்றே யுடலுயிரு முள்ளுறைந்த வுட்பொருளே
பத்தியுடன் றாய்தந்தைக்கு பண்ணுமுத்தி றகுமானே. (௪)

அணுவா யகண்டமுத லானவகை யாவதுக்குள்
தனுவாய் நீதாவரமாய் தானிறைந்த தற்பரனே
நினைவாய் நினைவதுக்குள் நிச்சயமே நிட்களனே
தினமகிழ்ந்த தாய்தந்தைக்கு திருவருள்செய் றகுமானே. (௫)

அல்லும் பகலு மடிமைமனம் வாடுவதேன்
தொல்லை யுலகில் துயரம்வந் தூற்றதினால்
வல்ல இருபை வகைதருவாய் வல்லவனே
நல்லபுகழ் தாய்தந்தைக்கு நல்குமுத்தி தருமானே. (௬)

அண்டருக்கு மரக்கர்முனி யானவகை யாவருக்கும்
ஒன்றுங்குறை வில்லாம லுணவளிக்கு முத்தமனே
என்றுமழி யாதவனே யெனக்குமென்றாய் தாதையர்க்கும்
நன்றியன் றுணைவருக்கும் நல்குமுத்தி தருமானே. (௭)

ஆனபர மானவனே யாறுடனே ராறதனில்
கோன்முறைகொண் டாடிநிற்கும் கொற்றவனே குருபரனே
தீனோர்மனத் தீவினைகள் நீங்குகனொன் றில்லாமல்
ஆன்பிதா தாயார்க்கு மருளுமுத்தி தருமானே. (௮)

முச்சுடரி னுட்சுடரே முதல்வடிவ தானதனை
அச்சுடரென் றாய்தந்தைக் கருளளிக்கு மம்பரனே
இச்சையுட னெந்நாளு மிரந்திரந்து கேட்டதெல்லாம்
பச்சமுட னீகூல்செய் பழம்பொருளே தருமானே. (௯)

பொன்னுலகும் வானுலகும் பூவுலகு மெவ்வுலகும்
தன்வடிவ தாயமைத்துத் தானானந் தாயகமே
எண்ணியெண்ணிக் கேட்டதெல்லா மெனக்குமென்றாய் தந்தையர்க்கும்
நண்ண வழுவாமல் நல்குமுத்தி தருமானே. (௧௦)

---

## வாழ்வே யென்ற பதிகம்.

---

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அலியினில் நிறைந்து மதுவெளி யாகி
அடங்கலு மானது மதுவே
பொலிவினுள் பொலிவாய் புகழிலு மடங்காப்
போதா வானது மதுவே
மெலிவில்லாப் பொருளாய் மெய்யுளம் நிறைந்து
மெய்ப்பொரு ளானது மதுவே
வலியமெய்ப் பொருளை தாய்தந்தைக் கீந்து
வளத்தினில் புரிந்திடும் வாழ்வே. (௧)

கண்ணினுக் கடங்காக் கருத்தினுக் கடங்காக்
காரண மானது மதுவே
விண்ணினுக் கடங்கா வெளியினுக் கடங்கா
விரிபொரு ளானது மதுவே



ஒண்ணினுக் கடங்கா வுளத்தினி லடங்கா
வொருவகைக் கடங்கிடா ததுவே
நண்ணிய பொருளே தாய்தந்தைக் கிரங்கி
நலமருள் புரிந்திடும் வாழ்வே. (௨)

அண்டமு தேழு மம்பர மேழு
மரும்பொரு ளானது மதுவே
பிண்டமு தேழும் பின்மல ரேழும்
பெரும்பொரு ளானது மதுவே
தொண்டனெ தென்னுள் துயரறுத் தடிமை
துன்பம தகற்றிடு மதுவே
என்றுமே யெனது தாய்தந்தைக் கிரங்கி
யின்பம தளித்திடும் வாழ்வே. (௩)

கருவினுட் கருவாய் கவலும்நான் மறையில்
காரண மானது மதுவே
உருவினுள் ளுருவா யுறும்பொருள் யாவு
முள்ளகத் திருந்தது மதுவே
திருவினுந் திருவாய் திருவரு ளெழுந்து
திரளொளி வானது மதுவே
குருவினுங் குருவாய்த் தாய்தந்தைக் கிரங்கி
குருபத மளித்திடும் வாழ்வே. (௪)

எட்டுட னஞ்சு மிசைந்திடந் தனிலே
யிறையரு ளானது மதுவே
வட்டெழுத் ததுவாய் வகையினுக் கடங்கா
வடிவமு கானது மதுவே
நெட்டெழுத் ததுக்குள் நிறைந்தெழும் பொருளாய்
நெடியவ னருளது மதுவே
மட்டில்லாப் பொருளைத் தாய்தந்தைக் கிரங்கி
மகிழ்ந்தருள் புரிந்திடும் வாழ்வே. (௫)

அட்டதிக் கெட்டு மதின்வகை யெல்லா
மணுவுக்குள் ளடக்கிடு மதுவே
ஒட்டிடாப் பொருளா யுலகுயி ரனைத்து
மொருநொடிக் கமைத்தழிப் பதுவே
இட்டம தறிந்தோ ருளத்தினில் நிறைந்து
திருவொளி வானது மதுவே
மட்டில்லாப் பொருளைத் தாய்தந்தைக் கீந்து
மகிழ்ந்தருள் புரிந்திடும் வாழ்வே. (௬)

ஞ

ஆறுட னாறு மனுவழி யாம
　　லகத்தினி லளித்திடு மதுவே
நூறுட னாறு மீரேழு மதனில்
　　நுண்ணிப் பொருளது மதுவே
பேறில்லா தெவர்க்கும் பிரியம்வைத் திடுகில்
　　பெரும்பொரு ளளிப்பது மதுவே
சீருட னெனது தந்தைதாய்க் கருளைச்
　　சிறப்புட னளித்திடும் வாழ்வே. (௭)

எட்டுட னெட்டி னிறைபொரு ளாகி
　　யிலங்கி நின்றாடிடு மதுவே
கட்டினுக் கடங்கா கயல்விழி நடுவே
　　காரண மாய்வரு மதுவே
முட்டிநின் றெவைக்கு முப்பொரு ளாகி
　　முழுமதி யானது மதுவே
திட்டம தறிந்து தந்தைதாய்க் கிரங்கி
　　திருவரு ளளித்திடும் வாழ்வே. (௮)

அஞ்சினி லொன்று மெவ்வகைக் குள்ளே
　　யாடிடு மரும்பொரு ளதுவே
வஞ்சகர் நெஞ்சால் வருமிடர் தீர்த்து
　　வல்லவர்க் குறும்பொரு ளதுவே
பஞ்சினில் நெருப்பை யிடுவது போலே
　　பழ்வினை பறத்திடு மதுவே
தஞ்சமா னவனே தாய்தந்தைக் கிரங்கி
　　தவமுத்தி யளித்திடும் வாழ்வே. (௯)

என்செய லணுவு மென்னுளந் தனிலே
　　யினியிலை யிறைசெய லனிலே
உன்செய லெனவு முளமகிழ்ந் தனையே
　　யுகந்துநான் கேட்டரு ளிரந்தேன்
பஞ்சபா தகங்கள் பலதையும் போக்கி
　　பரநடம் புரிந்திடுங் கோவே
வஞ்சியா தருளென் றாய்தந்தைக் கிரங்கி
　　வரமளித் தருள்புரி வாழ்வே. (௧௦)

---



## கோவேயென்றபதிகம்.

### இன்னிசை.

ஆண்டவனே யம்பரனே யடியேனுன் கேட்டதெல்லாம்
மீண்டுந் தவறாமல் மேலவனே நீதருவாய்
பூண்டபரி பூரணமே புகழுக்கடங் காதவனே
ஈன்றெடுத்த தாய்தந்தைக்கி டேத்தங்கொடு வென்கோவே. (௧)

உன்னை வணங்க வொழுங்கறியா துன்னடிமை
என்னபிழை செய்யினுமென் னாண்டவனே நீபொறுப்பாய்
பின்னையொரு நாயனுண்டோ பிரியமுடன் வளர்த்தவனீ
அன்னைபிதா வானவர்க்கு மருள்முத்தி யென்கோவே. (௨)

அச்சரமொன் றில்லாம லடங்கலையுந் தானமைத்துத்
தற்சொருப மாயதுக்குள் தானடன மானவனே
கொச்சைக்குறை யில்லாமற் குருபரனே தாய்தந்தைக்
கச்சமில்லா னந்தமுத்தி யருள்புரிவா யென்கோவே. (௩)

அஞ்செழுத்தால் யாவையுமே யாண்டவனே நீயமைத்தாய்
பிஞ்செழுத்து முன்பிறந்து பெரியபொரு ளானதுவை
கொஞ்சியென்னைக் கொண்டணைத்துக் கொண்டிருந்த தாய்தந்தைக்
கஞ்செழுத் தானந்தமுத்தி யருள்புரிவா யென்கோவே. (௪)

எங்களுக்கு மாதியா மெங்களிற சூல்நயினார்
மங்குல் குடையிடுமா மதியமைத்த மன்னருக்குப்
பொங்கும் பெரும்பொருளாம் புகழுடையோர் பொற்பதந்தான்
எங்கள்தந்தை தாயார்க்கே யீதிமுத்தி யென்கோவே. (௫)

எங்கு நிறைந்திருந்த வேகபெரி யோனுடனே
தங்கமலர்த் தாள்பணிந்து தானிரந்து கேட்டதென்ன
இங்கள் மகுழுத திருப்பதமென் றாய்தந்தைக்குப்
பங்கமற நீயளிப்பாய் பழம்பொருளே யென்கோவே. (௬)

நீயிருக்கும் போதுமென் னெடியவனே யென்மனது
தான்கலங்கி வாரதென்ன தயாபரனே நானறியேன்
நூனெழுந்த நாறுதனை நோக்கமுடன் றாய்தந்தைக்கு
நீயிரங்கி முத்திகொடு நின்மலனே யென்கோவே. (௭)

ஈரே ழுலகமெல்லா மிதிலமைத்த பலவகைக்கும்
பாரேழுந் தாண்டங்கான் படைத்தாய் திருநபியே
கார்மேகங் குடையிடுமான் கனகபதந் தாய்தந்தைக்குச்
சீராக முத்திகொடு சிறப்புடைய வென்கோவே. (௮)

ஒருவகையுந் தாபரமோ பலவகைக்கு முன்னையல்லால்
கருவிற் கலந்திருந்து காரணமாய்க் காத்தவனே
மருவி மகிழ்ந்தெடுத்த மாதாபி தாவுக்குநீ
குருநபிதன் பாதமலர் கொடுமுத்தி யென்கோவே. (௯)

ஆதரவு முன்னையல்லா லாருமில்லை யாண்டவனே
ஆதரவு நீதானே யடிபணிந்து கேட்டதெல்லாம்
ஆதரவு தாய்தந்தைக்கு மாருமில்லை நீதவிர
ஆதரவா யாள்பவனே யருள்முத்தி யென்கோவே. (௧0)

---

## ஆண்டவனேயென்ற பதிகம்.

### சந்த விருத்தம்.

முன்னே வனத்தி லிருந்து முயர்ந்தெழு மூதுரை யானவனே
தன்னிலே தானுய் தான்வகை யெல்லா மமைத்திடுந் தானவனே
என்னை வழுவா துள்ளத் திருந்து மெனக்குணை வானவனே
அன்னை பிதாவுக்கு இன்பத முத்தி யருள்புரி யாண்டவனே. (௧)

மாமன மீதில் மருவி யிருந்து மகிழ்ந்திடும் வல்லவனே
தான்வகை யெல்லாம் நொடிக்குள் ளமைத்திடுந் தத்துவ மானவனே
கோன்பல ராஜ ராஜர்க்கு மேலாய்க் கொண்டாளுங் கொற்றவனே
நீமனம் வைத்தேயென் றாய்தந்தைக்கு நீகொடுமுத்தி யாண்டவனே. (௨)

ஆரு மறிந்தில யாவையு மாண்டவா வன்பர்க் குகந்தவனே
சீருஞ் சிறப்பு மிகவழ கென்னுள்நீ செல்வம் புரிந்தவனே
ஊரும் பேருமே யொன்று மில்லாம லுலகுயி ராள்பவனே
பேறும் பதவியென் றாய்தந்தைக்கு பெறுமுத்தி தாவென் னாண்டவனே.

வாடி யிருந்து மெலியாம லென்னுள் வகைதரும் வல்லவனே
தேடி யிருந்து தெளிந்திடும் பேர்க்குத் திருவொளி வானவனே
நாடி யிருந்து நலமருள் கேட்டிடில் நாளுங் கொடுப்பவனே
பாடி வளர்த்திடுந் தாய்தந் தைக்கு பரமுத்தி தாவென் னாண்டவனே. ()

எங்கு நிறைந்து மிருந்து மெவைக்குள் நின்றாடிய வென்பரனே
பங்க மறுத்துப் பதம்பணிந் தன்னோடு பத்திடும் பேர்களுடன்
பொங்கும் பொருள்தந்தை யென்னையும்பொற்பதஞ்சேர்த்திடுநாயகனே
தங்கள் நபிபதந் தாய்தந்தைக் கீந்து தான்முத்திகொடாண்டவனே. (௫)

என்னுள் நிறைந்து மிருந்ததுபோலேயென் னுள்ள நிறைந்தவனே
கன்னமெ தெல்லா மகற்றிப் பழவினைக் காமங்கள் போக்கிடுவாய்
வன்னல் நபிபதந் தாய்தந்தைக் கீந்து வரமளித்தே யருள்வாய்
உள்ள மகிழ்ந்து முகந்துக் காகவு முத்திகொ டாண்டவனே. (௬)



முன்னே யெனையு மகந்தனில் வைத்து முறையா யிருந்தவனே
பின்னே யுனது இருபை யிருந்துநீ பின்வெளி யாக்கியென்னை
அன்னை பிதாவுக் ககந்தனில் வைத்து மருள்வழி யாக்கினவா
தன்னைபுகழ்ந்தே னென்றாய்தந்தைக்குன் முத்திதான்கொடாண்டவனே.

இவ்வித மாகநீ யென்னை வெளிப்படுத் தின்பமளித் தவனே
எவ்விதமு முனக்கானஇருபை யெவர்க்கு மேயில்லையென
மவ்வில் வைத்தென்னை மனமகிழ்ந் தின்றிடு மாதாபிதா வுக்குநீ
நவ்வி லெழுந்த நடனப்பத முத்தி நல்கிடென் னாண்டவனே. (அ)

அண்டர்கள் கோடி யரக்கர் முனிவர்க ளானதுங் கோடியுனைத்
தொண்டர்கள் கோடி துதிப்பர் கள்கோடி துயரறத் தேடியுனைக்
கண்டிடும் பேர்க்கு கருத்திலிருந்து கதிரொளி வானவனே
என்றுமென் றாய்தந்தைக் குன்பத முத்திநீ யீந்திடென் னாண்டவனே. (௯)

ஆறுடனாறு மனுவுந் தவறா தகத்து ளளித்திடுவாய்
சீருஞ் சிறப்பு மிகவருள் தந்தென்னை சீர்பதஞ் சேர்த்திடுவாய்
மாறும் பெரும்பவ மாற்றி யருள்தந்து மாயமகற் றிடுவாய்
கூறுமென் றாய்தந்தைக் குன்பதமுத்தி கொடுத்திடென் னாண்டவனே.

---

## கோவேயென்றபதிகம்.

### கொச்சகம்.

ஆரார் புகழ்ந்தாலு மம்பரனே யாட்கொள்வாய்
சீரா யறியாத சின்னஞ்சிறி யேன்புகழ்ந்தேன்
பேராசை வைத்துமென்னைப் பெற்றெடுத்த தாய்தந்தைக்குப்
பூராய மானமுத்திப் புசழ்புரிவா யென்கோவே. (௧)

வானேழும் புவியேழும் பலவகையு மமைத்தவனே
தானாகி யவ்வகைக்குள் தானிறைந்த தற்பரனே
தீனை பேர்மனதுள் தீபப்பர மானவனே
ஆனபிதா தாயார்க்கு மருளுமுத்தி யென்கோவே. (௨)

முன்னூற்றுப் பத்து மூன்றான முன்றூகைக்குத்
தன்னூற்றில் தானமைத்துத் தானாண்ட நாயகமே
என்னூறு யென்னை யீன்றெடுத்த தாய்தந்தைக்கு
குன்னூறை நீகொடுத்து கொண்டாட்கொ ளென்கோவே. (௩)

முத்திதா வெங்களுக்கு முச்சுடரைத் தானமைத்தாய்
குற்றமில்லா தெங்காளுங் குறையாத வுட்சுடரைப்
பத்தியுடன் தாய்தந்தைக்கு பரமாக்கு மச்சுடரை
நித்தங்குறை வில்லாமல் நீகொடுப்பா யென்கோவே. (௪)

புகழுக் கடங்காத பொருளுடைய வெங்கணபி
உகழும்பெரி யோர்களுக்கு வுட்பொருளா வெங்கணபி
மகிழுமென்றன் தாய்தந்தைக்கு மாதவமூ மெங்கணபி
இகழாத பாதமுத்தி யிறைகொடுப்பா யென்கோவே. (௫)

மாயமா யெவ்வகைக்கு மறைபொருளாய் நிற்பவனே
தாய்நிலையை யறியாதோர் தன்னிலையைத் தானறியார்
காய மறியாமற் கனகபதன் தாய்தந்தைக்கு
நேயமுடன் முத்திகொடு நின்மலனே யென்கோவே. (௬)

சொல்லுக் கடங்காத சூக்ஷப் பொருளதனை
அல்லும் பகலுந்தந்து மாள்வாயென் னாண்டவனே
நல்ல மனமிரங்கி நல்லமுதளித்த தாய்தந்தைக்கு
வில்லாகி யானமுத்தி நீகொடுப்பா யென்கோவே, (௭)

இறையேயென் னாண்டவனே யிறையோர் தவப்பொருளே
துறையறிந்த பேர்களுடன் றுணையாக்குந் தூய்யவனே
மறையாம் பெரியவனே மாதாபி தாவுக்குநீ
குறையாத முத்திகொடு கோமானே யென்கோவே. (௮)

கருவமைத்த நாள்முதலாய்க் கடுகளவுந் தப்பாமல்
உருவா யெனைவளர்த்து முனைவளித்த வுத்தமனே
மருவியெனை யீன்றெடுத்த மாதாபி தாவுக்குநீ
திருவனந்த முத்திகொடு திருவருளே யென்கோவே. (௯)

எறும்புகடை யானைமுத லெல்லாவகை களுக்குள்
உறும்பொருளாய்த் தானிருந்து முனைவளிக்கு முட்பொருளே
தருங்கிருபை யென்றனக்கு மெனையீன்ற தாய்தந்தைக்கும்
இரும்பொருளை நீயளிப்பாய் பெரும்பொருளே யென்கோவே.

---

## ஆண்டவாவென்றபதிகம்.

---

**சந்ததாழிசை.**

அன்பனே யுனை யறிந்திடாத பிழை
யாவுநீ பொறுவென் னாண்டவா
துன்பமான வெகு துயரம்யாவும் பிணி
தோஷயா னதை யறுத்துநீ
இன்பமான தவம் யாவு மென்றனுக்
கீந்து மென்னையுரு வாக்கிநீ
தம்பமாரு மிலை தாய்தந்தைக் குந்தவ
முத்திநீ கொடெ னாண்டவா. (௧)



உள்ளமீ தினி லுறைந்து மென்னுயிர்க்குள்
ளாகி யென்னுடல் நிரஞ்சன
கள்ள மான தறுத்து மென்னுடைய
கவலை யாவையும்நீ மாற்றுவாய்
தெள்ளும் ஞானதவ மீந்துநின் கிருபை
தங்கியுந் திரையை நீக்குவாய்
வள்ளலே யெனது தாய்தந்தைக் குனது
வரிசை முத்திகொ டெனாண்டவா. (௨)

உச்சிமீ தினி லுறைந்து முன்கிருபை
யாவருங்கா ணும்படி காட்டினாய்
பச்சமான பெரி யோர்க்கு ஞானப்பொருள்
பாசம்நீக்கிப் பரங் காட்டினாய்
தற்சொரூபப் பொரு ளென்னுள் தான்வரவுந்
தான்கிரு பைக்கட லூட்டுவாய்
நிச்சயத் துடனே யீன்றதாய் தந்தைக்கு
நேர்மை முத்திகொ டெனாண்டவா. (௩)

அன்னமே யுனையு மன்புவைத் துனா
னடிபணிந் திரந்து கேட்டதை
மன்னனே நீயு மனமகிழ்ந் திரங்கி
மாதவப் பொரு ளளித்தருள்
என்ன மாயமோ வெனக்குள்நீ யிருந்து
மென்னுள மிகவும் வாடுதே
அன்னைதந்தை பிழை யாவுநீ பொறுத்
தனந்தமுத்தி கொடெ னாண்டவா. (௪)

கண்டதேது மிகக் கேட்ட தேது
கரு வானதேதோ வுனை யன்றியே
பிண்டமேது மல ரானதேது பில
மானதேதோ வுனை யன்றியே
அண்டமேது பர மானதே தமர
ரானதேதோ வுனை யன்றியே
தொண்டனென் றனையு மீன்றதாய் தந்தைக்கு
துய்யமுத்தி கொடெ னாண்டவா. (௫)

அகமகிழ்ந் தூன்ற னலையெழுந்து மிக
வருள்சிறந்து வரு மதனைநீ
முகமலர்ந் ததிக கிருபைபொங்கி முறை
யாகநீ யதனை நோக்கினாய்

செகமடங் கலையுந் தான்படைத் திடவும்
    செகமகிழ்ந் திடவு மாக்கினாய்
மிகமகிழ்ந் திடவே தாய்தந்தைக் கதனை
    மிகவுமுத்தி கொடெ னுண்டவா. (௬)

அணுவகன் டம தாக்கி யாவையு
    மருளளித் தினி யாள்பரன்
தனுவதுக் குளேநீ தானிருந் துநீ
    தானெழுந்து நட மானவா
மனமகிழ்ந்துநீ மன்மதிந்துநீ
    மனமிரங்கி யரு ளீந்தவா
தனமிரங்கி யமு தீந்தாய் தந்தைக்கு
    தன்மைமுத்தி கொடெ னுண்டவா. (௭)

உன்னுட னரு ளிரந்துகேட் பவர்க்கு
    மோங்கி நீகொடுப்ப துண்மையே
பன்னுகான் மறையில் தான் கொடுப்பனென
    பகர்ந்த வென்னுடைய பரமனே
தன்னைநான் புகழ்ந்தேன் தனியவா வுனது
    தவத்தை யென்றனக் களித்துநீ
அன்னைதந்தை பிழை யாவுநீ பொறுத்தும்
    ஆனமுத்தி கொடெ னுண்டவா. (௮)

பதறிநின்ற நினைவான தானதைப்
    பரத்தில் வைத்தனன் பராபரா
சிதறிடா மலே யிருந்து சிந்தையு
    ளெழுந்து நின்று பரமானவா
உதறிவிட்டு விடு துன்பமான வினை
    யாவும் பாவமு மொதுங்கிட
அதறிக்கேட் டிரந்தேன் தாய்தந்தைக் குன்றன்
    அருமைமுத்தி கொடெ னுண்டவா. (௯)

ஆதி யாகியனு வாய டங்கலையு
    மாண்டு நின்றிடுமென் னன்பனே
நீதி யாகவுநீ தானி ருந்துநீ
    தானிசைந் தெதையு மாண்டவா
ஓது காரணம தாயு றைந்திருந்து
    மாவு ளத்திலெழு மாதவா
ஆதி யநன்பர மானமுத்தி யென்றன்
    தாய்தந்தைக் கருளெ னுண்டவா. (௧௦)



என்றன்று யன்னையுந் தந்தைதா யன்னையும்
    யாவும்செய், பிழைநீ தான்பொறுத்
துன்றனோடு முறவா யிருந்து முரு
    வாகிநின் றவரோ டாக்கிடு
நந்தியான குருவாக வென் னுள்வந்து
    தானெழுந்து நட மாடிடே
என்றன்றாய் தந்தைக்கு நந்திமுத்தி கொடுத்
    தாண்டிடென் றினையு மாண்டவா. (௧௧)

பாடிக்கேட்ட வர்க்கும் பணிந்துகேட்ட வர்க்கும்
    பரம முத்திகொடு பரமனே
நாடிக்கேட்ட வர்க்கும் நாளுங்கேட்ட வர்க்கும்
    நாத முத்திகொடு நாதனே
கூடிக்கேட்ட வர்க்குங் கூர்ந்துகேட்ட வர்க்குங்
    கூர்மை முத்திகொடு குருபரா
வாடிக்கேட் டிரந்தே னென்றன்றாய் தந்தைக்கு
    வண்மை முத்திகொடெ னுண்டவா. (௧௨)

---

## மஹாமூதுபதிகம்.

### நேரிசை வெண்பா.

தஞ்சமா மென்குருவே தானவனே டானவரே
வஞ்சம கற்றுமோர் வல்லவரே—மிஞ்சுகின்ற
மெய்ஞ்ஞானந் தந்துயர்ந்த மெய்ப்பொருளோ டாக்கியென்னை
அஞ்ஞானத் தாக்கா தருள்.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதியே அஹதே யருந்தவப் பொருளே
    அவ்வலே ஆகிரு னவனே
ஓதிய மறையே யுள்ளுறும் பொருளே
    உள்ளமே யுள்ளக விளக்கே
நீதியே ரெனது நினைவினில் நிறைந்து
    நினைவுறும் படிமுடித் திடவும்
நீதில்லா திறையே கிருபைசெய் தருள்வாய்
    செய்யிதே யாமஹா மூதே. (௧)

அந்தமீ திருந்தே யருணனோ டிசைந்து
    மழகொளி சிறந்திடு மருளே
சிந்தையி லிருந்து செயல்தரும் பொருளே
    செல்வமே செல்வா யகமே

அந்தமொன் றில்லா வழகொளி சிறந்த
வாதியே யரும்பொரு ளரசே
வந்து மென்னுளத்தில் வரமருள் புரிவாய்
வள்ளலே யாமஹூ மூதே. (௨)

முந்துநாள் வனத்தில் முடிவிலாப் பொருளாய்
முறைப்படி யொன்றுமூன் றாகி
நந்தியாய்த் திரண்டு நடனமே புரிந்து
நாடுவோ ருளத்தினில் நிறைந்தே
அந்தநற் பொருளா யனுமுத லகண்ட
மானவா வருந்தவத் தருளே
வந்துமென் னுளத்தில் வரமருள் தருவாய்
வள்ளலே யாமஹூ மூதே. (௩)

முண்டக மதனில் முடுகிமேற் கடந்து
மூன்றுமொன் றானநல் முடிவே
கண்டம தஞ்சிற் கலந்தரு ளாகிக்
கருத்தினி லானநற் குருவே
எண்டல மெங்கு மிருந்தொன்று மிசைந்தே
யெவர்க்குமே லானவெம் மிறையே
தொண்டனே னுளத்தில் துலங்கியப் பொருளாய்த்
தோன்றிடும் யாமஹூ மூதே. (௪)

அண்டமுங் கடந்து பிண்டமுங் கடந்தே
அறுஷூமே லானநல் லருளே
மண்டல மூன்றுங் கடந்தப்பா லிரவி
மதியையுங் கடந்தநன் மறையே
முண்டக விளக்கிற் சுடரையுங் கண்டு
முடுகின முழுமதிப் பொருளே
என்றுமென் னுளத்தி லெழுந்தருள் புரிந்தே
யிரங்கிடும் யாமஹூ மூதே. (௫)

அலிபினில் நிறைந்த மருந்தவப் பொருளா
யடிமுடி நடுவரு ளானாய்
ஒலியிட்டே யெழுந்து முயிரெங்கும் நிறைந்து
முடலினி லுறைந்திடு முருவே
கலியிட்டே யெழுந்த கற்பகப் பொருளே
கார்குடை நிழற்றிடுங் கருவே
வலிதிட்டே யடியா ரகந்தனிற் பொருளா
வருத்திடும் யாமஹூ மூதே. (௬)



ஏயினி லிருந்து மிசைந்திடும் பொருளே
யிருதயத் தெழுஞ்சுட ரருளே
காயினிற் கனியாய்க் கனிந்திடும் ரசமாய்க்
கருத்தினி லுறைந்திடும் கனியே
தேயினி லுறைந்து திசையெங்கும் நிறைந்து
தெளிவினிற் றெளிந்ததெள் ளமுதே
ஹேயினி லுறைந்தே யெழும்பொரு ளதனைக்
கிருபைசெய் யாமஹூ மூதே. (௭)

அண்டர்கள் புகழும் அருந்தவப் பொருளே
யணுவிலுங் குறைவிலா வருளே
தொண்டர்க ளுளத்தில் துலங்கிடும் பொருளே
துயரறுத் தருள்தனை யருள்வாய்
என்றுமே யிலங்கு மிருதயத் திருந்து
மிசைந்திடும் பெருஞ்சுடர் வேந்தே
பண்டுநீ பகர்ந்த பழம்பொரு ளருளைப்
பதித்திடும் யாமஹூ மூதே. (௮)

மறைபுகழ் நாலும் மகிழ்ந்துளங் கனிந்து
மகிழ்ந்திடும் மாமணி யருளே
நிறைந்திடும் பொருளே நினைவினுற் றெழுந்து
நிறைந்திடும் நெடியவ னருளே
குறைந்திடாப் பொருளாய்க் குவலைய மனைத்துங்
கொண்டுநின் றாடிடுங் கோவே
உறைந்திடும் பொருளே யுரிமைகொண் டாண்டு
முளத்துறை யாமஹூ மூதே. (௯)

நுகத்தினி லெழுந்து நுனினி லுறைந்து
நோக்கிடும் லாமக்கா னருளே
நுகத்தினி லெழுந்து நயனமி லுறைந்து
நூன்நடு வாடிடு மரசே
நுகத்தினி லெழுந்த நுண்ணியப் பொருளே
நூறுடன் நோக்கிடென் னருளே
நுகத்தினி லெழுந்த நடனமே புரிந்து
நூறருள் யாமஹூ மூதே. (௧௦)

## முஹம்மது நபியேயென்றபதிகம்.

---

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அவ்வலே அஹதே அஹதியப் பொருளே
அடங்கலும் நிறைந்திருந் தாண்டாய்
அவ்வலே அஹதே அஹததி லிருந்து
மரும்பொரு ளானதி லுறைந்தாய்
அவ்வலே அஹதே அரும்பொரு ளதனி
லடங்கலு மதிலிருந் தாண்டாய்
அவ்வலே அஹதே அடியேனுள் ளுறைந்த
அஹ்மது முஹம்மது நபியே. (க)

இப்படி யனைத்து முன்னுளங் கனிந்து
முறைப்படி யமைத்திடு மிறையே
இப்படி வகுத்து மதிற்குள்நீ யிருந்தே
யெவர்க்குமே லானவென் குருவே
இப்படிப் பொருளா யெங்குமே நிறைந்து
மெவ்வையு மாண்டிடுங் கோவே
இப்படி யடியே னிருதயத் துறைந்து
மினிதருள் முஹம்மது நபியே. (உ)

அடியனு ளிரங்தே னகந்திறந் தருளோ
யருள்புரிந் தாண்டிடு மரசே
அடியனுள் துயர மடங்கலுந் தீர்த்தே
யடிமையை யாண்டிடும் பொருளே
அடியனுட் பகையை யகலவும் நீக்கி
யருள்தந்தே யாண்டிடுங் குருவே
அடியனுன் புகழ்ந்தே னகமதி லுறைந்த
அஹ்மது முஹம்மது நபியே. (ங)

என்னையு மாண்டு மெனக்கிடர் தீர்த்து
மெவைக்குமுள் ளானநன் மறையே
அன்னையும் பிதாவுஞ் செய்பவம் பொறுத்தே
யவர்க்குநின் னருள்புரி யிறையே
உன்னையே யல்லா துகந்துநான் கேட்க
வுறும்பொருள் தருவதிங் காரே
என்னையே யாண்டு மென்னுளத் துறைந்த
வின்பமே முஹம்மது நபியே. (ச)



கண்ணிலே நிறைந்து கயல்விழி நடுவே
காரணங் காட்டிடு மறையே
எண்ணிய பொருளே யிருதயத் திருந்து
மின்பதங் காட்டிடு மிறையே
அன்னை பிதாவி னரும்பவம் பொறுத்தே
யருளடி சேர்த்திடுங் குருவே
முன்னைநீ மறைத்த முறையருள் புரிவாய்
முத்தியே முஹம்மது நபியே. (ரு)

வளமதி லிருந்து வகுப்பெலா மமைத்து
வகைப்படி யாண்டிடும் வாழ்வே
இளமது போலே யெவைக்குளும் நிறைந்தே
யிசைந்திடு மிறைபுகழ் கோவே
தனமிகக் கொடுத்துத் தரணியி லெல்லாந்
தயவுட னுண்டிடுந் திருவே
வளமதி லிருந்த வான்பொரு ளருள்வாய்
வள்ளலே முஹம்மது நபியே. (சு)

இறைபொரு ளாகி யெவர்க்குமே லானு
மிறையுள மகிழ்ந்திடுங் கனியே
மறைபுகல் நாலும் நின்னுளங் கனிந்து
மகிழ்ந்தருள் புரிந்திடு மணியே
முறையுட னறிந்து நின்பத மதனில்
முடுகிட வருள்புரி குருவே
நிறைதரு முளத்தில் நின்னருள் புரியும்
நிலையமே முஹம்மது நபியே. (எ)

---

## குருவேயென்றபதிகம்.

---

நேரிசை வெண்பா.

செய்யுங் கிருபையினைச் சீராக வேயறிந்து
மெய்யா யிருப்பவர்க்கு மேதினியுங்—கையில்
வசப்படு மாமவர்க்கு வானுலகம் புக்கல்
நிசப்படுமோ மென்றுணர்வாய் நீ.

---

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அறிந்திடும் வேத வருள்மறைக் குருவே
யடியனுள் ளகமிருந் தருள்வீர்
பிரிந்திடா திருந்து பெரும்பொரு ளதனைப்
பிரியம்வைத் தருள்புரிந் தருள்வீர்

செதிந்திடும் பொருளைச் செயலுட னறியச்
சிறப்பருள் புரிந்திடுங் கோவே
முறிந்திடும் நாலு முறிந்திடா திருக்க
முறையருள் புரிந்திடுங் குருவே. (௧)

மனத்துயர் தீர்த்து மாமய லருளை
மகிழ்ந்திட வருள்புரி மறையே
எனக்கிடர் தீர்த்தே யென்னுளத் திருந்தே
யிசைந்திட வருள்தரு மிறையே
நினைத்திடும் படியே நின்னருள் புரிந்து
நின்கரத் தாலெனைத் திருத்தி
வனத்துற விருளை யறுத்தருள் வடிவை
வடித்தருள் புரிந்திடுங் குருவே. (௨)

கழிவறத் தடியேன் களங்கத்தைத் தீர்த்துக்
காட்டொணு வப்பொருள் காட்டி
ஒளிகுரு வருளி னுற்பன மூட்டி
யுளிலிருந் துகந்திடுங் கோவே
தெளிதர நிறைந்து திசையெங்கும் பரந்து
திருவில்நின் ருடிடுந் தெளிவே
வழியறத் தென்னுள் வடிவதை நிறைத்து
வந்திருந் தருள்புரி குருவே. (௩)

நினைவினி லிருந்து நிறைந்திடும் பரமே
நின்னருள் புரிந்தெனை யாள்வாய்
மனமுறு மனமாய் மாசிலா திருந்து
மறையருள் புரிந்திடு மயிலே
கனவுறு கனவாய் காட்டொணு வடிவைக்
காட்டிடுங் காரண நிதியே
வனமுறு மிருளை யறுத்தருள் வடிவைத்
தெளித்தெனுள் வளர்த்திடுங் குருவே. (௪)

பத்துட னிரண்டிற் பரமதாய் நிறைந்து
பழம்பொரு ளானநல் லுருவே
உற்றுணர்ந் துளத்தி லுருவதா யிருந்து
முறும்பொரு ளானநற் கருவே
சித்தவு முனையே நினைவுறு மடியார்
நினைவினி லெழுஞ்சுடர்த் திருவே
அற்றிடும் பொருளை யடியனுட் சேர்த்தே
யருள்புரிந் தாண்டிடுங் குருவே. (௫)



வன்னியி லுறைந்து வாயுவில் நிறைந்து
வானதி லிசைந்திடும் வடிவே
கண்ணினுட் பொருளாய்க் கருத்தினி லுறைந்து
ககனமே லுறைந்திடுங் கருவே
உன்னிடும் பொருளை யுகந்திடு மடியா
ருளத்தினி லுறைந்திடு முருவே
அன்னமுச் சுடரே யடியவர் சிரசி
லருள்புரி யருள்மணிக் குருவே. (௬)

மனமறந் திருக்கு மடியவ ருளத்தில்
மறையருள் புரிந்திடும் மணியே
தினமுனை யடியேன் நினைத்துமே யிருக்கத்
திருப்பதங் காட்டிடுங் கனியே
கனமிகப் பொருந்திக் கயல்தனி லிருந்த
கண்மணி யானநல் லுருவே
அனகமுற் றடியா ருளந்தனி லிருந்தே
யாடிடு மருள்மறைக் குருவே. (௭)

அருவமோ டுருவ சொருபமு மாகி
யருளென வாகிய கருவே
மருவிய வுயிர்க்குள் மகிழ்ந்தருள் புரிந்து
மாமய லானநன் மறையே
பொருளென வாகிப் புகழென வாகிப்
புரிந்திடும் பூரணப் பொருளே
இருளறத் தெனுளி னிறையருள் பூட்டி
யிருத்திடு மருள்மணிக் குருவே. (௮)

வன்னியும் வாய்வும் வான்வெளி முதலில்
வண்ணமாய் நின்றிடும் வாழ்வே
எண்ணிய வுயிர்க்குள் ளிருதயத் திருந்து
மெவ்வையு மாண்டிடு மிறையே
உன்னிய பொருளை யுளந்தனி லிருத்தி
யுறும்பொரு ளாயிருந் தாள்வாய்
எண்ணினே னுனையா னெப்பொழு தாள்வா
யிரங்கிநீ யெனக்கருள் குருவே. (௯)

முஸ்தகி முனது திருமுக மளவில்
முடுகிட முயற்சிசெய் குருவே
முஸ்தகி முனது திருப்பத வருளை
முறையருள் புரிந்திடென் குருவே

முன்தனை மறிந்த முனிவோர் முன்னை
முழுமதி யானந் குருவே
முன்தனி மான முடிவிலாப் பொருளே
முன்னிலந் தெளிக்கரும் குருவே. (௧௦)

## கோனேயென்றபதிகம்.

சந்தத்தாழிசை.

உச்சியதன் மேலாக வுற்றதல மாகுமதில்
உற்பவித முனவை யோகமெனத் தெட்டாகும்
தற்சொருப மாகவொன்று தானுமி நின்றநிலை
தன்னாத வுள்ளதிவு தானே தயவருள்வீர்
உட்சொருப மாகவுமுன் னோடிவிளை சஞ்செய்யும்
ஊன்றிவரும் வாசமதி லுட்பொருள தாய்வருவீர்
தற்சொருப மாகவொன்று தானுமி நின்றபொருள்
தானேயென் னுள்ளம்நிற் குருவருளு மெய்க்கோனே. (௧)

மக்கவிட்டுக் குண்மோக மயமாகி நின்றபொருள்
மாமோக மாய்க்கான மறையருள்வீ ரென்கோவே
குச்சுவிட்டை யுங்கடந்து குதாய்கடனாங் காண்பதற்குக்
குருவாக நீ வந்து குறிப்பருள்வீ ரென்கோவே
இச்சையுட னெங்காளு மிருந்து மிசைவதற்கே
இறையாக நீர்வந்து மெய்க்கருள்வீ ரென்கோவே
கொச்சை களைந்திருந்துக் குணமாக வென்றனுளிற்
குறியாக நீர்வந்து குறிப்பருள்வீ ரென்கோவே. (௨)

அரியதொரு மணிதிரளு மானவகை யாகுமதை
ஆருமறி யாதுறதா னருள்புரிவீ ரரும்பொருளே
பெரியபொரு ளானதது பெரியோர் புகழும்புகழ்
பெலமாக வென்றனுளிற் பிரியமுட னேயருள்வீர்
உரியபொரு ளானதது முயிர்தனிலே யுறும்பொருளாம்
உடல்தனிலே யுளம்நிறைந்து முலகுபிரை யண்டதுவாம்
அரியதொரு புகழாக வடங்கலுமே யானதனில்
அருமையுட னகந்தனிலே யருள்புரிவீ ரென்கோனே. (௩)

அண்டர்புக ழும்பொருளா மானதொரு பானதுதாம்
அழகாகும் பதிலா யானவரு ளானதுதாம்
தொண்டர்மகி ழும்பொருளாந் தல்லபத்தி யுள்ளருளாம்
தாதாக வந்ததுதான் றன்னியாகி நின்றதுவாம்



என்றுமே நின்றவினை யாகவந்த வின்பொருளாம்
எவ்வுயிர்க்கு முள்ளாகி யிறையாகி நின்றதுவாம்
பண்டெம்பழம் பொருளாகி பரமாகி நின்றதுவாம்
பழம்பொரு ளானதது பரமருள்வீ ரென்கோனே. (௪)

ஆதிபரு ளானதுவே யருமைப்பொரு ளானதுவாம்
ஆமெல்லா மானதை யருள்புரிவீ ரகந்தனிலே
நீதியுடன் நின்றதுவாம் நிர்மல தாய்ந்து
நேர்மையெனும் யுள்ளிலக நினைவி லெழுந்தருள்வீர்
சோதியாய் நின்று கடாரெழுந்ததுவாம்
சூழ்ந்தபடைப் பாவத்துக் குட்சப் பொருளதுவாம்
ஓதியடி யேன்புகழ வுள்ளம்நிறை பொருள்தருவீர்
ஒன்றுமி நின்றபொரு ளுள்ளிலகு மென்கோனே. (௫)

அப்பரம தானதுவாம் தற்பொருளா மந்தலத்தில்
அந்தகதி யானதுவா யடிவரு மப்பொருள்தான்
வெப்பிரவி யாசமறத் தப்புகழ தாகவேதான்
விரிவாகி நின்றபொருள் விரைவாக வேயருள்வீர்
அப்பரம தாந்ததுவா மரும்புகழா மானதை
அகத்தனிலே யென்றனக்கு மருள்புரிவீ ரண்டவரே
தப்பறவே யிப்பொருளைத் தானே யெனக்கருள்வீர்
தானுமி நின்றபொருள் தானேயு மென்கோனே. (௬)

அப்புபெறு மாபதத்துள் ளடங்கியதோ ரரும்பொருளாம்
அவிபுமுதல் தாவரையு மானபொரு ளானதுவாம்
முப்பிலொரு புரிபதுக்குள் முழ்கியிருக் கதுதான்
மூன்றுமொன் றும்மிந்து முப்பொரு ளானதுவாம்
இன்பமுட னெங்கு மிருந்தே யிசைந்ததுவாம்
இறையாக நின்றவர்க்கு மேலானதுவாம்
அன்பி லுறும்பொருளை யடியேன்கள் காண்பதற்கே
ஆதியாய் வந்திங்கே யருள்புரிவீ ரென்கோனே. (௭)

வாயி லெழுந்து கமலந் துறைந்ததுவாம்
காமேலோர் தன்னுலகத்தில் நற்பொருளா னதுவாம்
நாமிலதா னுமின்று தானே யெழுந்ததுவாம்
நானுந வேலயக்குத் தாயிசைந்து நின்றதுவாம்
பூமி முதலெங்கும் புகழாகி நின்றதுவாம்
பொற்றமுயர் சேர்க்கருக்குப் பொற்பொருளாய் நின்றதுவாம்
வாயி லெழுந்த நற்பொருளைக் காண்பதற்கு
காதராய் வந்து வடம்புரிவீ ரென்கோனே. (௮)

## ஆண்டவரே யென்றபதிகம்.

இன்னிசை.

கண்ணுக்கு ளான கருவதனை யறியாமல்
விண்ணுக்குள் தேடி விரைந்து திரிவேனோ
விண்ணுக்குள் தேடி விரைந்து திரியாமல்
கண்ணுக்கு ளான கருத்தருள்வீ ராண்டவரே. (௧)

முந்நான்கி லான முடிவை யறியாமல்
எண்ணொன்கிற் றேடி யிருந்து மெலிவேனோ
எண்ணொன்கிற் றேடி யிருந்து மெலியாமல்
முந்நான்கி லான மூறையருள்வீ ராண்டவரே. (௨)

என்னு ளிருந்த விறைபொருளைக் காணமல்
தன்னுட் புலமீறித் தயங்கி மெலிவேனோ
தன்னுட் புலமீறித் தயங்கி மெலியாமல்
என்னுள் நிறைந்தபொரு ளெனக்கருள்வீ ராண்டவரே. (௩)

முன்னு ளிருந்த முறையை யறியாமல்
பின்னே பிறந்துலகிற் பேசி யலைவேனோ
பின்னே பிறந்துலகிற் பேசி யலையாமல்
முன்னு ளிருந்த முறையருள்வீ ராண்டவரே. (௪)

ஆறுபத்து மாறுன வரும்பொருளை யறியாமல்
வீறுமெத்தப் பேசி விழலாய்த் திரிவேனோ
வீறுமெத்தப் பேசி விழலாய்த் திரியாமல்
ஆறுபத்து மாறுன வருள்புரிவீ ராண்டவரே. (௫)

ஐயெட்டுக் குள்ளான வரும்பொருளை யறியாமல்
மையிட்டாள் மயல்கொண்டு மயங்கி மெலிவேனோ
மையிட்டாள் மயல்கொண்டு மயங்கி மெலியாமல்
ஐயெட்டுக் குள்ளான வருள்புரிவீ ராண்டவரே. (௬)

எங்கும் நிறைந்துநின்ற விறையின்பொருள் காணமல்
எங்குமே தேடி யிருந்து மெலிவேனோ
எங்குமே தேடி யிருந்து மெலியாமல்
அங்கந் தனக்கு ளருள்புரிவீ ராண்டவரே. (௭)

அந்தரத்தி லான வரும்பொருளை யறியாமல்
தந்திரமாய்த் தேடித் தயங்கி மெலிவேனோ
தந்திரமாய்த் தேடித் தயங்கி மெலியாமல்
அந்தரத்தி லான வருள்புரிவீ ராண்டவரே. (௮)



மூச்சி லிருந்த முப்பொருளைக் காணமல்
பேச்சு மிகுந்து பேசி யலைவேனோ
பேச்சு மிகுந்து பேசி யலையாமல்
மூச்சி லிருந்த முடிவருள்வீ ராண்டவரே. (௯)

எங்கும் நிறைந்து மெவ்வையுமே தாமானீர்
பொங்கும் புகழும் பொருள்புரிந்த வெம்மிறையே
தங்க மலர்ப்பாதந் தயவுடனே காண்பதற்கும்
அங்கந் தனக்குள்வந் தருள்புரிவீ ராண்டவரே. (௧௦)

## ஹல்லாஜென்பீரே யென்றபதிகம்.

வெண்பா.

அருளாய் நிறைந்தே யணுவணுவ தாகிப்
பொருளாய்த் துனையறிந்து போற்ற—அருளுடையோர்
பொங்குங் கிருபை புகழ்பீர்ஹல் லாஜருளே
தங்குமகந் துங்கமலர்த் தாள்.

தாழிசை.

அவ்வ லஹ்தா யிருந்ததிலே யடங்காப் பொருளாய் நீமெழுந்து
செவ்வி லுருவா யுலகனைத்துஞ் சேர்க்கக் கருவு மதிலெழுந்து
நவ்வி லிருந்த நடனமதை நாட்டம் புரிந்தீ ரெம்மிறையே
கவ்வி லிருந்த கருக்காண வருள்வீர் ஹல்லா ஜென்பீரே. (௧)

மீமா யெழுந்த வெழுத்ததிலே மேவி யிருந்தீர் மெய்ப்பொருளாய்
தாமே யதற்குட் சுழித்துநின்று தானு யிருந்த தயாபரமே
மாமே மவுனப் பொருளதுக்குள் மருவி மகிழ்ந்த மறையோரே
ஆமே யடங்கி நின்றபொரு ளருள்வீர் ஹல்லா ஜென்பீரே. (௨)

நூனு யிருந்த நூறதனை நோக்கி யிருந்தீர் நுண்ணியமே
தானு யிருந்த தவத்துடனே தானே யிசைந்த தயாபரமே
சீனு யிருந்த சிர்றதுக்குள் சிக்கி யிருந்த செய்ப்பொருளே
நீனு யிருந்த பொருள்நிறைய வருள்வீர் ஹல்லா ஜென்பீரே. (௩)

அஞ்சா யிருந்து மருளாகி யணுவு மகண்ட வடிவாகிப்
பிஞ்சா யிருந்து புதையலுமாய்ப் பேசாப் பெரிய பொருளாகி
நெஞ்சா யிருந்து நிலையாகி நினைவு முணர்வும் நீராகி
அஞ்சா யிருந்த வரும்பொருளை யருள்வீர் ஹல்லா ஜென்பீரே. (௪)

அஞ்சா யாரு யருளாகி யகமும் புறமு மழகாகி
கஞ்சாய் நடுவாய் நயனமதாய் நாடும் பொருளும் நலமானீர்
வஞ்ச மகற்றும் வல்லபமே வடிவா யிருந்த வான்பொருளே
பஞ்ச பவமு மறுத்தெனக்குள் பரிவாம் ஹல்லா ஜென்பீரே. (ரு)

எட்டா வெட்டி லிசைவாகி யிருந்தே யிசைந்தி ரெம்பிறையே
தட்டாய் வட்டச் சுழிமுனைக்குள் தாமா யிருந்த தயாபரமே
கட்டாய்க் கட்டி லடங்காத கயநற் பொருளே கற்பகமே
மட்டாய் மட்டி லாமவுன மருள்வீர் ஹல்லா ஜென்பீரே. (சு)

கோச்சகம்.

ஓரெழுத்தும் பேரெழுத்தா யுறைந்தி ருலகனைத்தும்
நேரெழுத்தி லேயிருந்து நிறைந்திசைந்த நெடியோரே
சீரெழுத்தி லேயிருந்து செல்வப்பொரு ளாயிருந்தீர்
காரெழுத்தி லிருந்தகருத் தருளும் ஹல்லா ஜென்பீரே. (எ)

எட்டெழுத்து மஞ்செழுத்து மிசைந்த பொருளாகி
வட்டெழுத்தி லேயிருந்த வகையருளும் வல்லபமே
நெட்டெழுத்தி லேயிருந்து நிறைந்த நெடியோரே
எட்டெழுத்தி லிருந்தவிசை வருளும்ஹல்லா ஜென்பீரே. (அ)

ஏழெழுத்து மஞ்செழுத்து மிசைந்த விடமதிலே
பாழெழுத்தொன் றில்லாமற் பகர்ந்தீர் பராபரமே
நாளுந் துயர்தீர்த்து நலந்தருவீர் நாயகமே
வாழும்பொரு ளரியவர மருளும்ஹல்லா ஜென்பீரே. (கு)

அச்சரமொன் றில்லாம லாதியுடன்பேசி நின்றீர்
அச்சரம தானதுக்குள் ளரும்பொருள தாகிநின்றீர்
அச்சரமொன் றில்லாம லடங்கலுமே தானானீர்
அச்சரமில் லாப்பொருளே யருளும்ஹல்லா ஜென்பீரே. (க0)

இவ்வகைபோ லெவ்வையுமொன் றுயிதயத் தேயெழுந்த
அவ்வகையை யகந்தனிலே யருள்புரிவீ ராண்டவரே
கவ்விலுற்ற நடனமதாய் நாடிநின்ற நற்பொருளே
செவ்விலுற்ற சிற்றிற்சேர்த் தருளும்ஹல்லா ஜென்பீரே. (கக)

அருளுநின்ற வருள்ஞான மருமையுடன் தந்துதவும்
பொருளெனவே புகலுதற்குப் புகழ்புரிந்த பொற்பொருளே
இருளறவே யெவையுமொன்று மிசைவதற்கு மியல்பருள்வீர்
அருளுடனே யான்புகழ வருளும்ஹல்லா ஜென்பீரே. (கஉ)

---



## என்பீரே என்றபதிகம்.

சந்தத் தாழிசை.

ஆதி யருள்வளர் போத நிறைதவ மோத வருள்புரிவீர்
நீதி பெறும்வெகு பாத மலரிணை பணிய நீரருள்வீர்
சோதி யெழுஞ்சுடர் சூட்சப் பெருந்தவஞ் சுடரு மருள்புரிவீர்
ஆதி யரும்பொருள் நீத நடம்புரி யருளே யென்பீரே. (க)

செந்தா மரைமலர் விண்டாய் மலரருள் செந்தே னூறுதற்கு
வந்தே தரும்பொரு ளென்றன் மனந்தனில் வசந்த மருள்புரிவீர்
உந்தாள் மலரருள் சிந்தை மிசைவர வுறுநிப் பெரும்பொருளே
தந்தே நும்மருள் வந்தே நடமருள் தருவீ ரென்பீரே. (உ)

அண்டந் தனிலம் பரமேழ் தனிலு மசையா வரும்பொருளே
பிண்டந் தனிலேழ் மலரேழ் தனிலும் பிரியா தறும்பொருளே
மண்டும் பயஞ்செயுந் தொண்டர்கண் முன்னில் வந்த இபுலீசை
துண்டஞ் செய்திட வந்தே நடம்புரி துணையே யென்பீரே. (ங)

நன்றே நும்பதந் தொண்டே செய்தாற் கவலை யெதுவுமுண்டோ
என்றே யிதுவறிந் தெனக்கே நும்பத மிரங்கிக் கிருபைசெய்வீர்
நின்றே நிறைமதி போலே யும்பதங் கண்டால் மனம்நிறையும்
பண்டே பழம்பொரு ளென்றும் நடம்புரி பரமே யென்பீரே. (ச)

அறமது மருளு மணுவு மகண்ட மான துறும்பொருளே
அமரர் முனிவரர் யாருங் காணா தாகு மரும்பொருளே
வறமதாய் வடிவாய் வண்மைப் பொருளாய் வந்தீ ருலகமதில்
வரமே தரவே வந்தே நடம்புரி வளமே யென்பீரே. (ரு)

உந்தம் பெருமை யாரு மறிந்தே யுளத்திற் புகழ்வதுவே
என்றன் மனந்தனில் வந்தே யருள்தர வின்னந் தயவிலையோ
முந்தக் கிருபை முழுது மறிந்த முறையை யெனக்கருள்வீர்
சிந்தை தனிலுற வந்தே நடம்புரி ஷெய்கே யென்பீரே. (சு)

நினைவு மனமும் நிறைந்த பொருளும் நீரார் கடலுலகும்
கனவுங் காட்சியுங் கவலும் வேதக் கருவும் கருதினவர்
உணர்வு மோர்மையு முறுதிப் பொருளு முண்மையும் நீரானீர்
நினைவும் மனமும் நிறைந்தே நடம்புரி நீதே ரென்பீரே. (எ)

எட்டு மெட்டு மூன பொருளி லிலங்குங் குருநீரே
வட்ட வெழுத்தில் முட்டி நின்ற வண்மைப் பொருள்நீரே
இட்டப் பட்டோ ரிருதய மதனில் தீப வடிவோரே
மட்டி லடங்கா நடன மருள்வீர் வடிவே யென்பீரே. (அ)

அஞ்சு மாறு மான பொருளை யருளுங் குருநீரே
நெஞ்சில் நின்றே யஞ்சு மற்றே யொன்றாய் நிறைவோரே
கொஞ்சுங் கிருபை யென்றன் மனதில் கொஞ்ச வருள்புரிவீர்
செஞ்சொல் நடனம்நெஞ்சில் புரிவீர் ஷெய்கே யென்பீரே. (கூ)

ஆறு மூறு மமுதக் கனியு மருளுங் குருநீரே
கோர யடியேன் றனக்கின் னருளை நிறைவாய்ப் புரிவீரே
சீர மிறையே யறிவோர்க் கிரங்குஞ் செல்வக் குருநீரே
காரார் குடையோர் பரிசு நடனம் புரிவீ ரென்பீரே. (க0)

---

## ஹல்லாஜேயென்ற பதிகம்.

### தாழிசை.

மூன்றா யிருந்த முப்பொருளை முடுகி யடியே னறியாமல்
முத்தி வருத்துங் குருமலர்த்தாள் முறைகண் டடியேன் முடுகாமல்
அந்நா ளிருந்த வரும்பொருளை யறிந்து வணங்கி யணுகாமல்
அல்லும் பகலு மனதகத்துள் ளருளை யுகந்து பணியாமல்
மின்னார் மயக்கத் துள்ளிருந்து மெய்யை யறியா தட்கலந்து
மேவி யிருந்த மெய்ப்பொருளை மேவ வறியா தடியேனை
இந்நா ளிழுக்கில் யாரெனக்குள் ளெளியேன் றுயரந் தீர்ப்பதற்கே
இன்பப் பொருளை யெடுத்தீந்திங் கெனையாட் கொள்வீர் ஹல்லாஜே.

முப்பாழ் கடந்து முடிவான முறையை யடியே னறிவதற்கு
முன்னமீ திருகண் நடுவாக முத்தி வருத்து மென்குருவே
அப்பாழ் கடந்த வரும்பொருளை யடிமை யகத்தி லறிவதற்கே
அணுவுந் தவறு தகமிருந்து மருளுட் சுடரை யருள்மூட்டும்
மெய்ப்பா யிருந்து முள்ளகத்தில் மேவி யிருந்த மெய்ப்பொருளை
மேவு மவனக் கிருபையருள் மேவும் படிதந் தடியாருள்
கைப்பா லமுத மெனக்கீந்து கனிவாய் திறந்தே யமுதருளும்
ககனத் திரையை யறுத்தெனக்குள் காண வருள்வீர் ஹல்லாஜே. (உ)

எழுத்தை யறிந்து நடுவணையி லிருக்கு மவுன வச்சரத்தோ
டிசைந்து வருமவ் வழியறிந்தே யிசைக்கு மியல்பு மறிந்திலனே
கழித்துத் திரண்ட குருமலரில் தொடுக்குங் கிருபை யெனக்கருள்வீர்
தொடர்ந்த மனவெவ் வுயிர்க்குளுமார் சூட்சப் பொருளை யருள்புரிவீர்
பழுத்துக் கனிந்த பழம்பொருளைப் பரிவா யருந்த வருள்தருவீர்
பழகும் பழைய வடியார்தம் பதங்கண் டிருக்கப் பலந்தருவீர்
களித்து மகிழ்ந்த பொருளேயென் னகத்திற் கொணர்ந்து களிக்கவுமே
கருத்தில் நிறைந்த கனியமுதங் கனிந்தே யருளும் ஹல்லாஜே. (ங)



ஏழை யடியேன் றனையாண்டிங் கெற்குள் ளிருந்த விடாகற்றி
இசைந்து வருமவ் வெளியொளியோ டிருக்குங் கருணை யியல்பீந்து
சூழும் வினையின் றுயர்தீர்த்துச் சூட்சப் பொருளை யகம்நிறைத்துச்
சொல்லாற் றுதியால் பிழைபொறுத்துத் தோஷி யடியேன் பவந்தீர
வாழும் பொருளை யெனக்கீந்து வகையுந் துகையுந் தவறாமல்
வலிதா யிருந்த வான்பொருளை வருத்தி யுளத்தில் வசமருள்வீர்
நாளு மடியேன் தவறாமல் நயனந் திறந்து நடம்புரிவீர்
நாவுக் கரிதாம் நுங்கனிவா யமுத மருளும் ஹல்லாஜே. (ச)

அன்றே யிருந்த வருள்நகத்தி னடியு முடியும் நடுவறிந்தீர்
அருளும் படிகண் டடியேனுள் ளருளை யகத்தில் மிகப்புரியும்
என்று மடியே னிருதயத்தி லிசையும் ஞானப் பொருளதனை
இரங்கிக் கிருபை செய்தெனுள மெங்குந் தெரிய வருள்புரியும்
பண்டே யிருந்த பழம்பொருளும் பரமு மறியக் கிருபைசெய்யும்
பழகும் படிநுந் திருத்தாளின் பரம நடனப் பிரகாசம்
கண்டே மகிழ வேண்டுமென்றன் கருத்தில் நிறைந்து கனகிருபை
கனிவாய் திறந்தே யமுதருளுங் கருணைப் பொருளே ஹல்லாஜே. ( )

அழகுக் கடங்கா வரும்பொருளே யகத்தி லிருந்தே யருள்தருவீர்
அடியு முடியும் நடுவான வயர்வற் றருளை யருள்புரிவீர்
இளகாப் பொருளை யென்னுளத்தி லிருத்தி யிசையு மெம்மிறையே
இரங்கிக் குருவின் கிருபையரு ளிதயம் நிறைந்து மிகப்பெருகிப்
பழகி யடியேன் பணியாத பவமும் பொறுத்துப் பரமருள்வீர்
பருவ மறிந்து பதம்பணியப் பரம நடனப் பிரகாசம்
அழகுங் குருவின் பதமலரை யடியேன் காண வருள்புரிவீர்
அகக்கண் திறக்க நுங்கனிவா யமுத மருளும் ஹல்லாஜே. (சு)

உருகிக் கனிந்து முளத்திருந்து முயிருள் நிறைந்து முறும்பொருளே
ஒன்றே யொன்றி ரண்டாகி யுள்ளும் புறமு மோர்வடிவாய்
பருகி யுயிருள் முடிவான பரமாம் ஹாமீம் பதமலரைப்
பார்த்திங் கடியேன் பணிவதற்குப் பரம நடனப் பெருள்புரிவீர்
பெருகிக் கமலத் தருள்திறந்து பிணக்க மறுத்து நும்மருளைப்
பெரிதா யிருந்த வான்பொருளைப் பிரிய முடனே யெனக்கருள்வீர்
கருகி யடியே னலையாமற் கருத்தி லிருந்து கனகிருபை
கனிவாய் திறந்திங் கமுதருளுங் ககனப் பொருளே ஹல்லாஜே. (எ)

அஞ்சி லுருப்பட் டொன்றாகி யகமும் புறமு மழகாகி
ஆயுங் கலைகண் டடியார்க்கு ளருளை யழுத்து மருந்தவமே
பிஞ்சு மறந்து பேர்திறந்து பெருகுங் கடற்குள் புகழானீர்
பிணைபட் டிருந்து முலகனைத்தும் பெரிய பொருளா யுயிர்யாவும்

நஞ்சங் கெழுந்த நதிநடுவி னஞ்சாய் நெஞ்சுள் வடிவாகி
நானு மிலைநீ தானுமிலை ரண்டு மிலையொன் றுருவாகி
கஞ்ச மலரி னழகொளியைக் கருத்தி லறிந்து களிப்பதற்குக்
கனிவாய் திறந்திங் கமுதருளுங் கருத்தி லுறைந்த ஹல்லாஜே. (அ)

அஞ்சா யாறு முகிநின்றே யான பொருளா யடங்கலிலும்
அறியும் படிகண் டடியார்க்கு ளழியா திருந்த வரும்பொருளே
பிஞ்சி லுறைந்து பேர்நிறைந்து பெருகும் பொருளா யுயிர்யாவும்
பின்னு முன்னு மாயிருந்து பேசாப் பெரிய பொருளாகி
நெஞ்சாய் நெஞ்சில் நீரிருந்து நெடியோ னருளால் நிறைவாகி
நினைவு முணவும் நீராகி நிறைந்த பொருளா யுருவாகி
வஞ்ச மறுத்து வான்பொருளை வல்லோன் கிருபை வகையறிய
வாழ்மெய்ப் பொருளே நுங்கனிவா யமுத மருளும் ஹல்லாஜே. (கூ)

முத்தே முத்தி லழகான மோட்சப் பொருளே முண்டகமே
முறைகண் டடியேன் வணங்குதற்கு முகமுன் வருவீர் முப்பொருளே
சித்தாய்ச் சித்தில் நீரிருந்த செயலை யறியச் சிறப்பருள்வீர்
செம்மை யுடனே யுலகனைத்துஞ் சேர்ந்து கலந்த ஜெயப்பொருளே
பத்தாய்ப் பத்தி லுருவாகிப் பரமா யிருந்த பரம்பொருளே
பார்த்திங் கடியேன் பணிவதற்குப் பரம நடனம் புரிவீரே
முத்தாய் முத்தி லொளிவான மோட்சப் பொருளே முழுமதியை
முத்தி தரவும் நுங்கனிவா யமுத மருள்வீர் ஹல்லாஜே. (௧௦)

---

## தனிப்பாக்கள்.

---

### இன்னிசை.

ஆண்டவா வுன்னுடனே யடிபணிந்து கேட்டதெல்லாம்
பூண்டபரி பூரணனே புகழ்குருவாம் புண்ணியனே
ஈன்றெடுத்த தாய்தந்தைக்கு மென்கிளையோர் யாவருக்கும்
ஆண்டுமுத்தி நீதாவென் னாண்டவனே யென்கோனே. (௧)

### கொச்சகம்.

உன்னைப்புக ழும்புகழை யொருவிதமும் நானறியேன்
என்னவிதம் புகழ்ந்தாலு மெம்மிறையே தானிரங்கி
அன்னைபிதா செய்பிழைக ளடங்கலையு மேபொறுத்துச்
சொன்னபடி நீபுகல்செய் சோதியே றஹ்மானே. (௨)

### வெண்பா.

ஆதியே யுன்னே டருள்கேட்டு நானிரக்கச்
சோதியே நீதான் சொலாதிருந்தால்—நீதியோ
நின்மலனே நிச்சையனே நெஞ்சதனுள் நீயிருந்து
கன்மமணு காமலெனைக் கார். (௩)



காக்கு மிறையவனே கண்மணியே யென்குருவே
பார்க்க மனமிலையோ பாரதனில்—நோக்கமுடன்
நூறதனை யென்றனக்குள் நுண்ணிதமாய் நீதருவாய்
காரணனே காவலனே காண். (௪)

---

## நாட்டுவளம்.

---

### நாலுகொச்சகக்கலிப்பா.

பேயுடன் வீணு மீழும் பெரும்புக ழெழுந்த நாடு
ஆயுமே அலிபும் நூனு மனவொளி சிறந்த நாடு
காயிலாக் கனிகள் மீறிக் கனரசம் புரிந்த நாடு
தாயுமே மகவும் வாழ்வுந் தருமெங்கள் நாதன் நாடே. (௧)

அலிபுடன் லாமுஞ் சேர்ந்தே யழகொளி சிறந்த நாடு
மெலிவிலா ஹேயு மீமு மிகநடம் புரிந்த நாடு
வலியதா லெழுந்து நின்று வல்லமை புரிந்த நாடு
பொலிவுக்குட் பொருளாய் நின்று புகழுந்தீ னெழுந்த நாடே. (௨)

தீனவ ரெழுந்த நாட்டிற் றிறமிகக் கிருபை கொண்டால்
தானவர் தான மெல்லாந் தங்கிடுந் தாணி மீதில்
ஈனமு மிடறு மொன்று மெள்ளள வேனு மில்லை
கோனவ னெழுந்து நின்று குருநடங் கொண்ட நாடே. (௩)

நாடுவர் நாட்ட மெல்லாம் நல்வழி கொண்ட நாடு
தேடுவர் தேட்டம் போலே திருநடம் புரியும் நாடு
கூடுவர் கூட்ட மெல்லாங் குருநெறி பாடும் நாடு
வாடுவர் வாட்டந் தீர்ந்து வல்லமை புரியும் நாடே. (௪)

---

## உறுதிநிலையிளத்தல்.

---

### சந்தவிருத்தம்.

எங்குந்திரிந் தலைவோர்க்கினி யிலையேயினி யிலையே
பங்கப்படு மவரேமனப் பங்கப்படு மவரே
துங்கச்சுடர் கதிருந்துணிந் தறிவோர்க்குநீ துணையே
தங்கப்பதி வழியேபரந் தரிப்போர்க்குநீ தயவே. (௧)

### வெளி விருத்தம்.

முன்னேவந்தவுடன் முச்சுடருதைய
முறையுமூட்டினேன் மனத்தினுள்
தன்னைக்கண்டிடவுந் தானறிந்திடவுந்
தய்வுஞ்சூட்டினேன் மனத்தினுள்

குன்னைக்கொண்டிடவுங் குருவும்நின்றவிடங்
    குறிப்புங்காட்டினேன் மனத்தினுள்
என்னைவிட்டிடுகி லின்பங்கிட்டிடுமோ
    விசையும்நாட்டினேன் மனத்தினுள். (உ)

தங்குதநின்றவிடம் தானறிந்தவிடத்
    தன்னைக்கண்டவிட மங்ஙனே
வித்தைமாமலர் வீணைவல்லபமும்
    வீசிநின்றவிட மங்ஙனே
கந்தையாகுமுடற் கட்டுகாரணமுங்
    கவலும்நான்மறையு மங்ஙனே
சிந்தைமீறிவருஞ் சிறப்புமோடிவருஞ்
    செல்வமானவிட மங்ஙனே. (௩)

அந்திமீதினில் மலர்ந்தவட்சர
    மமர்ந்துநின்றவிட மங்ஙனே
உந்துபாசவினை யாவும்விட்டிடுகி
    லுண்மைதேறிவரு மங்ஙனே
நந்தியென்றுமறை நாடுவோர்களுளில்
    நாதமீறிவரு மங்ஙனே
பந்துபம்பரம்போற் பாடியாடிபரம்
    நாடியோடிவரு மங்ஙனே. (௪)

இன்னங்கண்டிலையோ வின்பமாகவது
    விருந்தேயாடுமிட மங்ஙனே
வன்னமானவிப ரங்களும்பல்வகை
    கூறும்வாறுமிட மங்ஙனே
தன்னையன்றிபர மனமுமென்றுமே
    தானறிந்தவிட மங்ஙனே
மன்னனேடுமெகி டாதிமாமயிலு
    மருவிநின்றவிட மங்ஙனே. (௫)

ஞானநடனம் முற்றுப்பெற்றது.

---

ஆகத்திருப்பாடல் - ௩உ௪.

---

ஹாமீம்.

# ஞானஆனந்தக்களிப்பு.

---

காப்பு.

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

முப்பொரு ளொன்ருய் நின்று முடிவில்லாப் பொருளு மான
அப்பொரு ளறிய வேண்டி யரும்பொரு ளதனை யாய்ந்து
நற்பொரு ளாமா னந்தக் களிநல முடனே சொல்ல
முப்பொரு ளொன்ருய் நின்ற முஹம்மது காப்ப தாமே. (க)

அலிபுக்குள் ளழக தான வரும்பொரு ளதனை நோக்கி
வலியமெய்ப் பொருளாய் நின்ற வடிவுக்குள் வடிவைத் தாக்கி
மெலிவிலா வானந் தக்களி மெய்யுள நிறைந்து சொல்ல
பொலிவுக்குள் பொருளாய் நின்ற புகழ்ஹல்லா ஜருளே காப்பு.(உ)

காரணங் காணவே    வேணுங் - கருணைக்
கடலானஹல்லா ஜிருமலர்    தோணுங்
காரணங் காணவே    வேணும்.

பூரணமான    துறையப் - பொங்கிப்
புகழொளியான பொருளில்    நிறையக்
காரணமான    தறியக் - கண்ணிற்
காணுதகாக்ஷியைக் கண்டு    பறையக் (காரணங்)

அனுவெட்டுக் குள்ளே    யெழுந்த - அந்த
அழகான வரும்பொரு ளுள்ளி    லழுந்த
தனுவிட் டுளத்தில்    விளைந்த - எங்குந்
தானுயிருந்த தவத்தில்    தெளிந்த (காரணங்)

மூவெட் டணுவது    மொன்ருய் - அதில்
முப்பொருளான தறியநீ    நின்ருய்
மாவெட் டதுக்குள்நீ    கன்ருய் - மன்ன
னுனமகிழ்ச்சி யறிந்துநீ    நன்ருய்க் (காரணங்)

தன்னிலே தானுன    வல்ல - நம்முள்
தானவ னஞ்சுக்குள் ளானதைச்    சொல்ல
உன்னிலே நீயென்ப    தல்ல - அந்த
வுண்மை யறிந்து நினைவொடு    செல்லக் (காரணங்)

அஞ்சென்று சொன்னது    மாகம் - அது
ஐயெட்டுக்குள்ளே யடங்கிய    மூகம்
வஞ்சக மில்லாத    யோகம் - அந்த
வண்மையறிந்து வணங்கிய    வேகம் (காரணங்)

தன்னிலே தானு யிருந்த - நம்மள்
 தானவ னெல்லா மமைத்த தருந்த
உன்னிலே யொன்று விரிந்த - அந்த
 வுண்மை யறிந்து முணர்ந்து வருந்தக் (காரணங்)

அறுபதாய் வந்த வினத்தை - நாம
 ளாராய்ந்து பார்த்தே யறிந்த கனத்தை
மறுவற்றசோதித் தனத்தை - அதை
 மந்திரத்தாலே மயக்கி வனத்தைக் (காரணங்)

அறுபதாய்வந்த வருவில் - அதி
 லாறெட்டிரண்டு மெழுந்த திருவில்
குருபொருளான கருவில் - அந்தக்
 கூர்மையறிந்து குணங்கொண் டுருவில் (காரணங்)

அப்படிவந்ததை நாட்டி - அதி
 லருளானநாலையு மன்புடன் குட்டி
மெய்ப்படி வந்ததைக் கூட்டி - அதை
 மெய்யிலறிந்துநீ மேவியே மாட்டிக் (காரணங்)

இவ்வகை கொண்ட விறையை - அவ
 னெல்லாமமைத்த வியல்பின் துறையை
அவ்வகை கண்ட முறையை - அதை
 அட்சரங் கொண்டே யறிந்த நிறையை (காரணங்)

இவ்வுடல் தன்னிலிவ் வாறும் - அதை
 யில்லந்தனிலே யறிந்தநின் வாறும்
அவ்வுடல் மெய்யிலே தேறும் - அது
 வச்சரமில்லை யறிவதின் வீறும் (காரணங்)

உள்ள படிவந்த தொன்று - அதி
 லுற்பனமான துறும்பொருள் விண்டு
கள்ள மறிந்துநீ கண்டு - அந்தக்
 காக்ஷியுடனே கலந்துநீ சென்று (காரணங்)

கள்ளனுய் வந்த கருவாம் - அது
 வெல்லாங் கலந்தே யிருந்த வருவாம்
துள்ளி தெறித்த துருவாம் - அந்தத்
 தூய்மையறிந்து துணிந்த குருவாம் (காரணங்)

இப்படி வந்த குருவை - அது
 கெற்பத்தில்தங்கி யிருக்குங் கருவை
மெய்ப்படி மூளை யுருவை - அது
 மீம்வழி வந்தே யுறைந்த திருவைக் (காரணங்)



மீம்வழி வந்தது மன்னை - அது
 மெய்வழியாகு மறைக்குளில் தன்னை
மீம்லெக்க மானதின் பின்னை - அந்த
 மேளமறிந்துநீ மேவவு மன்னை (காரணங்)

இவ்வித மான வுடலில் - நம்ம
 ளேகன் ஷரீஅத் தான கடலில்
அவ்விதமான அடலில் - அந்த
 அழகான மெய்யொளி காணத் தொடலில் (காரணங்)

நல்லதரீகத்தை நாடி - அதில்
 நலமானஹகீகத்து மானதிற் கூடி
எல்லைதனிலேநீ குடி - அந்த
 வின்பப்பெருமோ டிசைந்துநீ தேடிக் (காரணங்)

சிப்பிக்குள் முத்தது போலே - சிறப்
 பானமகுரிபத் தானதும் பாலே
ஒப்பியிருந்ததும் வாலே - உற
 வானதானத்தைக் கண்டது மாலே (காரணங்)

நாலுதரீக்கையுங் கண்டு - நல
 மானமுஹப்பத்தி லாகவே நன்று
காலுக்குள்ளாகிநீ சென்று - கரு
 வானதறிந்து கலந்துநீ நின்று (காரணங்)

இப்படியான முறையோர் - இதில்
 வல்லமையெல்லா மறிந்த விறையோர்
செப்பிடி லொப்பு மறையோர் - இந்த
 சிர்றை யறிந்து சிறந்த துறையோர் (காரணங்)

அல்லாகு வென்ற வெழுந்து - நம்மள்
 ஆதமுடலில் தரித்துத் தளிர்த்து
நல்லாபம் பெற்று மகிழ்ந்து - மந்த
 நாட்டமறிந்து தெளிந்து புகழ்ந்து (காரணங்)

அல்லா மனுவைப் படைக்க - அதி
 லாகமிருபத்தி மூன்றைத் தொடுக்க
வல்லபமான தடுக்க - அந்த
 வண்மையறிந்து வணங்கி நடக்க (காரணங்)

மெல்லிய தாய்வகை நாலாம் - தந்தை
 மெய்யழகான வகையது நாலாம்
நல்லியல்நூறுஹி ஒல் நாலாம் - வித்தை
 நலமானநூறுஹானி பங்கது நாலாம் (காரணங்)

அண்டர்கள் பங்கது மஞ்சு - அரு
ளாகவறிந்தே யிருந்தது நெஞ்சு
தொண்டர்கள் விண்டது மஞ்சு - துரை
யாகமறிந்து புகழ்ந்துநீ கொஞ்சு (காரணம்)

இந்தவகைப்படி கந்தம் - ஏக
விறைபங்கிரண்டுமே கூடியே சொந்தம்
வந்தவகையறி சந்தம் - வர
வானதறிந்தே யிருப்பதும் விந்தம் (காரணம்)

இப்படிவந்த சடத்தில் - தல
மொன்றாயிருந்த தறிந்தத் நடத்தில்
ஒப்புடனந்தத் தலத்தில் - உற
வானதாமேழு முணர்ந்து பெலத்தில் (காரணம்)

இந்தவகையேழி லொன்று - அது
னாறுவினையுந் தலமறைக் கண்டு
சொந்த முடனேநீ சென்று - அந்தச்
சூக்ஷமறிந்து முணர்ந்துநீ கொண்டு (காரணம்)

ரண்டாந்தலத்தின் முறையாம் - நல்ல
ரகசியமான திருக்கு மறையாம்
தொண்ட ரிணங்குந் துறையாம் - அந்தத்
தூய்மையறிந்து துணிந்த நிறையாம் (காரணம்)

மூன்றுந் தலத்தின் பெருமை - யெல்லா
முடுகியிருந்து முவக்கு மொருமை
ஆண்டவனுய னருமை - அந்தத்
தலத்திலணுகி யுணர்ந்த கருமைக் (காரணம்)

நாலாந் தலத்தி லடர்ந்து - நல்ல
காட்சிவிளைந்து நலம்பெறத் தொடர்ந்து
காலன்றிரையைக் கடந்து - அந்தக்
காட்சியுடனே கருதி நடந்து (காரணம்)

அஞ்சாம்வகையின் குலமாம் - அரு
ளானதிருந்து விளையுந் தலமாம்
வஞ்சமகற்றும் பலமாம் - அந்த
வண்ணமறிந்து வணங்க நலமாம் (காரணம்)

ஆறுந்தலத்தின் பலங்கள் - அரு
ளான இபாதத் தறிவின் குலங்கள்
கோாய்விளையுந் தலங்கள் - அந்த
நேர்மையறிந்து வணங்க நலங்கள் (காரணம்)



ஏழாந்தலத்தின் முறைதான் - இந்த
வல்லபமெல்லா மொழியு மறைதான்
பாழொன்றுமில்லா நிறைதான் - பர
மானதறிந்துபழகுந் துறைதான் (காரணம்)

ஆனபொருளே நம்மாதி - அழ
காகவறிந்து வணங்கவு நீதி
ஈனமணுகாத சோதி - யிறை
வைத்ததறிந்து மிசைந்துநீ யோதி (காரணம்)

அச்சமறுத்தே யிருந்த - அந்த
அழகான வரும்பொரு ளுள்ளி லருந்த
உச்சிக்குளொன்று விரிந்த - அந்த
உற்பனங்கண்டு முகந்து சொரிந்த (காரணம்)

ஒன்றுக்குள்ளான கருவை - யொழுங்
காகவுணர்ந்து வணங்குந் திருவை
விண்டவிதத்தின் குருவை - விரி
வான்பொருளில் விளங்கு மருவை (காரணம்)

நிச்சயமான கரமாம் - எங்கும்
நிர்மலமான ஹல்லாஜி னுரமாம்
பட்சமிருந்த பரமாம் - பதம்
உள்ளில்தரித்துப் பணிந்த திரமாம் (காரணம்)

ஆதியருளை யறிவோர் - எங்கும்
அலைந்துதிரிந்து மெலியு முறையோர்
நீதிஹல்லாஜல் மறையோர் - பதம்
நினைவில்தரித்து நிலைத்த நெறியோர் (காரணம்)

காரணங்காணவே வேணும் - கருணைக்
கடலானஹல்லாஜிருமலர் தோணும் (காரணம்.)

ஞான ஆனந்தக்களிப்பு முற்றுப்பெற்றது.

---

ஆகத்திருப்பாடல் - ௯சுச.

---

ஹாமீம்.

# ஞானக்குயில்மயிலேசல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதியை யறிய வேண்டி யரும்பொரு ளதனை யாய்ந்தே
ஓதிய மறைக ளுள்ளத் துறும்பொரு ளதனைக் கூர்ந்து
சோதியாம் பொருளைத் தேர்ந்து சூட்சமா மேசல் சொல்ல
நீதியாய் நிறைந்த வெங்கள் நெறிநபி காப்ப தாமே.

அருவமோ ருருவ மாகி யருவினிற் சொருப மான
திருவருள் மற்றுமே தெங்கள் திருப்பதஞ் சிரசி லேந்தி
மருவிய ஞான வேசல் மகிழ்ந்துநா னுலகிற் சொல்லக்
குருவதாய் விளக்க மான குதாய்பொருள் காப்ப தாமே.

கண்ணிகள்.

க. ஆயத்து முத்தலக்கி னடக்கத்தைச் சொல்லுநீ மயிலே - அது
அட்சரமில்லா வரும்பொரு ளுக்ககங் குயிலே.

உ. அட்சரமில்லா வரும்பொரு ளென்னதா மயிலே - அது
அஞ்சுக்குள் ளொன்று யழகா யிருந்ததாங் குயிலே.

ங. அஞ்சென்று சொன்ன வரும்பொரு ளென்னதா மயிலே - அது
ஐயெட்டுக் குள்ளே யடங்கி யிருந்ததாங் குயிலே.

ச. ஐயெட்டு மஞ்சு மடக்கத்தைச் சொல்லுநீ மயிலே - அது
அன்பா யிருந்த அலிபுக்குள் ளாகுமாங் குயிலே.

ரு. அலிபுக்குள் ளான வருமையைச் சொல்லுநீ மயிலே - அது
ஐயாறுக் குள்ளே யடங்கி யிருக்குமாங் குயிலே.

சு. ஐயாறு மொன்று மமைந்ததைச் சொல்லுநீ மயிலே - அது
ஆறிரண் டிருநூற் றிரண்டுக்குள் ளாகுமாங் குயிலே.

எ. ஆறிரண் டிருநூற் றிரண்டமை வைச்சொல்லு மயிலே - அது
அழகா யிருந்த ஹறுபுக்குள் ளாகுமாங் குயிலே.

அ. அழகா யிருந்த ஹறுபதைச் சொல்லுநீ மயிலே - அது
அறுபதுக் குள்ளே யடங்கி யிருக்குமாங் குயிலே.

கூ. அறுபதுக் குள்ளி லிருந்தமை சொல்லுநீ மயிலே - அது
ஐந்நூற்றுத் தொண்ணூற்றுக் குள்ளாக மாகுமாங் குயிலே.

௰. ஆனதும் பின்வகை யறிவாகச் சொல்லுநீ மயிலே - அது
ஆராய்ந்து பார்த்தா லறிவிற் றுகையுமாங் குயிலே.



கக. ஆராய்ந்து பார்க்கு மடக்கத்தைச் சொல்லுநீ மயிலே - அது
அன்புக்குள் ளொன்று யடங்கி யிருக்குமாங் குயிலே.

கஉ. இன்புக்குள் ளொன்று யிசைவதைச் சொல்லுநீ மயிலே - அது
எட்டுணு முப்பது மூவெட் டணுவுமாங் குயிலே.

கங. இப்படி மூன்று யெழுந்ததைச் சொல்லுநீ மயிலே - அது
இல்லல்லா வாகி யிசைந்து மிருந்ததாங் குயிலே.

கச. இல்லல்லா வென்றே யெழுந்ததைச் சொல்லுநீ மயிலே - அது
எண்ணான்கு மொன்று மிசைமூன்று மாகுமாங் குயிலே.

கரு. எண்ணான்கு நான்கு மிருப்பிடஞ் சொல்லுநீ மயிலே - அது
எண்மூன்று மேழு மிசைந்தே யிருக்குமாங் குயிலே.

கசு. என்மூன்று மேழு மிசைந்திடஞ் சொல்லுநீ மயிலே - அது
எல்லா வுயிர்க்குளு நிறைந்தே யிருக்குமாங் குயிலே.

கஎ. எல்லா வுயிர்க்குளு நிறைந்தது மெப்படி மயிலே - அது
என்னுக்குள் ளெண்ணெய்போ லாகி யிருக்குமாங் குயிலே.

கஅ. இப்படிச் சொன்ன தெவரு மறிவதோ மயிலே - அது
எங்கும் நிறைந்தது ஈமானு மாகுமாங் குயிலே.

ககூ. ஈமா னிருந்தே யிசைவிடஞ் சொல்லுநீ மயிலே - அது
எங்கு மிலங்கிய இஸ்லாமி லாகுமாங் குயிலே.

உ0. இஸ்லாமி னின்றே யெழுந்ததைச் சொல்லுநீ மயிலே - அது
எண்ணேழு மஞ்சு மெழுந்தே யிசைந்ததாங் குயிலே.

உக. எண்ணேழு மஞ்சு மெழுந்ததைச் சொல்லுநீ மயிலே - அது
எங்கும் நிறைந்ததும் இல்லாவு மாகுமாங் குயிலே.

உஉ. இல்லாவில் நின்றே யீவதைச் சொல்லுநீ மயிலே - அது
இருலாமு மோரலி பிசைமூன்று மாகுமாங் குயிலே.

உங. அலிபென்று சொன்ன வரும்பொரு ளென்னதா மயிலே - அது
அஹதா யிருந்த வரும்பொரு ளாகுமாங் குயிலே.

உச. இருலாமி லொன்றுமிங் கீவதைச் சொல்லுநீ மயிலே - அது
எங்கும் நிறைந்திடும் நான்மூன் றெனபதாங் குயிலே.

உரு. இருலாமி லொருலா மெழுந்ததைச் சொல்லுநீ மயிலே - அது
எண்பது மெண்பது மூன்றது மாகுமாங் குயிலே.

உசு. அப்படி மூன்றுமுன் னுனதைச் சொல்லுநீ மயிலே - அது
ஆதி அஹது முஹம்மது மாகுமாங் குயிலே.

உஎ. ஆதி முஹம்மது வானபுகழ் சொல்லு மயிலே - அது
அறுபதோ டஞ்சு மொருநூறு மாகுமாங் குயிலே.

௨௮. அப்படி யாதி புகழ்சொன்ன பின்சொல்லு மயிலே - அது
ஆதி முஹம்மதுக் குள்ளக மாச்சுதாங் குயிலே.

௨௯. அப்படி யான ஹறுபதைச் சொல்லுநீ மயிலே - அது
அஞ்சுமோ ராறு மழகாய்ப் புகுந்ததாங் குயிலே.

௩௦. அப்படி யாதி அஹ்மதுள் ளானதா மயிலே - அது
அந்தப் புகழ்கொண் டகந்தெளி வாச்சுதாங் குயிலே.

௩௧. அப்படி யானதின் பின்வகை சொல்லுநீ மயிலே - அது
அந்த முஹம்மது நூறேழு மாச்சுதாங் குயிலே.

௩௨. நூறேழு மானதில் நுண்ணிபஞ் சொல்லுநீ மயிலே - அது
கொடிக்குள் ளடங்கலும் நூன்வெளி யாச்சுதாங் குயிலே.

௩௩. நூன்வெளி யானபின் நோக்கத்தைச் சொல்லுநீ மயிலே - அது
நூறது வெல்லாம் நோக்கிப் புகழ்ந்ததாங் குயிலே.

௩௪. ஆன புகழை யறிய வகைசொல்லு மயிலே - அது
அவ்வல் கலிமா வடக்க மொழிந்ததாங் குயிலே.

௩௫. அவ்வல் கலிமா அறிய வகைசொல்லு மயிலே - அது
ஐம்பது மையாறு மூன்றது மாகுமாங் குயிலே.

௩௬. அப்படி யாதி புகழ்சொன்ன பின்சொல்லு மயிலே - அது
ஐயாறு மையெட்டுள் ளாகிப் புகழ்ந்ததாங் குயிலே.

௩௭. அப்படி யானதின் பின்வகை சொல்லுநீ மயிலே - அது
அடங்கலுக் குள்ளான வரும்பொரு ளாகுமாங் குயிலே.

௩௮. இப்படி யானபின் னெப்படி யாஞ்சொல்லு மயிலே - அது
எண்பது மீராறு மாகி யிருந்ததாங் குயிலே.

௩௯. அப்படி யானபின் னெப்படி யாச்சுதாம் மயிலே - அது
அன்றுதான் மூமீனு மிஸ்லாமு மாச்சுதாங் குயிலே.

௪௦. இவ்வுடல் தன்னிலே இஸ்லாமைச் சொல்லுநீ மயிலே - அது
ஏழேழு மிருநான்கு மிசைவா யிருக்குதாங் குயிலே.

௪௧. மூமீ னிருக்கு முடிவின் தலஞ்சொல்லு மயிலே - அது
முப்பது மொருநூறு முறைரண்டு மாகுமாங் குயிலே.

௪௨. முச்சுட ரானதில் மூமினைச் சொல்லுநீ மயிலே - அது
முப்பது மைம்பது முந்நான்கு மாகுமாங் குயிலே.

௪௩. முச்சுடர் தன்னி லிஸ்லாமைச் சொல்லுநீ மயிலே - அது
முப்பது முப்பது மொருநூறு மூன்றுமாங் குயிலே.

௪௪. மூமீ னென்றுசொன்ன மீம்வகை சொல்லுநீ மயிலே - அது
முன்னுள்ள தெல்லா முறையாய் விளங்ததாங் குயிலே.



௪௫. அப்படி யானதின் பின்வகை சொல்லுநீ மயிலே - அது
அத்திரைக் குள்ளே யடங்கலு மாச்சுதாங் குயிலே.

௪௬. அத்திரை தன்னை யறிய வகைசொல்லு மயிலே - அது
ஐயெட் டிலக்க மடைய விளங்ததாங் குயிலே.

௪௭. அத்திரை தன்னி லகந்தலஞ் சொல்லுநீ மயிலே - அது
ஐம்பது மெழுபது மாறிரண் டாகுமாங் குயிலே.

௪௮. அத்தலங் தன்னை யறிவாகச் சொல்லுநீ மயிலே - அது
ஆதிய ஜோதியுஞ் சோதிய துக்குள்ளாங் குயிலே.

௪௯. இப்படி யான வறிவி லிசைந்தவர் மயிலே - அது
எள்ளுக்குள் ளெண்ணெய்போ லாகிமகிழ்வராங் குயிலே.

௫௦. செல்வ விசேடத்தைச் சீராகச் சொன்னதிர் மயிலே - அது
ஷெய்கு முஹியித்தீன் மனுக்கு முதலியாங் குயிலே.

ஞானக்குயில்மயிலேசல் முற்றுப்பெற்றது.

---

ஆகத்திருப்பாடல் - ௪௩௯.

---

## ஞானக்கும்மி.

---

கும்மியடி பெண்ணே கும்மியடி - குரு
பாத தெரிசனை காண நித்தம்
கூர்ந்து நன்மனஞ் சேர்ந்து மெய்ப்பொரு
ளாய்ந்து கும்மி யடிப்பமடி - மனந்
தோய்ந்து கும்மி யடிப்பமடி. (௧)

செய்யித பூபக்கர் ஷெய்கு மானவர்
சீர்பாதந் தேடிப் புகழ்ந்து நித்தம்
மெய்யாக நாமெல்லாம் கூடிப் பாடியே
மேவிக் கும்மி யடிப்பமடி - மனம்
கூவிக் கும்மி யடிப்பமடி. (௨)

ஆதியருளை யறிந்து கொள்ளை கொண்ட
அன்பர் அபூபக்க ரின்ப மைந்தர்
நீதி யுடனே யவர்திருப் பாதத்தை
நினைத்துக் கும்மி யடிப்பமடி - நிதம்
தொனித்துக் கும்மி யடிப்பமடி. (௩)

அவியில் நிறைந்த வரும்பொரு ளாயனு
வுங்குறை யாமற் புகழ்ந் தவரை
மெலிவெலாந் தீரவே மெய்ப்பொருள் காணவே
மேவிக் கும்மி யடிப்பமடி - தினம்
கூவிக்கும்மி யடிப்பமடி. (௪)

கூர்மைப் பொருளை யறிந்துணர்ந் தும்முயர்
குன்னில் நிறைந்த குணம றிந்தோர்
நேர்மைப் பதந்தனை நாமெலாம் நித்தமும்
நேசித்துக் கும்மி யடிப்பமடி - மனம்
பூசித்துக் கும்மி யடிப்பமடி. (௫)

நித்திய பதத்தினை நித்தமுங் கண்டுயர்
நிர்மல மாக விருந்த வராம்
கத்த னுடன்சேர்ந்த காரணர் பூம்பதங்
காணக் கும்மி யடிப்பமடி - நிதந்
தோணக் கும்மி யடிப்பமடி. (௬)

முத்திலு தித்திடு முப்பொருள் குட்சத்தை
முற்று மறிந்துயர் முத்தி பெற்றோர்
சித்த மிரங்கிடச் சீர்பதத்தை நாமுஞ்
சேர்ந்து கும்மி யடிப்பமடி - பொருள்
ஓர்ந்து கும்மி யடிப்பமடி. (௭)

ஆறுமு மான வரும்பொரு ளில்மய
லடர்ந்து மகிழ்ந்து களித்த வரின்
பேரான வின்பத் தவம்பெற லாம்பதம்
பேணக் கும்மி யடிப்பமடி - நிதம்
பூணக் கும்மி யடிப்பமடி. (௮)

ஆறெட்டு முள்ளி லறிந்துகொண் டேதினம்
ஆறஞ்சுக் குள்ளிற் புகுந்த வராம்
சீரான செல்வரின் செங்க மலப்பதம்
தேடிக் கும்மி யடிப்பமடி - நிதம்
பாடிக் கும்மி யடிப்பமடி. (௯)

அஞ்சுக்குள் ளொரு னானந்தத் தேவரும்
ஆறுக்குட் சேர்ந்துக் களித்த வராம்
மிஞ்சிய மெய்ப்பொருள் காண வவர்பதம்
மேவிக் கும்மி யடிப்பமடி - யருள்
தாவிக் கும்மி யடிப்பமடி. (௧௦)



ஆன அரூபக்க ரன்பின்மைந்தர் தம்மே
லாசை யாவி யுடற்றுன் கூட்டி
ஈன மணுகா திருப்பதற் குப்பதம்
ஏத்திக் கும்மி யடிப்பமடி - நிதம்
வாழ்த்திக் கும்மி யடிப்பமடி. (௧௧)

எட்டோ டஞ்சு மிசைவா கிப்பர
மான தறிந்து மிசைந் தோராம்
மட்டி லடங்காப் பொருளறிந் தோர்பதம்
வாழ்த்திக் கும்மி யடிப்பமடி - நித
மேத்திக் கும்மி யடிப்பமடி. (௧௨)

பத்தோ டிரண்டு மானதி லேவரு
பாழ்வெளி போகும் நால தனை
சித்தோடே யுள்ளிற் சேர்ந்துணர்ந் தோர்பதம்
சேர்ந்து கும்மி யடிப்பமடி - நிதந்
தேர்ந்து கும்மி யடிப்பமடி. (௧௩)

ஆறு றுடன் முப்பதை யுந்தின
முகத்தி லறிந்து புகழ்ந் தோராம்
பேரான வெங்கள்பிர் பாதத்தை நாமின்று
பெலக்கக் கும்மி யடிப்பமடி - பொருள்
துலக்கக் கும்மி யடிப்பமடி. (௧௪)

எட்டோ டெட்டு மானதி லேபொரு
ளின்ப மறிந்து புகழ்ந்த வராம்
இட்ட மறிந்தே யவர்பதத் தைமனங்
இறக்கக் கும்மி யடிப்பமடி - தினந்
சிறக்கக் கும்மி யடிப்பமடி. (௧௫)

ஏழோ டஞ்சையு மெண்பதை யுந்தினம்
இல்லந் தனிலே யறிந்து ணர்ந்தோர்
நாளுமே நல்ல பொருள்தரு வார்பதம்
நாடிக் கும்மி யடிப்பமடி - நிதம்
பாடிக் கும்மி யடிப்பமடி. (௧௬)

எங்கும் நிறைந்திடும் மெய்குருவல் லாதிரு
பாத முணர்ந்து புகழ்ந் தோராம்
பங்க மகற்றிடு நங்குரு பாதம்
பார்த்துக் கும்மி யடிப்பமடி - நித
மேத்திக் கும்மி யடிப்பமடி. (௧௭)

சேகு முகியித்தீன் மலுக்கு முதலி
செல்வ ரொலியின் துணைவ ரானோர்
யோகம் பெறவவர் பாதப் புகழ்நித்தம்
ஓங்கக் கும்மி யடிப்பமடி - வினை
நீங்கக் கும்மி யடிப்பமடி. (கஅ)

வே று.

சேகு அபூபக்கர் பாலரா னோர்திருச்
செல்வரிருவர் பதமலரை
யோகமி குந்தரு ளாகம்பு கழ்ந்திட
உண்மை தருகும்பீர் நன்மை யுடையவர்
செம்மை யுடனே யிவர்கள் பதம்நாமே
சேர்ந்து கும்மி யடிப்பமடி - மனந்
தேர்ந்து கும்மி யடிப்பமடி. (கசு)

வே று.

இப்படி நாம ருணர்ந்திடுகிற் சென்னி
யிற்றி றந்தெழு தேன் சொரியும்
மெய்ப்படி யாகச்சொன் னேன்நமக் கும்மவர்
மெய்க்குரு வானோ ரவர்கள் பதம்நாமே
மேவிக் கும்மி யடிப்பமடி - நிதம்
கூவிக் கும்மி யடிப்பமடி. (உ0)

**ஞானக்கும்மி முற்றுப்பெற்றது.**

---

ஆகத்திருப்பாடல் - சஙஙா.

---

ஹாமீம்.

# ஞானவருட்புலம்பல்

---

### தோங்கல்.

அருளு மஹதுக்கு மணுவுக்குமுன் னுள பரமாக விருக்கையிலே
திரளு மதிலொரு ஹறுபதுதான் தெளிவி லொளிவாக வெளியானதும்
மருளு மயக்கமு மதற்கொன்றில்லை மன்னன் புகழ்கின்ற ஹறுபதுதான்
அருளும் பரத்திலே வெளியாகிய வான ஹறுபது காப்பதாமே.

---

### எக்காலக்கண்ணிகள்.

ஆதியருளே யருந்தவமே யாண்டகுருவே யகந்தெளிவே
நீதியுடனே நீவந்து நேசந்தருவ தெக்காலம். (க)

கண்ணின்மணியே பொன்மானே கருத்தில்நிறைந்த கதிர்மதியே
பொன்னிலழகார் நின்முகமெற் பொருந்தவருவ தெக்காலம். (உ)

காயாய்க்கனியாய்ப் பூவானாய் ககனவடிவும் நீயானாய்
தாயாய்வந்தென் றனக்கமுதந் தருவதினிநீ யெக்காலம். (ங)

மாயாப்பொருளே மன்னவனே மங்காவருளே மாதவமே
காயந்தொலைந்து போகுமுன்னே கண்டேயிருப்ப தெக்காலம். (ச)

முத்தேமுத்தி லழகான மோட்சப்பொருளே முண்டகமே
சித்தாய்ச்சித்தில் நீயிருந்த செயலையறிவ தெக்காலம். (ரு)

காலேகமல நாயகமே கருத்தோடுறைந்த கதிர்மதியே
மாலேமவுனப் பொருளதுக்குள் மருவியிருப்ப தெக்காலம். (சு)

அண்டபிண்ட மீரேழு மவனிமுழுது மேதேடி
மண்டையுருண்டு போகுமுன்னே மனக்கண்திறப்ப தெக்காலம். (எ)

அலிபுமீமும் நீயானா யகண்டபரமுந் தானானாய்
அலிபிலெழுந்த மீமறிந்தே யணுகியிருப்ப தெக்காலம். (அ)

லாமிலுறைந்து நடுவானாய் நயனப்பொருளுந் தானானாய்
லாமிலெழுந்த பொருளறிந்தே நாடியிருப்ப தெக்காலம். (கூ)

குன்னென்றெழுந்து குருவானாய் கூடும்பொருளெல் லாமானாய்
குன்னென்றெழுந்த குணமறிந்து கூடியிருப்ப தெக்காலம். (க0)

கண்ணில்நிறைந்து கருவானாய் கமலத்துறைந்து முருவானாய்
கண்ணில்நிறைந்த கருவறிந்தே கருதியிருப்ப தெக்காலம். (கக)

மூச்சிலிருந்து முடிவானாய் மூலத்தெழுந்த சுடரானாய்
மூச்சிலிருந்த முடிவறிந்தே முடுகியிருப்ப தெக்காலம். (கஉ)

பேச்சிலிருந்து பெலமானாய் பேசாதிருந்து நலமானாய்
பேச்சிலிருந்த பொருளறிந்தே பேசாதிருப்ப தெக்காலம். (கங)

செந்தாமரையி லுறைந்திருந்தாய் சென்னிபழுத்து தேன்சொரிந்தாய்
உந்தாமலரில் மருவிநின்ற வுண்மையறிவ தெக்காலம். (கச)

அகாரப்பொருளும் நீயானா யருளுமறிவுந் தானானாய்
உகாரந்தனிலே நீயெழுந்த வுறுதியறிவ தெக்காலம். (கரு)

வீணிலிருந்து நானெழுந்து சென்னிபழுத்து தேன்கனிந்து
தானாயிருந்த தவத்துடனே தானாயிருப்ப தெக்காலம். (கசு)

சிங்கத்தினோடு சிரித்து மிகவே தயவாய்ப்
பங்கத்தை நான்கடந்து பலன்பெறுவ தெக்காலம். (கஎ)

கல்மலைக ளாயிரமாங் கறைமலை யீராயிரமாம்
சொல்மலையை நான்கடந்து சுகம்பெறுவ தெக்காலம். (கஅ)

பத்தான தொத்துநின்ற பழம்பொருள தானதிருச்
சித்தான தைக்கண்டு செயம்பெறுவ தெக்காலம். (ககூ)

கண்ணான துக்குள்ளே காட்சிதரு மெய்ப்பொருளை
உண்ணாடிக் கண்டே யுகந்திருப்ப தெக்காலம். (உ0)

அலிபாயிருந்த ஊறுபதிலே யடங்கியிருந்தா யென்குருவே
அலிபில்நிறைந்த பொருளறிந்தே யடங்கியிருப்ப தெக்காலம். (உக)

பேயாயிருந்த நாகத்திலே பெலமாயிருந்த பெரும்பொருளே
பாவும்பருவம் நானறிந்தே பழகியிருப்ப தெக்காலம். (உஉ)

தேயுள்ளுநிறைந்த தெளிவதனைத் தேகந்தனிலே நானறிந்து
தேயுள்ளுநிறைந்த தெள்ளமுதந் தின்றேயிருப்ப தெக்காலம். (உங)

ஜீனோடுநிறைந்து நீயிருந்தாய் ஜீனோடெழுந்த திருக்கூத்தை
நான்கண்டதினோ டேசேர்ந்து நாடியிருப்ப தெக்காலம். (உச)

தானாயிருந்து காபானாய் நோக்கும்லாமில்முத் தலக்கானாய்
தானாயிருந்த சூட்சமதைத் தவத்தோடறிவ தெக்காலம். (உரு)

எட்டிலிருந்து மஞ்சானா யிறைசேயுன்னை யறிவதற்கு
மட்டிலடங்காப் பொருள்தந்தே மருவியிருப்ப தெக்காலம். (உசு)

அஞ்சுமாறுந் தானான யகமும்புறமும் நீயானாய்
மிஞ்சும்பொருளை யெனக்கீந்தே மேவியிருப்ப தெக்காலம். (உஎ)



அஞ்சுஊறுபும் நீயானா யவனிமுழுதுந் தானானாய்
வஞ்சமகற்றி யென்னுடனே வந்தேயிருப்ப தெக்காலம். (உஅ)

காபிலுறைந்து கருவானாய்க் கருத்திலுறைந்து முருவானாய்
காபிலெழுந்த கருவதனைக் கண்டேயிருப்ப தெக்காலம். (உகூ)

மூன்றட்சரமும் நீயானாய் முந்நான்கெழுத்திற் றானானாய்
மூன்றிலிருந்த முடிவறிந்தே முடிகியிருப்ப தெக்காலம். (ஙo)

தொண்டர்மகிழுந் தில்லிபமே தோன்றுஞ்சுடரே வல்லபமே
அண்டர்பரவும் பொருளதனை யறிந்தங்கிருப்ப தெக்காலம். (ஙக)

நுகதாயுருண்டு மணியானாய் நொடிக்குளயினில் முத்தலக்காய்
நுகதாயெழுந்த கருவறிந்து நோக்கியிருப்ப தெக்காலம். (ஙஉ)

காரணமே கதிருடுவே கற்பகமே காதலெனச்
சீர்பெருகுஞ் செம்மலர்த்தாள் சேர்ந்திருப்ப தெக்காலம். (ஙங)

ஆரணமே யரும்பொருளே யாதியுடன் பேசிநின்ற
காரணமும் நான்கண்டு காட்சிபெற லெக்காலம். (ஙச)

பூரணமே பொற்பொருளே புகழரிதாய் நின்றவனே
ஆரணத்தை நான்கண்டு மருள்பெறுவ தெக்காலம். (ஙரு)

காரணமே கற்பகமே காணரிய கதிர்மதியே
காரணமும் நான்கண்டு களித்திருப்ப தெக்காலம். (ஙசு)

கண்ணேகண் ணின்மணியே கண்ணிறைந்த கற்பகமே
பொன்மலரை நாங்கள்கண்டே புகழ்ந்திருப்ப தெக்காலம். (ஙஎ)

என்றாய் தமர்வழியு மென்றந்தை முதல்வழியும்
சிந்தா மலர்ப்பாதமுஞ் சேர்ந்திருப்ப தெக்காலம். (ஙஅ)

ஆறுபத்து மாறாகி யாகிநின்ற வாண்டவனே
ஆறுபத்து நானறிந்து மகமகிழ்வ தெக்காலம். (ஙகூ)

மூன்றுபத்து முந்நான்கு முழங்கும் பொருளதிலே
மூன்றுபத்து முந்நான்கில் முழங்குவது மெக்காலம். (ச0)

---

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூரணத் தெழுந்த வல்லி புகழினு மடங்கி டாதாள்
காரண மிகவுஞ் செய்வள் கருத்தெல்லாம் நிறைந்த கன்னி
மாரண மயக்க மில்லாள் மாதவத் தெழுந்த மாது
சீரணஞ் சிறந்த செல்வி சீர்பதங் காப்புத் தானே.

### எந்நாட்கண்ணிகள்.

காயிலெழுந்து கனகரத்ந மானவள்நீ
ஊனுடன்நான் சேர்ந்ததுபோல் கலந்திருப்ப தெந்நாளோ. (௧)

ஆலமெல்லாந் தானிறைந்த வாதிவடி வானவளைக்
காலமெல்லாங் கால்பிடித்துக் களித்திருப்ப தெந்நாளோ. (௨)

மூலக் குகையிலெழு மூன்றுநிற மானவளை
மேலைப்படி வாசலிலே மேவியிருப்ப தெந்நாளோ. (௩)

கன்னி யழகி ககனவடி வானவளென்
தன்னில் பொருந்தித் தான்மகிழ்வ தெந்நாளோ. (௪)

காலில் கலந்து கருத்தில் நிறைந்தவளை
மாலுடலைக் கண்டு மனமகிழ்வ தெந்நாளோ. (௫)

வாலவய தாம்பருவ வார்த்தைவழு வாதவளைச்
சேலை பிடித்துச் சிரித்திருப்ப தெந்நாளோ. (௬)

பச்சை யழகு பாரவுடல் மேனியெல்லாம்
இச்சையுட னேகலந்து மிசைந்திருப்ப தெந்நாளோ. (௭)

முத்துநிறம் நெற்றி முடிவு பவளநிறம்
சித்தமுட னேகலந்து சேர்ந்திருப்ப தெந்நாளோ. (௮)

அண்டநிற மானதுநீ யாதிவடி வானவள்நீ
கண்டு மயங்காமல் கலந்திருப்ப தெந்நாளோ. (௯)

காலைப் பிடித்துக் கலவிமிகச்செய்து மனம்
பாலைக்குடித்துப் பசிதீர்ப்ப தெந்நாளோ. (௧௦)

இருபேர்க்கு மோரறிவு இசைந்துநிற்கு மேனிகண்டு
பருவமுடன் நாங்கலந்து பழகியிருப்ப தெந்நாளோ. (௧௧)

ஆறான ஆறுக்குள்ளே யுண்ணியமதானவளைப்
பேறான பேறுடனே பெலத்திருப்ப தெந்நாளோ. (௧௨)



உச்சிதனை யறிந்தே யுள்பூட்டை நீதிறந்து
பட்சமுட னேவந்து பலந்தருவ தெந்நாளோ. (௧௩)

நீவருகுஞ் சாயல் நிச்சயத்தை யானறிந்து
கோள்வழியில் நின்று குலாவுவது மெந்நாளோ. (௧௪)

பெற்றார்க்குப் பித்தமுண்டும் பிறந்தார்க்குக் குற்றமில்லை
உற்றவுடல் மேனிகண்டு முகந்திருப்ப தெந்நாளோ. (௧௫)

சீனுமே நீயானுஞ் சிறந்தநான் நானுனேன்
மானுங் கலைபோலே மகிழ்ந்திருப்ப தெந்நாளோ. (௧௬)

மூன்றுலெக்கம் நீயானுய் முப்பதுக்குள் நானுனேன்
தோன்றி நடம்புரிந்து துணிந்திருப்ப தெந்நாளோ. (௧௭)

ஈரெட்டுப் பட்டுடுத்து மின்பமுடனே வருவாய்
ஓரெட்டுக் குள்ளே யுகந்திருப்ப தெந்நாளோ. (௧௮)

ஓராறுக் குள்ளிருந்து முலாவிவரும் பெண்மயிலை
ஈராறு நாமாகி யிசைந்திருப்ப தெந்நாளோ. (௧௯)

காலைக்கா லோடுபின்னிக் கடுங்காம லீலைசெய்து
சாலவுட லைச்சேர்ந்து சார்ந்திருப்ப தெந்நாளோ. (௨௦)

மூன்றுபத்து மோராறு முந்நான்கு மானவளை
நான்குபத்து நாலைந்தாய் நாமிருப்ப தெந்நாளோ. (௨௧)

---

### அறுசீர்த்தாழிசை.

ஆதி குருவே யருந்தவமே யான பொருளே யாண்டவரே
ஓதி யடியேன் புகழுகிறே னுளத்தி லுறைந்து முதவிசெய்வீர்
காதல் நிறைந்த கருவேநீர் கமலத் தெழுந்த வுருவேநீர்
நீதி யுடைய வென்குருநீர் நிசமாய்ப் புகழ்ந்தேன் ஹல்லாஜே.

### ஹல்லாஜு கண்ணிகள்.

பிஞ்செழுத்து மீமாம் புதையலோ நானறியேன்
அஞ்செழுத்தை யென்றனக்கே யருளுங்குரு ஹல்லாஜே. (௧)

அஞ்செழுத்து மாறெழுத்து மான பொருளானீர்
அஞ்செழுத்துள் ளானவகை யருளுங்குரு ஹல்லாஜே. (௨)

எட்டெழுத்தி லேயிருந்து மின்பப் பரமானீர்
எட்டெழுத்தி லேயிருந்த விசைவருள்வீர் ஹல்லாஜே. (௩)

வட்டெழுத்தி லேயிருந்து வாகாய்ப் பொருளானீர்
வட்டெழுத்தி லேயிருந்த வகையருள்வீர் ஹல்லாஜே. (௪)

எழெழுத்து மஞ்செழுத்து மிசைந்த விடமறியேன்
எழெழுத்தி லேயிருந்த வியல்பருள்வீர் ஹல்லாஜே. (௫)

அஞ்செழுத்தும் மூன்றெழுத்து மானபர மானவரே
நெஞ்சுட் கருணை நிலையருள்வீர் ஹல்லாஜே. (௬)

உற்ற வெழுத்தி லுறவாகி நின்றீரே
உற்ற பொருளுறுதி யுவந்தருள்வீர் ஹல்லாஜே. (௭)

சீரெழுத்தி லேநிறைந்து சிறப்புமிக வும்பெற்றீர்
சீரெழுத்தி லேயிருந்த சிறப்பருள்வீர் ஹல்லாஜே. (௮)

முத்தி லுறைந்து முழுதும்நீர் தாமானீர்
பெத்த பொருளின் பெலமருள்வீர் ஹல்லாஜே. (௯)

கத்த னுடன்சேர்ந்தீர் கற்பகமுந் தாமானீர்
கத்த னுடன்சேர்ந்த கருத்தருள்வீர் ஹல்லாஜே. (௧௦)

மெய்யெழுத்தி லேயிருந்தீர் மெய்க்கும் பொருளானீர்
மெய்ப்பொருளி லேயிருந்த மெய்யருள்வீர் ஹல்லாஜே. (௧௧)

சுத்த மிகவும்பெற்றீர் சூட்சப் பொருளானீர்
சுத்தப் பொருளின் சுடரருள்வீர் ஹல்லாஜே. (௧௨)

அண்டபிண்ட மலைகடலு மவனிமுழு தும்மானீர்
அண்டபிண்ட மானவகை யருளுங்குரு ஹல்லாஜே. (௧௩)

அந்தரமும் நீராகி யறிவும் மிகவாகி
அந்தரத்தி லானவகை யருளுங்குரு ஹல்லாஜே. (௧௪)

கலையுமே நீரானீர் கதிர்மதியுந் தாமானீர்
கலைதனிலே யானவகைக் கருத்தருள்வீர் ஹல்லாஜே. (௧௫)

முன்னே யருளானீர் முடிவி லொளிவானீர்
முன்னேயரு ளானவகை முடிவருள்வீர் ஹல்லாஜே. (௧௬)

கணக்குமேல் நீரானீர் கயற்பொருளுந் தாமானீர்
கணக்குமே லானவகைக் கருத்தருள்வீர் ஹல்லாஜே. (௧௭)

என்னுள் நிறைந்தவரே ஏகபர மானவரே
என்னுள் நிறைந்தவகை யெனக்கருள்வீர் ஹல்லாஜே. (௧௮)



இசையும் பொருளானீ ரெவர்க்கு மருளானீர்
இசையும் பொருளறிய வியல்பருள்வீர் ஹல்லாஜே. (௧௯)

நுக்தி லிருந்த நொடியறிந்தீ ரென்குருவே
சிக்கற் றெனக்கருள்வீர் செல்வரே ஹல்லாஜே. (௨௦)

---

இ ன் னி சை.

ஆரும்புகழு மென்குருவே யவனிமுழு துமைத்தேடும்
பாரிற்பிறந்த பலபடைப்பும் பரந்தேதேடிப் பரதவிக்கும்
ஓதுமுறையை யெனக்கருளு முள்ளம்நிறைந்து குளிரவுமே
நீதமுடையோர் நீர்வருவீர் நிசமாய்ப்புகழ்ந்தேன் ஹல்லாஜே.

என்றுருக் கண்ணிகள்.

மத்தான துள்ளிருந்து மகிழ்ந்துநிறை வேதியரே
சித்தான துள்ளிருந்த செயலருள்வீ ரென்குருவே. (௧)

முத்தான துள்ளிருந்து மோட்சப்பொரு ளாகிநின்றீர்
பத்தான துட்சேர்ந்த பரமருள்வீ ரென்குருவே. (௨)

குத்தான துள்ளுறைந்து கூர்மைப்பொரு ளாகிநின்றீர்
முத்தான துள்ளான முடிவருள்வீ ரென்குருவே. (௩)

எட்டி லிசைந்து மிமையோர் புகழானீர்
மட்டிலடங் காமவுன வகையருள்வீ ரென்குருவே. (௪)

அஞ்சி லுறைந்து மருமைப்பொரு ளாகிநின்றீர்
பிஞ்சி லிருந்த பெலமருள்வீ ரென்குருவே. (௫)

ஆறுபத்திற் சேர்ந்தே யடங்காப் பொருளானீர்
ஊறும்புத்திக் குள்ளிருந்தே யுரைதருவீ ரென்குருவே. (௬)

ஐயெட்டுக் குள்நின் றடங்கிநின்ற வரும்பொருளே
ஐயெட்டுக் குள்ளான வருள்புரிவீ ரென்குருவே. (௭)

மூன்றுபத்து மூவாறில் மூழ்கிநின்ற முப்பொருளே
மூன்றுபத்து மூவேழின் முறையருள்வீ ரென்குருவே. (௮)

நாலுபத்து மூன்றுபத்து மாகிநின்ற நற்பொருளே
நாலுபத்து நாலிரண்டாய் நடம்புரிவீ ரென்குருவே. (௯)

நாலுபத்தில் நாலாறாய் நாடிநின்ற நற்பொருளே
நாலுபத்தில் நான்மூன்றாய் நடம்புரிவீ ரென்குருவே. (௧௦)

ஞானவருட்புலம்பல் முற்றுப்பெற்றது.

---

ஆகத்திருப்பாடல் - ௫௩௧.

ஹரீம்.

# ஞான அடைக்கலம்.

கலிவிருத்தம்.

எத்தனைகோடி வருடமிருந்து மியல்வு பெற்றோரும்
எத்தனைகோடி வருடமிருந்து மீடேத்த முற்றவரும்
எத்தனைகோடி வருடமிருந்து மியன்மெய்யை யாய்ந்தவரும்
எத்தனைகோடி வருடமிருக்கினு மியலவை யறிந்திலரே.

சந்தவிருத்தம்.

ஆறிலாறுறு மாகிய வாண்டவா
வாறறிந்திடு வார்க ளறிவரோ
பேறும்பேறும் பெரும்புகழு மானவா
பேணியென்னை வளர்த்த பெரியவா
நூறுயீரேழும் நூறினி லானவா
நோக்கும் லாமினில் துன்னியமானவா
கூறுங்கூறிய குன்றுறில் நிறைந்தவா
கொண்டுமென்றனைக் கொண்டாண்டு கொள்ளுவாய்.

கண்ணிகள்.

நாலுபத்துமே நாலிரண் டானதை
நாலிற்கண்டுமே நோக்கி யறிந்திலேன்
பாலுந்தேனுங் கனிந்த பழமதை
மாலதாக்கி யெனக்கருள் மன்னவா. (௧)

மாரிகால மழைபெய்யுந் தன்மையாய்ச்
சீருமென்னுட் சிறப்புமே நன்மையாய்
ஊரைவிட்டு முலகினி லானனே
ஆருமில்லை யடைக்கல நாதனே. (௨)

என்னையீன்றிடுந் தந்தைதா யென்கினை
தன்னில்நின்று பிறந்திடுந் தன்கினை
மன்னனன்றி மகிழ்வதும் வேறில்லை
உன்னையன்றி யடைக்கல மொன்றில்லை. (௩)

ஆறுநூறு மாறுயிரத் தறுப்த்தா
றுதியான கலாமில் மறைந்தவா
பேருமூரும் பிறப்புமில் லாதவா
பின்னுமுன்னு மடைக்கல மானனே. (௪)



எட்டோடஞ்சு மிசைந்திடந் தன்னையே
இட்டமாக வறிந்துதெ ளிந்திலேன்
மட்டிலாப் பவம்செய்கினு மன்னவா
விட்டிடாதுன் னடைக்கல மானனே. (௫)

ஆறுமாறு மருமைப்பொருள் தன்னை
ஆகந்தன்னி லறிந்துவ ணங்கிலேன்
கூறுங்கூறுங் கொடும்பிழை நீபொறு
கொற்றவாவுன் னடைக்கல மானனே. (௬)

அஞ்சுமாறு மதாகிய வான்பொருள்
கொஞ்சமாகிலுங் கொண்டுவ ணங்கிலேன்
பஞ்சபாதகஞ் செய்யினு நீபொறு
தஞ்சந்தஞ்ச மடைக்கலந் தானவா. (௭)

ஏழுமஞ்சு மெழுந்த விடந்தன்னில்
தாளுங்கண்டு தலமுமறிந்திலேன்
ஆளுமெங்களை யாண்டுகொண் டாண்டவா
நாளும்நாங்க ளடைக்கல மானமே. (௮)

கத்தன்றன்னைக் கருத்தில றிந்திலா
ரெத்தனை தவத்தாலு மிணங்கிலார்
சித்தமென்குரு பாதம் நினைத்ததால்
மொத்தமாக வடைக்கல மானமே. (௯)

பாவியான பழைய வடிமையின்
பாவமெல்லாம் பரமனே நீபொறு
ஆவிகாவல தாகுமுன் னுண்டவா
ஆருமில்லை யடைக்கல மானமே. (௧௦)

இந்தவேளை யெனக்கு முதவிசெய்
யென்னுயிர்க் குயிராகிய வின்பனே
நந்தியாகிய நங்குரு நாதனே
நாங்களுன்றன் னடைக்கல மானமே. (௧௧)

என்னையீன்றவ ரென்கினை யாவரும்
என்றுஞ் செய்பிழைநீபொறு வேகனே
உன்னையன்றி யுலகினி லொன்றில்லை
யுண்மைகொண்டுன் னடைக்கல மானமே. (௧௨)

எங்குமின்ற சயிமதி போலவே
　மெய்றயுள்ளி யிலங்கிடு மேகனே
பங்கமான பழவினை போக்கிடு
　பரமனே யுன்னடைக்கல மானமே. (கங)

ஆதியந்த மளவுமில் லாதவா
　ஆசநிக்கிடு வாக்கா நிக்கிரேன்
நீதியெங்குரு நிர்மல மானவா
　நிச்சயமுன் னடைக்கல மானமே. (கச)

ஏழையென்னொடு சேர்ந்தவர் யாவரும்
　காணுஞ்செய்பிழை நீபொறு நாதனே
ஆளுமெங்களை யாண்டுகொண் டாண்டவா
　தாளிலாங்க ளடைக்கலந் தானவா. (கரு)

ஏழையென்னை பிடிப்பவர் யாவர்க்கு
　மென்னையின்றவ ரெங்கினை யாவர்க்கும்
காணுமுன்னை கலந்தரு நாதனே.
　நாங்கள்நம்பி யடைக்கல மானமே. (கசு)

எழுபத்தா பெழுந்த தவத்தினுல்
　ஆளினுட்கோ ளெங்களை யாண்டவா
காணுகாணு கலந்தரு நாதனின்
　றுளிலாங் களடைக்கலந் தானவா. (கஎ)

ஆதியான நபிதிருப் பாதத்தை
　ஆண்டவாவெங்கட் கருள்புரி யாவர்க்கும்
ஆதியானை யடங்கலும் யானுமே
　ஆதியேயுன் னடைக்கல மானமே. (கஅ)

ஞான அடைக்கலம் முற்றுப்பெற்றது.

---

ஆகத்திருப்பாடல் - ௯௰க.

---

ஹாமீம்.

பிஸ்மில்லாஹி.

# ஞானக்கீர்த்தனை.

---

க. இராகம் - கமாஸ்; தாளம் - ஆதி.

பல்லவி.

மருவிக்கோவெங்கள் மறைநபிமலரடி
　இறையவர் புகழடி.

அநுபல்லவி.

உருகிக்கனிக்கிட்டாக்கால் நமதுட லுருப்படும்
மருவிப்புகழ்ந்திட்டாக்கால் மறையருள் தரிபடும்
　பெருகவருள்தரப் பெரியோன்நபிவர
　கருதியவர்பதங் கருத்தில்நினைத்துநீ (மருவிக்கோ)

சரணங்கள்.

முன்னுளாறாது முஹாதும்வாஹி தியபத்தானது
　முறையுட னறிந்துநீபார்
அக்காளேஹாது மஹ்மது முஹம்மதுவும்
　ஆரென் றகந்தனிற்பார்
இக்காள்பொருள்தரு மகிழ்ந்துநீ - யிணங்கிக்கோ
பன்னுரருள்தரும் புகழ்ந்துநீ - யணங்கிக்கோ
　எங்குநிறைந்திடுந் தங்கநபிபதம்
　பொங்கும்பொருள்தரு மங்கத்தனக்குள்நீ (மருவிக்கோ)

ஆலமறுவாஹிது மால மஜிஸாமுதல்
　ஆரென் றறிந்துநீபார்
காலமூன்றிலேயுங் கருத்தடங் கவிலேயும்
　கருவுநீ யாரென்றுபார்
மூலமறைநாங்கிலு முப்பொரு ளானவர் - முத்தியே
பாலன்றனக்குள்வந்த பழம்பொருள் தானவர் - பத்தியே
　முன்னேயுட்சுடர் பின்னேமுச்சுடர்
　அன்னவர்நபிபதந் தன்னையறிந்துநீ (மருவிக்கோ)

கண்ணில் நிறைந்ததுவுங் கருத்தி லுறைந்ததுவுங்
　கமலகாட்சியிவர் பார்நீ
என்னும்நிறைந்தவரு ளெங்குமுறைந்தபொரு
　ளிறையருள்தானிவர் பார்நீ

விண்ணில்நிறைந்திருக்கும் வேதப் பொருளுமவர் - விள்ளுவாய்
என்னில்நிறையரு ளிரங்கித் தருளுமவர் - கொள்ளுவாய்
இன்பப்பொருள்தரு மன்பனருள்வரும்
நம்புமநபிபதம் தம்பமனுதினம் (மருவிக்கோ)

---

உ. இராகம் - பைரவி; அடதாளம்.

பல்லவி.

தங்கப்பதமலர் தரிசனைதந்தருளுங் குருவே
தானவனுடனவள்ளல் தாமல்லவோ குருவே.

அநுபல்லவி.

எங்குநிறைந்திருக்கு மெங்களேக குருநீரே
இங்கனமனூமூதேயெங்கள் துயர்திருங் குருவே - (தங்கப்)

சரணங்கள்.

முன்னுளில்ஹதியத்தில் முயன்றெழுந்த குருநீர்
முப்பொருளுமுவ்வுலகு முவ்வறிவுங் குருநீர்
இக்காலிலென்னுள்ளத்தி லிரங்கியருளைத் தருவீர்
ஏழையென்றன்றுயரகற்ற வெழுந்தருளாய் வருவீர் (தங்கப்)

எண்ணில்நிறைந்திருக்குமென்றன் கற்பகமாங் குருநீர்
காசினியெல்லாமாண்ட கார்க்குடையார் குருநீர்
விண்ணில்நிறைந்திருக்கு மெங்கள்வேதநிறகுல் நபியே
பொன்னின்மலரடியைப் போற்றுதற்குப்புகழ் புரிவீர் (தங்கப்)

அந்தஹாமீமந்தயாஸீ னந்தஹா வென்றும்
அடிபணிந்தபேர்களுக் கருள்புரிந்த குருநீர்
அந்தலயின்னுபூவில் மூமினத்தியான வள்ளல்
அந்தமவுலஹாவென்றன் னகமிருந்தருள் தருவீர் (தங்கப்)

---

௩. இராகம் - காம்போதி; தாளம் - ஆதி.

பல்லவி.

மருவிக்கலந்திருக்க மாமோகமாகுதென்றன்
மனமகிழ்ந் தருள் தருவீர் - மறைநபியே
மனமகிழ்ந் தருள் தருவீர்.

அநுபல்லவி.

திருவின்மலரழகைத் தெரியவருள்புரிவீர்
திருவே திருவில்நின்ற
தெளிவே தெளிந்தவருள்



ளொளிவே தேவர்புகழும்
வடிவே
செம்மையுடனறிவு சிறப்பாய்த்தரும்நபியே (மருவிக்க)

சரணங்கள்.

எங்கும்நிறைந்த குருநீர் - எனக்குள்வந்தே
இலங்கும் பொருளைத் தருவீர்
பங்கம் பறந்திட வருள்வீர் - பழம்பொருளை
அங்கந் தனக்குள் புரிவீர்
எங்கும்நிறைந்திருக்கும் இன்பப் பெரும்பொருளே
தங்கப்பதமலரைத் தயவாய்த் தருமருளே
குருவே குருவுக்கெல்லாங்
கருவே குணமுடைய
திருவே குறித்தபேர்க்கு
ஞருவே
குன்னில்நிறைந்தபொரு ளென்னுள்தரும்நபியே (மருவிக்க)

அலிபில் நிறைந்த வருவே - அஹததுதான்
அகமகிழுந் தருவே
வலியபொருளும் குருவே - வானொளிவாய்
வந்தேயிருந்த வுருவே
ஒலியிட்டெழுந்தட முளத்தில் புரிந்திடவும்
கலியிட்டெழுந்தகழல் வளத்திற் சொரிந்திடவும்
தானவர் தானுகின்ற
கோனவர் தாணிதனில்
தீனவர் தயவுடையோர்
ஆனவர்
தங்கமலரமுதமுண்கத் தரும்நபியே (மருவிக்க)

கண்ணில்நிறைந்த கருநீர் - கமலமதில்
காட்சியுடையோர் குருநீர்
என்னுள்நிறைந்த பொருள்நீர் - இருதயத்தில்
இரங்கியருளைத் தருநீர்
விண்ணில்நிறைந்திருக்கும்வேதநிற சூலுல்லாவே
பொன்னின்பதமலரைப் போற்றிப் புகழ்ந்திடவே
வரவே வந்தேயருளைத்
தாவே வடிவில்நின்ற
திருவே வண்மைமிகுந்த
குருவே
வண்மைப்பொருளறிய நன்மைதரும்நபியே (மருவிக்க)

---

ச. இராகம் - காம்போதி; தாளம் - ஆதி.

பல்லவி.

இன்னம்வரக் காணவில்லையே - நபியுல்லாவை
இன்னம்வரக் காணவில்லையே.

அநுபல்லவி.

இன்னம்வரக்காணவில்லை யெங்களிறசூலுல்லாதன்
பொன்னின்பதமலரைப்போற்றிப்புகழுதற்கு (இன்னம்)

சரணங்கள்.

முன்னாளுதியத்திலே முறையுடனே
மூழ்கியிருந்த முகமும்
அங்காளுமதாகவே யடங்கலுக்குள்
ஆகியிருந்த முகமும்
இங்காளைவைக்குளுகின் நிறையாயிலங்குமுகம்
எங்காளுங்காணவாசை யெங்களிறசூல்முகத்தை (இன்னம்)

ஆலமறுவாஹூக்குள்ளே யழகாகவே
அடங்கி யிருந்தகாமும்
ஆலமஜினாமதற் குள்ளகமிருந்தே
அறிவாய் நிறைந்தகாமும்
மூலமூநான்கினும் முப்பொருளானகரம்
பாலன்றனக்குளருள் பாமிறசூல்காத்தை (இன்னம்)

அந்தஹூாமீமாகவே யடங்கலிலும்
அழகாயிருந்த கழலும்
அந்தயாவினுகின் றகமிருந்தே
ஆசையிருந்த கழலும்
அந்ததாஹூாவென்று மறிவோர்புகழ்ந்தகழல்
அந்தமவுலாஹூாவெங்க ளாதியிறசூல்கழல் (இன்னம்)

---

ரு. இராகம் - மோகனம்; தாளம் - சாப்பு.

பல்லவி.

ஏழைதனையாட் கொள்ள வாரும் - இந்த
வேளையிரங்கி முகம் பாரும்.

அநுபல்லவி.

காளுக் ஆயாங்களைத் தீரும் - உமை
கம்புமடிமை தனைக் காரும்
ஏழைக்கிரங்கிவந்து இறையருள்மிகத்தந்து
காளும்வினையரிந்து ஆளுமருள்சொரிந்து (ஏழை)

சரணங்கள்.

மனதுமயங்கி மலையாதே - மாயப்
பிரபஞ்சமுலைக் குலையாதே



நினைவுதயங்கிக் கலையாதே - நல்ல
நேர்மைப்பதங்கக் குலையாதே
நெஞ்சகத்தனிலருளை மிஞ்சக்கிருபை செய்யும்
வஞ்சமறுத்துங்கள் தஞ்சமலரை யுய்யும் (ஏழை)

கல்லுமுருக்கும்பஞ்சம் போலே - உங்கள்
கருணையருளையுள்ளில் மாலே
அல்லும்பகலும்பத மாலே - உள்ளில்
அடிமைக்கருள்புரியும் பாலே
நல்லகிருபைசெய்து காட்டும்படி பொருளை
சொல்லைப்பலிதமாக்கி சூட்டுமெனக் கருளை (ஏழை)

அந்தஹூாமீமான கருவே - அடியேன்
அகம்நிறைத்தீர் குருவே
அந்தயாவீனென்ற திருவே - அடிமைக்
கருள்புரிந்தீர் குருவே
இந்தப்படிபுகழ வெங்காள்கிருபை செய்தீர்
வந்துகடம்புரிவீர் வள்ளல்நபியென் பீரே (ஏழை)

அந்ததாஹூாவென்ற புகழே - அறிய
அருள்கொடுத்தாய் குருவே
அந்தமவுலாஹூாவென் திருவே - அடங்கலும்
ஆண்டாயென் குருவே
அந்தவலியுன்னுப்பூவில் மூமினத்தி வள்ளல்
இந்தவேளையெனக் கிரங்கியேயரு ளுள்ளில் (ஏழை)

---

சு. இராகம் - மோகனம்; தாளம் - ஆதி.

பல்லவி.

மனதுமிகவு மெலியாதிருக்க
மயக்கமறுத் தருள்வீரையா

அநுபல்லவி.

உனதுபாதமே யுறுதியுடன் வரும்
எனதினுளமதி லிலங்குபொருள் தரும்
இறையே மறையே
எங்கும் நிறைந்திடும் தங்கமலரடி
என்றன்சிரமதில் வந்து தரும்படி
குருவே வருவீர் (மனது)

சரணங்கள்.

இந்தவுலகி லிருந்த நாளை
எல்லாந்தீர்ந்தே யிருக்கும் காலை

வந்துமொருவர் கேட்கும் வேளை
வண்மைபெறவே தருவீர் தானை
அந்தவேளையி லுமது தஞ்சமே
நந்தியேயருள் குருவின் கஞ்சமே
நாதா மாதா
நம்பினேன் நலமுங்கள் தம்பமே
நிறையவருள்தரும் தங்க வின்பமே
குருவே வருவீர் (மனது)

இவர்க்குங் கிருபைசெய்து பின்னை
இருவர்வருவார் கபறில் முன்னை
அவர்க்குங் கிருபைசெய்து தன்னை
அருளாயுகத்தி விருப்பீர் மன்னை
இவர்களுக்கருள் கிருபைசெய் தொழில்
நவரசந்தருமலரை யென துளில்
ஆதி சோதி
அண்டபிண்டமே நிறைந் திடும்
தொண்டருள்ளமிலே யுறைந் திடும்
குருவே வருவீர் (மனது)

நாளைமஹ்ஷறு வேளை தனிலே
நாட்டமுங்கள் நாமம் முனிலே
ஏழையென்றுய் தந்தை யுனிலே
இனவரனைவ ரெவையும் பினிலே
ஆளுமெங்களை நாதரே மதி
சூழுமுமதிரு பாதமே கதி
நறையே யிறையே
நந்தியேயுங்கள் சொந்தமலர்ப் பொருள்
நாதரேஹல்லா ஜென்பீர ரருள்
குருவே வருவீர் (மனது)

---

எ. இராகம் - சாவேரி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

என்வினையெல்லாந் தீர்த்தே - எனை
இரட்சிக்கும் ஹாமீமுஹம்மதே
இன்பமாகிய தம்பமாமணியே.

அநுபல்லவி.

மண்ணுலகிலேபிறந்து தன்னைமறந்தேயிருந்து
என்னபிழைசெய்திடினு மன்னனேநீதான்பொறுப்பாய்(என்வினை)



சரணங்கள்.

என்றுயரமெல்லா மறிந்தே - எனை
இரட்சிப்பா ரிவ்வுலகாரு மிலையே
உன்றனைத்துதிக்கு முளத்தோருக்
குறுந்துயரமோட்டுவதற் காரு மிலையே
என்னபிழைசெய்தேனோ வென்விதிவசமிதுவோ
மன்னனேநீதான்பொறுத்தென்னை ரட்சிப்பாயிறையே
(என்வினை)

வான்புவியனைத்திலு மெல்லாம் - நிறைந்
தாழ்வதும்நீ வாழ்வதும் நீயே
தான்வகையமைக்கு முதலே - தானயிருந்து
தாளவடிவானது நீயே
நீமனம்வைத்தேயிரங்கி நீகிருபைசெய்திடுவாய்
நான்பிழைகள்செய்திடினும் நாயகனேநீபொறுப்பாய்
(என்வினை)

என்னையிரட்சித்தருள் புரிந்து - என்றுயர்தீர்த்து
இன்பப்பதப்பொருள் சொரிவாய்
தன்னையறியாத பிழைகள் - தரணிதன்னில்
தான்பொறுத் துன்னருள் புரிவாய்
முன்னோவனமீதிருந்த முப்பொருளேமுச்சுடரே
என்னைரட்சித்தருள்புரிவாய் யாஸீன்முஹம்மதுவே
(என்வினை)

---

அ. இராகம் - சுருட்டி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

என்மனமேயுனக் கிசைவதைச்சொல்கிறேன்
இதன்படிகேள் மனமே.

அநுபல்லவி.

என்மனமே யிறைப்பொருளாநிந் திருக்கிறாய்
இதன்படிநடக்கவு மிதமுண்டே மறுக்கிறாய் (என்)

சரணங்கள்.

முன்னுள்ளஹதிய்யத்தி லொன்றுமூன்றானது
முறைப்படிய மறிந்தாய்
அந்நாளதுமூன்று மொன்றானவஸிர்தையும்
அதுவிபர மறிந்தாய்

இங்ஙாளிதின்படி நடந்துநீ இசைந்திடப்
பின்னுமொன்றுண்டு மோகமைக்கேட்டுப் பிணங்கிட (என்)

முந்தியிருந்த வனத்தில்நமதுகுரு
முன்தாபாவையு மறிந்தாய்
நந்தியானவர்களென்றடங்கலிலும்
காட்டமிவரென் றறிந்தாய்
முந்தியிருந்தகுரு முச்சுட ரானவர்
இந்தப்படியறிந்தே யிசைந்துக்கொள் தானவர் (என்)

அந்தஹாமீமாயிருந்தடங்கலிலு
மாசைமிகுந்ததா மீமாய்
அந்தயாசீனுகவந்தறிவுந்தந்தே
யகமிருந்ததா ஹாவாம்
அந்தவலியுன்னுபூசில் மூமினத்தி யெங்கள்
அந்தம்வுலாஹா வென்றுணநபி தங்கள் (என்)

---

கூ. இராகம் - சங்கராபரணம்; அடதாளம்.

பல்லவி.

ஆசை மிகவுமா னனே - யென்
ஆண்டவரே யேன்பிரே - யென்சாகிபே
ஆசை மிகவுமா னனே.

அநுபல்லவி.

மோசம் வராமற் காத்து-முழுதுமென்னை
மோட்சவழியிற் சேர்த்து
பாசந்திறந்தருளைப் பாலமுதம்போற்பொருளை
நேசத்துடன்தருவீர் நீதரென்பிரேவருவீர் (ஆசை)

சரணங்கள்.

காதங்கஸ் தூரி வாசமே - கமழுமணம்
காதிற் றிறந்து வீசுமே
வேதம் புகழும் நேசமே - விண்ணுலகில்
வீதி மிகவும் பேசுமே
தேசமெங்கும்புகழ்ந்த தேவாங்கமகிழ்ந்த
ஆசைப்புடனேபூண வாசமுடனேகாண (ஆசை)
கண்ணில் நிறைந்த கோவே - கமலமதிற்
காட்சி சிறந்த தேவே
எண்ணும் நிறைந்த பூவே - பொற்பாதமலர்
எண்ணி இறைந்த தாவே



விண்ணோர்புகழுமெங்கள் வேதரெம்பிரேதங்கள்
கண்ணிற்காணவுமாசை மண்ணுள்தோணவுமோசை (ஆ)

அஞ்சிலிருந்த குருவே - அகாரமதிற்
பிஞ்சிலுறைந்த திருவே
மிஞ்சும்பொருளைத் தாவே - நெஞ்சிலிருந்து
வஞ்சமகற்றுங் குருவே
செஞ்சொல்தரும்பொருளை ஷெய்குஹல்லாஜருளை
கஞ்சமலர்வரவுந் தஞ்சப்பொருள்தரவும் (ஆசை)

---

க0. இராகம் - ஆநந்தபைரவி; தாளம் - ஆதி.

பல்லவி.

மையல் பெருகுதெம் மானே - ஹல்லாஜைக்காண
மனது முருகுது தேனே.

அநுபல்லவி.

துய்யச்சுடரழகு சுட்சசொருபங்காண
தயங்குதே மன மயங்குதே
தந்துபுகழவே சிந்தைமகிழவே (மையல்)

சரணங்கள்.

உற்றபொருளைத் தானே - யென்னுள்ளில்வர
சித்தமிரங்கெம் மானே
பத்தியருளுங் கோனே - பழம்பொருளை
நித்தந்தாவுந் தானே
உற்றபொருளுஞ்ஞான சித்தியெனக்கருளும்
நாடுதே மனந் தேடுதே
நாதரேகுரு நீதரேவர (மையல்)

சோதியருளும் நீரே - சுடரெழுந்த
சூக்ஷப்பொருளும் நீரே
ஓதியுணர்ந்த பேரே - யுளம்நிறைந்தும்
ஒன்றாகவரும் நீரே
காதிற்றிறந்தவருள் காலைநிறைந்தபொருள்
காணவே மனந் தோணவே
கண்கள்குளிரவே தங்கள்வருகவே (மையல்)

ஆறுருவமான வரே - யருள்நிறைந்த
அரும்பொருள்தரும் நீரே
பேறுனபெரும்பொ ருளே - பெறுந்தவமும்
பெலமாகத்தரும் நீரே

யீராறுமாறஞ்சு மிசைந்தஹல்லாஜைக்காணப்
பாடுதே மனங் கூடுதே
பரமானகுருவருள் சேர்வரவுமே (மையல்)

கக. இராகம் - மோகனம்; தாளம் - ஆதி.

பல்லவி.

மன்னர்வருவார் மயிலே - யினிமேலிங்கே
மன்னர்வருவார் குயிலே.

அநுபல்லவி.

மனமும்நினைவுங்கனவுமிவை மூன்றுமொன்றுகுமயிலே
கத்தன்பிரிந்திடுகிற் செத்துமறைந்திடுகில்
உற்றபொருளுந்தோண முத்தியருளுங்காண (மன்னர்)

சரணங்கள்.

அஹதுமுஹதும்வஹ்தமிவை மூன்றுமொன்றுகுமயிலே
அண்டர்புகழுமருள் தொண்டர்மகிழும்பொருள்
என்றுமிணங்கிடவுங் கண்டுவணங்கிடவும் (மன்னர்)

அருவமுருவஞ்சொருபமிவை மூன்றுமொன்றுகுமயிலே
அங்கம்நிறைந்திடவும் பங்கம்பறந்திடவும்
எங்குந்துலங்கும்பொரு ளங்கந்தனக்குளருள் (மன்னர்)

அறிவுமருளும்பொருளுமிவை மூன்றுமொன்றுகுமயிலே
அண்டம்நிறைந்தகருப் பிண்டம்நிறைந்தகுரு
எங்கும்புகழ்ந்தவர்கள் தங்கள்ஹல்லாஜவர்கள் (மன்னர்)

கஉ. இராகம் - பிலஹரி; தாளம் - ஆதி.

பல்லவி.

தந்திடவேணு மையா - தயவுடன்
வந்திடவேணு மையா.

அநுபல்லவி.

தானுயிருந்த தவப்பொருளானதைத்
தானேயெனக்கருள் ஹல்லாஜென்சாகிபே (தந்தி)

சரணங்கள்.

கொஞ்சிடுவேன்குருவே திருமலர் தஞ்சமேயென் குருவே
வஞ்சமகற்றுந்திருவே யெனதொரு நெஞ்சமிருக்குங் கருவே
கஞ்சமலர்ப்பதந் தந்திட வேணுமே
கண்டுபுகழ்ந்து புரிந்திட வேணுமே
வஞ்சமகற்றிடும் வல்லவரேகுரு
தஞ்சப்பொருள்தரும் ஹல்லாஜென்சாகிபே (தந்தி)



எங்கும்நிறைந்திடவே பரமாகி யெனக்குளமர்ந்த குருவே
பொங்கும்பொருள்தரவே விரைவினிற் புகழாய்வருமென் குருவே
தங்கமலர்ப்பத மென்னிலே காணவே
தானுயிருந்த தவந்தர வேணுமே
அங்கம் நிறைந்தருளும் பொருளுந்தா
எங்கும் நிறைந்திடும் ஹல்லாஜென்சாகிபே (தந்தி)

கண்ணில் நிறைந்தபொருளே யுயிர்க்குட் கருவாகுமென் குருவே
தன்னிலுறைந்தகருவே மலர்ப்பதந் தரவேணுமென்றன் குருவே
உன்னிலிருந்த வுறும்பொருள் தோணவே
என்னுள் வரவுந் தரவுமே வேணுமே
பொன்னி லழகுமுகங் காணவிரும்பிய
என்னிலிலங்கிய ஹல்லாஜென் சாகிபே (தந்தி)

கங. இராகம் - தோடி; தாளம் - ஆதி.

பல்லவி.

ஆட்கொள்ள வாரு மையா - அருள்புரிந்தே
அடிமையைக் காரு மையா.

அநுபல்லவி.

ஆட்கொள்ள வாருமே அடிமையைக் காருமே
அரும்பொருள் தாருமே அகந்தனிற் சேருமே (ஆட்)

சரணங்கள்.

அலிபில்நிறைந்த வரூபே - யரூபமதில்
அகண்டமவுனப் பொருளாய்
அலிபில்நிறைந்தபொரு ளொலியிட்டெழுந்தகடம்
அகந்தனிற்புரியவு மரும்பொருள்தரவுமே (ஆட்)

லாமேயோ டெழுந்தகிரியை - மிகவெழுந்து
கூவா மதனிலிசைந்து
தாவும்படிகடனந் தானேபுரிந்தபொருள்
மாவுமெனக்கருள்நீ மவுனப்பொருளேயுள்ளில் (ஆட்)

மீமாய் வளைந்தவளையம் - மீமதுக்குள்
தாலா யெழுந்தபரமாய்
தாலாயெழுந்தபரந் தானேயெனக்கருளும்
மாலானதுக்குள்ளான மவுனஹல்லாஜென்பீரே, (ஆட்)

கஎ. இராகம் - காம்போதி; தாளம் - ஆதி.

பல்லவி.

நித்தம் புகழ வேணும் - ஹல்லாஜருளை
நினைவில்தரிக்க வேணும்.

அநுபல்லவி.

கத்தன்பொருள் வரவும்
சித்தமருள் தரவும் (நித்தம்)

சரணங்கள்.

எங்கு முறைந்த திருவார் - மன
தங்கம் நிறைந்து வருவார்
சிங்கம் புகழு முருவார் - செயல்
தங்கு மருளுக் தருவார்
தங்கமலர்குமுதம் அங்கமலமுதம்
செங்கையருள்தரவும் சங்கைப்பொருள்வரவும் (நித்தம்)

பத்தி பெறவும் வேணுமே - மிகப்புகழ்
சுத்தி வரவும் வேணுமே
சித்தி பெறவும் வேணுமே - செயற்சிறப்பு
முத்தி யுறவும் வேணுமே
பத்தியுடனெனக்கு முற்றபொருளருள
நித்தம்புகழுதற்கு சித்தமருள்வெருள (நித்தம்)

அஞ்சி விருந்த போதராம் - அகந்தெளிந்து
பிஞ்சி லுறைந்த நீதராம்
எஞ்சொற் கிரங்கும் நாதராம் - ஏழைதமக்கா
யின்பமருளும் வேதராம்
செஞ்சொல்லருள்புரிய நெஞ்சில்கடம்புரிய
வஞ்சமறவருள் தஞ்சம்ஹல்லாஜருள் (நித்தம்.)

---

கஅ. இராகம் - ஆனந்தபைரவி; அடதாளம்.

பல்லவி.

மையல் மீறுதடி - ஹல்லாஜைக்காண
மனமிகத் தேடுதடி.

அநுபல்லவி.

மெய்யெல்லாம் வாடுதடி - வடிவைக்காண
மிகமனம் நாடுதடி.
மையல்மிகப்பெருகத் துய்யசுடர்தருக
பையல்துயரந்தீர்க்க மெய்யர்ஹல்லாஜைக்காண (மையல்)



சரணங்கள்.

அஞ்செழுத்தான வராம் - அறிவுக்கெல்லாம்
மிஞ்சியகோன வராம்
பிஞ்செழுத்தம வராம் - பெரியோருளத்தில்
கொஞ்சுமலர்தான வராம்
வஞ்சமில்லாத வராம் - வடிவுடையோர்
நெஞ்சினிற்போத கராம்
தஞ்சமுமேய வராம் - தயவுடனே
எஞ்சொற்கிரங்கு வராம்
கஞ்சமலர்ப்பதத்தைக் கொஞ்சம்நினைத்தவுடன்
மிஞ்சும்வெகுகிருபை வஞ்சமறவேதர
வரவே
வடிவில்நின்ற திருவே
வானில்நிறைந்த வுருவே
வண்மைமிருந்த குருவே
உண்மைப்பொருளுமவர் நன்மையுடையவராம்
வெண்மைமிகப்பெருக செம்மைதருகும்பிராம்
வாடுதே தினந்
தேடுதே மனம்
பாடுதே மயல் - கூடுதே
மருவிக் கலந்திருக்க
மன்னர்ஹல்லாஜைக்காண (மையல்)

எங்குமிவர்தா னல்லவோ - இலங்கும்பொருள்
தங்குமிவர்தா னல்லவோ
மங்குல்குடை யிடுமே - மவுனப்பொருள்
மனதில்திடப் படுமே
பொங்கும்பொரு ளல்லவோ - என்மனதில்
தங்குமரு ளல்லவோ
கங்குல்பறந் திடுமே - கமலங்கண்டால்
கல்நெஞ் சுருகிடுமே
தங்கமலர்ப்பதத்தை நெஞ்சில்நினைக்கவருள்
எங்கும்நிறைந்தபொரு ளெங்கந்தனக்குள்ளருள்
அரசே
அரசர்க்கெல்லாஞ் சிரசே
அறிவோருளிற் பெரிசே
அண்டர்புகழு மரசே
எங்குமிலங்கும்பொருள் தங்கப்பிரகாசமருள்
ஏழைமனதில்வரத் தாளைத்தருகும்பிராம்

மருகவே மன
முருகவே பொருள்
பெருகவே யருள் - தருகவே
மையல் மிகப்பெருகி
மனதில் ஹல்லாஜைக்காண (மையல்)

வன்னியுமிவ ரல்லவோ - வான்பொருளாய்
வந்ததுமிவ ரல்லவோ
பொன்னிலுமிவ ரல்லவோ - புகழுடையோர்
பொற்கிரியிவ ரல்லவோ
என்னிலுமிவ ரல்லவோ - இறையருளோ
டிசைந்திடுமிவ ரல்லவோ
தன்னிலுமிவ ரல்லவோ - தானுகிநின்ற
தானவரிவ ரல்லவோ
தன்னைநினைந்தவர்க்குத் தவத்தைமிகக்கொடுக்கும்
என்னி லிலங்குமருள் இன்பப்பொருளளிக்கும்
இறையே
எவரும்போற்று மறையே
என்னுள்ளமவிர் துறையே
இரங்கிடவு முறையே
செம்மையுடனேயிவர் செகத்திலிருப்போர்க்கருள்
நன்மையுடன்கொடுக்கும் நாயகமானபொருள்
நாட்டமே மனம்
தேட்டமே தினம்
வாட்டமே தவிர் - ஈட்டமே
மிக்கப் பொருள்தருகு
மெய்யர் ஹல்லாஜைக்காண (மையல்)

குன்னிலுமிவ ரல்லவோ - குதாய்நடனக்
குருபரனிவ ரல்லவோ
கண்ணிலுமிவ ரல்லவோ - கமலமதில்
காட்சியுமிவ ரல்லவோ
அண்ணலுமிவ ரல்லவோ - அறிவுடையோர்க்
கரும்பொருளிவ ரல்லவோ
மண்ணிலுமிவ ரல்லவோ - மகாதவத்தோர்
மன்னருமிவ ரல்லவோ
என்னிலருள்பெருகு மிசையும்பொருள்தருகும்
இமிர்தத்தருள்திறந்த வமிர்தப்பொருளுரைத்த
குருவே



குருவுக்கெல்லாங் கருவே
குணமுடைய திருவே
குறித்தபேர்க்கு ஞருவே
என்றனுளத்திலிவர் பங்கயத்தருளாழ்
செங்கையுயர்த்தியருளைத் தந்துதவும்பொருளாம்
சேருமே ஜெயம்
தாருமே தினம்
பாருமே யினிக் - காருமே
இன்பப் பொருள்தருகு
மிறைவர் ஹல்லாஜைக்காண. (மையல்)

---

கசு. இராகம் - தேசிகதோடி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

மையல்மிக மீறுதே - ஐயா
மகாரபார தாரங்காணநல்
மையல்மிக மீறுதே - ஐயா.

அநுபல்லவி.

செய்யிதேஷெய்குமன் சூரருள்மாதவ
ஷெய்குஹல்லாஜிரு பாதமேகாணநல் (மையல்)

சரணங்கள்.

நாதரேமறை வேதகீதரே
நம்பும்படியடி யேன்றனையாண்டிட
முன்பில்வருமேதிரு வேகருணைகர [நாதரே]
நந்தியிலேயழ கானவரானவர்
சிந்தையிலேபுக ழானவர்தானவர் [நாதரே]
நறைகமழுகிய விருபதமடியவர்
சிரமதிற்கிருபைசெய் நலனுறுகருணையை [நாதரே]
நாசியின்மீதுற வேநடுவாகிய
ஷெய்குஹல்லாஜிரு நேசமேகாணநல் (மையல்)

ஆதியேயனு கூலநீதியே
அஞ்சுதனிற் கொஞ்சியிருந்தவர்
வஞ்சமற நெஞ்சிலுறைந்தவர் [ஆதி]
அன்பில்வருமேயரு ளேகுருவாதியே
நம்புமொருபொரு ளேதிருசோதியே [ஆதி]
ஆனபனி ரண்டினிலானவர்
தேனுறுமீதில் வருந்தெளிவானவர் [ஆதி]
ஆதியருளினி லானவநீதியே
ஷெய்குஹல்லாஜிரு பாதமேகாணநல் (மையல்)

அஞ்சினேன்குரு பாதங்கெஞ்சினேன்
அருளருளாகியவேதரே
ஈராறிலாகியகீதரே [அஞ்சி]
அண்டந்தனிலெழில் நிறைந்தவரேயருள்
பிண்டந்தனிலெழி லுறைந்தவரேபொருள் [அஞ்சி]
அஞ்சஞ்சிலேபர மானவரேதிரு
கெஞ்சஞ்சிலேயுர மானவரேகுரு [அஞ்சி]
ஆவென்றெழுமரு ளாசையிலேபொருள்
ஆனஹல்லாஜிரு பாதமேசர்ணநல். (மையல்)

---

௧எ. இராகம் - தோடி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

ஆள்வீராள்வீ ராள்வீர் - அடிமைதனைநிதம்
ஆள்வீராள்வீ ராள்வீர்.

அநுபல்லவி.

அருபே யுருபே சொருபே
அருளைமிகவும்தந்து அடியேன்றுயரம் வெந்து
பொருளைமிகவும்தந்து புகழையருந்த வந்து (ஆள்வீ)

சரணங்கள்.

அருளே பொருளே யருளே
அல்லும்பகலுமனத் தொல்லைமிக வகற்றி
நல்லபொருளையுள்ளில் சொல்லவருள் புகுத்தி (ஆள்வீ)

ஆதி சோதி யாதி
அன்பாயிருந்தவரு ளின்பசுக மருளே
துன்பமகலநீக்கித் தொல்லைமிக வெருள (ஆள்வீ)

அஹதே உஹதே அஹதே
அஞ்சிலிருந்தபொருள் மிஞ்சியருளும் நீரே
வஞ்சமகற்றுமுங்கள் தஞ்சம்ஹல்லாஜென் பீரே (ஆள்வீ)

---

௧அ. இராகம் - பைரவி; தாளம் - ஆதி.

பல்லவி.

எப்போதுங்காண வேணுமே - என்பீர்பாதம்
எப்போதுங்காண வேணுமே.

அநுபல்லவி.

எப்போதுங்காணவே யெனக்கருள் தருவீர்
செப்புமும்மதுபாத செல்வப்பொருள் புரிவீர் (எப்போ)



சரணங்கள்.

முன்னு மொரு வனத்தில் - அருகிற்சிலர்
முடுகி யிருக்குந் தினத்தில்
அந்நா ளவர்க ளினத்தில் - அனுபிக்கேட்க
அருளைக் கொடுத்து மனத்தில்
பின்னுமவர்களுக்குப் பெரியோனருளைக்காணத்
தன்னுற்றலமுஞ்சொல்லித் தானுமிருந்தபீரே (எப்போ)

அஞ்சி யிருந்த போதரே - அறிவோருள்ளில்
அழகா யிருந்த வேதரே
கொஞ்சுங் கிருபை நாதரே - குறைத்தெல்லாம்
கொண்டே யிருந்த நீதரே
அஞ்சிலிருந்தபொருள் கொஞ்சியிருக்கவருள்
செஞ்சொலருள்புரியும் கஞ்சமலர்ப்பதத்தை (எப்போ)

குன்னில் நிறைந்த வருவே - குறித்தபேர்க்குள்
குருவா யிருந்த திருவே
கன்னில் நிறைந்த கருவே - கமலமதில்
காட்சி யுடையோ குருவே
குன்னில்நிறைந்தபொருள் குருபாதேயருள்
என்னுளுறைந்தபதம் எங்கள்ஹல்லாஜகுதம். (எப்போ)

---

௧௯. இராகம் - காம்போதி; தாளம் - ஆதி.

பல்லவி.

ஏழைக் கிரங் கிடுவீர் - ஆண்டவரே யென்பீரே
ஏழைக் கிரங் கிடுவீர்.

அநுபல்லவி.

நாளுமும்மதுபதம் நம்புமடிமைதனைச்
சூழும்வினைபறக்க சூட்சப்பொருள்சிறக்க (ஏழைக்)

சரணங்கள்.

ஆளக்கட னல்லவோ - அடிமைக்குங்கள்
தாளேகதி யல்லவோ
பாளைப்பரு வத்திலே - பழம்பொருள்தந்
தாளுஞ்சொரு பத்திலே
வேளையறிந்திருந்த நேரமருள் சொரிந்து
நாளுமடிமைதவ றுமல் பொருள்புரிந்து (ஏழைக்)

என்றன் றுறை யறிந்து - எனக்குள்வந்த
இன்பப்பொருள் செறிந்து

உத்தமருள் சொரிந்து - மும்தமுதம்
இத்தரைள் புரிந்து
வந்தவினையோட்டி நந்தமருளூட்டி
என்றனுளிலேபூட்டி சொந்தமலரைக்காட்டி (ஏழை)

அவ்வலவும் துக்குள் - அருமைப்பொருள்
ஆனகுரு பாரீர்
எவ்வகையு யிர்க்குள் - இலங்கிநின்ற
இன்பப்பொரு ளருள்நீர்
மவ்விலெழுந்தபொருள் மனதில்வரவுமருள்
நவ்விலெழுந்தகுரு நாதர்ஹல்லாஜென்பீர். (ஏழை)

---

௨௦. இராகம் - ஆனந்தபைரவி ; தாளம் - ஆதி.

பல்லவி.

ஷெய்கு அபூபக்கருள் மகிழும் - செல்வரேபதம்
சிறப்பாய்ப்பெற வருளும்.

அநுபல்லவி.

வாகுபெறவும தடிமையெனதுளில்
ஆகமதைமிக வருளுங்குருவேநீர் (ஷெய்கு)

சரணங்கள்.

எங்களினைக்கு மெழு நாயகமே
எங்கும் நிறைந்தமதி தாயகமே
பங்கமகற்றும் பழமைப் பொருளைப்
பரிவாயருந்தத் தருவீ ரருளை
தங்கமலர்ப்பத மென்னுள் ளுறைந்திட
பொங்கும்பொருளெனக் கருளும் நிறைந்திட (ஷெய்கு)

அவ்வளறதாயிருந்த பொருளை
அணுவுங்குறையா தமிந்த வருளைச்
செவ்வியுருவா யிருந்த வலினைச்
செம்மையுடனே சேர்ந்த தினை
கவ்விலெழுந்திடும் கடனப் பொருளதை
மவ்விலெனக்கருள் மவுன வருளதை (ஷெய்கு)

இயகுண பரமத யாளரே
செவ்வைப்பொருளை யிருந்த சீலரே
[illegible] மைந்தர்
[illegible] சொந்தர்
[illegible] முதலிநான்
[illegible] கருளும் ந்தலிதான். (ஷெய்கு)

---



அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

எவ்வுயிர்க் கரசே யென்ற னுளத்திருந் தெழுந்த பூவே
அவ்வகைக் கடங்கி டாத வருபமே சொருப தேவே
கவ்விலுற் றெழுந்த மத்தில் நடனமே புரிந்த மாவே
மவ்விலுற் றடங்கி வந்த மனோன்மணி மவுன கோவே.

---

௨௧. இராகம் - தோடி ; தாளம் - ரூபகம்.

பல்லவி.

இன்னம்வரக் காணவில்லையே - மயிலேகுயிலேமனோன்மணியே
இன்னம்வரக் காணவில்லையே.

சரணங்கள்.

என்றும்நினைப்போருளத்தி லின்பப்பரமாய்நிறைந்து
முன்றில்விளையாடிநிற்பாள் மூவெட்டுக்கெல்லாமரசி (இன்னம்)

முத்துநகைவட்டமுகம் முத்திமிகப்பெற்றவுடல்
பத்திதருஞ்சித்திபெறப் பாவையர்க்கெல்லாமரசி (இன்னம்)

உச்சிநடுகைச்சிலம்பு மோசையிடும்பச்சைநிறம்
தற்சொருபஞ்சித்திதரும் தானவர்க்கெல்லாமரசி (இன்னம்)

பெண்ணிலரசானகன்னி பிறப்பிறப்பில்லாதபொன்னி
நின்றுவிளையாடிடுவள் நேர்பொருந்துமுன்னேயவள் (இன்னம்)

மூன்றுகுணமூன்றுநிற மூன்றுபொருளாண்டகையால்
ஆண்டிடுமண்டங்களையுந் தோன்றுவிக்குந்தோகைமயில் (இன்னம்)

வஞ்சகங்கபடுசூது வையகத்தில்லாதிருந்தாள்
தஞ்சமென்றுநானிருந்தேன் பஞ்சவன்னப்பைங்கிளியே (இன்னம்)

எட்டிடனெட்டிலிலங்கு மெவ்வகைக்குள்ளேதுலங்கும்
மட்டிலாமவுனதேசி மங்கையர்க்கெல்லாயரசி (இன்னம்)

ஏன்பதுக்குள்ளோடிவரு மன்பதுமொன்றுனவன்னி
எண்பதுமொன்றுனபொன்னி யன்பருக்கெல்லாமரசி (இன்னம்)

முத்திதருஞ்சித்திபெற மோகந்தரும்பத்தினியாள்
எத்திசைக்குமெவ்வகைக்கு மெவ்வுலகுக்குமரசி (இன்னம்)

அண்டருக்கெல்லாமரசி யன்புடையோர்நம்புதாத்
தொண்டருளில்துல்லிபமாந் துய்யவருக்கெல்லாமரசி (இன்னம்)

தன்னைப்போலெனக்குலகந் தன்னிலெங்குமொப்பில்லாத
அன்னைபிதாவானவளரு ளாதிவடிவாமரசி (இன்னம்)

வினைக்குள்கலந்திடுபா வினையோமுற்பாதகமோ
எனக்கேயருள்புரிய வெவ்வுலகுக்குமரசி (இன்னம்)

வேசையுடன்கூடிவாழ்ந்த வெவ்வினையோ வெவ்வினையோ
காசமோவெனவறியேன் காவலருக்கெல்லாமரசி (இன்னம்)
மட்டிடமதிப்பிட்டேனே மங்கையர்க்கெதிர்வைத்தேனே
கட்டிடக்கணக்கிட்டேனே காவலர்க்கெல்லாமரசி (இன்னம்)
பின்மடிபிடித்திட்டேனே பெலமதாயுரமிட்டேனே
முன்மடிபிடிக்கையிலே மொழியிற்றவறினேனே (இன்னம்)
கூந்தலைக்குறைசொன்னேனே குண்டலிக்கிணைவைத்தேனே
காந்திடாதிருந்தனேகண் கன்னியருக்கெல்லாமரசி (இன்னம்)
குண்டலக்குறிப்பிட்டேனே கோவையிதழ்க்கெதிர்வைத்தேனே
மண்டலமதிப்பிட்டேனே மாதவருக்கெல்லாமரசி (இன்னம்)
அடிமடிபிடித்திட்டேனே வகலமின்றடுத்திட்டேனே
கொடுமுடிக்கிடம்வைத்தேனே கோவைலோகத்துக்கரசி (இன்னம்)
பத்தினித்தனமகிட்டேனே பாவையர்க்கசப்பட்டேனே
குற்றத்துக்கிடம்வைத்தேனே கோவையன்னருக்கரசி (இன்னம்)
இடைக்கட்டிக்கெதிர்சொன்னேனே விருவிழிக்கெதிர்வைத்தேனே
கடைக்கட்டைக்கணக்கிட்டேனே கன்னியாபெண்களுக்கரசி (இன்னம்)
பாதத்துக்கிணைவைத்தேனே பாவினைக்கெதிர்சொன்னேனே
நீதத்தைகெடுத்திட்டேனே நிர்மலகிராதாத்தி (இன்னம்)
வாகனமடைச்சொன்னேனே வடிவதைக்குறிப்பிட்டேனே
தேகத்திற்கெதிர்வைத்தேனே தேவலோகத்துக்கரசி (இன்னம்)
மாணிக்கக்கலசமுண்டு மாணிபங்கள்மெத்தவுண்டும்
ஆணிப்பொன்னதிகமுண்டு மைவருக்கெல்லாமரசி (இன்னம்)
பஞ்சவன்னமெத்தையுண்டும் பாவனையதிகமுண்டும்
கொஞ்சிவினையாடுதற்குக் குருபிறப்புத்தானுமுண்டு
இவ்வளவுடன்ஞானமுண்டு தீபகனைடதானுமுண்டு (இன்னம்)
பக்கமுந்தனக்கிசைந்த பால்பழமுந்தேனுமுண்டு
மாவலகதிதோடுகின்ற காம்பரிகள்தானுமுண்டு (இன்னம்)
தேன்கனியலதானுமுண்டு தேவலோகத்திற்கரசி
முத்திரத்னமிகவுண்டு மூன்றுநிதானமுமுண்டு (இன்னம்)
பத்தியுள்ளபதக்கமுண்டு பண்பாயுலகுக்கரசி
முன்னைவினையோவறியேன் மோசமோவிதிவசமோ (இன்னம்)
என்னசெய்வேனோதுசெய்வே னெவ்வகைக்கெல்லாமரசி
அன்னைபிதாசெய்பிழையோ வாண்டகையேஞானறியேன் (இன்னம்)
என்னபழையோவறியேன் எவ்வுயிருக்கும்மரசி (இன்னம்)



என்றனுயிர்க்குயிரா யென்னுளம்நிறைந்தசிவி
சொந்தமென்றுநானறிவேன் சோதியாயென்றுய்யபரி (இன்னம்)
ஐயெட்டுமோரெட்டுங்கொண்ட வாயிரம்பேருடையவரு
மையிருளில்வந்துதித்த மகிடகிரிமாமயிலாள் (இன்னம்)
பத்துரண்டுகால்களுள்ள பறவையவள்வாகனமென்
றெத்திசையுமெவ்வுலகு மெவ்வுயிருந்தாமறியும் (இன்னம்)
என்னசெய்வேனேதுசெய்வே னென்றலைவிதியிதுவோ
மண்ணில்மகுடாதிமன்னர் மற்றவருக்கெல்லாமரசி (இன்னம்)
ஆகமதைநானறியே னாதியிலேயென்னையாண்டு
காபுடன்நூறுஞ்சேர்ந்த கற்பகமாங்கண்மணியாள் (இன்னம்)
ஆறுடனோராறிலிருந் தடங்கலையுந்தான்கடந்து
நூறுடனீரேழுநூறில் நுண்ணிபமதானமயில் (இன்னம்)
அஞ்சுடனோராறுங்கொண் டாகங்களைத்தானடைந்தாள்
மிஞ்சியதேவாயமுத மெள்ளமெள்ளவேயருந்த (இன்னம்)
என்செயலணுவுமில்லையிறை செயலன்றியேயுண்டோ
அஞ்சுநிறப்பெண்கொடியே வைறயுல்கையூமானமயில் (இன்னம்)
முத்தொடுபவளம்பச்சை மூவாறுக்கிசைந்தகுயில்
கத்தருக்குஞ்சித்தருக்குங் காரணீகமானமயில் (இன்னம்)
மூன்றுபத்துக்குட்புகுந்து மூவெட்டுக்கிசைந்துநின்று
நாலுபத்துமூன்றுபத்து கொண்டெழுந்தநாயகியாள் (இன்னம்)

ஞானக்கீர்த்தனை முற்றிற்று.

---

மெய்ஞ்ஞானவிளக்கம்

முற்றுப்பெற்றது.

---

ஹாமீம்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஷெய்குத்தம்பி ஞானியார்சாகிபு அவர்கள்பேரில்

காயற்பட்டணம்

மகுதூம்நயினு மரைக்காயரவர்கள் குமாரர்

ஷெய்கு அப்துல்காதிற்சாகிபு அவர்கள்

இயற்றிய

# தோத்திரப்பதிகம்.

## காப்பு.

நேரிசை வெண்பா.

தண்டமிழ்தங் கும்ஷெய்குத் தம்பிமெய்ஞ்ஞா னிக்கன்பு
கொண்டமிழ்த மன்னதுதி கூறவே—கண்டபல
வாழுயிர்க்கு முள்ளுயிரா யங்கங்க மைந்துநின்ற
மாமறையோன் சீர்வாழ்த்து வாம்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்வள ருமது திருவிழிக் கருணைத்
 திருவருள் சிறிதுகிட் டிடிலிப்
பார்வள ரெனது பிணியொழிந் தரிய
 பயனொடு சுகம்பெறு வேனல்
கார்வளர் குடையார் கழற்சர ணைத்துங்
 கருத்துறு காதலார் கனியே
தார்வளர் புயசற் கோடைவாழ் ஷெய்குத்
 தம்பிமெய்ஞ் ஞானமா மணியே. (க)

மண்டல முழுதும் புகழுமெய்ஞ் ஞான
 வரோதய பானுசீர் மரபில்
எண்டக மையினோ டவதரித் தெளியேற்
 கின்பளித் திடவரு குருவே
கண்டபல் வினைபுங் கதிர்முனம் பனியாக்
 காட்டியாண் டருள்தர லென்றே
தண்டமி ழோங்கும் கோடைவாழ் ஷெய்குத்
 தம்பிமெய்ஞ் ஞானமா மணியே. (உ)

275



வரையன முலையார் மயலிடை வீழ்ந்து
 மதிக்கரு மதிமயக் கடைந்து
கரையில்வீண் பவங்கள் செய்துறு விழலன்
 கதிபெற மாறுமொன் றுளதோ
புரையிலா மணியே பொன்னவி ரணியே
 புகலுதற் கரியசீர் வளத்தாற்
றரையினே ரிணையில் கோடைவாழ் ஷெய்குத்
 தம்பிமெய்ஞ் ஞானமா மணியே. (௩)

கடலிடு துரும்பாய்ச் சஞ்சலக் கடலிற்
 றவித்துழன் றலைந்திடு மடியேன்
திடமுறு முமது சீரருட் டுணையாற்
 சிறப்புறச் செய்திடல் வேண்டும்
மடமைநோய் மாற்று மதிமணி மருந்தே
 வந்தடி தொழுபவர் மனமாந்
தடம்வளர் கருணைக் கோடைவாழ் ஷெய்குத்
 தம்பிமெய்ஞ் ஞானமா மணியே. (௪)

உன்னரு முமது வாக்கினு லுலக
 முய்யுமா றருளிய சீர்த்தி
துன்னுமெய்ஞ் ஞான விளக்கநற் பெருமை
 சொல்லிடற் கெளியதோ வடியார்
பன்னுநா யகமே பழமறை முதலைப்
 பற்றிய பரமமே பகருந்
தன்னிலை யுணர்ந்து கோடைவாழ் ஷெய்குத்
 தம்பிமெய்ஞ் ஞானமா மணியே. (௫)

மண்டியல் பிணியு முமைத்தொழு மடியர்
 மருவிடா தென்பது குறியாய்க்
கண்டுகொண் டரிய திருமலர்ப் பதத்திற்
 கருதினன் வந்தனை யான்வீர்
கண்டுசர்க் கரைமுக் கனிரச மாகக்
 கற்றவ ருளத்துறு சுதியே
தண்டட மறுகார் கோடைவாழ் ஷெய்குத்
 தம்பிமெய்ஞ் ஞானமா மணியே. (௬)

மழையொரு நாளிற் பெய்யவும் பின்னர்
 மறுத்தது நிற்கவு மகிமை
விழைவுறப் புரிந்த நும்பெருங் கீர்த்தி
 மேதினி யுள்வரை மறையா

திழைபுரை நகப்பார் நடையிறு லனங்கண்
டெங்கணும் பறக்கவே சீர்த்தி
தழைவுறு மெழிலார் கோடைவாழ் ஷெய்குத்
தம்பிமெய்ஞ் ஞானமா மணியே. (௭)

இறைதிரு வருளின் மணமதை யுணர்ந்து
மிணையடி பணியமுன் னொருவற்
கறையொரு மகிமை யின்னமென் றடியே
னறைதரற் கெளியதோ வருள்வீர்
குறைபடா நிதியே கோதிலாக் கதியே
குணநிறை வுறுகலா மதியே
தறையெலாம் புகழுங் கோடைவாழ் ஷெய்குத்
தம்பிமெய்ஞ் ஞானமா மணியே. (௮)

ஐம்பொறி களைய மொருவழி நடத்தி
யவிர்கதிர் மதிதலை யறிந்து
பம்புசீர் வாசி யிசையுணர்ந் தேறிப்
பரவிடும் யோகசா தனைகள்
நம்பிய வடியேற் குணர்த்துமா றென்க
ணெவ்வழி யாயினும் வருவீர்
தம்பத மருளக் கோடைவாழ் ஷெய்குத்
தம்பிமெய்ஞ் ஞானமா மணியே. (௯)

பொன்னினைப் பூவைப் பூவையர் தனத்தைப்
பொருளென மதித்துவீண் பொழுதாய்
என்னினை விருந்து கழித்தன னேதோ
விணையடி யேத்துமா றெளியேன்
முன்னினை னுமது திருவரு ளாலே
முற்றுற தருவமொன் றுளதோ
தன்னிகரில்லாக் கோடைவாழ் ஷெய்குத்
தம்பிமெய்ஞ் ஞானமா மணியே. (க0)

தோத்திரப்பதிகம்
முற்றுப்பெற்றது.